
ELDER BROTHERS STORY

அண்ணன்மார் கதை

ENGLISH VERSION BRENDA E.F. BECK



INSTITUTE OF ASIAN STUDIES
Madras, India

Folklore of Tamilnadu Series No. 4

ELDER BROTHERS STORY

(AN ORAL EPIC OF TAMIL)

General Editors

Dr. Shu Hikosaka
Dr. G. John Samuel

Collected and Translated

by

BRENDA E.F. BECK
University of British Columbia

PART I

Institute of Asian Studies
Madras 600 041, India
1992

Elder Brothers Story - Part I
(An Oral Epic of Tamil)

Editorial Assistance:
Dr. A. Thasarathan
Mr. G. Stephen
Mr. S. Shanmuga Velayudam

Scribe : Mr. K. Sundaram

Translator's Assistants:
Vijayameenakshi Srinivasan
Vaija Ragunathan
Nirmala Chari

First Edition : April 1992

Price : Rs. 300 US $ 65

Publication No.: 19

Copies can be had from:
Publications Division
Institute of Asian Studies,
10th East Street,
Thiruvanmiyur,
Madras 600 041.
India
Phone : 416728
419866
4925085

Printed by SUGI OFFSET PRINTERS 289, KONNUR HIGH ROAD AYANAVARAM, MADRAS-600 023

PREFACE

Elder Brothers' Story, best known as the *Annanmār Cāmi Katai* is a very populistic Tamil Folk ballad in Kongu region of Tamil Nadu, comprising the revenue districts of Coimbatore, Periyar, parts of Tiruchirapalli and parts of Salem. Ms. Brenda E.F. Beck, a social Anthropologist, from Canada, who devoted some of her time in Coimbatore district, studying Tamilian Social Organisations, and rural traditions, got greatly fascinated by the folk story of *Aṇṇaṉmār Cāmi Katai* through a bardic expression rendered by local folk performers. Attracted by the epic values of this popular legend of agricultural people, and its social and cultural richness, with all its rustic grandeur, she chose to record the entire account of this great legend.

The text of the work presented here is a word-for-word transcription of an oral dictation, in Tamil, by the bard, E.C. Ramacami of Erucaṉampāḷayam, on nineteen different nights. This recorded story, had been beautifully rendered in English by Ms. Brenda E.F. Beck, ably assisted by Vijayameenakshi Srinivasan and Nirmala Chari, without losing the poetry and charm of the whole, faithfully preserving the folk quality of the narration, simple style and its contents. We are presenting the Elder Brothers' Story in two parts; the first part containing the narration of all the events till the demise of Kuṉṉuṭaiyā Kavuṇṭaṉ and his consort Tāmarai, the parents of the Elder Brothers. The rest of the folk material, bringing out the prowess, valour and the heroic qualities of the triplets, Elder Brothers and their sister - are brought out in part II.

Recently, there is a growing awareness among students of the region's classical epic, literature and Indian Culture, Sociologists, Anthropologists and folklorists to interpret various regional folk epics as expressions of folk culture and make an indepth study of them in various angles of human perception. The Institute of Asian Studies, in continuation of its earlier presentation of the series of folk ballads like, 'The Wandering Voice', 'The Dateless Muse', 'The Unsung Melodies', 'The Divine Pilgrimage', is now bringing out 'The Elder Brothers' Story' by Brenda E.F. Beck, towards its effort of introducing Folk-lores to the modern critical group, and general readers.

The Institute of Asian Studies acknowledges the invaluable effort of Ms. Brenda E.F. Beck, in bringing out this work, spending sleepless nights in Ōlapāḷayam village, near Kāṅgēyam (now in Periyar District) motivating the local bards and enthusing them to render this story in all its folk beauty. While expressing our sense of gratitude to

Ms. Brenda E.F. Beck, for this valuable piece of folk-epic, we extend our sincere thanks to Ms. Vijayameenakshi Srinivasan and Nirmala Chari, who have helped the author in refining the author's initial English version, and Ms. Vaija Ragunathan, in getting the scripts ready. The Institute of Asian Studies places on record, its appreciation of the good co-operation rendered by Dr. A. Thasarathan and Thiru G. Stephen, faculty members, in rendering editorial assistance, and the services of Thiru S. Shanmuga Velayutham, for proof reading.


We thank M/s. PACE Systems for their neat and fine execution of the book.


Dr. Shu Hikosaka
Dr. G. John Samuel

General Editors

INSTITUTE OF ASIAN STUDIES

CONTENTS


A
INDIA
B
TAMILNADU
B
TAMILNADU (ENLARGED)
MADRAS
NORTH ARCOT
CHINGLEPUT
SALEM
SOUTH ARCOT
NILGIRIS
COIMBATORE (&PERIYAR)
C
TIRUCHIRAPALLI
TANJAVUR
D
MADURAI
RAMANATHAPURAM
TIRUNELVELI
KANYAKUMARI
KEY
National Boundary A Nation: India
State Boundary B State: Tamilnadu
District Boundary
C Area in which the epic appears to be well known
D Locale in which the epic events took place


(VALAVANTINĀṬU)
Amarāvati R.
Kāveri R.
Mattukkarai
(Mayanūr)
Kulittalai
Caṅkarmalaippatti
(TATAYANĀṬU)
Uraiyūr
Tiruchirapalli
TIRUCHIRAPALI DT.
VĪRAMALAI
TOGAMALAI
Kulattūr
Āniyappur
Vīrappūr
Ālattūr
Virālimalai
Vaiyampatti
Manapparai
N
CEMMALAI
KARANDAMALAI
Valanāṭu
Pudukkottai (5 km)
Dindigul (12 km)
Tovarankuruchi
SIRUMALAI
MADURAI DT.
Tiruppattūr
RAMANATHAPURAM DT.
Mēlūr
Vaigai R.
Madurai
0 5 10 km
Road
River
Intermittent stream
xxxxx Embankment
District boundary
Settlement
Meters above sea level
300 - 450
450 - 1500

List of Plates

முன்னுரை[1]

அண்ணன்மார் கதை தமிழகத்தின் வடமேற்குப் பகுதிகளில் குறிப்பாகக் கோவை, திருச்சி, பெரியார், நீலகிரி மாவட்டங்களில் வழக்கில் உள்ளது (காண்க - வரைபடம் எண்.1). இக்கதை உடுக்குப்பாடல் வடிவில் கோயில் திருவிழாக்களில் தொழில் ரீதியான பாடகர்களால் நிகழ்த்தப்படுகின்றது. அண்ணன்மார்களுக்குப் பல கோயில்கள் மேற்குறிப்பிட்ட இடங்களில் உள்ளன. இக்கதைக்குப் பல திரிபுவடிவங்கள் (Versions) வழக்கில் உள்ளன. இத்திரிபு வடிவங்களுக்கும் இங்குப் பதிப்பிக்கப்படும் கதைக்குமிடையே பல வேறுபாடுகள் உள்ளன (காண்க: Beck : 1982; P.P. 105-117, APX.IV). இங்குப் பதிப்பிக்கப்படும் திரிபுவடிவம் *1965*-ஆம் ஆண்டில் எருசணம்பாளையத்தைச் சேர்ந்த E.C. இராமசாமி என்பவர் வாய்மொழியாகப் பாடியதாகும். இதே ஆண்டில் இப்பாடகர் இந்தக் கதையைத் தூண்டப்பட்ட சூழலில் நிகழ்த்த, அது அப்பொழுது ஒலிப்பதிவு செய்யப்பட்டது. இவ்விரண்டு திரிபு வடிவங்களையும் ஒப்பிட்டு நோக்கியபோது பல வேறுபாடுகளைக் காண முடிந்தது. (காண்க: Beck 1982, PP. 66-68, 70, 73, 194-195). தூண்டப்பட்ட சூழலில் நிகழ்த்தப்பட்ட திரிபு வடிவத்தைவிட வாய்மொழியாகப் பாடிய திரிபு வடிவம் அளவில் சிறியதாகவும் செறிவாகவும் காணப்பட்டது. இருப்பினும் கதை சிதைவுறாமல் அமையப் பெற்றிருந்தது.

கதைச் சுருக்கம்

பூவுலகில் காராளர்கள் இல்லையென்ற குறையைப் போக்க ஈசுவரி வெள்ளி வளநாட்டில் ஏழு காராளர்களைத் தோற்றுவித்தார். இவ்வேழுபேரில் கோளத்தாக் கவுண்டர் மூத்தவர். இவ்வேழுபேரும் வெள்ளிவளநாட்டில் வாழ்ந்துவரும் காலத்தில் கடும் பஞ்சம் ஏற்படக் கோளத்தாக்கவுண்டர் சோழனிடம் சென்று விவசாயத்தைக் கவனிக்கும் பொறுப்பினை ஏற்றார். சோழனிடம் சென்ற கோளத்தாக் கவுண்டரைக் குறித்துத் தகவல் ஏதும் கிடைக்காமையால் அவரது தம்பியர்கள் அவரைத் தேடிச் சோழனிடம் வந்தனர். சோழன் கோளத்தாக் கவுண்டரின் தம்பியர்களையும் பண்ணையில் சேர்த்துக் கொண்டான். கோளத்தாக் கவுண்டரும் அவரது தம்பியரும் வந்தபின்

---

1 இம்முன்னுரை Brenda Beck - இன் Three Twins (1982) என்னும் நூலிலிருந்து எடுக்கப்பட்ட சில பகுதிகளின் மொழிபெயர்ப்பு. தமிழ் மக்கள், அண்ணன்மார் கதை குறித்து பொதுவான செய்திகளை அறிந்து கொள்ள இது உதவும். மேலும் தெளிவான, விரிவான செய்திகளுக்கு Beck - இன் நூலைக் காண்க.

பொன்னிவள நாடு செல்வச் செழிப்புப் பெற்றதால் சோழன் கோளத்தாக் கவுண்டருக்குப் பொன்னிவளநாட்டையும் கோளத்தாக் கவுண்டரின் தம்பியர்களுக்குத் தங்கவளநாட்டையும் தானமாகக் கொடுத்தான்.

கோளத்தாக் கவுண்டரும் அவரது தம்பியர்களும் தங்களுக்குக் கிடைத்த நிலத்தில் பயிர் செய்து வாழ்ந்துவரும் காலத்தில், கோளத்தாக் கவுண்டர் மீது அவரது தம்பியர்களுக்குப் பொறாமை ஏற்பட்டது. அப்போது கோளத்தாக் கவுண்டர் வாரிசு இல்லாதிருந்தார். எனவே, அவரது மனைவி கடுந்தவம் புரிய, திருமாலின் அருளால் ஏழாவது அடுக்குப்பாறையிலிருந்து ஒரு குழந்தையைக் கோளத்தாக் கவுண்டர் கண்டெடுத்தார். கோளத்தாக் கவுண்டர் அக்குழந்தைக்குக் குன்னுடையாக் கவுண்டர் எனப் பெயரிட்டுத் தன் வாரிசாக வளர்த்து வந்தார். குன்னுடையாக் கவுண்டர் ஐந்து வயதை எட்டியதும் கோளத்தாக் கவுண்டரும் அவரது மனைவியும் காலமாயினர்.

இச்சூழலைப் பயன்படுத்திக் கோளத்தாக் கவுண்டரின் தம்பியர்கள் குன்னுடையாக் கவுண்டரைக் கொடுமைப்படுத்தி அவரது பொன்னி வளநாட்டைக் கவர்ந்து கொண்டனர். குன்னுடையாக் கவுண்டர் திருமாலின் அருளால் தன் தந்தையின் சகோதரர்களும் மற்றும் பிறரும் இழைத்த கொடுமைகளிலிருந்து உயிர் தப்பி வாளவந்தி நாட்டிலுள்ள தன் தாய்மாமன் வீட்டில் போய்ச் சேர்ந்தார். தாய்மாமனின் பண்ணையில் குன்னுடையாக் கவுண்டர் இருபது ஆண்டுகள் பணியாற்றினார். பின் திருமால் குன்னுடையாக் கவுண்டருக்கு அவரது தாய்மாமன் மகள் தாமரையைத் திருமணம் செய்து வைத்துப் பொன்னி வளநாட்டிற்கு அனுப்பி வைத்தார்.

பொன்னி வளநாடு திரும்பிய குன்னுடையாக் கவுண்டர் சோழனின் உதவியால் இழந்த நிலங்களைத் திரும்பப் பெற்று அதில் அரண்மனை கட்டி வாழ்ந்து வந்தார். குன்னுடையாக் கவுண்டர் செல்வம் செழிக்க வாழ்ந்தபோதிலும் வாரிசு இல்லாமல் வருந்தினார். மேலும் அவரது வேலைக்காரிகள், அவரது மனைவி தாமரை வளர்த்த நாய், குதிரை, பன்றி யாவும் வாரிசு இல்லாதிருந்தன. எனவே இக்குறைபாட்டினைப் போக்கக் குன்னுடையாக் கவுண்டரின் மனைவி தாமரை கடுந்தவம் புரிந்தாள். அவள் குழந்தை வரம் வாங்கச் செல்லும்போது வாரிசு இல்லாதிருந்த எல்லோரும் தங்களுக்கும் வாரிசு வரம் வாங்கிவர வேண்டினர். வரம் வாங்கச்செல்லும்வழியில் தான் வளர்த்த பன்றி படுத்திருப்பதைக் கண்டு ஆத்திரமடைந்த தாமரை பன்றியைக் காலால் உதைக்க, பன்றி சாபமிட்டது. தாமரை திருமாலின் உதவியால் ஏழு பிறவி கழித்துத் தனக்கும் தன்னிடம் வரம் வேண்டியவர்களுக்கும் குழந்தை வரம் வாங்கி வந்தாள். தாமரையால் உதைக்கப்பட்ட பன்றி கருங்காளியம்மனிடம் சென்று தாமரையின் குழந்தைகளைக் கொல்லும் ஆற்றல்மிக்கக் கொம்பன்பன்றி தனக்குப் பிறக்கவேண்டும் என வரம் வாங்கியது. வரத்தின்படி தாமரைக்குப் பொன்னரு, சங்கரு என இரு ஆண்குழந்தைகளும் தங்காள் (பார்வதி) என்னும் பெண்

குழந்தையும் பிறந்தனர். மேலும் வேலைக்காரிக்கும், பன்றி, நாய், குதிரை போன்ற விலங்குகளுக்கும் வாரிசுகள் தோன்றின. குழந்தைகள் ஐந்து வயதை அடைந்ததும் தாமரையும் குன்னுடையாக் கவுண்டரும் காலமாயினர்.

நாட்கள் செல்ல வீரப்பூரில், வேட்டுவர் வாழும் பகுதியில் வாழ்ந்து வந்த தெய்வலோகக் கிளி மீது தங்காள் விருப்புற்று அதைப்பிடித்து வரும்படி அண்ணன்மாரிடம் வேண்டினாள். அண்ணன்மார்கள் கிளியைப் பிடித்து வர, வேடுவர்களுக்கும் அண்ணன்மார்களுக்கும் பகை மூண்டது. அண்ணன்மார்களுக்குப் பதினாறு வயது ஆனதும் பன்றி பெற்ற வரத்தால் பிறந்த கொம்பன் பன்றி, பொன்னிவளநாட்டின் பயிர்களை அழித்து அண்ணன்மார்களைக் கொல்ல முயன்றது. அண்ணன்மார்கள் பன்றியோடு போரிட்டு அதைக்கொன்று திரும்பும்போது வேடுவர்களின் படை திரண்டு அண்ணன்மார்களைத் தாக்கியது. போரில் வேடுவர்களைக் கொன்ற பின்பு அண்ணன்மார்கள் இரத்தம் தோய்ந்த கத்தியைக் கழுவ ஆற்றில் இறங்கினர்.

அப்போது திருமால் அண்ணன்மார்களுள் இளையவரான சங்கருவின் வெண்ணூலைப் பூக்கணை தொடுத்து அறுத்தார். வெண்ணூல் அறுபட்டதற்கு வருந்திய சங்கரு இனி உயிரை வைத்திருக்கக்கூடாது எனக்கருதினான். தன் கத்தியை வீரமலைக் காட்டில் ஒரு வன்னிமரத்தடியில் பாறையின் மீது ஊன்றி அதன்மீது பாய்ந்து உயிர் நீத்தான். சங்கரு உயிர்நீத்ததைக்கண்டு பொன்னரும், உடன் வந்த சாம்புகனும் அவ்வாறே உயிர் நீத்தனர்.

அண்ணன்மார்கள் இறந்ததைக் கெட்ட கனவுகள் மூலம் உணர்ந்த தங்காள் அண்ணியரிடம் சென்று இறப்பை எடுத்துணர்த்தி ஈமச்சடங்கு செய்ய அழைத்தாள். அண்ணியர்கள் வரமறுத்ததால் ஆத்திரமடைந்த தங்காள் அண்ணியரோடு அரண்மனையைத் தீக்கிரையாக்கி அவர்களுக்குக் கருமாதி செய்து அண்ணன்மார்களைத் தேடிப் புறப்பட்டாள். திருமாலின் உதவியால் தங்காள் அண்ணன்மார்கள் இறந்துகிடக்கும் இடத்திற்கு வந்து சேர்ந்து அண்ணன்மார்களுக்கு உயிர் கொடுத்தாள். பின் அவர்களைப் பல்லக்கில் வீரப்பூருக்குக் கொண்டு வந்தாள். வீரப்பூரில் அண்ணன்மார்களுக்கு மண்டபங்கள் உருவாகச் செய்து அண்ணன்மார்களை அவற்றில் அமர்த்தித் திருமாலிடம் அவர்களின் உயிரை மீண்டும் பெறச் செய்துவிட்டு அண்ணன்மார்களுக்கு வழிபாடுகளை நிகழ்த்தினாள். பின்னர் தானும் பூப்பல்லக்கில் ஏறித் தெய்வலோகம் போய்ச் சேர்ந்தாள்.

சமூக வரலாற்றுப் பின்னணி

இங்குப் பதிப்பிக்கப்பட்டுள்ள அண்ணன்மார் கதை நிகழ்ச்சிகள் நிகழ்ந்ததாகச் சொல்லப்படும் நிலவியல் எல்லைகள் மற்றும் கதை அமைப்பு ஆகியவற்றைப்

பிற தமிழ்க் கதைப்பாடல்களோடு ஒப்பிட்டு ஆயும்போது, இக்கதை முதலில் சிறிய கதைப்பாடலாக அமைந்து பின் நாட்டார் காப்பியமாக வளர்ச்சியடைந்திருக்க வேண்டும் என்று கருத வாய்ப்புள்ளது . இக்கதை பிற கதைப்பாடல்களிலிருந்து வளர்ந்து நாட்டார் காப்பியமாக வளர்ச்சி பெற்றமைக்கு மூன்று முக்கிய சமூக வரலாற்றுச் சூழல்களைக் குறிப்பிடலாம்.

1.இக்கதை முற்காலத்தில் நிகழ்ந்த சமூக நிகழ்வுகளை, குறிப்பாக 15-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் நிகழ்ந்த ஓர் உள்நாட்டு மோதலை மையமாகக் கொண்டு எழுந்துள்ளது எனலாம். இதனடிப்படையில் தற்போது வழக்கிலுள்ள இக்கதையின் திரிபுவடிவங்கள் முழுமையாக வளர்ச்சியடைய ஐந்து நூற்றாண்டுகள் வரை ஆகியிருக்கலாம். தமிழில் கிடைக்கப்பெறும் ஏனைய போர் குறித்த கதைப்பாடல்கள் பெரும்பாலும் 17-ஆம் நூற்றாண்டு அல்லது அதற்குப் பின்னர் நிகழ்ந்த மோதல்களையே சித்திரிக்கின்றன.

எனவே போர் குறித்த ஏனைய கதைப்பாடல்களை விடவும் நாட்டார் காப்பியமாகப் படிப்படியாக வளர்ச்சி பெறுவதற்குரிய கால இடைவெளி அண்ணன்மார்கள் பற்றிய கதைக்கு அதிகமாகக் கிடைத்துள்ளது. கி.பி.15-ஆம் நூற்றாண்டு முதல் தொடங்கி வளர்ந்த இக்கதையின் திரிபு வடிவங்கள் மெல்லமெல்ல வளர்ந்து இன்று நாட்டார் காப்பிய நிலையினை எய்தியுள்ளன எனலாம். வானொலி, தொலைக்காட்சி போன்றவற்றின் இடையீடு இல்லையெனில் தமிழிலுள்ள பிற கதைப்பாடல்கள் கூட நாட்டார் காப்பியம் என்னும் நிலையினை எய்தும் வாய்ப்புக்கள் இன்று ஏற்பட்டிருக்கலாம்.

2.அண்ணன்மார் கதை நிகழ்ச்சிகள் நிகழ்ந்ததாகச் சொல்லப்படும் நிலவியல் எல்லையில் வாழும் இனத்தவர்களும் இக்கதை முழு வளர்ச்சியடையக் காரணமாவர். இக்கதை பொது நில உரிமைப் பிரச்சனையோடு தொடர்புடையது எனக் கதையில் சொல்லப்பட்டுள்ள பல செய்திகள் மூலம் உறுதி செய்யலாம். இதுவும் இக்கதையில் இம்மக்கள் அதிக ஆர்வங்காட்டக் காரணமாக அமைந்து இக்கதையின் வளர்ச்சிக்குப் பெரிதும் துணை புரிந்திருக்கலாம். இக்கதை நிகழ்வுகள் சேர, சோழ, பாண்டியப் பேரரசு எல்லைகளுக்கிடையில் நிகழ்ந்துள்ளன. சேர, சோழ, பாண்டியர்களுக்கிடையில் ஆதிக்க எல்லை தொடர்பான மோதல்கள் இருந்து வந்தபோதிலும் இக்கதை நிகழ்ந்ததாகச் சொல்லப்படும் நிலவியல் எல்லைகள் அவர்களுள் எவருக்கும் முக்கியமான இடங்களாக அமைந்திருந்ததாகத் தென்படவில்லை. மாறாக நிகழ்வு இடங்கள் சேர, சோழ, பாண்டியருக்கு அதிக நாட்டமில்லாத வளம் குன்றிய மேட்டுப்பகுதிகளாகக் காணப்படுகின்றன. இப்பொழுதுகூட இப்பகுதிகள் வளம் குன்றியனவாகவே காணப்படுகின்றன. கதை நிகழ்ச்சிகள் நிகழ்ந்த இடங்கள் தமிழகத்தின் முக்கிய உயர்ந்த பகுதிகளாகிய காவேரி ஓடும் கொங்கு நாட்டின் எல்லைப்புறங்கள் ஆகும்.

அரசியல் சார்பு குறைவான மக்களிடையே கதைப்பாடல்கள், காப்பியங்கள் நன்கு வளர்ச்சியடைந்துள்ளன எனப் பல அறிஞர்கள் ஆங்கிலம் மற்றும் ஸ்காட்டிஸ் கதைப்பாடல்கள் மூலம் முன்பே நிறுவியுள்ளனர். இவ்வியல்பு இந்தியாவிலுள்ள நாட்டார் காப்பியங்களுக்கும் பொருந்தும். 15-ஆம் நூற்றாண்டு தென்னிந்தியாவில் அரசியல் எழுச்சிகள் மிகுதியாக நிகழ்ந்த காலமாகும். இக்காலகட்டத்தில் அரசுகளுக்கிடையிலான போர்கள், இதனால் உருவான அகதிகள், மதம் மற்றும் மத உட்பிரிவினருக்கிடையிலான பூசல்கள் போன்றவை ஏராளம் நிகழ்ந்துள்ளன. எனினும் இக்கதை நடந்த பகுதிகள் மன்னர்கள் அதிக ஆர்வம் காட்டாத வறட்சிமிக்க பகுதிகளாக இருந்ததால் இம்மக்களிடமும் அரசியல் சார்பு குறைவாகவே இருந்திருக்க வேண்டும். மக்களின் இம்மனப்போக்கும் இக்கதைப் பாடலின் வளர்ச்சிக்குத் துணையாக அமைந்திருந்தது என்று கருத வாய்ப்புக்கள் உள்ளன.

3.சில நூற்றாண்டுகளுக்கு முன்னர் சமூகப் பொருளாதார நிலைகளில் வளர்ச்சியடையாத காடு மற்றும் மலைப்பகுதிகளில் மக்கள் வேட்டையாடுபவர்களாகக் காணப்பட்டனர். இத்தகைய பகுதிகளில் வாழும் மக்களை நாகரிக வளர்ச்சியடைந்த மக்கள் சமூக கலாசார நிலையில் தாழ்வானவர்கள் எனக்கருதினர். இக்கதையின் கருவாக விவசாயிகளுக்கும் (கவுண்டர்கள்) மலைப்பாங்கான காடுகளில் வாழும் மக்களுக்கும் (வேடுவர்கள்) இடையிலான முரண்பாடு அமைகின்றது. இம்முரண்பாடே இக்கதையை மகாபாரதம், இராமாய்ணம் போன்று முக்கியத்துவம் பெறச் செய்துள்ளது எனலாம். இக்கதை சமூகம் மற்றும் போருக்குச் சிறந்த நிலவியல் எல்லைகளை உள்ளடக்கிப் புனையப்பட்டுள்ளது. இக்கதை மகாபாரதம், இராமாயணம், போன்றவற்றை அடியொற்றி இருப்பது போன்ற உணர்வை ஏற்படுத்துவதில் வியப்பில்லை. இந்நிலையில் அண்ணன்மார் கதை பிற தமிழ்க் கதைப்பாடல்களைவிட இந்திய காப்பிய வடிவங்களோடு அமைப்பு நிலையில் நெருங்கிய உறவினைக் கொண்டுள்ளது எனலாம். வரலாற்றுப் போர் நிகழ்வுகளைக் குறித்த பிற தமிழ்க்கதைப் பாடல்களில் நிகழ்விடங்கள், காடுகள் அதிகமில்லாத நன்கு வளர்ச்சியடைந்த இடங்களாக அமைந்துள்ளன. இக்கண்ணோட்டத்தில் அண்ணன்மார் கதையின் நிகழ்விடம் அதன் முழுவளர்ச்சியில் மிக இன்றியமையாத பங்கினை ஆற்றியுள்ளது.

கதை நிகழ்ந்த இடத்தில் கதையோடு ஓரளவிற்குத் தொடர்புடைய போர் ஒன்று ஏறத்தாழ 14-ஆம் நூற்றாண்டில் நிகழ்ந்ததாகத் தெரியவருகின்றது. கொங்கு நாட்டின் பொதுவான வளர்ச்சியைப் பற்றி ஏராளமான செய்திகள் நமக்குக் கிடைக்கின்றன. இருப்பினும் இக்குறிப்பிட்ட நிகழ்ச்சி எந்த இடத்தில் நிகழ்ந்தது என்பது குறித்த வரலாற்றுச் சான்றுகள் மிக அரிதாகவே கிடைக்கின்றன. அண்ணன்மார் வாழ்ந்த இடத்திற்குச் சற்று வடக்கிலும், மேற்கிலுமாகக் கொங்கு நாடு அமைந்துள்ளது (காண்க: வரை படம், எண்: 2) என்பது குறிப்பிடத்தக்கது.

ஏறத்தாழ கி.பி. 1200-இல் காவேரி ஆற்றின் மேற்பகுதிகளில் சோழர்களின் ஆதிக்கம் ஓரளவிற்கு நிலைபெற்றிருந்தது. கதை நிகழ்விடத்தின் வட எல்லையும் காவேரியே ஆகும். இக்காலகட்டத்தில் சோழப் பேரரசு தென்னிந்தியாவில் ஆற்றல் வாய்ந்த பேரரசாகத் திகழ்ந்தது. இவர்களது பேரரசின் மையப்பகுதி கடலோரமாக இருந்தாலும் இவர்கள் உட்பகுதிகளில் தங்களது விவசாய நிலப்பகுதிகளை விரிவுபடுத்தும் எண்ணம் கொண்டிருந்தனர். காவேரி ஆற்றுப் பகுதிகளில் விவசாயப்பண்ணைகளின் எண்ணிக்கையை இவர்கள் மிகுதிப்படுத்தியதன் மூலம் கிளை ஆறுகளைத் தங்கள் கட்டுப்பாட்டுக்குள் வைக்க முடிந்தது. மேலும் இவர்கள் இந்தியத் துணைக்கண்டத்தின் முக்கிய வாணிபப் போக்குவரத்து வழிகள் மீதும் அதிகக்கவனம் செலுத்தினர். இத்தகைய ஆர்வம் இவர்களது போக்குவரத்து வழிகளை மேற்குக் கடற்கரையில் அமைந்திருந்த துறைமுகங்களுக்கு நேராய் விரிவடையச் செய்தது.

உள்நாட்டுப் பகுதிகளில் புதுப்புது குடியிருப்புக்களை நிலைபெறச் செய்வதில் சோழர்கள் மெல்ல மெல்ல ஆர்வம் காட்டினர். 13-ஆம் நூற்றாண்டில் சோழப் பேரரசு நலிவுறுங்கால் கொங்கு நாட்டின் எல்லா வாணிப வழிகளிலும் ஆற்றங்கரைகளிலும் பெரிய கோயில்கள் இருந்தன. இக்கால கட்டத்தில் பல குறுநில அரசுகளும் வலுவாய் நிலைபெற்றிருந்ததாக மரபுவழிச் செய்திகள் கூறுகின்றன. இக்கதையிலும் பல குறுநில அரசுகள் உள்ளடங்கிய அரசியல் நிலவியல் எல்லை குறிப்பிடப்பட்டிருப்பதைக் காணலாம். பல முக்கிய நீர்த்தேக்க பாசன வசதிகள் இக்காலகட்டத்தில் உருவாக்கப்பட்டன. அத்தகைய இரு நீர்த்தேக்கங்கள் இக்கதையிலும் முக்கிய இடம் வகிக்கின்றன. இவ்வாறு விவசாயத்தை விரிவுபடுத்தும் முறை இப்பகுதியில் பாண்டியர்களின் ஆதிக்கம் தொடங்கும்வரையிலும், அதாவது 14-ஆம் நூற்றாண்டு வரையிலும் நீடித்தது.

பிற்காலத்தில் அதாவது கி.பி. 1400-இல் இத்தகைய மாறுதல்கள் காவேரியின் சிற்றாற்றுப் பகுதிகளில் வாழ்ந்த மக்களைப் பாதித்தன. மேட்டுப் பகுதிகளிலிருந்தவர்கள் விவசாய நிலங்களுக்கும், ஆற்று முகத்துவாரங்களுக்கும் குடிபெயர்ந்தபின் மேட்டுப்பகுதிகளை அவர்களது வழித்தோன்றல்கள் மீண்டும் தம் ஆதிக்கத்திற்குள்ளாக்கினர். அப்பகுதிகளில் ஏற்கனவே வேட்டை மற்றும் உணவு சேகரிக்கும் குழுக்கள் இருந்தமையால் புதிதாகக் குடிபுகுந்தவர்களுடன் வேடர்போன்ற குழுக்கள் தொடர்ந்து முரண்பட்டு மோதினர்.

16-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் சோழர்களின் கட்டுப்பாட்டுக்குள் இருந்த ஒரு நாட்டின் தலைநகராக உறையூர் விளங்கியது. இக்காலத்தில் பல நகர்ப்பகுதிகள் மிக வேகமாக வளர்ச்சியடைந்து விரிவடைந்து கொண்டிருந்தன. இதைத் தொடர்ந்து கைவினைஞர்கள் உயர்ந்த நிலப்பகுதிகளுக்கு வேகமாகக் குடிபெயர்ந்தனர். கதையில் சொல்லப்படும் அணியப்பூர் இக்காலகட்டத்தில் உருவான நகரமாக இருக்கலாம். பேரரசுகளுக்கிடையே நடந்த போர்களின்

காரணமாக ஏராளமான அகதிகள் இது போன்ற உயர்ந்த நிலப்பகுதிகளில் தஞ்சம் புகுந்துள்ளனர். இவ்வாறு புதிதாகக் குடியமர்ந்தவர்கள் பழங்குடி மக்கள் வாழ்ந்த பகுதிகளைக் கவரத்தொடங்கினர். இப்பழங்குடி மக்கள் அரைகுறை நாகரிக வளர்ச்சியடைந்த காட்டுவாசிகளாக இருந்தனர். புதிதாகக் குடியேறியவர்களுக்கும், பழங்குடி மக்களுக்குமிடையே கூர்மை பெற்ற இம்முரண்பாடு பெரிய போராக முடிவுற்றதாக மரபுவழிச் செய்திகள் கூறுகின்றன. போரில் வேட்டுவப்பழங்குடி மக்கள் தோற்கடிக்கப்பட்டு அப்பகுதியிலிருந்து துரத்தப்பட்டனர். இவ்விரு முரண்பட்ட குழுக்களும் புகழூர் என்னும் நகரில் தங்களது எல்லையை வகுத்துக் கொண்டனர். இவ்விரு குழுக்களுக்கும் இடையிலான பகைமையுணர்வு தற்போதும் உள்ளது. (Arunachalam 1976 : 77) தற்போது காலமாற்றத்தின் விளைவாக வேடுவர்கள் விவசாயிகளாகக் காணப்படுகின்றனர். இவர்கள் தங்களோடு தொடர்பில்லாத வெள்ளாளக் கவுண்ட நில பிரபுக்கள் சூழ்ந்துள்ள பகுதிகளில் வாழ்ந்து வருகின்றனர்.

15-ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் வேட்டுவர்களின் தலைவனான தலையூர்க்காளி என்பவன் 18 வேட்டுவ உட்பிரிவினரையும் ஒரு குறிப்பிட்ட இடத்தில் ஆயுதங்களுடன் வரும்படிக் கட்டளை இட்டதாகப் பழைய சுவடி ஒன்று குறிப்பிடுகின்றது (Arunachalam : Ibid). இக்காலகட்டத்தில் (1470) கோனாட்டை உறையூர் தேவசோழன் ஆண்டு வந்தான். இவன் விஜயநகரை ஆண்ட சதாசிவராயர் என்பவரின் கட்டுப்பாட்டில் இருந்தான். தலையூர்க்காளி வாழ்ந்த பகுதியாகிய வீரமலையில் யாருடைய கட்டுப்பாடும் அதிக அளவில் இல்லாதிருந்தது (இராமமூர்த்தி : 1977, இராமசாமி, 1972). இச்சுவடி குறிப்பிடும் நிகழ்ச்சி வேடுவர்களுக்கும் வெள்ளாளக் கவுண்டர்களுக்கும் இடையில் நிகழ்ந்த ஒரு போரைச் சித்திரிக்கிறது எனக் கருத வாய்ப்புள்ளது. இந்நிகழ்ச்சியே அண்ணன்மார்கள் கதைப்பாடலுக்கு அடித்தளமாக இருந்திருக்கலாம். தலையூர்க்காளி, கதைத் தலைவர்களின் முக்கிய எதிரியாகப் பல திரிபு வடிவங்களில் கூறப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. இக்காலகட்டத்தில் கோனாட்டில் அரசுகளின் அதிகாரம் செல்வாக்கில்லாமல் இருந்தமையால் வேட்டுவர்கள் பேரரசுகளின் தலையீடின்றிப் போர் நிகழ்த்தியிருக்கலாம்.

16-ஆம் நூற்றாண்டின் இறுதியில் மதுரை நாயக்கர்கள் கோனாட்டை உறையூர்ச் சோழர்களின் வழித் தோன்றல்களிடமிருந்து கைப்பற்றத் தொடங்கினர். இக்கதையின் திரிபுவடிவம் ஒன்று மதுரை நாயக்க மன்னர் ஒருவர் இறந்த கதைத்தலைவர்களான அண்ணன்மார்களை வணங்கியதாகக் குறிப்பிடுகின்றது. குறிப்பாக, கம்பையா நாயக்கர் என்பவர் அண்ணன்மார்களின் அடியவராக இருந்திருக்கலாம். கம்பையா, இரங்கராயரின் கீழ் 1642-1672 ஆண்டுகளில் ஆண்டிருக்கலாம். உள்ளூர்ப் போர் வீரர்கள் சடங்கியல் மரபில் இடம்பெற்றுப் போற்றப்பட்டு, சமூக

அங்கீகாரம் பெறுவதற்குப் பொதுவாக நீண்ட காலமாகும். இவ்வாறு அங்கீகரிக்கப்பட்ட பின்னரே சற்றுத் தொலைவில் உள்ள மன்னர் இவ்வீரர்களை ஏற்றிருக்க முடியும். அவ்வாறாயின் இக்கதை வளர்ச்சியடைந்து அண்ணன்மார்களுக்குக் கோயில்கள் கட்டப்பட 200 ஆண்டுகள் ஆகியிருக்கலாம். இதனடிப்படையில் கி.பி. 1450-இல் இக்கதைத் தலைவர்களின் இறப்பு நிகழ்ந்திருக்கும் எனக் கருதலாம். பெரும்பாலான திரிபுவடிவங்கள் அண்ணன்மார்கள் தங்கள் படைக்குப் பலத்த சேதமேற்பட்டுள்ளது என்று அறிந்ததும் அவர்கள் வீரமலைக் காட்டில் தற்கொலை செய்து கொண்டதாகக் கூறுகின்றன. இவ்வீரர்கள் போரில் இறந்திருக்கலாம் எனக் கருதவும் இடமுள்ளது. தற்கொலை செய்து கொண்டதாகக் கூறப்படுவது கதைத்தலைவர்களுக்கு வீரத்தன்மை கொடுப்பதற்காகப் பிற்காலத்தில் கதைப்பாடகர்களால் சேர்க்கப்பட்ட கதைக் கூறாக இருக்கலாம்.

அண்ணன்மார் கதை, பிற கதைப்பாடல்களைவிடச் சிறந்து விளங்குகிறது என்பதற்கு ஐந்து காரணங்களைக் கூறலாம்: 1. இக்கதை தொழில் ரீதியான பாடகர்களால் எடுத்துரைக்கப்பட்டு நிகழ்த்தப்படுகின்றது. 2. இக்கதை வழங்கப்படும் பகுதிகளில் வழக்கில் உள்ள ஏனைய கதைப் பாடல்களைவிட இது பெரியது. 3. கதைத்தலைவர்கள் இப்பகுதியில் புனிதமானவர்களாகக் கருதப்பட்டுக் கோயில்களில் வழிபடப்படுகின்றனர். 4. இக்கதை புராணிய, நாகரிக மரபுகளோடு விரிவான தொடர்புடையதாகக் காணப்படுகின்றது. 5. இக்கதையைப் பாடும் பாடகர்களும் கேட்கும் பார்வையாளர்களும் கதை நிகழ்ச்சிகளை உண்மையில் நடந்த வரலாற்று நிகழ்ச்சிகளாக நம்புகின்றனர். இக்கூறுகள் அனைத்தும் இக்கதையைச் சாதாரண கதைகளைவிட முக்கியத்துவமுள்ளதாகக் காட்டுகின்றன. புராணிய குறிப்புக்கள் நடைமுறை யதார்த்தத்துடன் நயமாக இணைக்கப்பட்டிருப்பது இக்கதையின் சிறப்பு ஆகும்.

பதிப்பு முறை

இக்கதை வாய்மொழி மரபிலிருந்து சேகரிக்கப்பட்டுப் பதிப்பிக்கப்படுகின்றது. எனவே, தமிழ் வாசகர்கள் மொழிநடையை எளிதில் புரிந்துகொள்ளும் வகையில் கீழ்க்கண்ட பதிப்புமுறை கையாளப்பட்டுள்ளது.

1. இக்கதையில் கொங்குநாட்டு வட்டார வழக்குகள் அதிகம் பயின்று வந்துள்ளன. அவற்றிற்குரிய பொருள் இயன்றவரை அடிக்குறிப்பில் கொடுக்கப்பட்டுள்ளது.

2. இக்கதை பேச்சு வழக்கு நடையில் அமைந்திருப்பதால் பொருள் தெளிவிற்காக வல்லெழுத்து மிகும், மிகா இடங்கள் சீர் செய்யப்பட்டுள்ளன.

3. தொடர் அமைப்பு முறைகள் பல ஒழுங்கின்றி இருப்பினும் அவை கதை ஓட்டத்தில் பாதிப்பு ஏற்படுத்தவில்லை. எனவே அவை நாட்டாரின்

மொழிநடையாக ஏற்கப்பட்டு அவ்வாறே கொடுக்கப்பட்டுள்ளன.

4. பல வழக்குச் சொற்கள் முழுமையடையாது பொருள் தெளிவின்றிக் காணப்பட்டன. பொருள் மயக்கம் தவிர்த்தல் பொருட்டு விடுபட்ட எழுத்துக்கள் அடைப்புக்குறிக்குள் சேர்க்கப்பட்டு முறைப்படுத்தப்பட்டுள்ளன.

(எ.டு) ம்கன் இருவரும் - மகன்(கள்) இருவரும்

குழம்புஞ் சாதம் - குழம்புஞ் சாத(மு)ம்

5. இக்கதையில் வழக்குச் சொற்களைப் போன்றே பல ஆங்கிலச் சொற்கள் தமிழில் பயன்படுத்தப்பட்டுள்ளன. தமிழ் அறிந்த பிற மொழியாளர்களை மனத்தில் கொண்டு இவற்றிற்கு இணையான ஆங்கிலச் சொற்கள் அடிக்குறிப்பில் கொடுக்கப்பட்டுள்ளன.

6.கதை முழுக்க ர, ற; ண, ந, ன; ழ, ள ஆகிய எழுத்துக்கள் வேறுபாடின்றி அமைந்து பொருள் மயக்கத்தைத் தோற்றுவித்தமையால் இவையும் சரி செய்யப்பட்டுள்ளன.

7. ஒருமை பன்மை மயக்கங்கள் ஒரு சில இடங்களில் காணப்படினும் அவை நாட்டார் மொழிநடையாகக் கொள்ளப்பட்டு அப்படியே தரப்பட்டுள்ளன.

Introduction

The Elder Brothers Story is widely known, throughout the northwestern districts of Tamilnadu. It is especially popular among agriculturalists living on the plains of the so-called Kongu plateau. It is a full-fledged folk epic and can be understood as a kind of populist attempt to set out the history of this region in story form. It also serves as a lively means of asserting local pride in the region's own, specific folk culture. The account provides insight into a substantial bundle of social, political, and artistic traditions, all wrapped into one memorable folk story. Although substantial competition is now provided by the radio, the cinema, and video tapes, traditionally schooled bards continue to tell this epic at local festivals. Small troupes of entertainers still live off the performances they conduct while wandering from village to village, and devotees occasionally sing excerpts from the story as a form of meditation. The story has a way of marshalling public spirit and also of inducing additional commitment to a regional identity. Its significance has not been lost on politicians, some of whom seek to publically identify themselves with the story and its retelling. Rumors that the epic would make good Tamil film material have persisted for many years.

The epic has no fixed text and many variants exist (see the bibliography at the end of this work for some examples). The number of generations in the hero's family represented by a particular account can vary, as does the breadth of the actions depicted, the outcome and dramatic structure of specific scenes, and even the names and locales specified. Still, there is enough content overlap to make it clear to all that there is one core story involved. The story's key personalities are two elder brothers and their younger sister, born together as triplets. Nonetheless, these three emerge from their mother's womb serially and hence become known as "the eldest brother", "the younger brother", and "the youngest sister" respectively. This rank ordering of siblings has many symbolic overtones, some of which I have discussed at length in my earlier book, *The Three Twins*[1], and in other articles I have written on the subject (see the bibliography). That book also takes an in-depth look at variations in the telling of this story by different bards, and under differing performance circumstances. In addition, a detailed synopsis of the story can be found on pp.205-7 of S. Blackburn, P. Claus,

---

[1] *The Three Twins* is now out of print, but personal copies may be obtained at cost by writing to the author, c/o The Department of Anthropology, The University of Toronto, Toronto M5S 1A1, Canada.

J. Flueckiger and S. Wadley (eds.) *Oral Epics In India,* University of California Press, 1989. The chapter I wrote for this latter book discusses the story's key sibling triad in relation to a range of other important Indian folk epics.

The text of the epic presented here is a word-for-word transcription of an oral dictation. The dictating bard was E.C. Rāmacāmi of Erucaṉampāḷaiyam. He performed the entire epic, at my request, on the porch of my rented quarters in Ōlappāḷaiyam, (near Kangayam, Periyar District) on nineteen different nights between June 23rd and September 1st, 1965. E.C. Rāmacāmi was the lead singer and story teller. He told the story and sung the lead lines during the frequent chorus refrains, accompanying himself with a pair of small brass cymbals which helped him keep the rhythms smooth. In this particular performance Rāmacāmi was accompanied by his favourite singing assistant, his brother's son P. Paḷanicāmi. Paḷanicāmi's job was to sing in a support role during the chorus passages, to respond to the actions described with short comments, and to play the Uṭukkai drum. A small village audience of twenty people or so were present on each of these 19 nights. Though some guests wandered in and out of the house occasionally, most were enthusiasts who attended every session.

I was interested in the story from the start and quickly suspected that it was a significant social document. So I decided to tape record the entire 19 nights of performance, using 44 hours of tape for this purpose. However, it was clear to me from the first night Rāmacāmi sang that to transcribe what I was taping would be a huge and unwieldy task. And, on a practical note, there was no electricity in my Ōlappāḷaiyam home at the time. I knew that I could not afford enough batteries to sustain a transcribing project of this scope! Furthermore, I wanted quick access to the account, in a written format that I could study, but yet I did not want to lose any of the detail. So I decided to ask Rāmacāmi if he would consent to dictate each segment of the Elder Brothers Story to a scribe a day or two after the evening performance. The latter was to take the words down long hand, on large sheets of paper. Rāmacāmi kindly consented to undertake this job. The writing down of the dictated version published here, thus took place between June 25th and September 3rd, 1965. It was always my demand that Rāmacāmi dictate the story exactly as he had sung it, without changes. Concerned that he not alter a single word, I reminded him of this requirement as he began each new dictating session. Rāmacāmi had never dictated before and seemed happy to follow my instructions as to how it should be done. Every time

I inquired, both he and the scribe, my assistant O.K. Sundaram, answered that the story was being written down exactly as it has been sung.

Many years later, with the help of O.K. Sundaram having electrified his house, I was finally able to get the actual performance (taped in 1965) transcribed by the same person as had taken down the dictation. This second work was completed around 1983, well after *The Three Twins* had been published (although a few segments had been completed earlier so that I could analyze them). Of course, despite all affirmations to the contrary, major and very interesting differences between the dictated and performed versions began to emerge. These contrasts tell us much about the nature of the shifts that are likely to occur when a bard moves from a life performance before an audience to producing words someone is trying to write down. For example, the dictated manuscript I acquired in this way was only one quarter as long, amounting to 622 pages hand written, by contrast to 2385 pages for the transcribed performance. Some of the key shifts were:[1]

1) The quantity of words used was reduced by about 70%
2) The formulaic and poetic passages underwent greater shrinkage than did the prose narration.
3) Much descriptive detail, particularly information on the general setting, was eliminated.
4) Extraverbal information contained in pitch, in drum rhythms, in pauses, etc., was lost.
5) A certain amount of meter was added to individual song lines in order to compensate for the loss of the drum rhythms that would normally have accompanied these passages.
6) There was much more variation in the meters used, and some added matching of these to individual themes.
7) Responses from an assistant bard, and grunts, coughs, etc. from the audience, were eliminated.
8) Much humor was eliminated.
9) The use of short passages, summarizing actions described in song-poems, was cut dramatically.
10) Nonsense syllable lines, which mainly serve to set up a new rhythm before introducing the next song, were eliminated.

---

[1] *The Three Twins* pp.59-60

11) The order of presentation was changed; a general overview of the action was placed before mood-setting descriptions.

12) The birth order of two siblings was inverted (not the key heroes, of course) in order to make a certain male older than his sister. This reduced the humor in scenes in which they were shown together.

Most of the above changes occurred with little or no conscious input from the bard or the scribe. In addition, it is important to know that the former was completely unschooled and that the latter had only a minimum of formal education. More detail describing the differences between the taped and the dictated performances can be found on pp. 66-68, 70-73, 79-83 and 194-195 of my book *The Three Twins.*

E.C. Rāmacāmi once told me all he knew about the provenance of this particular version of The Elder Brothers Story. He said he had first learned the epic, as a child, from his own father and elder brothers. Later he wanted to refine his knowledge of various difficult passages. So he went to study with T.N. Karuppanan, a distant relation from Toṭṭampāḷaiyam. Karuppanan, in turn, had been trained by Nancappan, a singer who resided a few miles north west of Kuṇṭaṭam in a town called Kāncapuram. And Nancappan had, in turn, studied with Cellāṇṭi, a man from the town of Pūlavāṭi, a town east of Pollachi. All these men belong to the barber community except Cellāṇṭi, who was a Paṇṭāram or non-Brahman priest and ritual specialist. Many of the epic's singers do come from the service professions, and it is not surprising that this skill tends to run in families. Nonetheless, anyone may become a bard who thinks they feel the calling. Though epic performers are typically male, I have met one woman actor who is married to a lead singer and travels with his troupe. She plays the role of the younger sister in partially dramatized performances, and acts with enthusiasm, vigor and skill. This is unusual. Wives of male singers who do not feel a calling for the profession are left at home. Female roles, therefore, are most often played by men.

There is still much interesting comparative work that could be done by examining contrasts between the performed and dictated versions of this story. For those who might be interested in pursuing such questions, I have deposited a complete copy of the 1965 taped version, along with a complete copy of the transcription of those tapes, with The Archives and Research Centre for Ethnomusicology of the American Institute of Indian Studies, B-29, Defence Colony, New Delhi - 110024. Although I would like to see this performance published, that would pose practical problems, because of

its sheer length, and because so much of the orthography used (in order to represent the spoken and sung sounds properly) departs significantly from standard Tamil writing conventions.

E.C. Rāmacāmi was a wonderful story-teller, and well-loved as a local bard. Although he did not earn a complete living by performing this (and other) epic stories, he did significantly supplement his livelihood in this way. Rāmacāmi was illiterate, although he had heard people read passages of various books and palmleaf texts. By the time I knew him he was also gradually losing his sight. Rāmacāmi was completely blind by the time he died, circa 1979, at age 80 or more. I often wonder whether his failing eyesight actually helped improve his story-telling ability. He continued to remember the Elder Brothers Story in detail, however, right up to the end of his days. He could sing passages from the story with real enthusiasm and expressive depth, long after he could do little else. Unfortunately, Rāmacāmi also began to lose his teeth as he aged. Even the tape recording I have of him in 1965 suffers from a difficulty he had in pronouncing some words, because by then he had already lost his front teeth.

The Elder Brothers Story can now be enjoyed by people of all ages, both in India and abroad. In the translation I have consciously attempted to preserve the folk quality of the telling, and a simple English vocabulary. I find the poetry and charm of the whole lies as much in this simple style as in the content. I have thus made no attempt at rhyme, meter, special poetic grammar, or a literary English vocabulary. The translation uses my own understanding of the action and images, as someone familiar only with village forms of Tamil language expression and with oral usage styles.

It is my hope that this volume will find an interested audience at many levels, for many varied purposes, and that it will find readers on several continents. The work could be used in elementary or secondary schools in Tamilnadu (or, indeed, elsewhere in India) for teaching about regional folk culture and about Indian oral epic traditions in general. It could also be valuable, both in India and abroad, as a document for language teaching. The story would make an interesting and relatively simple text for persons wishing to learn Tamil, as well as a good practice document for Tamil speakers wishing to learn colloquial English. Finally, I hope this volume will make a small contribution to the scholarly study of Indian culture, by folklorists, by anthropologists, and by students of the region's classical epic literature. This volume should also serve to complement my several in-depth publications

on the general significance of this epic. All this work of mine (to date) has suffered from the lack of a properly accessible English text of the epic story for scholars to study. I hope that readers will find this wonderful epic growing gradually on their consciousness. For me, the more I think about the story, and the more I hear it performed, the richer and more interesting it becomes.

Brenda E.F. Beck,

RR # 1, Gore's Landing
Ontario, Canada

January 1, 1992.

Notes on the Translation

1. Tamil words and names have been transcribed according to the system employed in the Madras University's Tamil Lexicon. A few exceptions have been made, however, in the case of proper names where established conventions dictate a familiar English spelling (Madurai, Krishna). Furthermore, proper names have been translated into English in order to give the "flavor" of the original to non-Tamilians. The most important of these are:

Veḷḷivaḷanāṭu - literally, The Country of Silver, but translated as The Country of Abundance.

Poṉṉivaḷanāṭu - literally, The Country of Gold or the Country of the Kāveri River, but translated as The Country where the Kāveri Flows.

Taṅkavaḷanāṭu - literally, The Country of Gold, but translated as The Country of Prosperity.

In all three cases the ideas of abundance, prosperity and fertility are central. The names do not mean that gold and silver are actually to be found in these places. The first name, Veḷḷivaḷanāṭu, refers to the country where the nine original men of the hero's clan first lived. The second refers to the country where the eldest of these brothers settled after a great famine. The third refers to the area where the other eight brothers came to reside. A fourth country, called Vāḷavantināṭu, belongs to the hero's father-in-law and his sons. Since this name has no recognizable literal meanings, its Tamil form has been kept. A final place name, The Chola Country, is the region associated with the hero's overlords, a great line of South Indian kings.

2. Where songs, as opposed to prose material, appear in the text I have tried to keep the line structure of the original. In a few cases, however, the order of adjacent lines has had to be inverted, since Tamil tends to "say things backwards" from the English speaker's perspective.

3. Words in brackets are not actually in the original, but seem to be implied, given the context. They have been added to lend clarity to the text for non-Tamil readers.

அண்ணன்மார் கதை

ELDER BROTHERS STORY

(AN ORAL EPIC OF TAMIL)

PART I

(விருத்தம்) விநாயகர் தோத்திரம்

நீடாழி உலகத்தின் மறைநாள் உடைந்தென்று
நிலை நிற்கவே, வாடாத தவவாய்மை முனிதாசன்
மாபாரதம் சொன்னநாள், ஏடாக மகமேறும்
வெட்பாதம் கூர், எழுத்தாணிதன் கோடாக
எழுதம்பிரானை பணிந்தன்புகூர்வாமறா[1]

(விருத்தம்) சரஸ்வதி தோத்திரம்

வெள்ளைக்கலையுடுத்தி வெள்ளைப்பணிபூண்டு
வெள்ளைக் கமலத்தில் வீற்றிருப்பாய்
அரியாசனத்தில் அரசரோடு எனை
சரியாக ஆசனம் வைத்த தாயே

(பாட்டு) *வாணியம்மா வாணியம்மா வலதுபுறம்*
தாடியம்மா நம்மளுடைய திருவாக்கு
திருவாக்கு திருவாக்கு நானிருந்து
தேடுகிறேன் தேடுகிறேன்
தேன் மொழியாள் பாரதங்கள்
ஓதிவைத்த என்குருவை
இனி ஒருநாளும் நான் மறவேன்
படிக்கவைத்த அம்மா வாத்தியாரைப்
பலநாளும் என்தாயே நான் மறவேன்
என்னும் நல்லோ என்னும் கனகசபை
எப்போதும் இந்த இடம் தெய்வசபை
தெய்வசபை என்தாயே நானிருந்து
தேடுகிறேன் தேன்மொழியாள் பாரதங்கள்

---

1. இது மகாபாரதம், கடவுள் வாழ்த்து, பாடல் எண் ஒன்றின் நாட்டார் திரிபு வடிவம். மூலம் பின் வருமாறு.

நீடாழி யுலகத்து மறைநாலொ
டைந்தென்று நிலைநிற்கவே
வாடாத தவ வாய்மை முனிராசன்
மாபார தஞ்சொன்ன நாள்
ஏடாக வடமேரு வெற்பாக
வங்கூரெ ழுத்தாணிதன்
கோடாக வெழுதும்பி ராணைப்
பணிந்தன்பு கூர்வாமரோ

Invocation to Vinayakar

(As recited by) the ascetic who had immortal power[1]
Derived from penance in order to re-establish the Vedas[2]
That were crumbling in a world surrounded by the deep sea
The white-footed Lord used his tusk
To write the Mahabharata[3] on palm leaves
Let us not forget to worship (him) with love

Invocation to Saraswati

You, dressed in a white cloth, decorated with white jewels
You, seated on a white lotus
You have placed me on a par
With a king seated on a fine throne[4]
Oh Vāṇiyammā,[5] oh Vāṇiyammā! Bless me with
your right hand
I am searching, searching for your blessings
Your sweet-versed lady, my teacher who taught me
the Mahabharata
I will never forget her, never (even) for a day
The lady who taught me
I will never forget her (even) for a day
I am searching, searching for the god's counsel-chamber
(And for) the sweet words (contained in) the Mahabharata[6]

---

[1] Vyasa, the saint-ascetic who is said to have first recited the Mahabharata, using the god Vinayakar as his scribe. [2] The Vedas are here referred to in the very general sense of "India's ancient classical wisdom". The idea here is that the moral order was in decline and man's knowledge of truth was being lost. Vyasa's, reciting the Mahabharata and Vinayakar's making the story available to the world is thought to have helped reinstate virtue and inspire mankind to righteous action. [3] The Mahabharata is India's greatest classical epic. Vinayakar is a god who presides over the auspicious beginnings of things. [4] This invocation (like the previous one) is being sung by the bard who will recite the epic. He is suggesting that, for performing this task, he will enjoy a respect equivalent to that accorded a king on a throne. [5] Vāṇiyammā is a name for Saraswati, goddess of learning and of the arts. [6] From this line, as well as from those that have gone before, it is clear that the bard wishes the epic story he will tell to be linked to the great story of the Mahabharata.

ஆனாடு[1], கோனாடு[2], பொன்னி வளநாட்டின்[3]

குன்றுடையாக் கவுண்டர் வம்ச வரலாறு

முன் காலத்தில் வெள்ளிவளநாட்டில்[4] காராளர் வம்சம் தோன்றிய வரலாறு

முன் பூமிபாலகராகிய காராளர்கள் இல்லாமல் "மேழிச்செல்வம் கோழை படாது" என்ற முறைப்படி, ஈசுவரியாகப்பட்டவர் தனது சிருஷ்டியில் மேழிச்செல்வத்தில் பூபாலகர் ஒன்பது பேர் உண்டாக்கினார். இந்த ஒன்பது பேருக்கும் வரன் முறை மாமன் மைத்துனர்கள், வாளவந்திநாடு[5] மணியன் குல கவுண்டர்களாவர்.

இப்படியிருந்து வரும் நாளில் வெள்ளி வளநாட்டில் பஞ்சம் ஏற்பட்டு ஒன்பதுபேரில் மூத்தவரான கோளத்தாக் கவுண்டர் சோழதேசம் புறப்பட்டுச் சென்றார். சோழதேசத்தில் அதைச்சார்ந்த பொன்னி வளநாடு நெல்வளம் நிறைந்த செல்வம் சிறந்த நாடாக விளங்கியது.

சோழதேசத்தையும் அதைச்சேர்ந்த மற்ற சிறுநாடுகளையும் சேரன், சோழன், பாண்டியன் என்ற மூன்று அரசர்களும் ஆண்டு வந்தார்கள். அன்று, அரசர் மூவரும் சபை வீற்றிருந்தார்கள். அது சமயம் கோளத்தாக் கவுண்டர் அங்கு வந்து அரசர்களைக் கண்டு நமஸ்காரம் செய்தார்.

அரசர் - "மங்களம் உண்டாகட்டும்! அப்பா நீ யார்? எந்த ஊர்? உன் பெயர் என்ன சொல்?"

கோளத் - "அரசே! நான் வெள்ளி வளநாடு காராளன். என் பெயர் கோளத்தாக் கவுண்டன். என் நாட்டில் பத்து வருஷமாக மழையில்லாமல் பஞ்சம் ஏற்பட்டுக் கொடுமை தாங்க முடியாததால் தங்கள் நாட்டில் கொஞ்ச காலம் இருந்து போகலாமென்று என் மனைவியுடன் தங்களிடம் வந்தேன்."

அரசர் - "அப்படியா! சரி, நல்லது. கோளத்தாக் கவுண்டா! உனக்கு மாதம் பதினாறு வள்ளத்தானியம்[6] கொடுக்கிறேன். என்னிடம் வேலைக்கு இருந்து கொள்கிறாயா?"

கோளத் - "அரசே நல்லது! ஆனால் நான் மனைவியுடன் (இருக்கிறேன்). ஆகையால் மாதம் இருபது வள்ளத் தானியம் கொடுங்கள். இருந்து கொள்கிறேன்."

---

1. கொங்கு நாட்டிலுள்ளதொரு குறுநாடு 2. சேரர்களால் கைப்பற்றப்பட்ட கொங்குநாட்டுப் பகுதிகளைத் தவிர, எஞ்சியவை கோனாடு என்ற பெயரால், சோழர்கள் ஆண்டு வந்ததாகச் சொல்லப்படுகிறது 3. சோழர்களின் ஆட்சிக்கு உட்பட்டிருந்ததாகச் சொல்லப்படும் ஒரு நாடு 4. காராளர்கள் தோன்றியதாகக் கருதப்படும் கொங்கு நாட்டில் உள்ளதொரு நாடு 5. கொங்கு நாட்டின் 24 குறுநாடுகளுள் ஒன்று 6. வள்ளம் = 2 பக்கா = 4 படி

The story of the family of Kuṉṟuṭaiyā Kavuṇṭar in the land of brave males, the land with a king; That Country Where The Kāveri Flows.

This is the story of how the farming community of The Country of Abundance came into existence. There was once a time when no decisive-minded agricultural community existed. (But the goddess) Parvati thought "This land must prosper" and so she created nine farmers from a plough. The Maniyar clàn of Kavuṇṭars of The Country Called Vāḷavanti was to be related (first) as father-in-law and (then) as brothers-in-law to these nine farmer men.

Then a famine broke out in The Country of Abundance and the eldest of the nine (sons), Kōḷattā[1] Kavuṇṭar[2], set out for the Chola Country. Arriving there he learned that there was ripe paddy and prosperity in The Country Where The Kāveri Flows.

The three lines of kings, the Chera, Chola and Pandiya were ruling (then) in the Chola Country and in neighbouring smaller areas. At the time of Kōḷattā Kavuṇṭar's arrival the three kings were holding a public assembly. Kōḷattā Kavuṇṭar went there, and on seeing the kings he greeted them respectfully.

The King: "Blessings to you! Who are you? Where are you from? What is your name?"

Kōḷattā: "I am from The Country of Abundance. My name is Kōḷattā Kavuṇṭar. In my country there has been no rain for ten years. It is unbearable. So I have come to you with my wife thinking I might take refuge in your country for awhile."

The King: "So be it! Alright, good, Kōḷattā Kavuṇṭar! I will give you sixteen vaḷḷam of grain a month.[3] Will you accept work from me?"

Kōḷattā: "Good King! But my wife is with me, so give me twenty measures a month if you can."

---

[1] The name Kōḷattā might be linked to the word Kōḷ, meaning 'strength' or 'power', but this is not certain. [2] Kavuṇṭar is the name (or title) of the main agricultural caste of the Coimbatore District. It is a prestigious term even nowadays. Originally it seems to have been a term used for addressing or describing kings. [3] One vaḷḷam equals about ten cups. There are 128 cups in the English bushel, so this offer is a little more than a bushel of grain per month. One hard-working man is said to eat about eight measures of grain in a month (the other six could be exchanged for vegetables, cloth, etc.)

அரசர் - "சரி! அப்படியே கொடுக்கிறேன்"

கோளத்தாக் கவுண்டர் அரசரிடம் வேலைக்குச் சேர்ந்து, அரண்மனையில் இருந்து வரும் நாளில்,

(பாட்டு) "இந்தப் பிரகாரம் நடக்குதுபார் அதிகாரம்
நாளொரு நாள் பொழுதொரு நாள் இனி
நடக்குது பார் நல்பருவம்
அப்படியே நல்லதென்று அங்கு
அன்புடனே நடக்குது பார்
செங்கோலு அதிகாரம் ராஜர்
செலுத்திப் பட்டம் ஆளுகிறார்
தங்க விரல் அதிகாரம் ராஜர்
செலுத்திப் பட்டம் ஆளுகிறார்
காலம் நல்லோ பனிபெயும் நாட்டில்
கடுகு சம்பா நெல் விளையும்
மூடு நல்லோ பனிபெயும் நாட்டில்
மிளகு சம்பா நெல் விளையும்
கட்டுக்களங்காணும் கதிர்விளைய நெல்காணும்"

சோழதேசத்தில் இப்படியிருக்கும்போது வெள்ளி வளநாட்டில் கோளத்தாக் கவுண்டர் தம்பிமார்கள் எட்டுபேரும், "நம் அண்ணன் கோளத்தாக் கவுண்டர் சோழதேசம் போனார். அவரைப்பற்றி ஒரு தகவலும் தெரியவில்லை. போய்ப் பார்த்து வருவோம்" என்று புறப்பட்டுச் சோழதேசம் சென்று அரசர்களைக் கண்டு நமஸ்காரம் செய்தார்கள்.

அரசர் - "மங்களம் உண்டாகட்டும்! அப்பா நீங்கள் யார்? எந்த ஊர்? எங்கு வந்தீர்கள்?"

எட்டு பேரும் - அரசே! நாங்கள் வெள்ளிவளநாடு, காராளக் கவுண்டர்கள். ஒரு வருஷத்திற்கு முன் எங்களில் மூத்தவரான கோளத்தாக் கவுண்டர் என்பவர் தங்களிடம் போவதாகச் சொல்லி வந்தார். வந்தபிறகு அவர் ஒரு தகவலும் கொடுக்கவில்லை. ஆகையால் பார்த்துவிட்டு நாங்களும் இந்த நாட்டில் இருந்து கொள்ளலாமென்று வந்தோம்.

அரசர்- "அப்பா, கோளத்தாக் கவுண்டர் உங்கள் அண்ணன் தானா?"

எட்டு பேரும் - "ஆம் அரசே! எங்கள் அண்ணர்தான்."

அரசர் - "சரி நல்லது. அடே சேவகா! அந்தப் புறம் கோளத்தாக் கவுண்டர் இருக்கிறார். கூட்டி வா."

King: "O.K. I will give you the latter."

One day when Kōḷattā Kavuṇṭar was working in the King's palace:

Song:
See the monarch rule thus
Day after day, time followed time
See the good age in progress
It was said to be good, there
See how it was done with love
The King's reign was just
His commands were authoritative
The one who has a signet ring on his finger is ruling
The King rules authoritatively
It rained at the proper times
The kaṭuku sampa paddy prospered
It rained abundantly in that country
The miḷaku sampa paddy prospered

There was so much paddy that the excess was sprouting on the threshing floor.

At that time the younger brothers of Kōḷattā Kavuṇṭar who were still in The Country of Abundance began to think, "Our elder brother went to Chola Country but we have had no word of him." So the eight of them set off to find him. When they saw the King they greeted him respectfully.

King: "Blessings to you! Who are you? Where are you from? Why have you come?"

8 men: "King, we are agriculturalists from The Country of Abundance. A year ago our eldest brother, Kōḷattā Kavuṇṭar, left to see you. Since then we have had no news of him. So we have come looking for him."

King: "So Kōḷattā Kavuṇṭar is your elder brother?"

8 men: "Yes, he is our elder brother."

King: "Oh, servant! Kōḷattā Kavuṇṭar is over there. Bring him here!"

சேவகர் - "அரசே, நல்லது" என்று அந்தப் புறம் சென்று கோளத்தாக் கவுண்டரைக் கூட்டி வந்தார். கோளத்தாக் கவுண்டர் வந்து அரசரைக் கண்டு நமஸ்காரம் செய்தார்."

அரசர் - "அப்பா, கோளத்தாக் கவுண்டா! இவர்கள் எட்டுபேரும் உன் தம்பிகளா?"

கோளத் - "அரசே! என் தம்பிமார்கள்தான். என்னைக் காண வில்லையென்று தேடி வந்திருப்பார்கள் போல் தெரிகிறது."

அரசர் - "சரி, நல்லது!"என்று அந்த எட்டுபேரையும் நோக்கி, ஏப்பா, நீங்கள் எட்டுபேரும் என்னிடம் வேலைக்குச் சேர்ந்து கொள்கிறீர்களா? உங்க அண்ணனுக்குக் கொடுப்பது போல் மாதம் இருபது வள்ளத்தானியம் உங்களுக்கும் கொடுக்கிறேன்.

எட்டு பேரும் - "சரி, அரசே! அப்படியே இருந்துகொள்கிறோம்" என்று கோளத்தாக் கவுண்டர் தம்பிமார்கள் அரசரிடம் வேலைக்குச் சேர்ந்து'காலந்தாட்டி[1] வந்தார்கள்.

வெள்ளி வளநாட்டுக் காராளக் கவுண்டர்கள் ஒன்பதுபேரும் சோழ தேசத்தில் இருந்துவரும் காலத்தில் சோழ தேசத்திலும் அதைச் சேர்ந்த பொன்னி வளநாட்டிலும் மாதம் மூன்று மழை, வருஷம் ஒரு கல்மாரி[2] பெய்து பொன்னி வளநாடு செல்வம் சிறந்து விளங்கியது.

(பாட்டு) "பொன்னி வளநாடு புகழ் பெரிய நன்னாடு
ஆனாடு கோனாடு அழகு பொன்னி வளநாடு
சிலுக்காம்புலியூர்[3] சின்னப் பொன்னி வளநாடு
மண்போட்டுப் பொன் விளையும் மகுட பொன்னி வளநாடு
ஆனை கட்டித் தாம்பாடும்[4] அழகு பொன்னி வளநாடு"

இப்படிப் பெயர் விளங்கிய காலத்தில் ஐம்பத்தாறு தேச அரசர்களும் கூடி, "இவ்வளவு காலமாக நம் நாட்டில் காராள வம்சம் இல்லாமல் இருந்தது. இப்போது காராளர்கள் இங்கு வந்த பிறகு நம் நாடு செல்வம் சிறந்து விளங்குகிறது. ஆகையால் நம்ம பூமிகளை ஆசாரிகள் உழுது வருகிறார்கள். அந்தப் பூமியைத் திருப்பி இந்தக் கவுண்டர்களுக்கு விடலாம்" என்று அரசர்கள் முடிவுசெய்து ஆசாரிகளை அழைத்து,

"அப்பா, ஆசாரிகளே! பூமியை உழுவடை செய்ய ஏற்பட்டவர்கள் காராளர்களே. ஆகையால் பூமியை அவர்களுக்கு விட்டுவிடுங்கள்!"

1. காலங்கழித்து 2. கல்மழை 3. திருச்சி மாவட்டத்தில் மணப்பாறைக்கு அருகிலுள்ள ஆலத்துராக இருக்கலாம் 4. போரடிக்கும்

Servant: "Good, oh King!"

So the servant went and brought Kōḷattā Kavuṇṭar. When Kōḷattā saw the King he greeted him respectfully.

King: "Oh, Kōḷattā Kavuṇṭar! Are these eight men your younger brothers?"

Kōḷattā: "These are my younger brothers. It seems that they have come looking for me."

King: "So be it." Then he looked at the eight men and said, "Will you eight accept work from me? I will pay you the same as your elder brother, twenty vaḷḷam of grain a month."

8 men: "Good, oh King! We agree."

So the eight younger brothers of Kōḷattā Kavuṇṭar took up work with the King and time began to pass.

While the nine agriculturalists were in the Chola Country, it rained three times a month and once each year there was a shower of hail stones. (This happened) both in the Chola Country (itself) and in the affiliated Country Where The Kāveri Flows. Both lands flourished.

Song: The Country Where The Kāveri Flows, the famous
large country
The country with brave males, the country with a king
The Beautiful Country Where The Kāveri Flows,
The country that contains the town of Cilukkāmpuliyūr
in its lesser division
The country where gold springs from the earth,
The Famous Country Where The Kāveri Flows
The country where the threshing is done
with elephants

At this time, when its name was growing, the King called an assembly of the fifty-six local rulers and said: "Our country was without a farming community for so long. Now that the agriculturalists have come our country has begun to prosper. Therefore, the land that the artisans have been ploughing must be returned to these Kavuṇṭars." This was the agreement the rulers made. So they called the artisans, and said:

"Oh, artisans. The agriculturalists were the first to plough the land. Therefore, you (must) give the land back to them!"

ஆசாரிகள் - "அரசே! இவ்வளவு காலமாகப் பூமியை நாங்கள் உழுவடை செய்து இப்போது நாங்கள் காராளர்களுக்குப் பூமியை விட முடியாது" என்று தர்க்கம் செய்தார்கள்.

அரசர்கள், "ஏது நாம் சொன்னால் கேட்கமாட்டான் போல் இருக்கிறது" என்று நினைத்து மாயவரை[1] வரவழைத்தார்கள். மாயவர், அரசர்கள் அழைக்கிறார்கள் என்று தெரிந்து புறப்பட்டு அரண்மனை வந்து பாம்பின் மேல் ஆசனம் போட்டு அமர்ந்தார். அரசர்கள் எல்லோரும் மாயவரை நமஸ்காரம் செய்தார்கள்.

மாயவர் - "அரசர்களே என்னை யாது விஷயமாக அழைத்தீர்கள்?"

அரசர் - "சுவாமி! வெகுநாளாகப் பூமியை ஆசாரி உழுவடை செய்து வந்தான். இப்போது வெள்ளி வளநாட்டிலிருந்து காராளர்கள் இங்கு வந்து எம்மிடம் இருக்கிறார்கள். அவர்களுக்குப் பூமியை விட்டு விடும்படி ஆசாரிகளுக்குச் சொன்னோம். "நாங்கள் விட மாட்டோம்" என்று ஆசாரிகள் மறுக்கிறார்கள். ஆகையால் தாங்கள்தான் இதற்கு ஒரு முடிவு செய்ய வேண்டும்."

மாயவர் - "அப்பா, ஆசாரி! இன்று முதல் பூமியைக் காராளருக்கு விட்டுவிடு. உனக்கு வேண்டாம்."

ஆசாரிகள் - "சுவாமி! மன்னிக்கவும். நாங்கள் பூமியை விட மாட்டோம்."

மாயவர் - "அப்பா, ஆசாரி! அப்படியானால் நான் ஒரு நிபந்தனை செய்கிறேன். அதன்படி ஒப்புக்கொள்கிறீரா?"

ஆசாரிகள் - "சுவாமி! அப்படியே நல்லது."

மாயவர் - "சரி. நான் காராளனைப் பூமிக்குக் கீழ் கொண்டு நிறுத்தி, பதினெட்டு அபிஷேகம் செய்து, பூமிக்கு மேல் எழுப்பி விடுவேன். நீ அவர் சிரசை ஒரே வெட்டாகத் துண்டாக்கினால் பூமியை நீ எப்போதும் போல் உழலாம். தவறினால் பூமி காராளர்களுக்குத்தான்! அவர்கள் கொடுக்க, நீ வாங்கிச் சாப்பிடவேண்டும். இதுவே என் நிபந்தனை."

நிபந்தனைப்படிச் செய்யத்தவறி முடிவில் பூமி காராளருக்கு ஒப்படைக்கப் பட்டது.

பூமியைக் காராளர்கள் ஒன்பது பேருக்கும் கொடுத்து மூத்தவரான கோளத்தாக் கவுண்டருக்குப் பொன்னி வளநாட்டையும் மற்ற எட்டு பேருக்கும் தங்க வளநாட்டையும் கொடுத்துத் தங்க வளநாட்டுக்கும் பொன்னி வளநாட்டுக்கும் இடையில் எல்லைக்கல் நாட்டி விட்டார்கள் அரசர்கள். பொன்னி வள

1. திருமால்

Artisans: "We have ploughed the land for so long. We cannot return it to the agriculturalists now." Saying this, they began to argue.

"It seems that the artisans will not listen to what we say," thought the kings. So they called Vishnu.[1] He set out for the palace and appeared there seated on a snake. All the assembled rulers greeted him.

Vishnu: "Oh kings, why have you called me?"

King: "Lord! For many years the artisans have ploughed the land. Now agriculturalists have come here from The Country of Abundance. We have told the artisans to give the land to them. But the artisans are refusing to give it up. You must find a settlement for this dispute."

Vishnu: "Oh, artisans. You are to give the land to the agriculturalists today. (But) you refuse."

Artisans: "Lord. Excuse us! We won't give up the land."

Vishnu: "Oh, artisans. If that is so, then I will ask for a covenant. Will you abide by it?"

Artisans: "Lord. That is (a) good (idea)."

Vishnu: "O.K. I will take the agriculturalists below the earth. After eighteen ritual offerings have been completed I will let one of them rise up. If you can cut off his head with one blow then the land will be yours to plow forever. If you fail, then the land will go to the agriculturalists. Having given it to them you will have to purchase food to eat. This is my covenant."

Having made this covenant the land came under the trust of the agriculturalists after the artisans failed to cut off the head that rose from the earth in front of them.

The land went to the nine agriculturalists, The "Land of Increasing Gold" to the eldest, Kōḷattā Kavuṇṭar, and "The Country of Prosperity"[2] to the other eight. A stone marker was set up on the boundary between these two countries by the kings.

---

1 The specific name used for Vishnu, throughout this text, is Māyavar. 2 Taṅkavaḷanāṭu

நாட்டில் செல்லாத்தாளுக்கு[1] மூன்று தலைக்கட்டாக[2]ப் பூஜையில்லாமல் இருந்தது.

ஆத்தாளுக்கு மானியமாக விடப்பட்டிருந்த நிலம், ஆயிரமா[3] நிலம். எழுபத்து ஒன்பது சீமை,[4] மதுர வண்டூராங்குளம், காவேரி ஆறு கடைதிரண்டு வந்தாலும், வெள்ளாங்குளத்துக்கு வீரண மதகுக்கு விதை நெல்லுக்கும் பத்தாது. போகத்துக்கு[5] ஏழாயிரம், எண்ணாயிரம் சலகை[6] நெல் விளையும்.

கோளத்தாக் கவுண்டரைப் பொன்னி வளநாட்டில் வைத்துச் செல்லாத்தாளுக்கு மூன்றுகால பூஜையும் சரியாக நடத்தச் சொன்னார்கள் அரசர்கள்.

(பாட்டு) இந்தப் பிரகாரம் நடக்குதுபார் அதிகாரம்
நாளொரு நாள் பொழுதுதொரு நாள் அங்கு
நடக்குது பார் நல் பருவம்
அப்படியே நல்லதென்று அன்புடனே நடக்குது பார்
மாதம் மூன்று மழை பெயும் வருஷம் ஒரு கல்மாரி

(விருத்தம்) கட்டுக்களங்காணும் கரு துளிர்க்க நெல்காணும்
ஆனை கட்டித் தாம்பாடும் அழகுபொன்னி வளநாடு
தங்கம் விளைஞ்சு தனிசம்பா போலேறும்
மட்டை[7] விளைஞ்சு மறு சம்பா போலேறும்

கோளத்தாக் கவுண்டர் பொன்னி வளநாடு வந்து நாற்பத்தைந்து வருடம் ஆகிய பிறகு ஒருநாள் கவுண்டரும் மனைவியும் ரேணுகப் பட்டசாலையில்[8] உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்தார்கள். கோளத்தாக் கவுண்டர் மனைவி அரியனாச்சி கவுண்டச்சி அவள் தன் நாதனிடம்,

அரிய - "நாதா! நம் கல்யாணம் முடிந்து நாற்பத்தைந்து வருஷம் ஆகிறது. ஏன் நம்மளுக்கு ஒரு குழந்தை கூட பிறக்கவில்லை? நம்ம வீடு அன்னு[9] கட்டிய வீடு மாதிரி இருக்கிறதே நாதா!

---

1. காராளர்களின் வழிபடு தெய்வம் 2. தலைமுறை 3. மா - 100 குழி அல்லது 1/20 வேலி அளவுடைய நிலம் 4. தேசம் 5. விளைவு 6. சலகை = 64 பக்கா = 21 மரக்கால் 7. ஒரு வகை நெல் 8. அரண்மனையில் பொதுமக்கள் கூடும் மண்டபம் 9. அன்று

The goddess Cellāttā of "The Land Where The Kāveri Flows" had been without any pūjās for three generations.

The land that was donated to the lady contained enormous paddy fields. The seventy-nine countries that (were so big that) even if all the water from Matura Vaṇṭūrāṉ tank and the river Kāveri flowed in through Vīraṇamataku sluice gate to Veḷḷāṉ tank it would not be sufficient even to soak the paddy seeds. Producing prosperity, seven to eight thousand calakai[1] of paddy were growing.

Kōḷattā Kavuṇṭar was told by the (Chola) kings to perform pūjā three times a day to Cellāttā of The Country Where The Kāveri Flows.

Refrain: See the monarch rule thus
Day after day, time after time
See the good age in progress
It was said to be good, there, see how it was done with love
It rained three times a month there and once each year there was a shower of hail stones
There was so much paddy that the excess was sprouting on the threshing floor
The Beautiful Country Where The Kāveri Flows
And threshing is done with elephants
Gold multiplies in that country heaped like sampa paddy
The grain grows heaped like the forthcoming sampa paddy crop

Forty-five years after coming to The Land of Increasing Gold, Kōḷattā Kavuṇṭar and his wife sat down one day in the courtyard where the public assembles and began to talk.

Kōḷattā Kavuṇṭar's wife's name was Ariyanācci. She now addressed her husband:

Ariya: "Husband. It has been forty-five years since we married. Why do we not have even one child? Our house looks as new as when it was built."[2]

---

[1] One calakai = 64 measures (pakka = 21 marakkals = 32 vaḷḷam (one vaḷḷam = two measures). It has been the practice of this area (before the survey and settlement was introduced) to estimate the area of a portion of land by the quantity of seed required to sow it. This quantity varies with the quality of the land and the variations of the local seed measure, so that great diversity exists. According to this the measure of land is referred in terms of grain measures like Calakai, Vaḷḷam etc. One marakkal land is equal to about 5 cents, 800 calakkai of land is equivalent to about 381 acres. But the bard intended more than this measure.[2] Since there has been no child to mess things up.

(பாட்டு) கன்னி அழுகிறாளே இனிகாந்தேறி[1] வாடுறாளே
மங்கைநல்லோ மங்கை அழுகிறாளே
மலர்க்கிளியா வாடுறாளே
பெண்ணாநல்லோ பெண்ணா அழுகிறாளே
அருங்கிளியா வாடுறாளே அங்கு வாடுறாளே
நான் வரடியின்னு[2] என்சாமி வரடியின்னு
நான் வையகமும் பேரானேன் நாட்டிலே பேரானேன்
காயா[3] நல்லோ காயா வரடியின்னு
நான் கனிவரடி நாட்டிலே பேரானேன் அங்குப் பேரானேன்
பல்லு படைத்த ஜனம் பாதிஜனம் பேசுதுங்கோ
நாவுபடைத்த ஜனம் என்னை நாலு ஜனம் பேசுதுங்கோ
ஊரு படைத்த ஜனம் என்னை உற்ற ஜனம் பேசுதுங்கோ
யாருக்குத் துரோகம் செய்தேன் நாதா?
அன்னத்துக்கு வந்தவரை
அடுத்து வரச் சொன்னதுண்டோ
பிச்சைக்கு வந்தவரைப்
பின்னேவரச் சொன்னதுண்டோ நாதா?

கோளத் - "அம்மா கரியைத் துடைக்கலாம். காவிரியை நீந்தலாம். விதியைத் துடைக்க பிரமாவினால் ஆகாதம்மா."

கோளத்தாக் கவுண்டர் அரண்மனையில் இப்படியிருக்கும்போது சோழ தேசத்தில் பஞ்சம் ஏற்பட்டு அரசருடைய பன்னிரண்டு காராம் பசுவுக்கும் உணவு இல்லாமல் கொம்பில் சீட்டைக் கட்டி விட்டுவிட்டார்கள். சீட்டில் என்ன எழுதியுள்ளதென்றால், "என் நாட்டில் பஞ்சம் ஏற்பட்டுப் பசுக்களுக்குச் சரியான உணவு இல்லாமையால் செழித்த நாட்டில் போய் இருக்கவும். பஞ்சம் தீர்ந்ததும் வந்து ஓட்டி வருகிறேன். இப்படிக்குச் சேரன், சோழன், பாண்டியன்.

பன்னிரண்டு காராம்பசுவும் புறப்பட்டுச் செல்வம் உள்ள நாட்டைத் தேடிச் சென்றன. போகும் வழியில் ஏழு பசுக்கள் பொன்னி வளநாட்டை நோக்கிப் புறப்பட்டன. மற்ற பசுக்கள் வேறு திசையை நோக்கிச் சென்றன.

1. மனங்கொதித்து 2. மலடி 3. காய்க்காத

Song: The chaste woman is crying, She is hot with indignation, she is wilting
The good woman, the woman is crying
The flower parrot is pining
The good woman is crying
The rare parrot is wilting, she is wilting there

Ariya's Song: I am known all over the world as,
all over the country as
A barren woman, a barren woman, my Lord
In the fertile country, in the fertile country.
I am known as
A fruitless, barren woman, as a fruitless (woman).
Of all those who have teeth, half (of them) gossip (about me)
Of all those with tongues, many people gossip about me
All the people, and the people related to me, gossip about me
Who have I wronged, oh husband?
Did I ever send away people who came for food telling them to come later?
Have I ever sent people away, people who have come for alms, telling them to come later, my husband?

Kōḷattā: "Oh Lady, we can wipe away black soot, we can swim the Kāveri river.
But even Brahma cannot rewrite fate."

While Kōḷattā Kavuṇṭar lived in his mansion, a famine broke out in the Chola Country. The King had no food for his twelve black cows,[1] so he tied a message to their horns and set them loose. The Chera, Chola and Pandiya kings intended this as a sign that the cows should pasture in whatever country was fertile, and after the famine was over they could go and collect them.

The twelve cows set out searching for a country where there was prosperity. On the way, seven cows began to head for The Country Where The Kāveri Flows. The other cows made their way in other directions.

Kārām pacu, also term for mythologically famous cows belonging to Indira, King of the Gods. His cows are said to have black ears and black teats.

(பாட்டு) பொன்னி வளநாடு தேடி வருகுதுபார் பசுக்களுமே
மண்போட்டுப் பொன் விளையும் மகுட பொன்னி வளநாடு
தேடி வருகுது பார் பசுக்களுமே

ஏழு பசுக்களும் பொன்னி வளநாடு வந்து வெள்ளாங்குளத்தேரி வெங்கல மதகடியில் வந்து நின்று பார்த்தன.

மாலைநேரம் கோளத்தாக் கவுண்டர் பூமியில் கரும்புநெல் செழித்தோங்கிப் பச்சை நிறமாகப் பசுக்களின் கண்களுக்குத் தெரிந்தது. "நாம் இப்போது போய் வெள்ளாமையில்[1] சாப்பிட்டால் தோட்டக்காரர் அடித்து விரட்டி விடுவார்கள்" என்று பசு(க்கள்) நினைத்துப் பக்கத்தில் இருந்த மதுக்கார வனத்துக்குச் சென்று, இரவு ஆனவுடன் வந்து கரும்புக்காட்டில் ஏழு பசுக்களும் நுழைந்து இஷ்டம்போல் வயிறு நிறைய சாப்பிட்டு விட்டு மறுபடியும் மதுக்காரவனம் சென்றுவிட்டன. காலையில் கோளத்தாக் கவுண்டர் தோட்டம் வந்து கரும்புக்காடு அழிபட்டிருப்பதைப் பார்த்துத் தோட்டம் மலையருகில் இருப்பதால் காட்டு மிருகங்கள் வந்து அழித்து விட்டது என்று கோபம் கொண்டு வீட்டுக்கு வந்து,

கோளத் - "அடே தலையாரி[2]! உடனே தங்க வளநாடு சென்று ஆசாரி ஏழு வீட்டுக்காரரையும் கூட்டிக் கொண்டு சீக்கிரம் வா!"

என்று கட்டளையிட்டார்.

(பாட்டு) பொன்னிவள என்னாத்தா நாடுவிட்டுத்
தங்கவள என்னாத்தா நாடு தேடி
வண்டோட்டம்[3] என் சாமி வெகுதுரிசா
வாரானே என் சாமி தலையாரி
ஆளைக்கண்டால் அன்னநடை ஆள்மறைந்தா
என்சாமி குதிரைவேகம் வாறானே

தலையாரிகள் தங்க வளநாடு வந்து யானைமுகப் பிள்ளையார் ஐங்கரனார் கோவிலில் போய் நின்று, "ஆரப்பா ஆசாரிகள்? இங்கு வாருங்கள்" என்று கூப்பிட்டார்கள்.

ஆசாரி ஏழுபேரும், "ஏனப்பா, எதற்குக் கூப்பிட்டீர்கள்?" என்று கேட்டுக்கொண்டே வந்தார்கள்.

தலையாரி - "உங்களைப் பொன்னி வளநாட்டில் எஜமானர் உங்கள் சாமான்களை எடுத்துக் கொண்டு உடனே வரச் சொன்னார்."

அதன் பிரகாரம் ஆசாரி ஏழு வீட்டுக்காரரும் புறப்பட்டு,

1. பயிர்நிலம் 2. கிராமக் காவற்காரன் 3. மிக விரைவாக

Song: See the cows coming to The Land Where The Kāveri Flows, that land where gold springs from the earth.
See the cows searching, coming (there).

The seven cows arrived in The Land Where The Kāveri Flows. They arrived at the Veṅkala sluice gate near Veḷḷāṅkuḷam tank. (There) they stood and looked around.

It was evening, the paddy and sugarcane were very green on Kōḷattā Kavuṇṭar's land. "If we eat our fill now, the owner will beat us and drive us out," the cows thought. So they waited. As soon as the sun set the cows entered the sugarcane, filled their stomachs and ate their fill. Then they returned to the Matukkāra forest. In the morning Kōḷattā Kavuṇṭar came to his sugarcane field and saw the damage. He thought some animals from the hills had raided his fields. He went home very angry.

Kōḷattā: "Oh, watchman: Go to The Country of Prosperity, quickly! Get men from the seven houses of artisans and bring them here fast!", Kōḷattā Kavuṇṭar ordered.

Song: Leaving The Country Where The Kāveri Flows
Looking for The Country of Prosperity
The watchman is coming fast like a bee, my Lord
He walks slowly, like a swan, when he sees someone
When he doesn't he travels with the speed of a horse

The watchman arrived in The Country of Prosperity. He went and stood at the temple of the elephant-faced Pilliar. "Come here, oh artisans!" he called. The seven artisans came and asked, "What have you called us for?"

Watchman: "The ruler of The Country Where The Kāveri Flows has ordered that you pick up your tools and come immediately."

The artisans of the seven families set out.

(பாட்டு) தங்கவள என்னாத்தா நாடு விட்டுப்
பொன்னிவள என்சாமி நாடு தேடித்
தலையாரி என்னாத்தா முன் நடக்க
ஆசாரி என்சாமி பின் நடக்க
மண்போட்டு என்சாமி பொன்விளையும்
மகுட பொன்னிவளநாடு தேடி வாறார்

பொன்னி வளநாடு வந்து ஆசாரிகள் அரண்மனைக்குச் சென்று எஜமானரைப் பார்த்து,

(பாட்டு) அட்டம்[1] பணியுறாரே ஆளடிமை[2] செய்யுறாரே
பாதம் பணியுறாரே பணிவிடைகள் செய்யுறாரே

கோளத் - "சரணமென்ற பேர்களுக்கு மரணமொரு நாளுமில்லை! அப்பா, ஆசாரிகள் ஏழுபேரும் வந்து விட்டீர்களா?"

ஆசாரிகள் - "சாமி! வந்துவிட்டோம்."

கோளத் - "அப்பா ஆசாரி! நம் ஆயிரமா நிலத்தில் கால்வள்ளக் காடு[3] கரும்புப் பதி போட்டிருந்தேன். நேற்று காட்டு மிருகங்கள் வந்து கரும்புக் காட்டை அழித்துவிட்டது! ஆகையால் கரும்புக்காடு சுற்றியும் இரும்பினால் வேல்கள், கத்திகள் செய்து வேலி போட வேண்டும். நமது ரேணுகப்பட்ட சாலையில் பட்டறை வைத்து வேண்டியதை உடனே செய்து முடியுங்கள்." உடனே ஆசாரிகள் ரேணுகப்பட்டசாலை சென்று பட்டறை வைத்தார்கள்.

(பாட்டு) அங்கம் உருகுதடா ஆசாரி பட்டறையில்
அங்குத் தங்கம் உருகுதடா தட்டானுட[4] பட்டறையில்

ஆசாரி ஏழு பேரும் வேண்டிய சாமான்களைச் செய்து கரும்புக் காட்டைச் சுற்றியும் வேலிபோட்டு முடித்துவிட்டு வீட்டுக்கு வந்தார்கள்.

கோளத் - "ஆசாரிகளே! வேலை முடிந்துவிட்டதா?"

ஆசாரிகள் - "சாமி, முடிந்துவிட்டது."

கோளத் -

(பாட்டு) "ஆரடி மாதர்களே, மாதர்களே
அலமேலும் செங்கமலம்
மூப்பி கருப்பிகளா, கருப்பிகளா அங்கு
முதலான செங்கமலம் வாடியிங்கே."

---

1 அருகில் சென்று 2. சேவை 3. சுமார் 1 சென்டு (Cent) நிலம் 4. பொற்கொல்லன்

Song: Leaving The Country of Prosperity
Searching for The Country Where The Kāveri Flows
The watchman walked in front, my Lord
The artisans followed behind
The land where gold springs from the earth
They are coming, searching for The Famous Country
Where The Kāveri Flows.

Arriving in The Country Where The Kāveri Flows the artisans went to the palace and saw the ruler.

Song: They paid obeisance at his feet
They offered their services
They fell at his feet
They offered their services

Kōḷattā: "There is no death for those who take refuge in me! So, artisans! You have Come!"

Artisans: "Yes, Lord. We have come."

Kōḷattā: "I have planted a huge field of sugarcane. Yesterday some forest animals came and ravaged it. Therefore it will be necessary to build an iron fence around the field with spear points on it. Prepare a workshop in the courtyard where the public assembles and start immediately.

The artisans went to the courtyard where the public assembles and set up their workshop right away.

Song: The bodies are sweating in the artisans' factory
The gold is melting in the artisans' factory
The seven artisans prepared the required items
They finished the circular iron fence,
putting spearpoints on it
Then they returned

Kōḷattā: "So, artisans. Have you finished the work?"

Artisans: "My Lord, we have finished."

Kōḷattā's Song: Oh, who goes there? Oh maids, oh maids
Oh Alamēlu, oh Ceṅkamalam,
Oh Mūppi and Karuppi, oh Karuppi, there
Chief maid, Ceṅkamalam, come here[1]

---

[1] Alamēlu, Ceṅkamalam, Mūppi and Karuppi are common female names.

"அடி குப்பி! கஜானாவில் ஒரு வள்ளமுத்து அளந்து வெற்றிலை பாக்கு வைத்து ஆசாரிக்குக் கொடு."

ஆசாரி ஏழுபேரும் முத்தை வாங்கிக்கொண்டு கவுண்டரிடம் விடை பெற்று புறப்பட்டுச் சென்றார்கள்.

(பாட்டு) இந்தப் பிரகாரம் நடக்குது பார் அதிகாரம்
நாளொருநாள் பொழுதொருநாள் நடக்குதுபார் நல்பருவம்

அன்று இரவு ஏழு காராம்பசுக்களும் மதுக்கார வனத்தை விட்டுக் கரும்புக் காட்டுக்கு வந்து வேலி போட்டிருப்பதைப் பார்த்து வேலியைத் தாண்டிச் செல்லலாமென நினைத்துத் தாண்டியது. ஆனால் வேலியைத் தாண்ட முடியாமல் ஈட்டிமேல் விழுந்து உயிர்விட்டது. ஏழு பசுக்களுடைய உயிரும் தெய்வசபை சென்று ஈசுவரனிடம் முறையிட்டது.

ஈசுவரன் - "ஆகா, பசுவின் உயிர்களே! ஏன் என்னிடம் முறையிடுகிறீர்கள்?"

பசுக்கள் - "சுவாமி. தேசத்தில் மழையில்லாமல் எங்களுக்கு உணவு கிடைக்காமல் பொன்னி வளநாடு சென்றோம். பொன்னி வளநாட்டில் செல்வம் மிகுந்திருந்தது. அங்குக் கோளத்தாக் கவுண்டர் பூமியில் கால் வள்ளம் கரும்புக்காடு இருந்தது. பசியின் காரணமாக நாங்கள் அதைப்போய்ச் சாப்பிட்டோம். முன் நாள் சாப்பிட்டுவிட்டு மறுநாள் இருட்டியவுடன் சென்றோம். சதிகாரன் எங்களை வசியை[1] நாட்டிக் கொன்று விட்டான் சுவாமி!"

ஈசுவரன் - "அடே, சித்திரபுத்திரா! பூலோக ஏட்டை எடுத்து வாருங்கள். பொன்னி வளநாட்டில் கோளத்தாக் கவுண்டர் என்று சொல்கிறார்கள்! அது யார் என்று பார்?"

சித்திர - "சுவாமி, வெள்ளி வளநாட்டில்

1. கோளத்தாக் கவுண்டர்
2. பச்சீத்தாக் கவுண்டர்
3. பவளத்தாக் கவுண்டர்
4. அப்பய்யாக் கவுண்டர்
5. தொப்பய்யாக் கவுண்டர்
6. சிவமணி கவுண்டர்
7. முத்துசாமி கவுண்டர்
8. பழனிசாமி கவுண்டர்
9. சின்னசாமி கவுண்டர்

1. கூர்மையான வேல், கத்திகளாலான வேலி

"Oh, Kuppi! Get a measure of pearls from the treasury and give it to the artisans with betel and areca nut."

The artisans accepted the pearls, took leave of the Kavuṇṭar, and left.

Song: So the monarch ruled thus
Day after day, time followed time
See the good age in progress

It was night. The seven black cows crossed the Matukkāra forest and arriving at the sugarcane field they saw the fence that surrounded it with sharp points. They thought they could jump the fence. But they could not. Instead they landed on the iron points and died. The life of all seven left to join Īswara (Lord Siva).

Īswara: "Oh life of cows! Why do you come to me?"

Cows: "Oh Lord! There was no rain in our country and we went to The Country Where The Kāveri Flows to find food. There was prosperity there. There was a quarter of a vaḷḷam[1] of sugarcane in Kōḷattā Kavuṇṭar's field. Because of hunger we went and ate. The next day we went again, at night. Oh treachery! Pointed stakes were stuck into us and we died, oh God!"

Īswara: "Oh, Cittiraputtirā![2] Get the book leaves for earth and come. They speak of Kōḷattā Kavuṇṭar of The Country Where The Kāveri Flows. Who is he?"

Cittira: "Oh, God! In The Country Where The Kāveri Flows there are:

1. Kōḷattā Kavuṇṭar
2. Paccīttā Kavuṇṭar
3. Pavaḷattā Kavuṇṭar
4. Appayyā Kavuṇṭar
5. Toppayyā Kavuṇṭar
6. Civamaṇi Kavuṇṭar
7. Muttucāmi Kavuṇṭar
8. Paḷaṇicāmi Kavuṇṭar
9. Ciṉṉacāmi Kavuṇṭar

---

[1] A vaḷḷam is a land measure equal to about four acres. [2] God who keeps account book of human lives. The name is spelled Citragupta in Sanskrit.

என்று சொல்லக்கூடிய இந்த ஒன்பது பேரில் மூத்தவரான கோளத்தாக் கவுண்டர் பொன்னி வளநாட்டில் இருக்கிறார். அவர்தான் வசியை நாட்டி ஏழு பசுக்களையும் கொன்று விட்டார் சுவாமி."

ஈசுவரன் - "அப்படியா! ஏழு பசுக்களும் பசியினால் வருந்திப் போய்ச் சாப்பிட்டதற்குச் சண்டாளன் வசியை நாட்டிக் கொன்று விட்டானா! அந்தச் சண்டாளனுக்கு மூவேழு இருபத்து ஒரு வருஷம் குழந்தை இல்லாமல் போகட்டும்" என்று சாபம் கொடுத்தார்.

கைலாயத்தில் இப்படி இருக்கும்போது பொன்னி வளநாட்டில் அரியனாச்சி கவுண்டச்சி எம்பெருமாளை நினைத்துத் தனக்குக் குழந்தை இல்லையே என்று புலம்புகிறாள்.

அரியனாச்சி - "சுவாமி பரந்தாமா!

(பாட்டு)

ஆலிலைமேல் பள்ளிகொள்ளும் அங்குப் பள்ளிகொள்ளும்
என் ஹரிராமா என்னைக் காக்கணுமே இங்குக் காக்கணுமே
ஆதி கிருஷ்ண அந்த நாராயணரை
அருங்கிளியாள் அங்கு நினைத்தழுதாள்
சுவாமி குழந்தையில்லாப் பாவியின்னு
நான் கொள்ளிடமும்[1] பேரானேன்
மைந்தனில்லாப் பாவியின்னு சாமி பாவியின்னு
நான் வையகமும் பேரானேன் சாமி பேரானேன்

சுவாமி! எனக்கு ஏன் குழந்தை வரம் கொடுக்கக் கூடாது? என்னை இந்தக் கதிக்கு ஆளாக்கி விட்டீரே!" என்று மாயன் பெருமாளை நினைத்து அழுதாள்.

இப்படியிருக்கும்போது பால்கடலில் பரந்தாமன் பள்ளி கொண்டிருந்தார். அரியனாச்சி அழுத கண்ணீர் ஒரு சொட்டு போய்ப் பரந்தாமனுடைய திருமார்பில் விழுந்தது.

விஷ்ணு - "ஆகா, இதென்ன ஆச்சரியம்!"

என்று ஞானக்கண்ணில் பார்த்தார். பூலோகத்தில் அரியனாச்சி குழந்தை இல்லாமல் தன்னை நினைத்து அழுகிறாள் என்று தெரிந்து அவளுக்கு ஏன் குழந்தை இல்லையென்று தெய்வசபை சென்று மைத்துனர் ஈசுவரனைச் சந்திப்போம் என்று கருட வாகனம் ஏறிக் கைலாயத்தை நோக்கிப் புறப்பட்டார்.

1. காவேரியின் கிளைநதியான கொள்ளிடம் பகுதி முழுவதும்

These are the nine. The eldest is Kōḷattā Kavuṇṭar. He lives in The Country Where The Kāveri Flows. He is the one who has caused the cows to die of being speared, oh God!"

Īswara: "So! This is how the seven cows lost their lives. While going to eat the villain speared and killed them. For that villain, for 3 times seven years let him be without a child."

This was the curse He gave him.

While this was happening in Kailāsa,[1] (on earth) Ariyanācci Kavuṇṭar was thinking of her childless condition and crying.

Ariya's Song: Oh God, oh Parantāmā![2]
The one who reclines on the banyan leaf,
the one who reclines there
Oh my Harirāmā[3] protect me, protect me here
The rare parrot cried there, she cried
Krishna,[4] the source, that Nārāyaṇa[5]
Oh my Lord, I am a childless sinner
That is what they called me, the people on the bank
of the Koḷḷiṭam[6]
The sonless sinner, the sinner, oh my Lord
That is what I am called all over the world, my Lord,
that is what I am called

"Oh God! Why is it forbidden to give me a child? Release me from the rule of this curse."

So she cried as she thought of Māyaṉ.[7] At that time, when Vishnu was asleep on the milk sea, one of Ariyanācci's tears fell upon him saying,

Vishnu: "Oh, what surprise is this?"

Vishnu looked in his eye of knowledge. On earth he saw the childless Ariyanācci thinking of him and crying. To find out the reason why she was without child he set out for the god's counsel chamber on his Garudā bird[8] and asked his brother-in-law Siva.[9]

---

[1] Place where Siva and Īswari reside. [2] A name for Vishnu. [3] A name for Vishnu. [4] Krishna is Vishnu's most famous reincarnation. [5] A name for Vishnu. [6] A tributary of the Kāveri river. [7] A name for Vishnu. [8] A kind of white-headed eagle. [9] In popular Tamil tradition Vishnu is said to have given his younger sister Parvati to Siva in marriage.

(பாட்டு) கருடன்மேலே என் சாமி சீனி[1] வைத்து
மாயவர் தெய்வசபை என்சாமி பறக்குறாரே
பரமனுட என்சாமி சன்னதிக்கு
பரந்தாமன் என் சாமி போறாரே
ஈசுவருட என் சாமி சன்னதிக்கு
அந்த ஹரிராமர் என்சாமி போறாரே

மாயவர் வருவதைப் பார்த்த ஈசுவரன் மைத்துனரை எதிர்கொண்டு அழைத்து வந்து ஆசனம் போட்டு இருக்கச் சொன்னார்.

ஈசுவரன் - "மைத்துனர் பரந்தாமா! பூலோகத்தை விட்டுத் தெய்வசபை வந்த காரணம் என்ன?"

விஷ்ணு - "மைத்துனரே! பூலோகத்தில் பொன்னி வளநாட்டில் கோளத்தாக் கவுண்டருக்கும் அரியனாச்சி கவுண்டச்சிக்கும் தாங்கள் ஏன் குழந்தை வரம் கொடுக்கக் கூடாது? அவள் அல்லும் பகலும் அறுபது நாழிகையும்[2] என்னை நினைத்து அழுகிறதை நான் கண்ணால் பார்க்க முடியவில்லை. என்ன பாவம் செய்தாள்? ஏன் குழந்தை இல்லை? விபரமாகச் சொல்லுங்கள்."

ஈசுவரன் - "சித்திரபுத்திரா! பூலோகத்தில் கோளத்தாக் கவுண்டர் என்பவர் யார்? அவர் என்ன பாவம் செய்தார்? உடனே பார்த்துச் சொல்."

சித்திர - "சாமி! சோழ தேசத்தில் சேரன், சோழன், பாண்டியன் ஆகிய மூன்று அரசர்களின் காராம் பசு பசியினால் வருந்தி பொன்னி வளநாடு சென்று கோளத்தாக் கவுண்டர் கரும்புக் காட்டைத் தின்று விட்டது. அதனால் வசியை நாட்டிப் பசுக்களைக் கொன்றுவிட்டான் என்று தாங்கள்தான் அன்று சாபம் கொடுத்தீர்கள் சுவாமி."

ஈசுவரன் - "ஆகா! அவன்தானா? சண்டாளன், சதிகாரன். பசியினால் வருந்தி வந்த ஏழு பசுக்களையும் கொன்றுவிட்டான். மைத்துனரே! அவனுக்கா சிபாரிசு செய்ய வந்தாய்? வந்த வழியே போய்விடு" என்று கோபம் பொறுக்கமுடியாமல் சொன்னார்.

விஷ்ணு - "மைத்துனரே! கோபம் வேண்டாம். பொறுமையாக இருங்கள். அவர்கள் வயிற்றில் பிறக்கும்படி ஒரு குழந்தைவரம் கொடுங்கள்! அந்தக் குழந்தையை நான் தெய்வசபை

1. சேணம் 2. ஒரு நாழிகை = 24 நிமிடங்கள்

Song:	Our God, saddles his Garuda bird He flied to the god's counsel chamber Our God is going to seek the presence of the Great One Our God Vishnu is travelling Our God is going to seek the presence of the Lord Our God Rama[1] is travelling to inquire there.

Siva saw Vishnu coming, called him, arranged a seat for him, and asked him to stay.

Siva:	"Vishnu, my brother-in-law, why have you left the human world and come to the god's counsel-chamber?"
Vishnu:	"Oh brother-in-law, why do Kōḷattā and Ariyanācci Kavuṇṭar of The Country Where The Kāveri Flows have no children? For twenty four hours (60 nāḻikai[2]) they have been calling my name and crying. I can't look in their eyes. What sin have they committed? Why have they no children? Tell me the details."
Siva:	"Cittirapputtirā! Who is Kōḷattā Kavuṇṭar of the earth? What sin has he committed? Look this up immediately and tell me."
Cittira:	"Oh, Lord. In the Chola Country the Chera, Chola and Pandiya kings sent black cows that were hungry to The Country Where The Kāveri Flows. There they grazed in Kōḷattā Kavuṇṭar's sugarcane field. Because of this he put sharp stakes around the field and the cows were killed (by impalement). For this, you yourself cursed him on that day, oh Lord."
Siva:	"Oh! That man. Villain! The traitor who killed seven cows who came to him hungry. You came to ask for grace for them? Return! Go back to where you have come from!" Thus Siva refused (the request) with anger.
Vishnu:	"Oh brother-in-law! Don't be angry. Be patient. Give a boon for a child to be born to them. I will bring the child to the god's counsel-chamber and make it do penance for twenty-one years to expiate this."

[1] Rama is the name of another of Vishnu's famous reincarnations. [2] Technically a nāḻikai = twenty-four minutes, 60 nāḻikai = one thousand four hundred and forty minutes or 24 hrs.

கூட்டிவந்து மூவேழு இருபத்து ஒரு வருஷம் தவம் இருக்கச் செய்து ஏழு பசுக்களுடைய பாபத்தையும் நிவர்த்தி செய்து விடலாம்."

ஈசுவரன் - "பரந்தாமா! நீ என்ன சொன்னாலும் அவனுக்கு நான் குழந்தை வரம் கொடுக்க முடியாது."

விஷ்ணு - "மைத்துனரே! அப்படியில்லாவிட்டால் வேறு வயிற்றில் பிறந்த ஒரு குழந்தையாவது எடுத்து வளர்த்தும்படி அருள் செய்ய வேண்டும்."

ஈசுவரன் - "பரந்தாமா! உங்களுக்காக அப்படியே அருள் செய்கிறேன். நீங்கள் சென்று வாருங்கள்."

உடனே பரந்தாமன் எழுந்து புறப்பட்டுப் பால் கடல் சென்றார். மாயவர் சென்ற பிறகு தெய்வசபையில் ஈசுவரன் யோசித்து பொன்னி வளநாட்டுக்கு மேற்கு ஓநாக்கல் காடு ஒன்று இருந்தது. அதில் ஏழுகல் அடுக்கு அடுக்காய் இருந்தது. அதில் ஆறு கல்லுக்குக் கீழ் ஏழாவது கல்லில் ஒரு ஆண் குழந்தையை மன்மதனைப் போல் சிருஷ்டித்தார்.

(பாட்டு) இந்தப் பிரகாரம் நடக்குது பார் அதிகாரம்
நாளொரு நாள் பொழுதொரு நாள்
இனி நடக்குது பார் நல் பருவம்
அப்படியே நல்லதென்று அன்புடனே நடக்குது பார்

கோளத்தாக் கவுண்டரின்12 காராம்பசுவும் காளைக்கன்று போட்டிருந்தது. தினந்தோறும் அவைகளை ஊருக்கு மேற்கில் உள்ள ஓநாக்கல் காட்டுக்கு மேய்ப்பதற்கு ஓட்டிச் செல்வார்கள். இன்றும் அதுபோல் ஓட்டிச் சென்றார்கள். மாடுகள் நன்றாக மேய்ந்து மத்தியானம் தண்ணீர் காட்டுவதற்குத் திருப்பினார்கள் இடையர்கள். ஒரு பசு வேகமாகச் சென்று குழந்தை இருந்த கல்லின் மேல் ஏறியது. பசு ஏறியவுடன் கல் வெடித்தது. வெடித்தவுடன் பசுவின் மார்பிலிருந்து பால் சொரிந்து குழந்தையின் வாயில் போய் விழுந்தது. மறுபடி பசு கீழே இறங்கி வந்தவுடன் கல் பழையபடி மூடிக்கொண்டது. பசு மற்ற பசுக்களுடன் எப்போதும் போல் சென்றது. இது இடையர்களுக்குத் தெரியாது. இப்படியே ஒரு வாரம் சென்றது. ஒரு நாள் கோளத்தாக் கவுண்டர் தோட்டம் வந்து கன்றுகளைப் பார்த்தார். பன்னிரண்டு கன்றில் பதினொன்று கன்று தாயுடன் விளையாடிக் கொண்டிருந்தது. ஒரு கன்று நடக்கப் பலமில்லாமல் இருந்தது. கவுண்டர் இடையர்களைக் கூப்பிட்டு "ஏன் ஒரு கன்று நடக்க முடியாமல் இருக்கிறது? காட்டுக்குச் சென்று பசுவின் பாலைக் கறந்து சாப்பிட்டு விடுகிறீர்களா என்ன?" என்று கேட்டார்.

Siva: "Vishnu! What ever you say, I cannot grant their wish."

Vishnu: "Brother-in-law. If it is like that then give them the boon to at least raise a child that was born in another's womb."

Siva: "Vishnu! For you, I will agree to that bit of grace. Go!"

Vishnu immediately left for the milk sea. After he had left the counsel-chamber Siva (began to) think. To the west of The Country Where The Kāveri Flows lay a forest called lizard stone field. In that forest there were seven stones piled upon one another. In that pile, under six of the stones and inside the seventh. Siva caused a child to be created in the form of Manmatan.[1]

Song:

So the monarch ruled thus
Day after day, time followed time
See the good age in progress
It was good, it was done with love
So this is what happened, see what occurred

(At that time) Kōḷattā Kavuṇṭar had twelve black cows that had calved. Each morning they were driven to a place called the lizard stone field that lay west of his village to graze. At noon the shepherds brought them back for water. (But this time) one cow hurried to the place where the child was (hidden) and climbed up (on it). Suddenly the rocks opened and milk immediately issued from the cow's udder and fell into the child's mouth. As soon as the cow climbed down from the stones they closed again. The cow returned to the herd and behaved as usual. The shepherd was innocent of these events. A week passed like this. One day Kōḷattā Kavuṇṭar went to his fields. He saw eleven calves playing beside their mothers. But one calf was without strength. The Kavuṇṭar called his shepherd and asked "What's this? One calf cannot walk? Are you milking this cow and drinking it's milk," he asked.

இடையர்கள், "சாமி, நாங்கள் அப்படி ஒன்றும் செய்யவில்லை" என்று அழுதார்கள். "சரி! பசுக்களை ஓட்டிச் செல்லுங்கள்" என்று சொல்லிவிட்டுக் கவுண்டர் வீட்டுக்குச் சென்று, இரண்டு நாழிகை கழித்தபின் காட்டுக்குச் சென்றார். போய் ஒரு மரத்தடியில் இடையர்களுக்குத் தெரியாமல் நின்று என்ன செய்கிறார்கள் என்று பார்த்துக் கொண்டிருந்தார். மத்தியானம் ஆனவுடன் இடையர்கள் மாடுகளைத் தண்ணீருக்குத் திருப்பினார்கள். ஒரு பசு முன்போல் சென்று கல்லின் மேல் ஏறியது.

ஏறியவுடன் ஐந்து நிமிடம் சென்றவுடன் இறங்கி மற்ற பசுக்களுடன் சென்றது. இதைக் கவுண்டர் பார்த்து ஓடிப்போய்க் கல்லின் மேல் பார்த்தார். ஆனால் கல்லின் மேல் ஒன்றுமில்லை. இதைப் பார்த்த கவுண்டர், "இதில் ஏதோ ரகசியம் இருக்கிறது" என்று நினைத்து வீட்டுக்குத் திரும்பி வந்து,

கோளத் - "அடே பாரிவில்லை சேவகா! தங்க வளநாடு சென்று ஆயிரம் வீட்டுக் கொத்தர்களையும் அவர்கள் சாமான்களையும் எடுத்துக் கொண்டு உடனே வரச்சொல்!"

(பாட்டு)
பாரிவில்லை என்னாத்தாச் சேவகனும்
வெள்ளிவெடி என் சாமி ஆளுகளும்
தங்க வள என்னாத்தா நாடு தேடி
வாராரே என் சாமி சேவகரும்

சேவகர் தங்க வளநாடு வந்து யானைமுகப் பிள்ளையார் கோவில் சென்று சேர்ந்து, "யாரப்பா கொத்தர்கள்?" என்று கூப்பிட்டார்கள்.

"ஏனுங்க சாமி?" என்று கேட்டுக் கொண்டே ஓடிவந்தார்கள் கொத்தர்கள்.

சேவகன் - "கொத்தர்களே! பொன்னி வளநாட்டில் எஜமானர் உங்கள் சாமான்களை எடுத்துக் கொண்டு உடனே வரச் சொன்னார்" என்றதும் உடனே ஆயிரம் கொத்தர்களும் புறப்பட்டுச் சென்றார்கள். பொன்னி வளநாடு அரண்மனைக்குச் சென்று எஜமானரைப் பார்த்து,

(பாட்டு)
அட்டம் பணியுறாரே கொத்தர்கள்
ஆளடிமை செய்யுறாரே
பாதம் பணியுறாரே ராஜனுக்குப்
பணிவிடைகள் செய்யுறாரே

Shepherd: "Oh, Lord. We have done no such thing," the shepherd answered, crying.

Kōḷattā: "O.K., graze the cows," said the Kavuṇṭar and returned home.

Three quarters of an hour later he returned to the field and stood at the foot of a tree where the shepherds could not see him. He thought he would see for himself what they were doing. At noon the shepherds brought the cows back for water. One cow, as before, climbed up the rock pile.

It stayed only five minutes there and then climbed down and joined the other cows. Seeing this the Kavuṇṭar ran to the stones and looked on top of them. But there was nothing on top of the stones. "There must be a secret in this," he thought to himself as he returned home.

Kōḷattā: "Hey, servant with a badge," he said. "Go to The Country of Prosperity and tell the thousand houses of stone masons to come here with their tools immediately."

Song:
The servant with a badge, my Lord
The one who carries the silver stick
Looking, my man, for The Country of Prosperity
The servant is coming, my Lord

He arrived in The Country of Prosperity and went to the elephant-faced Pilliar temple. There he called, "Oh, stone masons!"

Stone M.: "What is it, man?" asked the stone masons as they gathered.

Servant: "Oh, stone masons. The ruler of The Country Where The Kāveri Flows has asked you, the thousand families of masons, to gather your tools and come immediately."

So the thousand men set off. Arriving in The Country Where The Kāveri Flows they saw the ruler.

Song:
The masons paid obeisance at his feet
They offered their services
They fell at the King's feet
They offered their services

கோளத் - "சரணமென்ற பேர்களுக்கு மரணமொரு நாளுமில்லை! அப்பா கொத்தர்களே! ஊருக்கு மேற்கில் ஓநாக்கல் காட்டில் ஒரு வேலை இருக்கிறது. வாருங்கள் போகலாம்"

என்று புறப்பட்டுச் சென்றார்கள்.

(பாட்டு) ராஜனும் என் சாமி முன் நடக்க
கொத்தரும் என் சாமி முன் நடந்தார்
ஓநாக்கல் என் சாமி மேடு தேடிக்
கூட்டிவாரார் என் சாமி கொத்தர்களை

ஓநாக்கல்மேடு போய்ச் சேர்ந்ததும் கொத்தர்களைக் கூட்டிச் சென்று கல்லுக்கு அருகில் சென்று, "இந்தக் கல்லுகள் ஒவ்வொன்றாக ஆப்பு வைத்து உடையுங்கள்" என்றார். அப்படியே கொத்தர்களும் உடைத்து ஆறு கல்லை எடுத்தார்கள். ஒன்றுமில்லை. "ஏழாவது கல்லையும் உடையுங்கள்" என்றார் கவுண்டர். "அப்படியே நல்லது" என்று ஏழாவது கல்லையும் உடைத்தார்கள். ஏழாவது கல்லை உடைத்தவுடன் குழந்தையின் சத்தம் கேட்டது. கவுண்டர் ஓடிப் பார்த்தார். சூரியனைப்போல் அழகுடன் பிரகாசித்தது ஆண் குழந்தை.

(பாட்டு) சூரியனைப்போல் துலங்குது குழந்தையங்கே
இந்திரனைப்போல் விளங்குது குழந்தையங்கே
சந்திரனைப்போல் துலங்குது குழந்தையங்கே

குழந்தையைப் பார்த்த கவுண்டர் ஓடிப்போய் வாரிக் கையில் எடுத்து மணிமுகத்தை முத்தமிட்டு, கூட்டிக் கையிலெடுத்து கொள்ளை முத்தம் தந்தார். "அடடா! சிவபெருமான் கிருபையால் இந்தக் குழந்தை நமக்குக் கிடைத்தது" என்று சந்தோஷப்பட்டுக் கொத்தர்களைக் கூட்டிக்கொண்டு அரண்மனைக்குச் சென்றார். அரியனாச்சி கவுண்டச்சி ரேணுகப் பட்டசாலையில் படுத்து இருந்தாள்.

கோளத் - "பெண்ணே! கதவைத் திற" என்று கூப்பிட்டார்.

கவுண்டச்சி உடனே ஓடிவந்து கதவைத் திறந்து, "நாதா! இந்தக் குழந்தை ஏது? எந்த ராஜாவுடைய குழந்தையைத் தெரியாமல் தூக்கி வந்தீர்கள்?" என்று அழுதாள்.

கோளத் - "பெண்ணே! அப்படி ஒன்றும் நினைக்காதே. இதோ! இந்தக் கொத்தர்களைக் கேட்டுப்பார். சிவபெருமான் நமக்கு அருள் செய்தார்!"

அரியனாச்சி - "ஏப்பா கொத்தர்களே! இது உண்மையா?"

கொத்தர்கள் - "சாமி இந்தக் குழந்தை யாருடையதும் அல்ல. எஜமானரைச் சண்டை பிடிக்காதீர்கள். ஓநாக்கல் மேட்டில் ஆறு கல்லுக்கு அடியில் ஏழாவது கல்லில் இருந்து உடைத்து எடுத்தோம்."

Kōḷattā: "Protected ones[1], there is no time to spare. Oh masons, West of the village, in a place named Wolf Stone[2] there is work to do. Come, let's go."

So they set out.

Song:

The King, walked in front, my Lord
He walked ahead of the stone masons
Looking for the lizard stone field to the West
He is taking the masons there, my Lord

Arriving, the masons gathered near the (place called) lizard stone hillock and were told to drive a wedge into each stone and split it. In this way the masons split six stones. There was nothing. The Kavuṇṭar ordered them to split the seventh stone. Agreeing, they split the seventh stone. The Kavuṇṭar ran to see. There lay a male child, shining like the sun (itself).

Song:

There was a child as bright as the sun
There was a child as shining as Indra[3]
There was a child as bright as the moon

The Kavuṇṭar who saw the child, picked it up in his abundant hand and kissed its jewel-like face. Gathering it in his hands and lifting it he kissed it abundantly. "Oh goodness! This child is ours by the mercy of Siva," he thought. He returned to his palace with his masons, very happy. Ariyanācci Kavuṇṭar was sleeping in the courtyard where the public assembles.

Kōḷattā: "Oh wife! Open the door," he called.

She jumped up immediately to open it.

Ariya: "Oh husband! Who is this child? What raja's child did you steal without his knowing it?" she said, crying.

Kōḷattā: "Oh wife. Don't think such things. Ask the masons. Siva has bestowed his grace on us."

Ariya: "Oh, masons! Is this true?"

Masons: "This is no one's child. Don't start a fight with the ruler. On a hillock in lizard stone field, under six stones and inside the seventh which we split was (this child) which we have taken."

---

[1] Technically the word means men who have no sorrows because they are submissive, obedient and dependent. [2] Later this place is called lizard stone hill. Since the terms are almost the same in Tamil there is some confusion as to which translation is correct. The scribe has used variant spellings in various places. [3] King of the Gods.

அரியனாச்சி -

(பாட்டு) "அகிலாண்ட கோடி பிரமாண்ட நாயகா!
சங்குச் சக்கரா! வைகுந்த வாசகா!
பாலமலை ஜோசியா! பரமகுரு தன்னாசி!
ஏழை பரதேசி எம்பெருமாள் மாயவனே!

சுவாமி! நாற்பத்தைந்து வருஷத்திற்குப் பின்னால் எனக்கு இந்தக் குழந்தையைக் கொடுத்தீரே? தளைஞ்ச மார் வறண்டுபோய் விட்டது. நான் எப்படி இதற்குப் பால் கொடுப்பேன்?" என்று மாயவரை நினைத்து அழுதாள்.

(பாட்டு) மாயவன் பெருமாளை அங்கு மனத்தில் நினைத்தழுதாள்
ஆயன் பெருமாளை அங்கு அருங்கிளியா நினைத்தழுதாள்.
"பரந்தாமா சீக்கிரம் தாங்கள் பொன்னி வளநாடு
வந்து சேர வேண்டும் காஞ்சி நாதா!"

இதை மாயவர் பார்த்து, "அரியனாச்சி நம்மளை வரவழைக்கிறாள்" என்று கருட வாகனம் ஏறிப் பொன்னி வளநாடு வந்து சேர்ந்தார். அரண்மனைக்குச் சென்று அமர்ந்தார் பெருங்கொலுவாய்.

(பாட்டு) அட்டம் பணியுறாளே ஆயருக்கு
ஆளடிமை செய்யுறாளே
பாதம் பணியுறாளே மாயருக்குப்
பணிவிடைகள் செய்யுறாளே

மாயவர் - "அம்மா! சரணமென்ற பேர்களுக்கு மரணமொரு நாளுமில்லை. அம்மா அரியனாச்சி! யாது விஷயமாக என்னை அழைத்தாய்?" என்றார்.

அரியனாச்சி - "சுவாமி! நாற்பத்தைந்து வருஷமாக எனக்குக் குழந்தை இல்லாமல் இருந்து இப்போது குழந்தை பாக்யம் கொடுத்தீரே? என் தளைஞ்ச மார் வறண்டுவிட்டதே! இந்தக் குழந்தைக்கு நான் எப்படிப் பால் கொடுத்து வளர்ப்பேன் சுவாமி?"

மாயவர் "அம்மா! அதற்கு நான் அருள் செய்கிறேன். நீ போய்க் கங்கை நதியில் நீராடி வா."

Ariya's Song: Oh Lord of a crore of worlds in the universe
He who holds a conch, and a discus and lives in
Vaikunta[1]
Oh seer of Bāla mountain,[2] supreme penitant
Poor pilgrim, my Perumal,[3] my Vishnu

Ariya: "Oh God! Are you giving me this child after forty-five years? My breasts have sagged and become dry. How shall I give milk to this child?" Saying this, she thought of Vishnu and cried.

Song: She thought of Vishnu Perumal and she cried there
She thought of the shepherd Perumal,
the rare parrot cried there
Oh Master! Come quickly to The Country Where
The Kāveri Flows
Oh Lord of Kanjeepuram![4]

Hearing this Vishnu realized that Ariyanācci was calling him. Mounting his Garuda vehicle he came to The Country Where the Kāveri Flows. The Lord arrived at the palace.

Song: She paid obeisance at the shepherd's feet
She offered her services
She fell at Vishnu's feet
She offered her services

Vishnu: "Oh woman! There is no death for those who take refuge in me! Oh woman, Ariyanācci. For what reason have you called me?"

Ariya: "Oh Lord. I have been forty-five years without an infant. Now you are giving me my share of children? My breasts have sagged and become dry. How shall I give milk to this child and raise it, oh Lord?"

Vishnu: "Oh woman! I will lend you my grace for that. Go to the Ganges river, bathe and come back."

---

[1] Vishnu's heaven, spelled Vaikuntha in Sanskrit. [2] A reference to some unidentified mythological event. [3] A name for Vishnu. [4] A name for Vishnu.

அரியனாச்சி அதன் பிரகாரம் கங்கை சென்று நீராடி வந்தாள்.

அரியனாச்சி - "சுவாமி! நீராடி வந்துவிட்டேன்."

மாயவர் - "சரி அம்மா, அப்படியே நில்."

மாயவர் இருந்த இடத்திற்கும் அரியனாச்சி இருந்த இடத்திற்கும் இடையில் எழுதிரை[1] கட்டி, எழுதிரைக்கு அப்பால் பட்டுத்திரை கட்டி மாயவர் விபூதியை வீசினார். உடனே அரியனாச்சியின் மார் சுரந்து பால் குழந்தையின் வாயில் போய் விழுந்தது.

மறுபடி மாயவர் சொன்னார், "அம்மா! கங்கைக்குச் சென்று ஒரு சொம்பு நீர் கொண்டுவந்து யானைமுகப் பிள்ளையார் கோவிலில் வைத்து வினாயகரை நமஸ்கரித்துத் தண்ணீரை எடுத்து மார் கழுவிப் பால் கொடு. குழந்தை நன்றாகப் பால் சாப்பிடும். பிறகு மூன்று மாதம் கழித்து, செல்லாத்தாக் கோவிலில் குழந்தைக்குப் பெயர் சூட்டலாம்" என்று சொல்லிவிட்டுப் பரந்தாமன் விடைபெற்றுப் பால் கடல் சென்றார்.

(பாட்டு) இந்தப் பிரகாரம் நடக்குது பார் அதிகாரம்
நாளொரு நாள் பொழுதொரு நாள்
இனி நடக்குது பார் நல்பருவம்
அப்படியே நல்லதென்று இனி
அன்புடனே நடக்குது பார்

இப்படி இருக்கும்போது குழந்தைக்கு மூன்று மாதம் சரியாக முடிந்தது. அரியனாச்சி கவுண்டச்சி வெள்ளிக்கிழமை விடி ஐந்து நாழிகை, திங்கள்கிழமை சிவன் பிறந்த நாளுமங்கே இந்திரன் தேவி இறையவன் போய் மறைந்து சந்திரன்தேவி சூரியன் கிளம்புமுன்னர், கிராமத்துக்காரர் எல்லோரையும் சாமிக்குப் பால் கொண்டு செல்லாத்தாள் கோவிலுக்கு வந்து சேரும்படிச் சேவகரிடம் கட்டளையிட்டாள்.

குறிப்பிட்ட நாள் வந்ததும் கோளத்தாக் கவுண்டரும் அரியனாச்சி கவுண்டச்சியும் குழந்தையை எடுத்துக்கொண்டு செல்லாத்தாக் கோவில் போய்ச் சேர்ந்தார்கள். கவுண்டர் காசிக்கரை சென்று குளித்துவிட்டு வந்து ஆத்தாளுக்கு அமுது வைத்து அருபூஜை[2], குருபூஜை[3], ஐம்பத்தி எட்டு லிங்கம் பூஜையும்[4] சரியாக முடித்தார். கிராமத்துக்காரர் எல்லோரும் கோவிலுக்கு வந்து சேர்ந்தார்கள். அரியனாச்சி மாயவரை வந்துசேரும்படி நினைத்தாள். அதை அறிந்த மாயவரும் புறப்பட்டுச் செல்லாத்தாள் கோவில் வந்து ஆசனத்தில் அமர்ந்தார். செல்லாத்தாள் ஓடிவந்து பரந்தாமனை நமஸ்கரித்தாள். மற்றவர்கள் எல்லோரும் பரந்தாமனை நமஸ்கரித்தார்கள்.

---

1. ஏழு திரை 2. ஆறு வேளை வழிபாடு 3. குலதெய்வ வழிபாடு 4. ஐம்பத்தி எட்டு லிங்க வழிபாடு

Ariyanācci went immediately to the Ganges[1], bathed and returned.

Ariya: "Oh Lord, I have bathed."

Vishnu: "Good, woman! Stand right there!"

Vishnu set up seven curtains between himself and Ariyanācci, and then a silk curtain, by throwing sacred ash. Immediately Ariyanācci's breasts swelled with milk which flowed into the mouth of the child. Then Vishnu spoke again.

Vishnu: "Oh woman! Go to the Ganges and bring a pot of water. Place it in the elephant-faced Pilliar temple and pay respects to Vinayakar.[2] Then take the water, wash your breasts, and feed the child well with milk. After three months you can take the child to the Cellāttā temple and give it a name."

Saying this Vishnu left to return to the milk sea.

Song:

So the monarch ruled thus
Day after day, time followed time
See the good age in progress
It was good, it was done with love
See it happening

So three months passed for the child. Then, on a Monday, the day Siva was born, two hours after dawn (5 nāḻikai), when the moon was setting and getting ready to go to the god's counsel-chamber in search of Indra, and when the sun was rising in search of the moon, on this day the villagers all brought milk to the Goddess and gathered at Cellāttā's temple, bringing their milk offerings with them.

On the agreed upon day Kōḷatta and Ariyanācci Kavuṇṭar took their child and went to the Cellāttā temple. The Kavuṇṭar went to the Benares river bank and bathed. Then he called the Goddess and completed the god's pūjā, pūjā for the family deity (Kuru pūjā), and the fifty-eight lingam's pūjā. All the villagers gathered at the temple. Ariyanācci was hoping that Vishnu might come too. Realizing this Vishnu set out for Cellāttā's temple and took a seat there. Cellāttā came running and paid her respects. Everyone else worshipped the God too.

---

[1] Here and at many other places, the Kāveri river is referred to as the "Ganges." This is in keeping with an old Tamil tradition that there is a magical underground connection between the two rivers. Later in the story Kāci (Benares) is frequently mentioned as are its river banks. It seems that these references are all intended as prestigious terms for the banks of the Kāveri itself. There is a Teṅkāci (Southern Benares) in Tamilnad but it is not associated with the Kāveri. This second river system is too far away from identifiable geographic points mentioned in the story to be a plausible location for the actions described. [2] Same as Pilliar, the eldest son of Siva and the god who presides over all auspicious beginnings.

மாயவர் - "மக்களே! சரணமென்ற பேர்களுக்கு மரணமொரு நாளுமில்லை. செல்லாத்தா! கிழக்குமுகமாக உட்கார்ந்து குழந்தையை வாங்கி மடியில் வைத்து, "குன்று உருட்டி குன்னுடையாக் கவுண்டா! குன்று உருட்டி குன்னுடையாக் கவுண்டா! குன்று உருட்டி குன்னுடையாக் கவுண்டா!' என்று மூன்றுதரம் சொல்."

மாயவர் சொல்லியபடிச் செல்லாத்தாள் குழந்தையை மூன்றுதரம் பெயர் சொல்லிக் கூப்பிட்டாள்.

குழந்தைக்குப் பெயர்சூட்டி முடிந்தவுடன் அங்குள்ள எல்லோருக்கும் சர்க்கரை, தாம்பூலம் வழங்கப்பட்டது. கிராமத்துக்காரர் எல்லோரும் தாம்பூலம் வாங்கிக்கொண்டு அவர்கள் ஊருக்குப் போய்ச் சேர்ந்தார்கள்.

மாயவர் - "அம்மா அரியனாச்சி! குழந்தையை அரண்மனைக்கு எடுத்துப் போய்ச் சுகமாய் வாழுங்கள்!" என்று சொல்லிவிட்டுப் பால்கடல் போய்ச் சேர்ந்தார்.

(பாட்டு) செங்கோல் அதிகாரம் செலுத்திப் பட்டம் ஆளுகிறார்
தங்கவிரல் அதிகாரம் தனிச்சுப் பட்டம் ஆளுகிறார்
காலம் பனிபெயும் நாட்டிலே கடுகுசம்பா நெல் விளையும்
மூடுபனி பெயும் நாட்டிலே மிளகுசம்பா நெல் விளையும்
கட்டுக் களங்காணும் கரு துளிர்க்க நெல் காணும்

இந்தப் பிரகாரம் ராஜன் அதிகாரம் செய்துவரும்போது குழந்தை குன்னுடையா சாமிக்கு ஐந்து வயது சரியாக முடிந்தது.

இப்படியிருக்கும்போது தெய்வசபையில்,

ஈசுவரன் - "சித்திரபுத்திரா! பூலோகக் கணக்கு ஏட்டை எடுத்து வா! கோளத்தாக் கவுண்டருக்கும் அரியனாச்சி கவுண்டச்சிக்கும் காலம் முடிவாகிவிட்டதா? இன்னும் இல்லையா? பார்த்துச் சொல்."

சித்திர - "சுவாமி! அவர்கள் ஆயுள் முடிவாகிவிட்டது! இன்னும் ஐந்து நாழிகை நேரம்தான் இருக்கிறது. அந்த நேரத்திற்குள் உயிர் இங்கு வந்து சேர வேண்டும் சுவாமி!"

ஈசுவரன் உடனே எமதர்மராஜனைக் கூப்பிட்டார். எமன் வந்து ஈசுவரனை நமஸ்கரித்தார்.

Vishnu: "Oh people! There is no death for those who take refuge in me! Cellāttā! Sit facing East and take the child in your lap.

Say, rolled from a hillock, Kuṉṉuṭaiya Kavuṇṭar[1]
rolled from a hillock, Kuṉṉuṭaiyā Kavuṇṭar
rolled from a hillock, Kuṉṉuṭaiyā Kavuṇṭar, three times."

As Vishnu had ordered, Cellāttā called the child by its name three times. As soon as the naming was over the people all accepted sugar betel and areca nut. After accepting the betel and areca nut all the villagers returned home.

Vishnu: "Oh woman, Ariyanācci. Take the child home to your palace and live well." Saying this Vishnu returned to the milk sea.

Song: He is ruling the country with justice
The one who has the golden signet ring on his hand
is ruling alone
It will rain at proper times and the kaṭuku sampa
paddy will grow
It will rain well in the country and miḷaku sampa
paddy will grow

"There was no distress and the ripening paddy could be seen (everywhere)."

In such a way Kuṉṉuṭaiyā finished his first five years. And simultaneously, in the god's counsel-chamber --

Siva: "Cittiraputtirā. Bring the account books for the world! Is the time of Kōḷattā and Ariyanācci Kavuṇṭar up or not? Look and announce it!"

Cittira: "Oh, Lord. Their life has been expended. There are only two hours left. Within that time, oh Lord, we must take their lives and bring them here!"

Siva immediately called Yeman.[2] Yeman arrived and paid respects to Siva.

---

[1] Kuṉṟuṭaiyā meaning belonging to a hillock, taken to make the name Kunnutaiyā. [2] The God who takes human lives at their assigned time.

ஈசுவரன் - "எமதருமா! பூலோகத்தில் கோளத்தாக் கவுண்டருக்கும் அரியனாச்சி கவுண்டச்சிக்கும் ஆயுள் முடிந்துவிட்டது. உடனே தூதர்களைக் கூட்டிப் போய்ப் பொன்னி வளநாடு சென்று அவர்கள் உயிரை நூலேணி வழியாகச் சீக்கிரம் கொண்டு வாருங்கள்."

எமன், "சுவாமி, நல்லது" என்று தூதர்களைக் கூட்டிச்சென்று பொன்னி வளநாடு போய் யானைமுகப் பிள்ளையார் கோவில் சென்று வெள்ளிக் கூடாரம் அடித்துத் தங்கினார்கள்.

எமன் - "தூதர்களே! கோளத்தாக் கவுண்டர் அரண்மனைக்குச் சென்று அவரையும் அவர் மனைவியையும், "உங்களுக்குக் காலம் முடிவாகிவிட்டது" என்று கூட்டி வாருங்கள்."

உடனே தூதர்கள் புறப்பட்டு அரண்மனைக்குச் சென்றார்கள். அப்போது அரியனாச்சி தன்னுடைய குழந்தையைத் தொட்டிலில் வைத்துத் தாலாட்டிக் கொண்டிருந்தாள்.

தூதர் - "அம்மா, நீங்களா அரியனாச்சி கவுண்டச்சி? உங்கள் கணவனா கோளத்தாக் கவுண்டர்?"

அரியனாச்சி - "சுவாமி! ஆமாம் நாங்கள்தான்."

தூதர் - "அம்மா! உங்களுக்குக் காலம் முடிவாகிவிட்டது. தெய்வ சபையிலிருந்து ஈசுவரன் எமதூதரை அனுப்பியுள்ளார். எமதூதர் வந்து யானைமுகப் பிள்ளையார் கோவிலில் இருக்கிறார். உங்கள் இரண்டுபேரையும் உடனே கூட்டிவரச் சொன்னார்."

அரியனாச்சி - "சுவாமி!

(பாட்டு)
சாமி எங்களுக்குக் காலம் நல்ல முடிவாச்சா
அங்கு முடிவாச்சோ
சாமி எங்களுக்குக் கர்த்தனுட ஓலைவந்து
அங்கு ஓலை வந்து
எட்டெழுத்தும்[1] பொய்யாச்சோ சாமி பொய்யாச்சோ
எங்களுக்கு எமனுட ஓலைவந்து சாமி ஓலைவந்து
பத்தெழுத்தும் பொய்யாச்சோ ராஜா பொய்யாச்சோ
பரமனுட ஓலைவந்து சாமி ஓலைவந்து

1. எட்டெழுத்து - ஓம் நமோ நாராயணாய என்னும் விஷ்ணு மந்திரம்

Siva: "Oh virtuous Yeman! The life of Kōḷattā and Ariyanācci Kavuṇṭar of earth has been expended. Take your envoys and go to The Country Where The Kāveri Flows immediately. Take their lives with a string ladder and bring them here."

Yeman: "Oh, Lord! Good!" So he took his envoys and left for The Country Where The Kāveri Flows. He pitched a white tent at the elephant-faced Pilliar temple and stayed there.

"Oh envoys! Go to the palace of Kōḷattā and Ariyanācci Kavuṇṭar, tell them their time is finished, and bring them here."

Immediately, the envoys set off for the palace. At that time, Ariyanācci had put her child in a cradle and was singing lullabies.

Envoy: "Oh you, woman! Are you Ariyanācci Kavuṇṭar? Is your husband Kōḷattā Kavuṇṭar?"

Ariya: "Sir! Yes, that's us."

Envoy: "Woman your time is finished according to (deliberations in) the god's counsel-chamber. Siva has sent Yeman's envoys. They are at the elephant-faced Pilliar temple. They have said to bring you two people there."

Ariya: "Oh God!"

Has it been decided that our time is finished?
Has it been decided there?
Oh Lord, has the verdict of the creator
The verdict, has it come there?
Have all the eight letters become false,[1] have they
become false, my Lord
Has Yeman's verdict come to us, has the verdict come,
my Lord
Have all the ten letters become false, have they
become false, oh king?
Has Siva's verdict come, has the verdict come,
my Lord?

---

[1] The reference to eight letters (of the alphabet) here is unclear, as is the mention of ten letters two lines later.

சாமி! நாற்பத்தைந்து வருடம் குழந்தை இல்லாமல் இருந்து எம்பெருமாள் கிருபையால் குழந்தை கிடைத்து ஐந்து வருடம் ஆகிறது. ஆகையால் இன்னும் ஐந்து வருடம் உயிருடனிருக்க உத்தரவு கொடுங்கள். குழந்தைக்குப் பத்து வருஷம் ஆனவுடன் வந்து விடுகிறோம்" என்று அழுதாள்.

தூதர் - "அம்மா! எங்களிடம் அதெல்லாம் சொல்ல வேண்டாம். நாங்கள் எமதர்மர் உத்தரவு பிரகாரம் செய்யவேண்டும். சீக்கிரம் இரண்டு பேரும் புறப்படுங்கள். அவரிடம் வந்து நீங்கள் உங்கள் முறையைச் சொல்லுங்கள்."

உடனே அரியனாச்சி ரேணுகப்பட்டசாலைக்குச் சென்று நாதனை எழுப்பினாள்.

அரியனாச்சி - "சாமி! நம்மளுக்குக் காலம் முடிவாச்சு
கர்த்தருட ஓலை வந்தாச்சு
எட்டெழுத்தும் பொய்யாச்சு
நம்மளுக்கு ஈசருட ஓலை வந்தாச்சு

நாதா! எமன் வந்து பிள்ளையார் கோவிலில் இருக்கிறாராம். தூதர்கள் வந்திருக்கிறார்கள் நம்மைக் கூட்டிப்போக, எழுங்கள் போகலாம்" என்றாள்.

கோளத் - "அம்மா! நம்மளுக்குக் காலம் முடிவாகிவிட்டதா? சரி, புறப்படு போகலாம்."

இவ்வாறாக இரண்டுபேரும் எழுந்து புறப்பட்டு எமனிடம் வந்து சேர்ந்தார்கள்.

(பாட்டு) அட்டம் பணியுறாரே எமனுக்கு
ஆளடிமை செய்யுறாரே
பாதம் பணியுறாரே எமனுக்குப்
பணிவிடைகள் செய்யுறாரே
சுற்றிவலம்வந்து அங்குச் சூரியனைத் தெண்டனிட்டார்
பக்கம்வலம்வந்து அங்குப் பகவானைத் தெண்டனிட்டார்

எமன் - "அம்மா! நீங்களா அரியனாச்சி கவுண்டச்சி? உங்கள் பக்கத்தில் நிற்பவர் உம் நாதனா?"

அரியனாச்சி - "சாமி! ஆமாங்க, நாங்கள்தான்."

எமன் - "அம்மா! உங்கள் இருவருக்கும் காலம் முடிவாகிவிட்டது. அதனால் இன்னும் மூன்று நாழிகைக்குள் உங்கள் உயிரைக் கொண்டுவரும்படிச் சொன்னார் ஈசுவரன். ஆகையால் நீங்கள் யாரிடம் சொல்ல வேண்டுமோ சொல்லிவிட்டு உடனே புறப்படுங்கள்."

"Sir! I was forty-five years without a child. By the grace of Vishnu I obtained a child five years ago. Therefore grant me permission to live for five more years. You can come and take me when the child is ten," she cried.

Envoy: "Woman! You must not speak like that to us. We must follow Yeman's orders. Come, both of you, quickly. When we reach him you may speak of your requests."

Ariyanācci left immediately for the courtyard where the public assembles to call her husband.

Ariya: "Oh Lord! Our time is finished
The creator's verdict has come
All eight letters have become false
Siva's verdict has come to us
All ten letters have become false
Siva's verdict has come to us."

"Oh husband! Yeman has come and is at the elephant-faced Pilliar temple. His envoys have come to take us. Get up and come," she said.

Kōḷattā: "Oh wife! Is our time finished? O.K. then, let's set out and go." Saying this the two got up and went to Yeman.

Song: They paid obeisance at Yeman's feet
They offered him their services
They threw themselves at Yeman's feet
They offered him their services
They circled around and knelt before the sun[1]
They circled around and knelt before the god

Yeman: "Oh woman! Are you Ariyanācci Kavuṇṭar? Is the man standing near you your husband?"

Ariya: "Sir. Yes, that is us."

Yeman: "Oh woman. Your time is finished. In one hour and twelve minutes, Siva has ordered your life taken. Therefore, whoever you must speak to, do it quickly."

---

[1] A way of referring to Yeman.

அரியனாச்சி - "சாமி! எங்களுக்குக் காலம் முடிவாச்சோ? கர்த்தனுட ஓலை வந்து, சாமி!" நாற்பத்தைந்து வருடம் எங்களுக்குக் குழந்தை இல்லாமல் மாயருடைய கிருபையால் குழந்தை கிடைத்தது. இன்னும் ஐந்து வயதுகூட சரியாக முடியவில்லை.

(பாட்டு) சாமி ஐந்தெழுத்தும்[1] பொய்யாச்சோ
சாமி பொய்யாச்சோ
இனி ஐந்து நல்ல வயதுமிங்கோ
என் ஆளன் சிறு குழந்தை சாமி சிறு குழந்தை

பல்லுளுந்து முளையாத பாலன் சிறு குழந்தை! ஐந்து வயது நல்ல ஆகிறது குழந்தைக்கு! சுவாமி குழந்தைக்கு ஐந்து வயது ஆகியும் ஆகாமலும் விட்டு இப்போது நாங்கள் வந்து விட்டால், குழந்தையை யார் காப்பாற்றுவார்கள்? தாங்கள் இன்னும் ஐந்து வருடம் எங்களுக்கு உயிர்ப்பிச்சை கொடுத் தால் குழந்தைக்குப் பத்து வயது ஆனவுடன் அவனுக்குத் திருமணம் செய்துவிட்டு வந்தால் எங்களுக்கு மேல் உலகில் புண்ணியம் கிடைக்கும். இல்லையேல் நாங்கள் குழந்தையை வளர்த்தும் பலனில்லாமல் போய்விடும் சாமி."

எமன் - "அம்மா தாயே! அந்தக் குறையெல்லாம் என்னிடம் சொல்ல வேண்டாம். தெய்வசபை ஈசுவரனிடம் கேட்டுக்கொள். நாங்கள் அவர் உத்திரவு பிரகாரம் நடக்கவேண்டும். ஆகையால் இன்னும் கொஞ்ச நேரம்தான் இருக்கிறது. அதற்குள் யாரிடம் சொல்லவேண்டுமோ சொல்லிவிட்டுப் புறப்படுங்கள் போகலாம்."

அரியனாச்சி - "அடே பாரிவில்லை சேவகா! சோழதேசம் சென்று மூன்று அரசர்களையும் கிராமத்துக் கவுண்டர்களையும் உடனே போய்ப் பொன்னி வளநாட்டுக்குக் கூட்டிவா. எதற்கு என்று கேட்டால், கோளத்தாக் கவுண்டருக்கும் அரியனாச்சி கவுண்டச்சிக்கும் காலம் முடிவாகித் தெய்வசபையில் இருந்து எமதூதர்கள் வந்திருக்கிறார்கள் என்று சொல்."

அப்படியே சேவகர்கள் சென்று சோழநாட்டில் அரசர்களிடமும் குடிபடைகளிடமும் சொன்னார்கள். மூன்று அரசர்களும் குடிபடைகளும் பொன்னி வளநாடு வந்து எமதூதர்களைக் கண்டு,

(பாட்டு) அட்டம் பணியுறாரே எமனுக்கு
ஆளடிமை செய்யுறாரே

1. பஞ்சாக்கிர மந்திரம், நமசிவாய

Ariya: "Sir! Our time is finished. An envoy has brought the verdict. Oh, Lord. I was forty-five years without a child. By the grace of Vishnu I obtained one. And now not even five years have been fully completed."

Ariya's Song: Oh, God. Have the five syllables become false?[1]
Oh Lord, have they become false?
Still a five year old
My King is a baby, a baby, my Lord
The child whose teeth have not yet fallen and regrown
is a small baby
The child is just five years (old)
Oh Lord, leaving a child of five years,
not even five years
If we leave now who will look after this child?
Give us another five years of life, as alms to a beggar
As soon as the child is ten and been married
Then we will receive merit in heaven
If not, oh God, the child will not be cared for
properly.

Yeman: "Oh woman! Don't speak to me about that child. Ask Siva at the god's counsel-chamber. He is the one to decide the future. There is only a little time left. Within that you are to speak to whomever you think necessary and then we must set off."

Ariya: "Oh servant wearing a badge! Go to the Chola Country and tell the three kings. Go quickly to the village, Kavuṇṭars and bring them to The Country Where The Kāveri Flows. When they ask the reason, tell them that the time of Koḷattā and Ariyanācci Kavuṇṭar is finished and that Yeman's envoys have taken them to the god's counsel-chamber."

So the servants went to the Chola Country and told the kings and the people. The three kings and the people heard the news of Yeman.

Song: They are paying obeisance at Yeman's feet
They are offering their services to him

---

[1] Five syllables used to praise Siva (na ma si vā ya).

பாதம் பணியுறாரே ராஜனுக்குப்
பணிவிடைகள் செய்யுறாரே
சுற்றி வலம்வந்து சூரியனைக் கைமுகைந்தார்[1]
பக்கம் வலம்வந்து பகவானைத் தெண்டனிட்டார்

எமன் - "அரசர்களே! சரணமென்ற பேர்களுக்கு மரணமொரு நாளுமில்லை."

அப்போது அரியனாச்சி மூன்று அரசர்களையும் பார்த்து முறையிட்டாள்.

(பாட்டு) காலம் நல்ல முடிவாச்சு சாமி முடிவாச்சு
எங்களுக்குக் கர்த்தருட ஓலை வந்தாச்சு
பத்தெழுத்தும் ராஜாவே பொய்யாச்சு
இங்குப் பரமனுட ஓலை வந்தாச்சு
எட்டெழுத்தும் ராஜாவே பொய்யாச்சு
சாமி எமனுட ஓலை வந்தாச்சு
இங்கு வந்தாச்சு

அரியனாச்சி - "சாமி ராஜா! தாங்கள் இன்னும் ஐந்து வருஷம் உயிர்ப்பிச்சை வாங்கிக் கொடுத்தால் குழந்தைக்குப் பத்து வயது ஆனவுடன் கல்யாணம் செய்து விட்டு நாங்கள் தெய்வசபை சென்றால் எங்களுக்குப் புண்ணியமுண்டு ராஜாவே!"

அரசர்கள் - "அம்மா! கரியைத் துடைக்கலாம். காவேரியை நீந்தலாம். விதியைத் துடைக்க பிரும்மனாலும் ஆகாது. அன்று எழுதும் கர்த்தன் அழித்து எழுதுவதில்லை. அம்மா! நாம் வரும் விதியைத் தடுக்க முடியாது."

அரியனாச்சி
பாட்டு - "ஏலனை[2] என்சாமி பறக்கவிட்டு நான்
ஏந்திழையாள் அரன்பதி போறனுங்கோ
சாமி போறனுங்கோ
பாலனைச்சாமி பறக்கவிட்டு இங்கு
நான் சிவன்பதி போறனுங்கோ
சாமி போறனுங்கோ
குழந்தையைப் பறக்கவிட்டுச் சாமி
நான் கொம்பனையாள் அரன்பதி போறனுங்கோ
சாமி போறனுங்கோ

---
1. தொழுதார் 2. குழந்தை

They are throwing themselves at the King's feet
They are offering their services to him
They circled around and paid respects to the sun
They circled around and knelt before the god.

Yeman: "Oh kings! Protected ones, there is no time to spare."

Then Ariyanācci saw the three kings and spoke of her problem.

Ariya's Song: (Our) time is finished, it is finished, Lord
The verdict has been brought to us
The ten letters have been falsified
God's verdict has arrived
The eight letters have been falsified, oh kings
Yeman's verdict has come, my Lord
It has come here

Ariya: "Oh Lord, King! As to a beggar, grant five more years of life. When the child has reached ten years of age and is married then we will come to the god's counsel-chamber with merit, oh kings!"

Kings: "Oh woman! One can wipe off black soot, one can cross the Kāveri river, but even Brahma cannot rewrite fate. The creator who wrote then does not rewrite (now), oh woman! We cannot alter the fate that lies ahead."

Ariya's Song: Leaving my child behind, my Lord
This lady is going to Siva's abode
My Lord, I am going
Leaving the child behind, here
I am going to Siva's abode
My Lord, I am going
Leaving behind the baby, my Lord
This creeper is going to Siva's abode

நான் மைந்தனைப் பறக்கவிட்டுச் சாமி பறக்கவிட்டு
இனி மாபாவி தெய்வசபை போறனுங்கோ
அங்குப் போறனுங்கோ
சாமி! குழந்தையைப் பறக்கவிட்டுக்
கொம்பனையாள் போறனுங்கோ,
நான் மைந்தனைப் பறக்கவிட்டு
மாபாவி போறனுங்கோ"

இந்த மாதிரி முறையிட்டுச் சுற்றிச் சுழன்றுவந்து அழுதாள்.

அரியனாச்சி - "அரசே! தாங்கள்தான் என் குழந்தையைக் காப்பாற்ற வேண்டும். மற்றும் குடிபடைகளே! என் குழந்தையை நீங்களும் பாதுகாத்து வயது வந்தவுடன் திருமணம் செய்து, எங்களுக்கு உள்ள பிரகாரம் நாட்டையும் அதைச் சார்ந்த குடிபடை களையும் ஒப்படைக்குமாறு தங்கள் எல்லோரையும் கேட்டுக்கொள்கிறேன். என் குழந்தை பெரியவனானவுடன் செல்லாத்தாளுக்கு மூன்று கால பூஜையும் சரியாக நடத்தும்படிக் கட்டளையிடவும்."

பிறகு எல்லோரிடமும் விடைபெற்றுக் கணவனும் மனைவியும் நூலேணி வழியாகத் தெய்வசபைக்குச் சென்றார்கள்.

குழந்தை குன்னுடையாசாமி தாயும் தகப்பனும் போவதை மறையும் வரை பார்த்துக் கொண்டிருந்தார். மறைந்தவுடன் பூமியின்மேல் விழுந்து புரண்டு அழுதார்.

(பாட்டு) சாந்தணையும் மேனியெல்லாம் அங்கு மேனியெல்லாம்
சருகுபட பூமியிலே புரண்டழுதார் அங்குப் புரண்டழுதார்
புனுகணையும் மேனியெல்லாம் அங்கு மேனியெல்லாம்
புழுதிபட தரையிலே புரண்டழுதார் அங்குப் புரண்டழுதார்

குன்னுடையா

(பாட்டு) "தாயை நல்லோ தாயை இழந்தனுங்கோ
சாமி இழந்தனுங்கோ
நான் தனிவழியே நின்னழுதேன்
சாமி நின்னழுதேன்
தகப்பனை நானிழந்து சாமி நானிழந்து
தலைவிரிக்க நாளாச்சே சாமி நாளாச்சே
சாமி! தாயை இழந்தனுங்கோ நான்
தகப்பனை நானிழந்து தலைவிரிக்க நாளாச்சே
என்னதான் செய்வேனுங்கோ ராஜாவே!

My Lord, I am going
Leaving behind my son, leaving (him) behind, my Lord
Now the sinner is going to the god's counsel-chamber
I am going there
Oh Lord! Leaving the baby behind, the creeper is going
I am leaving behind my son, the sinner is going

Complaining thus, she circled around and cried. (Then) Ariyanācci said,

"Oh King. You must be the one to protect my child. Oh residents, you also should protect my child. As soon as he is of age arrange his marriage. Do it in the way we would, oh learned people. Oh learned people, I beseech you all! When our child comes of age make him promise to perform pūjā three times a day at the Cellāttā temple."

Then, leaving everyone, the husband and wife took the string ladder (and went) to the god's counsel-chamber.

The child, Kuṉṉuṭaiyā Kavuṇṭar, saw his mother and father disappear. As soon as they were out of sight he fell on the ground and cried.

Song:
The whole body that wears perfumed paste,
the whole body there
Was covered with dried leaves when he rolled on the
ground and cried
He rolled and cried there
The whole body that wears musk, the whole body there
Was covered with dust when he rolled
on the floor and cried
He rolled and cried there

Kuṉṉuṭaiyā's Song:
My Mother, oh I have lost my mother
Oh Lord, I have lost (my mother)

I stood there alone and cried
Oh Lord, I stood and cried
I have lost my father, I have lost my father, my Lord
Now its time to let my hair hang loose
It is time, my Lord
I have lost my mother
I have lost my father and its time to let my hair
hang loose
What am I going to do?
Oh King, how am I going to exist?
Having lost my mother

எப்படி நானிருப்பேன் நான் தாயைப் பறி
கொடுத்துத் தரணியில் இருப்பேனா!
அண்ட நல்ல என்சாமி நிழலுமில்லை
சாமி நிழலுமில்லை
என்னை ஆதரிப்பார் இவ்விடத்தல் ஒருவரில்லை
சாமி ஒருவரில்லை
நிற்க நல்ல சாமி நிழலுமில்லை
சாமி நிழலுமில்லை
நான் நின்றாடக் கொம்புமில்லை
சாமி கொம்புமில்லை
கோழியைப் பறிகொடுத்த சாமி பறிகொடுத்த
குஞ்சுபோலே ஆனேனுங்கோ
சாமி ஆனேனுங்கோ

சுற்றி வருவான், குழந்தை சுழன்று வருவான், பக்கம் வருவான், பறந்து வருவான். குன்னுடையாசாமி இப்படிக் கதறி அழும்போது அரசர் ஓடிப்போய் எடுத்து,

> "அப்பா! உன் தாயும் தகப்பனும் காலம் முடிவாகித் தெய்வசபை சென்றுவிட்டார்கள். அப்பா நாங்களெல்லாம் மனிதர் அல்லவா, நாங்கள் உன்னைக் காப்பாற்றுகிறோம் அழாதே!"

என்று வாரிக் கையிலெடுத்து, மணிமுகத்தை முத்தமிட்டுத் தேறுதல் சொல்லி அரண்மனைக்கு அழைத்துச் சென்றார்கள். எட்டு நாளாகக் குழந்தைக்குத் தேறுதல் சொல்லிக்கொண்டு அரசரும் குடிபடைகளும் பொன்னி வளநாட்டில் அரண்மனையில் இருந்தார்கள். இந்தப் பிரகாரம் பொன்னி வளநாட்டில் இருக்கும்போது தங்க வளநாட்டில் ஆயிரம் பங்காளிகளும் கோளத்தாக் கவுண்டர் இறந்த செய்தி கேட்டு யானைமுகப் பிள்ளையார் கோவிலில் ஆயிரம்பேரும் கூடினார்கள். ஆயிரம் பேரில் பழனிசாமிக் கவுண்டர் என்பவர் பெரிய வீட்டு அண்ணனைக் கூப்பிட்டு, "ஏனுங்க அண்ணா! நீங்களும் ரொம்பநாளாகப் பிழைத்தேன் என்று சொல்கிறீரே, அரசர் எல்லோருக்கும் பெரியவரான கோளத்தாக் கவுண்டரைப் பொன்னி வளநாட்டில் நஞ்சைபூமியில் கொண்டுபோய் வைத்தார்கள். நம்மளைக் கொண்டுவந்து இந்தத் தங்க வளநாட்டில் புஞ்சைபூமியில் வைத்தார்கள். பெரியப்பா கோளத்தாக் கவுண்டர் ஏராளமான திரவியம் சம்பாதித்து நாற்பத்தைந்து வருஷம் குழந்தை இல்லாமல் காட்டில் இருந்து யார் குழந்தையையோ எடுத்து வந்து வளர்த்தார்கள். இப்போது அவர்கள் காலம் முடிவாகித் தெய்வசபை சென்று விட்டார்கள். ஆகையால் நாம் இப்போதே பொன்னி வளநாடு

Will I remain on this earth?
There is no shelter, there is no shelter my Lord
There is no one to support me here
There is no one, my Lord
There is no shelter for me to stand in, no shelter,
my Lord
I don't have a staff to hang on to, I don't have a staff,
my Lord
I have become like a chicken that has
Lost its hen, like the one that has lost its hen,
my Lord

The child circled around and around. Kunnuṭaiyā came close, he ran about. As he called out and cried the King ran and picked him up.

King: "Oh son, your mother's and father's time have finished. They have gone to the god's counsel-chamber. Oh son, we're all human beings, aren't we? We will look after you. Don't cry."

He picked the child up in his great hand and dried its jewel-like face. Consoling it, he took it to the palace. The King and the people stayed in the palace of The Country Where The Kāveri Flows for eight days consoling the child.

While these things were happening in The Country Where The Kāveri Flows, the thousand clansmen, hearing that Kōḷattā Kavuṇṭar had died, gathered at the elephant-faced Pilliar temple. Of these thousand, Palanicāmi Kavuṇṭar called his brother of the biggest house and said,

"Oh brother! According to the King you and I have been deceived for many years. Our father's elder brother, Kōḷattā Kavuṇṭar, took the good wet lands of The Country Where The Kāveri Flows for himself, while we of The Country of Prosperity were given poor, dry lands. Our uncle, Kōḷattā Kavuṇṭar, amassed a lot of wealth. For forty-five years he had no child. Then he brought home who knows whose child. (It came) from a field. Now his time has finished and he has gone to the god's counsel-chamber. Therefore, let us go to The Country Where The Kāveri Flows and, having

சென்று அரசர்களிடம் சொல்லி நம் பங்கு பிரகாரம் நாட்டையும் திரவியத்தையும் ஆயிரத்து ஒரு பங்கு பங்கி[1] நம் ஆயிரம் பேருக்கு ஆயிரம் பங்கும் அந்தப் பையனுக்கு ஒரு பங்கும் பிரித்துவிடலாம். புறப்படுங்கள் போகலாம்" என்றார்.

(பாட்டு) தங்கவள என்னாத்தா நாடுவிட்டுப்
பொன்னிவள என்சாமி நாடு வாறார்
மண்போட்டு என்னாத்தாப் பொன்விளையும்
மகுட பொன்னிவள நாடு வாறார்
யானைமுக என்சாமி பிள்ளையார்
ஐங்கரனார் கோவிலுக்கு வாறாரே

பங்காளிக் கவுண்டர்கள் ஆயிரம்பேரும் பொன்னி வளநாடு வந்து உச்சி உருவம் மத்தியான நேரம் பிள்ளையார் கோவிலில் கூடினார்கள். பெரிய வீட்டுக்காரர், ஏப்பா பழனிசாமி! நாம் எல்லோரும் சேர்ந்து அரண்மனைக்குப் போகக்கூடாது. முதலில் யாராவது பத்துப் பேர் போங்கள். போய் அந்தப் பையனைக் கொஞ்சம் மிரட்டுங்கள். மற்றவர்கள் எல்லோரும் பின்னால் போகலாம்" என்றார். அதன் பிரகாரம் பத்துப் பேர் புறப்பட்டு அரண்மனைக்குச் சென்றார்கள். அதுசமயம் குழந்தை குன்னுடையாசாமி விளையாடிக் கொண்டிருந்தார். பங்காளிகள் போனதும் குழந்தையை,

(பாட்டு) எட்டிமயிர் பிடித்தானே சண்டாளன்
அவன் இட்டானே நாலு அடி கன்னத்திலே
பிடரிமயிர் பிடித்தானே சண்டாளன்
அவன் போட்டானே நாலு அடி கன்னத்திலே

அடி பொறுக்கமுடியாமல் குன்னுடையாசாமி பதறினார். இதைக் கண்ட அரசர் ஓடிவந்து சாமியைக் கையில் எடுத்து மணிமுகத்தை முத்தமிட்டு,

அரசர் - "சண்டாளா! சதிகாரா! கொலைகாரா! எதற்காகக் குழந்தையை இப்படி அடித்தாய்? உன்னுடைய நாடு வேறு, எல்லை வேறு தங்க வளநாட்டில் இருந்து இங்கு வழக்கு செய்ய வந்தீர்களா?"

1. பகுத்து

informed the King, divide it up. We will divide the lands and the wealth into a thousand shares, giving the child one. Let us go."

Song:
Leaving The Country of Prosperity
They are approaching The Country Where The Kāveri Flows, oh Lord
Where gold springs from the earth
They are approaching The Famous Country Where The Kāveri Flows
The elephant-faced Pilliar, oh Lord
They are approaching the temple of the five-handed God[1]

The thousand Kavuṇṭar clansmen reached The Country Where The Kāveri Flows at the time of the sun's greatest height. They gathered at the Pilliar temple at midday.

"Oh Paḻaṉicāmi! We should not all go to the palace together. First, ten of us should go. Going there could frighten the boy a little. The rest of us can come later."

So at that time ten men left for the palace. At that moment the child, Kuṉṉuṭaiyā, was playing. The clansmen addressed him:

Song:
He grabbed the hair, villain
He struck four times on the cheek
He grabbed the hair of the nape of the neck, villain
He struck four times on the cheek

Not being able to stand it, Kuṉṉuṭaiyā wailed. Seeing this the King ran and lifted the child in his hand. Lifting the child in his great hand he kissed its jewel-like face.

King: "Villains, liars, murderers! What have you beaten this child for? Your country is a separate one. The borders are separate. Have you come here from The Country of Prosperity to behave badly?"

---

[1] Pilliar, being an elephant-headed god, has two hands, two feet, and a trunk.

பங்காளி - "அரசே! மன்னிக்கவேண்டும். இந்தக் குழந்தையை என் பெரியப்பா பெரியம்மா பெற்றார்களா? எவளோ கானலில் விறகுக்கு வந்த இடத்தில் பெற்றுவிட்டு ஓடிவிட்டாள். என் பெரியப்பா அதை எடுத்துக்கொண்டு வந்து வளர்த்தார். ஆகையால் இந்தப் பையனுக்குப் பொன்னி வளநாட்டையும் அதைச் சேர்ந்த குடிபடைகளையும் செல்வங்களையும் விடமாட்டோம். அப்படியே விட்டாலும் ஆயிரத்துக்கு ஒரு பங்காக்கி ஒரு பங்குதான் கொடுப்போம்."

அரசர் - "அப்பா! பங்காளிக் கவுண்டர்களே! குழந்தையை எடுத்துவந்து ஐந்து வருடமாக வளர்த்தார்கள் உங்கள் பெரியப்பா. அப்படியிருக்க நீங்கள் இப்போது அவர்கள் காலம் சென்ற பின் வந்து பங்கு கேட்கிறீர்களே, சமயத்தை எதிர்பார்த்துக் கொண்டிருந்தீர்களா? ஏன் அவர்கள் உயிருடன் இருக்கும் போது வந்து கேட்டிருக்கலாம் அல்லவா? ஆகையால் நீங்கள் இப்போது வந்து வாதாடுவது முறையல்ல."

பங்காளி - "அரசே! இன்னும் கொஞ்ச நாள் பொறுத்து நாங்கள் வரலாமென்றிருந்தோம். அதற்குள் அவர்கள் காலம்வந்து போய்விட்டார் என் செய்வது அரசே! தாங்கள் இந்த நாட்டைப் பற்றியோ குழந்தையைப் பற்றியோ எதுவும் கேட்கக் கூடாது! இதில் உங்களுக்கு எந்தவிதமான பாத்தியமும்[1] கிடையாது. பங்காளிகள் நாங்கள் இருக்கிறோம். குழந்தையைக் காப்பாற்றிக் கொள்கிறோம்.

அரசர் - "அப்பா! நீங்கள் காப்பாற்றுவது எனக்குத் தெரியும். இந்தப் பையனை ஏதோ செய்யலாமென்று மனத்தில் வைத்து இருக்கிறீர்கள். இந்தக் குழந்தையை நீங்கள் கூட்டிப் போவது பற்றி எனக்கு ஆட்சேபணை இல்லை. ஆனால் ஒரு நிபந்தனை. இந்தக் குழந்தை உங்களிடத்திலிருந்து உயிர் பிழைத்து பெரியவனாகி வந்தால், "காட்டுக்காரன் காட்டுக்கு வந்தான் வீட்டுக்காரன் வீட்டுக்கு வந்தான்" என்ற பழமொழி போல் அவனுக்குச் சேர்ந்த இந்தப் பொன்னி வளநாட்டை அவனுக்கே ஒப்படைக்க வேண்டும்."

இவ்வாறு அரசர் சொல்லிவிட்டுச் சோழதேசம் சென்றுவிட்டார்கள். குடிபடைகளும் சென்றுவிட்டார்கள். எல்லோரும் போனபிறகு பங்காளிகள் பங்கு பிரகாரம் பூமியையும் திரவியத்தையும் பங்கிட்டு யானைமுகப் பிள்ளையார் கோவிலில் கொண்டு போய் வைத்தார்கள்.

---

1. உரிமை

Clansmen: "Oh King! Excuse us. (But) did our father's brother sire this child? Some unknown woman gave birth to it and ran away. Our uncle took it, brought it home and raised it. Therefore, we will not allow this boy to rule The Country Where The Kāveri Flows, plus the people, and the produce belonging to it. Even if we give him (something), we will divide it into a thousand shares and give (him) just one."

King: "Oh Kavuṇṭar clansmen! Your uncle raised this boy for five years after bringing him (home). After his time has finished you come and ask for shares. Have you been waiting for this moment? Why didn't you come and ask while he was still alive? By coming now you have no right (no moral force)."

Clansmen: "Oh King! We were thinking of coming any day. But before that his time was up. What's to be done? Oh King! Does this land belong to you or to the child? Don't raise questions!"

"There is nothing in this for you. We are the relatives (the share-holders). We will look after the child."

King: "Men. I know how you will look after the child. With a cruel bent in your hearts you will be thinking of what you can do to him. I have no objection to your taking the child. But I want a contract from your side that, as in the proverb, when you die:

"The one from the forest returned to the forest"
"The one from the city returned to the city"

You will give The Country Where The Kāveri Flows to the child."

Having said this the King left for the Chola Country. The people left too. After everyone had gone the clansmen divided the land and the wealth at the Pilliar temple.

பங்காளிகளில்
ஒருவர் - "ஏனுங்க அண்ணா! அரசர் சொன்னதைப் பார்த்தீர்களா? குன்னுடையான் உயிர்பிழைத்து வந்தால் அவனுடைய தேசத்தையும் குடிபடைகளையும் அவனுக்கே விடும்படிச் சொல்லியிருக்கிறார். நாமும் விடுவதாகச் சொல்லி இருக்கிறோம். குன்னுடையான் ஒருகாலத்தில் உயிர்பிழைத்து வந்தால் இந்த அரண்மனையை "என் தாய்தந்தை கட்டியது" என்று சொல்வான். ஆகையால் நாம் இப்போதே இந்த அரண்மனையை இடித்து நிறவி[1] மூன்று உழவுபோட்டு முப்புழுதியாக்கி ஆமணக்கங் கொட்டையை அள்ளி விதைத்து விடலாம்."

அவர்கள் இவ்வாறு பேசி அப்படியே செய்தார்கள்.

பங்காளிகளில்
ஒருவர் - "ஏனுங்க பெரிய வீட்டு அண்ணா! இந்தப் பையனுக்கு உங்க வீட்டில் சாதம் போட்டுவிடுங்கள். அவன் பங்கையும் திரவியத்தையும் வைத்துக் கொள்ளுங்கள்."

பெரிய
கவுண்டர் - "அப்பா! உங்கள் நங்கை சமாச்சாரம் உனக்குத் தெரியாதா? உன் நங்கை இந்தப் பையனுக்குச் சாதம் போடுவாளா?"

மற்றவர் - "ஏனுங்க அண்ணா! இந்தப் பையனுக்குச் சும்மாவா சோறு போடுகிறோம். வேண்டிய திரவியம் இருக்கிறது. வைத்துக் கொண்டு போடக்கூடாதா?"

பெரிய
கவுண்டர் - "ஏப்பா! உங்கள் நங்கை விஷயம் தெரிந்தும் இப்படிப் பேசுகிறீர்களே? சரி, நான் கூட்டிப்போய்ப் பத்து நாளைக்கு வைத்திருக்கிறேன். என் வீட்டில் சோறு சரியாகப் போடா விட்டால் உங்களிடம் கூட்டிவந்து விட்டுவிடுவேன். சரி, புறப்படுங்கள் போகலாம். அடே, குன்னுடையாக் கவுண்டா! இந்தத் துணியைக் கோமணம் கட்டிக்கொண்டு புறப்படு."

(பாட்டு) பொன்னிவளநாடு விட்டு நாடு விட்டு
தங்கவள என்சாமி நாடு வாறார்
வேகாத என்னாத்தா வெய்யலிலே
வெந்தெரிஞ்ச என் சாமி கானலிலே

1. அடையாளம் தெரியாதவாறு செய்து

A Clansman: "Oh elder brother! Did you hear what the King said? If the boy lives we must give the land and its people over to him. We have agreed to this. If Kuṉṉuṭaiyā lives for a while he will then say, 'my mother and father built this palace.' Let us (therefore) knock down this palace (now), plow over it three times and plant castor oil seeds.

They spoke like this and then acted on their words.

A Clansman: "Oh elder brother of the big house! Feed this child in your home. (In compensation) you can take his share of the land and the wealth!"

Elder Clansman: "Don't you know about your brother's wife? Will your sister-in-law feed this child rice?"

Another: "Oh elder brother! We have the wherewithal to feed the boy. Do we have to give him other things as well?"

Elder Clansman: "Man. (While) knowing your sister-in-law you speak like this? O.K.! I will take him and keep him for ten days. If he does not receive proper food in my house then I will bring him and give him to you. O.K., let's get going.

Hey, boy! Take this cloth and make a loin piece out of it. Get going!"

Song: Leaving The Country Where The Kāveri Flows,
leaving it
They approached to The Country of Prosperity,
they approached it, my Lord
In the relentless heat of the sun, my Lord

கவுண்டர்களும் என்னாத்தா முன்னடக்க
குன்னுடையார் என் சாமி பின்தொடர்ந்தார்

உச்சி உருவம் மத்தியான நேரம் தங்க வளநாடு போய் எல்லாரும் பிள்ளையார் கோவிலில் போய்ச் சேர்ந்து, "அண்ணா! நீங்கள் பையனைக் கூட்டிப் போங்கள்" என்று எல்லோரும் அவர்கள் வீட்டுக்குச் சென்றார்கள். பெரிய வீட்டுக் கவுண்டர் வீட்டுக்குப் போகும்போது நடை சாத்தியிருந்தது. "பெண்ணே, கதவைத் திற" என்று சத்தம் போட்டார். மனைவி உடனே ஓடிவந்து கதவைத் திறந்துவிட்டாள். கதவைத் திறந்ததும் பையனைப் பார்த்து,

மனைவி - "நாதா! உங்கள் பின்னால் வரும் பையன் யார்?"

கவுண்டர் - "அவன்தான் பொன்னி வளநாட்டில் பெரியப்பா கோளத்தாக் கவுண்டர் மகன் குன்னுடையாசாமி."

மனைவி - "நாதா! அவனை இங்கு எதற்குக் கூட்டிவந்தீர்கள்? உங்களுக்கே நான் சும்மா வைத்துக் கொண்டு சோறு போடுகிறதுமில்லாமல் அவனுக்கும் போட வேண்டுமா?"

கவுண்டர் - "பெண்ணே! இந்தப் பையனுக்கு நாம் சும்மா சோறு போட வேண்டியதில்லை. பூமியில் ஒரு பங்கும் திரவியம் ஒரு பங்கும் இருக்கிறது. அதை வைத்துக் கொண்டு போடலாம்."

மனைவி - "சரி! பத்து நாளைக்குத்தான் போடுவேன்."

குன்னுடையா - "அய்யா! எனக்குச் சாதம் போடு. பசி ஆகிறது" என்று குழந்தை அழுதான்.

கவுண்டர் - "பெண்ணே! பையனைக் கூட்டிப் போய்ச் சாதம் போடு. நான் குளித்து விட்டு வருகிறேன்."

மனைவி - "சரி போய்வாருங்கள் நாதா! நான் இவனுக்குச் சாதம் போடுகிறேன்" என்று சொல்லிக் குழந்தையை "வாடா குறவா!" என்று காதைப் பிடித்து இழுத்துப் போய்ச் சுற்றுத் திண்ணையில்[1] உட்கார வைத்து ஏழு நாட்களுக்கு முன் காய்ச்சிய ராகிக்[2] கூழ் கெட்டியாக இருக்கிறது என்று மறுபடியும் கொஞ்சம் தண்ணீர் விட்டுக் கரைத்து டம்ளரைக்[3] கொடுத்து, "ஊற்றிச் சாப்பிடடா!"என்று கண்டித்தாள்.

அதைப் பார்த்த குன்னுடைய ராஜமன்னன், கோடையிடி மணிவேந்தன் சொன்னான்,

---

1. வீட்டின் உட்புறமுள்ள வேதிகை 2. Raggee, வரகு 3. Tumbler

The Kavuṇṭars walked ahead, my God
Kuṉṉuṭaiyā followed behind

The sun was at its height, and it was midday when they arrived at the Pilliar temple in The Country of Prosperity.

"Elder brother! You take the child with you," said the others as they left for home. The Kavuṇṭar of the biggest house went home and saw the door closed.

Kavuṇṭar: "Oh wife! Open the door," he called out. The wife ran quickly and opened it. Through the open door she saw the child.

Wife: "Husband. Who is this child who walks behind you?"

Kavuṇṭar: "He is the son, called Kuṉṉuṭaiyā, of Uncle Kōḷattā Kavuṇṭar of The Country Where The Kāveri Flows."

Wife: "Husband. What have you brought him here for? Do you want us to keep him and feed him rice for nothing?"

Kavuṇṭar: "We don't have to do it for nothing. (We have in compensation) one share of the land and one share of the wealth. Keeping these we shall care for him" he said.

Wife: "O.K. We'll feed him for ten days," she said.

Kuṉṉuṭaiyā: "Oh father. Give me rice. I'm hungry," said the child and he began to cry.

Kavuṇṭar: "Oh wife! Take this boy and give him rice. I will go bathe, and return."

Wife: "O.K. husband. You may leave, I will feed the child."

Then she turned to the child and said, "You wilted Gypsy!", and pulling his ear she dragged him (behind her) and seated him on an outer porch. Then she handed him a tumbler of seven-day old, hardened millet gruel, moistened with a little hot water, and said "Eat it!"

On seeing this the King Kuṉṉuṭaiyā, the precious King, the one like summer thunder said:

"ஆகா! அகிலாண்டகோடி பிரும்மாண்ட நாயகா! சங்கு சக்கரா, வைகுந்த வாசகா! பாலமலை ஜோசியா, பரமகுரு தன்னாசி! ஏழை பரதேசி, எம்பெருமாள் மாயவனே!

ஆயிரம் நாமம் பெற்ற சாமி! என்னுடைய ஆயிரமா நிலத்தையும் ஏழரை கோடித் திரவியத்தையும் பங்காளிகளு [1] செய்துவிட்டு இந்தக் கதிக்கு ஆளானேன் மாயவா!"

(பாட்டு)
இந்தக் கஞ்சி குடிப்பத டிப்பதற்கு
எழுதினையோ என் த மி என் தலையில்
நான் பாலோடு பரந்த கறி
அங்குச் சாதங்கறி
நான் பசியாமல் சாப்ட
சாமி சாப்பிட்டதும்
அந்தப் பாலு நல்ல ம ரிக்கவில்லை
அங்குச் செரிக்கவில்ல
நான் படுக்கைசுகம் ம ள்ளவில்லை
அங்குக் கொள்ளவில்
நெய்யோடு சாதங்கறி ங்கறி
நெருங்கத்தான் சாப்பி
சாமி சாப்பிட்டதும்
எனக்கு நெய்யும் செரி
சாமி செரிக்கவில்லை
நான் நித்திரைசுகம் அ ளவில்லை
சாமி கொள்ளவில்லை

சாமி அழுகுறாரே, சரீரமே வாடுறாரே

"மாயவா! ராகிக் கஞ்சி குடிப்பதற்குத் ழுதி விட்டாயா?"

கவுண்டச்சி - "ஏண்டா அழுகிறாய்! டியடா கஞ்சியை."

அவள் இப்படி அதட்டியவுடன் குன்னுடையாசாமி டம்ளரைக் கையில் எடுத்துச் சாப்பிடும்போது சாப்பிடத் தெரியாமல் இரண்டு கடவாயிலும் வழிந்து பாதிக் கஞ்சி கீழே போனது. பாதிக் கூழைச் சாப்பிட்டுவிட்டுச் சாப்பிடமுடியாமல் அப்படியே வைத்துவிட்டு நடைச்சாவடியில்[2] வந்து குன்னுடையாசாமி நின்றான்.

அப்போது கவுண்டர் குளித்துவிட்டு வந்து, "ஏப்பா, சாப்பிட்டாயா?" என்று சாமியைப் பார்த்துக் கேட்டார்.

1. தானம் 2. வீட்டின் முகப்புக்கூடம்

Kunnuṭaiyā's Song:

Oh my! Oh Lord of a crore of worlds in the universe
The one who carries a conch, a discus and
who lives in Vaikunta
The seer of Bāla mountain, supreme penitant
Poor pilgrim, my Perumal, my Vishnu
Oh God with a thousand names
I have handed over my enormous fields and seven
crores of wealth to my clansmen.
I have been subjected to this condition, oh Vishnu!

Kunnuṭaiyā's Song:

Have you written on my head, on my head, my Lord
That I must drink this gruel, drink it
When I ate rice with vegetables and milk, rice and
vegetables there, oh Parantāma
Without appetite when I ate, my Lord
That milk was not digested, oh Vishnu
It was not digested there
I did not have the pleasure of lying down, oh Vishnu
I did not (have it) there
When I ate clarified butter, rice and vegetables there,
rice and vegetables
When I ate them all in bulk, my Lord, then
The clarified butter was not digested, it was not
digested, my Lord
I did not have the pleasure of sleeping there
I did not (have it) my Lord[1]
The Lord is crying. His body is wilting.
Oh Vishnu! Have you written on my head that I must
drink millet gruel?

Wife: "Boy! Are you crying? Take that gruel and drink it, boy!"

Kunnuṭaiyā lifted the tumbler but he did not know how to drink from it and half the gruel flowed out of the sides of his mouth on to the ground. He could not drink half the gruel and leaving it behind he came and stood in the entrance way.

At the time the Kavuṇṭar returned from his bath and saw the boy. He asked,

"Have you eaten?"

---

[1] The song describes how well he used to eat (even overeat) when his parents were alive, and how he did not appreciate it then as he does now.

குன்னுடையா - "அய்யா! எனக்குக் குழம்பும் சாதமும் கிடைக்கவில்லை. ராகிக் கூழை ஊற்றினார்கள். நான் சாப்பிடமுடியவில்லை. அப்படியே வைத்துவிட்டு வந்துவிட்டேன்."

கவுண்டர் - "சண்டாளி, சதிகாரி! எனக்குச் சாதம் வேண்டாம். குழந்தைக்கு நன்றாகக் குழம்புடன் போடு என்று சொன்னோமே. அவன் சொத்துக்களையும் வைத்துக் கொண்டு துரோகம் செய்து விட்டாளே பாவி!"

என்று கவுண்டரும் வீட்டில் சாப்பிடாமல் சாமியைக் கூட்டிக் கொண்டு கடையில் போய்ச் சாப்பிட்டார். இந்தப் பிரகாரம் பத்துநாள் முடியுமட்டும் சாமிக்கு ராகிக் கஞ்சியைத் தவிர வேறு சோறு போடவில்லை. இதைக் கவுண்டர் பார்த்து மனம் நொந்து, "இனி நாம் பையனை இங்கு வைத்திருப்பது முறையல்ல" என்று நினைத்துப் பையனைக் கூட்டிக்கொண்டு உச்சி உருவம் மத்தியான வேளை பிள்ளையார் கோவிலுக்குப் போய்த் தலையாரியைக் கூப்பிட்டு, ஆயிரம் வீட்டுக்காரர்களையும் பிள்ளையார் கோவிலுக்குக் கூட்டிவரும்படிச் சொன்னார். தலையாரி போய்ச் சொன்னவுடன் ஆயிரம் வீட்டுக்காரரும் பிள்ளையார் கோவிலில் வந்து கூடினார்கள்.

ஒருவர் - "ஏனுங்க பெரியவீட்டு அண்ணா! குழந்தையைப் பத்து நாளுக்குள் இந்த மாதிரி செய்துவிட்டீர்களே. பையன் செத்து விடுவான் போல் இருக்கிறது. அவனுட சொத்துக்களையும் வைத்துக்கொண்டு ஏன் இப்படி செய்தீர்கள்?"

பெரிய கவுண்டர் - "ஏப்பா! நான்தான் உங்களுக்கு முன்னமே சொன்னேன். உங்கள் நங்கையாள் சோறு போட மாட்டாள் என்று. ஆகையால் குழந்தையை நீங்களே ஒப்புக்கொள்ளுங்கள். இல்லாவிட்டால் எல்லோரும் சேர்ந்து இதற்கு ஒரு முடிவு செய்யுங்கள்."

கூட்டத்தில் ஒருவரும் பேசாமல் இருப்பதைப் பார்த்த பழனிசாமி கவுண்டர் எழுந்து, "ஏன் எல்லோரும் பேசாமல் இருக்கிறீர்கள்? இதற்கு ஒரு முடிவு சொல்லுங்கள்" என்றார்.

மற்றவர் - "அப்பா பழனிசாமி! நீயே ஒரு முடிவு சொல்."

பழனி - "எனக்கு ஒரு யோஜனை தோன்றுகிறது. என்னவென்றால் ஒருத்தர் வீட்டில் கொண்டுபோய்ப் பையனைத் தனியாக வைத்திருந்தால் இப்படித்தான் வந்துசேரும். ஆகவே குன்னுடையாக் கவுண்டனுக்கு ஒரு சட்டியும் சொப்பும்[1]

1. கிண்ணம்

Kuṉṉuṭaiyā: "Oh father! I didn't get any curry and rice. I was given millet gruel. I couldn't eat it and so I have just left it there."

Husband: "Villain, liar! Shouldn't we feed good curry and rice to the child, as I asked? You have given blemished things and dealt cruelly with him."

Then the Kavuṇṭar, without eating at home, took the child to a commercial eating hall and they ate there. Ten days passed and still the child was served millet gruel and no rice. Seeing this the Kavuṇṭar became sick at heart. He thought, "we have no right to keep this child here any more." Taking the child he went, at midday, to the Pilliar temple. He called the watchman. He asked him to bring the thousand house-holders to the temple. (The watchman) brought the thousand men to the temple.

Someone: "Oh elder brother of the big house! Ten days have passed and you have treated the child like this? You have given him blemished things. Why have you done this?" he asked.

Kavuṇṭar: "Oh, man! I, myself, told you before! I said that your sister-in-law wouldn't serve rice. You take the child. Otherwise, all of you get together and find a solution to this." Seeing that no one in the crowd spoke, Paḻaṉicāmi stood up. "Why is no one speaking? Let's make a decision," he said.

Someone else: "Oh Paḻaṉicāmi! You give us a solution."

Paḻaṉi: "A thought has come to me. If we put the child in one person's house it will come to this again. Therefore let us buy Kuṉṉuṭaiyā a begging bowl. We have one buffalo in

வாங்கிக் கொடுத்து விடுவோம். நம் ஆயிரம் வீட்டுக்கு ஒரு எருமை இருக்கிறது. குன்னுடையாக் கவுண்டன் காலையில் எழுந்ததும் பத்து வீட்டில் சாதம் வாங்கிச் சாப்பிட்டுவிட்டுச் சட்டியைப் பள்ளிக்கூடச் சாவடியில் வைத்துவிட்டு, எருமைகளை ஓட்டிப்போய்க் காசிக்கரையில் மேய்த்து மத்தியானம் ஓட்டிவந்து மந்தையில் விட்டுவிட்டு, மத்தியானம் பத்து வீட்டில் வாங்கிச் சாப்பிடட்டும். இதுபோல் ராத்திரிக்கும் வாங்கிச் சாப்பிட்டுவிட்டுப் பள்ளிக்கூடச் சாவடியில் போய்ப் படுத்துக் கொள்ளட்டும். தினமும் இதுபோல் நடந்து கொள்ளட்டும்."

"இதுதான் நல்ல முடிவு" என்று சம்மதித்தார்கள் எல்லோரும். "அடே குன்னுடையா! சட்டியைப் போய் எடுத்துக்கொள்" என்று அதட்டினார்கள்.

குன்னுடையா ராஜமன்னன், கோடையிடி மணிவேந்தன், வாய்பேசா தர்மன், மசைசாமி புண்ணியனாம், "பாலமலை ஜோசியா! பரமகுரு தன்னாசி, ஏழைபரதேசி, எம்பெருமான் மாயவனே!" என்று,

(பாட்டு) சாந்தணியும் பரந்தாமா கையிலே
நான் கையிலே
நான் சட்டியை எடுக்கும்படி
எழுதினையோ என் தலையில்
இங்கு என் தலையில்
புனுகணியும் கையிலே நான் கையிலே
முட்டையை[1] எடுக்கும்படி இங்கு
எழுதினாயோ என்தலையில்
சாமி என் தலையில்

சாமி அழுகுறாரே சரீரமே வாடுறாரே

குன்னுடையா - "சங்கு சக்கர வைகுந்த வாசகா! என்னுடைய நாட்டையும் திரவியத்தையும் பங்காளிக்கு விட்டுவிட்டு, நான் சட்டியை எடுத்துப் பங்காளிகள் வீட்டில் இரந்து குடிப்பதற்கு எழுதினையோ காஞ்சிநாதா! என் அங்கம் பதறுது, ஆத்மாவும் சோருது. என் சன்னம்[2] நடுங்குது, சரீரமே வாடுது. சாமி! நான் தாயை இழந்து, தகப்பனை இழந்து, இந்தக் கதிக்கு ஆளானேன் சாமி"

என்று பரந்தாமனை நினைத்துச் சட்டியைக் கையில் எடுத்துப் பங்காளிகள் வீட்டுக்குச் சாதம் வாங்கச் சென்றார்.

1. எருமுட்டை (வறட்டி) 2. குரல்

each of our thousand houses. When Kuṉṉuṭaiyā gets up in the morning he can go to ten houses asking for food. Having eaten he can leave his pot in the school barn and then take the cows to graze along the borders of the Benares river bank. He can bring them back at noon and ask for food from ten more houses. He can ask for food again at night and then go and sleep in the school barn. Let it be daily like this."

Everyone agreed that this was the best solution.

Someone: "Oh Kuṉṉuṭaiyā! Go and bring a bowl," They ordered.

Prince Kuṉṉuṭaiyā, the precious King, the one like summer thunder, the worthy one of few words (said):

"Oh seer of Bāla mountain, supreme penitant
Poor pilgrim, my Perumal, my Vishnu."

Kuṉṉuṭaiyā's Song:

Oh Parantāmā, who wears perfumed paste
Have you written on my head
That I should carry a beggar's bowl
In my, in my hand?
Have you written on my head
That I must carry cakes of dried dung fuel
In the hand that wears musk, in my hand?

Narrator: "Oh child don't cry, be healthy, don't pine."

Kuṉṉuṭaiyā: "Oh God who carries a conch and a discus and lives in Vaikunta

My land and wealth have gone to my clansmen
I am carrying a begging bowl and must take what alms are given from the clansmen's homes. Have you written this on my head, oh Lord of Kanjeepuram?[1]
My body is shivering, my soul is tired, my voice is wilting
Oh Lord, I lost my mother and father and attained this fate
Oh Lord, my God."

Standing up, taking the begging bowl in hand, he went to his clansmen's homes to accept food.

---

1 Varatarajapperumal

பங்காளிக் கவுண்டர்கள், கவுண்டச்சிகள் ஆயிரம்பேரும் கூடிப்பேசி ஏழு நாளுக்கு முன் காய்ச்சிய ராகிக்கூழையே எல்லோர் வீட்டிலும் ஊற்றினார்கள். சாமி அதை வாங்கிக்கொண்டு போய்ச் சாப்பிட்டுவிட்டு மீதியைப் பள்ளிக்கூடச் சாவடியில் உறியில் வைத்துவிட்டு ஆயிரம் எருமைகளையும் ஓட்டிப்போய்க் காசிக்கரையில் மேய்த்து மத்தியானம் ஓட்டிவந்து மந்தையில் விட்டுவிட்டுச் சட்டியை எடுத்துக்கொண்டு சாதத்துக்குப் போனார். "காலையில் பழைய சாதம், கூழ் ஊற்றினார்கள். இப்போது மத்தியான நேரம் குழம்புடன் சாதம் போடுவார்கள்" என்று சந்தோஷமாக நினைத்துக் கொண்டு ஒரு தெருவில் போய் "அம்மா! சாதம் போடுங்கள்" என்றார். எல்லோரும் கூடிப் பேசியிருந்ததால் காலையில் ஊற்றியமாதிரி ராகிக் கூழையே எல்லோரும் ஊற்றினார்கள் சண்டாளிகள். சாமி வாங்கிக் கொண்டு போய்ப் பள்ளிக்கூடச் சாவடியில் வைத்து சாப்பிட்டுவிட்டு மீதியை வைத்துவிட்டுப் போய்விட்டார்.

இப்படி இருக்கும்போது மாயவர் தினந்தோறும் தங்க வளநாடு வந்து குன்னுடையாக் கவுண்டர் என்ன வேலை செய்து சாப்பிடுகிறார் என்று பார்த்துப் போனார்.

(பாட்டு) இந்தப் பிரகாரம் இனி நடக்குது பார்
தங்கவள நாட்டிலே அதிகாரம்
நாளொரு நாள் பொழுதொருநாள்
நடக்குது பார் நல் பருவம்
அப்படியே நல்லதென்று நாட்டிலே
அதிகாரம் அன்புடனே நடக்குது பார்

குன்னுடையாசாமி இந்தப் பிரகாரம் தங்க வளநாட்டில் பங்காளிகளிடம் எருமை மேய்த்துக் கொண்டு, "இன்று குழம்புடன் சாதம் போடுவார்கள், போடுவார்கள்" என்று நினைத்துப் போனால் தினந்தோறும் ராகிக் கூழையே ஊற்றினார்கள். இப்படியாக ஐந்து வருடங்கள் சென்றன. "இனி நம்மளுக்குக் குழம்புஞ்சாத(மு)ம் கிடைக்காது" என்று குன்னுடையாசாமி நினைத்து அன்று ஆயிரம் எருமையையும் ஓட்டிக்கொண்டு காசிக்கரைக்குச் சென்று எருமைகளை விட்டுவிட்டு, குன்னுடையாசாமி என்ன நினைக்கிறார்,

(பாட்டு) ஏகாந்த ரூபழகன்
தெற்கு வடக்கு அறியார்
திருவேளாங்காடறியார்

The clansmen and women, having agreed together, all gave the boy seven day old millet gruel. The little boy took this and ate it. Then he left his bowl in the school barn and took the thousand buffalos to graze on the field borders of Kāci. At noon he brought them home and then took his bowl and went for food.

Thinking "In the morning I will receive day-old rice and at noon curry and rice," he ran into the street with his bowl.

"Oh mother, give me rice," he called. But as they had agreed before hand, the villains gave him millet gruel again, just as in the morning. The little boy took this and went to the school barn and ate. But he ate only half and left the rest.

At this time Vishnu came daily to The Country of Prosperity, to see what work Kuṉṉuṭaiyā was doing and what he was eating.

Song:

See what happened at this time
The events in The Country of Prosperity
One day, one day
Look what happened one fine day
It was good, in that land
It was done with love

Five years passed in The Country of Prosperity. Daily the buffalos were grazed and Kuṉṉuṭaiyā thought, "today they will give me curry and rice." But daily he received only millet gruel. "I will never get curry and rice," Kuṉṉuṭaiyā began to think as he drove the thousand buffalos to the Benares river bank for grazing.

Narrator:

What is Lord Kuṉṉuṭaiyā thinking?
The one who is uniquely handsome
He who knows neither the south nor the north
He who doesn't (even) know the sacred place called Tiruvēḷāṅkāṭu[1]

---

[1] Some important sacred place not clearly identified.

"நாம் இன்னும் எவ்வளவுகாலம் இருந்தாலும் பங்காளி வீட்டில் இந்தக் கதிதான் நடக்கும்" என்று, "வேறு ஊர் போய் யாரிடமாவது பண்ணயத்தில் சேர்ந்தால் குழம்புஞ்சாத(மு)ம் கிடைக்காதா" என்று மனதில் நினைத்து எருமைகளைக் காசிக்கரையில் முடிக்குவிட்டு,[1]

(பாட்டு) வடக்கு நல்ல என் சாமி திசைநோக்கி
வாராரே என் சாமி ராஜதுரை
காடான சாமி காடுவிட்டுக்
கட்டப்பொள்ளி சோலை விட்டு
ஆனைநெருஞ்சிமுள்ளு[2] அங்கு நெருஞ்சிமுள்ளு
அப்புதே[3] சாமிக்குத் திரேகமெல்லாம்
குதிரை நல்லசாமி நெருஞ்சிமுள்ளு
கொத்தோடு சாமிக்கு ஏறுதுபார்
வேகாத வெய்யிலிலே ராஜன் வெய்யிலிலே
வெந்தெரிஞ்ச கானலிலே சாமி கானலிலே
அல்லுபொடி துள்ளுபொடி துள்ளுபொடி
அனல் கொண்டு வீசுதங்கே

குன்னுடையாசாமி இப்படி ஐந்து மைல்[4] தூரம் வடக்குதிசை நோக்கி ஓடிய பின் அந்தக் கானகத்தில் பிரம்மாண்டமான பின்னமரம்[5] இருந்தது. அதனடியில் போய் நிழலில் நின்று மரத்தை மேலே நிமிர்ந்து பார்த்தார். மரத்தின் வாதுகள்[6] நன்றாகக் காயந்து இருந்தன. "ஆகா! இந்த மரத்தின்மேல் ஏறி இந்த விறகை ஒடித்துக் கீழே போட்டு ஒரு சுமை கட்டிப் பக்கத்து ஊரில் கொண்டுபோய் யாருக்காவது கொடுத்தால் குழம்புச்சாதம் போடுவார்கள்" என்று நினைத்துச் சாமி மரத்தின் மேல் ஏறி ஜலமூலையாக[7] நின்று,

"சங்குசக்கர வைகுந்த வாசகா! ஆபத்பாந்தவா, அனாதரட்சகா! நான் குழம்புஞ் சாதத்துக்குக் கதிகெட்டுப் புறப்பட்டு வந்துவிட்டேன் மாயவா! நான் கடவுளின் சிருஷ்டியில் பிறந்தது உண்மையானால் நான் இந்த விறகைத் தொட்டவுடன் தங்களுடைய கிருபையால் அப்படியே கீழே விழவேண்டும் காஞ்சிநாதா!" என்று சாமி புலம்புவதைப் பால்கடலில் மாயவர் பார்த்து, "ஆகா! குன்னுடையான் ஐந்து வருடமாகப் பங்காளி வீட்டில் குழம்புச்சாதம் கிடைக்காமல் கஷ்டப்பட்டு விறகை உடைக்கமுடியாமல் நம்மை நினைக்கிறான்" என்று உடனே கருடவாகனமேறிப் புறப்பட்டார்.

(பாட்டு) கருடநல்லோ என்னாத்தா வாகனத்தில்
மையமாய் என்சாமி பறக்குறாரே

---

1. விரைவாக ஓட்டி 2. அகன்ற இலைகளையுடைய ஒரு வகை முட்செடி 3. ஒட்டிக்கொள்ளுதல் 4. Mile 5. புன்னை மரம் 6. மரக்கிளைகள் 7. வடகிழக்கு மூலை

"How much longer must I live like this in the place of my clansmen? If I go to another town and help someone or other with work, I can get curry and rice," he thought.

He hurried the buffalos along the borders of the Benares river bank.

Song:

Our Lord, he turned to the North
He is going, the lordly one is going
The great Lord left the forest
Leaving the Kaṭṭapoḷḷi forest
The neṟiñci elephant thorns there, the neṟiñci thorns
Are piercing the body of my Lord all over
The neṟiñci horse thorns, my Lord
See the thorn clusters pierce my Lord
In the scorching sun, the King, in the sun
In the burning heat, in the heat, my Lord
The sand, the thorns and the stones
Were thrown at (his) feet by the hot wind there

Kuṉṉuṭaiyā has now run five miles to the North. In that place he saw a huge, alexandrian laurel tree. He went and stood at its foot in the shade. He looked up and saw the tree was all dried up. "Ah, ha," he thought. "I'll climb this tree, cut the wood, let it fall, and tie up a large bundle. (Then I will) carry it to a nearby town, deliver it to someone and get rice and curry in exchange." So he climbed the tree, faced the northeast and saluted (Vishnu).

Kuṉṉuṭaiyā's Song:

He who carries a conch and a discus and
lives in Vaikunta
The one who rescues people in trouble, orphan-saver
I have come because I couldn't even get rice mixed
with curry, oh Vishnu.

"If it is true that I was born of God's creative power then with your grace let this firewood fall (to the ground) as soon as I touch it, oh Lord of Kanjeepuram!"

Vishnu saw this from the milk sea. He thought, "Kuṉṉuṭaiyā has lived in his clansmen's place for five years without curry and rice. (Now) not being able to cut firewood, he is thinking of me." He immediately mounted his Garuda bird and started off.

Song:

My Lord, on his Garuda vehicle
My Lord fires in the centre (of the sky)

பால்கடல் என் சாமி விட்டுமல்லோ
பூலோகம் என் சாமி வாறாரே

மாயவர் வந்து கானகத்தில் சாமிக்குத் தெரியாமல் உருவத்தை மாற்றி ஈ போல் மரத்தில் போய் ஒட்டினார். குன்னுடையாசாமி விறகைக் கையில் தொட்டவுடன் ஆயர் கிருபையால் அத்தனை விறகுகளும் கீழே விழுந்தன. குன்னுடையாசாமி கீழே இறங்கிவந்து கெரண்டை கொடி[1] எட்டுக் கொடி பிடுங்கி விறகை எட்டுக் கட்டுப் போட்டுப் பதினைந்து பேர் சேர்ந்து தூக்கினாலும் தூக்கமுடியாத சுமையாக மாயவர் கிருபையால் கட்டினார். கட்டிவிட்டுச் சாமி சும்மாட்டைக்[2] கூட்டி ஜலமூலையாகப் பார்த்து நின்று, "பரந்தாமா! இந்த விறகு சுமை இரண்டு பனைமரம் உயரம் மேல்போய் என் நடுத்தலையில் வந்து நிற்க வேண்டும் காஞ்சிநாதா!" என்றதும் பரந்தாமன் ஈ போல் விறகுச் சுமையில் ஒட்டினார்.

குன்னுடையாசாமி பெருவிரலை மெட்டியவுடன்,

(பாட்டு) மேலே நல்ல அடடா பறக்குதுபார்
ஆயருட அடடா கிருபையாலே
மாயருட அடடா கிருபையாலே
விறகுச்சுமை அந்திரமாய்ப் பறக்குதுபார்

இரண்டு பனை உயரம் விறகுச்சுமை மேலே போய்ச் சாமி நடுத்தலையில் வந்து நின்றது.

(பாட்டு) வடக்கு நல்ல வடக்குத்திசை நோக்கி
வருகிறாரே குன்னுடையா மணிவேந்தன்
மேடு கண்டா மெல்லநடை சாமி மெல்லநடை
பள்ளங்கண்டா பருத்த நடை வாறாரே

வடக்குத்திசை நோக்கி சாமி வரும்போது வழியில் ஒரு ஊர் இருந்தது. அந்த ஊரில் ஒரு ரோடு[3] போனது. சாமி அந்த ரோட்டில் புறப்பட்டுப் போனார். பக்கத்தில் இருந்த ஒரு வீட்டுக்காரர் விறகைக் கண்ணில் பார்த்து, "இது என்ன வண்டியின் சத்தத்தையும் காணோம், இவ்வளவு உயரமாக போகிறதே" என்று மதிலை எட்டிப் பார்த்தார். "அப்பா தம்பி! இந்த விறகுச் சுமையை விலைக்குக் கொடுக்கிறாயா?" என்று கேட்டார்கள் பக்கத்து வீட்டுக்கார கவுண்டச்சி.

குன்னுடையா -

(பாட்டு) அம்மா எனக்குக் குழம்புஞ் சாத(மு)ம்
என் தாயே குடுத்ததானால் சாமி குடுத்ததானால்
நான் குடுத்திடுவேன் உங்களுக்கு
இந்த விறகு சுமை அங்கு விறகு சுமை

1. ஒரு வகைக் கொடி 2. பாரத்தைத் தாங்க உதவும்படி தலையிற் கொள்ளும் சுமையடை
3. Road

Leaving the milk sea, my Lord
He approaches the earth, my Lord

Vishnu arrived in the forest. Without being noticed (by the boy) he changed his form into a fly and sat on the tree. As soon as Kuṉṉuṭaiyā touched the wood with his hand, so much fell down that it was as if (he had used) the force of Krishna himself. Kuṉṉuṭaiyā climbed down and with Vishnu's help he tied up a bundle larger than what even fifteen people together could tie up. Taking the tied load he stood and looked to the northeast.

"Oh Lord! This burden that is higher than two palmyra palms has to be placed on the middle of my head. Oh Lord of Kanjeepuram!"

The divine Lord alighted on the load in the form of a fly.

Kuṉṉuṭaiyā snapped his fingers.

Song: My goodness! See what flies above!
With the help of the shepherd[1]
With the help of Vishnu
See the load of firewood fly by itself

The load of firewood rose up the height of two palm trees and came to rest on Kuṉṉuṭaiyā's head.

Song: Facing northward, facing northward
Kuṉṉuṭaiyā is coming, the hour is hot
Seeing hills and climbing them, the Lord
is climbing them
Seeing ravines and crossing them, he is coming

While walking northward the boy came across a town. There was a road through it. The boy started down the road. A nearby householder saw the firewood. "What is this? There is no noise of a cart, yet it moves at a great height." He peeped out between the walls. "Oh younger brother! Will you sell this load of wood?" asked a woman next door.

Kuṉṉuṭaiyā's Song: Oh mother, my mother
If you give me curry and rice
If you give me (this) I will give it to you
This load of firewood, that load of firewood there

---

1 Āyar, referring to Krishna who was raised as a shepherd.

ஐந்து நல்ல வருஷமாக ஆத்தா வருஷமாக
எனக்குக் குழம்புஞ்சாத(மு)ம் தாயே
கிடைக்கவில்லை சாமி கிடைக்கவில்லை

"அம்மா! நீங்கள் குழம்புஞ்சாத(மு)ம் குடுத்ததானால் நான் குடுத்திடுவேன் உங்களுக்கு விறகு சுமை."

வீட்டுக்காரி - "அப்பா! குழம்புஞ்சாத(மு)ம் உனக்கு எவ்வளவு வேண்டு மானாலும் போடுகிறேன். இதோ இந்த மதிலுக்கு இந்தப்புறம் விறகைப் போட்டுவிட்டு அந்தப்புறம் நடையில் உள்ளே வா."

சாமி அதன்படி விறகைப் போட்டுவிட்டு அந்தப்புறம் போனார்.

வீட்டுக்காரி - "அப்பா! உன்னுடைய ஊர் எது? ஜாதி என்ன?"

குன்னுடையா - "ஆத்தா! நான் நெல்லி வளந்தோங்கும் நல்லி வளநாடு. செல்வம் மிதந்துவரும் பொன்னி வளநாடு. என் ஊர் பொன்னி வளநாடு. குடியானப் பையனுங்கோ."

வீட்டுக்காரி - "ஏப்பா இந்தக் கோலத்தில் இருக்கிறாய்?"

குன்னுடையா - "ஆத்தா! நான் பிறந்து ஐந்து வயதில் தாய் தந்தையை இழந்து என்னுடைய தேசத்தையும் பங்காளிக்கு ஒப்பித்து, ஏழரை கோடித் திரவியத்தையும் ஒப்பித்து, பங்காளி வீட்டில் ஐந்து வருஷமாக எருமை மேய்த்துக் கஞ்சி வாங்கிக் குடித்தேன் தாயே."

வீட்டுக்காரி - "அடடா பாவம்! அப்பா, அதோ சொம்பில் தண்ணீர் இருக்கிறது. கை கால் கழுவிக்கொண்டு வீட்டுக்குள் வா."

அப்படியே சாமி கால், முகம் கழுவி வீட்டுக்குள் உட்கார்ந்தார். கவுண்டச்சி குண்டாவில் சாதத்தைப் போட்டுக் குழம்பை ஊற்றிப் பிசைந்து உருட்டிச் சாமி கையில் கொடுத்தாள். சாமி சாதத்தைக் கையில் வாங்கி வைத்துக் கொண்டு "ஆகா! அகிலாண்டகோடி பிரும்மாண்ட நாயகா! ஐந்து வருஷத்திற்குப் பின் எனக்கு இன்று குழம்பும் சாத(மு)ம் கிடைத்தது மாயவா!"

சாமிக்குச் சந்தோஷமாகி இடது கையில் சாதத்தை வைத்து, வலது கையில் எடுத்துச் சாப்பிடும் சமயம் வீட்டுக்காரக் கவுண்டர் மத்தியான சாப்பாட்டுக்கு வந்தார். சாமி அப்போது கதவுப் பக்கம் உட்கார்ந்திருந்தார்.

வீட்டுக்காரக்
கவுண்டர் - "ஏய், பெண்ணே! யார் உள்ளே பேசுகிறது?"

For five years, mothers, years,
I have had no rice
No rice, my Lord, no rice

Kuṉṉuṭaiyā: "Oh mother! If you give me curry and rice I will give you the bundle of firewood."

Woman: "Oh, boy! I will give you as much curry and rice as you want. Set the wood on this side of this wall and then come in by the entrance on the other side."[1]

The (little) lord put the bundle of wood down and went to that side.

Woman: "Oh boy! What town do you come from? What is your caste?"

Kuṉṉuṭaiyā: "Oh mother! I am from a land that has tall, fertile gooseberry trees, from The Country Where The Kāveri Flows. The country that is buoyed up by its wealth. I am the son of agriculturalists."

Woman: "Why, boy, are you in this condition?"

Kuṉṉuṭaiyā: "Oh, mother! My parents died when I was five years old. My clansmen took over the land and seven and a half crores of wealth. I grazed buffalos for my clansmen for five years and obtained gruel to drink."

Woman: "Oh, too bad! Oh boy! There is water in that pot. Wash your hands and come into the house."

So the (little) lord washed his feet and face and went into the house and sat down. The Kavuṇṭar woman placed rice in a large bowl and mixed curry with it and handed it to the (little) lord. The (little) lord accepted the rice bowl and set it down.

"Oh my! Oh Lord of a crore of worlds in the universe!
After five years today I have obtained curry and rice.
Oh Vishnu!"

The (little) lord became happy. While placing the rice in his left hand and then taking it with his right hand, he began to eat, the Kavuṇṭar head of the household returned for his midday meal. At that moment, the (little) lord was seated near the door.

Househead: "Oh wife! Who is that speaking inside?"

---

[1] She asks him to enter through a side entrance because she doesn't know his caste.

கவுண்டச்சி - "நாதா! பொன்னி வளநாட்டுக் குடியானப் பையனாம். விறகு கொண்டு வந்தான், ஆறு மாதத்திற்கு எரித்தாலும் மூயாது.[1] விறகுக்கு ஈடாகக் குழம்புச்சாதம் கேட்டான். கொஞ்சம் கொடுத்தனுங்கோ!"

வீட்டுக்கார - "ஓகோ! நீ வீட்டில் சும்மா இருப்பதுமில்லாமல் தடத்தில்[2] போகிறவனுக்கு விறகு வாங்கிச் சாதம் போடுகிறாயா? தோட்டத்தில் பனம்பட்டை முப்பது சுமை ஆகும். அதைக் கொண்டுவராமல் தடத்தில் போகிறவனுக்கெல்லாமல் சாதம் போடுகிறாயா?"

(பாட்டு)
எட்டி மயிர்பிடித்தான் சண்டாளன்
இட்டானே நாலடி கன்னத்திலே
பிடரிமயிர் பிடித்தான் சண்டாளன் அவன்
போட்டானே நாலடி கன்னத்திலே
ஐயோ சிவனே என்று பெண்மயிலாள்
அடித்தழுதாள் பூமியிலே பெண்மயிலாள்

கவுண்டர் மனைவியை அடித்ததைப் பார்த்துக் குன்னுடையாசாமி கையில் இருந்த சாதத்தைக் கதவுச் சந்தில் எறிந்துவிட்டு வெளியில் வந்து வடக்குத்திசை நோக்கி ஓட்டம் பிடித்தார்.

(பாட்டு)
வடக்கு நல்லோ என்சாமி திசை நோக்கி
அங்குத் திசை நோக்கி
ஓடுகிறார் குன்னுடையா ராஜதுரை
திரும்பியே பார்த்துக் கொண்டு
மூன்றுமைல் தூரத்திற்குச் சாமி தூரத்திற்கு
ஓடுகிறார் என் சாமி ஓடுகிறார்

குன்னுடையாசாமி இப்படி மூன்றுமைல் தூரத்திற்கு ஓடும்போது நடு ஊருக்குள் ரோடு போனது. அந்த ரோட்டில் வடக்குத் திசையாக ஓடினார். அப்போது அந்த ஊருக்குப் பெரியவீட்டுக் கவுண்டர் பிள்ளையார் கோவிலில் உட்கார்ந்திருந்தார். கவுண்டருக்கு வயது எண்பது இருக்கும். பூமி நூறு வள்ளம்[3] சேரும். அவருக்கு ஆண்மக்கள் இரண்டுபேர் இருக்கிறார்கள். கவுண்டருக்குப் பக்கத்தில் தலையாரி நின்று கொண்டிருந்தான். அப்போது, குன்னுடையாசாமி ரோட்டில் கோமணத்தைக் கட்டிக்கொண்டு ஓடுவதைப் பார்த்த பெரிய வீட்டுக்காரக் கவுண்டர், "அடே, தலையாரி! ஏதோ ஒரு பையன் ஓடுகிறான். அனாதிப்பையன் போல் தெரிகிறது. குடியானப் பையனாக இருந்தால் நம் பண்ணையத்தில் சேர்த்துக் கொள்ளலாம். போய்க்

---

1. தீராது 2. வழியில் 3. 3.33 ஏக்கர்

Wife: "Husband! It is an agriculturalist boy from The Country Where The Kāveri Flows. He brought wood that cannot be burnt up even in six months. In compensation I am giving him some curry and rice."

Househead: "Oh, ho! So you cannot sit still in the house! You accept wood from whoever should pass in the street and give them rice? There are 30 bundles of palmyra leaves in the fields. Instead of bringing that you feed whoever passes in the street!"

Song:

He grabbed her hair, villain!
He struck four times on the cheek
He grabbed the hair on the nape of her neck, villain!
He struck her four times on the cheek
Oh, Lord Siva, the peahen cried
The peahen fell on the ground

Seeing the wife of the Kavuṇṭar beaten, he got up from the doorway, left his rice, came outside, turned to the north and began to run.

Song:

Our (little) lord turned to the North
He looked in that direction
King Kuṉṉuṭaiyā is running
Looking behind him
Looking there
For three miles, for this distance, my God
Our (little) lord ran, he ran

After Kuṉṉuṭaiyā had run for three miles the road passed through the middle of a town. He ran northwards on this road. At that moment the Kavuṇṭar of the biggest house was seated at the Pilliar temple. He was about eighty years old. He owned one hundred vaḷḷams[1] of land. He also had two sons. The watchman was standing nearby. The Kavuṇṭar of the big house saw Kuṉṉuṭaiyā run past wearing only a G-string and loin cloth.

---

[1] About three acres and thirty three cents.

தலையாரி புறப்பட்டுப் போவதற்குள் சாமி ஒரு பர்லாங்[1] தூரம் ஓடிவிட்டார். தலையாரியும் வேகமாகச் சென்று சாமியின் அருகில் போய், "அப்பனே! யார் ஓடுகிறது, நில்லுங்கள்" என்றான்.

தலையாரி கூப்பிட்டதும் குன்னுடையாசாமி "ஐயோ!"என்று துள்ளி விழுந்து, "ஏப்பா என்னை அழைக்கிறாய்?" என்றார்.

தலையாரி - "அப்பனே, உங்களைப் பெரியவீட்டுக் கவுண்டர் கூட்டி வரச்சொன்னார், பிள்ளையார் கோவிலில் இருக்கிறார்."

குன்னுடையா -

(பாட்டு) அள்ளினேனோ திருடினேனோ சாமி
அநியாயம் நாட்டில் செய்தேனோ
அங்குச் செய்தேனோ
சாந்தணியும் மேனியெல்லாம்
அங்கு மேனியெல்லாம்
சருகுபட சாமி புரண்டழுதார்
அங்குப் புரண்டழுதார்
சாமி நல்லா அழுகுறாரே
அங்கு அழுகுறாரே
சரீரமே சாமி வாடுறாரே

தலையாரி - "சாமி! அதெல்லாம் நீங்கள் ஒன்றும் செய்யவில்லை. யார் என்று விசாரிக்கத்தான் கூட்டிவரச் சொன்னார்."

குன்னுடையா - "ஏப்பா! பெரியவீட்டுக் கவுண்டர் என்றால் எவ்வளவு பெரியதாக இருப்பார்?"

தலையாரி - "சாமி! அவரும் நம்மளைப்போல் மனிதர்தான். பயப்பட வேண்டாம் சும்மா வாருங்கள்" என்று கூட்டிவந்து கவுண்டர் முன்னால் விட்டான்.

பெரிய
கவுண்டர் - "அப்பா சிறுவா! நீ எந்த ஊர்? எந்த நாடு சொல்?"

குன்னுடையா - "சாமி! நான் குடியானப் பையனுங்கோ."

1. Furlong

Old Kavuṇṭar: "Oh watchman! Some boy or other is running there. He looks like an orphan. If he is the son of an agriculturalist we will take him into our place. Go bring him here," he said.

When the watchman set out the boy had already run a furlong's distance. The watchman ran fast to catch up. When he got close he called, "Oh boy! Who runs there? Do stop!", he said.

The watchman called.

Kuṉṉuṭaiyā: "Oh, oh! Man, have you called me?" he asked and he tripped and fell.

Watchman: "Oh, boy! The Kavuṇṭar of the biggest house has asked you to come. He is seated by the Pilliar temple."

Kuṉṉuṭaiyā's Song:

Did I take, did I steal, Lord?
Have I committed an injustice in this land?
Did I commit (such a thing) there?
The whole body that wears perfumed paste with
  meekness
The whole body there
Was covered with dried leaves when he rolled and cried
He rolled and cried there
The good Lord is crying
He is crying there
His body is wilting, my Lord!

Watchman: "Oh boy! You haven't done those things. He is only calling you to find out who you are."

Kuṉṉuṭaiyā: "Oh man. If you call him man of the biggest house how big he must be!"

Watchman: "Oh, boy. He is a man like us. Don't be afraid. Just come."

So like this he brought him to the Kavuṇṭar.

Big K.: "Oh little boy! What town are you from? Tell me what country."

Kuṉṉuṭaiyā: "Oh Lord! I am from a land that has tall, fertile gooseberry trees, from The Country Where The Kāveri Flows. My name is Kuṉṉuṭaiyā.

பெரிய
கவுண்டர் - "அப்பா! உன் தாய் தகப்பன் பெயர் என்ன?"

குன்னுடையா - "சாமி! நான் பிறந்த ஐந்து வயதில் தாய்தந்தைகள் காலமாகி விட்டார்கள். எனக்கு அவர்கள் பெயர் தெரியாது. நான் என் நாட்டையும் திரவியத்தையும் பங்காளிகளுக்குத் தத்தம் செய்து விட்டு ஐந்து வருஷமாக அவர்கள் எருமையை மேய்த்துக் கஞ்சி வாங்கிக் குடித்துக் காலம் கழித்து வந்தேனுங்கோ."

பெரிய
கவுண்டர் - "ஏப்பா, பங்காளி வீட்டை விட்டு ஏன் வந்தாய்?"

குன்னுடையா - "சாமி! எனக்கு ஐந்து வருஷமாகக் குழம்புஞ்சாத(மு)ம் கிடைக்கவில்லை என்று வந்துவிட்டேன்."

பெரிய
கவுண்டர் - "ஏப்பா! நான் உனக்குக் குழம்பும் சாதமும் எவ்வளவு வேண்டுமானாலும் போடுகிறேன், என்னிடம் இருந்து கொள்கிறாயா?"

குன்னுடையா - "அப்படியே! இருக்கிறேன் சாமி."

பெரிய
கவுண்டர் - "சரி வா! தோட்டம் போய்விட்டு அப்படியே வீட்டுக்குப் போகலாம்" என்று கூட்டிக்கொண்டு புறப்பட்டார்.

(பாட்டு) கவுண்டரும் கவுண்டரும் முன் நடக்க
சாமியும் சாமியும் பின் தொடர்ந்தார்
ஆளனும் ஆளனும் முன் நடக்க
அடியனும் அடியனும் பின் தொடர்ந்தார்

தோட்டத்தில் ஆடி மாதம் ஆனதால் ஐம்பது ஆட்கள் வேலி வெட்டிக் கொண்டிருந்தார்கள். சின்னக் கவுண்டர்கள் இரண்டுபேரும் ஏரிமேல் நின்றுகொண்டிருந்தார்கள். இவர்களில் மூத்தவரானவர் சின்னவரைப் பார்த்து, "அப்பா ராமசாமி! நம் தந்தை ஏதோ ஒரு பையனைக் கூட்டிவருகிறார்" என்று இருவரும் பார்த்துக் கொண்டிருந்தார்கள். இதற்குள் கவுண்டரும் பையனும் அருகில் வந்ததும் "ஏனுங்க ஐயா! இந்தப் பையன் எந்த ஊர்?" என்றார்கள்.

பெரிய
கவுண்டர் - "அப்பா! இந்தப் பையன் பொன்னி வளநாடு, குடியானப் பையன். சிறுவயதில் தாய்தந்தையை இழந்து, அவன் தேசத்தைப் பங்காளிகளுக்கு ஒப்பித்துப் பங்காளிகளிடம் ஐந்து வருடம் எருமை மேய்த்துக் கஞ்சி வாங்கிக் குடித்தானாம்.

Big K.: "Oh, boy! What is your caste?"

Kuṉṉuṭaiyā: "I am the son of an agriculturalist."

Big K.: "Oh, boy! What are your mother's and father's names?"

Kuṉṉuṭaiyā: "Oh, lord! My parents died when I was five years old. I don't know their names. My land and wealth went to my clansmen and for five years I herded buffalos for them and received gruel to drink. After this I left."

Big K.: "Oh, boy! Why did you leave your clansmen's house and come?"

Kuṉṉuṭaiyā: "I came because I had no curry and rice for five years."

Big K.: "I will give you as much curry and rice as you like. Will you stay with me?"

Kuṉṉuṭaiyā: "If it is like that I will stay."

Big K.: "O.K., come. We will go to the fields and then directly to the house," he said, taking him and setting off.

Song:

The Kavuṇṭar, the Kavuṇṭar, walked ahead
The (little) Lord, (little) Lord, walked behind
The master, the master, walked ahead
The servant, the servant, walked behind

It was the month of Āṭi[1] and fifty men were working there. The two sons (of the Kavuṇṭar) were standing beside the tank. The younger one looked at the elder. Then he said:

Younger son: "Oh, lord. Our father is coming and bringing some boy with him."

They watched. The Kavuṇṭar came near.

Younger son: "Oh father! What is this? What town is this boy from?"

Big K.: "Oh sons! This boy is the son of an agriculturalist from The Country Where The Kāveri Flows. His parents died when he was very young. His clansmen took his land. He grazed the clansmen's buffaloes for five years and received gruel to drink. He came thinking "I have had no curry and rice

---

[1] July - August.

ஐந்து வருடமாகக் குழம்பும் சாதமும் கிடைக்காமல், வேறு ஊரில் யாராவது குழம்பும் சாதமும் கொடுத்தால் இருக்கலாம் என்று வந்தான். அப்பா! இந்தப் பையனை நாம் பண்ணையத்தில் வைத்துக்கொள்ளலாம். ஆட்டை மேய்ப்பான், மாட்டை மேய்ப்பான், ஏதோ சொன்ன வேலையைச் செய்வான் என்று கூட்டிவந்தேன்."

பெரிய மகன் - "அய்யா! நாம் இந்தப் பையனுக்குச் சோறு போட்டுத் தீந்து[1] போவதில்லை. பையனை, "வீட்டில் போய்ச் சாப்பிட்டு வா" என்றால், வீட்டுக்குப்போனால் அம்மா சாதம் போடுவார்களா? அம்மா குணம் உங்களுக்குத் தெரியாதா? சரி கூட்டி வந்தாச்சு, மத்தியானம் சாப்பாட்டைப் போட்டு அனுப்பி விடலாம். மத்தியானம் ஆகிவிட்டது. வேலையாட்கள் சாப்பாட்டுக்குப் போகிறார்கள். நாமும் போகலாம். அய்யா! பையனைக் கூட்டிப் போங்கள், கீழபுரம் காட்டுக்குள் கன்றுகள் மேய்கின்றன. அதைத் தண்ணீரைக் காட்டி ஓட்டிவிட்டு, கன்றுகள் வடபுறம் காட்டுக்குள் போய் விடுகின்றன. இந்த அருவாளையும் கவையையும்[2] கையில் கொண்டுபோய் அந்தக் கதவையும் அடைத்துவிட்டு வாருங்கள். பின்பு நாம் சாப்பாட்டுக்குப் போகலாம்."

பெரிய கவுண்டர் - "அப்பா குன்னுடையாசாமி! நான் போய்க் கன்றுக்குத் தண்ணீர் காட்டி வருகிறேன். நீ அதற்குள் அந்தக் கதவைப் போய் அடைத்து வா. மறுபடி நாம் சாப்பாட்டுக்குப் போகலாம்"

என்று கன்றுகளை ஓட்டிப் போய்விட்டார்.

அப்போது குன்னுடைய ராஜமன்னன், கோடையிடி மணிவேந்தன் கவையையும் அருவாளையும் எடுத்துப்போய் ஜலபார்சவாக[3] நின்று,

(பாட்டு) "பாலமலை ஜோசியா, பரமகுரு தன்னாசி
ஏழை பரதேசி எம்பெருமாள் மாயவனே
நான் தெய்வ கடாக்ஷத்தில் பிறந்தது உண்மையானால்
நான் கொடுவாளில் ஒருவெட்டு வெட்டுமுன்
வடக்குவேலிக்கும் தெற்குவேலிக்கும் இருக்கும் முள்
சேர விழவேண்டும் காஞ்சிநாதா!

1. அழிந்து 2. முனை கவரான இரும்பாயுதம் 3. வடகிழக்குப் பக்கம்

for five years. I will go and stay in any town where someone will give me curry and rice." Oh sons! We will incorporate this boy in our establishment. He will graze goats. He will graze cows. He will do whatever work we ask. I have brought him (here for this)."

Elder Son: "Father! We are not going to be deprived of anything by feeding this boy. But if we send this boy to our house to eat will mother give him rice? Don't you know mother's character? Well, alright. He's already been brought here, we can send him off after giving him lunch. It's noon. The workers are going to eat. We can go too. Father! Take the boy and show him the field to the East where the calves are grazing. Tell him to watch them and then to leave them in the field to the North. Tell him to take this curved knife and forked staff, close the gate, and return. Afterwards we'll go and eat!"

Big K.: "Oh Kuṉṉuṭaiyā, boy! I'll go water the calves. You cut up the tree and come. Afterwards we'll go and eat." Saying this he left to water the calves.

Then Prince Kuṉṉuṭaiyā, the precious King, like summer thunder, lifted his forked staff and his curved knife. Looking to the northeast he saluted.

Kuṉṉuṭaiyā: "Seer of Bāla mountain. Supreme penitant!
Poor pilgrim, my Perumal, my Vishnu!"

"If it is true that I was born of God's creative power, then with one swing of the knife let all the thorn bushes to the north and to the south fall at one blow, oh Lord of Kanjeepuram!"

என்று மாயவரை நினைத்துச் சாமி வெட்டுமுன் அத்தனை முள்ளும் சேர விழுந்தது. இதையெல்லாம் தூர நின்று பார்த்துக் கொண்டிருந்த கவுண்டரின் பெரிய மகன், "தம்பி ராமசாமி! இந்தப் பையனை நாம் ஆயுள்வரை விடக்கூடாது. ஐம்பது ஆள் பதினைந்து நாளாக வெட்டியும் பாதி வெட்டவில்லை. இந்தப் பையன் கொடுவாளை எடுத்து ஓங்குமுன் வடக்கு வேலிக்கும் தெற்கு வேலிக்கும் அவ்வளவு முள்ளும் கீழே சாய்ந்துவிட்டது" என்றார். அதற்குள் பெரிய கவுண்டரும் வந்து சேர்ந்தார். அவரிடமும் நடந்ததைச் சொல்லி, "அய்யா! இந்தப் பையனை நாம் விடக்கூடாது. நம் பூமியும் இவனுக்கு ஒரு பங்கு கொடுத்துக் கல்யாணமும் செய்து வைத்துவிடலாம். சரி, எல்லோரும் சாப்பாட்டுக்குப் போகலாம் வாருங்கள்" என்று புறப்பட்டார்கள்.

வீட்டுக்குப் போனவுடன் பெரிய மகன், "அம்மா!" என்று கூப்பிட்டார். "ஏப்பா!" என்று வந்து கதவைத் திறந்தார்கள் வீட்டுக்காரக் கவுண்டச்சி. எல்லோரும் வரிசையாகச் சென்றார்கள். கடைசியில் குன்னுடையாசாமி போனார்.

கவுண்டச்சி - "அட! அது யார்? பின்னால் வரும் பையன்" என்று கேட்டுக்கொண்டே கவுண்டரைப் பார்த்து, "நீதான் கூட்டி வந்திருப்பாய்" என்று கவுண்டரைப் பார்த்து முறைத்து, "அப்பன் இரண்டுபேரும் சாப்பிட்டுவிட்டுப் போகட்டும். மறுபடி சொல்கிறேன் உன்னை"

என்று சொல்லிவிட்டுக் கோபம் தாங்காமல் தெற்குவடக்கில் நடந்துகொண்டிருந்தாள். பெரிய மகனைக் கண்டால் கவுண்டச்சிக்கு அதிக பயம்.

பெரிய மகன் - "அம்மா! சாதம் ஆகிவிட்டதா?"

கவுண்டச்சி - "அப்பா! ஆகிவிட்டது."

மகன் - "அம்மா நாங்கள் தயிருடன் சாப்பிட்டுக் கொள்கிறோம். எங்களுடைய குழம்பையும் சேர்த்து அந்தப் பையனுக்கு வயிறு நிறைய சாதம்போடு அம்மா. உனக்கு இரண்டு பையன் அல்ல. இந்தப் பையனையும் சேர்த்து மூன்று பையனாக நினைத்துக் கொள். ஐம்பது ஆள் பதினைந்து நாளாகக் கூடி வெட்டியும் முடியாத வேலியை இந்தப் பையன் கொடுவாளை ஓங்குமுன் அறுபது வள்ளக்காட்டு[1] முள்ளும் சேரக் கீழே சாய்ந்து விட்டது. ஆகையால் இந்தப் பையனுக்கு நம் பூமியில் ஒரு பங்கும் கொடுத்துக் கல்யாணம் செய்து வைத்து விடலாம்

1. 2 ஏக்கர்

He thought of God with these words, and a huge bunch of thorn bushes fell down together! The elder son of the Kavuṇṭar saw all of this from a distance.

Elder B.: "Oh younger brother! We must not give this boy shepherd's work. Fifty men working for fifteen days would not cut half as much. Before this boy even swung his knife (see how) many thorn bushes to the north and to the south fell to the earth!"[1]

Before he could finish the big Kavuṇṭar (the father) arrived. They told him what had taken place.

Sons: "Father! We must not let this boy go. We will give him a share of the land, and get him married. O.K., we will all go to eat. Let's go!", they said and started off.

As soon as they reached the house the elder son called, "Mother?"

Wife: "What is it, son?" called the Kavuṇṭar wife. She came and opened the door. They all walked in a line. Kuṉṉuṭaiyā walked at the end.

Wife: "Oh my! Who is that?", she said and looked at the boy on the end. Then looking at the Kavuṇṭar she said, "So you[2] must have brought him. First let the two boys finish eating (and leave) and then I will tell you."

The Kavuṇṭar looked (at her) and ordered, "First let us see you feed the two boys. Then I will tell you." She began to pace up and down (walk south and north) not being able to stand her anger. The wife was frightened of her elder son.

Elder S. "Mother! Is the rice ready?"

Wife: "Son. It is ready."

Son: "Mother. We will eat curds with our rice. Take our curry, give it to the boy with lots of rice. Oh mother! You no longer have two sons. Join this boy with us and imagine that you have three! Fifty men working for fifteen days could not cut the thorns that fell to the earth before this boy even raised his knife! All the thorns of a sixty vaḷḷam field[3] have

---

[1] Thorn bushes are used as field fencing. They are periodically trimmed to yield firewood, but it is normally very hard work to cut them.[2] She addresses him with "nī", a disrespectful for a wife to use in speaking to her husband. [3] About two acres.

என்று முடிவு செய்துவிட்டேன்" என்று சொல்லிவிட்டு "பையனுக்குச் சாதம் போடு" என்றார்கள்.

கவுண்டச்சி - "அப்பா! நான் சாதம் போடுகிறேன். நீங்கள் போய்க் குளித்துக்கொண்டு வாருங்கள்."

அப்படியே மகன்(கள்) இருவரும் குளிக்கப் போனார்கள். பெரிய மகன் குளித்துக்கொண்டே சந்தேகப்பட்டு ஜன்னலில் எட்டிப் பார்த்துக் கொண்டிருந்தார். மகன் குளிக்கப் போய்விட்டான் என்று கவுண்டச்சி, "வர்டா குறவா!"என்று சாமியைக் காதைப் பிடித்துத் திருகிக் கூட்டிக்கொண்டு போய்ச் சுற்றுத் திண்ணையில் வைத்து ஏழு நாளுக்கு முன் காய்ச்சிய ராகிக் கூழைக் கரைத்து டம்ளரில் ஊற்றி "குடியடா!" என்று அதட்டினாள். இதைப் பார்த்த பெரியமகன் பாதி குளித்தும் குளிக்காமலும் மதில் சுவரைத் தாண்டிவந்து, "நான் என்ன சொன்னேன், நீ என்ன செய்கிறாய்?" என்று

(பாட்டு) எட்டி மயிர்பிடித்தான் சண்டாளன்
அவன் இட்டானே நாலடி தாயாரை
பிடரிமயிர் பிடித்தான் சண்டாளன்
அவன் போட்டானே நாலடி கன்னத்திலே
ஐயோ சிவனே என்று தாயாரும்
ஆளுயரம் குதிக்குறாளே பெண்மயிலாள்

"சண்டாளி! சதிகாரி" என்று தாயாரை அடிப்பதைக் குன்னுடையாசாமி அண்ணாந்து பார்த்து, "இனி அவளை விட்டுவிட்டு நம்மளை அடித்து விடுவான்" என்று பயந்து டம்ளரை உருட்டி விட்டுவிட்டு,

(பாட்டு) வடக்கு நல்ல என்சாமி திசைநோக்கி
அங்குத் திசைநோக்கி
ஓடுறாரே குன்னுடையா ராஜதுரை
அங்கு ராஜதுரை
திரும்பி நல்ல பார்த்துக்கொண்டு
அங்குப் பார்த்துக்கொண்டு
வடக்கு நோக்கி என்சாமி ஓடுறாரே
சாமி அங்கு ஓடுறாரே
மூன்று மைல் சாமி தூரத்துக்கு
அங்குத் தூரத்துக்கு
நிற்காமல் ஓடுறாரே
ராஜன் ஓடுறாரே

இப்படி மூன்று மைல் ஓடியபிறகு நின்று திரும்பிப் பார்த்து ஒருவரும் துரத்தி வரவில்லை என்று,

been trimmed! Therefore we have decided to give this boy a share of the land, marry him and let him be."

Saying this he told his mother to give the boy rice.

Wife: "Son, I will serve the rice. You go bathe and come back."

So the two sons left to bathe. Having bathed the elder son became doubtful and peered in through a window. Thinking her sons had gone to bathe the Kavuṇṭar wife said, "Come here, you gypsy!" Then she grabbed the (little) lord's ear, took him to an outer porch and poured some seven day old, hardened millet porridge for him.

Wife: "Drink, boy!", she ordered.

Seeing this, the elder son, having only half finished bathing, jumped over the middle of the (house) wall.

Elder S.: "What did I say? And what have you done?", he asked.

Song:

He grabbed the hair, villain!
He struck the mother four times
He grabbed the hair on the nape of her neck, villain!
He struck her four times on the cheek

"Oh, Lord Siva," cried the mother

The peahen jumped the height of a man.

"Villain, liar," thought Kuṉṉuṭaiyā, as he saw this beating of a mother. "Next he will leave her and beat me," he thought, and frightened, he tipped over his tumbler.

Song:

Our (little) lord looked northward
He looked in that direction
King Kuṉṉuṭaiyā is running
The gentle King
Looking carefully behind him
Looking there
Looking northward our (little) lord is running
The Lord is running there
For three miles distance,
That distance
Running without stopping
The King is running

After running three miles he stopped and looked behind him and saw that no one was following.

"அகிலாண்ட கோடி பிரம்மாண்ட நாயகா!
சங்கு சக்கர வைகுந்த வாசகா!
ஆபத்பாந்தவா, அனாதை ரட்சகா!
ஆயிரம் நாமம் பெற்ற சாமி பரந்தாமா!"

என்று மாயவரை நினைத்து வடக்குத் திரும்பிப் பார்த்தார். பக்கத்தில் ஒரு நாடு தெரிந்தது. அது வாளவந்தி நாடு என்பதாகும். அந்த நாட்டை நோக்கிச் சாமி போனார்.

(பாட்டு) ஏழடுக்கு திருக்கலசம்
எழிலாகத் தெரியுதுபார்
ஐந்தடுக்கு திருக்கலசம்
அழகாகத் தெரியுது பார்
சுற்றிலும் தென்னைமரம்
அதைச்சுற்றி வாழைமரம்
மாமரமும் பூமரமும்
மலர்ந்து இருப்பதைப் பார்
மல்லிகை முல்லை ரோஜா
மலர்ந்து இருப்பதைப் பார்
அதோ தெரியுது பார் அரசன் அரண்மனை
அதோ தெரியுது பார் அரண்மனை

அப்போது குன்னுடையாசாமி பார்த்து, "அரசன் அரண்மனை தெரிகிறது. இங்கு நாம் போகும்போது யாராவது தடுப்பார்களோ என்னவோ" என்று பயந்து பயந்து வடக்கு நோக்கி வீதியில் போனான்.

வாளவந்தி நாட்டைக் குன்னுடையாசாமி தாய்மாமன் மக்கள் மரிக்கொளுந்தாக் கவுண்டர், சிவக்கொளுந்தாக் கவுண்டர் இருவரும் ஆண்டு வந்தார்கள். குன்னுடையாசாமி வடக்கு நோக்கிப் போகும்போது அரசர்கள் இரண்டுபேரும் கருட தரிசனத்துக்குப் பிள்ளையார் கோவிலில் உட்கார்ந்திருந்தார்கள். இரண்டு சேவகர்கள் பக்கத்தில் நின்றார்கள். அந்தச் சமயம் சாமி பிள்ளையார் கோவில் எதிர்புறம் வேகமாக வடக்கு நோக்கி ஓடினார். ஓடுவதை அரசர்கள் பார்த்து, "அடே சேவகா! ஏதோ ஒரு பையன் ஓடுவதைப் பார். அந்தப் பையனைப் போய்க் கூட்டிவா" என்றார்கள். அப்படியே சேவகனும் சாமியைப் பின்துடர்ந்து[1] ஓடினான். அதற்குள் சாமி ஒரு பர்லாங்கு தூரம் ஓடிவிட்டார். சேவகன் ஓடிப் பக்கத்தில் சென்று, "யார் சாமி ஓடுறது? நில்லுங்கள்" என்றான். அதைக் கேட்ட சாமி திரும்பிப் பார்த்தார்.

1. தொடர்ந்து

"Oh Lord of a crore of worlds in the universe
He who holds a conch and a discus and lives in
Vaikunta
Rescuer of people in trouble, orphan-saver
The Lord who has a thousand names, Parantāmā!

Thinking in this way of Vishnu, he looked northward. Another country could be seen. It was the country called Vāḷavanti. Looking at it, the (little) lord approached.

Song: See the seven sacred decorative pots looking beautiful
See the five sacred decorative pots looking beautiful
Surrounded by coconut trees. Around these are
plantain trees
See the mango trees and flowering bushes bloom
See the Arabian jasmine and roses bloom
Behold the King's palace, there
Behold the palace there

Then as he looked he saw the King's palace. "If I go here, someone is sure to stop me," he thought. And frightened he turned and took the road to the north. In The Country called Vāḷavanti Kuṉṉuṭaiyā's maternal uncle's people, Marikkoḷuntā Kavuṇṭar and Civakkoḷuntā Kavuṇṭar reigned. While Kuṉṉuṭaiyā walked northward the two kings were seated at the Pilliar temple in order to view Vishnu's Garuda bird.[1] Two servants stood nearby. At that moment the (little) lord ran northward right across the front of the temple. The kings saw the runner.

Kings: "Oh servant! Go see who that running boy is. Go bring him here," they said. So the servants ran after the boy. By this time the boy had travelled a furlong's distance. The servants ran up to him.

Servants: "Oh, who is the Lord running there? Do stop," they said.

Hearing this the (little) lord looked around.

[1] A white-necked eagle, the mount of Lord Vishnu.

சேவகன் - "எங்களுடைய அரசர் கூட்டிவரச் சொன்னார்" என்றான்.

குன்னுடையா - (பாட்டு)

நான் அள்ளினனோ திருடினனோ
நாட்டில் அநியாயம் செய்தேனோ
சாந்தணையும் மேனியெல்லாம்
அங்கு மேனியெல்லாம்
சருகுபட பூமியிலே புரண்டழுதார்
அங்குப் புரண்டழுதார்
புனுகணியும் மேனியெல்லாம்
அங்கு மேனியெல்லாம்
புழுதிபட தரையிலே புரண்டழுதார்
அங்குப் புரண்டழுதார்

அப்பா! எதற்காக என்னை அழைக்கிறாய்? நான் என்ன குற்றம் செய்தேன்?

சேவகன் - "சாமி! நீங்கள் ஒன்றும் செய்யவில்லை. சும்மா யார் என்று விசாரிக்கத்தான் கூட்டிவரச் சொன்னார். வாருங்கள் போகலாம்"

என்று பிள்ளையார் கோவிலுக்குக் கூட்டிவந்தான் சேவகன்.

குன்னுடையாசாமி அரசரைக் கண்டதும் கை கட்டி வாய் பொத்தி நின்றார்.

அரசர் - "அப்பா! உன்னுடைய நாடு எது? எந்த ஊர்?"

குன்னுடையா - "சாமி! நான்,

(பாட்டு)

பொன்னி வளநாடு புகழ் பெரிய கோனாடு
நெல்லி வளநாடு நிகர் சூழ்ந்த பட்டணமே
ஆனாடு கோனாடு அழகு பொன்னி வளநாடு
சிறுக்காம் புலியூர்[1] சின்னப் பொன்னி வளநாடு
ஆனை கட்டித் தாம்பாடும்
அழகு பொன்னி வளநாடு
மண் போட்டுப் பொன் விளையும்
மகுட பொன்னி வளநாடு"

அரசர் - "அடேயப்பா! பையன் சிறியதாக இருந்தாலும் பேச்சு மணியாகப் பேசுகிறான். அப்பா, உன்னுடைய குலமென்ன?"

1. இது சிலுக்காம்புலியூர் என முன்னர்க் குறிப்பிடப்பட்டுள்ளது

Servants: "Our king has ordered us to bring you (to him)," they said.

Kuṉṉuṭaiyā's Song:
Have I taken, have I stolen?
Have I committed a mistake in this land?
Have I?
The whole body that wears perfumed paste,
the whole body there
Was covered with dry leaves when he rolled on the ground and cried
He rolled and cried there
The whole body that wears musk, the whole body there
Was covered with dust, when he rolled on the earth
He rolled on the earth and cried there

Kuṉṉuṭaiyā: "Man, why have you[1] called me? What mistake have I committed?"

Servant: "Lord. You have done nothing. He simply said to bring you because he wants to know who you are. Come, let's go!", he said, taking him towards the Pilliar temple.

When Kuṉṉuṭaiyā saw the King he became frightened. He bent his arm and covered his mouth.

King: "Oh, boy! What is your country? What town?"

Kuṉṉuṭaiyā:
Lord. I am (from)
The Country Where The Kāveri Flows, the land of famous kings
The land of gooseberry trees,
The land of titled royalty
The land of brave males, the land with a king, the beautiful
Country Where The Kāveri Flows
The country (that contains the town) of
Cilukkāmpuliyūr in its lesser division
The country where the threshing is done with elephants
The country where gold springs from the earth
The Famous Country Where The Kāveri Flows

King: "Oh, boy! Even if you are small you speak like a grown man. Oh boy! What is your caste?"

---

[1] He uses the impolite form here (nī) because he is addressing a servant, even though his man is certainly much older than Kuṉṉuṭaiyā in term of age.

குன்னுடையா - "சாமி! நான் குடியானப் பையனுங்கோ."

அரசர் - "உன் தாய் தகப்பன் பெயர் என்ன?"

குன்னுடையா - "சாமி! நான் பிறந்து ஐந்து வயதில் தாய் தகப்பனை இழந்து, என்னுடைய நாட்டையும் பங்காளிக்கு ஒப்பித்துவிட்டு ஐந்து வருடம் பங்காளி வீட்டில் கஞ்சி வாங்கிக் குடித்துக் காலம் கழித்தேன். சிறு வயதில் தாய் தகப்பன் காலம் சென்றதால் எனக்கு அவர்கள் பெயர் தெரியாது."

அரசர் - "சரி! வடக்கே எந்த ஊருக்குப் போகிறாய்?"

குன்னுடையா - "சாமி! நான் எந்த ஊர் போகிறேன் என்று எனக்கே தெரியாது. ஐந்து வருடமாக எனக்குக் குழம்பும் சாதமும் கிடைக்கவில்லை. யாராவது குழம்பும் சாதமும் போட்டால் இருக்கலாமென்று போகிறேன் ராஜாவே."

அரசர் - "அடடா! ஐந்து வருடமாகச் சண்டாளர்கள் உனக்குக் குழம்பும் சாதமும் போடவில்லையா?"

குன்னுடையா - "ஆம் சாமி கிடைக்கவில்லை."

அரசர் - "சரி! நம் வீட்டில் வந்து இருந்துகொள். உனக்கு எப்போதும் குழம்பும் சாதமும் கிடைக்கும்."

குன்னுடையா - "இருந்துகொள்கிறேன் அரசே!"

அரசர் - "உன் பெயர் என்னப்பா?"

குன்னுடையா - "சாமி! என் பெயர் குன்னுடையாக் கவுண்டன்."

அரசர் - "சரி வா! அரண்மனைக்குப் போகலாம்."

குன்னுடையா - "அரசே! நான் வரும்போது இப்படித்தான் குழம்பும் சாதமும் ஒரு ஊரில் கொடுத்தார்கள். அவர்கள் வீட்டில் கவுண்டர் வந்து, "அந்தப் பையனுக்கு எதற்குச் சாதம் போட்டாய்" என்று மனைவியைப் பிடித்து அடித்தார். அதைப் பார்த்து நான் சாதத்தை எறிந்துவிட்டு வடக்குத் திசையாக ஓட்டம் பிடித்து ஓடிவரும்போது மறுபடியும் ஒரு ஊரில் அதேமாதிரி என்னை ஒரு பெரியகவுண்டர் சாதம் போடுவதாக வீட்டுக்குக் கூட்டிப்போனார். அவர் மனைவி வீட்டில் இருந்தார்கள். கவுண்டருடைய பெரிய மகன், "அம்மா இந்தப் பையனுக்குச் சாதம் போடு" என்று சொல்லிவிட்டுக் குளிக்கப் போய் விட்டார். அவர் போனதும் கவுண்டச்சி ராகிக்கூழைக் கரைத்து டம்ளரில் ஊற்றிக் குடிக்கச் சொல்லி என்னை மிரட்டினாள். இதைக் கண்ட மகன் ஓடிவந்து, "நான் என்ன

Kuṉṉuṭaiyā: "Lord. I am the son of an agriculturalist."

King: "What were the names of your mother and father?"

Kuṉṉuṭaiyā: "My parents died when I was five years old. My clansmen took my country and for five years I drank gruel at their hands. Because I was very young when my parents died I don't know their names."

King: "O.K. What town are you headed to in the North?"

Kuṉṉuṭaiyā: "Lord. I don't know what town I am going to. I haven't had curry and rice for five years. I will stay with whomever will feed me curry and rice, oh King!"

King: "Oh, so! For five years the villains didn't feed you curry and rice?"

Kuṉṉuṭaiyā: "Yes, Lord! (I) have not received any."

King: "O.K. Come and stay in our house. You will always get curry and rice."

Kuṉṉuṭaiyā: "If it is so I will come, King!"

King: "What is your name?"

Kuṉṉuṭaiyā: "Lord, my name is Kuṉṉuṭaiyā Kavuṇṭar."

King: "O.K., come! Let's go to the palace."

Kuṉṉuṭaiyā: "King! On my way I was given curry and rice like this in one village. Then the Kavuṇṭar came home and said 'Why did you feed that boy rice?' And he took his wife and beat her. Seeing that I got up, left the rice, and began to run towards the north. Again, in another town, a big Kavuṇṭar took me home to feed me rice. His wife was at home. Her eldest son said 'Mother, give this boy rice' and left to bathe. When he had left the wife took millet gruel, and put it in a tumbler. With a frightening manner (she) ordered (me) to drink it. Seeing this (her) son came running, saying 'What did I say? And what did you do?' He took his mother and

சொன்னேன், நீ என்ன செய்கிறாய்" என்று தன் தாயாரைப் பிடித்து அடித்தார். அதைப் பார்த்து நான் பயந்து டம்ளரை எறிந்துவிட்டு வடக்கு நோக்கி ஓடிவந்தேன். தங்களிடம் வந்து சேர்ந்தேன். அரசே! நான்,

(பாட்டு) பட்டேன் ஒருகோடி
பாடுபட்டேன் முக்கோடி
சாமி நான் இட்டேன் ஒருகோடி
இடிபட்டேன் முக்கோடி

அரசே! தங்கள் வீட்டிலும் அப்படி ஏதாவது நடக்குமா சாமி?"

அரசர் - "அப்பா! பெண்டுகள் பேச்சை நம்மிடம் பேசாதே."

அவர்கள் அரண்மனைக்கு வந்து சேர்ந்தார்கள்.

(பாட்டு) ஆரடி மாதர்களே மாதர்களே
அலமேலும் செங்கமலம் செங்கமலம்
மூப்பி கருப்பிகளே கருப்பிகளே அங்கு
முதலான செங்கமலம் வாடியிங்கே

அரசர் - "ஏண்டி செங்கமலம்! வெந்நீர்[1] காய்ந்துவிட்டதா?"

செங்கமலம் - "சாமி! காய்ந்துவிட்டது."

அரசர் - "சரி! இந்தப் பையனைக் கூட்டிப்போய்க் குளிக்கச் சொல்!"

சாமி குளித்து முடிந்தவுடன் ஆடை ஆபரணங்கள் கொண்டு வந்து கொடுத்தார்கள். சாமி எல்லாம் முடிந்ததும் வெளியில் வந்தார்.

(பாட்டு) சூரியனைப்போலே அங்குத்
துலங்குறார் சாமியங்கே
சந்திரனைப்போலே அங்கு
விளங்குறார் சாமியங்கே
இந்திரனைப் போலே அங்கு
துலங்குறார் சாமியங்கே

அரசர் குன்னுடையாசாமியைப் பார்த்து, "அடடா என்ன அழகு! என்ன வடிவம்! மன்மதனைப்போல் இருக்கிறான். அடி மாதர்களே! பையனைக் கூட்டிப்போய்க் குழம்புடன் சாதம் வேண்டும்வரை போடுங்கள்" என்றார்.

மாதர்கள் சாமியைக் கூட்டிப்போய் அவர் இஷ்டப்படிச் சாப்பாடு போட்டார்கள். சாப்பிட்டுவிட்டு ரேணுகப்பட்டசாலை வந்து அரசர் முன் நின்றார்.

---

1. சுடுநீர்

beat her. Seeing this I got up, left the tumbler and began to run to the north, (now) I have arrived at your place. Oh raja, I have;

Oh King! I have experienced a crore (of sufferings)
I have experienced three crores (of sufferings)
I have been beaten a crore of times
I have been beaten three crores (of times)

Will this happen even in your house?", he enquired with fear.

King: "Don't use woman's speech with me!"

They walked to the palace.

Song: Oh women, women, who is there?
Oh Alamēlu, Ceṅkamalam, Ceṅkamalam
Oh Mūppi, Karuppi, all of you
Oh head (maid) Ceṅkamalam. Come here!

King: "Oh Ceṅkamalam! Is the water heated?"

Servant: "Lord. It is heated."

King: "Good. Take this boy and tell him to bathe."

As soon as he finished bathing they brought him clean clothes and ornaments. After finishing this the (little) Lord went outside.

Song: He shined like the sun itself, there
The Lord who was there
He was full, like the moon, there
The Lord who was there
He was like Indra, there
He shined, the Lord who was there

The King looked at Kuṉṉuṭaiyā.

King: "Oh, ho! What beauty! What a shape!
He is like Manmatan himself,[1] oh women!
Take this boy, lay a banana leaf and feed him curry and rice."

The women took him and fed him as much as he wanted. After eating the King went and stood in front of the courtyard where the public assembles.

---

[1]Manmatan (kâma) is the god of love. He is very similar to Cupid. His name is spelled Manmatha in Sanskrit.

அரசர் - "குன்னுடையாக் கவுண்டா! குழம்புடன் சாதம் நிறைய போட்டார்களா?"

குன்னுடையா - "ஆம் அரசே! போட்டார்கள்."

அரசர் - "நல்லது! அடி குப்பி! ஜமுக்காளம் தலையணையும் எடுத்து வந்து விரித்துப் போடுங்கள். குன்னுடையாக் கவுண்டா சாயங்காலம் வரை நன்றாகப் படுத்துத் தூங்கு" என்று சொல்லிவிட்டு அரசர் சாப்பிடப் போய்விட்டார்.

(பாட்டு)

இந்தப் பிரகாரம் நடக்குது அதிகாரம்
நாளொரு நாள் பொழுதொரு நாள் அங்கு
நடக்குது பார் நல்பருவம்

குன்னுடையாக் கவுண்டன் இப்படி இருக்கும்போது பரந்தாமன், பூபாலகன் பண்டரீபரிநாதன் குன்னுடையாக் கவுண்டன் நித்திரை செய்வதைப் பார்த்து, "ஆகா! குன்னுடையாக் கவுண்டனுக்குக் கடந்த பத்து வருஷமாக இருந்த கிரகம் இன்றுதான் விலகியிருக்கிறது. பிறந்த இடத்தில் ஐந்து வருஷம், பங்காளி வீட்டில் ஐந்து வருஷம் ஆகப் பத்து வருஷம் முடிந்துவிட்டது. இன்று வாளவந்தி நாட்டில் வந்து தாய்மாமன் வீட்டில் நன்றாகச் சாப்பிட்டு நித்திரை செய்கிறான். இப்போது சரியாகப் பத்து வருஷம் முடிந்தது. இன்னும் இருபது வருஷம் அங்கு இருக்கட்டும். முப்பது வருஷம் ஆனவுடன் திருமணம் செய்துவிடலாம். அதன்மேல் நடப்பதைப் பார்க்கலாம்" என்று நினைத்துப் பரந்தாமன் ஓலைப்பூக் காடு சென்றார்.

குன்னுடையாசாமி நித்திரை தெளிந்து எழுந்தார்.

அரசர் - "குன்னுடையாக் கவுண்டா! ஊருக்கு வடக்கில் நத்தக் காட்டுத் தோட்டம் இருக்கிறது. போய்விட்டு வரலாமா?"

குன்னுடையா - "சாமி! நல்லதுங்கோ."

(பாட்டு)

அரசனும் முன் நடக்க அங்கு முன் நடக்க
சாமியும் பின் நடந்தார் பின் நடந்தார்
ராஜனும் முன் நடக்க முன் நடக்க
மணி வேந்தன் பின் துடர்ந்தார் பின் துடர்ந்தார்
நத்தக் காட்டுப் பட்டி[1] தேடிப் பட்டிதேடி
வருகிறார்கள் அரசரும் சாமியுந்தான்

1 கால்நடைக் கொட்டில்

King: "Kunnuṭaiyā Kavuṇṭar! Did they feed you lots of curry and rice?"

Kunnuṭaiyā: "Yes, King! They gave (me) a lot."

King: "Good. Oh, Kuppi.[1] Bring a fine carpet and a pillow. Kunnuṭaiyā Kavuṇṭar! (You) sleep until evening." Saying this he left to eat.

Song:
So the monarch ruled thus
Day after day, time followed time, there
See the good age in progress

While Kunnuṭaiyā was there, Vishnu, Parantāmā, the ruler of the earth, Lord of Paṇṭaripuram, saw Kunnuṭaiyā resting.

Vishnu: "Oh ho! Today, at ten years, at last, Kunnuṭaiyā's life is different. He spent five years at the place of his birth. And five years in the place of his clansmen, making ten years altogether. Now he has come to his mother's brother's place, The Country Called Vāḷavanti, where he has eaten well and is resting. Ten years are now over. Let him be there twenty more years. As soon as he reaches thirty he will be married. We will see what happens after that," Vishnu thought. (Then) he left for the forest of palm leaf flowers.

Kunnuṭaiyā finished his rest and got up.

King: "Kunnuṭaiyā Kavuṇṭar! Shall we go together to the garden called Nattakkāṭu north of here?"

Kunnuṭaiyā: "Lord! That's good."

Song:
The King walked ahead, he walked ahead there
The (little) lord walked behind, he walked behind
The King walked ahead, he walked ahead
The jewel-like King walked behind, walked behind
Looking for the cattlefold of Nattakkāṭu, looking for
the cattlefold
They are approaching, the King and the (little) Lord

As they walked the King said:

---

[1] A name for a servant.

போகும் வழியில் அரசர், "குன்னுடையாக் கவுண்டா! என்னை நீ சாமி சாமி என்று கூப்பிட வேண்டாம். என்னைக்கண்டு கை கட்டி வாய் புதைக்க வேண்டாம். கேவலம், சும்மா சாதாரணமாக என்னைக் கூப்பிட்டால் போதும்" என்று பேசிக்கொண்டு பட்டியின் பக்கம் சென்றார்கள்.

அரசர் - "இதோ! இதுதான் நம்ம பட்டி. குன்னுடையாக் கவுண்டா! நமக்கு ஆடு, மாடு அதிகம் பெருகவில்லை. இன்றுமுதல் உனக்கு வேலை என்னவென்றால் மாலை இரண்டு மாடுகள், பத்து ஆடுகள் மேய்ந்து பட்டிக்கு வரும். வந்தவுடன் ஆடுகளைப் பட்டியில் ஓட்டிவிட்டு இரண்டு மாட்டையும் பால் கறந்து அரண்மனைக்கு வந்து வென்னீர் அண்டாவுக்குத் தண்ணீர் இறைத்து ஊற்றிவிட்டு என் தங்கை பருவதியாத் தாமரைக்குத் திருவினித்தூரி[1] ஆடிக்கொண்டிருக்கும், அதை இரண்டு தரம் திருப்பிவிட்டுச் சாப்பிட்டுவிட்டு நாய்க்குச் சோறு எடுத்துக் கொண்டு ராத்திரி படுக்கைக்குப் பட்டிக்கு வந்துவிடவேண்டும். இதன்படி நீ தினசரி நடந்து கொள்ள வேண்டும்" என்று சொல்லிவிட்டு அரசர் வீட்டுக்கு வந்தார். முறைப்படி அரசர் சொல்லிய பிரகாரம் சாமி பாலைக் கறந்து கொண்டு வீட்டுக்கு வந்தார். அங்கு வென்னீர் அண்டாவுக்குத் தண்ணீர் ஊற்றி விட்டுத் தாமரைக்குத் தூரி ஆட்டிவிடப் போனார்.

(பாட்டு)
ஆடுது அண்ணலூஞ்சல் பத்தினிக்கு
அசைந்து வரும் பெண்பதுமை பருவதிக்கு
ஓடுது அண்ணலூஞ்சல் பருவதிக்கு
ஓவஞ்சுவரும்[2] பெண்பதுமை பத்தினிக்குப்
பாடுது அண்ணலூஞ்சல் பத்தினிக்குப்
பறந்து வரும் பெண்சூச்சம் பருவதிக்கு
அண்ணலூஞ்சல் தொட்டிலிலே பருவதியா
அயர்ந்து நித்திரை செய்யுறாளே பத்தினியா

குன்னுடையாசாமி தூரி ஆட்டிவிட்டு வந்து அரசர்முன் நின்றார். "அரசே! இந்த ஊஞ்சலில் ஆடும் ராஜகுமாரி தங்களுடைய தங்கையா?" என்றார்.

அரசர் - "ஆமாம் குன்னுடையாக் கவுண்டா! என் தாயார் பெண் குழந்தையில்லை என்று தாமரைத் தடாகம் சென்று பன்னிரண்டு வருஷம் தவமிருந்தார்கள். அதை ஈசுவரனும் ஈசுவரியும் பார்த்துவிட்டுப் பூலோகம் வந்தார்கள். வந்து,

1. அழகிய ஊஞ்சல் 2. மெதுவாக அசைந்து

King: "Kuṉṉuṭaiyā Kavuṇṭar! You must not address me as 'Lord, Lord'. Upon seeing me you must not bend your arm and cover your mouth. Be simple. If you address me in an ordinary manner it is enough."

As they spoke they approached the cattle fold.

King: "This! This is our cattlefold, Kuṉṉuṭaiyā. Our cattle and goats have not multiplied very much. From today, your work will be to graze the two cows and ten goats, and in the evening, when they return, put the goats in the cattlefold. Then milk (our) two cows and come to the palace. Draw water and fill the vessel for heating bath water. There the swing of my younger sister will be swinging. You must push it twice. Then eat and take the (leftover) rice to the dog. Go (with it) to the cattlefold at night, to sleep. You are to do these things each day.

Having said this the King left for home. The (little) Lord did as the King said. He did the milking and went to the house, filled the big vessel with water and swung Tāmarai on the swing.

Song:
The great swing is swinging for the chaste girl
For Parvati, who is like a gold sculpture,
who sways as she walks
The great swing is rocking for Parvati
For the chaste girl who is like a female sculpture,
who sways as she walks
The great swing is swinging for the chaste girl
For Parvati, who is like a tender garland,
who walks as if she floats (on air)
In the great swing Parvati
The chaste girl is sleeping deeply

When Kuṉṉuṭaiyā had finished swinging the swing he came and stood in front of the King.

Kuṉṉuṭaiyā: "King! Is the princess in the swing your younger sister?"

King: "Yes, Kuṉṉuṭaiyā Kavuṇṭar! My mother, thinking that she had no daughter, went to a lotus pond and performed penance there for twelve years. Siva and Parvati came to earth and seeing this (spoke as follows):

ஈசுவரி - "சுவாமி! இந்தப் பெண் பன்னிரண்டு வருஷமாகத் தவமிருக்கிறாளே. என்ன வேண்டுமென்று தவம் செய்கிறாள் சுவாமி?"

ஈசுவரன் - "பெண்ணே! அவள் பெண்குழந்தை வேண்டுமென்று தவம் செய்கிறாள்."

ஈசுவரி - "சுவாமி! அந்தப் பெண்ணுக்கு ஏன் வரம் கொடுக்கவில்லை? கொடுத்து விடுங்கள் பாவம்."

ஈசுவரன் - "பார்வதி! வந்த பக்கமெல்லாம் வரம் கொடுக்க வேண்டுமா?"

ஈசுவரி - "சுவாமி! தவத்தைக் கண்ணில் பார்த்துவிட்டோம். அதனால் வரம் கொடுத்தால் நல்லது."

ஈசுவரன் - "பார்வதி! மத்தியான நேரத்தில் எந்த மிருகம் காதல் விளையாட்டு விளையாடும்?"

ஈசுவரி - "சுவாமி மான்தான் இந்த நேரத்தில் காதல் செய்யும்."

ஈசுவரன் - "சரி! நீ பெண்மானாக வடிவம் கொள். நான் ஆண் மானாக வடிவெடுக்கிறேன். இருவரும் விளையாடுவோம்."

அதன்படி மானாக வடிவெடுத்து இருவரும் விளையாடும்போது, ஈசுவரன் இந்திரியம் கனிந்து தடாகத்தில் தாமரை இலையில் போய் விழுந்தது. உடனே அது பெண் குழந்தையாக உருவெடுத்தது. கூவென்று அழுதது. அந்தச் சத்தம் கேட்டு என் தாயார் கண்ணைத் திறந்து பார்த்து ஈசுவரன், ஈசுவரி அருகில் நிற்பதைப் பார்த்து, "சாமி! ஏதோ பெண் குழந்தை அழுகிற சப்தம் கேட்கிறது. யார் குழந்தை சுவாமி?" என்றார்.

ஈசுவரி - "அம்மா! உன் குழந்தைதான். எடுத்துப்போய் வளர்க்கவும்"

பிறகு என் தாயார் குழந்தையை எடுத்துக்கொண்டு வீட்டுக்கு வந்தார்கள். இதுதான் தாமரையின் வரலாறு. நம் உடன் பிறந்தவளும் அவள்தான். பெயர் தாமரை."

குன்னுடையா - "அரசே! சந்தோசம்."

இப்படியிருக்கும் காலத்தில்

(பாட்டு) செங்கோல் அதிகாரம் இனி அதிகாரம்
செலுத்திப் பட்டம் ஆளுகிறார் அங்கு ஆளுகிறார்
தங்கவிரல் அதிகாரம் இனி அதிகாரம்
தனிச்சுப் பட்டம் ஆளுகிறார் இனி ஆளுகிறார்
மாத மூன்று மழை பெயும் அங்கு மழை பெயும்
வருஷமொரு கல்மாரி அங்குக் கல்மாரி

Parvati: "Lord. Has this woman done penance for twelve years? What does she want that she is doing penance like this?"

Siva: "Oh wife! She is doing penance because she wants a daughter."

Parvati: "Lord! Why haven't you given this woman a boon? It's a pity! Do give her one?"

Siva: "Parvati! Do you want me to give boons everywhere I go?"

Parvati: "Lord. We have looked in the eyes of the penitant. Therefore it's best if we grant (her) a boon."

Siva: "Parvati! What animal form shall we take to make love (now), at midday?"

"O.K. You take the form of a doe and I will take the form of a stag and we will play together."

While they took the form of deer and played, Siva's semen came forth and fell on a lotus leaf in a pond. It immediately took the form of a baby girl which began to clamour and cry. When she heard the noise my mother opened her eyes.

Mother: "Lord. I hear a baby girl crying. Whose child is it, Lord?"

Parvati: "Mother! It's your child. Take it and raise it," she said. Then she and Siva left for Kailāsa.[1]

Then my mother picked up the child and took it home with her. This is Tāmarai's story. She is my only sibling and her name is Tāmarai."[2] This is what the King said.

Kuṉṉuṭaiyā: "King. I am pleased."

During this time

Song:

Powerful Laksmi, sweet one
Fulfilling her title she reigns, she reigns, she reigns there
Silver-fingered authority, sweet one
As a solitary dignity she reigns, sweet ruler
It rains three times a month, it rains there
Once a year there is a shower of hail stones there

---

[1] Siva and Parvati's main residence, high in the Himalayas. [2] Tāmarai means "lotus."

குன்னுடையாசாமி வாளவந்தி நாடு வந்தபிறகு இரண்டு மாடு இருந்த இடத்தில் இப்போது ஆயிரம் மாடும் வேலிக்கு ஒரு பட்டியும் வருஷம் மூன்று போக வெள்ளாமையும்[1] வாளவந்தி நாடு செல்வம் சிறந்து விளங்கியது.

(பாட்டு) அப்படியே நல்லதென்று அன்புடனே நடக்குது பார்
இந்தப் பிரகாரம் நடக்குது பார் அதிகாரம்

குன்னுடையாசாமி பொன்னி வளநாட்டில் ஐந்து வருடம், பங்காளியிடம் ஐந்து வருடம், வாளவந்தி நாடு வந்து இப்போது இருபது வருடம் ஆக முப்பது வருடம் சரியாக முடிந்தது. இங்கு இப்படி இருக்கும்போது பொன்னி வளநாட்டில் இருபத்தைந்து வருஷமாகச் செல்லாத்தாளுக்குப் பூஜை இல்லாமல் இருந்தது.

செல்லாத்தாள் :"ஆகா! என்னுடைய நாடு ஆயிரமா நிலம், எழுபத்து ஒன்பது சீமை மதுர வண்டுராங்குளம் ஒரு போகத்தில் ஏழாயிரம், எண்ணாயிரம் சலகை நெல் விளையும். ஏழு வயக்காடு எட்டு லட்சம் பொன் சீமை, பால வயக்காடு பத்துலட்சம் பொன் சீமை காவேரி ஆறு கடைதிரண்டு வந்தாலும் வெள்ளாங் குளத்துக்கும் வீரண மதகுக்கும் விதை நெல்லுக்கும் பத்தாது.

கோளத்தாக் கவுண்டன் இருக்கும்போது நம்மளுக்கு மூன்று கால பூஜையும் சரியாக நடத்தி வந்தான். அவன் காலம் சென்றபின் ஆயிரம் பங்காளிகளும் வந்து அரசரிடம் வழக்கிட்டு என்னுடைய பூமியையும் பிடுங்கிக்கொண்டு குன்னுடையாக் கவுண்டனையும் கூட்டிப் போனார்கள். இப்போது இருபத்தைந்து வருஷம் ஆகிறது. குன்னுடையான் காலமாகிவிட்டானா, உயிருடன் இருக்கிறானா தெரிய வில்லை. பங்காளிகள் என் சொத்தைப் பூராவும் சாப்பிடுகிறார்கள். எனக்கு ஒருகால பூஜைக்கு இல்லாமல் போய்விட்டதா? என்னுடைய நம்பியான் இருந்தால் எனக்குப் பூஜை செய்யாமல் போவானா!"

என்று செல்லாத்தாள் வருந்தினாள். குன்னுடையாக் கவுண்டன் கால முடிவானது அல்லது உயிருடன் இருப்பது பற்றி மாயவரைக் கேட்டால் தெரியும் என்று ஏழாயிரம் பொன்பெறும் துகிலை உடுத்தி வாரவழிய முக்காடிட்டுப் பால்கடலை நோக்கிப் புறப்பட்டாள்.

(பாட்டு) பால்கடல் தேடியல்லோ தேடியல்லோ
பத்தினியா செல்லாத்தாள் வாறாளே
ஆயரைத் தேடியல்லோ தேடியல்லோ

---

1 மகசூல்

In the place where there were only two cows when Kuṉṉuṭaiyā came to The Country Called Vāḷavanti, now there are one thousand. There is a cattle fold for every vēli[1], and there are three harvests a year. This is how The Country Called Vāḷavanti is prospering.

Song: It was good, see how love reigned
See what happened at that time

Kuṉṉuṭaiyā had spent five years in The Country Where The Kāveri Flows, five years with his clansmen, and twenty years in The Country Called Vāḷavanti. Thirty years, therefore, were now completed. At this point, Celāttā[2] of The Country Where The Kāveri Flows had been twenty-five years without a pūjā.

Cellāttā: "In my country is an enormous paddy field with seventy-nine subdivisions. In Maturavaṉṭūrāṅ-Kuḷam one crop yielded seven or eight thousand calakai[3] of paddy. The seven fine rice fields yield eight lakhs of golden grain and the other five fields yield ten lakhs of golden grain. And even if all the water in the Kāveri flows into Veḷḷāṅkuḷam tank and through the sluice gate there is not enough to soak the seeds (before planting them).

When Kōḷattā Kavuṇṭar was alive he performed three pūjās a day for me. After his death, when the thousand clansmen got the King's blessing they took my land and also took Kuṉṉuṭaiyā Kavuṇṭar with them. Now twenty five years have passed. Has Kuṉṉuṭaiyā died? Or is he alive? I don't know. The clansmen are eating all my wealth. They left me without even one pūjā a day.

If there was a devotee of mine would he leave me without a pūjā?"

So Celāttā suffered. "I will go and ask Vishnu if Kuṉṉuṭaiyā is alive or dead. He will know," she thought. So she veiled herself in seven thousand golden veils and set off for the milk sea.

Song: Searching for the milk sea, searching
Cellāttā is travelling at midday
She is searching for Krishna, she is searching

---

[1] A measure of five or six acres. [2] Goddess of The Country Where The Kāveri Flows. [3] See footnote on page 6.

இனி அருங் கிளியா வாறாளே
மாயரைத் தேடியல்லோ தேடியல்லோ
மலர்க் கிளியா அங்கு வாறாளே
பால்கடல் ஓடியங்கே ஓடியங்கே
தேடுகிறாள் செல்லாத்தாள் மாயவரை
அங்கையும்[1] காணவில்லை மாயவரை

செல்லாத்தாள் நின்று பரந்தாமன் பாற்கடலில் இல்லை, தெய்வசபை சென்றிருப்பார் என்று நினைத்துத் தெய்வசபை நோக்கிப் புறப்பட்டாள்.

(பாட்டு) தெய்வசபை தேடியல்லோ தேடியல்லோ
சீக்கிரமாய் வழிநடந்தாள் செல்லாத்தாள்
பரமனுட சன்னிதிக்குச் சன்னிதிக்குப்
பத்தினியாள் அங்கு வாறாளே

செல்லாத்தாள் தெய்வசபை வந்து ஓலைப்பூக்காடு சென்றாள். மாயவர் அங்கு ஆசனம் போட்டு அமர்ந்திருந்தார். மாயவர் செல்லாத்தாள் வருவதைப் பார்த்து எதிர்கொண்டு அழைத்துவந்தார். செல்லாத்தாள் மாயவரைக் கண்டு,

(பாட்டு) அட்டம் பணியுறாளே மாயருக்கு
ஆளடிமை செய்யுறாளே
பாதம் பணியுறாளே மாயருக்குப்
பணிவிடைகள் செய்யுறாளே
சுற்றிவலம் வந்து சூரியனைத் தெண்டனிட்டாள்
பக்கம் வலம் வந்து பகவானைத் தெண்டனிட்டாள்

மாயவர் - "அம்மா! சரணமென்ற பேர்களுக்கு மரணமொரு நாளுமில்லை!
வாழ்வாய் வளம் பெறுவாய், மண்டபத்தில் பெற்றிருப்பாய்!
இன்னும் பதம் பெறுவாய், ஈசுவரனைப் போலிருப்பாய்!"
என்று செல்லாத்தாளை வாரியெடுத்து மணிமுகத்தை முத்தமிட்டுக் கூட்டி எடுத்துக் கொள்ளை முத்தம் தந்தாரே.

மாயவர் - "செல்லாத்தா! சௌக்கியமாய் இருக்கிறாயா?"

---

1. அங்கேயும்

Now she is drawing near
She is searching for Vishnu, she is searching
She approaches joyfully
She runs to the milk sea, she runs
Cellāttā is searching for Vishnu
There Vishnu is not to be seen

Cellāttā stood (and looked) but Vishnu was not on the milk sea. She thought, "I will go and look in the god's counsel-chamber," and she set off there.

Song: Searching for the god's counsel-chamber, searching
Cellāttā walked quickly along the route
To God's divine presence, divine presence
The chaste lady is going there

Cellāttā arrived at the god's counsel-chamber in the palmleaf flower forest. There, in the palmleaf flower forest, was Vishnu. He was seated with his legs crossed. Vishnu saw Cellāttā coming towards him and welcomed her. Cellāttā, seeing Vishnu:

Song: She paid obeisance to Vishnu
She offered him her services
She fell at the sacred feet of Vishnu
She offered him her services
She circled the sun and fell at his feet
Approaching from the right (side) she fell at the
feet of the God

Vishnu: "Mother! There is no death for those who take
refuge in me
You will live long!
You will receive honors in your palace hall
You will attain the feet of the Lord
You will live like Īswara himself."[1]

He said that and he embraced Cellāttā, kissing her precious face. He hugged her and kissed her abundantly.

Vishnu: "Cellāttā! How are you?"

---

1 Īswara is Śiva.

செல்லாத்தா - "அண்ணா! சௌக்கியமாய் இருக்கிறேன். பரந்தாமா! கோளத்தாக் கவுண்டன் இருக்கும் காலத்தில் எனக்கு மூன்றுகால பூஜையும் சரியாக நடத்தி வந்தான். அவன் காலம்சென்ற பின் அவன் மகன் குன்னுடையாக் கவுண்டனிடத்தில் பங்காளிகள் வழக்கிட்டு என்னுடைய பூமியை ஆயிரத்து ஒரு பங்காகப் பங்கிட்டுக் குன்னுடையாக் கவுண்டனையும் கூட்டிக்கொண்டு போனார்கள். அவன் போய் இருபத்தைந்து வருஷம் ஆகிறது. என் பூமியையும் அபகரித்து, குன்னுடையானையும் கூட்டிக்கொண்டு போனார்கள். அப்படி கூட்டிப்போய் இருபத்தைந்து வருஷம் ஆகிறது. போனதில் இருந்து எனக்கு யாரும் பூஜை செய்வதில்லை. நான் இருளண்டி[1] இருக்கிறேன். ஆகையால் குன்னுடையான் காலம் சென்றது, உயிருடன் இருப்பது எனக்குத் தெரியவில்லை. அண்ணா! தாங்கள் அவன் எங்கு இருக்கிறான் என்று பார்த்துச் சொல்ல வேண்டும் அண்ணா."

மாயவர் - "செல்லாத்தா! குன்னுடையாக் கவுண்டன் போய் இருபத்தைந்து வருஷம் ஆகிறது என்கிறாய். ஆகையால் எனக்கு எப்படித் தெரியும்?"

செல்லாத்தா - "பரந்தாமா! தங்களுக்குத் தெரியாமல் பூலோகத்தில் யாரும் இருக்க முடியாது."

மாயவர் - "அம்மணி! உண்மையில் எனக்குத் தெரியாது."

செல்லாத்தா - "அண்ணா! இப்போது தாங்கள் பார்த்துச் சொல்கிறீரா இல்லையா? நான் இருபத்தைந்து வருஷம் பூஜையில்லாமல் இருந்து வந்து கேட்கிறேன். தெரியாது என்று சொல்கிறீர். தாங்கள் சிம்மாசனத்தில் இருக்கிறோம் என்ற மமதையில்[2] பேசுகிறீர்களா? நான் இந்த மராமரங்களையும் புஷ்ப மரங் களையும், உங்கள் சிம்மாசனத்தையும் அடியோடு பிடுங்கிச் சாய்த்துவிடுவேன். நீங்கள் போய்ப் பூலோகத்தில் பார்த்துக் குன்னுடையான் என்ன ஆனான்? எங்கு இருக்கிறான்? என்று பார்த்து எனக்கு மூன்று நாளில் சொல்ல வேண்டும்."

மாயவர் - "செல்லாத்தா! அவன் போய் இருபத்தைந்து வருஷம் ஆகிறது. இப்போது என்னிடம் வழக்குப் போட வந்துவிட்டாய்.

---

1. இருளடைந்து 2. இறுமாப்பு

Cellāttā: "Elder brother. I am fine. Oh Vishnu! When Kōḷattā Kavuṇṭar was alive I was given a pūjā three times a day. After he died the clansmen came to his son Kuṉṉuṭaiyā's place. (There they) took my land and divided it into shares. (Then they) took Kuṉṉuṭaiyā away with them. It has been twenty-five years since he left. They seized my land by fraud and took Kuṉṉuṭaiyā with them. Twenty-five years have now passed. Since then no one has performed pūjā for me. I have become a pitiful beggar. If Kuṉṉuṭaiyā's time is up then I don't know if I can continue to live. Elder brother! You must look and tell me if he is alive for me, oh elder brother."

Vishnu: "Cellāttā! Kuṉṉuṭaiyā Kavuṇṭar left twenty-five years ago, you say. Therefore, how can I know?"

Cellāttā: "Oh Vishnu! No one can exist on the earth without your knowing it."

Vishnu: "Oh lady! Truly I don't know."

Cellāttā: "Elder brother! You'll look and tell me now, won't you? I am coming to ask after having no pūjā for twenty-five years. Now, you are telling me that you don't know. Are you talking in self-conceit because you are on the throne? I will uproot these trees, the bushes, and your throne. You should go to earth and see what happened to Kuṉṉuṭaiyā, where he is, and tell me about it in three days."

Vishnu: "Cellāttā! It has been twenty-five years since he left and now you bring the complaint before me!

சரி, நான் இப்போதே பூலோகம் சென்று குன்னுடையான் இருந்தால் வெள்ளிக்கிழமை விடி ஐந்து நாழிகைக்குள் உன்னுடைய அரண்மனையில் கொண்டு வந்து சேர்க்கிறேன். நீ சந்தோசமாக உன் ஆலயம் போய்ச் சேர் செல்லாத்தா."

செல்லாத்தா போன பிறகு பரந்தாமன் நடு இரவு கருட வாகனமேறிப் பூலோகத்திற்குப் புறப்பட்டார்.

(பாட்டு) பூலோகம் தேடியல்லோ தேடியல்லோ
இனி மாயவரும் வாறாரே
வாளவந்தி நாடுதேடி நாடு தேடிப்
பரந்தாமன் வாறாரே
நத்தக்காட்டுப் பட்டிதேடிப் பட்டி தேடி
மாயவர் மையமாய்ப் பறக்குறாரே

பரந்தாமன் நத்தக்காட்டுப் பட்டி போய் நின்று தன்னாசிபோல் தவசிபோல் பஞ்சை பரதேசி போல் தாசனாக வடிவத்தை மாற்றி நெற்றியில் மூன்று நாமம் போட்டு வலம்புரிச் சங்கும் கோபாலப் பெட்டியும் தோளில் போட்டுப் பட்டிக்குப் பக்கம் வந்து வலது புறம் தெற்குமுகமாய் நின்று, "குன்னுடையாக் கவுண்டா! குன்னுடையாக் கவுண்டா!" என்று மூன்று தடவை கூப்பிட்டார். குன்னுடையாக் கவுண்டர் பட்டிக்குள் குடிசையில் படுத்திருந்தவர், "யாரடா இந்த நேரத்தில் வந்து கூப்பிடறவன்?" என்று அதட்டிக்கொண்டே வெளியில் வந்தார்.

வெளியில் வரும்போது பரந்தாமன் வடக்குத் தரம்பில்[1] நிற்பதைப் பார்த்து

குன்னுடையா - "அடே தாசா! இந்தக் காட்டில் கடவு[2] இல்லையே, நீ எப்படி உள்ளே வந்தாய்?"

மாயவர் - "குன்னுடையாக் கவுண்டா! வடக்கு வேலியில் தடம் இருந்தது. வாளவந்தி நாடு போகிறவன் நான் தெரியாமல் இங்கு வந்து விட்டேன்."

குன்னுடையா - "அடே தாசா! என்னுடைய பெயர் குன்னுடையாக் கவுண்டன் என்று உனக்கு யார் சொன்னது?"

மாயவர் - "அப்பா! வலதுபுறம் காட்டில் வாளவந்தி நாடு போக வழி கேட்டேன். அவர் தென்புறம் காட்டுக்குள் பட்டியில் குன்னுடையாக் கவுண்டன் படுத்திருப்பார். அவரைப் போய்க் கேள் சொல்வார் என்றார்."

1. மூலை 2. வழி

All right, I will go now to earth and if Kuṉṉuṭaiyā is there I will bring him to your temple within two hours of Friday's sunrise. You go home now and be content."

After Cellāttā left in the middle of the night, Vishnu mounted his Garuda bird and set off for earth.

Song:

Searching for the earth, searching
Vishnu is coming now
Searching for The Country Called Vāḷavanti
Vishnu is coming
Looking for the Nattakkāṭu cattlefold, looking
for the cattlefold
Vishnu flies there invisibly

Vishnu came and stood near the Nattakkāṭu cattlefold. He came to the right side of the cattlefold and stood facing south. He had three nāmams[1] on his forehead and carried a right-spiralled conch and a sacred box on his shoulder. He looked like an ascetic, a penitant, a wandering renouncer, a Vaisnavite mendicant. He called, "Kuṉṉuṭaiyā Kavuṇṭar, Kuṉṉuṭaiyā Kavuṇṭar," three times. Kuṉṉuṭaiyā Kavuṇṭar was lying inside his hut. He came out and said angrily, "Who is calling (me) at this time?"

As he came out he saw someone standing to the north inside the field.

Kuṉṉuṭaiyā: "Oh mendicant! This field has no gate. How did you get in?"

Vishnu: "Kuṉṉuṭaiyā Kavuṇṭar! There was a road leading north with thorns edging it. Without knowing that it led to The Country Called Vāḷavanti I came here."

Kuṉṉuṭaiyā: "Oh mendicant! Who told you my name was Kuṉṉuṭaiyā Kavuṇṭar?"

Vishnu: "Oh man! In the field lying to the right, on my way to The Country Called Vāḷavanti, I asked. I was told that the man sleeping in the cattlefold in the field to the south would be Kuṉṉuṭaiyā and to go to him."

---

[1] The mark of a Vaisnavite devotee, made with three vertical stripes.

குன்னுடையா - "அப்படியா! இதோ அந்த வேலியில் சந்துப்படல்[1] போட்டிருக்கிறது. அதைத் திறந்து அந்தப்புறம் போனால் வாளவந்தி நாட்டுக்கு ரோடு போகிறது போப்பா."

மாயவர் - "அப்பா! நடந்து வந்தது கஷ்டமாயிருக்கிறது. கொஞ்ச நேரம் இங்குத் தங்கிவிட்டுப் போகிறேன்" என்று சந்துப் படலின் பக்கத்தில் கிழக்கு முகமாய் உட்கார்ந்தார். "குன்னுடையாக் கவுண்டா! உன்னைப் பார்த்தாலே பயமாக இருக்கிறது. கோபம் இல்லாமல் சொல். உன் நாடு எது? ஊர் எது?" என்று கேட்டார்.

குன்னுடையா - "தாசா! உனக்கு இந்த நேரத்தில் வழி சொன்னதும் இல்லாமல் எந்த ஊர், எந்த நாடு என்று கேட்கிறாய்? பேசாமல் போய் விடு."

மாயவர், "ஏது, இந்த மடயன் நாம் சொல்வதைக் கேட்கமாட்டான் போலிருக்கிறது" என்று நினைத்து விபூதியை எடுத்து வீசினார். குன்னுடையாக் கவுண்டர் சாந்தமடைந்து பரந்தாமன் முன் வந்து மேற்கு முகமாக உட்கார்ந்தார்.

குன்னுடையா - "சாமி! நான் பொன்னி வளநாடு. ஐந்து வயதில் தாய் தகப்பனை இழந்து தங்க வளநாட்டில் பங்காளி வீட்டில் ஐந்து வருஷம் காலம் கழித்தேன். மறுபடி அங்குச் சரியில்லாமல் வாளவந்தி நாடு வந்து ராஜாவின் அரண்மணையில் இருந்து வருகிறேன்."

மாயவர் - "அப்பா! நீ இருப்பது ராஜாவுடைய அரண்மனை அல்ல. உன் மாமன் வீடு!"

குன்னுடையா - "அட சண்டாளா! அரசர் அரண்மனையை என் மாமன் வீடு என்று சொல்கிறாயா" என்று மாயவரை அடிக்கக் கவையை எடுத்து ஓங்கினார்.

மாயவர் - "குன்னுடையாக் கவுண்டா! பொறு" என்று சொல்லி மறுபடியும் விபூதியை எடுத்து வீசினார்.

குன்னுடையா - (சாந்தமாகி) "சுவாமி! என் மாமன் வீடு என்று எனக்கு இதுவரை தெரியாது. தாங்கள் சொல்லத்தான் தெரியும்."

மாயவர் - "அப்பா! உன் தாய் பிறந்த இடம் இதுதான். இவர்கள்தான் உன் தாய்மாமன் மக்கள். குன்னுடையாக்கவுண்டா! காலையில் நீ வீட்டுக்குப் போனால் தினம் என்ன வேலை செய்வாய்?"

---

1 ஓலை அல்லது மூங்கிலாலான கதவு

Kuṉṉuṭaiyā: "Oh, was it so? There is a cleft in the thorns. If you go in that direction you will find the road to The Country of Prosperity. Go!"

Vishnu: "Oh, man! The walk here was hard. I will stay here awhile and then go."

Saying this, he sat down near the entrance facing east.

Vishnu: "Kuṉṉuṭaiyā Kavuṇṭar! I am afraid. Don't get angry. Tell me what is your country, your town," he asked.

Kuṉṉuṭaiyā: "Mendicant! Don't ask, without reason, at this hour, about what town and what country this is. Be gone!"

Vishnu: "This simpleton, it seems, doesn't listen to what I say," he thought.

Vishnu took some sacred ash and threw it. Kuṉṉuṭaiyā became quiet and went before Vishnu and sat down facing west.

Kuṉṉuṭaiyā: "Lord! I am from The Country Where The Kāveri Flows. My mother and father died when I was five. I then spent five years in the houses of my clansmen in The Country of Prosperity. Then, because it was not good there, I came to The Country Called Vāḷavanti and am now attached to the palace of the King here."

Vishnu: "Oh man! The place you are is not the palace of the King but your own uncle's[1] house."

Kuṉṉuṭaiyā: "Oh, Villain! You say this King's palace is my uncle's home!" He lifted his shepherd's fork in order to strike Vishnu.

Vishnu: "Kuṉṉuṭaiyā Kavuṇṭar! Be still," he said and threw some sacred ash.

Kuṉṉuṭaiyā: "My goodness! Lord! Until now I didn't realize this was my mother's brother's house. I have learnt it from you."

Vishnu: "Oh man! Your (own) mother was born here. (These men) are your mother's brothers. Kuṉṉuṭaiyā Kavuṇṭar! When you go to the house each day what work do you do?"

---

[1] Māmaṉ, meaning (in this context) mother's brother.

குன்னுடையா - "சுவாமி! தினம் அரண்மனைக்குப் போய்த் தண்ணீர் இறைத்து வெந்நீர் அண்டாவுக்கு ஊற்றுவேன். பின் என் அரசருடைய தங்கை தாமரைக்குத் திருவினித்தூரி கொஞ்சநேரம் ஆட்டி விடுவேன். பிறகு சாப்பிட்டுவிட்டு நாய்க்குச் சோறு வாங்கிக் கொண்டு பட்டிக்கு வந்து இங்குள்ள வேலையைக் கவனிக்க வேண்டும்."

மாயவர் - "அப்பா! தூரி ஆட்டுகிறேன் என்று சொல்கிறாயே அந்தப் பெண் உன் மாமன் மகள். அவளைத்தான் உனக்குத் திருமணம் செய்து வைக்கப் போகிறேன்" என்று சொன்னவுடன் குன்னுடையாசாமிக்குக் கோபம் வந்து, "ராஜாவின் மகளை மாமன்கள் என்று சொல்கிறாயா" என்று மாயவரை அடிக்கக் கவையை எடுத்து ஓங்கினார்.

மாயவர் - "குன்னுடையா! பொறு" என்று மறுபடியும் விபூதியை எடுத்து வீசினார். வீசியவுடன் குன்னுடையாசாமிக்குக் கோபம் நீங்கி, "சுவாமி, என்ன சொன்னீர்கள்? என் மாமன் மகளா தாமரை?" என்றார்.

மாயவர் - "அப்பா! உண்மையில் உன் மாமன் மகள்தான்."

குன்னுடையா - "சுவாமி! அப்படியானால் அவளை எனக்குத் திருமணம் செய்து வைக்க வேண்டும்.

மாயவர் - "அப்படியே செய்துவைக்கிறேன்! வா, அரண்மனைக்குப் போகலாம்."

அப்படியே நல்லதென்று இருவரும் புறப்பட்டு அரண்மனைக்கு வந்தார்கள்.

குன்னுடையா - "சுவாமி! காவலர்கள் இருக்கிறார்கள். இரவு நேரத்தில் எப்படி உள்ளே போவது?"

மாயவர் - "அதற்கெல்லாம் நான் இருக்கிறேன். பயப்படவேண்டாம் வா."

அவர்கள் அரண்மனை அருகில் வந்ததும் மாயவர் விபூதியை எடுத்து வீசினார். காவலர்கள் மயங்கிக் கீழே சாய்ந்தார்கள். மாயவர் குன்னுடையாக் கவுண்டனைப் பெரியகேட்டு[1] வழியாக உள்ளே கூட்டிச் சென்றார். உள்ளே போய் முன்சாவடியில் குன்னுடையானை, "நீ இங்கே படுத்துக்கொள், நான் ஈ போல் வடிவெடுத்து மேல் விட்டத்தில்[2] ஒட்டிக் கொள்கிறேன். சேவல் கூவியவுடன் உன் மாமன் இரண்டுபேரும் பிள்ளையார் கோவிலுக்குக் கருட தரிசனத்துக்குப் போக வருவார்கள். வரும்போது உன்னை யார் என்று கேட்டால் மாமா நான்தான். உரிமைப் பெண் கொடுங்கள் என்று கேள்,"

1. Gate 2. உத்திரம்

Kuṉṉuṭaiyā: "Lord! Each day when I go to the palace I draw water to fill the hot water vessel (for bathing). Then I swing the King's younger sister in (her) swing for awhile. Then I eat. Then I must feed the dog, return to this cattle fold and take care of the work here."

Vishnu: "Oh man. You say you push a swing. That girl is your mother's brother's daughter. I am going to marry you to her."

As he said this Kuṉṉuṭaiyā became angry.

Kuṉṉuṭaiyā: "You say a King's daughter is my mother's brother's daughter?"[1] he cried. He raised a shepherd's crook to hit Vishnu.

Vishnu: "Kuṉṉuṭaiyā, be still," he said and he threw some (more) sacred ash.

As soon as he threw the ash Kuṉṉuṭaiyā's anger subsided.

Kuṉṉuṭaiyā: "Lord! What did you say? Tāmarai is my mother's brother's daughter?"

Vishnu: "Oh man! She is truly your mother's brother's daughter."

Kuṉṉuṭaiyā: "Lord. If that is so then you must marry me to her."

Vishnu: "I will do just that! Come, let's go to the palace."

Kuṉṉuṭaiyā: "All right," he said. (Then) the two of them set off for the palace.

Kuṉṉuṭaiyā: "Lord! There are guards. How shall we enter at night?"

Vishnu: "I am here to take care of all that. You must not be afraid. Come," he said.

As soon as they drew near the palace Vishnu took some sacred ash and threw it. The guards became dizzy and fell down in a faint. Vishnu asked Kuṉṉuṭaiyā to take him inside. When they reached the inner front porch Vishnu said,

Vishnu: "Kuṉṉuṭaiyā! You rest here. I will take the form of a fly and fly above the house. (At the time) when the cocks crow, your mother's two brothers will come out to go to view the Garuda bird at the Pilliar temple. If, on the way they ask,

---

[1] The most marriageable of all relatives, according to Kavuṇṭar caste tradition, is the matrilateral cross-cousin.

என்று சொல்லிவிட்டு மாயவர் ஈ போல் வடிவெடுத்து விட்டத்தில் ஒட்டிக் கொண்டார்.

(பாட்டு) அப்படியே நல்லதென்று இனி
அன்புடனே நடக்குது பார்
இந்தப் பிரகாரம் மாயவரும் சாமியும்
இருக்கிறார் அந்நேரம்
வெள்ளி உதிக்குமுன்னே
அங்கு வெண்சேவல் கூவும்முன்னே

அரசர்கள் இரண்டுபேரும் எழுந்து கருடதரிசனத்துக்குப் புறப்பட்டு வந்தார்கள். வரும்வழியில் குன்னுடையாசாமி படுத்திருப்பதைப் பார்த்து, "யாரடா?" என்று அதட்டிக் கேட்டார்கள். அந்தச் சத்தத்தில் சாமி பயந்து மாயவர் சொன்னதை மறந்துவிட்டார்.

குன்னுடையா - "நான்தான் அரசே! குன்னுடையாக் கவுண்டன்" என்று,

(பாட்டு) சாமி எனக்கு வயிறு நல்ல
என்சாமி வலிக்குதுங்கோ
வல்லுயிரு[1] ராஜாவே போகுதுங்கோ
சாமி எனக்குக் குடலைப் பிறட்டுதுங்கோ
ராஜாவே என்னுயிரு போகுதுங்கோ

சாமி, எனக்குக் குடலைப் பிறட்டுதுங்கோ. இப்போ என் உயிரு போகுதுங்கோ. என் வயிறு வலிக்குதுங்கோ ராஜாவே! எனக்கு வல்லுயிரு போகுதுங்கோ."

சாமி அழுவதை அரசர் பார்த்தார்.

அரசர் - "அடி மாதர்களே! சீக்கிரம் ஓடி வாருங்கள். குன்னுடையாக் கவுண்டனுக்கு வயிற்றுவலியாம். சுக்கு கொஞ்சம் சுட்டு வெந்நீர் வைத்துச் சீக்கிரம் கொண்டுவாருங்கள்."

மாதர்கள் அப்படியே கொண்டுவந்து கொடுத்தார்கள். சாமி அதை வாங்கிச் சாப்பிட்டுவிட்டு இருந்தார். இதையெல்லாம் மேல் இருந்து பார்த்துக் கொண்டிருந்த மாயவர், "நாம் சொன்னது இனி ஒன்றும் நடக்காது" என்று புறப்பட்டுப் பாற்கடல் சென்றுவிட்டார்.

சிறிது நேரம் கழித்து அரசர் வந்து, "குன்னுடையாக் கவுண்டா! வயிற்று வலி நல்லாகி விட்டதா?" என்று கேட்டார்.

குன்னுடையா - "அரசே! குணமாகிவிட்டது."

இந்தச்சமயம் நன்றாக விடிந்து விட்டது.

1. இன்னுயிர்

"who are you," answer "uncle, its me, of course. Give me my rightful woman!"[1]

Saying this Vishnu took the form of a fly and went into the house.

Song: It was said to be good
See how things were done with love
At this time the Lord Vishnu
Was there, he was there at that time
Before it became light, before dawn
The cocks crowed there

The two kings got up and set off to view the Garuda. On their way they saw Kuṉṉuṭaiyā's sleeping form.

Kings: "Who is that?" they demanded.

At the sound (of this Kuṉṉuṭaiyā) became frightened and forgot what Vishnu had told him.

Kuṉṉuṭaiyā: "Its me, of course, oh King," Kunnuṭaiyā said.

Kuṉṉuṭaiyā's Song: "Lord. There is a pain in my stomach
Reduce your harshness, oh King
Lord. My bowels are in turmoil
Oh King, be gentle with me
Lord, my bowels are in turmoil now
Be gentle with me
There is a pain in my stomach, oh King
Reduce your harshness towards me, oh King"

The kings saw him crying.

King: "Oh maid! Come quickly. Kuṉṉuṭaiyā Kavuṇṭar has stomach pains! Put some ginger in hot water and come quickly."

The maid did this and brought it to him. (Kuṉṉuṭaiyā) took it and drank it. Vishnu was watching all this from above. He thought, "Now nothing that I (planned) will happen," and he set off for the milk sea. After a time the King came.

King: "Kuṉṉuṭaiyā Kavuṇṭar! Is your stomach ache gone now?", he asked.

Kuṉṉuṭaiyā: "King! I am fine! I am all well now!"

---

1 A man has a "right" over his maternal uncle's daughter and can demand to marry her.

அரசர் - "சரி, குன்னுடையாக் கவுண்டா! பட்டிக்குப் போய்ப் பால் கறந்து கொண்டு வா."

குன்னுடையாசாமி அப்படியே போய்ப் பால் கறந்து கொண்டுவந்து அரண்மனையில் செய்யக்கூடிய வேலையெல்லாம் செய்துவிட்டுப் பட்டிக்குப் போய்க் கன்றுகளை ஓட்டிப்போய்க் காட்டுக்குள் முடிக்கிவிட்டு ஒரு மரத்தடியில் உட்கார்ந்து யோசனை செய்தார். "வித்வான் பேச்சை விபரமாய்க் கேட்டோம், கூத்தாடி பேச்சைக் குனிதமாய்க்[1] கேட்டோம். அவன் பேச்சைக் கேட்டு இரவு அரசரிடம் மாமா உரிமைப் பெண் கொடுங்கள்" என்று கேட்டிருந்தால் நம் உயிர் இன்னும் இங்கு இருக்குமா! சண்டாளன் இன்று வருவானோ என்னவோ தெரியவில்லை. இன்று அவன் வந்தால் ஒரே அடியில் அடித்துக் கொன்றுவிடலாம்" என்று நினைத்து சூரியன் மேற்கில் போய் மறைந்ததும் அவருடைய வேலையை முடித்துப் பால் கறந்து அரண்மனைக்கு வந்து அங்குச் செய்யும் வேலையை முடித்துச் சாப்பிட்டுவிட்டுப் பட்டிக்குப் போய்க் கவையை எடுத்து வெளியில் வைத்துப் படுத்திருந்தார்.

இங்கு இப்படி இருக்கும்போது ஓலைப்பூக்காட்டில் மாயவர் கீழ்க்கண்டபடி நினைத்தார்.

மாயவர் - "இன்றைக்குப் போய்க் குன்னுடையாக் கவுண்டனுக்கு எப்படியும் திருமணம் செய்து பொன்னி வளநாட்டுக்கு அனுப்பவேண்டும்"

என்று கருடவாகனமேறிப் புறப்பட்டார்.

(பாட்டு) தெய்வசபை விட்டுமல்லோ
பூலோகம் தேடி வாறார்
அரக்கர்களை வேரறுத்த அந்த
ஹரிராமர் வாறாரே
அகலிகை சாபம் தீர்த்த
ஆதிகிருஷ்ணர் வாறாரே
வாளவந்தி நாடு தேடிப்
பரந்தாமன் மையமா வாறாரே

முன்போல் சுவாமி பட்டிக்குப் போய்த் தாசன்போல் வடிவெடுத்து வடக்குத்திசை தரம்பில் தெற்குமுகமாக நின்று, "குன்னுடையாக் கவுண்டா!" என்று கூப்பிட்டார். சத்தம் கேட்ட குன்னுடையாக் கவுண்டர் எழுந்து கோபம்வந்து கவையை எடுத்துத் தாசனை அடிக்க ஓங்கினார்.

மாயவர் - "அப்பா, பொறு!" என்று விபூதியை வீசினார்.

---

1. கவனமாய்

King: "Good, Kuṉṉuṭaiyā Kavuṇṭar! Go to the cattlefold, do the milking and come."

Kuṉṉuṭaiyā went, did the milking, and returned. He did the required work around the palace. Then he went to the cattlefold, drove the calves to the field and secured them there. Then he sat down at the foot of a tree and began to think. "I have heard the ideas of a learned man. I have heard the speech of a dramatist. Would I still be alive if I had listened to his words last night, and asked the King for my right (to marry) my mother's brother's daughter? Will he come again?", he wondered.

"If he comes today I will kill him with a single blow," he thought. When the sun had set in the west, he finished his work, did the milking, and finished all the palace chores. (Then) he ate, and went to the cattlefold to sleep, laying his shepherd's crook near him.

At this moment Vishnu looked down from the palm leaf flower forest and thought, "Today I must get Kuṉṉuṭaiyā Kavuṇṭar married and send him to The Land Where The Kāveri Flows." So, he mounted his Garuda vehicle and set off.

Song:
Leaving the god's counsel-chamber
He is coming, searching for the earth
That uprooter of giants
Harirāmā[1] is coming
He who restored Akalikai[2]
The creator Krishna is coming
Looking for The Country Called Vāḷavanti
The supreme Vishnu is coming

As before, the Lord went to the cattlefold and took the form of a mendicant. He stood on the path to the north and stood facing south. "Kuṉṉuṭaiyā Kavuṇṭar," he called. Kuṉṉuṭaiyā Kavuṇṭar heard the noise, got up angrily and raised his crook to strike the mendicant.

Vishnu: "Man! Be still!", he said, and threw some sacred ash.

---

1 A name for Vishnu. 2 A girl in the Ramayana, turned into stone for having been deceived by Indra, and whom Rama (an incarnation of Vishnu), restored to life.

குன்னுடையா - "ஏண்டா தாசா! நேற்று இரவு விட்டத்தில் ஒட்டியிருப்பதாய்ச் சொன்னாயே? நீ உண்மையில் அங்கு இருந்தாயா? உன் பேச்சைக் கேட்டு அரசரிடம் பெண் கேட்டிருந்தால் என் உயிர் இன்னும் இருக்குமா?" என்று மறுபடியும் கவையை ஓங்கினார்.

மாயவர் - "குன்னுடையாக் கவுண்டா! பொறு. இவ்வளவு பெரிய கவையால் அடித்தால் என் உயிர் பிழைக்குமா?" என்று சந்துப்படலருகில் போய் உட்கார்ந்து விபூதியை வீசினார்.

விபூதியை வீசியவுடன் குன்னுடையாக் கவுண்டர் கோபம் அடங்கி, "சாமி, இரவு விட்டத்தில் இருப்பதாகச் சொன்னீர்களே, இருந்தீர்களா?" என்று சாந்தமாகக் கேட்டார்.

மாயவர் - "அப்பா! இருந்தேன். ஆனால் நான் சொன்னதை எல்லாம் அரசன் வந்ததும் மறந்துவிட்டாய் என்று சென்றுவிட்டேன்."

குன்னுடையா - "சுவாமி! எப்படியாவது என் மாமன்மகளை எனக்குத் திருமணம் செய்து வையுங்கள்."

மாயவர் - "சரி, வா! அரண்மனைக்குப் போகலாம். ஆனால் நான் சொன்னதை முன்போல் மறக்கக் கூடாது."

குன்னுடையா - "சுவாமி! நல்லது"

(பாட்டு)

தாசனும் முன் நடக்க முன் நடக்க
கவுண்டரும் பின் நடந்தார் பின் நடந்தார்
அரண்மனை தேடியல்லோ தேடியல்லோ
சீக்கிரமாய் வழிநடந்தார் வழிநடந்தார்

இருவரும் அரண்மனைக்கு வந்து மாயவர் காவலர்கள் நிற்பதைப் பார்த்து விபூதியை எடுத்து வீசினார். காவலர்கள் மயங்கித் தரையில் சாய்ந்தார்கள். சேவகர்கள் கீழே விழுந்தவுடன் இருவரும் உள்ளே போய் முதல்நாள் போலவே குன்னுடையாசாமியைப் படுக்கவைத்து மாயவர் ஈ போல் வடிவெடுத்து விட்டத்தில் ஒட்டினார். முதல்நாள் போல் தூங்கிவிடாமல் இருக்க கவுண்டருக்கு அடிக்கடி விபூதியை வீசிக்கொண்டிருந்தார். முதல்நாள் போல் அரசர்கள் இரண்டுபேரும் எழுந்து கருட தரிசனத்துக்குப் போகப் புறப்பட்டு வெளியில் வந்தார்கள். வெளியில் வந்து குன்னுடையாசாமி படுத்திருப்பதைப் பார்த்து, "யாரடா!" என்று கேட்டார்.

குன்னுடையா - "ஏனுங்க மாமா! நான்தான் குன்னுடையாக் கவுண்டன். எனக்கு உரிமைப் பெண் கொடுங்கள்."

Kuṉṉuṭaiyā: "What is it, mendicant? Yesterday you said you would enter the house. Were you really there?"

"If I had listened to you and asked (for the hand) of the palace girl would I still be alive?", he asked and he raised his staff again.

Vishnu: "Kuṉṉuṭaiyā Kavuṇṭar. Be still! If you hit me with such a big staff would I survive?" he asked, and he went to sit near the entrance (of the cattlefold). Again he threw some sacred ash. As soon as the ash was thrown Kuṉṉuṭaiyā Kavuṇṭar's anger was softened.

Kuṉṉuṭaiyā: "Lord. You said you would be in the house last night. Were you really there?" he asked softly.

Vishnu: "Man. I was there, but when the King came you forgot everything I said. So I came away."

Kuṉṉuṭaiyā: "Lord. However you do it, (please) marry me to my uncle's daughter."

Vishnu: "All right, come! Let's go to the palace. But you must not forget what I told you earlier."

Kuṉṉuṭaiyā: "O.K., Lord. That's good."

Song:

The mendicant walks ahead, walks ahead
The Kavuṇṭar walks behind, walks behind
Searching for the palace, searching
They walk along quickly, (they are) walking quickly

The two men arrived at the palace, and Vishnu, seeing the guards, threw some sacred ash and they became dizzy and fell down (in a faint).

As soon as the guards had fainted the two men went inside. Just as before, Vishnu first told Kuṉṉuṭaiyā to lie down to rest. Then he took the form of a fly and went in the house. Just as on the first day, he repeatedly threw sacred ash on him to keep him awake. And just as before, the two kings got up, and as they were leaving to view the Garuda bird, they saw Kuṉṉuṭaiyā sleeping outside. "Who is this?" they asked.

Kuṉṉuṭaiyā: "My uncle! I am Kuṉṉuṭaiyā Kavuṇṭar, of course. Give me my rightful girl," he said.

அரசர் - "அட, சண்டாளா! என்னிடம் வயிற்றுச் சோத்துக்கு இருபது வருஷமாக இருந்து, நன்றாகச் சாப்பிட்டுவிட்டுத் திமிர் வந்து என்னிடம் "மாமா, எனக்குப் பெண் கொடுங்கள்" என்று கேட்கிறாய். நீ அத்தை மகனா அல்லது மாமன் மகனா? என்னை முறை சொல்லிக் கூப்பிடுகிறாய். அடே, சேவகா! இங்கே வாருங்கள். இவனைப் பிடித்து நன்றாக உதையுங்கள்."

சேவகர்களும், அப்படியே சாமியைப் பிடித்துத் தூணில் கட்டிச் சவுக்கை எடுத்து வந்து உதைத்தார்கள். இதை விட்டத்தில் இருந்து பார்த்த மாயவர், "பிறகு கவனிப்போம்" என்று பால்கடல் சென்றுவிட்டார்.

(பாட்டு) அஞ்சுமணி என்னாத்தாச் சாட்டையிலே
பஞ்சு பஞ்சா என்சாமி பறக்குதுபார்
ஆறுமணி என்னாத்தாச் சாட்டையிலே
தாறுமாறா என்சாமி அடிக்குறாரே
மொண்ணைவால்[1] என்னாத்தாச் சாட்டையிலே
முனை முறிய என்சாமி அடிக்குறாரே
அடிபொறுக்க என்னாத்தா முடியாமல்
ஆளுயரம் என்சாமி குதிக்கிறாரே

குன்னுடையாசாமிக்கு ரத்தவெள்ளம் பெருகுது. உதிரம் பெருகுது. உதிர வெள்ளம் சாயுது. கை சோர்ந்து மெய் சோர்ந்து கனத்தமுடி சோர்ந்து, சாமி பூமியில் விழுந்து மூன்று நாளிகை நேரம் மூச்சு இல்லாமல் இருந்தார்.

அரசர் - "அடே சேவகா! பிச்சைக்கு வந்தவன் பெண்ணுக்கு மாப்பிள்ளை ஆக நினைக்கிறான் சண்டாளன். இவனுக்கு மார் விலங்கு, மணி விலங்கு, கைவிலங்கு, கால்விலங்கு, தோள் விலங்கு, துடை விலங்கு ஆகிய பன்னிரண்டு விலங்கையும் பூட்டிப் பிள்ளையார் கோவில் முன் படுக்கவைத்து யானை சுமக்கமுடியாத ஒரு பெரிய கல்லை மேல் வைத்துவிடுங்கள். சண்டாளன் அப்படியே இறந்து போகட்டும்."

சேவகர்கள் அப்படியே செய்தார்கள்.

குன்னுடையாசாமி கொஞ்சநேரம் கழித்து உணர்வு வந்து கண்ணைத் திறந்து பார்த்தார். தன்மேல் பெரிய கல் இருப்பதை உணர்ந்து, "ஆகா! அகிலாண்டகோடி பிரமாண்ட நாயகா! சங்குசக்கர வைகுந்த வாசகா! என்னை இந்தக் கதிக்கு ஆளாக்கி விட்டாயே!"என்று மாயவரை நினைத்து அழுதார்.

---

1. முனை மழுங்கிய வால்

King: "Oh, villain! I raised you and have fed you for twenty years now. Having eaten well you now come and suddenly say to me, 'Uncle, give me my rightful girl!' Are you the father's sister's son or the mother's brother's son? You (dare) to address me using kin terms? Oh servant! Take him and beat him well," he said. The servants took hold of him. They tied him to a house post, brought a whip and beat him. Seeing this from inside the house Vishnu thought, "I'll look after this later" and he returned to the milk sea.

Song:
For five hours with a whip, my Lord
See the whip thread fly in strands like fluffed cotton,
my Lord
For six hours with a whip, my Lord
They beat him with insolence, my Lord
With a whip having a blunt tip, my Lord
They are beating until the end breaks, my Lord
Not being able to stand the blows, my Lord
He is jumping the height of a man, my Lord
Kuṉṉuṭaiyā's blood flows
The blood is flowing, the blood is flowing
With tired hands and body
And with a heavy head that was tired
The Lord fell to the earth and was unconscious
for 3 nāḻikais[1]

King: "Oh servant. He who came as a beggar thought he would become a bridegroom. The villain! Fetter his chest, his wrists, his feet, his shoulders, his thighs. Tie him in twelve places, lay him down in front of the Pilliar temple, put a stone on him so big that even an elephant cannot lift it, and leave him. Villain. Let him die there."

The servants did all this.

After a little while Kuṉṉuṭaiyā came to consciousness and opened his eyes. He realized that there was a huge stone on top of him.

---

[1] Periods of 24 minutes each.

பால்கடலில் பரந்தாமன் குன்னுடையாசாமி அழுவதைப் பார்த்து, "ஆகா! நாம் கொடுத்த வரத்தில் குறை வந்து நேர்ந்தது. தந்த வரத்தில் தவறு நேர்ந்துவிட்டது" என்று கருடவாகனமேறிப் பால்கடலை விட்டுப் புறப்பட்டார்.

(பாட்டு) பால்கடல் என் சாமி விட்டுமங்கே
வாறாரே என் சாமி மாயவரும்
பூலோகம் என்னாத்தாத் தேடியல்லோ
மய்யமா என் சாமி பறக்குறாரே
வாளவந்தி என்னாத்தா நாடு தேடி
வருகிறாரே என் சாமி பரந்தாமன்

வந்து பிள்ளையார் கோவிலில் இறங்கி என்ன வடிவெடுத்தார் ஏகாந்த ரூபழகர்! பஞ்சை பரதேசிபோல், தாசன்போல் வடிவெடுத்தார். வலம்புரிச் சங்கும் கோபாலப் பெட்டியும் தோளில் போட்டு, "அப்பா, குன்னுடையாக் கவுண்டா!" என்று கூப்பிட்டார்.

குன்னுடையாசாமி கண்ணைத் திறந்து பார்த்து, "அடே ஓட்டைவாய் தாசா! என் ஆயுள் உள்ளவரை அரசரிடம் இருந்து காலம் தாட்டுவேனே, உன் பேச்சைக் கேட்டு எனக்கு இந்தக் கதி நேர்ந்துவிட்டதே!"என்றார்.

மாயவர் - "அப்பா! வரும் வினை வழியிலும் தாங்காது, நாம் எவ்வளவு நாள் கஷ்டப்பட வேண்டுமோ கஷ்டப்பட்டுத்தான் ஆக வேண்டும் பொறு"

என்று மாயவர் மேற்கில் திரும்பிப் பார்த்து அரசர் அரண்மனைக்கு விபூதியை வீசினார். வீசியவுடன் மாயருடைய கிருபையால் அரண்மனை,

(பாட்டு) வானமும் பூமியும் கொழுந்திட்டு எரியுதே
மாமன் அரண்மனை அதுதானோ
தன்தீபட்டுமல்லோ தானே எரியுதே
மாமன் அரண்மனை அதுதானோ

Kuṉṉuṭaiyā: "Oh Lord of a crore of worlds in the universe. He who holds a conch, and a discus, and lives in Vaikunta. You have brought this condition upon me."

Thinking of Vishnu, Kuṉṉuṭaiyā cried.

Vishnu saw Kuṉṉuṭaiyā crying from (his place on) the milk sea.

Vishnu: "Oh ho! The boon I granted is lacking in something, my help has been thwarted," he said. Mounting his Garuda vehicle he set off from the milk sea.

Song:
Our Lord has left the milk sea
He is coming, Lord Vishnu is coming
He comes searching for the earth, my Lord
Making it his target, my Lord
Our Lord is searching for The Country Called Vāḷavanti
The Lord, Parantāmā, is coming

Arriving, he dismounted at the Pilliar temple. What form will the solitary divine being take? He took the form of a mendicant, a wanderer in time of famine. He held a right spiralled conch and a sacred yellow box on his shoulder. "Oh man. Kuṉṉuṭaiyā Kavuṇṭar!", he called.

Kuṉṉuṭaiyā: (Kuṉṉuṭaiyā) opened his eyes. "Oh you big-mouthed mendicant! As long as I am alive I should have stayed with the King and served him. But, listening to your words I have ended up in this condition!"

Vishnu: "Man. These impediments along the road won't last. How ever much we have to suffer, it is only with suffering that things can be achieved. Be still!" said Vishnu, and he turned back to the west to look at the King's palace. As soon as sacred ash was thrown (on) the palace, it caught fire.

Kuṉṉuṭaiyā's Song:
The fire burns with flames reaching to the sky
Is that the palace of my uncle?
It's burning on account of its own fire[1]
Is that the palace of my uncle?

---

[1] Probably meaning its own injustice.

அரசர் - "அடே சேவகரே! ஓடிவாருங்கள். அரண்மனை தீ பிடித்து எரிகிறது. என்ன செய்வது? இது யாருடைய சாபமோ! நாம் யாருக்கு என்ன அநியாயம் செய்தோம்? இங்கு யாராவது அக்கினிக்கட்டு[1] மந்திரம் தெரிந்தால் கூட்டிவாருங்கள் சீக்கிரம். அப்படியே குன்னுடையாக் கவுண்டன் உயிருடன் இருக்கிறானா, செத்து விட்டானா அதையும் பார்த்து வாருங்கள்."

மாயவர் - "குன்னுடையாக் கவுண்டா! கல் ரொம்ப பாரமாக இருக்கிறதா?"

குன்னுடையா - "சுவாமி! கொஞ்சம் பாரமாகத்தான் இருக்கிறது."

மாயவர் - "அப்பா! அது ஒன்றும் செய்யாது. நான் இருக்கிறேன். சற்று நேரம் அப்படியே இரு."

இந்தச் சமயம் சேவகர் இரண்டுபேரும ஓடி வந்தார்கள். வரும்போது பிள்ளையார் கோவிலில் மாயவர் உட்கார்ந்திருப்பதைப் பார்த்து யாரோ பெரிய தவசி போல் இருக்கிறது என்று நமஸ்காரம் செய்தார்கள்.

மாயவர் "அப்பா! மங்களம் உண்டாகட்டும்!"

சேவகர் - "சுவாமி! தங்களுக்கு அக்கினியைக் கட்ட மந்திரம் தெரியுமா?"

மாயவர் "அப்பா! அதெல்லாம் எனக்கு ஒன்றும் தெரியாது. நான் வடக்கிலிருந்து கன்யாகுமரி தீர்த்தமாடச் செல்கிறேன். நடந்து வந்த அலுப்பில்[2] கொஞ்ச நேரம் இருந்து போகலாமென்று தங்கினேன்."

சேவகர் - "சுவாமி! எங்கள் அரசர் அரண்மனை தீ பிடித்து எரிகிறது. எங்களால் ஒன்றும் செய்ய முடியவில்லை. தங்களால் முடியுமா என்று கேட்டேன்."

மாயவர் - "அப்பா! என்னாலும் முடியாது."

சேவகர் அரண்மனைக்குத் திரும்பிச்சென்று அரசரைப் பார்த்து, "அரசே! குன்னுடையாக் கவுண்டன் அப்படியே உயிருடன் படுத்திருக்கிறான். பரதேசி ஒருவர் அருகில் உட்கார்ந்திருக்கிறார். அவரை மந்திரம் தெரியுமா என்று கேட்டோம். எனக்குத் தெரியாது என்று சொல்லிவிட்டார்" என்றனர்.

"ஓகோ, அப்படியா!" என்று அரசர் இருவரும் பிள்ளையார் கோவிலுக்குப் புறப்பட்டுச் சென்றார்கள். கோவிலில் போய்ப் பரதேசியைப் பார்த்து நமஸ்காரம் செய்தார்கள்.

மாயவர் - "அப்பா! மங்களம் உண்டாகட்டும்."

---

1. நெருப்பைக் கட்டுப்படுத்தும் மாயவித்தை 2. தளர்ச்சி

King: "Oh servant. Run here. The palace has caught on fire and is burning. What's to be done? Whose curse is this? What sin have we committed towards whom? Bring someone who knows magical fire-controlling verses here quickly! And on the way back see if Kuṉṉuṭaiyā Kavuṇṭar is alive or dead."

Vishnu: "Kuṉṉuṭaiyā Kavuṇṭar! Is the stone very heavy?"

Kuṉṉuṭaiyā: "Lord! Of course it is a little heavy."

Vishnu: "Man. That won't cause any problems. I am here. Stay like that for a little while."

At this point two servants came running. As they approached they saw Vishnu seated at the Pilliar temple. They thought, "Who is that great penitant there?" and they greeted him respectfully.

Vishnu: "Man. Blessings to you!"

Servant: "Lord. Do you know any magical fire-controlling verses?"

Vishnu: "Man. I don't know anything about such things. I am travelling from the north to the sacred waters of Kanyākumari.[1] I am resting here awhile to recover from the fatigue of walking."

Servant: "Our King's palace has caught on fire and we can do nothing," (the servant) said. "He is asking if you can."

Vishnu: "Man. There is nothing I can do."

The servant returned to the house and saw the King.

Servant: "King! Kuṉṉuṭaiyā Kavuṇṭar is lying there still alive. A mendicant is sitting nearby. We asked if he knew any magical verses. He answered, 'I don't know any'."

King: "Oh, is it so?", said the two kings and set off for the Pilliar temple. At the temple they saw the mendicant and greeted him politely.

Vishnu: "Man. Blessings to you!"

---

1 The southern most tip of India.

அரசர் - "சுவாமி! தங்களைப் பார்த்தால் பெரிய மகான்போல் தெரிகிறது. எங்கள் அரண்மனை தானே தீ பிடித்து எரிகிறது. தங்களுக்கு அதை நிறுத்த வழி தெரியுமா சுவாமி?"

மாயவர் - "அப்பா! அதெல்லாம் எனக்கு ஒன்றும் தெரியாது. நீங்கள் யாரை அடித்தீர்களோ, என்ன பாபம் செய்தீர்களோ, அதனால்தான் தானே தீப்பிடித்து எரிகிறது."

அரசர் - "சுவாமி, அப்படி நாங்கள் ஒரு பாபமும் செய்யவில்லை. இதோ தங்கள்முன் கல்லை வைத்து அமுக்கப்பட்டிருப்பவன் இருபது வருஷத்துக்கு முன் பொன்னி வளநாட்டிலிருந்து வந்தான். அவன் பெயர் குன்னுடையாக் கவுண்டன் என்றும் சிறு வயதில் தாய் தகப்பனை இழந்து விட்டதாகவும் சொன்னான். நாங்கள் இவனுக்கு வேலை கொடுத்து இருபது வருஷமாக ஆதரித்து வந்தோம். தினசரி எப்போதும் பட்டியில் படுப்பவன் நேற்று இரவு அரண்மனைக்கு வந்து முன் உறாலில்[1] படுத்திருந்தான். நாங்கள் கருட தரிசனத்துக்குப் போக, கோழி கூவியவுடன் எழுந்துவந்தோம். வரும்போது இவனைப் பார்த்து, "யாரடா?" என்று கேட்டோம். அதற்கு அவன், "மாமா எனக்கு உரிமைப் பெண் கொடுங்கள்" என்று கேட்டான். அதற்கு நாங்கள் இவன் அத்தை மகனா அல்லது மாமன் மகனா என்று கோபம் தாங்காமல் அடித்து இதோ தங்கள்முன் இருக்கும் கல்லுக் கடியில் வைத்து அமர்த்திவிட்டோம். இதைத்தவிர வேறு எந்தப் பாபமும் செய்யவில்லை."

மாயவர் - "அட சண்டாளா! அவனைக் கல்லை வைத்து அமர்த்தி விட்டாயா? அவன் யார் என்று நினைத்தாய்? இதைத்தவிர என்ன பாபம் செய்ய வேண்டும்? ஏன் அரண்மனை தீப்பிடித்து வேகாது? எடு கல்லைச் சீக்கிரம்" என்றார்.

அப்படியே அரசர்கள் கல்லை அப்புறம் எடுத்தார்கள். கல்லை எடுத்ததும் குன்னுடையாசாமி எழுந்து மாயவரை நமஸ்காரம் செய்தார்.

மாயவர் - "அப்பா அரசர்களே!குன்னுடையாக் கவுண்டன் யார் என்று உமக்குத் தெரியுமா?"

அரசர் - "சுவாமி! தெரியாது."

மாயவர் - "உன் அத்தை அரியனாச்சியை எந்த ஊருக்கு மணம் செய்தீர்கள்? உன் அப்பா, உன் தாயை எங்கு மணம் முடித்தார்?"

1. Hall

King: "Lord. When I look at you, you seem to be a great man. Our palace has caught fire spontaneously and is burning. Do you know any way of halting it, Lord?"

Vishnu: "Man! I don't know anything about that. Have you beaten someone? What sin have you committed? That is why, perhaps, that a spontaneous fire (has started)."

Kings: "Lord! We haven't committed any wrongs like that. This dirty stray that you see before your feet came from The Country Where The Kāveri Flows twenty years ago. He said his name was Kuṉṉuṭaiyā Kavuṇṭar and that his mother and father died at an early age. We gave him work and protected him for twenty years. He always slept in the cattlefold. Last night he came in the dark and slept on the front porch. As we left, to view a Garuda when the cocks crowed, we found him and asked, 'Who are you?'. He answered 'Uncle! Give me my rightful girl!' We asked him if we were (to understand that) we were his mother's brother's (sons)[1] and we beat him, not being able to suppress our anger. We left him to die under the stone that is before you. Except for this we have not done anything heinous."

Vishnu: "Oh villains! You placed a stone on him and left him to die! Did you think about who he is? What more heinous crime is needed? Why shouldn't an angry fire seize the palace? Lift the stone quickly," said Vishnu.

So the kings lifted the stone to one side. When the stone was removed Kuṉṉuṭaiyā got up and paid his respects to Vishnu.

Vishnu: "Men, kings! Who is Kuṉṉuṭaiyā Kavuṇṭar? Do you know?"

Kings: "Lord. We don't know."

Vishnu: "Where was your father's sister, Ariyaṉācci, married? Where did your father marry your mother?"

---

[1] Kuṉṉuṭaiyā addresses them as "mother's brothers" for respect. Actually, they are the sons of Kuṉṉuṭaiyā's mother's brother.

அரசர் - "சுவாமி! என் அத்தையை வெள்ளி வளநாட்டுக்கு மணம் செய்து கொடுத்தார்கள். என் தாயையும் வெள்ளி வளநாட்டில் இருந்துதான் என் அப்பா திருமணம் செய்தார்."

மாயவர் - "சரி! அப்படியானால் குன்னுடையாக் கவுண்டன் உன் அத்தை மகன்தான். அவனுடைய கிரகம் உச்சம் பெற்றிருந்ததால் பங்காளிகளிடம் ஐந்து வருஷம் கஷ்டப்பட்டு உங்களிடம் இருபது வருஷம் இருந்து கடைசியில் இந்தக் கஷ்டமும் அனுபவித்துத் துன்பப்பட்டான். அப்பா! மரிக்கொளுந்தாக் கவுண்டா! அவனுடைய தேசம் பொன்னி வளநாட்டில் உள்ள ஒரு கால்வாய்க்கு உன்னுடைய நாடு ஈடாகாது. ஆகையால் தான் அவன் முறைப்படி பெண் கேட்டிருக்கிறான். பதில் இல்லாமல் அவனுக்குப் பெண் கொடுத்துவிடு."

அரசர் - "சுவாமி! இதுவரை எனக்கு அத்தைமகன் என்று தெரியாது. இப்போது தாங்கள் சொன்னபிறகு தான் தெரியும். சுவாமி! அவன் அத்தை மகனாக இருந்தாலும் இருபது வருஷம் எங்களிடம் நாடறிய வயிற்றுப் பிழைப்புக்கு இருந்ததினால் என் அரண்மனையில் வைத்துக் கல்யாணம் செய்ய மாட்டேன். அவன் எங்களுக்குச் சரியான மைத்துனன் அல்ல."

மாயவர் - "அப்பா! உனக்கு இஷ்டமிருந்தால் அரண்மனையில் வைத்துக் கல்யாணம் செய். இல்லாவிட்டால் உடன்பிறந்தவளை அனுப்பிவிடு. நான் கல்யாணம் செய்து வைக்கிறேன்.

அரசர் - "சுவாமி! அப்படியே நல்லது, என் பிறந்தவளை அனுப்பி வைக்கிறேன்"

என்று சொல்லி அரண்மனைக்குச் சென்று, "அடி மாதர்களே! சீக்கிரம் தாமரையைக் கூட்டிச்சென்று பிள்ளையார் கோவிலில் பரதேசி இருக்கிறார், அவரிடம் விட்டுவாருங்கள்" என்று சொன்னார். அதன் பிரகாரம் மாதர்கள் தாமரையைக் கூட்டிச் சென்று பிள்ளையார் கோவிலில் விட்டு வந்தார்கள். தாமரை பரதேசியைக் கண்ணில் பார்த்ததும் மாயவர் என்று தெரிந்து கொண்டாள்.

(பாட்டு)

அட்டம் பணியுறாளே மாயருக்கு
ஆளடிமை செய்யுறாளே
பாதம் பணியுறாளே ஆயருக்குப்
பணிவிடைகள் செய்யுறாளே

Kings: "Lord! Our father's sister was married in The Country Of Abundance. Our father brought our mother from The Country Of Abundance at his wedding."

Vishnu: "Good. If it is so then, of course, Kuṉṉuṭaiyā Kavuṇṭar is your father's sister's son. Because he was born when evil planets were in the ascendancy he suffered for five years in the place of his clansmen and then came to you for twenty more. At the end of his troubles he suffered pain. Man! Marikoḷuntā Kavuṇṭar! In his land, The Country Where The Kāveri Flows, there is a river for which there is no equivalent (in your land). Therefore, in the correct way, he is asking you for a girl. Give him the girl (your sister) without argument."

Kings: "Lord. Until now we didn't know he was our father's sister's son. Only now that you have said it do we know. Lord! Even if he is the father's sister's son, he has been with us for twenty years, and made a livelihood (from us). We won't marry him in our palace. He is not a proper brother-in-law for us."

Vishnu: "Man. If it is your wish, perform the wedding in the palace. Otherwise send your sister to me and I will do it."

Kings: "Lord! It is good like that. I will send my sister," he said and went to the palace. "Oh, maid! Bring Tāmarai here quickly. There is a mendicant at the Pilliar temple. Take her to him and come," he said.

So the women took Tāmarai, left her at the Pilliar temple and returned. Tāmarai looked into the eyes of the mendicant and realized that he was Vishnu.

Song: She paid obeisance to Vishnu
She offered her services
She fell at Vishnu's feet
She offered her services

மாயவர் - "அம்மா, தாமரை! சரணமென்ற பேர்களுக்கு மரணமொரு நாளுமில்லை! வாழ்வாய் வளர்ந்திருப்பாய்! மண்டபத்தில் பெற்றிருப்பாய்! அம்மா தாமரை, உன் ஆயுள் உள்ளவரை பஞ்சக் கொடியைப் பாலக்கொடியாக்க நான் வாறேன். ஏழைக் குடியை எதிர்குடியாக்க எம்பெருமாள் நான் வருகிறேன்" என்று மனதார வாழ்த்தினார். பின்பு, "தாமரை! உனக்கும் உன் அத்தைமகன் குன்னுடையாக் கவுண்டனுக்கும் இப்போது திருமணம் செய்து வைக்கப் போகிறேன்" என்றார்.

தாமரை - "சுவாமி! தங்கள் சித்தம். எனக்குத் துணைப் பெண்கள் வேண்டும் சுவாமி!"

மாயவர் உடனே தெய்வகன்னிகளை வரவழைத்துவிட்டுப் பிள்ளையார் கோவில் முன் ஒரு ஏ(யா)கசாலையைச் சிருஷ்டித்துத் தேவர்களையும் அரசர்களையும் வரவழைத்து, கொங்குநாட்டில் காராளவம்சத்திற்கு ஏற்பட்ட சீர் முறைப்படிச் செய்து, குன்னுடையாசாமிக்கு இணையோங்கப் பிறந்தவள்[1] இல்லாததால் இந்திரன் தேவி வந்து இணையோங்கினாள். கல்யாணத்திற்குப் பதினெட்டு வாத்தியமும் தெய்வலோகம் கேட்கும்படி முழங்கியது. மாயருடைய சிருஷ்டியில் மாங்கல்யம் செய்து மணவறை சோடித்து முறைப்படி ஓமம் வளர்த்தி, மாங்கல்யபூஜை நடத்தி, பிராம்மணர் மாங்கல்யத்தைக் குன்னுடையாசாமியிடம் கொடுத்துப் பெண் கழுத்தில் கட்டச் சொன்னார். அதன் பிரகாரம் குன்னுடையாசாமி மாயவரை நினைத்து மாங்கல்யத்தை மூன்று முடிச்சுப் போட்டுக் கட்டினார். பின் பெண்ணும் குளித்துவிட்டுப் பிள்ளையார் கோவில் சென்று சாமியைத் தரிசனம் செய்தபின், எல்லோரையும் நமஸ்காரம் செய்தார்கள். தேவர்கள் அரசர்கள் எல்லோரும் "மங்களம் உண்டாகட்டும்!" என்று வாழ்த்தினார்கள்.

தேவர்கள் எல்லோரும் சென்றபின் மாயவர் குன்னுடையாசாமியிடம், "அப்பா! குன்னுடையாக் கவுண்டா, நீங்கள் இனிப் பொன்னி வளநாடு சென்று சுகமாக வாழுங்கள்" என்று சொல்லிவிட்டுப் பால்கடல் சென்றார். மாயவர் சென்ற பின் தாமரை தன் நாதனிடம்,

தாமரை - "நாதா! இருபது வருஷமாக எங்கள் வீட்டில் இருந்தீரே! தாங்கள் அத்தை மகன் என்று என்னிடம் சொல்லக்கூடாதா?"

1. உடன் பிறந்தவள்

Vishnu: "Oh lady! There is no death for those who take refuge in me!
You will live long!
You will receive honors in your palace hall."

Vishnu: "Oh lady, Tāmarai! As long as you live I will be there to convert the symbol of famine into the symbol of fertility. I will make the family that belongs to the poor become a family of the rich." Thus, he blessed Tāmarai wholeheartedly. Then he said, "Tāmarai! I am now going to marry you and your father's sister's son Kuṉṉuṭaiyā Kavuṇṭar."

Tāmarai: "Lord! At your pleasure, (but) I need some female assistants."

Vishnu immediately called some heavenly maids, (then) he created an entire canopied structure. He invited the heavenly beings and the kings to come. He performed the original (wedding) rituals of the Koṅku[1] agricultural community. As Kuṉṉuṭaiyā had no sister to perform the 'uniting ritual'[2] Indra's wife herself arrived and did this. For music, the eighteen instruments heard in heaven were played. Vishnu created a wedding thread with his divine power. A Brahman recited the wedding chants, and lit the sacred fire in the correct way. He performed the wedding necklace pūjā and handed the necklace to Kuṉṉuṭaiyā, telling him to tie it on the girl's neck. Kuṉṉuṭaiyā thought of Vishnu and tied the necklace with three knots. After the bride and groom had bathed, they viewed the God of the Pilliar temple. (Then) they paid their respects to everyone. The kings and everyone else gave them their good wishes saying "blessings to you."

After all the gods had left Vishnu said to Kuṉṉuṭaiyā, "Man! Kuṉṉuṭaiyā Kavuṇṭar! Now go to The Country. Where The Kāveri Flows, now, (with my) blessings." Having said this, he left for the milk sea. After he left Tāmarai said to her husband:

Tāmarai: "Husband! You were a member of our household for twenty years! Was it not possible to tell me (during this time that) you were my father's sister's son?"

---

[1] The region called Koṅkunāṭu, where the Kavuṇṭar community is found. [2] A special ritual stressing the unity of brother and sister, performed only by the Koṅku Kavuṇṭar community and their associates.

குன்னுடையா - "பெண்ணே! எனக்கும் இதுவரை மாமன் வீடு என்று தெரியாது. மூன்று நாட்களுக்கு முன் மாயவர் பட்டிக்கு வந்து என்னை எழுப்பி, "தாமரை உன் அத்தைமகள்" என்றும் "உன் தாயின் பிறந்த இடம் வாளவந்தி நாடு" என்றும் "தாமரையை உனக்குத் திருமணம் செய்து வைக்கிறேன்" என்றும் சொன்னார். அதன் பின்தான் நீ மாமன் மகள் என்று தெரியும். அதுவரை எனக்குத் தெரியாது. தெரிந்திருந்தால் உன்னிடம் சொல்லாமல் இருப்பேனா?"

தாமரை - "நாதா! நம்முடைய நாடு எது?"

குன்னுடையா - "பெண்ணே! பொன்னி வளநாடு."

தாமரை - "நாதா! தங்களுக்குப் பூமி இருக்கிறதா?"

குன்னுடையா - "பெண்ணே! என் தாய் தந்தை இருக்கும்போது ஆயிரமா நிலம், எழுபத்து ஒன்பது சீமை, மதுரவண்டூராங்குளம் ஒரு போகத்தில் ஏழாயிரம், எண்ணாயிரம் சலகை நெல் விளையும். காவேரி ஆறு கடை திரண்டு வந்தாலும் வெள்ளாங்குளத்துக்கு, வீரண மதகுக்கு விதை நெல்லுக்கும் பத்தாது. இவ்வளவு பூமியும் எங்களுடையதுதான். என் ஐந்து வயதில் தாய் தந்தை இறந்துவிட்டார்கள். பிறகு தங்க வளநாட்டிலிருந்து பங்காளிகள் வந்து வழக்கிட்டுப் பூமி, திரவியம் எல்லாம் அபகரித்துக் கொண்டு என்னையும் கூட்டிச் சென்று எருமை மேய்க்க போட்டார்கள். அங்கு ஐந்து வருஷம் கஞ்சி வாங்கிக் குடித்து வெறுத்துப் பின் புறப்பட்டு வந்து உங்கள் நாட்டில் இருபது வருஷமாக இருந்தேன். இப்போது எம்பெருமாள் கிருபையால் உன் வரலாறு தெரிந்து உன்னைத் திருமணம் செய்துவைத்தார். ஆகையால் இந்த இருபது வருஷமாகப் பங்காளிகள் நம் பூமியை உழுது அரசருக்குக் கப்பம் கட்டி வருகிறார்கள். இப்போது நம்மளுக்குப் பூமி இருக்குமா?"

தாமரை - "நாதா! கொஞ்சம் பூமிகூட கிடையாதா?"

குன்னுடையா - "பெண்ணே! ஒரு ஏக்கர்[1] கூடக்கிடையாது"

தாமரை -

(பாட்டு)
உங்களையே சிறைபோட அங்குச் சிறைபோட
என் தலையில் பிரமன் எழுதினானோ
ஐயோ எழுதினானோ
கண்டு சிறைபோடாமல் அங்குப் போடாமல்

1. Acre

Kuṉṉuṭaiyā:	"Wife! I didn't know myself until now that this was my uncle's house. Vishnu came to the cattlefold only three nights ago, woke me up and said, 'Tāmarai is your aunt's daughter, that is, your mother was born in The Country Of Abundance. I am going to marry her to you'. It was only after that that I knew you were my mother's brother's daughter. If I had known would I not have told you?"
Tāmarai:	"Husband! What is our country?"
Kuṉṉuṭaiyā:	"Wife! The Country Where The Kāveri Flows."
Tāmarai"	"Husband! Do you have land?"
Kuṉṉuṭaiyā:	"Wife! When my mother and father were alive, in my country there was an enormous paddy field with seventy-nine subdivisions, in Maturavaṉṭūrāṅkuḷam. One crop yielded seven or eight thousand calakai of paddy. And (even) if all the water in the Kāveri flowed into the Veḷḷāṅkuḷam tank and through the sluice gate it would not have been enough to soak the seeds (before planting them). All this property was ours. (But) when I was five years old my parents died. Then the clansmen came from The Country of Prosperity. They came, took the land, fraudulently seized everything, and distributed it amongst themselves. (Then) they took me back with them and made me graze buffaloes. After receiving gruel there for five years I gave up and left for your country where I have spent twenty years. Now Vishnu, in his grace, has let me know the true story and married me to you. The clansmen have now ploughed our land for twenty years and are paying tribute to the King. Will there be land for us now?"
Tāmarai:	"Husband! Don't you have even a little land?'
Kuṉṉuṭaiyā:	"Wife. Not even one acre."
Tāmarai's Song:	They imprisoned you there, imprisoned you Has Brahma written (this fate) on my head, alas, has he written it? Not imprisoning you on sight

பரந்தாமன் கொண்டு சிறை
கொண்டுசிறை போட்டாரே அங்கு போட்டாரே
கன்னியழுகுறாளே அங்கு அழுகுறாளே
காந்தேறி வாடுறாளே அங்கு வாடுறாளே
மங்கையழுகுறாளே அங்கு அழுகுறாளே
மலர்க்கிளியா வாடுறாளே அங்கு வாடுறாளே.

இங்கு இப்படி இருக்கும்போது அரண்மனையில் அரசர் சேவகனைக் கூப்பிட்டு, "நீ போய்த் தாமரை இருக்கிறாளா போய்விட்டாளா பார்த்துவா" என்றார். சேவகன் சென்று பார்த்து வந்து, "அரசே! இருவரும் பிள்ளையார் கோவிலில் இருக்கிறார்கள்" என்றான்.

அரசர் "சரி" என்று தாமரைக்குச் சீர்வரிசை வறட்டுமாடு, குருட்டு ஆடு, காது அறுந்துபோன உறி பிரிந்த கூடை, மொச்சைக் குரனையில் முதல் குரனை, கம்பு அரிசியில் கால் குரனை, எண்ணைக்கடன், நெருப்புக்கடன், தண்ணீர்க் கடன், எல்லாம் சேர்த்து, "அடே! சேவகா, இவைகளைக் கொண்டுபோய்ப் பிள்ளையார் கோவிலில் தாமரையிடம் கொடுத்து வாருங்கள்" என்றார். சேவகர் எடுத்துச் சென்று தாமரையிடம் கொடுத்துவிட்டு வந்தார்கள்.

குன்னுடையா - "பெண்ணே! இவை எல்லாம் என்ன?"

தாமரை - "நாதா! இதுதான் நம்மளுக்குச் சீர்வரிசை."

குன்னுடையாசாமி சென்று சாமான்களைப் பார்த்தார். "பெண்ணே! இது என்ன?"

தாமரை - "நாதா! அதுதான் நாம் இந்த நாட்டில் தீண்டாமல் இருக்க தினை அரிசி ஒரு வள்ளம் வரதே என்று வரகு அரிசி ஒரு வள்ளம், இந்தச் சண்டாளன் கொடுத்து இருக்கிறான். நாதா தங்களுடைய குலம் என்ன?"

குன்னுடையா - "பெண்ணே! காராள வம்சம் விரகுதிங்கா பெருங்குடிக் கவுண்டர்கள்."

தாமரை - "நாதா! தாங்கள் வரகு அரிசியைக் கையில் தொடக்கூடாது," என்று வரகு அரிசியையும் தினை அரிசியையும் எடுத்துப் பிள்ளையார் கோவில் முன் வாரி இறைத்து விட்டாள். பிறகு மற்ற சாமான்களை எடுத்துக் கூடையில் போட்டுத் தலையில் வைத்து,–"நாதா! புறப்படுங்கள். நம் நாட்டுக்குப் போகலாம்" என்று புறப்பட்டார்கள்.

(பாட்டு) வாளவந்தி நாடுவிட்டு நாடு விட்டுப்
பொன்னி வள நாடுவாறார் நாடு வாறார்
காடான காடுவிட்டுக் காடு விட்டுக்

Parantāma took you to the prison
And imprisoned you there
The maiden is crying there
She is wilting there being hot with indignation
The woman is crying there, she is crying
The flower parrot is pining there, she is pining

At this time the kings in the palace called their servants and said, "Go see if Tāmarai is there." The servants went to look and returned.

Servants: "King! The two of them are at the Pilliar temple."

The Kings said, "O.K." Then they laid out Tāmarai's gifts. They brought together dried up cows, blind goats, a broken pot-hanger,[1] a quarter of a measure of crumbled bean pieces, a quarter of a measure of Kampu millet, and a loan of oil, of fire and of water. "Oh servants! Take all this to Tāmarai at the Pilliar temple and return." The servants took it all and gave it to Tāmarai.

Kuṉṉuṭaiyā: "Wife! What's all this?'

Tāmarai: "Husband! These are our gifts." Kuṉṉuṭaiyā came close and looked at the things.

Kuṉṉuṭaiyā: "Wife! What is this?"

Tāmarai: "Husband. That measure of tinai millet symbolizes that we must never touch this land again. The measure of varaku millet symbolizes that we must not come back. These are villain's gifts, oh husband! What is your clan?'

Kuṉṉuṭaiyā: "Oh wife. It is the Great Clan of Varuku Millet Non-Eaters of the farmers' caste."[2]

Tāmarai: "Husband. You must not touch varaku millet with your hands, " she said, and threw both the varaku and tinai millet on the path in front of the Pilliar temple. She put the rest of the things in a basket, placed this on her head and said,

"Husband! Let's set out for our country!" So they set out.

Song: Leaving The Country Called Vāḷavanti, leaving that country
Approaching The Country Where The Kāveri Flows, approaching that country

---

[1] A special device for hanging pots from the ceiling. [2] Some Kavuṇṭar clan names imply such totem-like restrictions.

கட்டப்பொள்ளி சோலைவிட்டார்
சோலைவிட்டார்
ஓங்கிவளர்ந்ததொரு வளர்ந்ததொரு
மூங்கில் வனசோலை விட்டார்
சோலை விட்டார்
சாமியும் முன்நடக்கோ முன் நடக்கோ
பத்தினியும் பின்துடர்ந்தாள் பின் துடர்ந்தாள்

உச்சி உருவம், மத்தியான நேரம், வேகாத வெய்யில், வெந்தெரிஞ்ச கானல், மேனி பறக்குது, வேர்வை சிதறுது. இருவரும் கானலில் நடந்து வரும் போது,

தாமரை -

(பாட்டு) நாதா கனங்காலு சில்லிரண்டும்[1]
எனக்குக் கட்டுவிட்டுப் போகுதுங்கோ
முளங்காலு சில்லிரண்டும்
எனக்கு மூச்சுவிட்டுப் போகுதுங்கோ
நல்ல தண்ணிதாகமுங்கோ நாதா
எனக்கு நாவுணர்ந்து போகுதுங்கோ
பச்சைத் தண்ணி தாகமுங்கோ
எனக்குப் பல்லுலர்ந்து போகுதுங்கோ

"நாதா! எனக்குத் தாகத்துக்கு ஒரு கை தண்ணீர் வேண்டும்" என்று ஒரு ஆலமரத்தடியில் கூடையை இறக்கி வைத்துவிட்டு, "நாதா! நான் பதினாறு வருஷமாக வெய்யில் முகம் காணாதிருந்ததால் நடக்க முடியவில்லை" என்று ஆலமரத்தடியில் தாமரை படுத்தாள்.

குன்னுடையாசாமி, "நான் போய்த் தண்ணீர் கொண்டுவருகிறேன்" என்று புறப்பட்டார்.

இவர்கள் கானகத்தில் இப்படி இருக்கும்போது வாளவந்தி நாட்டில் அரசர் குன்னுடையாக் கவுண்டனும் தாமரையும் சென்றபின் கட்டளையிட்டார்.

அரசர் - "அடே சேவகா! தாமரையாள் இனி நம்ம நாட்டுக்கு வராமல் இருக்க வேண்டும். சங்குவடத்தில் மதுக்கா(ள)ர[2] முள்வெட்டி ஏழு அணி[3] வேலிபோட்டு அடைத்துவிடுங்கள். சண்டாளி இனி நம் நாட்டுக்கு வராமல் இருக்கட்டும்."

1. கணுக்கால் மூட்டு 2. காரைமுள் இனத்தைச் சேர்ந்த ஒரு வகைப் புதர்ச்செடி 3. அடுக்கு

Leaving the great field, leaving the field
Leaving the Kaṭṭapoḷḷi forest, leaving the forest
Leaving the forest where the bamboo grows tall, grows tall
Leaving the bamboo forest,
The Lord walks in front, walks in front
The chaste woman walks behind, walks behind
At the sun's Zenith, at midday, in the boiling sun, in the unrelenting heat
The bodies move swiftly, sweat pours forth
The two approach, walking in the heat

Tāmarai's Song:
Husband, my ankle is really hurting
I am losing control
Tie me, leave me and go
My knee-caps are hurting a lot
I am panting
I am very thirsty for water, husband
My tongue is parched
I am yearning for cold water
My teeth are becoming dry

Tāmarai: "Husband! I need a handful of water for my thirst," she said, setting her basket down at the foot of a banyan tree. "Husband. My face has not seen the sun for sixteen years. I cannot walk, She said and lay down under the banyan tree.

Kuṉṉuṭaiyā: "Wife! I will go and fetch some water," He said and set off.

After Kuṉṉuṭaiyā Kavuṇṭar and Tāmarai had left The Country Called Vāḷavanti, and were in the forest the kings (ordered):

King: "Oh servant! Tāmarai must never return to our country. Cut some thorns along the river bank using the boat and use them to built seven fence rows. Let it be such (a fence) that the villain will never come back to our country."[1] The servants put up the thorn fencing as the kings ordered.

---

[1] This is the height of improper behaviour towards a sister, who should always be welcome in her natal home.

அரசர் கட்டளையிட்டபடிச் சேவகர் வேலி அடைத்தார்கள். இப்படி இருக்கும் போது கானகத்தில் தண்ணீருக்குச் சென்ற குன்னுடையாசாமி தாமரைக்குத் தண்ணீர் கொண்டு வந்து கொடுத்தார். தாமரை தண்ணீரை வாங்கி முகம் கழுவி தாகத்துக்குத் தண்ணீர் சாப்பிட்டபின் எழுந்து, "நாதா! நம்ம நாடு இன்னும் எவ்வளவு தூரம் போகவேண்டும்?" என்றாள்.

குன்னுடையா - "பெண்ணே! இனிப் பக்கத்தில்தான் இருக்கிறது. கொஞ்ச தூரம் தான்" என்று இருவரும் கொஞ்ச தூரம் சென்றபின்,

குன்னுடையா - "பெண்ணே! அதோ தெரியுது பார்! அதுதான் மண்ணைப் பகிர்ந்த மதுக்கரை செல்லாத்தாள் கோவில், அதுதான் நம்ம நாடு."

(பாட்டு)

அப்படியே நல்லதென்று
இனி அன்புடனே வருகிறார்கள்
மண் போட்டுப் பொன் விளையும் இனி
மகுட பொன்னி நாடு வந்தார்

மண்ணைப் பகிர்ந்து மதுக்கரை செல்லாத்தாள்
எல்லை பகிர்ந்து எதுநாடும் தீர்த்தவள்
காணி[1] வெட்டிக் கல்லு வெட்டித் தீர்த்த
கருத்துள்ள செல்லாத்தாக்

கோவிலுக்கு இருவரும் வந்து சேர்ந்தார்கள். வந்து கோவிலைப் பார்க்கும் போது வாசல் எல்லாம் குப்பை நிறைந்து பாழடைந்து கிடந்தது. தாமரை விளக்குமாற்றை எடுத்து நன்றாகச் சுத்தம் செய்தாள்.

குன்னுடையா - "பெண்ணே! இன்று திங்கள் கிழமை நல்ல நாள், செல்லாத்தாளுக்குப் பூஜை செய்யவேண்டும்"

என்று காசிக்கரைக்கு இருவரும் சென்று குளித்துவந்து கம்பு அரிசி கால்படி போட்டு அமுது வைத்தார்கள். பின்பு இருவரும் செல்லாத்தாளைப் போய்ப் பார்த்து,

(பாட்டு)

அட்டம் பணியுறாரே
ஆத்தாளுக்கு ஆளடிமை செய்யுறாரே
பாதம் பணியுறாரே அங்குப்
பணிவிடைகள் செய்யுறாரே

1.நிலம்

At this time, in the forest, Kunnuṭaiyā returned with water and gave it to Tāmarai. After washing her face and quenching her thirst Tāmarai stood up.

Tāmarai: "Husband. How much farther is it to our country?"

Kunnuṭaiyā: "Wife. It is close by now, only a little further," he said. After they had walked a little further:

Kunnuṭaiyā: "Wife! Look at that. There are the subdivided lands and the Cellāttā temple of Matukkarai. That, there, is our country."

Song:

It was good, that
They came lovingly
(To where) gold springs from the earth
They came to The Sweet Country Where The Kāveri
Flows
Matukkarai Cellāttā, the one who divided the earth
The one who defined the boundaries of countries
The one with a tank that was dug through stone
To the temple of thoughtful Cellāttā

The two of them arrived at the temple. Looking at the temple they saw garbage scattered about the entrance. Tāmarai took a broom and swept it well.

Kunnuṭaiyā: "Wife! we must perform a pūjā for Cellāttā on Monday, the auspicious day."

The two went to the bank of the Kāci river to bathe and then returned and set out carefully a quarter measure of maize.[1] Then the two of them went to look at Cellāttā.

Song:

Falling at her feet
Offering their services to the goddess
Paying obeisance at her feet
Offering their services (to her)

---

[1] Kampu, a kind of field corn.

செல்லாத்தா -

(பாட்டு) "அப்பா! சரணமென்ற பேர்களுக்கு மரணமொரு
நாளுமில்லை!
வாழ்வாய் வளர்ந்திருப்பாய் மண்டபத்தில் பெற்றிருப்பாய்!
பின்னை பெறுவாய் பெருமாளைப்போல் இருப்பாய்!
இன்னும் பறுவாய் ஈசுவரன் போல் இருப்பாய்!"

செல்லாத்தா - "அப்பா! "

குன்னுடையா - "தாயே! ர் குன்னுடையாக் கவுண்டன்."

செல்லாத்தா - "அப்பா! ய் இருபத்தைந்து வருஷம் ஆகிறது. இவ்வளவு நாளாக எ ந்தாய்?"

குன்னுடையா - "தாயே! ருஷம் பங்காளி வீட்டில் எருமை மேய்த்துக் காலம் க ந்தேன். பிறகு புறப்பட்டுத் தங்க வளநாட்டை விட்டு வ நாடுபோய்த் தாய்மாமன் வீட்டில் இருபது வருஷம் ழித்து வரும் காலத்தில் மாயவர் வந்து என் மாமன் ம மரையை மணம் முடித்து வைத்தார். அதுவரை மாமன் வீ தெரியாது."

செல்லாத்தா - "சரி! இது ன் மனைவியா?"

குன்னுடையா - "ஆம், தா

தாமரை செல்லாத்தாளை ம் பணிந்தாள்.

செல்லாத்தா - "மங்களம் ாகட்டும்! குன்னுடையாக் கவுண்டா! உன் தகப்பன் ான பிறகு இந்த இருபத்தைந்து வருஷமாக எனக்குப் இல்லை. இன்று எனக்குப் பூஜை செய்."

குன்னுடையாக் கவுண்ட ப்படியே செல்லாத்தாளுக்குப் பதினெட்டு அலங்காரம் செய்து தேங் ம், அமுது படைத்துப் பூஜை ஆரம்பித்தார்.

(பாட்டு) கிணி கிண மணி அடிப்பார்
கீழிருந்த புத்தண்ணி மேலே தெளிப்பார்
பாலால் அபிஷேகம் தேனால் அபிஷேகம்
பன்னீர் அபிஷேகம் விபூதி அபிஷேகம்
பாங்குடன் நடக்குது பார்

அரு பூஜை, குருபூஜை, ஐம்பத்தி எட்டு லிங்க பூஜையும் சரியாக முடித்துவிட்டுக் குன்னுடையாசாமி ஆத்தாளை நமஸ்காரம் செய்தார். செல்லாத்தாளுக்கு இன்பம் குளிர்ந்து இருதோளும் பூரித்துச் சாலைமனம்[1] குளிர்ந்து சந்தோஷமடைந்தது.

1. பரந்த மனம்

Cellāttā: Man! There is no death for those who take
refuge in me
You will live long!
You will receive honors in your palace hall
You will go to (Vishnu's) heaven!
You will live like Siva himself

Cellāttā: "Man! Who are you?"

Kuṉṉuṭaiyā: "Oh, Mother! I am Kuṉṉuṭaiyā Kavuṇṭar."

Cellāttā: "Man. It has been twenty-five years since you left. Where have you been for so many days?"

Kuṉṉuṭaiyā: "Oh, Mother! I spent five years in the houses of the clansmen, grazing buffaloes. Then I set off from the Country Of Prosperity and spent twenty years in the home of my mother's brother. After twenty years had passed Vishnu came and married me to my mother's brother's daughter, Tāmarai. Until then I didn't know it was my mother's brother's house."

Cellāttā: "Good. Is this your wife?"

Kuṉṉuṭaiyā: "Yes, oh Mother."

Tāmarai looked at Cellāttā and worshipped her.

Cellāttā: "Blessings to you! Kuṉṉuṭaiyā Kavuṇṭar! For the past twenty-five years, since your father's death, I have had no pūjā. Do a pūjā for me now!"

So right then Kuṉṉuṭaiyā made the eighteen decorations. He broke a coconut and set it before her with bananas, and began a pūjā.

Song: "Ting, ting," he rang the bell
From below he lifted the pot of water on high
A bath of milk, a bath of honey
A bath of rose water, a bath of sacred ash
It was (all) performed properly

When he had finished the god's pūjā, pūjā for the family deity, and the pūjā to the fifty-eight lingams he paid his respects to the goddess.

He was blessed by Cellāttā, his shoulders straightened, the hall of his heart became peaceful and he was happy.

செல்லாத்தா - "அப்பா! குன்னுடையாக் கவுண்டா! இந்த இருபத்தைந்து வருஷத்திற்குப் பிறகு இன்றுதான் என் மனம் குளிர்ந்தது. இன்று முதல் எனக்கு மூன்றுகால பூஜையும் சரியாக நடத்து."

குன்னுடையா - "சரி தாயே! அப்படியே செய்கிறேன்."

(பாட்டு) அப்படியே நல்லதென்று அன்புடனே நடத்துறாரே
இந்தப் பிரகாரம் நடக்குதுபார் ஈசுவரிக்கு
இனி மாதம் மூன்று மழை பெயும்
பொன்னி வளநாட்டில் வருஷமொரு கல்மாரி

குன்னுடையாசாமி பொன்னி வளநாடு வந்ததும் அன்று மழை பெய்து வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியது. அன்று இந்திரன்தேவி இறையவன் போய் மறைந்து சந்திரன் தேவி சூரியன் கிளம்பியவுடன் தங்க வளநாட்டிலிருந்து பங்காளிக் கவுண்டர்கள் ஆயிரம் பேரும் ஏரைப் பூட்டிக்கொண்டு பொன்னி வளநாடு ஆயிரமா நிலத்துக்கு வந்தார்கள்.

இதைப் பார்த்த தாமரை, "நாதா! அதோ போகும் ஏருகள் எங்கு போகிறது சாமி?" என்றாள்.

குன்னுடையா - "பெண்ணே! நான் உனக்கு முன்பு சொன்னதுபோல் நம் பங்காளிக் கவுண்டர்கள் பூமியை அபகரித்தார்கள் என்று சொன்னேன் அல்லவா, அவர்கள்தான் உழவடிக்கச் செல்கிறார்கள்.

(பாட்டு) கண்டு சிறை நாதா போடாமல்
கொண்டு சிறை மாயவர் போட்டாரே
உங்களையே சிறைபோட இனிச் சிறைபோட
என் தலையில் பிரமன் எழுதினானோ?
கன்னி அழுகிறாள், காந்தேறிச் சோருகிறாள்
மங்கையழுகிறாள் மலர்க் கிளியா வாடுறாளே

தாமரை - "நாதா! இப்பேர்ப்பட்ட பூமிகளைப் பங்காளிகளுக்குத் தத்தம் செய்து எங்க நாட்டில் வந்து வயிற்றுச் சோறுக்கு இருந்தீரா சாமி?"

குன்னுடையா - "அடி பெண்ணே! உன்னிடம் எத்தனை தரம் சொல்வது, நான் குழந்தையாய் இருக்கும்போது அபகரித்துக் கொண்டார்கள் என்று? சரி வா, எனக்குச் சாதம் போடு பசியாகிறது."

குன்னுடையாசாமி, கண்ணாங்கலமெடுத்து[1] வார்த்து, அன்னம் படைத்து, ஆவின் பால் சாப்பிட்டு, தாம்பூலம் போட்டு, "பெண்ணே! இரு. நான் ஒரு

1. ஒரு வகைப் பாத்திரம்

Cellāttā: "Man, Kunnuṭaiyā Kavuṇṭar! This is the first time my heart has been at peace in twenty-five years. From today there must be three pūjās performed for me daily.

Kunnuṭaiyā: "Good, oh mother. I will do just that."

Song:
It was said to be good, it was done with love
See how things were done for Īswari[1]
After this it rained three times a month
In The Country Where The Kāveri Flows each year
there was a shower of hail stones

When Kunnuṭaiyā came to The Country Where The Kāveri Flows it began to rain and there were floods everywhere. On that day, as soon as the moon set in search of Indra[2] and the sun rose in search of the moon, the thousand clansmen harnessed their oxen to the ploughs, came to The Country Where The Kāveri Flows and to the enormous paddy field. When Tāmarai saw this she said, "Husband. All those oxen, where are they going?"

Kunnuṭaiyā: "Wife! As I told you earlier, our clansmen fraudulently seized the land. Therefore it is they who are coming to plough it."

Tāmarai's Song:
The slave, my husband, was not fed candy
The slave taken in hand by Vishnu was not fed
They will make you a slave, again enslave you
Brahma has written this fate on my head
The chaste woman is crying, she is hot with
indignation, she is wilting
The woman is crying, The flower parrot is pining

Tāmarai: "Husband. You gave all these prosperous lands freely to your clansmen. Now, have you (come back) here for your food?'

Kunnuṭaiyā: "Oh, wife! How many times have I told you? When I was a child they behaved fraudulently. O.K., come and feed me, I'm hungry." Kunnuṭaiyā lifted his heavy feet, washed his hands, ate food, drank cow's milk and chewed betel leaf and areca nut. "Oh wife. Stay here. I'm going somewhere and will return, "he said. He then put a shawl on his

---

[1] Cellāttā is a form of Īswara, the wife of Siva. [2] Looking for him, in the god's counsel chamber.

பக்கம் சென்றுவருகிறேன்" என்று கொங்காடை கம்பளியைத் தோளில் போட்டுக் கொப்பி கட்டிய கவையை எடுத்துக்கொண்டு புறப்பட்டார்.

(பாட்டு) பொன்னி வளநாடு விட்டு நாடு விட்டுச்
சோழதேசம் தேடித்தேடியல்லோ
மேடு கண்டா மெல்லநடை மெல்லநடை
பள்ளங்கண்டா பெருத்த நடை வருகுறாரே

சோழதேசம் வந்து அரண்மனைக்குச் சென்று அரசரைக் கண்டு,

(பாட்டு) அட்டம் பணியுறாரே
அரசருக்கு ஆளடிமை செய்யுறாரே
பாதம் பணியுறாரே ராஜனுக்குப்
பணிவிடைகள் செய்யுறாரே

அரசர் - "அப்பா! சரணமென்ற பேர்களுக்கு மரணமொரு நாளும் இல்லை! அப்பா, நீ யார்?"

குன்னுடையா - "அரசே! நான்தான் பொன்னி வளநாடு கோளத்தாக் கவுண்டர் மகன் குன்னுடையாக் கவுண்டன்."

அரசர் - "குன்னுடையாக் கவுண்டா! இருபத்தைந்து வருஷத்திற்குமுன் பங்காளியுடன் சென்றாய். இவ்வளவு நாளாக எங்கு இருந்தாய்? சௌக்கியமாய் இருந்தாயா?"

குன்னுடையா - "அரசே! பங்காளியுடன் சென்று ஐந்து வருஷமாக எருமை மேய்த்து, கஞ்சி வாங்கிக் குடித்துக் காலம் கழித்தேன். ஐந்து வருஷமாகக் குழம்பும் சாத(மு)ம் கிடைக்காமல் புறப்பட்டு வாளவந்திநாடு போய் அரசரிடம் சேர்ந்து இருபது வருஷமாக இருந்துவந்தேன். இப்படியிருக்கும்போது இருபது வருஷம் முடிந்ததும் மாயவர் வந்து, நான் இருப்பது தாய்மாமன் வீடு என்றும், மாமன் மகள் தாமரையை எனக்குக் கல்யாணம் செய்து, நேற்று என் நாட்டுக்கு அனுப்பிவைத்தார். நான் வந்துதான் நேற்று செல்லாத்தாளுக்குப் பூஜை செய்தேன். அரசே! நேற்று நான் வந்ததும் பொன்னி வளநாட்டில் நல்ல மழை பெய்தது. இன்று காலையில் தங்க வளநாட்டிலிருந்து பங்காளிக் கவுண்டர்கள் ஆயிரம் ஏருமாடுகளையும் பூட்டி ஓட்டிவந்தார்கள். அதை என் மனைவி பார்த்து, "நாதா! அந்த ஏர்மாடுகள் எங்குப் போகிறது?" என்று கேட்டாள். நான், பெண்ணே! நம் பூமி, ஆயிரமா நிலத்தை உழவடிக்கப் பங்காளிகள் ஓட்டிப போகிறார்கள்" என்றேன். "நாதா, இவ்வளவு பூமியையும் பங்காளிக்குத் தத்தம் செய்துவிட்டீரா?"

shoulder, took his staff made from the branch of a tree, and set out.

Song: Leaving The Country Where The Kāveri Flows,
leaving it
Looking for the Chola Country, looking (for it)
Seeing hills and climbing them, climbing
Seeing valleys and crossing them, he goes

He reached the Chola Country, came to the palace and saw the King.

Song: He paid obeisance to the King
He offered his services
He fell at his feet
He offered his services

King: "Man. There is no death for those who take refuge in me. Man, who are you?"

Kuṉṉuṭaiyā: "King! I am the son of Kōḷattā Kavuṇṭar of The Country Where The Kāveri Flows."

King: "Kuṉṉuṭaiyā Kavuṇṭar. You left with your clansmen twenty-five years ago. Where have you been all this time? Are you all right?"

Kuṉṉuṭaiyā: "King . I spent five years with my clansmen, herding buffalo and drinking millet gruel. For five years I had no curry and rice so then I gave that up, and went to The Country Called Vāḷavanti. I spent twenty years there. After twenty years, Vishnu came and told me the place where I was was the home of my uncle. He (then) married me to my mother's brother's daughter, Tāmarai. Yesterday he sent me off to my (own) country. As soon as I arrived I performed a pūjā at the Cellāttā temple . Oh King, when I came yesterday a fine rain fell on The Country Where The Kāveri Flows. Today, in the morning the clansmen from The Country of Prosperity came with a thousand teams of oxen. My wife saw them and asked, 'Husband. Where are those oxen going?' I answered, 'wife, the clansmen are coming to plow the thousand shares of land.' She said, 'Husband. How much land was given to the clansmen? Husband. In your time of want how can you bear to see them come to plow.' She

என்று என்னைச் சண்டைபிடித்தாள். நான் அவளிடமும் சொல்லாமல் தங்களைப் பார்த்துப் போகலாமென வந்தேன்."

அரசர் - "சரி நல்லது. அடே பாரிவில்லை சேவகா! உடனே தங்க வளநாடு சென்று ஆயிரம் கவுண்டர்களையும் கூட்டிக்கொண்டு வா"

சேவகர் - "நல்லது அரசே!"

(பாட்டு) அப்படியே நல்லதென்று சேவகர்
அன்புடனே நடந்தார்கள்
சோழதேசம் விட்டுமல்லோ
தங்க வளநாடு வாறார்கள் சேவகரும்

உச்சி உருவம் மத்தியான்நேரம் சேவகர் தங்க வளநாடு பிள்ளையார் கோவில் வந்து சேர்ந்தார்கள். அப்போது ஆயிரம் கவுண்டர்களும் ஏரை அவிழ்த்து விட்டு வீட்டுக்குச் சாப்பாட்டுக்கு வந்தார்கள். வரும்போது பிள்ளையார் கோவிலில் சேவகர்கள் நிற்பதைப் பார்த்து, "என்ன சமாச்சாரம்?" என்று கேட்டார்கள்.

சேவகர் - "கவுண்டர்களே! அரசர் தங்கள் ஆயிரம் பேர்களையும் சீக்கிரம் கூட்டிவரச் சொன்னார்."

கவுண்டர்கள் "சரி" என்று வீட்டுக்குப் போய்ச் சாப்பிட்டுவிட்டுச் சோழதேசம் புறப்பட்டார்கள்.

(பாட்டு) தங்கவள நாடுவிட்டு நாடு விட்டுச்
சோழதேசம் வருகிறாரே கவுண்டர்களும்
ஓட்டம் பெருநடையா பெரு நடையா
ஒரு விரைவாய் வருகிறாரே கவுண்டர்களும்
வேகாத வெய்யலிலே வெய்யலிலே
வெந்தெரிஞ்ச கானலிலே வருகிறாரே

ஆயிரம் கவுண்டர்களும் சோழதேசம் வந்து அரசரைக் கண்டு,

அட்டம் பணிந்து ஆளடிமை செய்தார்
பாதம் பணிந்து பணிவிடைகள் செய்தார்

அரசர் - "அப்பா! மங்களம் உண்டாகட்டும்! சரி, ஆயிரம்பேரும் வந்துவிட்டீர்களா?"

கவுண்டர் - "அரசே! எல்லோரும் வந்துவிட்டோம்."

அரசர் - (குன்னுடையாக் கவுண்டனைச் சுட்டிக்காட்டி)
"இங்கு நிற்பவன் யார் என்று தெரியுமா?"

began to argue with me like this. Without telling her I decided to come here to see you."

King: "O.K., good . Oh, badge-wearing servant! Go immediately to The Country of Prosperity and bring the thousand Kavuṇṭars here."

Servant: "Good, King!"

Song: Like that, the servants said "fine"
They served with love
They left the Chola Country
The servants are going now to The Country of
Prosperity

When the sun was at its zenith, at midday, the servants arrived at the Pilliar temple in The Country of Prosperity. At that time the thousand Kavuṇṭars had left their plows and come home to eat. On the way they saw the servants waiting at the Pilliar temple. "What news is there?", they asked.

Servants: "Oh Kavuṇṭars! The King told us to bring all of you thousand people to him quickly." "Fine" said the Kavuṇṭars. They went home to eat and then set off for the Chola Country.

Song: Leaving The Country of Prosperity, leaving it
The Kavuṇṭars are approaching the Chola Country
They take large running steps, large steps
They come with swift dispatch, the Kavuṇṭars
In the burning sun, in the sun
In the unrelenting, they are approaching

The thousand Kavuṇṭars arrived in the Chola Country and addressed the King.

They paid obeisance to him, they offered their services
They fell at his feet, they offered their services

King: "Men. Blessings to you! Good, have all thousand of you come?"

Kavuṇṭars: "King. We have all come."

King: Showing them Kuṉṉuṭaiyā Kavuṇṭar he asked, "Do you know who is standing here?'

Kavuṇṭars: "Who is it, we don't know, oh King."

கவுண்டர் - "அது யாரோ எங்களுக்குத் தெரியாது அரசே!"

அரசர் "சரி! நான் சொல்கிறேன். இங்கு நிற்பவன் நீங்கள் இருபத்தைந்து வருஷத்திற்கு முன் கூட்டிச் சென்ற பொன்னி வளநாடடுக் கோளத்தாக் கவுண்டர் மகன் குன்னுடையாக் கவுண் டன்தான்."

பங்காளிக் கவுண்டர்கள் குன்னுடையாசாமியைப் பார்த்து அவர்களுக்குள், "அண்ணா! இவனைப் பார்த்தீர்களா? இருபத்தைந்து வருஷத்திற்கு முன் காசிக்கரைக்கு எருமை மேய்க்கப் போனவன் செத்துவிட்டான் என்று நினைத்தோம். இப்போது நம் முன் யானைபோல் நிற்கிறான்" என்று ஒருவருக்கொருவர் காதுடன் பேசிக்கொண்டு மனம் தளர்ந்து போனார்கள் ஆயிரம் பேரும்.

அரசர் - "கவுண்டர்களே! நீங்கள் குன்னுடையானைக் கூட்டிப்போய் ஐந்து வருஷம் ராகிக்கூழை ஊற்றிச் சாகடிக்க நினைத்தீர்கள். அவன் தப்பித்து வாளவந்திநாடு சென்று, இருபரு வருஷமாகக் காலம் கழித்துவரும் காலத்தில், செல்லாத்தாள் இருபத்தைந்து வருஷமாகப் பூஜையில்லாமல் மாயவரிடம் போய், "என் ஆயிரமா நிலத்தையும் பங்காளிகள் அபகரித்து என் நம்பியானையும் கூட்டிப் போய்விட்டார்கள். நான் இந்த இருபத்தைந்து வருஷமாகப் பூஜையில்லாமல் இருக்கிறேன். நீங்கள் உடனே போய் என் நம்பியானைக் கூட்டிவாருங்கள்" என்று மாயவரிடம் செல்லாத்தாள் முறையிட்டாளாம். மாயவர் வாளவந்திநாடு போய்க் குன்னுடையாக் கவுண்டனுக்கு மாமன் மகளைத் திருமணம் செய்து பொன்னி வளநாட்டுக்கு அனுப்பிவைத்துவிட்டார். அவன் வந்து இப்போது செல்லாத்தாளுக்கு மூன்றுகால பூஜையும் சரியாக நடத்துகிறான். ஆகையால் காட்டுக்காரன் காட்டுக்கு வந்தான், வீட்டுக்காரன் வீட்டுக்கு வந்தான் என்ற பழமொழிபோல் நான் உங்களிடம் முன் சொன்னதுபோல் அவனுடைய நாட்டையும் பூமியையும் அவனுக்கே விட்டுவிடுங்கள்."

கவுண்டர் - "நல்லது அரசே! ஆனால் இந்தப் போகம் விதைத்து வெள்ளாமை செய்துவிட்டோம். அதை எடுத்துக்கொண்டு அடுத்த போகம் விட்டு விடுகிறோம்."

அரசர் - "சரி, அப்படியிருந்தாலும் குன்னுடையானுக்கு இன்று பூமி கொஞ்சமாவது விடவேண்டும். இப்போது அவன் கல்யாணம் செய்து குடும்பத்துடன் இருக்கும்போது பூமி கொஞ்சமாவது இருந்தால்தானே அவன் ஏதாவது வெள்ளாமை செய்து

King: "O.K. I will tell you. This is Kuṉṉuṭaiyā Kavuṇṭar, son of Kōḷattā Kavuṇṭar of The Country Where The Kāveri Flows, whom you took with you twenty-five years ago."

Kavuṇṭars: The Kavuṇṭar clansmen looked at Kuṉṉuṭaiyā and said to themselves, "Oh brother! Do you see him? We thought he died twenty-five years ago[1] when he took the buffaloes to the Kāci (the Benares) river bank to graze. Now he stands before us as strong as an elephant." So they spoke between one another, and their hearts became weak.

King: "Oh, Kavuṇṭars. You took Kuṉṉuṭaiyā Kavuṇṭar and fed him millet gruel for five years thinking he would die. He escaped and spent twenty years in The Country Called Vāḷavanti. After this, at a time when Cellāttā has not had a pūjā for twenty-five years, she went to Vishnu. 'My enormous paddy field was fraudulently seized by the clansmen and my devotee taken away by them. I have been without a pūjā for twenty-five years. Go immediately and bring my devotee,' she said to Vishnu, asserting her rights. Vishnu went to The Country Called Vāḷavanti and married Kuṉṉuṭaiyā to his mother's brother's daughter. Then he sent him off to The Country Where The Kāveri Flows. Now that he has arrived Cellāttā is getting all three pūjās each day, therefore, as the proverb says:

"The one from the forest returned to the forest
The one from the city returned to the city"

And (so), as I said to you earlier, give him back his country and his land."

Kavuṇṭars: "Good, Oh King. But we will take this harvest first. Having taken it we will then turn it over (to him) before the next (replanting)".

King: "O.K. Let it be so. But you must give some land to Kuṉṉuṭaiyā now. He is now married, and has a family. Only by having a little land to plant will he be able to live.

---

[1] This figure should be twenty.

பிழைக்கமுடியும். ஆகையால் எப்படியாவது பூமி கொஞ்சம் குன்னுடையானுக்கு விட்டுவிடுங்கள்."

கவுண்டர் - "அரசே! பொன்னி வளநாட்டுக்கு மேற்கே ஒரு மைல் தூரத்தில் ஒஞ்சிறுக்கனுவாய் மேட்டில்[1] முக்கால் வள்ளக்காடு இருக்கிறது. அதைப் போய் உழுவடை செய்யட்டும். அடுத்த போகம் பூமியை விட்டுவிடுகிறோம்."

அரசர் - "அப்பா, குன்னுடையாக் கவுண்டா! அவர்கள் சொல்லியபடி இந்தப் போகம் அந்த முக்கால் வள்ளக்காட்டையும் உழுது வெள்ளாமை செய். உனக்கு யோகம் இருந்தால் கொஞ்சம் விளையாமலாப் போகும். அடுத்த போகம் உன் ஆயிரமா நிலத்தையும் விட்டுவிடுவார்கள்.

பங்காளிக் கவுண்டர்கள் அரசரிடம் விடைபெற்றுத் தங்க வளநாடு சென்றார்கள்.

அரசர் - "குன்னுடையாக் கவுண்டா! நீயும் சென்று பூமியை உழுவடை செய்."

குன்னுடையாசாமி "சரி, நல்லது அரசே!' என்று பொன்னி வளநாடு வரும்போது தாமரை சாமியை எதிர்பார்த்து நின்றுகொண்டு இருந்தாள். குன்னுடையாசாமி வந்ததும் சாப்பிட்டுத் தாம்பூலம் போட்டு உட்கார்ந்தார்.

தாமரை - "நாதா! மேற்கிலிருந்து வந்தீர்களே? எங்கு போயிருந்தீர்கள்?"

குன்னுடையா - "பெண்ணே! அரசரைப் பார்க்கச் சோழதேசம் சென்று வந்தேன்."

தாமரை - "அரசரிடம் என்ன காரியமாகச் சென்றீர்கள்?"

குன்னுடையா - "பெண்ணே! என் ஐந்து வயதில் தாய்தந்தை இறந்த காலத்தில் பங்காளிகள் வந்து பூமியைக் கேட்டார்கள். அப்போது அரசர் "அப்பா பங்காளிகளே! பூமியையும் ஒப்புக்கொண்டு குழந்தையையும் கூட்டிச் செல்லுங்கள். குழந்தை பெரியவன் ஆகி வந்தால் அவன் பூமியை அவனுக்கே விட்டுவிட வேண்டும்" என்று ஒரு நிபந்தனை சொல்லியிருந்தார். அதனால் இன்று அரசரிடம் போய் நம் பூமியைக் கேட்டேன். உடனே அரசர் பங்காளிகளுக்கு ஆள்விட்டுக் கூட்டிவந்து பூமியை எனக்கு விடும்படிச் சொன்னார். அதற்குப் பங்காளிகள், "அரசே! இந்தப் போகம் வெள்ளாமை செய்துவிட்டோம். அடுத்த போகம் விடுகிறோம்" என்று சொன்னார்கள். அதற்கு

---

1 புஞ்சை நிலத்தின் பெயர்

Therefore, whatever happens, give Kuṉṉuṭaiyā a little land (now).

Kavuṇṭars: "Oh King! One mile west of The Country Where The Kāveri Flows is a little field. It is three-quarters of a vaḷḷam in size. Let him plow that. We will give him (the rest of the) land after the next harvest."

King: "Man. Kuṉṉuṭaiyā Kavuṇṭar! As they have said, plough and reap that three-quarters of a vaḷḷam for this harvest. If you are lucky you will be able to grow a little. They will turn over the enormous paddy field to you at the next harvest."

So the clansmen took leave of the King and returned to The Country of Prosperity.

King: "Kuṉṉuṭaiyā Kavuṇṭar. You go and plow too."

Kuṉṉuṭaiyā: "Good, Oh King," he said and set off for The Country Where The Kāveri Flows, where Tāmarai was standing waiting for him. As soon as Kuṉṉuṭaiyā returned he ate, took betel and areca nut and sat down.

Tāmarai: "Husband! You have come from the West. Where have you been."

Kuṉṉuṭaiyā: "Oh wife! I have come from seeing the King of the Chola Country."

Tāmarai: "For what reason did you go to see the King?"

Kuṉṉuṭaiyā: "Oh wife! When I was five years old, and my parents died, the clansmen came and asked for the land. At that time the King said, 'take the land and also the child, but when the child becomes an adult then you must give the land back to him.' This was the contract agreement he announced. Therefore, today I went and asked for my land. The King immediately sent for the clansmen and at their arrival told them to give the land to me. The clansmen answered, 'King, let us reap the coming harvest and then we will turn it over.' The King replied that some land was to be given to me now.

அரசர் இப்போது கொஞ்ச பூமியாவது எனக்கு விடும்படிச் சொன்னார். பிறகு பங்காளிகள் நம் ஊருக்கு மேற்கு ஒஞ்சிறுக்கனுவாய் மேட்டில் முக்கால் வள்ளபூமி இருக்கிறது. அதைப் போய் இந்தப் போகம் உழுவடை செய்யச் சொல்லுங்கள் என்றார்கள். அதன்படி அரசர் என்னைப் போய் அந்தப் பூமியை உழச் சொன்னார்.

சரி, நான் செல்லாத்தாளுக்குப் பூஜை செய்துவிட்டுத் தங்க வளநாடு போய் ஏரை ஓட்டிவரச் சொல்லிவிட்டு வருகிறேன்."

தாமரை - "நாதா! நம் ஆயுள் உள்ளவரை பங்காளிகளிடம் எதற்கும் போகக்கூடாது. இந்தப் பொன்னிநாட்டைச் சேர்ந்த ஆயிரம் கிராமத்தில் ஒன்றாகிய அணியப்பூர்[1] சென்று கவுண்டரைக் கேட்டு ஏர் ஓட்டிவரச் சொல்லுங்கள்."

(பாட்டு)

அப்படியே நல்லதென்று
அன்புடனே வருகிறாரே
அணியப்பூர் தேடியல்லோ
வருகிறாரே சாமியுந்தான்
ஆளைக்கண்டால் அன்னநடை
ஆள் மறைந்தால் குதிரைவேகம்

குன்னுடையாசாமி அணியப்பூர் வந்து பெரியவீட்டுக் கவுண்டரின் வீட்டுக்குப் போய்க் கவுண்டரைப் பார்த்தார்.

பெ. கவு - "சாமி! தாங்கள் எந்த ஊரோ?"

குன்னுடை - "அப்பா! நான் பொன்னி வளநாடு கோளத்தாக் கவுண்டர் மகன் குன்னுடையாக் கவுண்டன்."

பெ. கவு - "சாமி! இருபத்தி ஐந்து வருஷத்திற்கு முன் பங்காளிக் கவுண்டர்கள் கூட்டிப் போனார்களே? தாங்கள் இவ்வளவு நாளாக எங்கு இருந்தீர்கள்?"

குன்னுடையா - "அப்பா! நான் பங்காளி வீட்டில் ஐந்து வருஷம் இருந்து பின் வாளவந்திநாடு போய் இருபது வருஷம் இருந்தேன். அங்கு என் மாமன் மகள் தாமரையைக் கல்யாணம் செய்து இப்போது நம் நாட்டுக்கே வந்துவிட்டேன்.

1. திருச்சி மாவட்டத்தில் வீரமலைக்கும் மணப்பாறைக்கும் இடையிலுள்ள ஓர் ஊர்

The clansmen said that to the west of our town, on Oñciṛukkanuvāy[1] hill there is three-quarter of a vaḷḷam of land that I can plow for the coming harvest. Then, the King told me to go plow that land."

"So. I will finish the pūjā at Cellāttā's temple, and go to The Country of Prosperity. I will tell them to bring the ox teams, and then return."

Tāmarai: "Husband. As long as we live we must never ask the clansmen for anything. Go and ask for an ox team from the Kavuṇṭars of Aṇiyappūr, one of the thousand (revenue) villages that belongs to The Country Where The Kāveri Flows."

Song:
It was said to be good
He went with love
Looking for Aṇiyappūr
He's going, the Lord is going
When he saw someone he walked like a swan
When he saw no one, he had the speed of a horse

On arriving in Aṇiyappūr Kuṉṉuṭaiyā went to the house of the biggest Kavuṇṭar and was received there.

Big K.: "Lord. What is your town?"

Kuṉṉuṭaiyā: "Man. I am Kuṉṉuṭaiyā Kavuṇṭar, the son of Kōḷattā Kavuṇṭar of The Land of Increasing Gold."

Big K.: "Lord! Twenty-five years ago weren't you taken by the Kavuṇṭar clansmen? Where have you been all this time?

Kuṉṉuṭaiyā: "Man! I spent five years in the houses of my clansmen. After that I went to The Country Called Vāḷavanti and spent twenty years there. I married my mother's brother's daughter, Tāmarai. Now I have returned to my own country," he said.

The powerful Kavuṇṭar immediately called all the men of the town.

1 Calf's teat hill? Later the same place is called lizard stone hill.

உடனே பெரியவீட்டுக் கவுண்டர் ஊர்க்காரரர் எல்லோரையும் கூப்பிட்டு, "அப்பா! நம் பெரியவீட்டுக் குன்னுடையாக் கவுண்டர் இருபத்தைந்து வருஷமாகப் போய் இப்போது தப்பிப் பிழைத்துத் தாய்பேர் சொல்ல வந்து விட்டார். இப்போது என் வீட்டுக்கு வந்திருக்கிறார்" என்றார். இதைக் கேட்ட ஊர்க் கவுண்டர் எல்லோரும் குன்னுடையாசாமியைக் காணிக்கை வைத்துக் காண்பார் சில கோடி, மாணிக்கம் வைத்து வருந்துவார் சில கோடி.

கவுண்டர்கள் - "ராஜாவே! தாங்கள் வந்துதான் நம்ம நாட்டுக்கு மழை பெய்துள்ளது."

குன்னுடையா "அப்பா, கவுண்டர்களே! மழை பெய்ததால்தான் உங்களிடம் வந்தேன்!"

கவுண்டர்கள் - "சாமி! எங்களைத் தேடிவந்தது என்ன விஷயம்?"

குன்னுடையா - "கவுண்டர்களே! நாளைக்குக் காடு உழுவடை செய்யவேண்டும். உங்களை ஏர்மாடு கேட்டுப் போகலாமென்று வந்தேன்."

கவுண்டர்கள் - "சாமி! அப்படியே காலையில் வீட்டுக்கு ஓர் ஏர் ஓட்டி வருகிறோம். தாங்கள் விதைத் தானியங்கள் சேகரித்து வையுங்கள்."

குன்னுடையா - "சரி, நல்லது! நான் போய்வருகிறேன்" என்று புறப்பட்டார்.

(பாட்டு) இந்தப் பிரகாரம் இனி
நடக்குது பார் நல்பருவம்
அப்படியே நல்லதென்று
அன்புடனே நடக்குது பார்

குன்னுடையாக் கவுண்டர் அணியப்பூரிலிருந்து பொன்னிவளநாடு வந்து சேர்ந்தார்.

தாமரை - "நாதா! பெரியவீட்டுக் கவுண்டர் ஏர்மாட்டுக்கு என்ன சொன்னார்?"

குன்னுடையா - "பெண்ணே! நாளைக் காலையில் ஓட்டி வருவதாகச் சொன்னார்கள். விதைத் தானியங்கள் வாங்கி வைக்கச் சொன்னார்கள்."

தாமரை - "நாதா! விதைத் தானியம் அவர்களிடமே வாங்கி வரச் சொல்லாமல் நான் மறந்துவிட்டேன். தாங்கள் மறுபடியும் அணியப்பூர் சென்று பெரியவீட்டுக் கவுண்டரிடம் சோளம் ஆறு படி, கொள்ளு ஆறு படி வாங்கி வாருங்கள்."

குன்னுடையா - "பெண்ணே! அவர்கள் ஏர் கொண்டு வருவதுமல்லாமல் விதைத் தானியமும் அவர்களிடம் கேட்பதா? வேண்டாம். நான்

Big K.: "Oh men. Our Kuṉṉuṭaiyā Kavuṇṭar of the biggest house, who left twenty-five years ago, has escaped and has returned, announcing his mother's name.[1] He has just now come to my house."

Hearing this the Kavuṇṭars of the town brought Kuṉṉuṭaiyā gifts, revered him and poured a few crores of jewels before him.

Kavuṇṭar: "Oh, King! Now that you have come there is rain in our country."

Kuṉṉuṭaiyā: "Oh Kavuṇṭar men! It has rained. I have returned to you."

Kavuṇṭar: "Lord. Why have you come looking for us?"

Kuṉṉuṭaiyā: "Oh Kavuṇṭars! I must plough a field tomorrow. I came to ask for your oxen team."

Kavuṇṭar: "Lord. We will bring an oxen team to your house tomorrow. Gather your seeds together in readiness."

Kuṉṉuṭaiyā: "Good. O.K. I will take leave," he said and set off.

Song: So the monarch ruled thus
It was said to be good
It was done with love

Kuṉṉuṭaiyā Kavuṇṭar returned to The Country Where The Kāveri Flows from Aṇiyappūr.

Tāmarai: "Husband! What did the Kavuṇṭar of the biggest house say to the pair of oxen?'

Kuṉṉuṭaiyā: "Oh, wife. He said he would bring it here tomorrow morning and to get the seeds ready."

Tāmarai: "Husband. I forgot to tell you to ask him for seeds. Return to the Kavuṇṭar of the biggest house in Aṇiyappūr and ask him for six measures[2] of maize and six measures of kollu millet.

Kuṉṉuṭaiyā: "Oh, wife! They are bringing the plough. We must not ask them for seeds (too). I will go to The Country of Prosperity and get them from the clansmen.

---

[1] Actually, he uses his father's name, Kōḷattā, to identify himself. [2] About fifteen cups.

தாமரை - "நாதா! நம் ஆயுள் உள்ளவரை நாம் பங்காளி வீட்டுக்கு எதற்கும் போகக்கூடாது. அணியப்பூருக்கே சென்று வாருங்கள்."

(பாட்டு)

அப்படியே நல்லதென்று
அன்புடனே வருகிறாரே
ஓட்டம் பெருநடையா
ஒருவிரைவாய் வருகிறாரே
தங்கவளநாடு தேடி இனித்
தார் வேந்தன் வருகிறாரே

உச்சி உருவம், மத்தியானநேரம் குன்னுடையாசாமி தங்க வளநாடு வரும் போது, பங்காளிக் கவுண்டர்கள் பிள்ளையார் கோவிலில் கூடியிருந்தார்கள். கூட்டத்தில் ஒருவர், "அண்ணா! குன்னுடையாக் கவுண்டன் வருவான்போல் தெரிகிறது" என்று பேசிக்கொண்டு இருந்தார்கள். இதற்குள் குன்னுடையாசாமி அருகில் வந்தார். வந்ததும் பங்காளிகள், "வாங்க அண்ணா! நங்கை சுகமாய் இருக்கிறார்களா? இந்த வெய்யலில் புறப்பட்டு வந்து விட்டீர்களே, என்ன விஷயமாக வந்தீர்கள்?" என்றார்.

குன்னுடையா - "அப்பா! நாளைக் காலையில் பூமியை உழுது விதைக்கலாம் என்று உங்களிடம் விதைத் தானியம் வாங்கிப் போகலாம் என்று வந்தேன்."

பங்காளி - "சரி, நல்லதுங்கோ!" அப்போது பெரியவீட்டுக் கவுண்டர் மகன் பழனிசாமி மனத்தில் கெட்ட எண்ணம் கொண்டு, "அண்ணா! நான் போய் விதைத்தானியம் கொண்டுவருகிறேன்" என்று வீட்டுக்குப் போய், "அம்மா! பொன்னி வள நாட்டிலிருந்து, குன்னுடையாக் கவுண்டன் விதைத் தானியம் வேண்டுமென்று வந்திருக்கிறான். சோளம் ஆறு படி, கொள்ளு ஆறு படி எடுத்துப் பொன் நிறமாக வறுத்துக் கொண்டு வாருங்கள்" என்றான். தாயார் அப்படியே வறுத்துக் கொண்டுவந்து கொடுத்தாள். பழனிசாமி இரண்டையும் தனித்தனியாக ஒரு துணியில் முடிந்து பிள்ளையார் கோவிலுக்குக் கொண்டுவந்து, "இந்தாங்க அண்ணா! விதைத்தானியம்" என்று குன்னுடையாசாமி முன் வைத்தான்.

குன்னுடைய ராஜதுரை, கோடையிடி மணிவேந்தன், பொன்மேழிக்காரர், பேசாத்திருமுடியான், வாய் பேசா தருமர், மசைசாமி புண்ணியன், மழை பெய்ந்தால் பட்டமென்பார், மாவிடிந்தால் நோன்பு என்பார், குன்னுடையா சாமி விதைத்தானியத்தை எடுத்துக்கொண்டு, "சரி அப்பா! நான் போய் வருகிறேன்" என்றார்.

Tāmarai: "Husband! As long as we live we must never ask the clansmen for anything. Go to Aṉiyappūr."

Kuṉṉuṭaiyā: "O.K. I will do that."

Song:

It was said to be good
He went with love
He walked with big, running steps
He moved with great speed
Looking for The Country of Prosperity
A fine King is approaching

When the sun was at its zenith, at midday, as Kuṉṉuṭaiyā approached The Country of Prosperity, the Kavuṇṭar clansmen were (already) gathered at the Pilliar temple. In the crowd the men said: "It looks as if Kuṉṉuṭaiyā Kavuṇṭar is approaching, oh elder brother," to each other. At this moment Kuṉṉuṭaiyā arrived.

When he arrived the clansmen said, "Come here, elder brother. How are you? You have come in the (strong) sun. For what reason are you here?"

Kuṉṉuṭaiyā: "Men! Tomorrow morning I will plough the land. I have come to ask you for some seeds."

Clansmen: "O.K., good!" they answered. The son of the Kavuṇṭar of the biggest house, Paḷaṉicāmi, then said, with malice in his heart, "Oh, elder brother. I will go and bring you seeds." Having said this he went home and said, "Mother! Kuṉṉuṭaiyā Kavuṇṭar of The Country Where The Kāveri Flows has arrived and asked for seeds. Take six measures of maize and six measures of kollu millet, toast them until they are golden, and bring them."

The mother roasted and delivered what was ordered. Paḷaṉi tied them in separate cloths and came to the Pilliar temple. He handed them to Kuṉṉuṭaiyā saying, "Elder brother, (here are) the seeds."

Song:

Kuṉṉuṭaiyā the lordly King, who was like summer thunder
The one with a golden plough, one who speaks sparingly
The one who does not take revenge when treated unjustly
The virtuous lord
The one who praises god when it rains
The one who suggests a Pūjā should be conducted on hearing the pounding of grain

Kuṉṉuṭaiyā accepted the seeds, saying, "Good, man! I will take my leave."

பங்காளி - "சரி! போய் வாருங்கள்."

குன்னுடையாசாமி பொன்னி வளநாடு வரும்போது தாமரை வெளிமுகம்[1] வந்து பார்த்துக்கொண்டு நின்றாள். "நாதா! நான் அணியப்பூர் போகச் சொன்னதற்குத் தங்க வளநாட்டிலிருந்து வருகிறீரே?" என்று விதைத் தானியத்தை அவிழ்த்துப் பார்க்கும்போது தானியம் வறுத்து இருப்பதைப் பார்த்துவிட்டு,

தாமரை -

(பாட்டு)
கண்டு சிறைபோடாமல் அங்குப் போடாமல்
என்னைக் கொண்டு சிறைபோட்டாரே
மாயவர் சிறை போட்டாரே
உங்களையே சிறைபோட இனிச் சிறைபோட
எழுதினானே பிரமதேவன் என்தலையில்
இனி என்தலையில்

நாதா! கண்டு சிறைபோடாமல் என்னைக் கொண்டு சிறை போட்டாரே!" என்று, "கன்னியழுகிறாள் காந்தேறிச் சோருகிறாள். மங்கையழுகிறாள் மலர்க் கிளியாள் வாடுகிறாள். நாதா! விதைத் தானியம் பொன் நிறமாக வறுத்துக் கொடுத்திருக்கிறார்கள். இருபது வருஷமானாலும் இந்தத் தானியம் முளைக்காது."

குன்னுடையா - "பெண்ணே! அவர்கள் வறுத்துக் கொடுத்தது எனக்குத் தெரியாது. யார் எனக்கு வஞ்சனை செய்தாலும் அதற் கெல்லாம் மாயவர் இருக்கிறார். அவர் கிருபை இருந்தால் இந்தத் தானியம் முளைக்கட்டும், இல்லாவிட்டால் போகட்டும். நீ சும்மா என்னைச் சண்டை பிடிக்கவேண்டாம் பெண்ணே!"

குன்னுடையாசாமி மறுநாள் காலையில் எழுந்து, காசிக்கரை சென்று நீராடிச் செல்லாத்தாளுக்குப் பூஜை செய்துவிட்டு, சாப்பிட்டுத் தாம்பூலம் போட்டு உட்கார்ந்தார். அப்போது அணியப்பூரிலிருந்து ஆயிரம் ஏர்களும் வந்து பிள்ளையார் கோவிலில் நிறுத்திவிட்டுப் பெரியவீட்டுக் கவுண்டர் குன்னுடையாக் கவுண்டரிடம் வந்தார்.

பெ. கவு. - "சாமி! ஏர்மாடுகள் கொண்டு வந்துவிட்டோம். விதைத் தானியத்தை எடுத்து வாருங்கள் போகலாம்" என்றார்கள். குன்னுடையாசாமி, "சரி, அப்படியே போகலாம்" என்று புறப்பட்டார்.

குன்னுடையா - "பெண்ணே தாமரை! புறப்படு, காட்டுக்குப் போகலாம், ஏர்மாடுகள் வந்துவிட்டன."

---

1. வெளியில்

Clansmen: "Good. Goodbye."[1]

As Kuṉṉuṭaiyā approached The Country Where The Kāveri Flows, Tāmarai stuck her head outside and stood watching.

Tāmarai: "Husband. Are you coming from The Country of Prosperity when I said to go to Aṇiyappūr?", she asked. She looked at the seeds and noticed that they were toasted.

Tāmarai's Song:

Not imprisoning on sight, not imprisoning (then)
Parantāma took me and put (me) in prison, put (me) in prison
He imprisoned you, imprisoned you (too)
Has Brahma written (this fate) on my head, alas, has he written it?
Husband! Not imprisoning on sight, he took me and put me in prison
The chaste woman is crying, she is hot with indignation, she is wilting
The good woman is crying, the flower parrot is pining
What has been given is twenty years old, these seeds won't sprout.

Kuṉṉuṭaiyā: "Oh wife. I didn't know they had toasted what they gave me. Who ever deceives me, there is always Vishnu. If he is full of grace, then never mind if the seeds won't sprout. You must not pick arguments with me, oh wife."

The next morning Kuṉṉuṭaiyā got up, bathed on the Benares river bank, performed pūjā for Cellāttā, ate, chewed betel and areca nut, and sat down. At that time a thousand ox-teams from Aṇiyappūr were brought and stood ready at the Pilliar temple.

The Kavuṇṭar of the biggest house came to Kuṉṉuṭaiyā.

Big K.: "Lord. We have brought the ox-teams . Get the seeds and come, let's go," he said. Kuṉṉuṭaiyā answered, "O.K., we'll go," and started off.

Kuṉṉuṭaiyā:· "Oh, wife! Tāmarai, the ox-teams have come, let's start for the field."

---

1 Literally "go and return."

தாமரை - "நாதா! நான் வந்து விதைத்தால் வறுத்த தானியம் முளைக்காது. பின்னால் ஊர் ஜனங்கள், "இந்தச் சண்டாளி முதன்முதல் போய் விதைத்து ஒன்றும் முளைக்கவில்லை" என்பார்கள்.

நாவைப்படைத்த ஜனம் நல்லஜனம் பேசுமுங்கோ
ஊருபடைத்த ஜனம் உற்றஜனம் பேசுமுங்கோ

நாதா! அதனால் நான் வரவில்லை. நீங்களே போய் விதைத்து வாருங்கள்."

குன்னுடையாசாமிக்குக் கோபம்வந்து, "சரி, நீ வரவேண்டாம்" என்று தானியத்தைக் கூடையில் போட்டுத் தலையில் எடுத்து வைத்துக்கொண்டு பிள்ளையார் கோவிலுக்கு வந்து, தானியத்தைப் பிள்ளையார்முன் வைத்து நமஸ்காரம் செய்து, "அப்பா! கவுண்டர்களே! புறப்படுங்கள் போகலாம்" என்று எல்லோரும் புறப்பட்டார்கள்.

(பாட்டு) சாமியும் முன் நடக்க முன் நடக்க
கவுண்டர்களும் பின் துடர்ந்தார் பின் துடர்ந்தார்
ஓணாக்கல்லு மேடுதேடி மேடுதேடிக்
கூட்டிவாறார் கவுண்டர்களைக் கவுண்டர்களை

ஓணாக்கல் மேடுவந்து பார்க்கும்போது கல்லும் முள்ளும் நிறைந்து கால்வைக்கக்கூட இடமில்லாமல் இருந்தது. குன்னுடையாக் கவுண்டர் வடக்குமுகமாக நின்று, "ஆகா! எம்பெருமாள் மாயவனே! இந்தக் கல்லையும் முள்ளையும் பொறுக்கிக் காடுசேர்க்க என்னால் முடியாது. தாங்கள் துணையாக வரவேண்டும் காஞ்சிநாதா!' என்று மாயவரை வேண்டும்போது மாயவர் பால் கடலிலிருந்து பார்த்து, "சதிகாரப் பங்காளிகள் குன்னுடையானுக்கு ஓணாக்கல் மேட்டில் முக்கால் வள்ளக்காடு கல்லும் முள்ளும் நிறைந்ததாகக் கொடுத்திருக்கிறார்கள். நாம் போய்க் கார்க்க[1] வேண்டும்" என்று கருடவாகனமேறிப் புறப்பட்டார்.

(பாட்டு) பால்கடல் விட்டுமல்லோ மாயவர்
பொன்னி வளநாடு வாறார்
அகலிகை சாபம் தீர்த்த அந்த
ஹரிராமர் வருகிறாரே

மாயவர் ஓணாக்கல்மேடு வந்து ஒருவருக்கும் தெரியாமல் நின்றார். குன்னுடையாக் கவுண்டர் அருவாளைக் கையில் எடுத்து மாயவரை நினைத்து வடக்கு முகமாக நின்றார். மாயவர் எதிர்ப்புறமாகத் தெற்குமுகமாய் நின்றார்.

1. காக்க

Tāmarai: "Husband. If I come and sow the seeds will not sprout. Later the people of the town will say, "the villain! Because she sowed the seeds at first, nothing has grown."

The people who have tongues, the good people, will gossip.

The people in the town, our relatives, will gossip "Husband. Because of this I will not come. You go and do the seeding and return," Tāmarai said.

Kuṉṉuṭaiyā: Kuṉṉuṭaiyā became angry. "O.K., you need not come." He put the seeds in a basket, placed it on his head, and took it to the Pilliar temple. He placed the seeds in front of the god, prostrated before him, and said, "Oh Kavuṇṭar men! Let's start, we'll set off." Everyone left.

Song:

The Lord walks ahead, walks ahead
The Kavuṇṭars walk behind, walk behind
Looking for lizard stone hill, looking for the hill
They come as a group, the Kavuṇṭars the Kavuṇṭars

When they arrived and looked at lizard stone hill they saw so many stones and thorns that there wasn't even room to place one's feet. Kuṉṉuṭaiyā stood facing north.

Kuṉṉuṭaiyā: "Oh, oh, my Vishnu, my Vishnu! I have not (the strength) to gather up all these stones and thorns. You must come and assist, oh Lord of Kanjeeepuram."

Vishnu: Vishnu saw, from the milk sea, that Kuṉṉuṭaiyā was calling him to come. "The conspiring clansmen have given Kuṉṉuṭaiyā three-quarters of a field on lizard stone hill covered with stones and thorns. I must go and oversee this," he thought, and he mounted his Garuda bird and set off.

Song:

Vishnu has left the milk sea
He is approaching The Country Where The Kâveri Flows
The one who removed the curse on Akalikai
Harirâma is coming.

Vishnu arrived at lizard stone hill and stood there, unknown to all. Kuṉṉuṭaiyā Kavuṇṭar stood facing north, thinking of Vishnu, with his curved knife in his hand. Vishnu stood facing him, looking south.

குன்னுடையாசாமி ஒரு முள்ளை வெட்டி ஒரு கல்லை எடுக்குமுன், மாயவர் அருளால் முக்கால் வள்ளக் காடும் ஒரு கல், முள் இல்லாமல் சுத்தமாகிக் கால் வள்ளம் சேர்த்து ஒரு வள்ளக்காடு பரவியது. பூமி சுத்தமானவுடன் பெரியவீட்டுக் கவுண்டர் குன்னுடையாசாமியைப் பார்த்து,

"சாய்ந்த மேழிபிடித்துழுகும் தங்க வெள்ளான் தன்னரசு
கோணைமேழி பிடித்துழுகும் கொங்கவெள்ளான் தன்னரசு

சாமி! நீங்கள் பெண்மேழிக்காரர், தாங்கள் முதலில் மேழியைக் கையில் பிடித்து மூன்று விளா[1] ஓட்டி எங்கள் கையில் கொடுங்கள். மறுபடி நீங்கள் விதைக்கலாம்" என்றார்.

குன்னுடையாசாமி, "சரி" என்று, மேழியைக் கையில் பிடித்து மூன்று விளா ஓட்டிப் பெரியவீட்டுக் கவுண்டரிடம் கொடுத்தார்.

பெ. கவு - "சாமி! இனி நாங்கள் ஏர் உழுகிறோம். நீங்கள் தானியம் விதையுங்கள்."

குன்னுடையாசாமி தானியத்தை மடியில் போட்டு வடக்குமுகமாய் நின்று மாயவரை நினைத்து விதைக்குமுன் ஒருவருக்கும் தெரியாமல் மாயவர் ஓடிவந்து தானியத்தை எடுத்து வடக்குத்தலமாரில்[2] தெற்கு முகமாக நின்று, "சதிகாரப் பங்காளிகள் வறுத்த சோளத்தையா கொடுத்தார்கள்?" என்று, "வறுத்த சோளம் போட வர்ணமுத்து விளையவேணும். பொரித்த கொள் போட பொன்முத்து விளையவேணும்" என்று, மூன்று கை தானியம் அள்ளி விதைத்தார். பின் புறப்பட்டுப் பால்கடல் போய்ச் சேர்ந்தார்.

குன்னுடையாக் கவுண்டர் சோளம் ஒருபக்கம், கொள் ஒருபக்கம் விதைத்து எல்லாம் முடிந்ததும் ஆயிரம் ஏர்மாடுகளும் குன்னுடையாக் கவுண்டர் எல்லோரும் ஊருக்குப் புறப்பட்டார்கள்.

(பாட்டு) சாமியும் முன்நடக்க முன் நடக்கோ
கவுண்டர்களும் பின் துடர்ந்தார் பின்துடர்ந்தார்
ஆண்டவனார் முன்நடக்க முன்நடக்கோ
கவுண்டர்களும் பின்துடர்ந்தார் பின்துடர்ந்தார்

செல்லாத்தாக் கோவிலருகில் எல்லோரும் வரும்போது தாமரை எதிர்பார்த்துக்கொண்டு இருந்தாள். எல்லோரும் வந்து தாமரையைப் பார்த்து, "சாமி! இது யார்?" என்று கேட்டார்கள்.

குன்னுடையா - "அப்பா! அவள்தான் என் மனைவி தாமரையாக் கவுண்டச்சி."
கவுண்டர்கள் எல்லோரும் தாமரையை நமஸ்காரம் செய்தார்கள்.

1. உழுவில் வருஞ் சுற்று 2. நிலத்தின் முன்பகுதி

Before Kuṉṉuṭaiyā could cut down a single thorn, or lift a single stone, a field free of stones and thorns, and with an extra quarter of a vaḷḷam added to it, spread before him with Vishnu's grace.

As soon as the land was cleared the Kavuṇṭar of the biggest house addressed Kuṉṉuṭaiyā:

Big K.: "Holding his curved plough, he ploughs his agricultural kingdom. Holding his crooked plough, he ploughs his Koṅku[1] agricultural kingdom." "Lord, you are a man of woman's speech.[2] You take the plough in your hands first and make three furrows and then hand it to us.[3] After that you can sow the seeds."

Kuṉṉuṭaiyā said, "O.K.," took the plow in his hands, plowed three furrows and then handed it to the Kavuṇṭar of the biggest house.

Big K.: "Lord. We will plow now. You sow the seeds."

Kuṉṉuṭaiyā put the seeds in his waist-cloth fold and stood facing north thinking of Vishnu. Before the seeding, and without anyone seeing him, Vishnu came running. He stood in a northern place, facing south, took the grain, and said, "The caste-men, the clansmen gave you toasted maize. Let the toasted maize grow into heavenly pearls. Let the roasted kollu millet grow into gold pearls." As he said this he took three handfuls of grain and sowed them.[4] Then he set off for the milk sea.

Kuṉṉuṭaiyā sowed maize on one side and millet on the other, until it was all gone. The thousand ox-teams and Kuṉṉuṭaiyā Kavuṇṭar all set off for the town.

Song:

The Lord walked ahead, walked ahead
The Kavuṇṭars followed behind, followed behind
The divine one walked ahead, walked ahead
The Kavuṇṭars followed behind, followed behind

As they all drew near the Cellāttā temple Tāmarai stood watching them. When they arrived and saw Tāmarai they asked, "Lord, who is this?"

Kuṉṉuṭaiyā: "Men. This woman is my wife, Tāmarai Kavuṇṭācci."[5] All the Kavuṇṭar paid their respects to Tāmarai.

---

[1] Name of the area where the Kavuṇṭars live. [2] E.g., soft spoken, reserved. [3] This is a traditional ritual. Even important Kavuṇṭar leaders must touch the plow. [4] This is a parallel for the ritual plowing of the first three furrows. [5] Female form of the title "Kavuṇṭar".

தாமரை - "கவுண்டர்களே! மங்களம் உண்டாகட்டும். பெரியவீட்டுக் கவுண்டரே! நீங்கள் எல்லோரும் எனக்கு ஒரு உபகாரம் செய்யுங்கள். கவுண்டர்களே நான் இப்போது செல்லாத்தாக் கோவிலில் சமையல் செய்து கொண்டிருக்கிறேன். ஆத்தாளுடைய சன்னதியில் சமையல் செய்வது சுத்தமில்லை. ஆகையால் என் மாமனார் இருக்கும் காலத்தில் கோவிலுக்கு மேல்புறம் அரண்மனை கட்டியிருந்தாராம். சதிகாரப் பங்காளிகள் அதை இடித்துச் சமமாக நிறவி ஆமணக்கங் கொட்டையை அள்ளி விதைத்துவிட்டார்களாம். இப்போது நாங்கள் இருக்க இதே இடத்தில் ஒரு வீடு கட்ட வேண்டும். நீங்கள் எல்லாம் அதற்கு வேண்டிய சாமான்கள் கொண்டுவந்து எனக்கு ஒரு கூரைவீடு கட்ட உதவி செய்யவேண்டும்.

கவுண்டர் - "சரி! நாங்கள் எட்டு நாளுக்குள் கட்டிவிடுகிறோம்" என்றார். கவுண்டர்கள் ஊர் போய்ச் சாமான்கள் கொண்டுவந்து கட்டி முடித்தார்கள். பெரியவீட்டுக் கவுண்டர் தாமரையிடம் வந்து, "அம்மணி! நல்ல நாள் பார்த்து அந்த வீட்டுக்குக் குடி போங்கள்" என்று சொல்லிவிட்டுக் கவுண்டர்கள் அணியப்பூர் சென்றார்கள். தாமரை நல்ல நாள் பார்த்துத் திங்கள்கிழமை சிவன்பிறந்தநாள், சந்திரன் தேவி சூரியன் கிளம்பியதும் புது வீட்டுக்குப் போய்ப் பால் பொங்கி, பின் சாதம் சமைத்துச் சாப்பிட்டுவிட்டுச் சந்தோஷமாய் இருந்தார்கள்.

(பாட்டு)
மாதமூன்று மழை பெயும்
அங்கு வருஷமொரு கல்மாரி
ஆணைகட்டித் தாம்பாடும் இனி
அழகுபொன்னி வளநாடு
கட்டுக் களங்காணும்
கருதுளிர்க்க நெல் காணும்

குன்னுடையாக் கவுண்டர் செல்லாத்தாளுக்குப் பூஜை முடித்துவிட்டுச் சோளம் முளைத்துவிட்டதா என்று பார்த்துவரக் காட்டுக்குச் சென்றார். போய்ப் பார்த்தபோது பதினைந்து நாளாகியும் ஒரு சோளம்கூட முளைக்கவில்லை. அருகில் பங்காளிகள் சோளம் போட்டிருந்த பூமியில் பயிர் நன்றாக வளர்ந்து செழிப்பாக நின்றது. குன்னுடையாசாமி வீட்டுக்குத் திரும்பி வந்தார்.

தாமரை - "நாதா! இப்போது சோளம் முளைத்துவிட்டதா?"

குன்னுடையா - "பெண்ணே! இன்னும் ஒரு சோளம்கூட முளைக்கவில்லை" என்று சாப்பிட்டுத் தாம்பூலம் போட்டு உட்கார்ந்தார். இப்படியாக ஒரு வாரம் சென்ற பின் மறுபடியும் போய்ப்

Tāmarai: "Oh Kavuṇṭars! Blessings to you! Oh Kavuṇṭar of the biggest house. All of you do me a favour. Oh, Kavuṇṭar! We are now cooking in Cellāttā's temple. It is not good to cook in her place. In the time when my parents-in-law were alive there seems to have been a palace standing to the west of the temple. The castemen, the clansmen, knocked it down and levelled it, and planted castor oil seeds. We must build a house here, where we stand. You all must bring the necessary materials and help us build a thatched house."

Kavuṇṭar: "O.K. We will build it within eight days," the Kavuṇṭars said. They went home, brought the necessary materials and finished it. Then the Kavuṇṭar of the biggest house went to Tāmarai and said, "Wait for an auspicious day and then move into the house." Then the Kavuṇṭars went back to Aṇiyappūr. Tāmarai waited for a good day, Monday, the day Siva was born, as soon as the moon had set and the sun had risen, she went to the new house, ritually boiled a pot of milk,[1] cooked rice, ate, and (the two) were happy.

Song:

It rained three times a month
Shower of hailstones there once a year
Where the threshing is done with elephants
Oh beautiful Country Where The Kāveri Flows
The paddy was so abundant that the surplus was
sprouting on the threshing floor.

Kuṉṉuṭaiyā Kavuṇṭar finished the pūjā at the Cellāttā temple and then went to his field thinking, "Let's see if the maize has sprouted yet." When he looked fifteen days had passed but not one maize grain had germinated. In a nearby field where the clansmen had planted maize there were lovely little shoots emerging from the earth and standing plumply. Kuṉṉṭaiyā returned home.

Tāmarai: "Husband! Has the maize sprouted?'

Kuṉṉuṭaiyā: "Oh, wife. Not one grain of maize has sprouted yet," he said. Then he ate, and sat down to chew betel and areca nut. After another week had passed he went to the field

1 A special ritual, pongal, performed on many occasions on which the newness of some thing is celebrated.

பார்க்கலாமெனக் காட்டுக்குப் போய்ப் பார்க்கும்போது தூரத்துக்கு ஒரு பயிர் முளைத்திருந்தது. இப்படியாகச் சரியாக முப்பதுநாள் சென்றதும் சோளப்பயிர் காடு நிறைய முளைத்து விட்டது. அன்று போய்க் குன்னுடையாசாமி பார்த்துவிட்டு வீட்டுக்கு வந்ததும்,

தாமரை - "நாதா! இப்போது சோளம் முளைத்துவிட்டதா?"

குன்னுடையா - "பெண்ணே! என்னை வறுத்த சோளத்தை வாங்கிவந்து விட்டான், முளைக்காது என்று சண்டை பிடித்தாயே? இன்று போய்ப் பார். நம்மளுக்கு நான்கு மொடா[1] ஆகும்.

தாமரை - "நாதா! மாதம் மூன்றுமழை பெய்ததால் நன்றாக முளைத்து விட்டது. ஆனால் நல்லா வளர்ந்து பூட்டை[2] விடாது."

(பாட்டு) அப்படியே நல்லதென்று இனி
அன்புடனே நடக்குது பார்
நாளொரு நாள் பொழுதொருநாள்
நடக்குதுபார் நல்பருவம்

இப்படி நடந்துவரும் காலத்தில் பங்காளிக் கவுண்டர்கள் வந்து காட்டைப் பார்க்கும்போது, "குன்னுடையாக் கவுண்டனுக்கு நாலு மொடா விளையும் போல் இருக்கிறது. சரி இருக்கட்டும், இன்று நம் மாடுகளை விட்டு மேய்த்து விடுவோம்" என்று சதிகாரப் பங்காளிகள் பேசியதை மாயவர் பார்த்து,

மாயவர் - "ஆகா! நாம் கொடுத்த வரத்தில் குறை வந்து நேர்ந்துவிட்டது. தந்த வரத்தில் தவக்குறை வந்து நேர்ந்துவிட்டது. நாம் போய்ப் பாதுகாக்க வேண்டும்" என்று கருட வாகனமேறி உடனே வந்து சேர்ந்தார்.

அன்று பொழுது விடிந்ததும் பங்காளிகள் மாடுகளை ஓட்டி வந்து வெள்ளாமையில் விட்டார்கள். அப்போது மாயவர் ஒருவருக்கும் தெரியாமல் விபூதியை வீசி ஒவ்வொரு மாட்டுக்கும் வாய்க்கூடை பூட்டிவிட்டார். அதனால் மாடுகள் பயிர்களை மேயமுடியவில்லை. பங்காளிகள் கொஞ்சநேரம் கழித்து மாடுகளை ஓட்டிக்கொண்டு தங்க வளநாடு சென்றார்கள்.

(பாட்டு) இந்தப் பிரகாரம் நடக்குது அதிகாரம்
அப்படியே நல்லதென்று அன்புடனே நடக்குதுபார்
நாளொரு நாள் பொழுதொரு நாள்
நடக்குதுபார் நல்பருவம்
செங்கோல் அதிகாரம் இனிச்
செலுத்திப் பட்டம் ஆளுகிறார்

1. 32 பக்கா = 1 மொடா = 16 வள்ளம் 2. கதிர்

thinking, "Let me look again." At a distance there was one sprout. After thirty days had passed the field was full of maize shoots. Kuṉṉuṭaiyā went to see and returned home.

Tāmarai: "Husband! Has the maize sprouted now?"

Kuṉṉuṭaiyā: "Oh wife. Are you going to pick a fight with me saying that the roasted seeds I accepted and brought back won't sprout? Go and look now. We will have four mōṭa[1] (at the harvest)."

Tāmarai: "Husband! If it rains three times a month it will sprout well, but it won't grow and flower."

Kuṉṉuṭaiyā: "O.K. We'll see, oh wife!"

Song:

It was said to be good
See how things were done with love
One day, one fine day
Look what happened at this time

At this time the clansmen came and seeing the field said, "It looks like Kuṉṉuṭaiyā Kavuṇṭar will have four mōṭa of ripe grain. O.K., let it be. We will send our cows to graze."

Vishnu saw the castemen, the clansmen speaking.

Vishnu: "Oh, ho! The boon I granted has misfired. It is being affected by the blemish in the penance. I must go and look after matters," he thought, and immediately mounted his Garuda vehicle and arrived.

When it dawned, the clansmen had already brought their cows and released them in the crop. At that moment, without anyone knowing it, Vishnu threw sacred ash and locked the basket-mouth of each cow, so that they couldn't eat the sprouts. After a time the clansmen drove the cows back to The Country of Prosperity.

Song:

See the monarch rule thus
It was said to be good, see how things were done with
love
Day after day, time followed time
See the good age in progress
The king's reign is just
The king is ruling authoritatively

[1] A mōṭa equals sixteen vaḷḷam which equals 31 measures.

காலம் பனிபெயும் பொன்னி வளநாட்டில்
கடுகு சம்பா நெல் விளையும்
மூடு பனி பெயும் மிளகு சம்பா நெல் விளையும்

குன்னுடையாக் கவுண்டர் காலையில் எழுந்து காசிக்கரை சென்று நீராடிவந்து செல்லாத்தாளுக்கு அருபூஜை, குருபூஜை, ஐம்பத்தி எட்டு லிங்கபூஜையும் முடித்துவிட்டு, வீட்டுக்கு வந்து கொங்காடை கம்பளியைத் தோளில் போட்டு, கொப்பிகட்டிய கவையை எடுத்துக்கொண்டு காட்டுக்குப் போய் வெள்ளாமையைப் பார்க்கும்போது பயிர்கள் சாய்ந்து கிடந்தன. நால் பக்கமும் போய்ப் பார்த்தார், எல்லா இடத்திலும் அதேமாதிரி இருந்தது. "இரவு நேரத்தில் ஏதோ மாடுகள் வந்து மேய்ந்துவிட்டன" என்று நினைத்து வீட்டுக்கு வந்தார்.

தாமரை - "நாதா! பயிர்கள் புடை கட்டிவிட்டதா[1]?"

குன்னுடையா - "பெண்ணே! புடை கட்டிவிட்டது, நேற்று இரவு ஏதோ மாடுகள் தவறி வந்து மேய்ந்துவிட்டன. ஆனால் பயிர்களைக் கடிக்கவில்லை, பயிர்கள் கீழே சாய்ந்துவிட்டன."

(பாட்டு) காலம் பனிபெயும் அங்குப் பனிபெயும்
கருதுளிர்க்க நாட்டிலே நெல் காணும்
அங்கு நெல் காணும்
மூடு பனி பெயும் அங்குப் பனிபெயும்
மிளகுசம்பா நாட்டிலே நெல்காணும்
ஆனைகட்டித் தூர்விளையும் அங்குத் தூர்விளையும்
அழகுபொன்னி வளநாடு அது வளநாடு
மண்போட்டுப் பொன்விளையும் மகுடபொன்னி வளநாடு
சிலுக்காம்புலியூர் சிறந்த பொன்னி வளநாடு

மறுபடி ஒரு வாரம் கழித்துக் குன்னுடையாசாமி காட்டைப் போய்ச் சுற்றிப் பார்க்கும்போது, பதினைந்துநாள் ஆகியும் பூட்டைகள் வெளிவராமல் இருப்பதைப் பார்த்து மனம் தளர்ந்து வீட்டுக்கு வந்தார்.

தாமரை - "நாதா! இன்று போய்ப் பார்த்தீரே பூட்டைகள் வெளியில் வந்துவிட்டதா?"

குன்னுடையா - "பெண்ணே! முன்போலவே அப்படியே இருக்கிறது, இன்னும் பூட்டைகள் வெளியில் வரவில்லை."

தாமரை - "நாதா! சோளம் போட்டு மூன்று மாதம் ஆகிவிட்டது, இன்னும் புடைக்கவில்லையா நாதா?"

1. கதிர்களில் பால் அடைத்தல்

It was a time of heavy rains in The Country Where The Kāveri Flows, the Kaṭuku sampa paddy prospered. It rained abundantly in that country. The milaku sampa paddy prospered.

Kuṉṉuṭaiyā Kavuṇṭar got up in the morning, went and bathed on the Benares river bank, performed the God's pūjā, pūjā for the family deity, the pūjā for the fifty-eight lingams, and came home. He put his Koṅku blanket on his shoulders, took his metal-tipped walking stick made of a tree branch, and went to look at his crop. As he looked he saw the grain all bent over. He looked on all four sides. It was the same everywhere. He thought, "Some cows must have come during the night and grazed." He returned home.

Tāmarai: "Husband! Has the grain begun to bud?"

Kuṉṉuṭaiyā: "Oh, wife! It has budded, and besides, last night some cows came and grazed. But they did not bite the sprouts, only trampled them."

Song:

It was a time of heavy rain there, of heavy rain
There were budding, ripening tracts of paddy, tracts of paddy
Pouring rain covered the land there, heavy rain
It rained abundantly in that country
The country where elephants were used to thresh the paddy
Beautiful Country Where The Kāveri Flows
Where gold springs from the earth
The Famous Country Where The Kāveri Flows (and)
The country that contains the town of Cilukkāmpuliyūr in its lesser division

After another week Kuṉṉuṭaiyā went again to see the field and saw that the fifteen day-old buds had not yet opened. He returned home with a faint heart.

Tāmarai: "Husband! You went today to see, have the buds opened?"

Kuṉṉuṭaiyā: "Oh wife! They are still as they were before, the buds have not opened."

Tāmarai: "Husband! It has been three months since we planted the maize and still the buds do not open, husband?'

குன்னுடையா - "பெண்ணே! நீ இன்னும் காட்டை வந்து பார்க்கவே இல்லை. நாளைக்கு இரண்டுபேரும் போய்ப் பார்க்கலாம்."

மறுநாள் இருவரும் புறப்பட்டுப் போனார்கள்.

(பாட்டு) ப(ர்)த்தாவும்[1] முன் நடக்க இனிப்
பத்தினியும் பின் தொடர்ந்தாள்
ஆண்டவனும் முன் நடக்க இனி
அருகிளியாள் பின் தொடர்ந்தாள்
ஓணாக்கல்லு காடுதேடி இனிக்
கூட்டிவாறார் தாமரையை

இருவரும் காட்டுக்கு வந்து நாலபக்கமும் சுற்றிப்பார்த்து வலதுபுறம் வந்து நின்றார்கள். அப்போது தாமரை, "பூட்டை ஏன் வெளியில் வராமல் இருக்கிறது, பார்க்கலாம்" என்று நடுக்காட்டுக்குள் சென்று ஒரு பூட்டையைச் சோகையை நீக்கிப் பார்த்தாள். அதில் முத்து, நவரத்தினம், கோமேதகம், புஷ்பராகம், வைடூரியம், பவளம் இவைகள் நிறைந்து இருப்பதை பார்த்து, "நாதா! இங்கு வாருங்கள், இந்தப் பூட்டையைப் பாருங்கள்" என்றாள். குன்னுடையாசாமி போய்ப் பார்த்து, "பெண்ணே! வறுத்த சோளம் விளையாது என்று சொன்னாயே? இப்போது பார் முத்து வைடூரியங்களாக விளைந்துவிட்டது" என்றார்.

தாமரை - "இவை எல்லாம் அந்தப் பரந்தாமனுடைய அருள்."

குன்னுடையா - "பெண்ணே! சரி, தட்டு[2] எப்போது அறுக்கலாம்?"

தாமரை - "நாதா! ஆள்விட்டுத் தட்டு அறுத்தால் எல்லோருக்கும் தெரிந்து நம்மைக் கொன்றுவிட்டு இவைகளைக் கொண்டு போய்விடுவார்கள். ஆகையால் நீங்கள் அணியப்பூர் சென்று பெரியவீட்டுக் கவுண்டரிடம் சொல்லி வீட்டுக்கு ஒருவர் வந்து தட்டு அறுத்துப் போட்டுவிட்டுப் போகச் சொல்லுங்கள். மறுபடி நாம் இருவருமே கதிரை வெட்டிக் கொள்ளலாம். சரி வாருங்கள். கொள்ளுச் செடியையும் பார்த்துப் போகலாம்."

அவர்கள் கொள்ளுச் செடியைப் பார்க்கும்போது, கொள்ளுக்காயில் பூராகவும் நவரத்தினங்களாக இருந்தது. பார்த்துவிட்டு இருவரும் வீட்டுக்குப் புறப்பட்டார்கள்.

(பாட்டு) ஓணாக்கல்லு மேடுவிட்டு மேடு விட்டு
வருகிறாரே இரண்டுபேரும்
சாமியும் முன்நடக்க முன் நடக்க
தாமரையும் பின்தொடர்ந்தாள் பின்தொடர்ந்தாள்

1. கணவன் 2. அரிதாள்

Kuṉṉuṭaiyā: "Oh, wife. You have not yet been to the field to see. Tomorrow we will go together to look."

The next day the two set off.

Song:
The husband walked ahead
The chaste woman followed behind
The divine one walked ahead
The rare parrot followed behind
Looking for the lizard stone field
Tāmarai is coming along too

The two arrived at the field, looked at its four sides and then halted at the right edge. Tāmarai, wondering why the spikes had not opened, and deciding to look, went to the center of the field and forced open one spike. Inside were pearls, nine kinds of gems, onyx, topaz, cat's eyes and coral. Seeing it full of these Tāmarai exclaimed, "Oh husband! Come here! Look at this spike!"

Kuṉṉuṭaiyā went to see. "Oh, wife! did you say that roasted maize wouldn't grow? Look, it has produced pearls and cat's eyes!"

Tāmarai: "This is all by Vishnu's grace."

Kuṉṉuṭaiyā: "Oh, wife! When shall we cut off the spikes?"

Tāmarai: "Husband. If we leave it to paid labour everyone will come to know and they will kill us. Therefore, you go to Aṇiyappūr to the Kavuṇṭar of the biggest house and ask him for someone to come and cut off the stalks. Afterwards we two will open the spikes. O.K., Let's go and see the millet," she said.

On looking at the millet these (plants) too were full of the nine kinds of gems. Seeing this the two set off for home.

Song:
Leaving lizard stone hill, leaving the hill
The two people are coming
The lord walks ahead, walks ahead
Tāmarai walks behind, walks behind

ஆண்டவனும் முன் நடக்க முன் நடக்க
அருங்கிளியாள் பின் துடர்ந்தாள் பின் தொடர்ந்தாள்

இருவரும் வீட்டுக்கு வந்து குன்னுடையார் சாப்பிட்டுத் தாம்பூலம் போட்டு, "பெண்ணே! அணியப்பூர் சென்று வருகிறேன்" என்று புறப்பட்டார்.

(பாட்டு) அணியப்பூர் தேடியல்லோ தேடியல்லோ
அதி விரைவாய் வருகிறாரே சாமியுந்தான்
ஆளைக் கண்டால் அன்னநடை அன்ன நடை
ஆள் மறைந்தால் குதிரைவேகம் வருகிறாரே
மேடுகண்டா மெல்லநடை மெல்ல நடை
பள்ளங்கண்டா பருத்தநடை வருகிறாரே

குன்னுடையாசாமி அணியப்பூர் வந்து பெரியவீட்டுக் கவுண்டரைப் பார்த்து, "கவுண்டரே! திங்கள்கிழமை நீங்கள் வீட்டுக்கு ஒருவர் வந்து தட்டை அறுத்துப் போட்டு வாருங்கள்" என்றார்.

பெ. கவு - "சாமி! நம்ம காட்டில் வெள்ளாமை எப்படி இருக்கிறது?"

குன்னுடையா - "ஏதோ! சோளம் நாலு மொடா ஆகும். கொள்ளு ஒரு மொடா ஆகும். நீங்கள் திங்கள்கிழமை வந்து சேருங்கள்."

பெ. கவு - "சரி, நல்லது! அப்படியே வருகிறோம்."

குன்னுடையா - "சரி, கவுண்டர்களே! நான் போய்வருகிறேன்" என்று புறப்பட்டுப் பொன்னி வளநாடு வந்து சேர்ந்தார்.

தாமரை - "நாதா! கவுண்டர்கள் என்ன சொன்னார்கள்?"

குன்னுடையா - "பெண்ணே! திங்கள்கிழமை எல்லோரும் வருவதாகச் சொன்னார்கள்."

தாமரை - "சாமி! நல்லது. சாப்பிட வாருங்கள்."

குன்னுடையாசாமி எழுந்து சாப்பிட்டுவிட்டுச் சந்தோஷமாக இருந்தார்கள்.

(பாட்டு) இந்தப் பிரகாரம் நடக்குதுபார் அதிகாரம்
அப்படியே நல்லதென்று அன்புடனே நடக்குதுபார்
நாளொரு நாள் பொழுதொரு நாள்
நடக்குது பார் நல் பருவம்
மாதமூன்று மழை பெயும்
பொன்னிவள நாட்டில் நடக்குது அதிகாரம்

குன்னுடையாசாமி திங்கள்கிழமை காலை வெள்ளி உதிக்குமுன், வெண் கோழி கூவுமுன் எழுந்து காசிக்கரை சென்று நீராடிச் செல்லாத்தாளுக்குப் பூஜை முடித்து வீட்டுக்கு வந்து, கவுண்டர்களை எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்.

The divine one walks ahead, walks ahead
The rare parrot follows behind, she follows behind

When the two returned home Kuṉṉuṭaiyā ate, and chewed betel and areca nut. (Then) he said, "Oh wife! I am going to Aṉiyappūr," and he set off.

Song:
Searching for Aṉiyappūr, searching
He travels with great speed, my Lord, he is coming
When he sees someone, he walks like a swan, like a swan
When he sees no one he has the speed of a horse
Seeing hills and climbing, climbing
Seeing valleys and crossing them, he is coming

Kuṉṉuṭaiyā arives in Aṉiyappūr and addressed the Kavuṇṭar of the biggest house.

Kuṉṉuṭaiyā: "Oh Kavuṇṭar! On Monday (please) all of you come to (our) house to cut the stalks (of grain),"he said.

Big K.: "O.K. How is the crop in your field?"

Kuṉṉuṭaiyā: "Whatever (there is) there will be four mōṭa of maize and one mōṭa of millet. You come on Monday."

Big K.: "O.K., good, I will come then."

Kuṉṉuṭaiyā: "Good oh Kavuṇṭar! I will take leave," he said and he returned to The Country Where The Kāveri Flows.

Tāmarai: "Husband! What did the Kavuṇṭars say?

Kuṉṉuṭaiyā: "Oh, wife! They said they would all come on Monday."

Tāmarai: "Lord. Good. Come and eat."

Kuṉṉuṭaiyā sat down, ate, and was content.

Song:
See the monarch rule thus
It was said to be good, see how it was done with love
Day after day, time followed time
See the good age in progress
It rained three times a month
The monarch is ruling in The Country Where The Kāveri Flows

Kuṉṉuṭaiyā got up before dawn on Monday, before the cocks crowed, went and bathed on the Benares river bank, performed pūjā for Cellāttā and returned home to wait for the Kavuṇṭars. In a short while all the Aṉiyappūr

சிறிது நேரத்தில் அணியப்பூர் கவுண்டர்கள் எல்லோரும் வந்து சேர்ந்தார்கள். "சரி, எல்லோரும் வந்துவிட்டோம், புறப்படுங்கள் போகலாம்" என்றார்கள்.

(பாட்டு) சாமியும் முன் நடக்க முன் நடக்க
கவுண்டர்களும் பின் நடந்தார் பின் நடந்தார்
தாமரையும் முன் நடக்க முன் நடக்க
ஆயிரம்பேர் பின்துடர்ந்தார் பின்துடர்ந்தார்
ஓணாக்கல்லு காடுதேடிக் காடு தேடி
வருகிறாரே எல்லோரும்

காட்டுக்கு வந்து சேர்ந்ததும் ஆயிரம் கவுண்டர்களும் விளாவுக்கு இரண்டு பேர் நின்று துட்டை அறுத்துக் கட்டிப் பாறையில் கொண்டுபோய்ப் போட்டார்கள். பின் கொள்ளுச் செடியையும் பிடுங்கிப் பாறையில் கொண்டுபோய்ப் போட்டார்கள். உச்சி உருவம் மத்தியான நேரம் வேலை முடிந்ததும் கவுண்டர்கள் குன்னுடையாசாமியிடம் விடைபெற்று ஊர் போய்ச் சேர்ந்தார்கள். அவர்கள் போனபின் குன்னுடையாசாமியும் தாமரையும் கூடையை எடுத்துப் பாறையில் வடக்குமுகமாக உட்கார்ந்து,

(பாட்டு) "மண் பிடித்துப் போட்ட மாயவனே!
உரு பிடித்துப் போட்ட உடையாளி![1]
ஆபத்பாந்தவா அனாதரட்சகா!

நாங்கள் இரண்டுபேரும் இவ்வளவு கதிரையும் வெட்ட முடியுமா? எங்களுக்குத் துணையாக வரவேண்டும் காஞ்சி நாதா!"

என்று மாயவரை நினைத்துக் கதிரை வெட்டினார்கள். இதை மாயவர் பார்த்து, "ஆகா! நாம் கொடுத்த வரத்தில் குறைவில்லாமல் இருக்கிறது. கதிரை வெட்ட முடியாமல் நம்மை அழைக்கிறார்கள்" என்று கருட வாகனமேறிப் புறப்பட்டார்.

(பாட்டு) பால்கடல் விட்டுமல்லோ
வருகிறாரே மாயவரும்
பூலோகம் தேடியல்லோ
மய்யமா[2] வருகிறாரே
பொன்னிவள நாடுதேடி
வருகிறாரே எம்பெருமாள்

மாயவர் ஓணாக்கல்மேடு வந்து ஒருவருக்கும் தெரியாமல் நின்று, குன்னுடையாக் கவுண்டரும் தாமரையும் ஆளுக்கொரு கதிர் வெட்டிக் கூடையில் போட்டால் மாயவர் விபூதியை வீசும்போது ஐயாயிரம் கதிர் அந்தரத்தில் அறுந்து விழுந்தது. அரை நாழிகைக்குள் அவ்வளவு கதிரும்

1. மாயவன் 2. நடுவழி

Kavuṇṭars arrived. "O.K., we've all arrived. Let's get started," they said.

Song: The Lord walked ahead, walked ahead
The Kavuṇṭars walked behind, walked behind
Tāmarai, too, walked ahead, walked ahead
The thousand men walked behind, walked behind
Searching for lizard stone field, searching for the field
They are coming, all of them

The thousand men arrived at the field, and two stood near each furrow. They (the thousand men) cut the grain and stacked it in hillocks. They also stacked the millet in hillocks. By noon, when the sun was at its Zenith, the work was finished and the Kavuṇṭars took leave of Kuṉṉuṭaiyā and returned home.

After they had left, Kuṉṉuṭaiyā and Tāmarai took a basket and sat down facing north on a hillock.

"Vishnu, creator of earth
The creator of forms, owner
Rescuer of people in trouble, orphan-saver."
"Can we two people break off so many spikes (of grain)? You must come and assist us, oh ruler of Kanjeepuram!"

In this way, thinking of Vishnu, they broke open the spike of grain.

Vishnu saw this and thought, "Oh ho! My boon must not be faulted. They are calling me because they cannot break off the spikes of grain." So Vishnu mounted his Garuda vehicle and set off.

Song: Leaving the milk sea
Vishnu is coming
Searching for the earth
Vishnu is coming
Searching for The Country Where The Kāveri Flows
He is coming, our Vishnu

Vishnu arrived at lizard stone hill and stood there unknown to anyone. Kuṉṉuṭaiyā Kavuṇṭar and Tāmarai had broken off two spikes of grain and put them in the basket when Vishnu threw sacred ash and now five thousand spikes of grain broke off and fell into the basket. In half a second this much

வெட்டுண்டு பாறையில் குவிந்தது. பின் கொள்ளுச் செடியையும் பாறையில் உதறிவிட்டு இரண்டுபேரும் தடியை எடுத்துக் கொள்ளுக்காயை அடிக்கும்போது, மாயவர் விபூதியை வீசியவுடன் ஒருவருக்கும் தெரியாமல் ஆயிரம் தடிகள் அடிபட்டன. எல்லாம் அடித்து முடிந்தவுடன்,

தாமரை - "நாதா! என் மாமனார் இருந்த காலத்தில் யானை கொண்டு தாம்படிப்பாராம். நீங்களும் சோழதேசம் சென்று அரசரிடம் யானையைக் கேட்டு வாங்கிவாருங்கள். நாமும் யானை கட்டித் தாம்படிக்கலாம்."

குன்னுடையா - "சரி பெண்ணே! போய் வருகிறேன்" என்று புறப்பட்டார்.

(பாட்டு) பொன்னிவள நாடு விட்டு நாடு விட்டு
சோழதேசம் வருகுறாரே வருகுறாரே
காடான காடுவிட்டார் காடு விட்டார்
கட்டப்பொள்ளி சோலைவிட்டார் சோலை விட்டார்
இஞ்சி மணக்கும் வனம் மணக்கும் வனம்
எலுமிச்சங்காய் காய்க்கும் வனம் காய்க்கும் வனம்

சோழதேசம் வந்து குன்னுடையாசாமி அரசரைக் கண்டு நமஸ்காரம் செய்தார்.

அரசர் - "குன்னுடையாக் கவுண்டா! மங்களம் உண்டாகட்டும்! வெள்ளாமை எல்லாம் எப்படி இருக்கிறது?"

குன்னுடையா - "ஏதோ! தங்களுடைய புண்ணியத்தில் நாலுமொடா சோளம் ஆகும். அரசே! என் தகப்பன் இருந்த காலத்தில் யானை கட்டித் தாம்படித்தாராம். அதுபோல் என் மனைவி யானை கட்டித் தாம்படிக்க வேண்டுமென்று சொல்கிறாள். ஆகையால் தங்களிடம் யானையை வாங்கிப் போகலாமென்று வந்தேன்."

அரசர் - "குன்னுடையாக் கவுண்டா! உன் மனைவி நல்ல திறமை உள்ளவள்போல் இருக்கிறது."

குன்னுடையா - "அரசே! என் மனைவி திறமைசாலிதான்."

அரசர் - "ஆமாம்! நீ அப்பாவி. அவள் அப்படி இருப்பது நல்லதுதான். அடே சேவகா! யானைப்பாகனைப் பட்டத்து யானையைக் கொண்டு வரச்சொல்."

சேவகர் "அரசே, நல்லது" என்று யானையைப் பிடித்துக்கொண்டு புறப்பட்டார்.

(பாட்டு) சோழதேசம் விட்டுமல்லோ விட்டுமல்லோ
பொன்னிவள நாடுவாறார் நாடு வாறார்

was done and the hillock dispersed. Then the hillock of millet was tackled. As the two lifted sticks to break off seed pods Vishnu (again) threw sacred ash. Without anyone knowing about it a thousand sticks beat (the pods) and it was finished.

Tāmarai: "Husband! In your parents' time they did the threshing with elephants. Go to the Chola Country and ask the King for some elephants. We will do our threshing with them."

Kuṉṉuṭaiyā: "Good, oh wife! I will go," he said and set off.

Song: Leaving The Country Where The Kāveri Flows, leaving the country
Approaching the Chola Country, approaching that country
Leaving the dark forest, leaving the forest
Leaving the Kaṭṭapoḷḷi forest, leaving the forest
Leaving the ginger fragrant forest, fragrant forest
The lemon fruit forest, fruit forest

Kuṉṉuṭaiyā arrived in the Chola Country and greeted the King.

King: "Kuṉṉuṭaiyā Kavuṇṭar Blessings to you! How are your crops?"

Kuṉṉuṭaiyā: "Whatever (there is), with your grace there will be four mōṭa of maize, oh King! In my father's time the threshing was done with elephants. My wife has said that we must thresh with elephants, in the same way. Therefore, I have come to you to ask for elephants."

King: "Your wife is very able."

Kuṉṉuṭaiyā: "It is true, she is very able."

King: "Yes. You are innocent. It is good that she should be like that. Oh servant! Tell the elephant driver to bring an elephant.

Servant: "King. Good," he said and told the elephant driver to bring an elephant.

King: "Kuṉṉuṭaiyā Kavuṇṭar! Go, finish the threshing, and bring the elephant back."

Kuṉṉuṭaiyā: "Oh King! Good," said Kuṉṉuṭaiyā as he took the elephant and started off.

Song: Leaving the Chola Country, leaving it
He approaches The Country Where The Kāveri Flows

மண்போட்டுப் பொன்விளையும் பொன்விளையும்
மகுட பொன்னிவளநாடு நாடு வாறார்

குன்னுடையாசாமி யானையைப் பிடித்துக்கொண்டு ஓணாக்கல் காடு வந்து, "பெண்ணே! யானை கொண்டுவந்துவிட்டேன்" என்றார்.

தாமரை - "நாதா! நல்லது. இனித் தாம்படியுங்கள்."

குன்னுடையாசாமி பாறையில் கதிர்களைப் பரப்பிவிட்டு யானையை வடக்கு முகமாக நிறுத்தி மாயவரை நினைத்து ஓட்டினார். மூன்று சுற்று ஓட்டியபின் நிறுத்திச் சக்கைகளை எல்லாம் விலக்கிவிட்டு மறுபடி மூன்றுமுறை ஓட்டிவந்து யானையை நிறுத்திவிட்டுத் தானியங்களைக் கூட்டிக் குவித்து, "பெண்ணே! நீ கூடையில் அள்ளிக்கொடு, நான் தூற்றுகிறேன்" என்று மாயவரை நினைத்துத் தலையில் கூடையை வைத்துத் தூற்றும்போது மாயவர் கிருபையில் அந்திரத்தில் ஆயிரம் கூடை தூற்றியது.

எல்லாம் தூற்றி முடித்ததும் ஒன்றாகக் குவித்து மல்லாண்டார்[1] போட்டு ராசிக்கால்[2] கட்டினார்கள்.

தாமரை - "நாதா! யானையைக் கொண்டுபோய் விட்டுவிட்டு அரசர் தங்க வள்ளத்தை வாங்கி வாருங்கள்."

(பாட்டு) அப்படியே நல்லதென்று நல்லதென்று
அன்புடனே வருகுறாரே வருகுறாரே
பொன்னிவள நாடு விட்டு நாடுவிட்டுச்
சோழதேசம் வருகுறாரே சாமியுந்தான்

குன்னுடையாசாமி சோழதேசம் சென்று அரசரை நமஸ்காரம் செய்து, "சாமி! யானையைக் கொண்டுவந்துவிட்டேன் என்றார்.

அரசர் - "சரி, நல்லது! சோளமெல்லாம் தாம்படித்து விட்டாயா?"

குன்னுடையா - "அரசே! எல்லாம் முடிந்தது. தங்களுடைய தங்கவள்ளம் வேண்டும். அளந்துவிட்டுக் கொண்டுவந்து தருகிறேன்."

அரசர் - "சரி, நல்லது! அடி மாதர்களே! முத்திரை வள்ளத்தைக் கொண்டுவந்து கொடுங்கள்."

குன்னுடையாசாமி வள்ளத்தை வாங்கிக்கொண்டு புறப்பட்டார்.

(பாட்டு) சோழதேசம் என்சாமி விட்டுமங்கே
பொன்னிவள என்சாமி நாடு வர்றார்
சிங்கம் உறங்கும் வனம்

---

1. களத்தில் இரு செங்கற்கள் அல்லது வெள்ளைக் கற்களை வைத்து அவற்றை வளமைத் தெய்வமாக வழிபடுதல் 2. தானியக் குவியல்

(Where) gold springs from the earth, gold springs (up)
He approaches The Famous Country Where the Kāveri
Flows

Kuṉṉuṭaiyā took the elephant and arrived at lizard stone field. "Oh wife. I have brought an elephant."

Tāmarai: "Husband. Good. Now (begin) threshing."

Kuṉṉuṭaiyā spread the heads of grain out on a stone outcropping, and standing the elephant facing north he began to drive it, thinking of Vishnu. After three rounds the husks had fallen off. He drove three more rounds and stopped, as all the grains had settled together,. "Oh, wife, you sweep (the grain) into a basket and I will winnow," he said. As he lifted the basket onto his head he thought of Vishnu who, in his mercy, winnowed with a thousand baskets in no time.

When the winnowing was finished, all (the grain) was gathered together in big (measured) heaps.

Tāmarai: "Husband. Return the elephant, get the King's blessing, and come back."

Song: It was said to be good, said to be good
He is approaching with love, approaching
Leaving The Country Where The Kāveri Flows, leaving
that country
The Lord is approaching the Chola Country

Kuṉṉuṭaiyā reached the Chola Country and paid the King his respects.

Kuṉṉuṭaiyā: "Lord. I have brought back the elephant."

King: "O.K. Good! Have you finished the threshing?"

Kuṉṉuṭaiyā: "Oh, King! It is finished. I need your golden measure. When (all is) measured I will bring it back."

King: "O.K. Good! Oh servant women! Come and bring the official vaḷḷam measure."

Kuṉṉuṭaiyā took the vaḷḷam measure and set out.

Song: Our Lord has left the Chola Country
He is approaching The Country Where The Kāveri
Flows, our Lord
The forest of sleeping lions

சிறுபுலிகள் தூங்கும் வனம்
ஆளி[1] உறங்கும் வனம் அட கோட்டான்
என்னாத்தாத் தூங்கும் வனம்

ஓணாக்கல் காட்டுக்கு வந்து சேர்ந்து, "பெண்ணே! கூடையைப் பிடி, நான் அளந்து போடுகிறேன். எவ்வளவு ஆகும் என்று பார்க்கலாம். யாராவது பிச்சைக்காரர்கள் தடத்தில் வந்தால் பார்த்துச் சொல். ராகியா, சோளமா, ஒரு படி கொடுப்பதற்கு. அப்படி யாராவது வந்தால் உடனே ராசியை மூடிவிடலாம்" என்று சொல்லிக் குன்னுடையாக் கவுண்டர் வடக்குமுகமாக உட்கார்ந்து தெய்வசபையை நினைத்து, "பொலி[2] இரண்டு, மூன்று, ஐந்து, ஏழு, ஒன்பது" இப்படியாக அளந்து கொண்டிருக்கும்போது மாயவர், "குன்னுடையாக் கவுண்டன் தருமம் கொடுப்பானா மாட்டானா?" என்று வலதுபுறம் காட்டில் ஆடு மாடு மேய்க்கும் பையனை எல்லாம் கூப்பிட்டு, பையனுக்கெல்லாம் நாமம் போட்டுச் சங்கு செயகண்டி[3] இப்படியாகத் தொள்ளாயிரத்து தொண்ணூற்று ஒன்பது பையன்களைச் சேர்த்துக்கொண்டு மாயவரு(ம்)(உ)டன் (சேர்ந்து) ஆயிரம் தாசனாக வடிவெடுத்து எல்லோரையும் கூட்டிக்கொண்டு பாறை உள்ள திசையை நோக்கி நடந்தார்.

தாமரை வடக்கிலிருந்து பரதேசிகள் வருவதைப் பார்த்து, "மாயவர் வருகிறார்" என்று மனதில் நினைத்து இன்பம் குளிர்ந்து இருதோளும் பூரித்துத் தாசர்கள் அருகில் வந்ததும், "நாதா! யாரோ பரதேசிகள் வருகிறார்கள்" என்றாள்.

குன்னுடையா - "பெண்ணே! இங்கு வந்துவிடப் போகிறார்கள், அப்படியே போகச்சொல்."

ஆனால் தாமரை பரதேசியை நோக்கி, "சுவாமி! வாருங்கள்" என்று கூப்பிட்டாள். குன்னுடையாசாமிக்குக் கோபம் வந்து, "அடி, கூடப்போட்ட முண்டே! நான் அப்படியே போகச்சொல்லிச் சொல்லுகிறேன். நீ இங்கே வாருங்கள் சுவாமி என்று கூப்பிடுகிறாயா?" என்று கோபம் வந்து கவையை எடுத்து ஓங்கினார்.

தாமரை - "நாதா! பொறுங்கள். நீங்கள் ஏன் இப்படி ஆத்திரப் படுகிறீர்கள்? எல்லாம் அவர் கொடுத்த பிச்சை."

குன்னுடையா - "ஏண்டி! அந்த ஓட்டைவாய் தாசனா கொடுத்தான்? மூன்று மாதமாகக் கஷ்டப்பட்டு நானல்லவா சம்பாதித்தேன்." (இதற்குள் தாசர்கள் ஆயிரம் பேரும் வந்து பாறையில் நின்று கொண்டார்கள்.) "ஒருவரா இல்லை இருவரா ஒரு வள்ளம் கொடுப்பதற்கு. ஆயிரம் பேர் வந்து நிற்கிறார்கள். எவ்வளவு

---

1. (யாளி) - யானையின் தந்தமும் துதிக்கையும் சிங்கத்தின் முகமும் உடையதாகக் கருதப்படும் மிருகம் 2. தூற்றிய தானியக்குவியல் 3. (சேகண்டி) - கோல்கொண்டடிக்கும் வட்ட மணிவகை

The forest of small dozing tigers
The forest of sleeping yāḷis[1]
The forest of sleeping owls, my Lord

He arrived at lizard stone field and said "Oh, wife! Take the basket and I will measure. We will see how much there is. If you see some beggar coming along the path let me know, instead of giving one measure of rāki millet, and one measure of maize, we'll quickly cover the rāki (and give only maize)."

Then Kuṉṉuṭaiyā Kavuṇṭar sat down facing north, thought of the god's counsel meeting and counted "One measure, two, three, five, seven, nine." While he measured Vishnu watched and thought, "Will he give alms or will he refuse?" (So) he gathered the shepherds grazing goats and cows in all the fields off to the right, put Vaisnavite forehead marks on them, and gave them conch shells and metal gongs to hold in their hands. There were nine hundred and ninety-nine boys in all. With Vishnu the total number of (persons) disguised as mendicants numbered one thousand. All of them came to the field and approached the stone outcropping.

Tāmarai saw the wandering beggars coming from the north and realized in her heart that it was Vishnu approaching. She was happy and her shoulders straightened in joy. When the mendicants were near she said, "Husband! Some wanderers are approaching."

Kuṉṉuṭaiyā: "Oh wife! Tell them, 'go away'."

But Tāmarai faced the beggars and said, "Lords, come!" calling them. Kuṉṉuṭaiyā became angry, saying, "You stupid fool. I said to tell them to go away. Instead, you call them saying 'come, Lords'." In anger, Kuṉṉuṭaiyā raised his shepherd's crook.

Tāmarai: "Husband. Be calm. Why are you distressed? All this was given to us as alms by Him (God)."

Kuṉṉuṭaiyā: "What's that? Did that big-mouthed beggar give all this to us? I earned all this with my hard work, in three months." By this time a thousand beggars had come to the rock outcropping and were standing there. "To give a vaḷḷam to one or two people is one thing, but when a thousand people

[1] A mythological animal with the head of a lion and large, protruding eyes.

என்று குன்னுடையா ராஜமன்னன், கோடையிடி மணிவேந்தன் கோபம் வந்து ராசியில் உட்கார்ந்து வள்ளத்தைக் கையில் எடுத்து, "பெண்ணே! பிடி. யார் யாருக்குப் போடவேண்டுமோ போடு!" என்று தானியத்தை அளக்கத் துடங்கினார். தாமரை இரண்டு வள்ளம் வாங்கிப் பெரிய தாசனுக்குப் போட்டாள். மறுபடி எல்லாத் தாசனுக்கும் ஆளுக்கு ஒரு வள்ளம் போட்டாள். எல்லாருக்கும் போட்டுவிட்டுப் பார்க்கும்போது மீதி ஐந்து வள்ளத் தானியம்தான் இருந்தது. "கூடப்போட்ட முண்டே! நான் இவ்வளவு தானியத்தையும் கொண்டு வெகுகாலம் பிழைக்கலாம் என்று இருந்தேன். எல்லாம் வழித்துத் தாசனுக்குக் கொடுத்துவிட்டாய் சண்டாளி" என்று குன்னுடையாக் கவுண்டர் தாமரையைச் சண்டை பிடிக்கவும் ஆயிரம் தாசனும் மாயமாய் மறைந்துவிட்டார்கள்.

குன்னுடையாசாமிக்குக் கோபம் வந்து, வள்ளத்தைக் கையில் எடுத்துக் கொண்டு சோழதேசம் சென்று வள்ளத்தை அரண்மனையில் கொடுத்துவிட்டுத் திரும்பினார். சாமி போனபிறகு தாமரை மீதி இருந்த தானியத்தைக் கூடையில் போட்டு எடுத்துத் தலையில் வைத்து வீட்டுக்குப் புறப்பட்டாள். இவர்கள் இருவரும் வீட்டுக்கு வருமுன் ஆயிரம் தாசர்களும் ஆயிரவள்ள முத்தையும் கொண்டுவந்து வீட்டுக்குள் கொட்டிவிட்டுப் போய்விட்டார்கள். கவுண்டர் சோழதேசத்திலிருந்து வீடுவந்து சேர்ந்தார். வந்ததும் கோபத்தில் கதவைத் திறந்தார். கதவைத் திறக்கமுடியவில்லை. இதற்குள் தாமரையும் வீடுவந்து சேர்ந்தாள்.

குன்னுடையா - "பெண்ணே! ஏன் கதவைத் திறக்கமுடியவில்லை? குருத்து[1] இறங்கிவிட்டது போல் இருக்கிறது. வா, இருவரும் சேர்ந்து கதவை மேலே தூக்கலாம்"

என்று இருவரும் சேர்ந்து கதவைத் தூக்கியபடித் தள்ளும்போது, "ஜல ஜல"வென்று முத்துக்கள் கதவுச்சந்தில் வெளியில் வந்தன. குன்னுடையாசாமி முத்துக்களைக் கண்ணில் பார்த்து, "பெண்ணே! தாசன் ஆயிரம் பேரும் வாங்கிய முத்து எல்லாம் இங்கு கொண்டுவந்து போட்டுவிட்டுப் போய்விட்டார்களே? ஏன் அவர்கள் கொண்டு போகவில்லை. என்ன காரணம்?" என்றார்.

தாமரை - "நாதா! அவர் கொடுத்த திரவியத்தை அவர் கொண்டுபோக மாட்டார். உங்களுக்குத் தர்மசிந்தனை இருக்கிறதா என்று பார்த்திருக்கிறார் அவ்வளவுதான். நாதா! நானும் தாங்கள் தருமம் செய்வீரா என்று பார்த்தேன்."

(பாட்டு) செங்கோலு அதிகாரம் இனி அதிகாரம்

1. கதவின் கீல்

stand here how much must be given!" said the King who was like summer thunder. He became angry and sat on the heap (of grain). He lifted the vaḷḷam measure in his hand and said, "Oh, wife! Hold this! Give to whomever you want," and he began measuring. Tāmarai took two vaḷḷams and offered this to the lead beggar. Then she gave one vaḷḷam apiece to each of the others. When everyone had been given something and (they) looked around there were only five vaḷḷam of grain left. "You widow[1] who has given away too much grain. I had planned to exist a long time (on that), but you have distributed it all to beggars, villain!" Thus Kuṉṉuṭaiyā picked an argument with Tāmarai. Meanwhile Vishnu caused the thousand beggars to disappear.

Kuṉṉuṭaiyā, becoming angry, took the vaḷḷam measure in his hand. He went to the palace in the Chola Country to return it, and then came back. After he had left Tāmarai took the remaining grain, put it in a basket, put that on her head, and set off for home. Before either of them reached home (however) the thousand beggars had carried the thousand vaḷḷam of pearls and put them inside. The Kavuṇṭar returned from the Chola Country, and on arrival he angrily reached to open the house door. But the door would not open. Tāmarai arrived home at the same time.

Kuṉṉuṭaiyā: "Oh, wife! Why can't I open the door? It seems that the latch has fallen into place. Come, together we will lift the door." When they lifted the door together, pearls began to slide out through the crack underneath, making a "jala, jala" sound. Kuṉṉuṭaiyā saw the pearls and said, "oh, wife! All the pearls the thousand beggars took have been brought here! Why didn't they take them away? What is the reason for this?"

Tāmarai: "Husband. He (God) would not take away the wealth he gave us. He was just testing (to see if) you were generous, that's all. Husband! I have seen you perform a good deed, have I not."

Song: It was a time of justice, a sweet time

---

[1] A very derisive term when used to address one's own wife.

செலுத்திப்பட்டம் நாட்டிலே ஆளுகிறார்
தங்கவிரல் அதிகாரம் இனி அதிகாரம்
தனிச்சுப் பட்டம் நாட்டிலே ஆளுகிறார்
மாதம் மூன்று மழைபெயும் அங்கு மழைபெயும்
வருஷமொரு நாட்டிலே கல்மாரி இனிக் கல்மாரி
இந்த நல்ல பிரகாரம் இனிப் பிரகாரம்
நடக்குதுபார் பொன்னிவள நாட்டில் அதிகாரம்

அன்னக்கொடி தாமரை, அறிவுள்ள தேவி, காராளன் தேவி, கற்புடைய விள்ர்மாது,[1] ஒருநாள், ஒரு பொழுது, ஒரு யோசனை மனத்தில் நினைத்தாள் "ஆகா! நம் மாமனார் இருக்கும் காலத்தில் இந்த இடத்தில் அரண்மனை கட்டி இருந்தாராம். நம்மளுக்கு இப்போது ஏழரைக்கோடித் திரவியம் மாயவர் அருளால் கிடைத்திருக்கிறது. ஆகையால் நாம் மாமனார் கட்டியிருந்த அரண்மனையைவிட நல்லதாகக் கட்டவேண்டும்" என்று நினைத்தாள். மாயவரை வேண்டினாள். பரந்தாமன், "ஆகா! தாமரை வீடுகட்ட நினைத்து நம்மளை அழைக்கிறாள்" என்று கருட வாகனமேறிப் புறப்பட்டார்.

(பாட்டு) பால்கடல் என்சாமி விட்டுமங்கே
பரந்தாமன் என்சாமி வாறாரே
பூலோகம் என்சாமி தேடியல்லோ
மய்யமா என்சாமி பறக்குறாரே
மண்போட்டு என்சாமி பொன் விளையும்
மகுடபொன்னி என்னாத்தா நாடுவந்தார்

மாயவர் பொன்னி வளநாடு வந்து குன்னுடையாக் கவுண்டர் வீட்டில் அமர்ந்தார். குன்னுடையாசாமியும் தாமரையும் மாயவரை நமஸ்காரம் செய்தார்கள்.

மாயவர் - "சரணமென்ற பேர்களுக்கு மரணமொரு நாளுமில்லை! அம்மா, தாமரை! என்னை ஏது காரணமாக வரவழைத்தாய்?"

தாமரை - "பரந்தாமா! பூபாலகா! தாங்கள் கொடுத்த பிச்சை எனக்கு ஏழரைக்கோடித் திரவியம் இருக்கிறது. சுவாமி! என் மாமனார் காலத்தில் அரண்மனை கட்டியிருந்தாராம். அதுபோல் நாங்களும் கட்டவேண்டுமென்று நினைத்துத் தங்களை அழைத்தேன். என் மாமனார் கட்டியிருந்த இடத்தில் கட்டலாமா? அல்லது வேறு இடத்தில் கட்டலாமா? தாங்கள் சோதிடம் பார்த்துச் சொல்லவேண்டும்."

மாயவர் - "தாமரை! இந்த வீடு கட்டுவதற்கெல்லாம் நான் சோதிடம்

1. இளம் பெண்

The King is ruling authoritatively
The one who has a signet ring on his finger is ruling,
is ruling
Is ruling the country alone
It rained three times a month, it rained there
It poured in the land, and once a year, there was a
shower of hail stones
A good time, a sweet time
See the monarch rule in The Country Where The
Kāveri Flows

The fine creeper vine, Tāmarai, the all-knowing one
Goddess of the agriculturalists, woman pregnant with
revelations

One day, one time, she had a thought in her heart. "Oh, ho! When my parents-in-law were alive, they had a palace. Now Vishnu, in his grace, has given us seven and a half crores of wealth. Therefore we must build a good palace like that of my parents-in-law," she said, thinking of Vishnu. Parantāma (responded), "Oh, ho! Tāmarai is thinking of building a house and is calling on me." He mounted his Garuda vehicle and set off.

Song: Our Lord leaves the milk sea
Our Lord, Parantāma, is approaching
Our Lord is searching for the earth
Vishnu, our Lord, is flying
Our Lord, (to where) gold springs from the earth
Our Lord is approaching The Famous Country Where
The Kāveri Flows

Vishnu arrived at Kun̲n̲uṭaiyā's home in The Country Where the Kāveri Flows. Kun̲n̲uṭaiyā and Tāmarai paid him their respects.

Vishnu: "There is no death for those who take refuge in me. Oh lady Tāmarai! For what reason have you called me to come?'

Tāmarai: "Oh Parantāmā! ruler of earth. From the beggars you gave us we have seven and a half crores of wealth, oh Lord! In the time of my parents-in-law there must have been a palace. We must build a similar one, I thought, and called upon you. Shall we build it where my parents-in-law build, or at a different spot? You must look at the horoscope and tell us.

Vishnu: "Tāmarai. Without my looking at the horoscope for building

பார்க்காவிட்டால் (என்ன?) நாட்டில் எத்தனையோ சோதிடர்கள் இருக்கிறார்கள் பார்த்திருக்கலாமல்லவா?"

தாமரை - "சுவாமி! என்ன சொன்னீர்கள்? தங்களுடைய சிருஷ்டியில் மாங்கல்யம் செய்து எனக்குத் தாங்கள் முன் நின்று திருமணம் செய்துவைத்தீர்கள். அப்படியிருக்கும்போது எந்தக் காரியமாக இருந்தாலும் தாங்கள் இல்லாமல் முடியாது."

தாமரை இவ்வாறு சொன்னவுடன் பரந்தாமன் இன்பம் குளிர்ந்து இருதோளும் பூரித்து, சாலைமனம் குளிர்ந்து சந்தோஷப்பட்டு, "தாமரை! சாவடியில் நாலுமூலை சதுரமாக வழித்துப் பிள்ளையார் பிடித்து வைத்துத் தேங்காய், பழம் உரித்து வை" என்றார்.

தாமரை - "சுவாமி. அப்படியே செய்துவிட்டேன்."

மாயவர் எழுந்து பிள்ளையார் அருகில் உட்கார்ந்து பஞ்சாங்கத்தையும் ஜோதிட ஏட்டையும் பிள்ளையார் முன் வைத்துப் பூஜை செய்து மாயவர் ஏட்டை எடுத்து நல்லநாள் பார்த்தார்.

மாயவர் - "தாமரை! உன் மாமனார் கட்டியிருந்த இடம் இதுதான். இந்த இடத்தில் கட்டலாம். வருகிற வெள்ளிக்கிழமை விடி ஐந்து நாழிகைக்குச் சந்திரன் தேவி சூரியன் கிளம்புமுன் இதே இடத்தில் பாலக்கால்[1] போட்டு அதன்மேல் வேலையை ஆரம்பம் செய்யுங்கள்."

தாமரை - "சுவாமி! நல்லதுங்கோ, வெள்ளிக்கிழமை காலையில் தாங்கள் வந்துதான் பாலக்கால் போடவேண்டும்."

மாயவர் - "நல்லது, தாமரை! நீ அரண்மனை கட்டுவதாக எல்லோருக்கும் தெரியவேண்டும். ஆகையால் அணியப்பூர் கவுண்டர்களையும் வெள்ளிக்கிழமை வரச்சொல்லித் தகவல் கொடுங்கள். நான் போய் வருகிறேன்" என்று புறப்பட்டுப் பாற்கடல் சென்றார்.

(பாட்டு) இந்த நல்லப் பிரகாரம் இனிப் பிரகாரம்
பொன்னிவள நாட்டில் நடக்குது அதிகாரம்
அப்படியே நல்லதென்று அன்புடனே நடக்குதுபார்
நாளொருநாள் பொழுதொருநாள் இனி
நடக்குதுபார் நல்பருவம் அங்கு நல்பருவம்

---

1. கட்டடம் கட்ட ஆரம்பிக்கும் முன் செய்யப்படும் சடங்கு. பாலை என்னும் பால்மரக் கிளையை ஊன்றி அதில் மஞ்சள் துணியில் நவதானியங்கள் போன்றவற்றை வைத்து இச்சடங்கை நிகழ்த்துவர்

a house, there are many fortune tellers in this country you could approach."

Tāmarai: "Lord! What did you say? You created a wedding necklace (by your grace alone), stood me in front of you and married me. When this is the case, then in no matter what circumstance, nothing can be done without your presence!"

As soon as Tāmarai had said all this Vishnu was pacified, his shoulders straightened, the hall of his heart was full, and he was happy.

Vishnu: "Tāmarai! Lay out the four corners of the great hàll in a sqaure, form a Pilliar (image) there and break a coconut, and lay it there with bananas."

Tāmarai: "Lord. I have done all that."

Vishnu got up and sat near the Pilliar temple. He took an astrological handbook and a horoscope, both on palm leaves, laid them in front of Pilliar and performed a pūjā. Then Vishnu took the palm leaves and studied them for an auspicious day.

Vishnu: "Tāmạrai. This is indeed the spot on which your parents-in-law built. You may build on this spot. Next Friday, at five in the morning, before the sun rises and outshines the moon, place a milk post[1] and after this begin the work (of building).

Tāmarai: "Lord. Very good. On Friday morning you must come for the erection of the milk post."

Vishnu: "Good, Tāmarai. You must announce to all that you are building a palace. Therefore, tell the Kavuṇṭars of Aṇiyappūr to come on Friday. I will take leave," Vishnu said and left for the milk sea.

Song:

It was a good time, a sweet time
The rule that was in progress in The Country Where
The Kāveri Flows
Was said to be good, look at how it was done with
love
Day after day, time followed time
See the good things that happened, the good that
happened there

---

[1] A special ritual post made from a branch of the "milk tree" and used in many auspicious rituals.

தாமரை - "நாதா! தாங்கள் அணியப்பூர் சென்று கவுண்டர்களை வெள்ளிக்கிழமை வீட்டுக்குப் பாலக்கால் போடுவதாகச் சொல்லிவிட்டு அவர்கள் வரும்போது வீடு தவறாமல் பால் கொண்டுவரச் சொல்லிவிட்டு வாருங்கள்."

குன்னுடையாசாமி, "சரி, நான் போய் வருகிறேன்" என்று அணியப்பூர் புறப்பட்டார்.

(பாட்டு) அணியப்பூர் என்னாத்தாத் தேடியல்லோ
அதிவிரைவாய் என்சாமி வாறாரே
மேடுகண்டா என்னாத்தா மெல்லநடை
பள்ளங்கண்டா என்சாமி பருத்தநடை

குன்னுடையாசாமி அணியப்பூர் போய்ப் பெரியவீட்டுக் கவுண்டரைப் பார்த்து, "பெரியவீட்டுக் கவுண்டரே! நான் அரண்மனை கட்டுகிறேன். அதற்கு வெள்ளிக்கிழமை காலையில் பாலக்கால் போடவேண்டும். ஆகையால் நீங்கள் ஒரு பத்து வீட்டுக்காரர் வெள்ளிக்கிழமை கோழி கூவியவுடன் கொஞ்சம் பால் கொண்டு பொன்னி வளநாடு வந்து சேருங்கள்" என்றார்.

கவுண்டர் - "சாமி! அப்படியே வருகிறோம்."

குன்னுடையாசாமி, "சரி, நான் போய் வருகிறேன்" என்று புறப்பட்டுப் பொன்னி வளநாடு வந்து சேர்ந்தார். இப்படி இருக்கும்போது வெள்ளிக் கிழமை பிறந்தவுடன் சூரியன் உதிக்குமுன் மாயவர் பொன்னி வளநாடு வந்து சேர்ந்தார். அணியப்பூர் கவுண்டர்களும் வந்து சேர்ந்தார்கள். குன்னுடையா சாமியும் மற்ற கவுண்டர்களும் மாயவரை வணங்கினார்கள்.

மாயவர் - "எல்லோருக்கும் மங்களம் உண்டாகட்டும்! தாமரை ஒரு தட்டத்தில் நவதானியம் துணியில் முடிந்து வைத்து, தேங்காய், பழம், வெற்றிலைபாக்கு எல்லாம் வைத்துச் சொம்பில் தண்ணீர் எல்லாம் எடுத்துக் கொண்டுவா. குன்னுடையாக் கவுண்டா! ஒரு பாச்சான் கோல்[1] ஒன்று வேண்டும், கொண்டுவா."

மாயவர் சொன்ன பிரகாரம் எல்லாச் சாமானும் கொண்டு வந்த பின்,

மாயவர் - "பெரியவீட்டுக் கவுண்டா! நீ தட்டத்தைக் கையில் எடுத்துவா!"

1 அளவு கோல்

Tāmarai: "Husband. Go to Aṉiyappūr. Tell the Kavuṇṭars that Friday we are erecting a milk post for (a new) house and tell them to be sure to bring milk with them when they come."

Kuṉṉuṭaiyā: "O.K. I will go and return," he said and set off for Aṉiyappūr.

Song: Searching for Aṉiyappūr, my Lord
Travelling with great speed, my Lord
Seeing hills and climbing them, my Lord
Seeing valleys and crossing them, my Lord

Kuṉṉuṭaiyā went to Aṉiyappūr and greeted the Kavuṇṭar of the biggest house. "Oh Kavuṇṭar of the biggest house! I am going to erect a milk post on Friday for the building of a palace. Therefore, on Friday, as soon as the cocks crow, you and ten other men come to The Country Where The Kāveri Flows, bringing milk with you."

Big K.: "Lord. We will come then."

Kuṉṉuṭaiyā took leave and set off, returning to The Country Where The Kāveri Flows. On Friday, at the time when the day began and before the sun had risen, Vishnu arrived in The Country Where The Kāveri Flows. The Kavuṇṭars of Aṉiyappūr (also) arrived. Kuṉṉuṭaiyā and the other Kavuṇṭars revered Vishnu.

Vishnu: "Blessings to all! Tāmarai. Tie nine kinds of grain in a cloth and place this on a plate, along with coconuts, bananas, betel leaf and areca nut.[1] Put water in a small pot. Bring all these things here. Kuṉṉuṭaiyā! We must have a branch of the pāccāṉ tree.[2] Bring that.

As Vishnu ordered, all these things were brought. Afterwards:

Vishnu: "Kavuṇṭar of the biggest house. Take the plate in your hand

---

1 Typical preparations for the milk post ritual. 2 Also known as the pālā or 'milk' tree.

என்று மாயவர் ஜலமூலை பார்சமாக நின்று பாச்சான் கோலை மூன்றுபேர் கையில் பிடித்துத் தண்ணீர், பால் விட்டுப் பூஜைசெய்து நவதானியத்தை எடுத்து தூபம் காட்டிப் பாச்சான் கோலில் காட்டினார்கள். பின் கோலைப் பூமியில் நட்டு, பெரியவீட்டுக் கவுண்டர், தேங்காயை உடைத்து வைத்து நெருப்பில் நெய் போட்டுத் தண்ணீர் சுற்றிப்போட்டு பூஜை செய்தார்.

மாயவர் - "தாமரை! அஸ்திவாரம் போட்டாகிவிட்டது. இனிக் கொத்தர்களைக் கூப்பிட்டுக் கல் உடைத்து, வீட்டுவேலையை ஆரம்பம் செய்யுங்கள். என்னை வேண்டும்போது நினை. நான் வருகிறேன்" என்று புறப்பட்டுப் பால்கடல் சென்றார். அணியப்பூர் கவுண்டர்களும் விடைபெற்று ஊருக்குச் சென்றார்கள்.

(பாட்டு) இந்தப் பிரகாரம் நடக்குது அந்நேரம்
அப்படியே நல்லதென்று இனி
அன்புடனே நடக்குது பார்
நாளொரு நாள் பொழுதொரு நாள்
அங்கு நடக்குதுபார் நல்பருவம்

தாமரை - "அடே தலையாரி! நீ தங்க வளநாடு போய் ஆயிரம் வீட்டுக் கொத்தர்களையும் கூட்டிக்கொண்டு வா."

தலையாரி - "சரி, நல்லது" என்று தங்க வளநாடு புறப்பட்டான்.

(பாட்டு) பொன்னிவள நாடுவிட்டு நாடுவிட்டுத்
தங்கவள நாடுவாறான் நாடு வாறான்
வேகாத வெய்யலிலே அங்கு வெய்யலிலே
வெந்தெறிஞ்ச கானலிலே வாறானே தலையாரி

தலையாரி தங்க வளநாடு வந்து கொத்தர்களைக் கூப்பிட்டு, "அப்பா! பொன்னி வளநாடு பெரியவீட்டு எஜமானர் உங்கள் ஆயிரம் வீட்டுக் காரரையும் உடனே கூட்டிவரச் சொன்னார்" என்றான். கொத்தர்கள், "இதோ வருகிறோம்" என்று சாமான்களை எடுத்துக்கொண்டு புறப்பட்டார்கள்.

(பாட்டு) தங்கவள என்னாத்தா நாடு விட்டுப்
பொன்னிவள என்சாமி நாடு வாறார்
ஓட்டம் ஓட்டம் பெரும் நடையா
ஒரு விரைவாய் கொத்தர்கள் வருகிறாரே

and come," Vishnu said as he stood looking to the northeast. Three people held the branch of the pāccāṉ tree with their hands, water and milk were poured, and the pūjā performed. Then Vishnu lifted the nine grains, waved a flame in front of them, and tied them to the pāccāṉ tree branch.

Then the branch was planted in the ground and the Kavuṇṭar of the biggest house broke a coconut, put clarified butter on the fire, sprinkled water in circles, and thus performed a pūjā.

Vishnu: "Tāmarai! The ceremonial foundation is complete. Call the stone masons to break some stones and begin the house construction work. When you need me, think of me and I will come, " Vishnu said. He set off for the milk sea. The Aṉiyappūr Kavuṇṭars took leave and set off for their town.

Song:
So the age progressed,
It was said to be good
See how things were done with love
Day after day, time followed time
See what happened there, the good that happened

Tāmarai: "Oh watchman! Go to The Country of Prosperity and bring the thousand stone masons."

The watchman said, "Good" and set off for The Country of Prosperity.

Song:
Leaving The Country Where the Kāveri Flows, leaving
it
Approaching The Country of Prosperity, approaching it
In the unrelenting sun, in the sun
In the immense heat, the watchman is going

The watchman went to The Country of Prosperity and called the stone masons.

"Oh men. The boss from the biggest house in The Country Where The Kāveri Flows has told me to fetch you thousand stone masons immediately."

Stone M.: "Whatever it is, we are coming," they said as they picked up their tools and set off.

Song:
Oh Lord, leaving The Country of Prosperity
Oh Lord, they are approaching The Country Where
The Kāveri Flows
Running, running, with large steps
The stone masons are coming with great speed

கொத்தர்கள் பொன்னி வளநாடு வந்து குன்னுடையாக் கவுண்டரைப் பார்த்து நமஸ்காரம் செய்தார்கள்.

குன்னுடையா - "கொத்தர்களே! மங்களம் உண்டாகட்டும்! ஆயிரம் பேரும் வந்து விட்டீர்களா?"

கொத்தர்கள் - "சாமி! அப்படியே வந்திருக்கிறோம்."

குன்னுடையா - "சரி, நல்லது! நாம் அரண்மனை கட்டவேண்டும். மூன்று மாதத்துக்குள் கட்டி முடிக்கவேண்டும்."

கொத்தர்கள் - "சாமி, நல்லது!"

குன்னுடையா - "தாமரை! தட்டத்தில் ஒரு வள்ள முத்து அளந்து போட்டு வெற்றிலை பாக்கு வைத்துக்கொடு."

தாமரை - "நாதா! கொடுத்துவிட்டேன்."

குன்னுடையா - "சரி, கொத்தர்களே! சீக்கிரம் கல்லை உடைத்து வேலையை ஆரம்பம் செய்யுங்கள்."

ஆயிரம் கொத்தர்களும் சென்று கல்லை உடைக்க ஆரம்பித்தார்கள்.

(பாட்டு) அப்படியே நல்லதென்று இனி
நடக்குது பார் நல்பருவம்
ஆயிரம் கல் உடைத்து
அஸ்திவாரம் கட்டுறாரே
இந்தப் பிரகாரம் இனி
நடக்குது பார் நல்பருவம்
மாயன் பெருமாளும் இனி
மகமேறும்[1] கோபாலன்
அகலிகை சாபம் தீர்த்த அந்த
ஹரிராமர் வந்து நின்றார்

மாயவர் வந்து நின்று, ஆயிரம் கொத்தர்களும் ஆயிரம் கல் எடுத்து வைத்தால், மாயவர் ஒருவருக்கும் தெரியாமல் அந்தரத்தில் ஆயிரம் கல் எடுத்து வைத்தார். இப்படியே மூன்றுமாதம் ஆவதற்குள் அஷ்டகிரி, கெற்பகிரி, மகாமண்டபம், மணிமண்டபம், ரேணிப்பட்டகசாலை, ஏடுவாசிக்கும் எழுத்துவர்ணச் சாவடி, படிப்பு வாசிக்கும் பண்ணாங்குச் சாவடி, பகடை விளையாடும் பளிங்கு மண்டபம், பொன்னுருக்கி மாளிகை, கச்சு கட்டும் மாளிகை, திரவியம் போடும் கஜானா, வெந்நீர் மண்டபம், சமையல் அறை, ஆயுதசாலை இப்படி அலங்கார மண்டபங்களுடன் அரண்மனை கட்டி முடித்தார்கள். வேலை சரியாக முடிந்ததும் கொத்தர்கள் குன்னுடையாசாமியிடம் வந்து, "சாமி! நாங்கள் போய் வருகிறோம்" என்றார்கள்.

1. வேள்வியில் வருகின்ற

The stone masons arrived in The Country Where The Kāveri Flows and paid their respects to Kuṉṉuṭaiyā Kavuṇṭar

Kuṉṉuṭaiyā: "Oh stone masons! Blessings to you! Have all thousand of you come?"

Stone M.: "Lord. All thousand of us have come!"

Kuṉṉuṭaiyā: "O.K., good. We want to build a palace. It must be built and completed within three months."

Stone M.: "Fine. Good."

Kuṉṉuṭaiyā: "Tāmarai! Empty a vaḷḷam of pearls on a plate alongside betel leaf and areca nut and bring it here."

Tāmarai: "Husband. I have done it."

Kuṉṉuṭaiyā: "Oh stone masons. Break some stones quickly and begin the work."

The thousand men got together and began to break up stones.

Song:
It was said to be good
See how it was done with love
A thousand stones were broken and the foundation laid
At this sweet time
See the good age, the good things
Vishnu, Perumāl
Kopāla[1] who climbs trees
He who restored Akalikai
Harirāma came and stood

Vishnu came and stood. For every thousand stones that the stone masons laid, Vishnu, without being seen, also laid a thousand. In this way, within three months the palace audience hall, the hall of great pronouncements, the great open hall, the jeweled hall, the courtyard where the public assembles, the reading and writing room, the school room, the theatre hall, the gold store-room, the dressing room, the grain store-room, the bathing area, the kitchen and the armoury were completed. When these decorated halls (were finished) the palace was complete.

When the work was all finished the stone masons came to Kuṉṉuṭaiyā and said, "Fine. We will leave."

---

1 Kopāla is a name for Krishna, one of Vishnu's reincarnations. Krishna used to climb trees as a child. In Sanskrit his name is spelled Gopāla.

குன்னுடையா - "சரி, நல்லது! தாமரை! இன்னும் ஒரு வள்ள முத்து அளந்து கொத்தர்களுக்குக் கொடு."

கொத்தர்கள் முத்தை வாங்கிக்கொண்டு, "சாமி! நாங்கள் போய்வருகிறோம்" என்று விடைபெற்று, தங்க வளநாடு போய்ச் சேர்ந்தார்கள். கொத்தர்கள் சென்றபின், தாமரை "நாதா! இனி மாயவரை வரவழைத்து, வீடு புண்ணியார்ச்சனை[1] எப்போது செய்யலாமென்று கேட்கலாம்" என்றாள்.

குன்னுடையா - "பெண்ணே! அப்படியே, செய்."

தாமரை - "பரந்தாமா! பூபாலகா! நான் அரண்மனை கட்டி முடித்து விட்டேன். தாங்கள் உடனே வந்துசேர வேண்டும் காஞ்சி நாதர!" என்று மாயவரை வேண்டினாள்.

தாமரை அழைப்பதை மாயவர் பார்த்து உடனே கருட வாகனமேறிப் புறப்பட்டார்.

(பாட்டு) கருடன்மேல் சீனிவைத்து சீனிவைத்துப்
பூலோகம் வருகிறாரே மாயவரும்
பொன்னிவள் நாடுதேடி நாடுதேடி
வருகிறாரே பரந்தாமன்

பொன்னி வளநாடு வந்து குன்னுடையாசாமி அரண்மனைக்குச் சென்றார். மாயவருக்குக் கவுண்டரும் தாமரையும் நமஸ்காரம் செய்தார்கள்.

மாயவர் - "மங்களம் உண்டாகட்டும்! தாமரை, அரண்மனை வேலை சரியாக முடிந்ததா? என்னை எதற்கு வரவழைத்தாய்?"

தாமரை - "சுவாமி! அரண்மனை வேலை பாக்கியில்லாமல் சரியாக முடிந்துவிட்டது. புண்ணியார்ச்சனை எப்போது செய்யலாம் என்று கேட்கத்தான் அழைத்தேன். தாங்கள் நல்ல நாள் பார்த்துப் புண்ணியார்ச்சனை நடத்திக் கொடுக்க வேண்டும் சுவாமி!"

மாயவர் - "தாமரை! இந்த மாதம் பதினைந்தாம் தேதி நல்ல நாள். திங்கள்கிழமை சிவன் பிறந்தநாளில் காலை ஒன்பது நாழிகை சுமாருக்கு நல்ல நேரம் உள்ளது. அப்போது செய்துவிடலாம். சோழதேச அரசருக்கும் மற்றும் குடிபடைகளுக்கும் கிராமத்துக் கவுண்டர்களுக்கும் அறிக்கையிடுங்கள்."

தாமரை - "சுவாமி! நல்லது. தாங்கள் வந்து புண்ணியார்ச்சனையைச் சிறப்பாக நடத்திக் கொடுக்க வேண்டும்."

---

1. சுத்தி செய்யும் சடங்கு

Kuṉṉuṭaiyā: "O.K., Good! Tāmarai! Bring another vaḷḷam of pearls and give it to the stone masons."

Stone M.: The stone masons accepted the pearls and said, "Lord. We will leave," and paying their respects they returned to The Country of Prosperity.

Tāmarai: After the stone masons had left Tāmarai said, "Husband! We must invite Vishnu and ask him when to perform the inauguration pūjā for the house."

Kuṉṉuṭaiyā: "Oh wife. Do that."

Tāmarai: "Oh Parantāmā! Ruler of the earth! We have completed the building of the palace. You must come immediately, oh Lord of Kanjeepuram! In this way she called Vishnu to come.

As soon as Vishnu heard Tāmarai's call he mounted his Garuda vehicle and set off.

Song:

He saddled the Garuda Bird, saddled it
Vishnu is approaching the earth, he's approaching
Searching for The Country Where The Kāveri Flows,
searching (for it)
Parantāmā is coming

Vishnu reached The Country Where The Kāveri Flows and arrived at Kuṉṉuṭaiyā's palace. The Kavuṇṭar and Tāmarai paid their respects to Vishnu.

Vishnu: "Blessings to you! Tāmarai. Has the work on the palace been finished? What have you called me here for?"

Tāmarai: "Lord! The work on the palace is completely finished. I called you to ask when to perform the inauguration pūjā. You must select an auspicious day and perform the ceremony for us, Lord!"

Vishnu: "Tāmarai! The fifteenth of this month, a Monday, the day of Siva's birth, at about nine in the morning will be an auspicious time. We shall do it then. Invite the King of the Chola Country, the people and the Kavuṇṭars of the revenue area!"

Tāmarai: "Lord. Good! You must come and perform a correct inauguration ritual."

மாயவர் - "நல்லது தாமரை! வீடு புண்ணியார்ச்சனை அன்றுதான் உங்களுக்குப் பட்டம் வைத்து மகுடாபிஷேகம் செய்து விடலாமென்று நினைத்துள்ளேன்."

தாமரை - "சுவாமி! நல்லது."

மாயவர், "சரி, போய்வருகிறேன்" என்று புறப்பட்டுப் பால்கடல் சென்றார்.

(பாட்டு) இந்தப் பிரகாரம் இனி
நடக்குதுபார் அதிகாரம்
அப்படியே நல்லதென்று
அன்புடனே நடக்குதுபார்
நாளொருநாள் பொழுதொருநாள் இனி
நடக்குது பார் நல்பருவம்.

தாமரை - "அடே, கருப்புத் தலையாரி! இங்கு வா. சோழதேசம் சென்று அரசரிடம் பொன்னி வளநாட்டில் நாம் அரண்மனை கட்டிப் புண்ணியார்ச்சனை செய்வதாகவும் இந்த மாதம் பதினைந்தாம் நாள் திங்கள் கிழமை காலை ஒன்பது நாழிகைக்குள் தங்களை வந்து சேரும்படிச் சொன்னார்கள் என்று சொல்லிவிட்டு வா."

தலையாரி "நல்லது" என்று சோழதேசம் புறப்பட்டான்.

(பாட்டு) பொன்னி வள நாடுவிட்டு நாடு விட்டுச்
சோழதேசம் வருகுறானே தலையாரி
ஓட்டம் பெருநடையா பெருநடையா
ஒருவிரைவாய் வருகிறானே வருகிறானே
சோழதேசம் தேடியல்லோ தேடியல்லோ
வருகிறானே தலையாரி

தலையாரி சோழதேசம் வந்து அரசரைக் கண்டு அட்டம் பணிந்து ஆளடிமை செய்தான். பாதம் பணிந்து பணிவிடைகள் செய்தான்.

அரசர் - "தலையாரி! மங்களம் உண்டாகட்டும். என்ன விஷயமாய் வந்தாய்?"

தலையாரி - "அரசே! பொன்னி வளநாட்டில் குன்னுடையாக் கவுண்டர் புது அரண்மனை கட்டியிருக்கிறார். இந்த மாதம் பதினைந்தாம் தேதி திங்கள்கிழமை காலை ஒன்பது நாழிகைக்குள் புண்ணியார்ச்சனை செய்கிறார்கள். தங்களையும் குடி படை களையும் வந்து சேரும்படிச் சொல்லிவரச் சொன்னார்கள்."

அரசர் - "சரி, நல்லது தலையாரி! ஆயிரம் கிராமத்துக்கும் அழைப்பு விட்டிருக்கிறதா?"

Vishnu: "Good, Tāmarai! I had thought that on the day of the inauguration ritual for the house we might give you a title and hold a great celebration ritual."

Tāmarai: "Lord. Good."

Vishnu said, "O.K. I will go and return," and he set off for the milk sea.

Song: At this time, at this time of sweet events
It was said to be good, look how things were done
with love
Day after day, time followed time
Look at what happened, the good things that occurred

Tāmarai: "Oh, black watchman! come here! Go to the Choḷa Country and tell the King you have been told to tell him to come to the palace of The Country Where The Kāveri Flows for the inauguration ritual. He is to come before nine in the morning on Monday, the fifteenth of this month."

the watchman said, "Good," and set off for the Chola Country.

Song: Leaving The Country Where The Kāveri Flows,
leaving it
The watchman is approaching the Chola Country
Running with big steps, with big steps
He is coming, is coming with great speed
Searching for the Chola Country, searching
Our watchman is approaching

The chief watchman arrived in the Chola Country and seeing the King, he paid obeisance at his feet and offered his services.

King: "Watchman! Blessings to you. For what reason have you come?"

Watchman: "Oh King! Kuṉṉuṭaiyā Kavuṇṭar of The Country Where The Kāveri Flows has been building a new palace. He will perform the inauguration ritual before nine o'clock in the morning on Monday, the fifteenth of this month. He told me to invite you and the people to come.

King: "O.K. Good, Watchman! Have invitations been sent to the thousand revenue areas?"

தலையாரி - "சாமி! கிராமத்துக் கவுண்டர்களுக்கும் அழைப்பு விட்டிருக்கிறது."

அரசர் - "சரி, நல்லது!"

அரசர் மூவரும் கலந்து யோசித்துக் குன்னுடையாக் கவுண்டனுக்கு அரண்மனை புண்ணியார்ச்சனை அன்றே மகுடாபிஷேகம் செய்து பட்டம் கொடுத்து விடலாமென்று முடிவு செய்து, "அடே, தலையாரி! இப்படியே தங்க வளநாடு சென்று பங்காளிக் கவுண்டர்கள் ஆயிரம் பேர்களையும் பதினைந்தாம் நாள் திங்கள்கிழமை காலை பொன்னி வளநாடு வந்து சேரும்படி நான் சொன்னதாகச் சொல்லிவிட்டு, அப்படியே அணியப்பூர் சென்று பிராம்மணர்களையும் வரச் சொல்லிவிட்டுப் போ!"என்றார்.

தலையாரி, "சாமி, நல்லது!" என்று புறப்பட்டான்.

(பாட்டு) சோழதேசம் விட்டல்லோ விட்டல்லவோ
தங்கவள நாடுவாறான் நாடு வாறான்
ஓட்டம் பெரும் நடையா பெருநடையா
ஒருவிரைவாய் வருகிறானே தலையாரி

தலையாரி தங்க வளநாடு வந்து கவுண்டர்களைப் பார்த்து, "பதினைந்தாம் நாள் காலை அரசர் உங்களைப் பொன்னி வளநாடு வந்து சேரச் சொன்னார்" என்று சொல்லிவிட்டு, அணியப்பூர் சென்று பெரியவீட்டுக் கவுண்டரைப் பார்த்துச் சொல்லிவிட்டு, பிராம்மணருக்கும் மேளவாத்தியத்திற்கும் சொல்லி விட்டு, தலையாரி பொன்னி வளநாடு வந்து சேர்ந்தான். குன்னுடையாக் கவுண்டரைப் பார்த்து, "சாமி! எல்லோருக்கும் சொல்லிவந்து விட்டேன்" என்றான்.

குன்னுடையா - "சரி, நல்லது!"

(பாட்டு) இந்தப் பிரகாரம் இனி
நடக்குது பார் அதிகாரம்
அப்படியே நல்லதென்று
இனி அன்புடனே நடக்குது பார்

பதினைந்தாம் தேதி, திங்கள்கிழமை சிவன் பிறந்தநாள், வெள்ளி உதிக்குமுன் வெண்கோழி கூவுமுன் சந்திரன் தேவி சூரியன் கிளம்புமுன்னே, குன்னுடையா சாமி செல்லாத்தாக் கோவிலுக்குச் சென்று அருபூஜை, குருபூஜை, ஐம்பத்தி எட்டு லிங்கபூஜையும் சரியாக முடித்து அரண்மனை வந்து சேர்ந்தார். சிறிது நேரத்தில் அணியப்பூர் கவுண்டர்களும் பிராம்மணர்களும் வந்தார்கள். மற்றும் சோழதேச அரசர்களும் குடிபடைகளும் வந்து சேர்ந்தார்கள். எல்லோரும் வந்து அரண்மனையில் இருக்கும்போது சிறிது நேரத்தில் மாயவர் வந்து சேர்ந்தார். அரசரும் மற்றும் குடிபடைகளும் மாயவரை நமஸ்காரம் செய்தார்கள்.

Watchman: "Lord. The Kavuṇṭars of the revenue areas are invited."

King: "O.K. Good," said the three kings together and they decided to give Kuṉṉuṭaiyā Kavuṇṭar a title at the great celebration ceremony. "Oh Watchman! On your way back go to The Country of Prosperity and tell the thousand clansmen that I said for them to come to The Country Where The Kāveri Flows on the morning of Monday, the fifteenth. From there go to Aṇiyappūr and tell all the Brahmans to come."

Watchman: "Lord, good!", he said and set off.

Song: Leaving the Chola Country, leaving it
Approaching The Country of Prosperity, approaching
that country
Running, with big steps, with big steps
The watchman is coming with great speed

The watchman arrived in The Country of Prosperity and seeing the Kavuṇṭars told them, "the King has said for you to go to The Country Where The Kāveri Flows on the morning of the fifteenth." Having said this he went to Aṇiyappūr, told the Kavuṇṭar of the biggest house, told the Brahmans, told the Meḷa Drummers[1] and then he returned to The Country Where The Kāveri Flows. He saw Kuṉṉuṭaiyā Kavuṇṭar and said, "Lord! I have told everyone and returned."

Kuṉṉuṭaiyā: "O.K. Good!"

Song: This sweet time
See the monarch rule thus
It was said to be good
See how it was done with love

On Monday, the fifteenth, the day Siva was born, before it got light, before the cocks crowed, before the Sun rose and outshone the Moon, Kuṉṉuṭaiyā finished the God's pūjā, the pūjā for the family deity and the fifty-eight lingam pūjā at Cellāttā's temple and returned to the palace. After a short time the Kavuṇṭars and the Brahmans of Aṇiyappūr arrived. Next the King of the Chola Country and the people arrived. After they had all come and entered the palace Vishnu arrived. The King and the people paid their respects to Vishnu.

---

1 A special festival drum played by a touchable caste group, often Mutaliyars.

மாயவர் - "எல்லோருக்கும் மங்களம் உண்டாகட்டும்! தாமரை! பிராம்மணர்களிடம் புண்ணியார்ச்சனைக்குத் தேவையான சாமான்களைக் கொடுத்துப் புண்ணியார்ச்சனை ஆரம்பம் செய்யச் சொல்."

தாமரை - "சுவாமி, நல்லது."

பிராம்மணர்கள் தேவையான சாமான்களை வாங்கி வீட்டுக்கு மாவிலைத் தோரணம் கட்டிப் புண்ணியார்ச்சனையை எல்லோர் முன்னிலையிலும் விழாவைச் சிறப்பாக நடத்தினார்கள். பின் அரசர் மாயவரைப் பார்த்து, "சுவாமி! இதே நாளில் குன்னுடையாக் கவுண்டனுக்கு மகுடாபிஷேகம் செய்து பட்டம் வைத்து விடலாம்" என்றார்.

மாயவர் - "அரசர்களே! நல்லது, அப்படியே செய்துவிடலாம்."

பிறகு கனகசபையில் எல்லோரையும் உட்காரவைத்து, குன்னுடையாக் கவுண்டரையும் தாமரை கவுண்டச்சியையும் ஆசனம் போட்டு அமரச் செய்து, அவர்கள் முன் தங்கப் பீடம் அமைத்து அதன்மேல் தங்கக் கிரீடம் வைத்து, இருவருக்கும் தங்க மிஞ்சி[1] போட்டுப் பதினெட்டு வாத்தியங்கள் முழங்க பதினெட்டு அபிஷேகம் செய்து, கங்கை தீர்த்தம் விட்டுப் பூஜை முடித்தார்கள். அதன்பின் மாயவர் அரசர்களை நோக்கி, அரசர்களே! குன்னுடையாக் கவுண்டருக்குப் பதினெட்டு விருதுகளையும் சூட்டுங்கள்" என்றார்.

அரசர்கள், "சுவாமி! நல்லது என்று பொன் ஊஞ்சல், தங்கத்தினால் பூந்தேர், அம்பு, பரிவட்டம்[2] ஆகிய விருதுகளைக் கொடுத்தார்கள். பின் குன்னுடையாக் கவுண்டனும் தாமரைக் கவுண்டச்சியும் எழுந்து எல்லோரையும் வணங்கினார்கள்.

மாயவர் - "அப்பா குன்னுடையாக் கவுண்டா!
வாழ்வாய் வளர்ந்திருப்பாய்!
மண்டபத்தில் பெற்றிருப்பாய்!
இன்னும் பதம் பெறுவாய், ஈசுவரனைப் போலிருப்பாய்!
பின்னைப் பதம் பெறுவாய், பெருமாளைப் போலிருப்பாய்!"

என்று மனதார வாழ்த்தினார். கிராமத்துக் கவுண்டர்களும் குன்னுடையாக் கவுண்டரைக் காணிக்கை வைத்துக் காண்பார் சில கோடி, மாணிக்கம் வைத்து வருந்துவார் சில கோடி. எல்லாம் முடிந்த பிறகு எல்லோருக்கும் விருந்துபசாரம் நடந்தது, தாம்பூலம் வழங்கினார்கள்.

இப்படி இருக்கும்போது தங்க வளநாட்டுப் பங்காளிக் கவுண்டர்கள் வந்து பிள்ளையார் கோவிலில் இருப்பதாகச் செய்தி வந்தது.

---

1. இரு கால்களிலும் இரண்டாவது விரலில் அணியப்படும் அணிகலன் 2. பட்டத்து நிலை அங்கி

Vishnu: "Blessings to all of you! Tāmarai. Give the necessary things to the Brahmans for the inauguration ritual and tell them to begin the ceremony."

Tāmarai: "Lord. Good."

The Brahmans took the necessary things, tied a festoon of mango leaves on the house and performed a correct festival inauguration ceremony in front of the building. Afterwards the King addressed Vishnu, saying, "Lord. On this day of Kuṉṉuṭaiyā's great celebration we are going to give him a title."

Vishnu: "Oh Kings! Good. We will do that," he said and seated all the members of the God's counsel. He settled Kuṉṉuṭaiyā Kavuṇṭar and Tāmarai Kavuṇṭicci on a throne, and created golden rings on their feet,[1] the eighteen instruments were played, the eighteen offerings (to God) were made, Ganges water was sprinkled and the pūjā was completed. Then Vishnu looked at the Kings and said, "Oh Kings! Adorn Kuṉṉuṭaiyā Kavuṇṭar with the eighteen marks of honor."

Kings: "Lord, good," they said and presented a golden swing, a golden flower chariot, an arrow, and a turban. Then Kuṉṉuṭaiyā Kavuṇṭar and Tāmarai Kavuṇṭicci got up and paid respects to everyone.

Vishnu: "Man! Kuṉṉuṭaiyā Kavuṇṭar!
You shall flourish!
You shall prosper while you rule in your great hall!
When you die you will go to a fine place (Kailāsa)[2]
You shall live like Siva himself
Later you will live in Vaikunta,[3] like Vishnu."

With these words he blessed the couple wholeheartedly. The Kavuṇṭar of the revenue areas presented several crores of gifts and several crores of jewels.

After this was finished everyone was feasted and given betel leaf and areca nut to chew.

At this time the Kavuṇṭars from The Country of Prosperity arrived and gathered at the Pilliar temple.

---

[1] A special ring for the second toe of the right foot. [2] Siva's heaven. [3] Vishnu's heaven.

அரசர் - "அடேட, சேவகா! தங்க வளநாட்டுக் கவுண்டர்கள் பிள்ளையார் கோவிலில் இருக்கிறார்களாம், போய்க் கூட்டி வாருங்கள்."

சேவகன் - "சாமி, நல்லது!" என்று பிள்ளையார் கோவிலுக்குச் சென்று தகவல் கொடுத்தவுடன் ஆயிரம் கவுண்டர்களும் வந்து அரசரைக் கண்டு நமஸ்காரம் செய்தார்கள்.

அரசர் - "அப்பா, கவுண்டர்களே! குன்னுடையாக் கவுண்டனுக்குச் சேரவேண்டிய பூமிகளையும் நாட்டையும் இன்றுடன் அவருக்கு விட்டுவிடுங்கள்."

பங்காளிகள், "அரசே! நல்லது. நாங்கள் போய் வருகிறோம்" என்று புறப்பட்டுச் சென்றார்கள்.

மாயவரும் எல்லோரிடமும் விடைபெற்றுப் பால்கடல் சென்றார். எல்லோரும் சென்றபின் அரசர் குன்னுடையாக் கவுண்டனைப் பார்த்து, "உனக்குப் பேழை மூடிப்பட்டம்,[1] பெரிய பட்டம் வைத்திருக்கிறேன். ஆயிரம் கிராமத்திற்கும் ஐம்பத்திஆறு தேசத்திற்கும் கெட்ட குடும்பம், அழிந்த குடும்பம், தண்ணீர் தெளிக்கப்படும் மாதாவாக உன்னை வைத்திருக்கிறேன். மனு நூல் பிரகாரம் தவறாமல் செங்கோல் நடத்திவர வேண்டும். ஒருவரை அடிக்காமல் ஒருவருக்கு அநியாயம் செய்யாமல் குடிபடைகளை அன்புடன் நடத்தி ஆட்சி செய்துவர வேண்டும்" என்று சொல்லிவிட்டு அரசர்கள் எழுந்து "நாங்களும் போய் வருகிறோம்" என்று விடைபெற்றுச் சோழதேசம் சென்றார்கள். கிராமத்துக் கவுண்டர்களும் விடைபெற்று அவர்கள் ஊருக்குச் சென்றார்கள்.

(பாட்டு) செங்கோலு அதிகாரம் இனி அதிகாரம்
செலுத்திப் பட்டம் ராஜன்
ஆளுகிறார் அங்கு ஆளுகிறார்
தங்கவிரல் அதிகாரம் இனி அதிகாரம்
தனிச்சுப் பட்டம் நாட்டிலே
ஆளுகிறார் இனி ஆளுகிறார்
காலம் நல்லோ என்னம்மா
பனிபெயும் அங்குப் பனிபெயும்
கடுகுசம்பா நாட்டிலே
நெல் விளையும் அங்கு நெல் விளையும்
மூடு நல்லோ பொன்னய்யா
பனிபெயும் அங்குப் பனிபெயும்
மிளகு சம்பா நாட்டிலே
நெல் விளையும் அங்கு நெல் விளையும்

1. வாள், பட்டாடை போன்ற புனிதப் பொருட்கள் அடங்கிய மூங்கில் அல்லது பனைநாரால் ஆன பெட்டியைப் பாரம்பரியமாகக் குழுத்தலைவனுக்குக் கொடுத்தல்

King: "Oh servant. It seems that the Kavuṇṭars of The Country of Prosperity are at the Pilliar temple. Go and bring them here."

Servant: "Lord. Good," he said and went to the Pilliar temple and delivered the invitation.

The thousand Kavuṇṭars came and seeing the King, paid him their respects.

King: "Men, oh Kavuṇṭars. The country and land that must be given to Kuṉṉuṭaiyā, give it to him today."

Clansmen: "Oh King, good, we will go and return," they said and set off.

Vishnu took leave of everyone and returned to the milk sea. After everyone had left the King turned to Kuṉṉṉṭaiyā Kavuṇṭar and said:

King: "I am going to give you the topmost position. I am going to place you in a position where you are going to be a mother who sprinkles (holy)[1] water on all the destroyed and disrupted families, and on the fifty-six divisions and the thousand revenue units. You must rule according to Manu's book[2] following every law (therein), with justice. You must not beat nor do injustice to anyone. You should treat your people with kindness and rule the country well."

Having said this the King got up, took leave, said "goodbye" and returned to the Chola Country. All the Kavuṇṭars of the revenue areas also took leave and returned to their towns.

Song:
It was a time of justice, a sweet time.
The just King
Rules, rules there
The one who has a signet ring on his finger
Is ruling the country lone
He is ruling now
At proper times, there, my Lord
It will rain there, it will rain
In that country, there is kaṭuku samba paddy
It flourishes, it flourishes there
There is enough rain (for King) Poṉṉayyā, it rains there
In that country miḷaku samba paddy
It flourishes, it flourishes there

---

[1] E.g., Life--giving water. [2] Like King Manu, a famous South Indian King who wrote a book about how to rule justly and who himself ordered his own son killed because he had accidentally killed a calf while driving a chariot. Lord Siva later rescued both the son and the calf.

கட்டுக்களங்காணும் கரு துளிர்க்க நெல் காணும். குன்னுடையா ராஜர் செல்லாத்தாளுக்கு மூன்று கால பூஜையும் சரியாக நடத்திவந்தார். குன்னுடையா ராஜருக்குப் பட்டம் வைத்துச் சிலநாள் கழிந்தபிறகு ஒருநாள் தாமரை, "நாதா! நாம் என்ன பாபம் செய்தோம். நம்மளுக்கு ஏன் குழந்தையில்லை? நம் வீடு இன்று கட்டியதுபோல் குழந்தை இல்லாமல் களையிழந்து கிடக்கிறதே சாமி!

(பாட்டு) கன்னி நல்லோ என்னம்மா அழுகுறாளே
இனி அழுகுறாளே
இனிக் காந்தேறி என்னம்மா
வாடுறாளே இனி வாடுறாளே
நான் மைந்தனில்லா ராஜாவே
பாவியின்னு அங்குப் பாவியின்னு
வையகமும் நாட்டிலே
பேரானேன் அங்குப் பேரானேன்
குழந்தையில்லா ராஜாவே
பாவியின்னு இனிப் பாவியின்னு
கொள்ளிடமும் நாட்டிலே
பேரானேன் அங்குப் பேரானேன்

நாதா! பல்லு படைத்த ஜனம் பாதிஜனம் பேசுதுங்கோ. சீமை படைத்த ஜனம் சில ஜனம் பேசுதுங்கோ. ஊருபடைத்த ஜனம் உற்ற ஜனம் பேசுதுங்கோ." கன்னி அழுகிறாள் காந்தேறிச் சோருகிறாள்.

குன்னுடையா - "வாண்டாம்மா தாமரை! வார்த்தை சொல்ல கேளும்மா. அன்று எழுதும் கர்த்தன் அழித்து எழுதப் போவதில்லை. ஈசன் எழுத்திலே இனி எள்ளளவும் தப்பாது. கரியைத் துடைக்கலாம்; காவேரியை நீந்தலாம்; விதியைத் துடைக்க பிரும்மனால் ஆகாதம்மா."

தாமரை - "நாதா! நாம் யாருக்கு அநியாயம் செய்தோம்? யாருக்குத் துரோகம் செய்தோம்? என்ன பாவம் செய்தோம்? கடவுள் நம்மளுக்கு ஏன் குழந்தை இல்லாமல் செய்துவிட்டார்?"

குன்னுடையா - "அழவேண்டாம், பெண்ணே! நாம் என்ன செய்வது? கடவுள் நம்மளுக்கு அப்படிச் செய்துவிட்டார்."

There was abundant ripening paddy, so much that the surplus sprouted on the threshing floor. Kuṉṉuṭaiyā performed a pūjā for Cellāttā three times a day. Some days had passed since King Kuṉṉuṭaiyā had come to the throne. One day Tāmarai said:

Tāmarai: "Husband! what sin have we committed?

Why are there no children? Our house looks like it was built today without any children (to mess it up). (It is) without beauty, my Lord!"

Song:
The maiden is crying, my Lord
Now she is crying
Now she is hot with indignation,
Is pining, is pining now
Oh King, I have no son
In that world, in that country
I was called sinner, a sinner there
Oh King, since I don't have a child
In The Country Where The Koḷḷiṭam River[1] Flows
I was called a sinner, a sinner there
Husband, of those with teeth, half are gossiping
about it
Of those in the kingdom, some are speaking about it
Of those who exist, the truthful ones are speaking
about it
The chaste woman is crying. She is hot with
indignation, she is wilting

Kuṉṉuṭaiyā: "This is not wanted, lady, Tāmarai! Listen, lady, to my words. What God has written then cannot be erased. What Siva has written no one can escape today. One can scrub off black soot, one can cross the Kāveri River, but what Brahma has written cannot be changed."

Tāmarai: "Husband! Who have I been injust to? Who have I made to suffer? What sin have I committed? Why has God left me without a child?"

Kuṉṉuṭaiyā: "Don't cry, oh woman! What can we do? God has chosen this for us."

---

1 A tributary of the Kāveri river.

(பாட்டு) தங்கம்போல் தாமரை கண்ணீரைத்
தரணியிலே தரணியில் வடித்தழுதாள்
முத்துப்போல் பத்தினி கண்ணீரை
முகத்தோடு தாமரை வடித்தழுதாள்
பவளம்போல் பத்தினி கண்ணீரைப்
பக்கமெல்லாம் பூமியிலே வடித்தழுதாள்
இனி வடித்தழுதாள்

கன்னி அழுகிறாள். காந்தேறிச் சோருகிறாள். மங்கை அழுகிறாள். மலர்க் கிளியா வாடுறாள்.

தாமரை -

(பாட்டு) சாணிநல்லோ என்சாமி புளுபுளுத்தாச்
சமுத்திரமே என் சாமி
மீன் புளுக்கும் அங்கு மீன் புளுக்கும்
எந்தன் கும்பிநல்லோ என் சாமி
புளு புளுத்தா அங்குப் புளு புளுத்தாக்
கொள்ளிடமும் ராஜாவே
மீன் புளுக்கும் அங்கு மீன் புளுக்கும்
நான் உளுத்த மரமானேன்,[1] உள்ளூரும் செக்கானேன்
பழுத்த மரமானேன் பாழூரும் செக்கானேன்
நான் பெண்ணா நல்லோ சாமி
பிறக்கயிலே அங்குப் பிறக்கையிலே
நான் மண்ணாகப் பூமியிலே
பிறக்கலையே சாமி பிறக்கலையே
மண்ணாக நாதா பிறந்துமங்கே
நான் செடியாகப் பூமியிலே முளைக்கலையே

குன்னுடையா - "வாண்டாம்மா, தாமரை! வார்த்தை சொல்லக் கேளும்மா. எழுதாக் குறைக்கு அழுதாக் குறையுமா? அருங்கிளியே விளர்மாது பெண்ணே! நம்மளுக்கு நாற்பத்தைந்து வருஷமாக குழந்தையில்லையே. பங்காளி வீட்டில் ஒரு குழந்தை எடுத்துவந்து வளர்க்கலாம் அழாதே."

தாமரை - "நாதா! என்ன பேச்சு பேசுகிறீர்கள்?"

1.புழுவால் அரிக்கப்பட்டுக் கெட்ட மரம்

Song: The gold-like chaste Tāmarai
Was spilling her tears on the earth
The pearl-like tears of the chaste lady
Were spilling on her cheeks
The coral-like chaste lady
Was spilling her tears all over the earth
She was crying
The chaste woman cries, She is hot with indignation, she is wilting
The good woman cries, the flower parrot is pining

Tāmarai's Song: If worms grow in cow dung, my Lord
The whole sea, my Lord, will be
Full of fish attacked by worms, by worms there
If there are worms in my stomach, my Lord
If there are worms there
The Koḷḷiṭam river, my Lord
Will be full of fish attacked by worms, by worms there

I have become rotten wood, like a rotten oil press,
I have become a fallen tree, I have become a rotten oil press

I was born as a woman, oh Lord
I was born, there
Why was I not born as sand?
Why was I not born (as sand) on this earth, my Lord?
Why was I not born as sand
Why did I not grow as a plant on this earth?

Kunnuṭaiyā: "This is not wanted, lady, Tāmarai! Listen, lady, to my words. Can fate that has been written be changed by crying?

Oh rare parrot, oh fair lady!

Oh woman! We have had no child for forty-five years. We shall take a child from a clansman's house and raise it. Don't cry!"

Tāmarai: "Husband. What have you said?"

(பாட்டு) பத்துப் பிள்ளை என்சாமி இருந்தாலும்
பங்காளிப்பிள்ளை ஆகாதுங்கோ
ராஜா ஆகாதுங்கோ
எட்டுப் பிள்ளை இருந்தாலும்
இனத்தாளிப் பிள்ளை ஆகாதுங்கோ
நாதா ஆகாதுங்கோ
மச்சன் பிள்ளை கொள்ளிவைத்தால்
நாதா கொள்ளிவைத்தால்
எந்தன் மயிரு கருகாது
ராஜா கருகாது
கொழுந்தன்[1] பிள்ளை கொள்ளிவைத்தால்
ராஜாவே கொள்ளிவைத்தால்
எந்தன் கொண்டைநல்லோ
கொண்டை கருகாதுங்கோ
நாதா! பத்துபிள்ளை இருந்தாலும்
ராஜா பங்காளிப்பிள்ளை ஆகாதுங்கோ.

கன்னி அழுகிறாள், காந்தேறிச் சோருகிறாள்.

குன்னுடையா - "வாண்டாம்மா, தாமரை! வார்த்தை சொல்கிறேன் கேளம்மா. பெண்ணே! நாம் இருக்கும்வரை நன்றாக வாழ்ந்து மீதித் திரவியம் இருந்தால் பங்காளிப் பிள்ளைகள் சாப்பிடட்டும்."

தாமரை - "நாதா! என் வயிற்றில் நெருப்பை மூட்டுகிறீரே! நம்மளுக்குக் குழந்தை இல்லாவிட்டாலும் கிராமத்துக் குடிபடைகளுக்குத் தான் நம் சொத்துக்கள் சேரவேண்டும். நாதா! பங்காளிகள் நாம் பிழைத்துக் கொள்வோம் என்று கெட்டபுத்தியுடன் வறுத்த சோளத்தைக் கொடுத்தார்கள். அதை மறந்து சொத்து நமக்குப் பின் அவர்களுக்குச் சேரட்டும் என்கிறீரே! உங்களுக்கு ரோஷமில்லையா!" என்று கன்னி அழுகிறாள், காந்தேறிச் சோருகிறாள்.

"நாதா! நம்மளுக்குக் குழந்தை இல்லாவிட்டாலும் போகிறது. நம்மிடம் அண்டிப்பிழைக்கும் எந்தப் பிராணிகளுக்கும் குழந்தை இல்லையே சாமி! இது என்ன காரணம்?"

1. கணவனுடைய இளைய சகோதரன்

Tāmarai's Song:

Even if there were ten children
The child of a clansman will not do
Husband, that will not do
Even if there were eight children
An adopted child will not do
Husband, that will not do
If we take a child of my brother's-in-law[1]
Husband, if we take such a one
This hair will not burn
Husband, it will not burn
If we take the child of my husband's brother[2]
Husband, if we take such a one
This hair bun
This hair bun will not burn[3]

Tāmarai: "Husband. Even if there were ten children, oh King, a child of a clansman will not do. The chaste woman is crying, She is hot with indignation, she is wilting."

Kuṉṉuṭaiyā: "This is not wanted, Tāmarai! Listen to what I will say. Oh woman, while we are here we shall live well. If there is anything left over let the clansmen have it."

Tāmarai: "Husband! You are igniting a fire in my stomach. If we have no children then our property should go to the local residents of the revenue villages, oh husband! You speak of using our excess maize to support the clansmen, forgetting how they gave us toasted maize seeds, you say let the wealth go to them after our death. Don't you have any pride? The chaste woman is crying, she is hot with indignation. Oh husband. Let us be childless. But people who are dependent on us for their living are also childless. What is the reason for this?"

---

1 Note that she uses her maiden term of address, maccāṉ; she does not use the term her husband would, e.g., paṅkāḷi, meaning brother or clansman. 2 Same as above, but the term used is koḷuntaṉ. This use of cross terms, by a wife,for her husband's "brothers" is one of many indicators that Kavuṇṭar women are not fully integrated, by marriage, into their husband's clan, and that she does not "become one" in a social sense, with him. 3 This apparently refers to the idea that her hair will not burn properly if an adopted son is the one to light her funeral pyre when she dies.

தாமரை -

(பாட்டு) காடுசுத்தி மேய்ந்துவரும்
காரிமாடு[1] ராஜாவே தான்வரடு
வேலிசுத்தி மேய்ந்துவரும்
அங்கு மேய்ந்துவரும்
வெள்ளாடு தான் வரடு
முகட்டிலே வாழுமந்த அங்கு வாழுமந்தோ
மூஞ்சு எலி ராஜாவே தான் வரடு
விட்டஞ்சட்டம் ஓடிவரும்
அங்கு ஓடிவரும்
சட்டைப் பூனை ராஜாவே தான் வரடு
சிறுகிணற்றில் உள்வாழும் அங்கு உள்வாழும்
சிட்டுக்குருவி ராஜாவே தான் வரடு
வாசலிலே வாழுமந்த அங்கு வாழுமந்தோ
மூளி நாய் ராஜாவே தான் வரடு

நாதா! அதுக்கும் குறை செய்தேன் அத்தனைக்கும் தீமை செய்தேன்.

மங்கை அழுகிறாள், மலர்க்கிளியா வாடுறாள். "நாதா! சேவகனை அனுப்பித் தங்க வளநாட்டில் இரண்டு மாட்டுக்கன்று வாங்கி வந்து வளர்த்துப் பார்க்கலாம்" என்று சேவகனைக் கூப்பிட்டு நூறு ரூபாய் கொடுத்துத் தங்கவள நாடுசென்று இரண்டு கன்றுகள் ஒன்று காளை, ஒன்று கிடாரி இரண்டும் வாங்கிவரச் சொன்னாள்.

சேவகன், "சாமி, நல்லது" என்று புறப்பட்டான்

(பாட்டு) அப்படியே என் சாமி நல்லதென்று
அன்புடனே என் சாமி வருகிறானே
வண்டோட்டம்[2] என் சாமி வெகுவிரைவாய்
வாறானே என் சாமி சேவகனும்

சேவகன் தங்க வளநாடு வந்து கொத்தர் தெருவுக்குச் சென்று கொத்தர்களைக் கூப்பிட்டு, "அப்பா, கொத்தர்களே! பொன்னி வளநாட்டு பெரியவீட்டு ஆத்தா மாட்டுக் கன்று இரண்டு வேண்டுமென்று பணம் நூறு ரூபாய் கொடுத்துவிட்டார்கள். அதை உன்னிடம் கொடுக்கிறேன். நீ போய்க் காது சிறியது கண் பெரியதாக, வால் சிறியதாக நல்லஜாதி மயிலைக் கன்று காளை ஒன்று, கிடாரி ஒன்று இரண்டும் நல்ல அழகான கன்றுகளாகச் சீக்கிரம் வாங்கி வாருங்கள்" என்றான்.

---

1. கருமை நிற மாடு 2. மிக விரைவாக

Tāmarai's Song:

The cow that grazes in the forest
Is barren, my husband
The goat that grazes around the fence
The one that grazes there
is barren,
The mouse that lives in the hole, the one that lives there
Is barren, my husband
The cat that jumps all over,
The one that jumps all over there
Is barren, my husband
The little sparrow
Living inside the little well, living inside
Is barren, oh husband
The earless dog
That lives at our gates, living there
Is barren, oh husband.

Tāmarai: "Husband. I was destructive there, how many sins I committed. A good woman is crying. A flower parrot is pining, husband. Send a servant to The Country of Prosperity to buy two calves. We will raise them and see (what happens)," she said. She called a servant, gave him a hundred rupees, and ordered, "Go and buy two calves, one male and one female, and bring them here!"

Servant: "Lord, good!" he said and set off.

Song:

It was good, my Lord, said to be good
He is coming with love, (Crossing) the forest
He is coming with great speed
The servant, my Lord, is coming

The servant arrived in The Country of Prosperity and went to the stone mason's street and called them "Oh men, stone masons! The lady of the great house of The Country Where The Kāveri Flows has given a hundred rupees and asked to buy two calves. I will give this to you. You go and find two small-eared, big eyed, small-tailed calves. Find one male and one female possessing a good ancestry, good, beautiful calves, and bring them here quickly."

கொத்தர், "சரி, நல்லது" என்று சிறிது நேரத்தில் இரண்டு மயிலைக்கன்று வாங்கி வந்தார்கள். சேவகர் கன்றுகளைப் பிடித்துக்கொண்டு கொத்தர்களிடம் விடைபெற்றுப் புறப்பட்டுப் பொன்னி வளநாடு வந்து இரண்டு கன்றுகளையும் அரண்மனைமுன் கட்டிவிட்டு, உள்ளே சென்று தாமரையைக் கண்டு நமஸ்காரம் செய்து, "சாமி! கன்றுகளை வாங்கிவந்து விட்டோம். முன்வாசலில் கட்டியிருக்கிறோம்" என்றார். தாமரை கன்றுகளைப் போய்ப் பார்த்துச் சந்தோஷப்பட்டு, "அப்பா சேவகரே! நல்ல கன்றுகளாகவே வாங்கிவந்து விட்டீர்கள். சரி இதைக் கொண்டுபோய் வண்டுராங்குளத்தில் மாடுமேய்க்கும் மச்சக்கோர் சின்னான் இருப்பான். அவனிடம் கொண்டுபோய் விட்டுவாருங்கள்" என்றாள்.

சேவகர், "சாமி! நல்லது" என்று கன்றுகளைப் பிடித்துக்கொண்டு போய் விட்டுவந்தார்கள்.

(பாட்டு) இந்தப் பிரகாரம் நாட்டிலே
நடக்குது அதிகாரம்
அப்படியே நல்லதென்று
அன்புடனே நடக்குது பார்

கன்றுகள் வாங்கிவிட்டு ஒரு வருஷம் சரியாக முடிந்தது. இரண்டு கன்றுகளும் பெரிய மாடுகளாகிக் கொழுகொழுவென்று நின்றன. ஆனால் காளையும் கிடாரியும் சேருவதில்லை, கன்றும் போடுவதில்லை.

தாமரை - "நாதா! நான்தான் வரடியென்றால் நான் வாங்கி வளர்த்த கன்றுகளும் வரடி ஆகிவிட்டன.

(பாட்டு) பிச்சைக்கு வந்தவரை நாதா
பின்னே வர ஒருநாளும் சொன்னதில்லை
அன்னத்துக்கு ராஜாவே வந்தவரை
அடுத்துவர ஒருநாளும் சொன்னதில்லை

நாதா! நான் அதுக்கும் குறைகள் செய்தேன். அத்தனைக்கும் தீமை செய்தேன். இன்னும் ஒரு யோஜனை எனக்குத் தோன்றுகிறது. இரண்டு நீலாக்[1] குதிரைக் குட்டிகள் வாங்கி வந்து விடலாம். அதாவது குட்டிபோடுமா பார்க்கலாம்."

குன்னுடையா - "நல்லது, பெண்ணே! உன் இஷ்டம்போல் செய்."

தாமரை - "அடே, பாரிவில்லை சேவகா! இங்கு வா! பணம் இரு நூறு ரூபாய் தருகிறேன். சோழதேசம் சென்று அரசரிடம் இரண்டு நீலாக் குதிரைக் குட்டி வாங்கி வாருங்கள்."

---

1. ஒரு வகைக் குதிரை

Stone M.: "O.K. good" they said, left and soon returned bringing two calves of good ancestry. The servant took the calves, took leave of the stone masons and set off. He arrived in The Country Where The Kāveri Flows, tied the two calves in front of the palace, and went inside. He saw Tāmarai and paid his respects. He said, "Lord. I have brought the calves. They are tied up outside." Tāmarai went and looked at the calves and was happy.

Tāmarai: "Man, servant! you have brought fine calves. Take them to the shepherd named Maccakkōr Ciṉṉāṉ at Vaṇṭūrāṅkuḷam and come back."

Servant: "Lord, good!" he said and took the calves and returned.

Song: In the land at this time
The monarch ruled thus
It was said to be good
See how things were done with love

A year had passed since the calves were purchased. The two calves had become big cows, and were quite fat, but the ox did not impregnate (the cow) and it did not bear calves.

Tāmarai: "Husband! I thought I was the barren one, so I bought two calves and raised them. They are barren too!"

Song: He (has blessed) beggars, Lord
Without saying " I'll come next week"
He (has blessed) food, oh King
Without saying "some day next week"[1]

"Husband! I have been destructive. I have committed many sins, husband. I have one more thought. We shall buy two young, blue horses and keep them. We will see if they produce colts," she said.

Kuṉṉuṭaiyā: "Good, oh wife! Do as you like."

Tāmarai: "Oh badge-wearing servant! Come here! I am giving you two hundred rupees. Go to the Chola Country, buy two young, blue horses from the King and bring them here."

---

[1] In other words, God has granted the boon of children to so many others. Why must I be kept waiting thus?

சேவகர், "சரி, நல்லது! போய் வருகிறோம்" என்று புறப்பட்டார்.

(பாட்டு) பாரிவில்லை என்னாத்தாச் சேவகனும்
வெள்ளிவெடி என்சாமி ஆளுகளும்
பொன்னிவள என்னாத்தா நாடுவிட்டு
வாறாரே என் சாமி சேவகனும்
வேகாத என்னாத்தா வெய்யலிலே
வெந்தெரிஞ்ச என் சாமி கானலிலே
சோழதேசம் என்னாத்தாத் தேடியல்லோ
வாறானே என் சாமி சேவகனும்

சேவகர் சோழதேசம் வந்து அரண்மனைக்குச் சென்று அரசரைக் கண்டு நமஸ்காரம் செய்தார்.

அரசர் - "சேவகா! மங்களம் உண்டாகட்டும். என்ன விஷயமாக வந்தீர்கள்?"

சேவகன் - "அரசே! பொன்னி வளநாட்டில் பெரியவீட்டு ஆத்தா இரண்டு நீலாக் குதிரைக்குட்டி ஆண், பெண் இரண்டும் வாங்கி வரும்படி பணம் இருநூறு ரூபாய் கொடுத்துவிட்டார்கள்."

அரசர் - "சரி, நல்லது! அடே, குதிரைப் பாகா! நீலாக்குட்டி ஆண், பெண் இரண்டு பிடித்துவந்து கொடு."

குதிரைப்பாகன், "சாமி, நல்லது!' என்று இரண்டு குட்டிகளைப் பிடித்து வந்தான். சேவகர் இருநூறு ரூபாயும் அரசரிடம் கொடுத்துவிட்டு நீலாக்குட்டிகளைப் பிடித்துக் கொண்டு அரசரிடம் விடைபெற்றுப் புறப்பட்டுப் பொன்னி வளநாடு வந்து தாமரையைக் கண்டு, "சாமி! நீலாக்குட்டி வாங்கிவந்து விட்டோம்" என்றான்.

தாமரை - "சரி, நல்லது! ஆயிரமா நிலத்தில் கொண்டுபோய் விட்டுவிடுங்கள்."

சேவகர் - "சாமி! நல்லது."

(பாட்டு) இந்தப் பிரகாரம் இனி
நடக்குது பார் அதிகாரம்
நாளொரு நாள் பொழுதொரு நாள்
நடக்குது பார் நல்பருவம்

இப்படியாக ஒரு வருஷத்தில் நீலா இரண்டும் வளர்ந்து கருமலைக்கு எதிர்மலையாக நின்றன. ஆனால் பெண்ணுடன் ஆண் சேரவுமில்லை. குட்டியும் போடவில்லை.

Servant: "O.K., good! I will go and return," he said and set off.

Song:
The guard who wears a badge, oh Lord
The ones who carry silver sticks
Leaving The Country Where The Kāveri Flows
The guards are coming, my Lord
In the scorching sun, my Lord
In the burning heat, oh God
Searching for the Chola Country, my Lord
The guard is coming, oh God

The servant reached the Chola Country, arrived at the palace and seeing the King, paid his respects.

King: "Servant. Blessings to you! What brings you here?'

Servant: "King! The lady of the big house in The Country Where The Kāveri Flows gave me two hundred rupees to buy two young, blue horses, one male and one female."

King: "O.K., good! Oh, horse trainer! Catch two young blue horses, one male and one female, and bring them here."

Horse Trainer: "Lord! Good," he said and brought two young horses. The servant gave two hundred rupees to the King, and took the two blue colts. He took leave of the King, set off and arrived in The Country Where the Kāveri Flows. Seeing Tāmarai, he said, " I have brought the blue colts."

Tāmarai: "O.K., good! Take them to the enormous field and come back."

Servant: "Lord. Good!"

Song:
At this sweet time
See the monarch rule thus
Day after day, time followed time
See the good age in progress

A year passed and the two blue (horses) grew to look like the black mountain[1] and its neighbour side by side. But the stallion and mare did not unite and did not produce a colt.

---

1 An actual mountain in the area, the Karumalai.

தாமரை - "நாதா! நீலாவும் என்னைப் போல் வரடாகி விட்டது, என்ன செய்வது? பன்றி பல குட்டிகள் போடும் என்று சொல்வார்கள். இரண்டு குட்டிகள் வாங்கிவந்து விட்டு வளர்த்தி அதையும் பார்ப்போம் நாதா!"

குன்னுடையா - "பெண்ணே! பன்றி காட்டுமிருகம். வீட்டுக்கு ஆகாது."

தாமரை - "நாதா! அரண்மனைக்கு வேண்டாம். குறவனிடம் கொடுத்து வளர்க்கச் சொல்வோம்."

குன்னுடையா - "சரி, அப்படியே செய்!"

தாமரை - "அடே, பாரிவில்லை சேவகா! இங்கு வா. பத்து ரூபாய் கொடுக்கிறேன். தங்க வளநாடு சென்று இரண்டு பன்றிக்குட்டி வாங்கிவந்து குறவனிடம் விட்டு வளர்க்கச் சொல்."

சேவகன் பணத்தை வாங்கிக் கொண்டு தங்க வளநாடு போய் இரண்டு குட்டி வாங்கிவந்து குறவனிடம் விட்டுவந்தான்.

(பாட்டு) இந்தப் பிரகாரம் நடக்குது அதிகாரம்
மாதம் மூன்று மழை பெயும்
அங்கு வருஷமொரு கல்மாரி
மூடு பனிபெயும் நாட்டிலே
மிளகுசம்பா நெல் விளையும்
காலம் பனிபெயும் பொன்னி வளநாட்டில்
கடுகு சம்பா நெல் விளையும்

பன்றிகளும் வளர்ந்து கருமலையைப் போல் நின்றன. ஆனால் அதுவும் குட்டி போடவில்லை.

தாமரை - "நாதா! நம்மிடம் தண்ணீர் வாங்கிச் சாப்பிடும் எல்லாமே வரடாகிவிட்டன. என்ன செய்வது?"

என்று கன்னி அழுகிறாள், காந்தேறிச் சோருகிறாள், மங்கை அழுகிறாள், மலர்க்கிளியா வாடுகிறாள்.

தாமரை -

(பாட்டு) "நாதா!
தண்ணி நல்லோ தண்ணீர்த் தடத்திலே
எனக்குத் தவழ்ந்துவர ராஜாவே
மைந்தனில்லை என் மைந்தனில்லை
விறகுநல்லோ விறகு தடத்திலே எனக்கு
விளையாட விளையாட குழந்தையில்லை
நிறைகுடத்து நிறைகுடத்துத் தண்ணீரை

Tāmarai: "Husband! The blue (horses) are as barren as I am. What can be done? Buy some pigs," she said. "We will buy and raise two pigs and see (what happens), oh husband!"

Kunnuṭaiyā: "Oh woman! Forest animals[1] are not appropriate for the house."

Tāmarai: "Husband, not for the palace! We will give them to the Kuravar[2] and tell him to raise them."

Kunnuṭaiyu: "O.K., do that!"

Tāmarai: "Oh badge-wearing servant! Come here. I am giving you ten rupees. Go to The Country of Prosperity and buy two pigs and bring them back. Give them to the Kuravar and tell him to raise them."

The servant took the money, went to The Country of Prosperity, bought two piglets, brought them back, gave them to the Kuravar, and returned.

Song:
See the monarch rule thus
It rained three times a month
There was a shower of hail stones once a year
Pouring rain covered the land
The Kaṭuku sampa paddy prospered
It rained regularly in The Country Where
The Kāveri Flows
The miḷaku sampa paddy prospered

The pigs grew until they looked like the black mountain (itself) but they did not produce piglets.

Tāmarai: "Husband. Everything that accepts water from us becomes barren. What can be done?" she said. "The chaste woman is crying, She is hot with indignation, she is wilting. The good woman is crying. The flower parrot is pining."

Tāmarai's Song:
"Oh Husband!"
When I go to bring water, the good water
I have no son, no son
To crawl towards me, oh husband!
When I go to gather firewood, to gather firewood
There is no child to play with, to play with
There is no son, no son
To spill a full pot of water, to spill a pot of water

---

[1] The terms for pig and boar are not always distinguished in the local dialect, hence Kunnuṭaiya's question. [2] The Kuravar are a very low ranking caste who weave baskets and trap small animals. They live in forests and travel about like gypsies.

இறைப்பதற்கு என் மைந்தனில்லை
இங்கு மைந்தனில்லை

நாதா! இன்று நான் செல்லாத்தாக் கோவிலுக்குப் போய்விட்டு வரும் வழியில் தங்க வளநாட்டுப் பங்காளிக் கவுண்டர்கள் மனைவிமார்கள் மூன்றுபேர் செல்லாத்தாக் கோவிலுக்குச் சாமி கும்பிட வந்தார்கள். நான் எதிரில் வருவதைப் பார்த்து,

(பங்காளிக்கவுண்டர்கள் மனைவிமார்கள் பாட்டு)

வரடி நல்லோ அக்கா எதிரே வாறா
வறப்புணி[1] குழந்தைக்குத் தாங்குமக்கா
இருசி[2] நல்லோ இருசி எதிரே வாறா
எதுபுணி[3] குழந்தைக்குத் தாங்குமக்கா

நாதா! சண்டாளிகள் இப்படிப் பேசிக்கொண்டு என்னைப் பார்த்ததும் அப்படியே திரும்பிச் சென்றுவிட்டார்கள். கோவிலுக்கும் போகாமல் சென்றுவிட்டார்கள். என்னை இந்தக் கதிக்கு ஆளாக்கிவிட்டாயே காஞ்சிநாதா!

(பாட்டு) மாடு மனஞ்செடிஞ்சா[4]
அங்கு மனம் செடிஞ்சா
அது மந்தையோரம் போயாறும்
நல்ல போயாறும்
காகம் மனஞ்செடிஞ்சா
அங்கு மனஞ்செடிஞ்சா
சாமி கரையோரம் காகம்
போயாறும் அங்குப் போயாறும்
குருவி மனஞ்செடிஞ்சா நாதா
மனஞ்செடிஞ்சா
கொம்புக்கனி என்சாமி தின்னாறும்
அங்குத் தின்னாறும்
நான் பெண்ணா மனஞ்செடிஞ்சு
அங்கு மனஞ் செடிஞ்சு
மாடியிலே அழுகுறேனே
இங்கு அழுகுறேனே”

என்று மங்கை அழுகிறாள். மலர்க்கிளியா வாடுகிறாள். கன்னி அழுகிறாள். காந்தேறிச் சோருகிறாள்.

---

1. மலட்டுத் தோஷம் 2. ருதுவாகும் தன்மை இல்லாதவள் 3. எதிர்ப்படுவதால் ஏற்படும் நோய்
4. மனம் வருந்தினால்

Tāmarai: "Husband. I went to the Cellāttā temple today. On the way back I saw three Clansmen's wives from The Country of Prosperity coming to worship Cellāttā. I saw them coming straight towards me."

Clansmen's Wives Song:

Elder sister, the barren one, comes towards us
The children will develop sores
The demoness, the demoness comes towards us
The children will develop some sores

"Lord! the villains! They were speaking like this and when they saw me they turned around and went back, they went back without visiting the temple. Have you reduced me to this condition, oh Lord of Kanjeepuram?"

Tāmarai's Song:

If a cow is heart-broken
Heart-broken there
She will go to the edge of the herd,
and console herself
Will console herself
If a crow is heart-broken
Heart-broken there
She will go to the river bank, my Lord
And console herself, will console herself
If a sparrow is heart-broken, my husband
Heart-broken
She will eat the fruit on the branches and console
herself, my Lord
Will eat and console herself there
But when this woman is heart-broken
Heart-broken there
I go upstairs to cry
I cry here

The good woman is crying. The flower parrot is pining. The chaste woman is crying. She is hot with indignation, she is, spilling tears.

குன்னுடையா - "வாண்டாம்மா தாமரை! நீ வார்த்தை சொல்லக் கேளும்மா. எழுதாக் குறைக்கு அழுதால் விடியுமா? அருங்கிளியே விளர்மாது."

தாமரை - "நாதா! உலகத்தில் என்னைப் பேசுவார் சிலகோடி, ஏசுவார் சிலகோடி. வரடி வரடியென்று வையகமும் பேரானேன் நாதா! நான் வாளவந்தி நாடு சென்று என் அண்ணன்மார்கள் மரிக்கொழுந்தாக் கவுண்டர், சிவக்கொழுந்தாக் கவுண்டர் இருவருக்கும் பதினான்கு குழந்தை இருக்கிறதாம். பார்த்து விட்டு ஒருநாள் இருந்து விட்டு வருகிறேன் சாமி!"

குன்னுடையா - "பெண்ணே! எங்குப் போகிறாய்? அண்ணன் வீட்டுக்கா? சண்டாளி, சதிகாரி, கொலைகாரி. இருபது வருஷம் உன் அண்ணனிடம் வயிற்றுச் சோற்றுக்கு இருந்து ஆடு, மாடு, திரவியம் எல்லாம் நான் போனபிறகு ஏராளமாகக் குவிந்தது. இருபது வருஷத்திற்குப் பின் மாயவர் வந்து "குன்னுடையாக் கவுண்டா, நீ போய் உரிமைப் பெண் கேள்" என்று சொன்னார். அதன் பிரகாரம் நான் போய்க் கேட்டேன். அதற்கு உன் அண்ணன் இருபது வருஷமாகச் சோற்றுக்கு இருந்துவிட்டு உரிமைப்பெண் கேட்கிறாயா என்று சேவகரை விட்டுச் சவுக்கால் அடித்துப் பிள்ளையார் கோவில்முன் கல்லை வைத்து அமிழ்த்து விட்டார்கள். பின் மாயவர் என்னைக் காப்பாற்றி உன்னைத் திருமணம் செய்துவைத்தார். பிறகு நாம் ஊர் புறப்பட்டு வரும்போது வராதே என்று வழியை அடைத்தான். திரும்பாதே என்று திசைக்காவல் போட்டான். ஏன் பெண்ணே! இவ்வளவும் உனக்குத் தெரிந்திருந்தும் பிறந்தவன் வீட்டுக்குப் போகிறேன் என்று சொல்கிறாயே? அப்படி என் பேச்சைக் கேளாமல் நீ போனால் அங்கு உனக்குச் சரியான தண்டனை கிடைக்கும்."

தாமரை - "நாதா! அன்று என் அண்ணன் கோபத்தில் அந்தமாதிரி செய்துவிட்டார். இப்போது நான் போனால் எனக்குச் சரியான உபசரணை செய்வார்கள்."

குன்னுடையா - "பெண்ணே! நமக்குக் குழந்தையில்லை என்பது உலகமே அறியும். நம்மளுக்கும் குழந்தை இருந்து எடுத்துக்கொண்டு போனால் அவர்களுக்கும் பிரியமாக இருக்கும். இந்நிலையில் நீ போனால் வரடியென்று வீட்டிற்குள் விடமாட்டார்கள். ஆகையால் நீ எந்த விதத்திலும் அங்குச் செல்ல அனுமதிக்க மாட்டேன்" என்று கோபத்துடன் எழுந்து பஞ்சணை மெத்தைக்குச் சென்று படுத்துக் கொண்டார்.

Kuṉṉuṭaiyā: "Oh please don't, lady, Tāmarai! Listen to my words, lady. Can fate that is written be changed by crying? Oh rare parrot, oh fair lady!"

Tāmarai: "Husband. Several crores of people in this world are talking about me. Several crores are insulting me. I am known as the barren one, the barren one. Husband! I will go to visit my elder brothers, Marikkoḷuntā Kavuṇṭar and Civakkoḷuntā Kavuṇṭar of The Country Called Vāḷavanti. The two of them have fourteen children. I will see them, stay one day, and return, Lord!"

Kuṉṉuṭaiyā: "Oh woman! Why are you going to your elder brother's house? The villains, the liars, the madmen. When I was there was food for the stomach at your brother's place. The goats, cows and other animals were abundant. After twenty years Vishnu came and said, Kuṉṉuṭaiyā Kavuṇṭar, go and ask for your rightful girl.' At that time I went and asked. Your elder brothers had me beaten with whips by the servants and then left me pinned under a stone in front of the Pilliar temple, despite twenty years of service. Then Vishnu came and protected me and married me to you. Then when we set out for our place they said, 'don't return' and blocked the path. To prevent a return they employed watchmen for the (various) directions. Why woman, when you know this much, do you say that you are going to your brother's house? I say that if you go there you will receive a harsh beating."

Tāmarai: "Husband. My elder brothers acted at that time out of anger. If I go there now they will treat me with great civility."

Kuṉṉuṭaiyā: "Oh woman! The whole world knows we are childless. If we had a child and you took it with you they would be pleased. If you go in this condition they will say 'barren woman' and not let you into the house. Therefore, I won't let you go there (for any reason)." Angrily he got up and went and lay down on a cotton mattress.

குன்னுடைய ராஜன் சென்றதும் தாமரை, "ஆகா, நாதன் கோபத்துடன் சென்றுவிட்டார். சரி, இன்னும் கொஞ்சநேரம் கழித்துப்போய் உத்தரவு வாங்கிப் போகலாம்" என்று மனத்தில் நினைத்து, "நாம் போனால் அண்ணன் குழந்தைகள் அத்தை வருகிறாள் என்று எதிர்கொண்டு ஓடிவரும். சும்மா அண்ணன் வீட்டுக்கு எப்படிப் போவது. நாம் நாதருக்குத் தெரியாமல் குழந்தைகளுக்கு நகை செய்ய வேண்டும்" என்று நினைத்துச் சேவகனைக் கூப்பிட்டு உடனே தங்க வளநாடு சென்று பொன்வேலை செய்யும் ஆசாரிகளைக் கூட்டிவாருங்கள் என்றாள்.

சேவகன், "சாமி, நல்லது" என்று தங்க வளநாடு சென்று ஆசாரிகளைக் கூட்டிவந்தான். ஆசாரிகள் வந்ததும் தாமரையைக் கண்டு நமஸ்காரம் செய்தனர்.

தாமரை - "ஆசாரிகளே! மங்களம் உண்டாகட்டும்! நகைகள் கொஞ்சம் செய்ய வேண்டும். இங்கேயே பட்டறையை வைத்துச் செய்யுங்கள். அடி, குப்பி! முத்து ஒரு வள்ளம் கொண்டுவந்து கொடு." ஆசாரிகள் முத்துக்களை வாங்கிப் பட்டறை வைத்து வேலையை ஆரம்பித்தார்கள்.

(பாட்டு)

அங்கம் உருகுதடா உருகுதடா
ஆசாரி பட்டறையில் பட்டறையில்
தங்கம் உருகுதடா உருகுதடா
தட்டானுடை பட்டறையில் பட்டறையில்

ஆசாரிகள் தங்கத்தை உருக்கிக் கம்பியாக நீட்டிவிட்டுத் தாமரையிடம் சென்று, "ஆத்தா, என்ன நகை செய்யவேண்டும்?" என்றார்கள்.

தாமரை -

(பாட்டு)

இடுப்புக்கு ஒட்டியாணம்[1] ஒட்டியாணம்
இருபுறமும் வைரமணி செய்யுமப்பா
மார்புக்கு மார்பதக்கம்[2] மார்பதக்கம்
வைரமணி ஆபரணம் செய்யுமப்பா
கழுத்துக்குக் காசுமாலை[3] காசுமாலை
கணக்காகச் செய்யுமப்பா ஆசாரி
உச்சிக்கு உச்சிப்பூ[4] உச்சிப்பூவு
ஒழுங்காகச் செய்யுமப்பா ஆசாரி
சடைக்குச் சடைவில்லை[5] சடைவில்லை
சரியாகச் செய்யுமப்பா ஆசாரி

---

1 மாதர் இடை அணி 2. மாதர் மார்பில் அணியும் வடம் 3. பொற்காசு கோத்த மாலையணி
4. குழந்தைகளின் தலையணி 5. தலைப்பின்னலில் பெண்கள் செருகி அணியும் சடைவில்லை

Tāmarai:	As King Kuṉṉuṭaiyā left Tāmarai thought, "Oh ho, my husband has left in anger. O.K., a little later I will get permission and go. When I go my brother will think 'here comes my children's aunt' and will come running towards me. (But), how can I go unprepared to my elder brother's house? I don't know the path, and I must have some jewelry made for the children," she thought. She called a servant and said, "Go immediately to The Country of Prosperity and bring the goldsmiths here."
Servant:	"Lord. Good! he said and went to The Country of Prosperity and returned with the goldsmiths. The goldsmiths, when they saw Tāmarai, paid her their respects.
Tāmarai:	"Oh goldsmiths! Blessings to you! Oh goldsmiths. You must make a few pieces of jewelry. Set up a workshop here and make some. Oh maid! Bring a vaḷḷam of pearls here." The goldsmiths accepted the pearls, set up a workshop and began to work.
Song:	The pieces are softened and beaten, softened and beaten The goldsmiths in the workshop, in the workshop The gold is softened and beaten, softened and beaten In the gold beater's workshop, in the workshop

The goldsmiths softened the gold and stretched it until it formed fine wires. Then they went to Tāmarai and asked, "Lady, what kind of jewelry do you want made?"

Song:	Make some diamond jewelry, oh men Some necklaces of coins, necklaces of coins Make plenty of them, oh goldsmith men Some hair ornaments, hair ornaments Make them correctly, oh goldsmith men Some ornaments for the hair, for the hair Make them well, oh goldsmith men

தாமரை - "அப்பா, ஆசாரி! இன்னும் பத்து விரலுக்குப் பதிந்த கணையாழி, எட்டு விரலுக்கு இசைந்த கணையாழி எல்லாம் சரியாகச் செய்து வையுங்கள்."

ஆசாரி அப்படியே செய்து முடித்தான்.

தாமரை - "அடி, குப்பி! இரண்டு பெட்டி கொண்டுவந்து நகைகளைப் போட்டுச் சீல்[1] வையுங்கள்."

குப்பி அப்படியே இரண்டு பெட்டி கொண்டுவந்து நகைகளைப் போட்டுச் சீல் வைத்தாள்.

தாமரை - "அடி, குப்பி! இன்னும் ஒரு வள்ள முத்து அளந்துவந்து ஆசாரிக்குக் கொடு."

குப்பி - "அம்மா, நல்லது."

ஆசாரிகள் முத்தை வாங்கிகொண்டு தாமரையிடம் விடைபெற்றுத் தங்க வளநாடு போய்ச் சேர்ந்தார்கள். ஆசாரிகள் சென்றபின் தாமரை மறுபடி இரண்டு பெட்டியில் குழந்தைகளுக்கு வேண்டிய ஆபரணங்கள், தின்பண்டங்கள் போட்டுச் சீல் வைத்து நாலு பெட்டியையும் மறைவிடத்தில் வைத்துவிட்டு, "குப்பி, சேவகர் ஆறுபேருக்குச் சாப்பாடு போட்டுத் தாம்பூலம் கொடு. நான் சென்று எஜமானரிடம் ஊருக்குச் செல்ல அனுமதி வாங்கி வருகிறேன்" என்று குன்னுடையா ராஜர் தூங்கும் இடத்துக்குச் சென்று, "நாதா! நாதா!" என்று எழுப்பினாள்.

குன்னுடையா ராஜர், "ஏன், பெண்ணே!"என்று எழுந்தார்.

தாமரை - "நாதா! நான் அண்ணன் வீட்டுக்குச் சென்று வருகிறேன்."

குன்னுடையா - "பெண்ணே! நான் எவ்வளவு சொல்லியும் கேட்கவில்லை. கண்டிப்பாய் போகவேண்டுமா?"

தாமரை - "ஆம், நாதா! போய் வருகிறேன்."

குன்னுடையா - "சரி, அங்குப் போய் ஏதாவது விபரீதம் ஏற்பட்டால் நான் திரும்ப உன்னை அரண்மனையில் வைத்திருக்க மாட்டேன். சரி, போய்வர எத்தனை நாள் ஆகும்?"

தாமரை - "நாதா! நான் போனவுடன் உபசரணை செய்தால் ஒருநாள் இருந்து வருகிறேன். உபசரிக்காவிட்டால் உடனே வந்து சேருகிறேன்."

குன்னுடையா - "சரி, நல்லது! பெண்ணே உன் அண்ணன் வீட்டுக்கு ஏதாவது சாமான்கள் கொண்டு போகிறாயா?"

1. Seal

"Oh men, goldsmiths!
For ten fingers, moulded seal rings
For eight fingers, well-made seal rings
Make everything well and lay it aside."

The goldsmiths finished the work.

Tāmarai: "Oh maid! Bring two boxes and put all these jewels inside and seal them."

The maid brought two boxes, put the jewels inside and sealed them.

"Oh maid! Measure out another vaḷḷam of pearls and give them to the goldsmiths."

Maid: "Lord. Good."

The goldsmiths accepted the pearls, took leave of Tāmarai and returned to The Country of Prosperity. After the goldsmiths left Tāmarai filled two more boxes with children's jewels and food and sealed them. Then she hid the four boxes in the house. "Oh maid! Feed six servants and give them betel leaf and areca nut. I will go to the boss and get his permission to go to my place," she said. She went to the spot where Kuṉṉuṭaiyā was sleeping. "Husband. Husband," she called to wake him.

Kuṉṉuṭaiyā: "What is it, woman," he said, waking.

Tāmarai: "Husband. I am going to my elder brother's house and will return."

Kuṉṉuṭaiyā: "Oh woman! No matter how much I have said you have not listened. Must you go?"

Tāmarai: "Yes, husband. I will go and return."[1]

Kuṉṉuṭaiyā: "O.K. But if you go there and anything perverse happens I will not take you back into (this) palace. O.K., how many days will you be gone?"

Tāmarai: "Husband! If when I go I get a good reception I will stay one day. If I am not welcomed I will return immediately."

Kuṉṉuṭaiyā: "O.K. Good, oh wife! Are you taking anything from here to your elder brother's house?"

---

[1] A woman always retains the right to visit her natal home and her brothers. Her husband cannot forbid it.

தாமரை - "நாதா! நான் ஒன்றும் கொண்டு போகவில்லை. வெறுங் கையுடன் செல்கிறேன்."

குன்னுடையா - "சரி, அப்படியானால் சென்று வா."

தாமரை சென்று குளித்துக் கன்னாங்கலமெடுத்துக் கைக்குத் தண்ணீர் வார்த்து, அன்னம் படைத்து, ஆவின்பால் சாப்பிட்டுவிட்டு, தாம்பூலம் எடுத்துக் கொண்டு, "அடி, குப்பி! நான் போய் வருகிறேன். வீட்டைக் கவனித்துக் கொள்ளுங்கள்" என்று சொல்லிவிட்டுக் குன்னுடையா ராஜரிடம் சென்று, "நாதா! நான் போய் வருகிறேன்" என்றாள்.

குன்னுடையா - "சரி, போய் வா பெண்ணே!"

நாதனிடம் விடைபெற்றுத் தாமரை வெளியில் வந்து ஆறு சேவகரையும் கூப்பிட்டு, "பெட்டியை எடுத்து வாருங்கள் போகலாம்" என்றாள். சேவகர்கள் பெட்டியை எடுத்ததும் எல்லோரும் புறப்பட்டார்கள்.

(பாட்டு) வடக்குநல்லோ என்சாமி திசைநோக்கி
வருகிறாளே அன்னக்கொடி விளர்மாது
பொன்னி வள என்சாமி நாடுவிட்டுப்
போகிறாரே பத்தினியும் சேவகரும்
வாளவந்தி நாடுதேடி நாடுதேடி
வருகிறாளே அன்னக் கொடி விளர்மாது
ஆனை நெருஞ்சி முள்ளு நெருஞ்சி முள்ளு
அப்புதே பத்தினிக்குத் திரேகமெல்லாம்
வேகாத வெய்யலிலே வெய்யலிலே
வெந்தெறிஞ்ச கானலிலே கானலிலே
அல்லு பொடி துள்ளு பொடி துள்ளு பொடி
அனல் கொண்டு வீசுதுபார் பத்தினிக்கு

உச்சி உருவம், மத்தியான நேரம், எல்லோரும் கானகத்தில் ஒரு ஆல மரத்தடியில் போய் நின்றார்கள். தாமரைக்குக் கை சோர்ந்து, மெய் சோர்ந்து, முடி சோர்ந்தது. முந்தானை துகிலைக் கீழே விரித்துச் சோர்ந்து படுத்துக் கொண்டாள் தாமரை.

தாமரை - "அப்பா, சேவகர்களே! எனக்குத் தண்ணீர்த் தாகம் அதிகமாய் இருக்கிறது. எங்காவது தண்ணீர் இருந்தால் கொஞ்சம் கொண்டு வாருங்கள்."

Tāmarai: "Husband. I am taking nothing. I am going with empty hands."

Kuṉṉuṭaiyā: "O.K. If that is so, go and return."

Tāmarai bathed, washing her hands and feet. She ate, drank cow's milk and chewed betel leaf and areca nut.

Tāmarai: "Oh maid! I am leaving. Look after the house," she said, and then went to King Kuṉṉuṭaiyā and told him, "Husband, I am leaving,"

Kuṉṉuṭaiyā: "O.K. Go and come back, oh woman!"

Tāmarai: Having taken leave of her husband Tāmarai came outside and called the six servants. "Pick up the boxes and come, we are going," She said. The servants picked up the boxes and they all set out.

Song:

Facing north, my Lord, facing north
The fine creeper vine is coming, the fair lady
Leaving The Country Where The Kāveri Flows,
my Lord
They are going, the chaste woman and the servants
Searching for The Country called Vāḷavanti, searching
The fair lady, the fine creeper vine is coming
The āṉai neṟiñci thorn, the neṟiñci thorn
Is piercing her body all over
In the scorching sun, in the sun
In the almost burning sunlight, the sunlight
The sand, the thorns and the stones
Are thrown by the heat at the feet of the chaste
woman

When the sun was at its zenith, at midday, they all stopped under a banyan tree, out of weariness. Tāmarai's hands drooped, her body drooped, her heavy hair drooped.

Tāmarai took the end of her sari, spread it on the ground and lay down.

Tāmarai: "Man, oh servant! I am terribly thirsty! If there is water anywhere bring me a little."

சேவகர், "சரி, நல்லது" என்று புறப்பட்டுச் சென்று சிறிது நேரத்தில் தண்ணீர் கொண்டுவந்தார்கள். தாமரை தண்ணீரை வாங்கி முகம் கழுவி தாகத்துக்குத் தண்ணீர் சாப்பிட்டுக் களைப்பு நீங்கி உணர்வுபெற்று எழுந்தாள்.

சேவகர் - "சாமி! வாளவந்தி நாடு இன்னும் எவ்வளவு தூரம் போகவேண்டும்?"

தாமரை, "சேவகரே! இனிப் பக்கத்தில்தான் இருக்க வேண்டுமென்று நினைக்கிறேன்" என்று வடக்குத் திசையில் பார்த்தாள். "சேவகரே! அதோ வாளவந்தி நாட்டின் காளியாத்தாக் கோவிலின் ஏழு அடுக்குக் கொண்ட திருக்கலசம் தெரியுது பார். அதற்கு இடது புறம்,

(பாட்டு) ஐந்தடுக்குத் திருக்கலசம்
அலங்காரமாய்த் தெரியுது பார்
சுற்றிலும் தென்னைமரம்
அதைச்சுற்றி வாழைமரம்
மாமரமும் பூமரமும்
மலர்ந்து இருப்பதைப் பார்
மல்லிகை முல்லை ரோஜா
மலர்ந்து இருப்பதைப் பார்
அதோ தெரியுதுபார் அண்ணன்
அரண்மனை அதோ தெரியுது பார்

அப்பா, சேவகரே! என் அண்ணன் குடும்பமும் நம் குடும்பம் போல் நல்ல செல்வாக்கு உள்ளதுதான். நான் என்னவோ குழந்தையில்லாப் பாவியாகி விட்டேன். அவ்வளவுதான். சரி, பெட்டியை எடுங்கள் புறப்படலாம்."

(பாட்டு) பத்தினியும் என் சாமி முன் நடக்கோ
சேவகரும் என் சாமி பின் துடர்ந்தார்
அருங்கிளியும் என் சாமி முன் நடக்கோ
அடியர்கள் என் சாமி பின் தொடர்ந்தார்

வாளவந்தி நாடு வந்து பிள்ளையார் கோவிலில் பெட்டியை இறக்கி வைத்தார்கள்.

தாமரை - "அப்பா, சேவகரே! அதோ நம் அரண்மனையைப் பாருங்கள்."

சேவகர் - "சாமி! ரொம்பவும் அழகாக இருக்கிறது."

தாமரை - "சரி! அருகில் உள்ள கிணற்றில் இறங்கிக் கால், முகம் சுத்தம் செய்து வாருங்கள்."

Servant: "O.K., good," he said and set off. After a little while he returned with some water. Tāmarai took the water, washed her face and drank. Her alertness returned and she got up.

"Oh Lord. How much further must one go to reach
The Country Called Vāḷavanti?"

Tāmarai : "Oh servant! I think it is close at hand now," she said and looked to the north. "Oh servant. There is the Kāḷiyāttā temple of The Country Called Vāḷavanti. One can see the row of seven sacred pots on it,[1] and to the left of that:"

Song:
A line of five sacred pots
See how decorative they are
Surrounded by coconut palms and they surrounded by plantain trees
See how the mango trees and flowering bushes flourish
There, one can see my elder brother
Look, one can see the palace

Tāmarai: "Man, oh servant! My elder brother's family is like my own. They are well off, too. For whatever cause I am without children. That is all. O.K., lift the boxes. Let's go."

Song:
The chaste woman, oh Lord, walked ahead
The servants, oh Lord, followed behind
The rare parrot, oh Lord, walked in front
The servants, oh Lord, walked in back

On reaching The Country Called Vāḷavanti they set the boxes down at the Pilliar temple.

Tāmarai: "Man, oh servant. Look, there is our palace."

Servant: "Yes. It is very beautiful."

Tāmarai: "O.K. Descend into the neighboring well, wash your hands and feet and return." Then she said, "I will also wash my face and feet and return. Then we will go to the palace." Saying this, Tāmarai went to the well.

---

[1] A tier of pots used on certain ritual occasions. A temple traditionally has a row of sacred pots along the top of its main shrine.

சேவகர்கள் சென்று சுத்தம் செய்து வந்தார்கள். பின் தாமரை, "நானும் போய்க் கால், முகம் சுத்தம் செய்து வருகிறேன். அதன்மேல் அரண்மனைக்குச் செல்வோம்" என்று கிணற்றுக்குச் சென்றாள்.

இங்கு இப்படி இருக்கும்போது அரண்மனையில் அரசருடைய மனைவி இரண்டு பேரும், "அக்கா, நாம் கல்யாணம் செய்து நாற்பத்தைந்து வருஷமாகிறது. அன்று பிள்ளையார் கோவிலுக்குப் போனதுதான். அதன் பிறகு போகவில்லை. ஆகையால் நம் கணவர் இரண்டுபேரும் இப்போது பகடை விளையாடிக் கொண்டிருக்கிறார்கள். நாம் இருவரும் பிள்ளையார் கோவிலுக்குச் சென்று சுவாமி தரிசனம் செய்துவிட்டு அப்படியே தண்ணீர் கொண்டு வருவோம்" என்று குடத்தை எடுத்துக்கொண்டு புறப்பட்டார்கள்.

(பாட்டு)
அன்னநடை நடந்தாள் ராஜாத்தி
அவள் அலங்கார கைவீசி பத்தினியா
சின்னநடை நடந்தாள் பத்தினியா அவள்
சிங்கார கைவீச்சாம் பெண்மயிலாம்
யானைமுக பிள்ளையாரு பிள்ளையாரு
ஐங்கரனார் கோவிலுக்கு வாறாளே

இவர்கள் பிள்ளையார் கோவிலுக்கு வரும்போது பொன்னி வளநாடு சேவகர் ஆறு பேரும் நின்றுகொண்டிருப்பதைப் பார்த்து,

ஒரு பெண் - "அய்யோ, அக்கா! நமது நாட்டில் இவ்வளவு பெரிய ஆள் கிடையாது. இவர்கள் எந்த ஊரோ தெரியவில்லை" என்று பயந்து நின்றாள். பின், "அக்கா! நம் ஊரில் நாம் ஏன் பயப்பட வேண்டும். யார் என்று விசாரிப்போம்" என்று அருகில் சென்று, "அப்பா! நீ எந்த ஊர்?" என்றாள்.

சேவகர் - "ஆத்தா! நாங்கள் பொன்னி வளநாடு."

ஒரு பெண் - "அப்பா! பொன்னி வளநாட்டிலிருந்து இங்கு எந்த ஊருக்குப் போகிறீர்கள்?"

சேவகர் - "ஆத்தா! இந்த நாட்டு அரசருடைய அரண்மனைக்குத்தான் வந்தோம்."

அரசர் மனைவிகள் - "அப்பா! பொன்னி வளநாட்டுக்கும் வாளவந்தி நாட்டுக்கும் எப்போதும் போக்குவரத்து கிடையாதே. அப்படியிருக்கும் போது நீங்கள் என்ன விஷயமாக வந்தீர்கள்?"

Wives: At this time the two elder brother's wives (spoke together). "It has been forty-five years since we married, oh elder sister. On that day we went to the Pilliar temple. We have not been since. Our two husbands are playing dice, just now. We two (shall) go to the Pilliar temple and worship and on the way back we shall bring some water," they said and set out.

Song:
The Queen walked like a swan
The hands of the chaste woman swung lightly
The steps of the chaste woman were small
The ornamented arms of the peahen swung
They approached the temple of the five-armed God
The elephant-faced Pilliar, Pilliar

On approaching the Pilliar temple they saw the six servants from The Country Where The Kāveri Flows standing there.

One wife: "Oh my, elder sister! We don't have such big men in our country. We don't know their town," said she. They stood still, becoming frightened. "Oh elder sister. Why should we be frightened in our own country? We will go and find out who they are," She said and they drew nearer. "Oh man. What town are you from?"

Servant: "Lady. We are from The Country Where The Kāveri Flows."

One wife: "Man. You are coming from The Country Where The Kāveri Flows. What town are you going to?"

Servant: "Lady. We have come to the palace of the King of this country."

Both Wives: "Man. We have no relations (no comings and goings) with The Country Where The Kāveri Flows or The Country of Prosperity. In such circumstances what brings you here?"

சேவகர் - "ஆத்தா! இந்த நாட்டு அரசரின் தங்கையாகிய தாமரையாக் கவுண்டச்சியை எங்கள் ராஜா கல்யாணம் செய்திருக்கிறார். எங்கள் ஆத்தா தாமரையாக் கவுண்டச்சி இப்போது இங்கு வந்திருக்கிறார்கள். அவர்களுடன் நாங்கள் வந்தோம்."

அதைக் கேட்ட அரசர் மனைவிகள் இரண்டுபேரில் மூத்தவள், "அம்மா, தங்கச்சி! எனக்கு இப்போதுதான் ஞாபகம் வருகிறது. நம் கல்யாணம் முடிந்து இரண்டு நாள் கழித்து என் கணவரைப் பார்த்து, "நாதா! தங்கள் கூடப் பிறந்தவர்கள் எத்தனை பேர்?" என்று கேட்டேன். அதற்கு அவர், "என் கூடப்பிறந்தவர்கள் என்னைச் சேர்த்து மூன்றுபேர்" என்றார். அதற்கு நான் இன்னும் ஒருவர் எங்கே என்று கேட்டேன். அதற்கு அவர், "என்கூடப் பிறந்தவள் தாமரையைப் பொன்னி வளநாட்டுக்குக் கல்யாணம் செய்து கொடுத்திருக்கிறோம். அவள் இங்குத் திரும்பவும் வரக்கூடாது என்று வழியை அடைத்துவிட்டோம். திரும்பாதே என்று திசைக்காவல் போட்டுவிட்டோம். அவள் நம் நாட்டுக்கு எப்போதும் வரமாட்டாள்" என்று சொன்னார் என்று திரும்பவும் சேவகரை நோக்கி, "ஏப்பா! தாமரையாக் கவுண்டச்சியா இங்கு வந்திருக்கிறாள்?" என்றாள்.

சேவகர் - "ஆத்தா, அவர்கள்தான்."

அரசர் மனைவி - "ஏப்பா! தாமரைக்குக் குழந்தைகள் எத்தனை?"

சேவகர் - "ஆத்தா! கல்யாணமாகி நாற்பத்தைந்து வருஷமாகுது. குழந்தையே இல்லை. இப்போது அண்ணன் குழந்தை களையாவது பார்த்துப் போவோம் என்று வந்தார்கள்."

இதைக் கேட்டதும் அரசர் மனைவி இரண்டுபேரும் அரண்மனைக்குத் திரும்பி ஓடிவந்து ராஜர்களைக் கண்டு, "நாதா! நாங்கள் குழந்தைகளைக் கூட்டிக்கொண்டு எங்கள் ஊருக்குப் போய் வருகிறோம்" என்றார்கள்.

அரசர் - "பெண்ணே! திடீரென்று ஏன் இப்படிப் பேசுகிறீர்கள்?"

மனைவி - "நாதா! தங்கள் கூடப்பிறந்தவள் தாமரையாளைப் பொன்னி வளநாட்டுக்குக் கொடுத்திருக்கிறோம் என்று சொன்னீர்களே? அவள் நாற்பத்தைந்து வருஷமாகக் குழந்தை இல்லாமல் இப்போது நம் குழந்தைகளைப் பார்க்கலாமென்று வந்து பிள்ளையார் கோவிலில் இருக்கிறார்கள். இப்போதுதான் நாங்கள் பார்த்து வந்தோம்."

அரசர் - "அப்படியா! சண்டாளி, கல்யாணம் செய்து தெற்குப் போகும்போதே இங்கு வரக்கூடாது என்று வழியை அடைத்துவிட்டோம். அப்படியிருந்தும் இங்கு எதற்காக

Servant: "Lady. The younger sister of the King of this country, Tāmarai Kavuṇṭacci, married our King. Our lady Tāmarai Kavuṇṭacci has now come here. We have come with her."

Elder Wife: Hearing this the elder of the two king's wives said, "Oh lady, younger sister! Now I remember. Two days after our marriage I asked my husband, 'Husband. How many siblings do you have?' He answered, 'there are three, including myself.' Then I asked 'Where is the third?' He answered, 'My sister, Tâmarai. We gave her in marriage to The Country Where The Kāveri Flows. We have said that she must not return and blocked the path. We have guards for all the direction from which she might come. She must never come to our country." Then they turned and addressed the servants. "Men. Has Tāmarai Kavuṇṭacci come here?"

Servant: "Lady. (That) is she."

One wife: "Oh, man. How many children does Tāmarai have?"

Servant: "Lady. It has been forty-five years since she married. There are no children. She has come with the idea of seeing her elder brother's children."

Hearing this the King's wives ran back to the palace and seeing the ruler, said:

"Husband! We are taking our children and going to our native towns. We will come back."

King: "Oh woman! why, all of a sudden, do you speak like this?'

Wife: "Husband! Didn't you say you had given your sister, Tāmarai, (in marriage) to The Country Where The Kāveri Flows? After forty-five years she has no children and now, thinking of seeing our children, she has come to the Pilliar temple. We have just seen her there and come back."

King: "Is that so! The villain. As she left for the south, just after her wedding, we blocked the path saying she must not return. Being so, what has brought her here? Oh woman.

வந்தாள்? பெண்ணே! அவள் ஒரு கொள்ளிக் கண்ணுக்காரி.[1] அவள் வந்து குழந்தைகளைப் பார்த்தால் குழந்தைகளுக்குக் கஷ்டம் ஏற்படும். ஆகையால் நாம் எல்லோரும் அரண்மனைக்குள் இருந்துகொண்டு கதவைச் சாத்தித் தாளிட்டு நான்கு கதவுக்கும் சேவகர்களைக் காவல்போட்டு உள்ளே விடாதபடிச் செய்துவிடுவோம். அடே, கறுப்புத் தலையாரி! பொன்னி வளநாட்டிலிருந்து என் தங்கை தாமரை வந்து பிள்ளையார் கோவிலில் இருக்கிறாளாம். அவள் ஈசுவரனின் சிருஷ்டியில் பிறந்தவள். அவள் வந்து கதவைத் தொட்டால் கதவு பொடியாகிவிடும். அவள் வந்தால் கதவின் அருகில் நெருங்கவிடாதே. "எங்கள் அண்ணன் எங்கே?" என்று கேட்டால், "மாந்தப்பூர் எல்லைக்கு மயில் வேட்டையாடவும் கூந்தப்பூர் எல்லைக்குக் குயில் வேட்டையாடவும் சென்று விட்டார்கள். அவர்கள் வர ஆறு மாதமாகும். அதுவரை உற்றார், பெற்றார், உறவினர் யார் வந்தாலும் அரண்மனைக்குள் விடவேண்டாமென்று சொல்லிவிட்டார் என்று சொல்லிவிடு" என்று அரசர் அரண்மனைக்குச் சென்றார்.

மனைவிகள் இரண்டுபேரும், "நாதா! உங்களுடைய தங்கை தெய்வ சிருஷ்டியில் பிறந்தவள். கதவைத் தொட்டவுடன் திறந்துகொள்ளும் என்று சொல்கிறீர்கள். அப்படி அவள் உள்ளே வந்து நம் குழந்தையைப் பார்த்தால் குழந்தைக்கு வறப்புணித் தாங்கிவிடும். நாதா! ஒரு மக்கிரிக் கூடையை[2] எடுத்துக் குழந்தைகளையெல்லாம் போட்டு மூடிவிடலாம்" என்று கூடையை எடுத்து வந்து பதினான்கு குழந்தைகளையும் அதில் போட்டு மூடி, கல்லை வைத்து அமர்த்திவிட்டுக் கதவைச் சாத்தித் தாளிட்டு மண் அறைந்துவிட்டார்கள்.

இங்கு இப்படி நடக்கும்போது பிள்ளையார் கோவிலில் தாமரையாக் கவுண்டச்சி சிறிதுநேரம் தங்கியபின், "அப்பா, சேவகரே! இனிப் புறப்படுங்கள், அரண்மனைக்குப் போகலாம்" என்று எல்லோரும் புறப்பட்டு அரண்மனை வாசல் வந்து பார்க்கும்போது கதவு சாத்தப்பட்டுத் தலையாரி காவல் நிற்பதைப் பார்த்து,

தாமரை - "அப்பா, தலையாரி! ஏன் அரண்மனை சாத்தப் பட்டிருக்கிறது?"

தலையாரி பதில் சொல்லவில்லை.

1. தீய கண் 2. பருத்தி விதை எடுத்துவரப் பயன்படுத்தும் பெரிய மூங்கில் கூடை

She is a witch. If she comes and sees the children the children will suffer hardships. Thus, we will take everyone into the palace and bolt the door. We will post guards at the four gates, and not allow them inside. Oh black watchman! My younger sister Tāmarai has come from The Country Where The Kāveri Flows and is at the Pilliar temple. She was born of Siva's creative power. If she comes and touches the door it will turn to dust. If she comes don't allow her near the door. If she asks, 'Where is my elder brother.' tell her, 'He has gone to the borders of Māntappūr to hunt peacocks. It will be six months until he returns. He left saying, until then if any relations or kinsmen come don't allow them in the palace." Saying this he went into the palace.

Wives: The two wives (then) said, "Husband! You say your younger sister was born of God's creative power and that if she touches the door it will open by itself. If she comes inside and sees the children they will develop sores. Husband! Get a large basket. We will cover all the children with it." So a large basket was taken and fourteen children were put under it. A stone was put on it, the door was closed and bolted and earth put around it.

At this time, Tāmarai Kavuṇṭacci, after waiting a while at the Pilliar temple, said "Man, Oh servant! It is time to set out. Let's go to the palace." So they set out and as they arrived and looked at the palace door they found it shut with a watchman standing guard outside.

Tāmarai: "Man. Watchman! Why is the palace door shut?"

The watchman did not answer.

தாமரை - "தலையாரி! என்னைத் தெரியவில்லை? நான்தான் உங்கள் அரசருடைய தங்கை தாமரையாக் கவுண்டச்சி. ஏப்பா, என் அண்ணன்மார்கள் எல்லாம் எங்குப் போய்விட்டார்கள்?"

தலையாரி - "அம்மா! உங்கள் அண்ணன்மார்கள் மாந்தப்பூர் எல்லையில் மயில் வேட்டையாடச் சென்றுவிட்டார்கள். கூந்தப்பூர் எல்லைக்குக் குயில் வேட்டையாடச் சென்றுவிட்டார்கள். போகும்போது என்னிடம், "உற்றார், பெற்றார், உறவினர் யார் வந்தாலும் அரண்மனைக்குள் விடவேண்டாம்" என்று சொல்லிவிட்டுப் போய்விட்டார்.

தாமரை - "சரி, தலையாரி! அண்ணன்மார்கள் வேட்டைக்குப் போனாலும் அண்ணிகள், குழந்தைகள் அவர்களெல்லாம் எங்கே?"

தலையாரி - "அவர்கள் குழந்தைகளைக் கூட்டிக்கொண்டு ஊருக்குச் சென்றுவிட்டார்கள்."

தாமரை - "சரி, அப்படியா! நான் அரண்மனைக்குள் சென்று நான் பிறந்த வீட்டைச் சுற்றிப் பார்த்துவிட்டுப் போகிறேன். விலகி நில்!"

தலையாரி - "ஏய், பெண்ணே! காலை உள்ளே எட்டி வைக்கக்கூடாது. ஜாக்கிரதை!"

தாமரை - "அட, சண்டாளா! சிறிதுகூட மதிப்பில்லாமல் "வா, போ" என்று பேசுகிறாயே? நான் பிறந்த வீட்டுக்குள் போவதற்கு நீ ஏன் தடுக்கிறாய்?"

தலையாரி - "பெண்ணே! ஒரு அடி காலை உள்ளே எட்டிவைத்தால் என்ன நடக்குது பார்"

என்று தலையாரி சொன்னதும் தாமரைக்குக் கோபம் வந்து, "ஏண்டா! உள்ளே போனால் என்ன செய்வாய்?" என்று தாமரை சிறிது தூரம் உள்ளே சென்றதும் தலையாரி,

(பாட்டு)
எட்டிமயிர் பிடித்தான் மயிர் பிடித்தான்
இழுத்தடித்தான் பெண்மயிலை பெண்மயிலைத்
தாவி மயிர் பிடித்தான் மயிர்பிடித்துத்
தனிச்சடிச்சான் சண்டாளன் பெண்மயிலை
அஞ்சுமணி சாட்டையிலே சாட்டையிலே
தாறுமாறா அடிக்குறானே சண்டாளனும்
அடிபொறுக்க மாட்டாமல் மாட்டாமலே
ஆளுயரம் குதிக்குறாளே பெண்மயிலாள்

Tāmarai: "Watchman. Don't you recognize me? It's me, your King's younger sister Tāmarai Kavuṇṭacci. Oh man! Where have my brothers gone?"

Watchman: "Lady. Your brothers have gone to the borders of Māntappūr on a peacock hunt. They have gone to the borders of Kūntappūr on a quail hunt. As they left they said to me, 'if any relatives or kinsmen come don't allow them into the palace.' They went, having left these orders."

Tāmarai: "O.K. Watchman! Even if my elder brothers have left on a hunt where are all their children?'

Watchman: "They left the children in (their wives) home towns."

Tāmarai: "O.K., so be it! I will go into the palace, look around the house where I was born and then leave. Step aside!"

Watchman: "Oh woman! you must not step inside. Be careful!"

Tāmarai: "Oh, you villain! So you speak without a trace of respect. Why do you prevent me from entering the house of my birth?"

Watchman: "Oh woman! A blow, if you set foot inside. You'll see what happens."

Hearing what the watchman said, Tāmarai became angry. "Oh man. If I go inside what will you do?" she said and went a little way in.

Song:
He grabbed her hair, grabbed her hair
He dragged the peahen, the peahen
He sprang and grabbed the hair, the hair
Alone, he dragged the peahen, the peahen, the villain
With a whip having five jewels on it, the whip
He beat her perversely, the villain
She could not bear the blows, could not bear them
She jumped the height of a man, the peahen

தல்லயாரி - *"சண்டாளி! உள்ளே வராதே என்று சொல்கிறேன். பார்க்கலாமென்று வருகிறாயா?"*

என்று சண்டாளன் தாமரையை அடித்துச் சாட்டைத்துளிர் பட்ட பக்கமெல்லாம் தாமரைக்கு ரத்தம் பெருகியது. ரத்தவெள்ளம் சாய்ந்தது. உதிரம் பெருகியது. உதிரவெள்ளம் சாய்ந்தது.

தாமரை சோர்ந்து பூமியின்மேல் விழுந்து மூன்றுநாழிகை நேரம் மூச்சுணர்ந்து கிடந்தாள். சிறிது நேரத்திற்குப் பின் மூர்ச்சை தெளிந்து எழுந்து, வடக்குமுகமாக மண்டியிட்டு உட்கார்ந்து, "சண்டாளா! நீ ஆளைவிட்டு ஏன்னை அடிக்கச் சொன்னாயா? மாயவா! நான் இந்தக் கதிக்கு ஆளாகி விட்டேன்."

தாமரை -

(பாட்டு)

நாதன்சொல் கேளாமல் அங்குக் கேளாமல்
எனக்குப் பிழைமோசம் நாட்டிலே
நேர்ந்திட்டுதே இனி நேர்ந்திட்டுதே
மன்னன்சொல் கேளாமல் இனிக் கேளாமல்
எனக்கு வகைமோசம் நாட்டிலே
நேர்ந்திட்டுதே அங்கு நேர்ந்திட்டுதே
பர்த்தாசொல் கேளாமல் இனிக் கேளாமல்
எனக்குப் பழிமோசம் நாட்டிலே
நேர்ந்திட்டுதே அங்கு நேர்ந்திட்டுதே
தங்கம்போலே பத்தினி கண்ணீரைத்
தரணியிலே அன்னக்கொடி வடித்தாளே
அங்கு வடித்தாளே
முத்துப்போல் பத்தினி கண்ணீரை
முகத்தோட அன்னக்கொடி
வடித்தாளே அங்கு வடித்தாளே

பவளம்போல் கண்ணீரைத் தாமரை பக்கமெல்லாம் சோரவிட்டாள். "சண்டாளா! என்னை ஆளைவிட்டு அடித்தாயடா? அநியாயம் செய்தாயடா? என்மேல் உனக்குப் பகையிருந்தால் நீ வந்து அடித்திருந்தால் ஏற்றுக் கொள்வேன். பிறந்தவன் வீட்டுக்குப் போய்த் தலையாரியிடம் அடிதின்றாள் என்ற பெயர் உண்டாக்கிவிட்டாயே பாவி" என்று அண்ணன்மார்களைத் தாமரை நிந்தித்து ஒரு காலை மண்டியிட்டு ஒருகாலைத் தண்டி[1] வாங்கி வடக்குமுகமாக உட்கார்ந்து, "மண்பிடித்துப் போட்ட மாயவனே! உருபிடித்துப் போட்ட உடையாளி! வாசுதேவா! வருணதேவா! ஈசுவரா!"

---

1. நீட்டி

Watchman: "Villain! I said don't enter and you proceed thinking 'Let's see," the traitor said and hit Tāmarai. Where her hair drooped, blood appeared, blood flowed. (More) blood appeared and (more) flowed.

Tāmarai fainted and fell on the ground. For three seconds she was without breath. Then in a short while her breathing reurned. Then she got up, and sat down bent over, facing north. "Villain, you sent a man and told him to beat me? Oh Vishnu! I am in such a state!"

Tāmarai:
Not listening to my husband's words, not listening there
I have been wronged in this country
This has happened, this has happened now
Not listening to my husband's words, not listening here
I have been wronged in this country
This has happened, this has happened there
Not listening to my husband's advice, not listening
I have been wronged in this country
This has happened, this has happened there
The chaste woman, who is like gold, has tears
in her eyes
The fine creeper vine is spilling her tears on the earth
there
The chaste woman, is spilling her pearl-like tears
On her cheeks, the fine creeper-vine
Is shedding her tears, is shedding her tears.

Tāmarai shed coral-like teardrops. Villain! you sent a man to beat me. Have you (meted out) injustice? If you hated me I would accept your blows. You have given me the name of a woman who visited her brother's house and was beaten by the watchman. Oh sinner!" she said.

Having abused her brothers, Tāmarai bent one leg and extended the other and sat down facing north.

Tāmarai: "Oh Vishnu, creator of earth! Oh ruler who shaped the world. Oh Vasu, oh Varuna, oh Siva, oh those who attend

என்று தெய்வசபையை நினைத்து, "நான் தெய்வசபையில் பிறந்தது உண்மையானால் பரந்தாமா, தாங்கள் அக்கினிச் செண்டைப்[1] பூமியில் இறக்கிவிட வேண்டும். என்னை அடித்தவனை நான் கொஞ்சம் வேடிக்கை பார்க்க வேண்டும் காஞ்சிநாதா!" என்று மாயவரை நினைத்துத் தாமரை அழும்போது மாயவர் பார்த்து, "அடடா! குன்னுடையாக் கவுண்டன் போக வேண்டாம் என்று சொன்னானே. அவன் பேச்சைக் கேளாமல் வாளவந்தி நாடு சென்று பிறந்தவன் ஆளைவிட்டு அடித்து அநியாயம் செய்துவிட்டான் சண்டாளன்" என்று கருட வாகனமேறித் தெய்வசபை சென்று ஈசுவரனைப் பார்த்து,

மாயவர் - "மைத்துனா! பூலோகத்தில் பொன்னி வளநாட்டில் தாமரையாக் கவுண்டச்சிக்குக் குழந்தையில்லாமல் செய்தீர்கள் அல்லவா? அவள் தாங்களும் பார்வதியும் மானாக வடிவெடுத்துத் தாமரைத் தடாகத்தின் அருகில் விளையாடும் போது தங்கள் இந்திரியத்தினால் தாமரை இலையின்மேல் உருவான குழந்தை. அவள் இப்போது வாளவந்திநாடு பிறந்தவன் வீடுசென்று அங்கு அவளுக்கு உபசரணை இல்லாமல் அபசரணை நடந்துவிட்டது. அதாவது பிறந்தவன் ஆளைவிட்டு அடித்துவிட்டான் என்று தெய்வசபையிலிருந்து அக்கினிச்செண்டை இறக்கிவிட வேண்டுமென்று அழுது கொண்டு இருக்கிறாள். ஆகையால் கொஞ்சநேரம் அக்கினிச் செண்டை இறக்கிவிடுங்கள்."

ஈசுவரன் - "பரந்தாமா! அப்படியே இறக்கிவிடுகிறேன். தாங்கள் போய் வாருங்கள்."

மாயவர் உடனே பாற்கடல் போய்ச் சேர்ந்தார். மாயவர் போனவுடன், ஈசுவரன் அக்கினிச் செண்டைப் பூலோகத்திற்கு அனுப்பிவிட்டார்.

(பாட்டு)
பூலோகம் தேடியல்லோ தேடியல்லோ
அக்கினி இறங்குதடா இறங்குதடா
பூலோகம் தேடியல்லோ தேடியல்லோ
அக்கினி வருகுதடா வருகுதடா
ஆயருட கிருபையாலே கிருபையாலே
அக்கினி இறங்குதடா இறங்குதடா
வாளவந்தி நாடுதேடி நாடுதேடி
வருகுதுபார் அக்கினிச்செண்டுகளும்

---

1. தேவாக்கினி

the god's counsel-meetings. If it is true That I was born in that chamber then, oh Vishnu, then let your fire ball descend to earth. The man who beat me, let me see him burn a little, oh ruler of Kanjeepuram!" When Tāmarai thought of Vishnu and cried, Vishnu noticed. "Oh ho, she didn't listen to Kuṉṉuṭaiya Kavuṇṭar tell her not to go, and has arrived in The Country Called Vāḷavanti", he thought. He mounted his Garuda vehicle, arrived at the god's counsel chamber and saw Siva.

Vishnu: "Oh brother-in-law! In The Country Where The Kāveri Flows, on earth, you have made Tāmarai Kavuṇṭacci childless, isn't it so? You and Parvati took the form of deer and while playing in the neighborhood of a pond, (once caused) a child to form on a lotus leaf from your discharged semen. She has now gone to her brother's house in The Country Called Vāḷavanti. She was not welcomed and a misdemeanor occurred. That is, her brother left the law and sent a man to beat her. She is crying, asking for a fire ball to descend from the god's counsel-meeting. So, let the fire ball descend downwards for a time!"

Siva: "Vishnu! I will let it descend. You may go."

Vishnu immediately returned to the milk sea. As soon as he left Siva sent a fire ball to earth.

Song:

Searching for the earth, searching
For a path for the fire's descent
Searching for the earth, searching
For a route for the fire's descent
By Krishna's mercy, his mercy
A path for the fire's descent
Searching for The Country Called Vāḷavanti, searching
The fire ball is approaching

தாமரை அக்கினிச் செண்டு வருவதைப் பார்த்து இரண்டு கையையும் ஏந்தும் போது கையில்வந்து அப்படியே நின்றது. தாமரை, "அக்கினி பகவானே! என்னை அடித்தவனைக் கொஞ்சம் துன்புறுத்துங்கள். நான் கண்ணாலே பார்க்கவேண்டும்" என்று தலையாரி மேல் அக்கினிச் செண்டை வீசினாள். வீசியவுடன் தலையாரியைத் தீ பற்றித் துன்பப்படுத்தியது. தலையாரி பொறுக்கமுடியாமல்,

தலையாரி - "ஆத்தா! தாங்கள் என்று எனக்குத் தெரியாது. கூப்பிட்ட எங்க ராஜன் இந்தமாதிரி எனக்குச் சொல்லிக் கொடுத்துவிட்டு எல்லோரும் அரண்மனைக்குள் சென்று கதவைத் தாளிட்டுக் கொண்டார்கள். ஐயோ ஆத்தா! நான் செய்ததை மன்னித்து என்னை விட்டுவிடுங்கள். அக்கினியை நிறுத்துங்கள்" என்று தாமரையின் காலில் விழுந்து கெஞ்சினான் கறுப்புத் தலையாரி.

தாமரை - "அடே, தலையாரி! அரசர்கள் மாந்தப்பூர் எல்லைக்கு மயில் வேட்டை ஆடச் சென்றுவிட்டார்கள் என்று சொன்னாயே? இப்போது எப்படி அரண்மனைக்குள் இருப்பதாகச் சொல்கிறாயே?"

தலையாரி - "ஆத்தா! அந்தச் சண்டாளர்கள்தான் அந்தமாதிரி சொல்லச் சொன்னார்கள். ஆத்தா என்னை மன்னித்துக் கொள்ளுங்கள்."

அன்னக்கொடி தாமரை, அறிவுள்ள தேவி மனமிரங்கி அக்கினிச் செண்டைச் கைக்கு வரவழைத்து ஆயிரம் பாகக் கூந்தலை அவிழ்த்துவிட்டு,

தாமரை -

(பாட்டு) "நீ ஆளைவிட்டுச் சண்டாளா அடித்தாயடா
அநியாயம் நாட்டிலே செய்தாயடா
கோவிலிலே காளியாத்தா இருக்கிறாயா
குடியோடிப் பத்தினி போயிட்டியோ
மாடியிலே காளியாத்தா இருக்கிறாயா
மாடிவிட்டு என்தாயே போயிட்டியோ!
நிலமார்[1] பத்தினி குதிமாரு[2]
நின்றுநல்லோ பத்தினி அடிக்குறாளே
மாடிசுத்தி அன்னக் கொடி
மாரடித்தாள் அங்கு மாரடித்தாள்
கோட்டை சுத்திப் பத்தினி

1. மாரடித்து 2. குதித்துக் குதித்து

Tāmarai saw the fire ball coming and stretching out her two hands it came and rested on them. "Oh Lord of fire," Tāmarai (exclaimed). "Make the man who beat me suffer a little. I want to see it with my (own) eyes." Saying this, she threw the fire ball upon the watchman and he began to burn. The watchman, not able to stand it, (cried):

Watchman: "Lady! I didn't know who you were. When our King spoke he gave such orders. Then everyone went inside the palace and the door was bolted. Oh lady! Forgive me for what I have done and release me. Stop the fire," the black watchman said, and he fell at Tāmarai's feet, begging.

Tāmarai: "Man, oh watchman! You said the kings had gone to the borders of Māntappūr to hunt peacocks. How can you now say they are in the palace?"

Watchman: "Lady. It was those villains who spoke thus and (then) left. Lady! Forgive me."

The fine creeper vine, Tāmarai, the all-knowing goddess, called the fire back to her hand out of compassion, (and let) her thick hair fall loose in a thousand strands.

Tāmarai's Song:

You sent a man to do the beating, villain
You have committed an injustice in this land
The goddess Kāḷi was in the temple
She has left her dwelling place, the chaste woman
The goddess Kāḷi was in the palace
She has left her palace, my mother (has left)
The chaste lady of the land has changed her dwelling
Standing firm, the chaste woman strikes
The fine creeper vine (now) circles her palace
She beats her breasts, her breasts
The chaste lady circles her fortress

மாரடித்தாள் அங்கு மாரடித்தாள்
கொம்பனையா அன்னக்கொடி விளர்மாது"

"சண்டாளா! நீ காண கருயித்து, கண்காண பிள்ளையித்து, மூங்கில் முளையித்து, முத்தமிடப் பிள்ளையித்து, ஏழுதலைமுறைக்கும் எண்ணையிடப் பிள்ளையித்து, ஐந்து தலைமுறைக்கும் அழுங்கியிடப் பிள்ளையித்து" என்று தெய்வசபையை நினைத்து மூன்று கை மண்ணை வாரித் தூற்றும்போது அரண்மனையில் பதினான்கு குழந்தைகளும் செல்லு[1] மடிந்தது போல் சேர மடிந்துவிட்டன. அன்னக்கொடி தாமரை, "உன் வீடு நாசமாகப் போகட்டும்! என்று திரும்பி, "அப்பா, சேவகரே! புறப்படுங்கள். நம் ஊருக்குப் போகலாம்" என்று, "அடே! கறுப்புத் தலையாரி! இங்கு வா" என்று எல்லோரும் பிள்ளையார் கோவிலுக்கு வந்தார்கள்.

தாமரை - "அடே, தலையாரி! ஊருக்குள் இருக்கும் குழந்தைகளை எல்லாம் கூப்பிடு."

தலையாரி சென்று குழந்தைகளைக் கூட்டிவந்தான்.

தாமரை - "சேவகரே! நம் பெட்டியில் இருக்கும் ஆபரணம், தின் பண்டங்கள், இவைகளை எடுத்துச் சூறையிடுங்கள்[2]. அவரவர் கைக்குக் கிடைத்ததை எடுத்துப் போகட்டும்."

சேவகர் அப்படியே பெட்டிச் சாமான்கள் பூராவும் எடுத்துச் சூறை விட்டார்கள்.

தாமரை - "அடே, தலையாரி! கொத்தர்களைப் போய்ச் சீக்கிரம் கூட்டிவா."

தலையாரி சென்று கொத்தனைக் கூட்டிவந்தான். கொத்தன் வந்து தாமரையை நமஸ்காரம் செய்தான்.

தாமரை - "அப்பா! மங்களம் உண்டாகட்டும். கொத்தர்களே! இரண்டடி அகலத்தில் நான்கு அடி நீளத்தில் இரண்டு கல் அடியுங்கள்."

கொத்தர் - "ஆத்தா! அப்படியே செய்துவிட்டோம்."

தாமரை, "சரி! கோவிலின் தென்புறம் ஒரு கல்லைக் கீழே போட்டு ஒரு கல்லை மேலே எடுத்து நிறுத்துங்கள்" என்று மாயவரை நினைத்து, "நான் தெய்வ சிருஷ்டியில் பிறந்தது மெய்யானால் கல்லுடன் கல் ஒட்டி அப்படியே நிற்கவேண்டும் காஞ்சிநாதா!" என்று மாயவரை நினைக்கும்போது, கல் அப்படியே ஒட்டி நின்றது. பின் தாமரை, "கொத்தர்களே! உங்களுக்கு எழுதத் தெரியுமா?" என்றாள்.

கொத்தர் - "ஆத்தா! தெரியுமுங்கோ."

1. கரையான்2 .சிதறடித்தல்

She beats her breasts, she beats her breasts there
The fine creeper vine, the delicate twig-like, fair lady[1]

Villain! May you leave this womb-like place, may your sons die in front of your eyes, let the bamboo be without sprouts,[2] may you not have children to kiss, may you not have sons to perform your funeral rites for seven generations, may you not have children to lament your death for five generations."

Saying this she thought of the god's counsel-meeting and threw three handfuls of earth. Inside the palace the fourteen children were killed in one cluster, as if they were termites. Tāmarai, the fine creeper vine, then said, "Let your house be destroyed." Then turning, she called, "Man, oh servants! Let's go, let's start for our town. Man. Oh black watchman! come here," She said and they all went to the Pilliar temple. "Man, oh watchman! Call all the children of the town." The watchman went and returned with all of the children.

Tāmarai: "Oh servants! Take the ornaments and the food that are in the boxes and let them pillage. Let the children take whatever they can lay their hands on."

The servants did this, taking everything out of the boxes and allowing pillage.

Tāmarai: "Man, oh watchman! Go and bring the stone masons here, quickly." The watchman left and brought back the stone masons. When they saw Tāmarai they paid her their respects.

"Man. Blessings to you! Oh stone masons. Prepare two stones, two feet high and four feet long."

Stone Masons: "Lady. We have done it."

Tāmarai: "O.K. Place one stone lying on the ground and the other standing vertically on it, on the south side of the temple." Then she thought of Vishnu, saying, "If I was truly born of god's grace then let these two stones stick together and stand by themselves, oh Lord of Kanjeepuram!" As she thought of Vishnu the two stones stuck together and stood. Then Tāmarai (said), "Oh stone masons! Do you know how to write?"

Stone Masons: "Lady. We know how."

---

[1] A possible parallel exists between this description and the description of Kaṇṇaki in the Cilappadikaram epic just before she burns the city of Madurai. [2] E.g., unfertile.

தாமரை - "சரி! எழுது. "வாளவந்தி நாட்டில் மரிக்கொழுந்தாக் கவுண்டன், சிவக் கொழுந்தாக் கவுண்டன் இவர்கள் வீட்டில், ஐம்பத்தாறு தேசத்து அரசர்களும் கிராமத்துக் கவுண்டர்களும் தண்ணீர் குடிக்கக் கூடாது. கல்யாணம் செய்யவோ கொடுக்கவோ கூடாது."

பின் தாமரை, "அப்பா, கொத்தர்களே! நான் சொன்னபடி எழுதிவிட்டீர்களா?" என்றாள்.

கொத்தர் - "ஆத்தா! எழுதிவிட்டோம்."

தாமரை, "சரி! நீங்கள் வீட்டுக்குப் போங்கள்" என்று சொல்லிவிட்டு யாராகிலும் கல்லை உடைத்துவிடுவார்களென்று தெய்வசபையிலிருந்து கதண்டுகளையும்,[1] வண்டுகளையும் வரவழைத்துக் காவல் வைத்துவிட்டு அக்கினிச் செண்டையும் தெய்வசபைக்கு அனுப்பிவிட்டு, "அப்பா, சேவகரே! புறப்படுங்கள் போகலாம்" என்று சிறிது தூரம் சென்றபின், "அப்பா, சேவகரே! இவ்வளவு தூரம் வந்து எங்கள் குலதெய்வமாகிய காளியாத்தாளைப் பார்க்காமல் போகக் கூடாது. சற்றுநேரம் இருங்கள். சீக்கிரம் பார்த்து வருகிறேன்" என்று கோவிலுக்குப் போகும்போது கதவு சாத்தியிருந்தது கண்டு, "காளியாத்தா! பிறந்தவள் வீட்டுக்கு வந்து அடிதின்று போகிறாள் என்று கதவைச் சாத்திப் படுத்துக் கொண்டாயா? சண்டாளி!"என்று கோபத்துடன் கதவை எட்டி உதைத்ததும் கதவு தூளாகி விழுந்தது.

அப்போது காளியாத்தா பயந்து முக்காட்டைப் போட்டு ஒரு மூலையில் போய்ப் படுத்துக்கொண்டாள்.

தாமரை உள்ளே சென்று, "காளியாத்தா! நான் உதை தின்று வந்து விட்டேன் என்றா மூலையில் போய்ப் படுத்துக் கொண்டாய்?" என்றாள்.

காளியாத்தா - "தாமரை! நீ ஊரிலிருந்து வந்ததே எனக்குத் தெரியாது. நீ இப்போது வரத்தான் எனக்குத் தெரியும்: உன்னை ஆளை விட்டு அடித்துவிட்டானா சண்டாளன்!"

என்று துயரப்பட்டாள்.

தாமரை மேல் துகிலை விலக்கி, "காளியாத்தா! என் உடலைப் பார்" என்றதும் காளியாத்தா பார்க்கும்போது ரத்தமாக இருந்தது.

காளி - "ஆகா, சண்டாளன்! இப்படிச் செய்துவிட்டானே!"

1. கருவண்டு

Tāmarai: "O.K. Write (the following). The kings of the fifty-six countries and the Kavuṇṭars of the revenue units must not drink water in the home of Marikkoḷūntā Kavuṇṭar and Civakkoḷūntā Kavuṇṭar of The Country Called Vāḷavanti. They (also) must not give or receive women from these men for marriage purposes."[1]

"Oh stone masons! Have you written what I have said?"

Stone Masons: "Lady. We have written it."[2]

Tāmarai: "O.K. You may go home," she said. Then she ordered black beetles and wasps to come and guard the stone from anyone who might (try to) demolish it. And she sent the fire ball back to the god's counsel-chamber. Then (she said), "Men, oh servants. Let's get going." After they had gone a short distance she said, "Men, oh servants! Having come this far I must not leave without seeing our clan goddess Kāḷi. Wait here a little. I will see her and quickly return."

On approaching the temple she saw that the door was closed.

Tāmarai: "Kāḷi lady! You close the door and sleep as a woman returns from taking a beating at her brother's house? Villain!" She said with anger.

As she tried the door the bolt fell away. Kāḷi frightened, had drawn a veil over her face and was hiding in a corner. Tāmarai went inside.

Tāmarai: "Kāḷi, Lady! Having eaten kicks[3] I come here, and you go and hide in a corner?" She said.

Kāḷi: "Tāmarai. I didn't know you had left your town and come here. I have learned just now that you have come. They sent a man to beat you? The villains!" she said and looked compassionate.

Tāmarai: Informing her, she continued, "Kāḷi, lady! Look at my body."

Kāḷi looked and saw it was bloodied.

Kāḷi: "Oh, ho! The villain. He has done this!"

---

[1] These prohibitions are the equivalent of "outcasting" the family. [2] Meaning, of course, that they have inscribed the words on the stone. [3] An idiomatic expression for having suffered degregation.

இருவரும் அழுதுகொண்டு இருக்கும்போது காளியாத்தாளுக்குப் பூஜை செய்யும் பிராம்மணர் வந்தார். வந்து பார்க்கும்போது முன் கதவு உடைந்து கிடந்தது.

பிராம்மணர் - "ஐயோ! என்ன அநியாயம்! கதவெல்லாம் உடைந்து கிடக்குதே" என்று அருகில் வரும்போது உள்ளே அழும் குரல் கேட்டது. ஐயர் உள்ளே சென்று, தாமரையாளைப் பார்த்து, "அம்மா நீங்கள் எந்த ஊர்?" என்று கேட்டார்.

தாமரை - "ஐயரே! நான் பொன்னி வளநாடு. உங்கள் அரசருடைய தங்கை தாமரையாக் கவுண்டச்சி நான்தான். பிறந்தவன் வீட்டுக்கு வந்து சண்டாளன் என்னை ஆளைவிட்டு அடித்து அநியாயம் செய்துவிட்டான். என் தேகத்தைப் பாருங்கள்."

ஐயர் தாமரையின் தேகத்தைப் பார்த்து, "சண்டாளன். பத்தினியாளை இந்தமாதிரி அடித்துவிட்டானே. அவர்களுக்கு என்ன கதி நேர்ந்ததோ தெரியவில்லை" என்று மனத்தில் நினைத்து அமுது வைத்துவிட்டு, "ஆத்தா! இருங்கள். சூடத்தை எடுக்க மறந்துவிட்டேன். சீக்கிரம் எடுத்து வருகிறேன்" என்று புறப்பட்டு அரண்மனையை நோக்கிச் சென்றார். ஐயர் அரண்மனை போய்ப் பார்க்கும்போது நாலு பக்கக் கதவும் பூட்டிக் கிடந்தது. முன்பக்கக் கதவு மட்டும் உள்ளே தாளிடப்பட்டிருந்தது. எல்லோரும் உள்ளே இருப்பார்கள் என்று கதவைத் தட்டிக் கூப்பிட்டார்.

உள்ளே கதவு தட்டும் சத்தம் கேட்டு அரசர், "அடி மாதர்களே! கோவில் ஐயர் கூப்பிடுகிறார்போல் தெரிகிறது. போய்க்கதவைத் திறந்துவிடுங்கள்" என்றார். மாதர்கள் ஓடிக் கதவைத் திறந்ததும் ஐயர், "மாதர்களே! அரசர் எங்கே?" என்றார்.

மாதர் - "சுவாமி! அரண்மனையில்தான் இருக்கிறார்கள்."

ஐயர் - "சரி! நான் வந்திருப்பதாகச் சொல்லி வரும்படிச் சொல்."

மாதர் சென்று அரசரிடம் சொன்னதும் அரசர்கள் வந்தார்கள்.

ஐயர் - "ராஜாவே! ஏன் அரண்மன்னயைத் தாளிட்டு உள்ளே இருந்தீர்களே? என்ன விபரம்?"

அரசர் - "ஐயரே! பொன்னி வளநாட்டிலிருந்து என் தங்கை தாமரை யாள் வருகிறாள் என்று அவள் குழந்தையில்லாமல் வரடியாக இருப்பதால், அவள் வந்து குழந்தைகளைப் பார்த்தால் வறப்புணித் தாங்குமென்று அவளை உள்ளே விடாமல் அரண் மனையின் நால்பக்கமும் காவல் போட்டு, நாங்கள் கதவைத் தாள்போட்டு உள்ளே இருந்தோம். தாமரை அரண்மனைக்கு வந்ததும் வராததும் எங்களுக்குத் தெரியவில்லை."

While the two were crying the Brahman priest responsible for the pūjā there, arrived. As he approached he saw the front door standing open.

Brahman: "Oh my! What is the injustice? The door is standing open!" he said and as he entered he heard the sound of crying. The Brahman entered and saw Tāmarai. "Lady. What town are you from?," he asked.

Tāmarai: "Oh Brahman! I am from The Country Where The Kāveri Flows. I am the younger sister of your king, Tāmarai Kavuṇṭacci. I went to my brother's house and the villain sent a man to beat me, and to act unjustly." The Brahman looked at Tāmarai's body.

Brahman: "The villain, to have beaten a chaste woman in this way. I don't know what got into him," he thought. Laying out the god's offerings, he said, "Lady. Stay here. I have forgotten to bring camphor.[1] I will get it quickly and come."

He set off towards the palace. Arriving and looking at the palace he saw that the gates on the four sides were locked. The front door, though, was bolted from inside. He knocked on the door thinking "they must all be inside." Inside the noise of knocking was heard.

"Oh servant women! It sounds as if the temple Brahman is calling. Go and open the door," he called. The servants ran and when they opened the door the Brahman asked, "Oh women, where is the King?"

Servant: "Lord! He is inside the palace."

Brahman: "O.K. Tell him that I have come."

The servants went and told the King and he came.

Brahman: "Oh King. Why do you bolt the palace and stay inside? What is the news?"

King: "Oh Brahman! My younger sister, Tāmarai, has come from The Country Where The Kāveri Flows. She is barren and without children. If she comes and sees the children (here) she will cause (them to develop) festering sores. We will not allow her inside, and have therefore posted guards on the four sides, bolted the door and remained within. We don't know whether she has come to the palace or not."

---

[1] An essential ingredient of a pūjā.

ஐயர் - "அரசர்களே! உங்களைப்போல் புத்திசாலி உலகத்தில் யாருமில்லை. என்ன காரியம் செய்தீர்கள்? உலகத்தில் எத்தனையோ வரடிகள் இருக்கிறார்கள். அதனால் வரடி எதிர்வந்தால் வறப்புணித் தாங்குமா? அரசே குழந்தைகள் எங்கே?"

அரசர் - "ஐயரே! குழந்தைகளை அவள் வந்து பார்த்துவிடுவாள் என்று மக்கிரியைப் போட்டு மூடி வைத்திருக்கிறோம்."

ஐயர் - "மக்கிரியைத் திறவுங்கள், பார்க்கலாம்."

மக்கிரியைத் திறந்து பார்க்கும்போது பதினான்கு குழந்தைகளும் செல்லு மடிந்ததுபோல் சேர மடிந்து கிடந்தன. அதைப் பார்த்த ஐயர், "அரசர்களே! விதியை விலைக்கு வாங்கிக் கொண்டீர்களே! பதினான்கு குழந்தைகளும் இறந்ததே, என்ன செய்வது அரசர்களே!

(பாட்டு) நீ ஆளைவிட்டுப் பத்தினியை அடித்தாயடா
இங்கு அடித்தாயடா
அநியாயம் நாட்டிலே
செய்துவிட்டாய் அங்குச் செய்துவிட்டாய்

அட, சண்டாளா! தாமரையை இந்தமாதிரி அடித்து, அவள் கோட்டையைச் சுற்றி மாரடித்துக் காளியாத்தாக் கோவில் சென்று முறையிட்டுக் கொண்டிருக்கிறாள்."

அரசர் - "ஐயரே! எங்கள் பதினான்கு குழந்தைகளும் இறந்துவிட்டதே, என்ன செய்வது?"

ஐயர் - "அரசர்களே! தாமரையின் சாபத்தில்தான் குழந்தைகள் இறந்துவிட்டன. அவள் வந்தால்தான் குழந்தைகளை எழுப்ப முடியும். நான் ஒரு தந்திரம் சொல்கிறேன் கேளுங்கள். நீங்கள் இருவரும் வேட்டைக்குப் போய் வந்தது போல் குதிரைமேல் ஏறிவந்து கோவிலில் வந்து இறங்கித் தாமரையின் காலில் விழுந்துகொள்ளுங்கள். வாயைத் திறந்து ஒன்றும் பேசி விடாதீர்கள். நான் இங்கு வந்ததாகத் தாமரைக்குத் தெரியக் கூடாது." ஐயர் புறப்பட்டுக் கோவில் போய்ச் சேர்ந்தார். ஐயர் போனதும் அரசர் இருவரும் குதிரைமேல் ஏறி வேட்டைக்குப் போய் வருவது போல் வந்து கோவிலில் இறங்கித் தாமரையின் பாதத்தின் அருகில் மண்டியிட்டு உட்கார்ந்து பேசாமல் இருந்தார்கள். இதைத் தாமரை கவனிக்கவில்லை. இப்படி இருக்கும்போது ஐயர் காளியாத்தாளுக்கு அருபூஜை, குருபூஜை, ஐம்பத்தி எட்டு லிங்கபூஜையும் முடித்துத் தாமரைக்குத்

Brahman: "Oh King! There is no one as prudent as you in the whole world. What have you done? How many barren women there must be in the world! If a barren woman comes towards one, will that cause festering sores? Oh King! Where are the children?"

King: "Oh Brahman! We hid the children under a large basket thinking she might cast her glance upon them."

Brahman: "Oh King. Lift up the basket. Let us look."

As they lifted up the basket to look the fourteen children were all dead, as if they had expired together. When he saw this the Brahman said,

"Oh King! You have brought bad luck. What can be done? Fourteen children are dead, oh King!"

Song:

You sent a man to beat the chaste lady
You beat her here
An injustice in the land
You have committed, you have committed there

"You villain. You have beaten Tāmarai in such a way that she circled the fortress beating her breasts (and) then came to the Kāḷi temple with her case. She is there now."

King: "Oh Brahman. My fourteen children have died. What can be done?"

Brahman: "Oh King! Your children died by Tāmarai's curse. Only if she comes (here) can you revive them. I will tell you a trick. Come to the temple on horseback, as if you were just returning from a hunt. Dismount and fall at Tāmarai's feet, keeping your mouth shut and saying nothing. Tāmarai must not know that I have come here," the Brahman said and set off for the temple.

As soon as the Brahman had gone the two kings mounted horses and arrived at the temple as if they had just returned from a hunt. They fell at Tāmarai's feet and were speechless. Tāmarai ignored them. At this time the Brahman performed the God's pūjā, pūjā for the family deity, and the fifty-eight lingam's pūjā, and having finished gave Tāmarai (a chance to revere) the

தீபாராதனை கொடுத்துவிட்டுத் தாமரையின் காதில் விழும்படி, "இந்த அரசர்கள் இங்குவந்து எதற்கு மண்டியிட்டு விழுந்து கிடக்கிறார்கள்" என்று பேசிக் கொண்டே தீபாராதனை தட்டத்துடன் உள்ளே சென்றார். இதைக் காதில் கேட்ட தாமரை, "ஐயரே, யார் வந்திருக்கிறார்கள்? உங்கபாட்டில் தனியாகப் பேசிக் கொண்டு போகிறீர்கள்?" என்றாள்.

ஐயர் - "ஆத்தா! உங்கள் அண்ணன்மார்கள் இரண்டுபேரும் வந்து பாதத்தில் விழுந்து கிடக்கிறார்கள். திரும்பிக் கீழே பாருங்கள்."

தாமரை - "சண்டாளன்கள்! இங்கு எதற்கு வந்தார்கள்? நான் இங்கு இருப்பதாக யார் சொன்னது? ஐயரே! நீங்கள்தான் போய்ச் சொல்லியிருப்பீர்கள். என்னை ஆளைவிட்டு அடித்தபிறகு என் ஆயுள் உள்ளவரை அவர்கள் முகத்தில் விழிக்க மாட்டேன்."

காளியாத்தா - "அம்மா, தாமரை! உன் அண்ணன்மார்கள் செய்த குற்றத்தை மன்னித்து நீ இவ்வளவு தூரம் வந்து வீட்டைப் பார்க்காமல் போகக்கூடாது. நீ போய் அரண்மனையைப் பார்த்துவிட்டுப் போம்மா."

தாமரை - "ஆத்தா! உனக்காக நான் போகிறேன். ஐயரே! அவர்கள் முகத்தில் நான் விழிக்கமாட்டேன். எழுந்து ஓடிப்போகச் சொல்லுங்கள்."

ஐயர் அரசர்களை நோக்கி, "அரசர்களே! எழுந்து ஓடிவிடுங்கள். இங்கு நிற்காதீர்கள்" என்றதும் அரசர்கள் சென்றுவிட்டார்கள். பிறகு ஐயர் தாமரையைக் கூட்டிக்கொண்டு அரண்மனைக்குச் சென்றார். இருவரும் அரண்மனையைச் சுற்றிப் பார்த்துக்கொண்டு ரேணிப்பட்டகசாலைக்கு வரும்போது பதினான்கு குழந்தைகளுக்கும் துணியைப் போட்டு மூடியிருந்தது.

தாமரை - "ஐயரே! இது என்ன, துணியைப் போட்டு மூடியிருக்கிறது?"

ஐயர் - "ஆத்தா! நீங்கள் தெய்வசபையை நினைத்துச் சாபம் விடும்போது பதினான்கு குழந்தைகளும் செல்லு மடிந்தது போல் சேர மடிந்துவிட்டது."

என்றதும் தாமரைக்குக் கோபம் வந்து, "ஏது ஐயரே! அதிகப் பிரசங்கம் பேசுகிறீர்? நானா சாபம்விட்டுக் குழந்தையைக் கொன்றேன்? காலம் முடிவாகி இறந்துவிட்டது. அதற்கு நான் என்ன செய்வது?" என்றாள்.

ஐயர் - "ஆத்தா! தாங்கள்தான் இந்தக் குழந்தைகளை எழுப்பித்தர வேண்டும்."

(small camphor) flame (he had used). Then, referring to the men at her feet, he said, "Why have these kings come here and fallen at your feet?" and having said this took the plate with the camphor flame back inside. Hearing this Tāmarai said, "Oh Brahman! Who has come? Are you speaking to yourself?'

Brahman: "Lady! Your two elder brothers have come and are at your feet. Turn around and look down."

Tāmarai: "The villains! What have they come here for? Who said that I would be here? Oh Brahman. You must have gone and told them! After having sent a man to beat me, I will not look upon their faces as long as I live."

Kāḷi: "Woman, Tāmarai! Forgive your elder brothers their mistake. Having come such a long way, you must not leave without seeing the house where you were born! Go and see the palace and return, woman."

Tāmarai: "Oh Goddess. For your sake I will go. Oh Brahman. I won't look at their faces. Tell them to get up and run off," she said.

Brahman: The Brahman looked at the Kings and said, "Oh Kings! Get up and run off. Don't stay here."

The Kings left. Then the Brahman accompanied Tāmarai to the palace. As they circled the palace and approached the courtyard where the public assembles (they saw) the fourteen children (laid out) and covered with a cloth.

Tāmarai: "Oh Brahman. What is this (laid out) and covered with cloth?"

Brahman: "Lady. When you thought of the god's counsel-meeting and formulated a curse the fourteen children all died, all together.

Hearing this Tāmarai became angry.

Tāmarai: "Oh Brahman! You give me a speech about that? I killed the children with a curse? They died when their time was finished. What can I do about that?"

Brahman: "Lady. You must revive these children."

தாமரை - "ஐயரே! என்ன விளையாடுகிறீர்! நான் ஈசுவரனா, குழந்தைகளை எழுப்புவதற்கு?"

ஐயர் - "ஆத்தா! நீங்கள் ஈசுவரன் சிருஷ்டியில் பிறந்தவர்கள். தாங்கள் மனம் வைத்தால் எழுப்பமுடியும்."

தாமரை - "சரி! அப்படி நான் எழுப்பிவிட்டால் என்னுடைய உரிமைப் பெண்ணை இப்போதே எனக்குக் கொடுக்கவேண்டும்."

ஐயர் - "ஆத்தா! தங்கள் இஷ்டம்போல் பெண்ணை இப்போதே கூட்டிச் செல்லுங்கள்."

தாமரை "சரி" என்று, கங்கை சென்று நீராடி ஜலமூலை பார்சமாக மண்டியிட்டு உட்கார்ந்து தெய்வசபையை நினைத்து மண்பிடித்துப் போட்ட மாயவனே! உருபிடித்துப்போட்ட உடையாளி! நான் தெய்வசபையில் பிறந்தது மெய்யானால்,

செப்பூசி, செஞ்சரடு சேர வரம்தர வேண்டும்
பொன்ஊசி, பொன்சரடு பொருத வரம்தர வேண்டும்
தங்களுடைய புண்ணியத்தில் குழந்தைகளை எழுப்ப
எனக்கு அருள்புரிய வேண்டும் காஞ்சிநாதா!"

என்று தாமரை மாயவரை நினைக்கும்போது மாயவர் தெய்வசபை சென்று பொன்பிரம்பை எடுத்துப் பூலோகத்திற்கு விடுத்தார். பொன் பிரம்பு வாளவந்தி நாடு நோக்கிப் புறப்பட்டது.

(பாட்டு) தெய்வசபை விட்டுமங்கே விட்டுமங்கே
பூலோகம் வருகுதுபார் பொன் பிரம்பு
ஆயருட கிருபையாலே கிருபையாலே
அச்சினமே வருகுதுபார் பொன்பிரம்பு
வாளவந்தி நாடுதேடி நாடுதேடி
வருகுதுபார் சாமியுட பொன்பிரம்பு

தாமரை பொன் பிரம்பு வருவதைப் பார்த்து இரண்டு கையையும் ஏந்திப் பிரம்பைப் பிடித்து ஒரு சொம்பு தண்ணீர் எடுத்துக்கொண்டு அரண்மனை வந்து, சொம்பில் கொண்டுவந்த தண்ணீரைக் குழந்தைகள்மேல் தெளித்து மாயவரை நினைத்துப் பொன்பிரம்பால் தட்டினாள். குழந்தைகள் தூங்கி எழுவதுபோல் பதினான்கு குழந்தைகளும் உயிர்வந்து, குழந்தைகள் எழுந்து கண்ணைத் துடைத்துக்கொண்டு தாமரையைக் கண்டு, "அத்தை, கும்பிடு வாங்கிக் கொள்ளுங்கள்" என்று பதினான்கு குழந்தைகளும் கும்பிட்டன. பின் தாமரை மரிக்கொழுந்தாக் கவுண்டர் மகள் வள்ளியாத்தாளையும் சிவக் கொழுந்தாக் கவுண்டர் மகள் பொன்னாத்தாளையும்,

Tāmarai: "Oh Brahman! What game are you playing? Am I Siva, that I can revive these children?"

Brahman: "Lady. You were born of Siva's creative power. If you put your heart in it you can revive them."

Tāmarai: "All right. If I revive them then I must be given the rightful daughter-in-law now."[1]

Brahman: "Lady. If you wish, take her with you now."

Tāmarai said, "All right," and went to the well, bathed, bowed to the northeast, sat down and thinking of the god's counsel-chamber said, "Oh Vishnu, creator of earth! Oh ruler who shaped the world. If it is true that I was born in the god's counsel-meeting, then

A red needle, red yarn, give me this combined boon
A gold needle, gold yarn,[2] give me these as boons
Give me the grace to enable me, with your mercy,
To revive these children, oh Lord of Kanjeepuram!

As Tāmarai thought of Vishnu he went to the god's counsel-meeting, took a gold wand and sent it to earth. The gold wand turned towards The Country of Vāḷavanti and set off.

Song: Leaving the god's counsel-chamber, leaving it there
See the gold wand coming to earth
With Krishna's grace, his grace
See the gold wand coming, at this moment
Searching for The Country of Vāḷavanti, searching
See it coming, the gold wand of God.

Tāmarai saw the gold wand coming. She extended her two hands and grabbed it. Taking a small pot of water she arrived at the palace. She sprinkled the water brought in the pot on the children and thought of Vishnu. She touched the children with the gold wand and all fourteen children, as if awaking from a sleep, had their life return, rubbed their eyes, and on seeing Tāmarai they said, "Take our respects (please)," and (then) they paid their respects to Maṇikkoḷūntā Kavuṇṭar's daughter Vaḷḷiyāttāḷ, and Civakkoḷūntā Kavuṇṭar's daughter Poṉṉāttāḷ.

---

1 A sister has a right to demand that her brother's daughter marry her son. 2 To "sew" here seems to be an image of "connecting" and hence bringing the lifeless body and the soul back together.

(பாட்டு) எட்டிநல்லோ பத்தினி மயிர்பிடித்து
இழுக்குறாளே தாமரை இரண்டுபெண்ணைத்
தாவிநல்லோ தாமரை மயிர்பிடித்துத்
தனிச்சு இழுத்தாள் பத்தினி இரண்டுபேரை

ஐயர் - "ஆத்தா! தாமரை! இப்போதே ஏன் குழந்தைகளைப் பிடித்து இழுக்கிறீர்கள்?"

தாமரை - "அடே, பாப்பானே! முன் நீ என்ன சொன்னாய். இப்போது என்ன சொல்கிறாய்? இனி ஏதாவது பேசினால் உன் உயிர் எமலோகம் போய்விடும் ஜாக்கிரதை."

ஐயர் - "ஆத்தா! கோபப்படாதீர்கள். நான் எதற்குச் சொல்கிறேன் என்றால் தங்கள் மைந்தர்கள் வந்த காலத்தில் கூட்டிப் போகலாமென்று சொன்னேன். சரி உங்கள் இஷ்டப்படிச் செய்யுங்கள்"

என்றதும் தாமரை இரண்டு பெண்ணையும் பிடித்து இழுத்துக்கொண்டு வெளியில் வரும் போது தலையாரி வாசலில் நின்று கொண்டிருந்தான். அவனையும் கூட்டிக்கொண்டு பிள்ளையார் கோவிலுக்குப் போய், "அடே, தலையாரி சீக்கிரம் போய்க் கொத்தர்களைக் கூட்டிக்கொண்டு வா" என்றாள். தலையாரி "நல்லது" என்று கொத்தர்களைப் போய்க் கூட்டிவந்தான். கொத்தர்கள் வந்து தாமரையைக் கண்டு நமஸ்காரம் செய்தார்கள்.

தாமரை - "அப்பா கொத்தர்களே! முன் அடித்துவைத்த கல்லை எடுத்து அப்படியே குப்புறப் போடுங்கள்."

கொத்தர் - "ஆத்தா! அப்படியே போட்டுவிட்டோம்."

தாமரை - "சரி கொத்தர்களே! நீங்கள் போங்கள்"

என்று சொல்லிவிட்டு இரண்டு பெண்களையும் கல்லின்மேல் நிறுத்தித் தெய்வசபையை நினைத்து மாயவரை நினைத்து, "நான் தெய்வசபையில் பிறந்தது உண்மையானால் இந்தப் பெண்(கள்) இரண்டும் கல்சிலையாக மாறவேண்டும், காஞ்சிநாதா! நான் தேடும் மைந்தன் வந்த காலத்தில் எனக்குத் தாங்கள் இதே பிள்ளையார் கோவிலில் வைத்துத் திருமணம் செய்து வைத்தீர்கள். அதுபோல் என் மைந்தர் வருங்காலத்தில் இதே பிள்ளையார் கோவிலில் வைத்துத் திருமணம் செய்து கூட்டிப் போகிறேன். அதுவரை இந்தப் பெண்கள் கல்சிலையாக அப்படியே நிற்கவேண்டும் காஞ்சிநாதா" என்று தாமரை மாயவரை நினைக்கும்போது பெண்கள் இரண்டும் கல்சிலையாக மாறியது. முன்போல் கதண்டுகளையும் வண்டுகளையும் பெண்கள் சிலைக்குக் காவல் வைத்துவிட்டுச் சேவகரைக் கூட்டிக்கொண்டு பொன்னி வளநாடு புறப்பட்டார்கள்.

Song: The two chaste girls, she pulled their hair
The two girls, Tāmarai tugged at them
She caught a good hold on the hair, Tāmarai (did)
By herself, she grabbed the two chaste girls

Brahman: "Lady, Tāmarai! Why do you now grab and tug at the children?'

Tāmarai: "Oh you Brahman.[1] What did you say, previously? And what do you say now? Be careful! If you say anything more your life will (leave you and) ascend to the world above."

Brahman: "Lady! Dont be angry. What would I speak for ? I said you might take them when you had sons. O.K. Do as you like."

Tāmarai took two girls and dragged them along. As they came outside the watchman was standing at the door. She took him, went to the Pilliar temple (and said), "Oh watchman! Go quickly and bring the stone masons here." The watchman said 'good' and went and brought back the stone masons. When the stone masons arrived and saw Tāmarai they paid their respects.

Tāmarai: "Men, oh stone masons! Lift up the stone you inscribed earlier and lay if face down (on the earth)."

Stone Masons: "Lady! We have done it."

Tāmarai: "All right oh stone masons. You may go!" Then she stood the two girls on the stone and thought of Vishnu in the god's counsel-chamber. "If it is true that I was born in the god's counsel-meeting, then these two girls must turn to stone, oh Lord of Kanjeepuram! I will look (for them) when my sons have come. You married me here in this Pilliar temple. In the same way, when I have sons I will bring them to this Pilliar temple to be married. Until that time, these girls must remain here like stone statues, Lord of Kanjeepuram." As Tāmarai thought of Vishnu the two girls changed into stone.

As before, she brought black beetles and wasps to stand guard over the girls' statues. Then she took the servants and set off for The Country Where The Kāveri Flows.

---

1 The term used is Pāpan, a disrespectful way to refer to a person of the Brahman caste. In the next sentence, nī, the disrespectful form of "you" is also used.

(பாட்டு) வாளவந்தி நாடுவிட்டு நாடுவிட்டுப்
பொன்னிவள நாடுவாறார் நாடுவாறார்
சேவகரைப் பின் நடத்திப் பின் நடத்தி
அருங்கிளியாள் முன்துடர்ந்தாள் முன்துடர்ந்தாள்

தாமரையும் சேவகர்களும் பொன்னி வளநாடு வந்து சேர்ந்தார்கள்.

தாமரை - "சேவகரே! அங்கு நடந்த சமாச்சாரங்களை இங்கு யாரிடமும் சொல்லவேண்டாம்."

சேவகர் - "ஆத்தா! நல்லது"

என்று எல்லோரும் அரண்மனைக்கு வந்து சேர்ந்தார்கள். தாமரை அரண்மனை வந்ததும் மாதர்களை நோக்கி, "அரசர் எங்கே?" என்று கேட்டாள்.

மாதர் - "ஆத்தா! இப்போதுதான் சாப்பிட்டுவிட்டு அரசர் பஞ்சணைக்குப் படுக்கச் சென்றுவிட்டார்."

தாமரை - "சரி! எனக்கு நடந்து வந்தது கொஞ்சம் களைப்பாய் இருக்கிறது. கொஞ்சநேரம் படுத்திருந்து அதன்மேல் அரசரைப் போய்ப் பார்க்கலாம்"

என்று ரேணிப்பட்டகசாலை சென்று போர்வையைப் போர்த்திப் படுத்துக்கொண்டாள். தாமரை போய்ப் படுத்த சிறிது நேரம் கழித்து குன்னுடையா ராஜர் நித்திரை முடிந்து எழுந்து வந்து, "அடி, குப்பி! தாமரை வந்துவிட்டாளா? இன்னும் இல்லையா?" என்று கேட்டார்.

மாதர் - "சாமி! வந்துவிட்டார்கள். நடந்து வந்து களைப்பாய் இருக்கிறது என்று ரேணிப்பட்டக சாலையில் படுத்து இருக்கிறார்கள்."

குன்னுடையாசாமி "சரி" என்று ரேணிப்பட்டக சாலைக்குச் சென்று பார்க்கும்போது தாமரை உடம்பு தெரியாமல் போர்த்திப் படுத்திருந்தாள்.

குன்னுடையா - "பெண்ணே, தாமரை! ஏன் போர்த்திப் படுத்துக்கொண்டாய்?"

தாமரை - "நாதா! நடந்து வந்ததால் களைப்பாய் இருக்கிறது. சிறிதுநேரம் படுத்திருந்து அதன்மேல் வந்து தங்களைப் பார்க்கலாமென்று வந்து படுத்துக் கொண்டேன்."

குன்னுடையா - "பெண்ணே! நீ பிறந்தவன் வீட்டுக்குச் சென்றதற்கு உபசரணை இல்லாமல் அபசரணை நடந்திருக்கும் போலத் தெரிகிறது. அதனால்தான் வந்ததும் என்னிடம் கூட வராமல் படுத்துக் கொண்டாய். அதனால் எனக்குச் சந்தேகமாய் இருக்கிறது. மேல் சீலையை எடு பார்க்கலாம்."

Song: Leaving The Country Called Vāḷavanti, leaving that country
Approaching The Country Where The Kāveri Flows, approaching that country
The servants walked behind, walked behind
The rare parrot walked ahead, walked ahead

Tāmarai and the servants arrived in The Country Where The Kāveri Flows.

Tāmarai: "Oh servants! You must not tell anyone here about the things that happened there."

Servants: "Lady. Good," they said and they all arrived at the palace.

Tāmarai, having arrived, looked at the maid and asked, "Where is the King?"

Maids: "Lady. He has just finished eating and has gone to lie down on the cotton mattress."

Tāmarai: "Good. I am a little tired from the walk. I will sleep awhile and then go and see the King," she said, went to the courtyard where the public assembles, pulled her sari over herself and slept.

After Tāmarai had slept a little King Kuṉṉuṭaiyā finished his nap and got up.

Kuṉṉuṭaiyā: "Oh Maid! Has Tāmarai come back yet or not?

Maid: "Lord! She has returned. She said she was tired from walking and is sleeping in the courtyard where the public assembles."

Kuṉṉuṭaiyā said, "O.K." and as he went to the courtyard where the public assembles to see he found Tāmarai's sleeping body, hidden by her sari.

Kuṉṉuṭaiyā: "Oh woman! Tāmarai why have you covered yourself up?"

Tāmarai: 'Husband! I am tired from the walk. Thinking I would sleep a little and then come to see you, I came here and lay down."

Kuṉṉuṭaiyā: "Oh woman! When you went to your brother's house you were not welcomed and were treated disrespectfully, it seems. This is why when you returned you slept without even coming to (see) me. Therefore, I have my doubts. Take off your sari and let me see."

தாமரை - "நாதா! வெய்யிலில் அதிகம் நடந்ததினால் உடம்பெல்லாம் வெய்யக்கொப்பளம். மேல் சீலையை எடுத்தால் நீர் வடியும் நாதா!"

குன்னுடையா - "பெண்ணே! உன் தந்திரம் எனக்குத் தெரியும். அதெல்லாம் என்னிடம் சொல்லவேண்டாம்"

என்று அருகில்சென்று மேல்சீலையை எடுத்துப் பார்த்தார். பார்க்கும்போது சாட்டைத்துளிர் பட்டு சரீரமே ரத்தமயமாக இருந்தது. "அடி சண்டாளி, சதிகாரி! என் பேச்சைக் கேளாமல் நீ பிறந்தவன் வீட்டுக்குப்போய் இப்படி அவமானப்பட்டு வந்தாயே! எனக்கும் கெட்ட பெயர் உண்டாக்கிவிட்டாயே! எந்தக்காலத்திலும் எனக்கு இந்தப் பெயர் மறையாது. இனி என் முகத்தில் நீ விழிக்கக்கூடாது. ஒரு நிமிடம் அரண்மனையிலும் இருக்கக்கூடாது. ஓடிப்போய்விடு" என்று சொல்லிவிட்டுக் கோபத்துடன் பஞ்சணைக்குச் சென்றுவிட்டார்.

குன்னுடையாசாமி சென்றபின், "நம் உயிரை இனி வைத்திருக்கக்கூடாது" என்று நினைத்துச் சேவகனைக் கூப்பிட்டு, "தங்க வளநாடு சென்று கொத்தர்களைக் கூட்டிவா" என்றாள். சேவகர் "அப்படியே, நல்லது" என்று புறப்பட்டார்கள்.

(பாட்டு) அப்படியே என் சாமி நல்லதென்று
அன்புடனே சேவகர் போகிறாரே
பாரிவில்லை என்னாத்தாச் சேவகனும்
வெள்ளிவெடி என்சாமி ஆளுகளும்
ஓட்டம் ஓட்டம் பருநடையா
ஒருவிரைவாய் என்சாமி வருகிறாரே

சேவகர் தங்க வளநாடு வந்து பிள்ளையார் கோவிலில் நின்று, கொத்தர்களைக் கூப்பிட்டார்கள். கொத்தர்கள் வந்து, "என்ன சமாச்சாரம்?" என்று கேட்டார்கள்.

சேவகர் - "அப்பா! கொத்தர்களே! பொன்னி வளநாட்டில் பெரியவீட்டு ஆத்தா ஆயிரம் வீட்டுக் கொத்தர்களையும் கூட்டி வரச் சொன்னார்கள்."

"நல்லது" என்று கொத்தர்கள் ஆயிரம்பேரும் புறப்பட்டுப் பொன்னி வளநாடு வந்து தாமரையை நமஸ்கரித்தார்கள்.

Tāmarai: "Husband! I walked too far in the sun. My body is blistered. If I remove my sari the plasma will ooze, husband!"

Kunnuṭaiyā: "Oh woman! I know your tricks. You must not say all that to me," he said, approached her and lifted her sari to see. There were whip marks and the body was bloody. "Oh the villains! The liars! Not listening to my words you went to your brother's house. Having seen their (true) character you return? I have acquired a bad name. This name will never fade, at any time. From now on you must not see my face. You must not remain in the palace for (one) minute. Run, be gone!" he said and angrily went to his mattress.

After Kunnuṭaiyā left Tāmarai thought, " I must not live any longer" and she sent for a servant and asked him to call the stone masons of The Country of Prosperity. The servant said "Good" and set off.

Song:
Like that, my Lord, saying it is good
The loving servant is coming
The badge-wearing servant, my God
Shining like silver, my Lord, such a man
Running, running, look at the steps
He is coming with great speed, my Lord

The servant arrived in The Country of Prosperity, stood at the Pilliar temple and called the stone masons. The stone masons arrived and asked "What's the news?"

Servant: "Men, stone masons! The lady of the biggest house of The Country Where the Kāveri Flows has ordered the stone masons of the thousand houses to come."

The stone masons said "Good" and the thousand men set off. Arriving in The Country Where The Kāveri Flows they saw Tāmarai and paid their respects.

தாமரை - "கொத்தர்களே! மங்களம் உண்டாகட்டும்! அப்பா, கொத்தர்களே! நம் செல்லாத்தாக் கோவில்முன் அறுபது அடி உயரத்தில் அறுபது படிவைத்துச் சதுரம்[1] கட்ட வேண்டும். பதினைந்து நாட்களுக்குள் வேலை முடிந்துவிடவேண்டும்."

கொத்தர் - "ஆத்தா! அப்படியே, நல்லது."

தாமரை - "அடி, குப்பி! ஒரு வள்ளம் முத்து கொண்டுவந்து கொத்தர்களுக்கு வெற்றிலைபாக்கு வைத்துக்கொடு."

குப்பி - "ஆத்தா! அப்படியே கொடுத்துவிட்டேன்."

தாமரை - "சரி, கொத்தர்களே! திங்கள்கிழமையிலிருந்து வேலையை ஆரம்பம் செய்யுங்கள்."

கொத்தர் - "ஆத்தா! நல்லது"

என்று திங்கள் கிழமை வேலையை ஆரம்பித்தார்கள்.

(பாட்டு) இந்தப் பிரகாரம் இனிப் பிரகாரம்
நடக்குதுபார் தாமரையின் அதிகாரம்
அப்படியே நல்லதென்று இனி நல்லதென்று
அன்புடனே நடக்குது பார்
அங்கு நடக்குது பார்

அன்னக்கொடி தாமரை, அறிவுள்ள தேவி, "மண் பிடித்துப்போட்ட மாயவனே! உருபிடித்துப் போட்ட உடையாளி! தங்கள் கிருபையில் பதினைந்து நாளைக்குள் அறுபது அடி சதுரத்தைச் சீக்கிரம் முடித்துக் கொடுக்கவேண்டும் காஞ்சிநாதா!" என்றாள். இதை மாயவர் பார்த்து, "அடி சண்டாளி! புருஷன் சொல் கேளாமல் போய் அவமானப்பட்டு வந்து இப்போது உயிரை மாய்க்கத் துணிந்துவிட்டாளே" என்று மாயவர் வந்து ஒருவருக்கும் தெரியாமல் ஆயிரம் கொத்தரும் ஆயிரம் கல் வைத்தால் மாயவர் அந்தரமாக ஆயிரம் கல் எடுத்து வைத்தார். இப்படியாகச் சதுரவேலை நடந்துகொண்டு இருக்கும்போது மறுநாள் குன்னுடையா ராஜன் செல்லாத்தாக் கோவிலுக்குப் போய்ப் பூஜை முடித்துக்கொண்டு வரும்போது கொத்தரிடம் வந்து பார்க்கும்போது கொத்தர்கள் அரசரைக்கண்டு நமஸ்காரம் செய்தார்கள்.

அரசர் - "அப்பா, கொத்தர்களே! மங்களம் உண்டாகட்டும்! இந்தக் கட்டிடம் யார் கட்டச் சொன்னது?"

கொத்தர் - "சாமி! நம் ஆத்தா அவர்கள்தான் அறுபது அடி சதுரம் ஒன்று கட்டச் சொன்னார்கள்."

---

1. உயிர் விடுவதற்காக அமைக்கப்பட்ட மேடை

Tāmarai: "Oh stone masons! Blessings to you! Men, stone masons! You must build (a structure) sixty feet high, with sixty steps leading up to it, on a square base, in front of our Cellāttā temple. The work must be completed within fifteen days."

Stone Masons: "Lady, that is good."

Tāmarai: "Oh maid! Bring a vaḷḷam measure of pearls, betel and areca nut for the stone masons."

Maid: "Lady. I have given it to them."

Tāmarai: "O.K. stone masons! Begin the work on Monday."

Stone Masons: "Lady, good," they said and began to work on Monday.

Song:
At this time, this sweet time
See Tāmarai rule thus
It was said to be good, said to be good
See how it was done with love
See what is happening there

Tāmarai: Tāmarai, the fine creeper vine, the all-knowing goddess (said): "Oh Vishnu, creator of earth! Oh ruler who shaped the world. With your grace you must finish a sixty-foot high square-tower quickly, within fifteen days, oh Lord of Kanjeepuram!"

Vishnu, seeing this, thought "oh, the villain! Having gone without listening to her husband, having seen their (true) character and returned, she has decided to kill herself." Vishnu came, and unknown to anyone he placed a thousand stones for every thousand stones the thousand stone masons laid. The following day, as the work proceeded, King Kuṉṉuṭaiyā returned from doing pūjā at the Cellāttā temple, and saw the stone masons.

The stone masons saw the King and paid him their respects.

King: "Men, stone masons! Blessings to you! Who told you to build this structure?"

Stone Masons: "Lord! It was our lady who told us to built a sixty-foot square tower."

அரசர் - "ஓகோ! அப்படியா, நல்லது" என்று வீட்டுக்குச் சென்றார்.

(பாட்டு) அப்படியே நல்லதென்று இனி
அன்புடனே நடக்குது பார்
நாளொரு நாள் பொழுதொரு நாள்
நடக்குது பார் நல்பருவம்
மாயருட கிருபையாலே
வளருதுபார் சதுரமது

இந்தப் பிரகாரம் பொன்னி வளநாட்டில் சதுரவேலை நடந்தது.

தாமரை - "அடே! பாரிவில்லை சேவகா! சீக்கிரம் தங்க வளநாடு சென்று ஆசாரிகளைக் கூட்டிவாருங்கள்."

"ஆத்தா நல்லது" என்று சேவகன் புறப்பட்டான்.

(பாட்டு) பாரிவில்லை என்னாத்தாச் சேவகனும்
வெள்ளிவெடி என்சாமி ஆளுகளும்
பொன்னிவள என்னாத்தா நாடுவிட்டுத்
தங்கவளநாடு என்சாமி நாடுதேடி
வருகிறாரே என்சாமி சேவகரும்

சேவகர் தங்க வளநாடு வந்து ஆசாரிகளைக் கூப்பிட்டு, "பொன்னி வளநாட்டுப் பெரியவீட்டு ஆத்தா உங்களைக் கூட்டிவரச் சொன்னார்கள்" என்றார்.

ஆசாரி, "நல்லது! இதோ வருகிறோம்" என்று சாமான்களை எடுத்துக் கொண்டு புறப்பட்டார்கள்.

ஆசாரிகள் பொன்னி வளநாடு வந்து தாமரையைக் கண்டு அட்டம் பணிந்து ஆளடிமை செய்தார்கள்.

தாமரை - "அப்பா, ஆசாரிகளே! மங்களம் உண்டாகட்டும்! ஆசாரிகளே! செல்லாத்தாக் கோவிலின் முன் அறுபது அடி சதுரம் கட்டுகிறார்கள். அதைச் சுற்றிலும் வசிகளையும் ஈட்டிகளையும் நாட்டிவிடுங்கள்."

ஆசாரிகள், "ஆத்தா! அப்படியே நல்லது" என்று வேலையை ஆரம்பித்து இரண்டு நாளில் வேலையை முடித்தார்கள். பின் ஆசாரிகள் விடைபெற்றுத் தங்க வளநாடு சென்ற பின் பதினைந்து நாட்களுக்குள் சதுரவேலையை முடித்துக் கொத்தர்கள் அரண்மனைக்கு வந்தார்கள். தாமரையைக் கண்டு, "ஆத்தா! சதுரவேலை முடிந்துவிட்டது. நாங்கள் போய்வருகிறோம்" என்றார்கள்.

தாமரை - "சரி, நல்லது! போய்வாருங்கள்."

King: "Oh ho! Is that so. Good!", he said and returned to the house.

Song: It was said to be good
See how it was done with love
Day after day, time followed time
See what is happening, the good that was done
With Vishnu's grace
See the square tower grow

At this time the work of building the square tower was continuing in The Country Where The Kāveri Flows.

Tāmarai: "Oh badge-wearing servant! Go quickly to The Country of Prosperity and bring the artisans."

Servant: "Lady, good," said the servant and set off.

Song: The badge-wearing servant, my Lord
Shining like silver, my God, such a man
Leaving The Country Where The Kāveri Flows, my Lord
Searching, my God, for The Country of Prosperity
My Lord, the servant is approaching

The servant arrived in the country of Prosperity and called the artisans.

Servant: "The lady of the biggest house of The Country Where The Kāveri Flows has told me to fetch you," he said.

Artisans: "Good. Right away, we will come!" they said, picked up their tools and set off.

The artisans reached The Country Where The Kāveri Flows, and on seeing Tāmarai, fell at her feet and offered their services to her.

Tāmarai: "Men, artisans! Blessings to you! A sixty foot square tower has been built in front of the Cellāttā temple. You are to embed pointed (metal) stakes and (metal) spear heads all around its circumference."

Artisans: "Lady. That is good," they said and started to work. They finished within two days. Afterwards the artisans took leave and returned to The Country of Prosperity. The stone masons finished the building of the square-tower within fifteen days and came to the palace. Seeing Tāmarai they said, "We have finished the square tower. We will go."

Tāmarai: "O.K., good. You may go." The stone masons took their leave and returned home, and later,

கொத்தர்கள் விடைபெற்று ஊருக்குச் சென்றபின்,

குன்னுடையா - "அடி, குப்பி! இங்கே வா! நம் செல்லாத்தாள் கோவில்முன் தாமரை அறுபது அடி சதுக்கம் கட்டச்சொன்னாளே? எதற்கு உனக்குத் தெரியுமா?"

குப்பி - "சாமி! ஆத்தா ஊரிலிருந்து வந்ததும் தாங்கள், "என் வார்த்தையை மீறிப்போய் அவமானப்பட்டு வந்தாய். இனி என் முகத்தில் விழிக்கக்கூடாது. அரண்மனையிலும் இருக்கக் கூடாது" என்று தாங்கள் சண்டை பிடித்தீர்களாம். "கணவர் இந்தமாதிரி சொல்லிவிட்டார். இனி நாம் உயிரை வைத்திருக்கக் கூடாது" என்று அறுபது அடி சதுரம் கட்டச்சொல்லி அதன்மேல் ஏறிக் கீழே விழுந்து உயிரை விடுவதற்குக் கட்டச் சொல்லியிருக்கிறார்கள்."

குன்னுடையா - "சரி, நல்லது!"என்று பஞ்சணைக்குச் சென்றார்.

அன்னக்கொடி தாமரை, அறிவுள்ள தேவி, திங்கள்கிழமை சிவன் பிறந்தநாள், வெள்ளி உதிக்குமுன் வெண்கோழி கூவுமுன் எழுந்து செல்லாத்தாக் கோவிலுக்குச் சென்று அருபூஜை, குருபூஜை, ஐம்பத்தி எட்டு லிங்கம் பூஜையும் சரியாக முடித்துச் சதுரத்தை ஏழுதரம் சுற்றிவந்து சதுரத்தின் படிவாசலில் நின்று, "அகிலாண்ட கோடி பிரம்மாண்ட நாயகா! சங்குச் சக்கரா! வைகுந்த வாசகா! ஆபத்பாந்தவா! அனாதரட்சகா! பரந்தாமா! நான் அறுபது அடி சவுக்கத்தின் மேல் ஏறிக் கீழே சாய்ந்ததும் என் கால் வேறு, கை வேறு, சிரசு வேறாய்ப் போக வேணும் காஞ்சிநாதா!"என்று,

(பாட்டு)

ஒன்றாம் படி பத்தினி ஏறியல்லோ
இரண்டாம் படி பத்தினி போய் நின்றாள்
இரண்டாம் படி தாமரை விட்டுமல்லோ
நான்காம் படி அன்னக்கொடி போய் நின்றாள்
நான்காம் படி பத்தினி விட்டுமல்லோ
ஆறாம் படி அன்னக்கொடி போய் நின்றாள்
ஆறாம் படி தாமரை தாண்டியல்லோ
எட்டாம் படி பத்தினி போய்நின்றாள்
எட்டாம் படி பத்தினி தாண்டியல்லோ
பத்தாம் படி தாமரை போய்நின்றாள்

இப்படியாக அறுபது படியையும் தாண்டிச் சதுரத்தின்மேல் ஏறிப்போய்ப் பார்க்கும் போது ஆகாயமும் பூமியும் ஒன்றாகக் கண்ணுக்குத் தெரிந்தது.

தாமரை - "பாலமலை ஜோசியா! பரமகுரு தன்னாசி!

ஏழை பரதேசி! எம்பெருமாள் மாயவனே!

Kunnuṭaiyā: "Oh maid! Come here. Did you know that Tāmarai has ordered a sixty foot square-tower built in front of the Cellāttā temple?"

Maid: "Lord! When the lady returned home, you started an argument with her, saying, 'Ignoring my words, you returned after having seen their (true) character. From now on you must not look upon my face and you must not enter the palace.' She then decided that since her husband had spoken in such a way, she must not continue to live. She has ordered a sixty foot high square tower built so that she can climb it, jump off and take her own life."

Kunnuṭaiyā: "O.K., good!" he said and returned to his cotton bed.

Tāmarai: The fine creeper vine, the all-knowing goddess, rose on Monday morning, the day of Siva's birth, before dawn and before the cocks crowed. She went to the Cellāttā temple and performed the God's pūjā, for the family deity, and the fifty-eight lingams pūjā. Having finished that she circled the square tower seven times. Then she stopped at the entrance to the steps. "Oh Lord of a crore of worlds in the universe. Oh he who holds a conch, and a discus. The one who lives in Vaikunta. One who rescues people in trouble, orphan-saver. Parantāmā! When I climb the sixty-foot square-tower and jump off, let my feet, hands and head become separated, oh Lord of Kanjeepuram!"

Song:
The chaste woman climbed the first step
On the second, the chaste woman paused
Then Tāmarai left the second step
The fine creeper vine then stood on the fourth step
Then the chaste woman left the fourth step
She arrived and paused on the sixth step, the fine
creeper vine
Then Tāmarai passed over the sixth step
The chaste woman came to rest on the eighth step
Then she passed over the eighth step, the chaste lady
And Tāmarai came to rest on the tenth step

In this way the sixty steps were climbed and on reaching the top of the square tower it seemed to the eyes as if heaven and earth had met.

Tāmarai: "Seer of Bāla mountain, supreme penitant
Poor pilgrim, my Perumal, my Vishnu

நான் கீழே விழுந்ததும் என் உயிர் போய்விட வேண்டும் காஞ்சிநாதா!"

இப்படி இருக்கும்போது பால்கடலில் மாயவர் பார்த்து, "தாமரை உயிரை மாய்க்க சதுரத்தில் ஏறிவிட்டாள். நாம் போய்க் காப்பாற்றவேண்டும்" என்று கருட வாகனமேறிக் கண்மூடி விழிப்பதற்குள் பொன்னி வளநாடு வந்து சேர்ந்தார். மாயவர் கொஞ்சதூரத்தில் ஜலமூலை பார்சமாக நின்று,

(பாட்டு) "இங்கே வாம்மா இங்கே வாம்மா தாமரை
மைந்தன் வரம் மைந்தன் வரம் வாங்கித்தாரேன்
குழந்தையில்லா அங்குப் பெண்களுக்குக்
குழந்தை வரம் நான் தருவேன்

தாமரை! நீ வரம்பில் ஏறி விழுந்து சாகவேண்டாம். கீழே இறங்கி வா."

தாமரை, "ஆகா! யாரோ குழந்தை வரம் வாங்கித் தருவதாகச் சொல்கிறார்கள். போய்ப் பார்ப்போம்" என்று கீழே இறங்கி ஓடிவந்து பார்க்கும்போது ஒருவரையும் காணவில்லை. "ஐயோ! யாரோ கூப்பிட்டார்கள். ஒருவரையும் காணவில்லை. பேயோ, பிசாசோ தெரியவில்லை" என்று மறுபடியும் சதுரத்தின்மேல் ஏறிக் கீழே சாயுமுன் மாயவர் கொன்றைங்கி மூலையில்[1] போய் நின்று மறுபடியும் கூப்பிட்டார்.

மாயவர் -

(பாட்டு) "இறங்கிவாம்மா அம்மா தாமரை
நான் மைந்தன் வரம் வாங்கித் தாரேன்
குழந்தையில்லா அங்குப் பெண்களுக்குக்
குழந்தைவரம் குழந்தைவரம் நான் தருவேன்"

தாமரை - "ஆகா! மறுபடியும் யாரோ இந்த மூலையில் கூப்பிடு கிறார்கள்"

என்று தாமரை இறங்கிவந்து ஓடிப் பார்த்தாள். ஒருவரையும் காணவில்லை. "யாரோ தெரியவில்லை? இந்தமாதிரி செய்கிறார்கள். வந்து பார்த்தால் ஒருவரையும் காணவில்லை" என்று மறுபடியும் சதுரத்தில் ஏறிச் சாயும்போது மாயவர் கல்லாவரத்து மூலையில்[2] போய் நின்று,

(பாட்டு) இங்கு வாம்மா தாமரையா தாமரையா
மைந்தன்வரம் மைந்தன்வரம் வாங்கித்தாரேன்
பிள்ளையில்லாப் பிள்ளையில்லாப் பெண்களுக்குப்
பிள்ளைவரம் நானுனக்கு வாங்கித்தாரேன்

---

1. அக்கினி மூலை, தென்கிழக்கு மூலை 2 தென்மேற்கு மூலை

When I fall down I must lose my life, oh Lord of Kanjeepuram!"

At the time Vishnu, of the milk sea, noticed. "Tāmarai is about to kill herself by jumping off a square tower she has climbed. I must go and protect her," he thought and he mounted his Garuda vehicle. Before an eye could wink he had arrived in The Country Where The Kāveri Flows. He stood at a distance, on the earth's northeast corner.

Vishnu's Song: Come here woman, come here Tāmarai
I will grant you a son, I will give you a son
The woman, there, without a son
I will give her the boon of a son

Tāmarai. You must not climb, fall and die a violent death. Climb down and come.

Tāmarai: "Ah ha! Who is saying they will grant the bôon of a child? Let's go and see," She thought. As she climbed down and came running to see, there was no one there. "Oh my! Who called? There is no one to be seen. Was there a ghost or an evil spirit, I don't know," She thought. After she climbed the square tower again, but before she jumped, Vishnu went to the Southeast corner (of the structure) and called again.

Vishnu's Song: Climb down and come woman, Tāmarai
I will grant you the boon of a son
To the woman there without a son
The boon of a child, the boon of a child, I will grant it

Tāmarai: "Oh ho! Who calls again, from that corner," She thought, and she climbed down and ran to see. There was no one to be seen. "Who it could be, I don't know. Who does this but when I come, cannot be seen?" So she climbed again and was about to jump when Vishnu went to the Southwest (of the structure) and stood.

Vishnu's Song: Come here woman, oh Tāmarai, oh Tāmarai
The boon of a son, the boon of a son, I will grant it to you
The childless one, the childless woman
The boon of a son, I will grant it

தாமரை - "ஆகா! யாரோ மறுபடியும் கல்லாவரத்து மூலையில் நின்று கூப்பிடுகிறார்"

என்று கீழே இறங்கிவந்து . ஓடிப்பார்க்கும்போது, ஒருவரையும் காணவில்லையென்று மறுபடியும் சதுரத்தில் ஏறிச் சாயும்போது மாயவர் கொடிக்கால் மூலையில்[1] நின்று கூப்பிட்டார்.

(பாட்டு) "இறங்கிவாம்மா அம்மா தாமரையா
மைந்தன்வரம் நானுனக்கு வாங்கித்தாரேன்
குழந்தையில்லா அம்மா பெண்களுக்குக்
குழந்தைவரம் இங்கு வாங்கித்தாரேன்"
மாயர் நல்லோ மாயர் பெருமாளும்
மாயமாக அங்குக் கூப்பிடுறாரே

தாமரை, "இது என்ன! பெரிய தொந்தரவாக இருக்கிறது. யாரோ கூப்பிடுகிறார்கள். போய்ப் பார்த்தால் ஒருவரும் இருப்பதில்லை" என்று மறுபடியும் கீழே இறங்கிவந்து ஓடிப் பார்க்கும்போது ஒருவரையும் காணவில்லை. "இது தேவருடைய மாய்கையாக[2] இருக்கும்" என்று மறுபடியும் சதுரத்தில் ஏறிக் கீழே சாயுமுன் மாயவர் செல்லாத்தாக் கோவில் வந்து செல்லாத்தாளுக்குப் பின் உட்கார்ந்து கூப்பிட்டார்.

(பாட்டு) "இங்குவாம்மா இங்குவாம்மா தாமரையா
மைந்தன்வரம் நானுனக்கு வாங்கித்தாரேன்
குழந்தையில்லா அம்மா பெண்களுக்குக்
குழந்தைவரம் தாமரை வாங்கித் தாரேன்

குழந்தையில்லாப் பெண்களுக்குக் குழந்தைவரம் நான் தருவேன். இறங்கி வாம்மா."

தாமரை, "யாரோ செல்லாத்தாக் கோவிலில் கூப்பிடுகிறார்கள்" என்று கீழே வந்து செல்லாத்தாக் கோவிலில் போய்ப் பார்க்கும்போது செல்லாத்தாளைத் தவிர கோவிலில் ஒருவரையும் காணவில்லை. "எல்லாம் செல்லாத்தா வேலைதான்" என்று மறுபடியும் ஓடிச் சதுரத்தில் ஏறிக் கீழே சாயுமுன்,

(பாட்டு) "இறங்கிவாம்மா அம்மா தாமரையா
மைந்தன்வரம் வாங்கித்தாரேன் வாருமம்மா
குழந்தையில்லாக் குழந்தையில்லாப் பெண்களுக்குக்
குழந்தைவரம் நானுனக்கு வாங்கித்தாரேன்
அரக்கர்களை அரக்கர்களை வேரறுத்த
அரிராம மாயவர் கூப்பிட்டாரே"

1. வடமேற்கு மூலை 2. மாயச்செயலாக

Tāmarai: "Oh ho! Who calls again from the South west corner?" She thought, and she climbed down and ran to see. But no one was there. Again she climbed the square tower and was ready to jump when Vishnu went to the northwest corner, stood there and called.

Vishnu's Song: Climb down and come woman,Tāmarai
The boon of a son, I will grant it
To the woman without a child, to that woman
The boon of a child, I will grant it here
Good Vishnu, Vishnu Perumāḷ
The one who calls there is Vishnu

Tāmarai: "What is this? It is a big nuisance. Who ever is calling, when I go to see there is no one there," she thought. She climbed down again, but when she ran to see no one was there. "This must be an illusion produced by the gods," she thought. Again she climbed the square tower and was ready to jump, when Vishnu came to the Cellāttā temple and sitting behind Cellāttā, called out:

Vishnu's Song: Come here woman, come here lady Tāmarai
The boon of a son, I will give you
To the woman without a child, to that woman
The boon of a child, Tāmarai, I will give it to you
To the woman without a child, the boon of a child
I will grant it, climb down and come, woman!

Tāmarai: "Who is it, calling from inside the Cellāttā temple?", she thought, and she climbed down and went into the Cellāttā temple to see. (But) except for Cellāttā there was no one to be seen. "This is all the work of Cellāttā," she thought and again she climbed the square-tower and was ready to jump when:

Vishnu's Song: Climb down and come woman, lady Tāmarai
The boon of a son, I will grant it, come woman
To the woman without a child, to that childless woman
He who uprooted the giants, the giants
Harirāma, Vishnu, it is he who calls

தாமரை, "ஆகா! மறுபடியும் யாரோ கூப்பிடுகிறார்கள்" என்று கீழே இறங்கி வருமுன் மாயவர் வடிவமெடுத்துப் பாடினார்.

(பாட்டு) நம்போ[1] நரைத்ததுபோல்
நாணலும் பூத்ததுபோல்
கொஞ்சம் நரைத்ததுபோல்
கோரையும் பூத்ததுபோல்
தும்ப[2] நரைத்ததுபோல்
தூதுவிலாம்[3] பூத்ததுபோல்
வாயிலே பல்லுமில்லை
வயிற்றிலே குடலுமில்லை
கண் இரண்டும் கீரைவிதை
காதிரண்டும் கேளாமல்
தொண்ணூறும் பத்துசென்ற
துவண்ட கிழவனைப்போல்
நானூறும் பத்தும் சென்ற
நரைத்த கிழவனைப்போல்
தோளுநரம்புகளும் தொங்குது கிழவனுக்குச்
செல்லரித்தப் பஞ்சாங்கம்
சாமியும் கையிலெடுத்து

மாயவர் பஞ்சைப்போல் பரதேசிபோல் வடிவமெடுத்துக் கோவிலில் ஆசனம் போட்டு அமர்ந்திருந்தார். தாமரை கீழிறங்கி ஓடிவந்து மாயவர் உட்கார்ந்திருப்பதைக் கண்ணில் பார்த்து, "பரந்தாமா! தாங்களா இவ்வளவு நேரம் என்னை ஏமாற்றினீர்கள்?" என்று மாயவரை நமஸ்கரித்து, "சுவாமி! இந்நேரம் என் உயிர்போய் என் உடலைக் காகம், கழுகு இவை எல்லாம் சாப்பிட்டிருக்குமே! அதற்கு விடாமல் என்னை, "இறங்கி வாம்மா, குழந்தை வரம் வாங்கித் தாரேன் என்று சொன்னீர்களே? எங்கே எனக்குக் குழந்தை வரம்?" என்றாள்.

மாயவர் - "தாமரை! நான் குழந்தை வரம் இல்லை என்பதற்குத்தான் வாய் தவறி வாங்கித் தாரேன் என்று சொல்லிவிட்டேன். நான் ஈசுவரனா? குழ்ந்தை வரம் உனக்குக் கொடுப்பதற்கு?"

தாமரை - "பரந்தாமா! உலகத்தை அழிப்பதும் நீங்கள். உண்டாக்குவதும் நீங்கள். தாங்கள் ஏன் வரம் கொடுக்கமுடியாது?"

மாயவர் - "தாமரை! நான் இங்கு எதுவும் சொல்லமுடியாது. நீ அரண்மனைக்குப் போ! நான் வந்து பஞ்சாங்கம் பார்த்துச் சொல்கிறேன்.

1. (நம்பு) - நாவல் 2. தும்பைப் பூ 3. தூதுவிளை

Tāmarai: "Oh ho! Again someone calls," she thought, but before she could climb down, Vishnu, in disguise, sang,

Vishnu's Song: I have grown gray, like nāṇal flowers[1]
I am a little gray, like flowering kōrai[2]
I am graying like a tumpai[3]
Like the flowers of tūtuvilām[4]
No teeth in (my) mouth
No entrails in (my) belly[5]
(My) eyes are like kīrai seeds[6]
(My) ears do not hear
Like a dried-up old man
Who is ninety plus ten
Like an old gray man
Who is four hundred plus ten
The skin and veins of the old man sag
This lord holds in his hands
A worm-eaten almanac

Vishnu took the disguise of an impoverished man, a wandering mendicant, and sat in the temple. Tāmarai climbed down, came running, saw Vishnu seated and looked in his eyes. "Oh heavenly one! Have you been deceiving me all this time?" she said and paid Vishnu her respects. "Lord. By this time I would have died. Crows and eagles would have eaten my body! Not allowing that, have you been calling me saying,"Climb down and come! I will grant you the boon of a child? Where is my boon-given infant?"

Vishnu: "Tāmarai! Instead of saying there is no child boon to give you, in my haste my tongue slipped and I said I would grant one. Am I Siva that I can grant you a child?"

Tāmarai: "Oh heavenly one! You are the world's all-knowing one. You are its destroyer as well as creator. Why can't you grant me a boon?"

Vishnu: "Tāmarai! I can't say anything here. You go to the palace. I will come and consult the almanac and tell you."

---

[1] Grass-type flowers with white tips. [2] A grass with white flowers. [3] A plant with very white flowers. [4] Another plant with very white flowers. [5] E.g., the stomach is concave. [6] A small, black seed, e.g., his eyes are narrowed with age so that only the pupils are visible.

தாமரை, "சுவாமி! நல்லது" என்று அரண்மனைக்குப் போகுமுன், மாயவர் சென்று ஆசனம் போட்டு அமர்ந்திருந்தார். தாமரை அரண்மனை வந்து சேர்ந்ததும்,

மாயவர் - "தாமரை! இந்த இடத்தில் சாணம்போட்டு வழித்துப் பிள்ளையார் பிடித்து வைத்துத் தேங்காய், பழம், வெற்றிலை பாக்கு, சொம்பில் தண்ணீர் எல்லாம் கொண்டுவந்து வை."

தாமரை - "சுவாமி! எல்லாம் வைத்துவிட்டேன்."

மாயவர் - "சரி, உன் நாதனைக் கூட்டிவா."

தாமரை, "நல்லது" என்று பஞ்சணைக்குச் சென்று, "நாதா! மாயவர் வந்திருக்கிறார், தங்களைக் கூப்பிடுகிறார். வாருங்கள்" என்றாள்.

குன்னுடையா - "பெண்ணே! இந்நேரம் நீ செத்திருப்பாய் என்று நினைத்தேன். இன்னும் இங்கு இருக்கிறாயே?"

தாமரை - "நாதா! இந்நேரம் நான் இறந்து காகம், கழுகு எல்லாம் சாப்பிட்டிருக்கும். அதற்குள் மாயவர் வந்து என்னைத் தடுத்துக் கூட்டிவந்துவிட்டார். சரி! சரி! உங்களைக் கூப்பிடுகிறார். எழுந்து வாருங்கள்."

குன்னுடையா ராஜர் சரி என்று எழுந்துவந்து மாயவரைக் கண்டு அட்டம் பணிந்து ஆளடிமை செய்தார்.

மாயவர் - "குன்னுடையாக் கவுண்டா! மங்களம் உண்டாகட்டும்! சுகமாய் இருக்கிறாயா?"

குன்னுடையா - "சுவாமி! தங்களுடைய புண்ணியத்தில் எதற்கும் குறைவில்லை."

மாயவர் - "சரி, நல்லது! போய்க் குளித்துக்கொண்டு வா."

குன்னுடையா - "சுவாமி! நல்லது"

என்று குன்னுடையா ராஜர் சென்று குளித்துக் கொண்டு வந்தார்.

மாயவர் - "குன்னுடையாக் கவுண்டா! அந்த இருப்பதிப்[1] பலகை மேல் உட்கார். தாமரை! காணிக்கை கொண்டுவந்து வை."

தாமரை - "சுவாமி! காணிக்கை எவ்வளவு?"

மாயவர் - "தாமரை! நாலு மூலைக்கும் நாலு லட்சம். நடுவில் ஒரு லட்சம்"

என்றதும் குன்னுடையாசாமி காதில் கேட்டு, "பெண்ணே! தாசன் காணிக்கை எவ்வளவு வைக்கச் சொல்கிறான்?" என்றார்.

---

1. இலுப்பை

Tāmarai: "Lord. Good," Tāmarai said, but before she could get to the palace Vishnu had already arrived and seated himself cross-legged. Then Tāmarai entered.

Vishnu: "Tāmarai! Spread cow dung on this place, form an image of Pilliar[1] and set it here. Bring some coconuts, bananas, betel leaf, areca nut and a pot of water."[2]

Tāmarai: "Lord! I have brought everything."

Vishnu: "O.K. Bring your husband (here)."

Tāmarai: Tāmarai said "Good" and went to his bedroom. "Husband! Vishnu has come. He is calling you. Come," she said.

Kuṉṉuṭaiyā: "Oh woman! I thought you would be dead by this time. Are you still here?"

Tāmarai: "Husband! I would be dead and crows and eagles would have devoured all by now, but before that (happened) Vishnu arrived, stopped me and brought me (here). O.K., O.K., he's calling you. Get up and come."

King Kuṉṉuṭaiyā said, "All right," got up, went, saw Vishnu, folded his arms and greeted him respectfully.

Vishnu: "Kuṉṉuṭaiyā Kavuṇṭar! Blessings to you! Are you in good health?"

Kuṉṉuṭaiyā: "Lord! With your blessings nothing has decreased."

Vishnu: "O.K. Good! Go bathe and return."

Kuṉṉuṭaiyā: "Lord. Good!" King Kuṉṉuṭaiyā said. He went to bathe and returned.

Vishnu: "Kuṉṉuṭaiyā Kavuṇṭar! Sit on that plank. Tāmarai, go bring the offerings."

Tāmarai: "Lord. What quantity of offerings?"

Vishnu: "Tāmarai! Four lakhs for the four corners, and one lakh for the center," he said.

Kuṉṉuṭaiyā, hearing this, (said), "Oh woman! What quantity of offerings did the mendicant say to bring?"

---

1 This is a tiny conical form made of cow dung. 2 The preparations described are standard for a pūjā to be performed at home.

தாமரை - "நாதா! நாலுமூலைக்கும் நாலு லட்சம், நடுவில் ஒரு லட்சம் வைக்கச் சொல்கிறார்."

தாமரை சொன்னதைக் கேட்டுக் குன்னுடையாசாமிக்குக் கோபம் வந்து, "நாலு மூலைக்கும் நாலு லட்சம், நடுவில் ஒரு லட்சம் வைத்தால் வீடு என்ன ஆவது? தாசன் பஞ்சாங்கமும் பார்க்கவேண்டாம். குழந்தையும் வேண்டாம். எழுந்து போகச்சொல்" என்றதும், மாயவருக்குச் சிரிப்பு வந்துவிட்டது.

தாமரை, "நாதா! தாங்கள் சம்பாதித்தது என்ன கெட்டுவிட்டது? எல்லாம் அவர் கொடுத்த பிச்சை" என்று, "அடி, குப்பி! நாலுமூலைக்கு நாலு லட்சம், நடுவில் ஒரு லட்சம் கொண்டுவந்து வை" என்றாள். குப்பி அப்படியே கொண்டுவந்து வைத்தாள்.

மாயவர் - "தாமரை! தேங்காயை உடைத்து வைத்துப் பிள்ளையாருக்குப் பூஜை செய்."

தாமரை பூஜை முடித்து மாயவருக்கும் குன்னுடையாசாமிக்கும் தீபாராதனை கொடுத்தாள். பின்பு மாயவர் பஞ்சாங்கத்தை எடுத்துப் பார்த்து அதிர்ஷ்ட வர்க்க ஏட்டை எடுத்துக் கையில் பிடித்து, "குன்னுடையாக் கவுண்டா! இந்தத் தங்கச்சரட்டை எடுத்து ஏட்டில் போடு பார்க்கலாம்" என்றார். குன்னுடையா சாமி அப்படியே எடுத்துப் போட்டார். மாயவர், "சரி, தங்கச்சரட்டைக் கொண்டா" என்று வாங்கிப் பையில் வைத்துவிட்டு, "தாமரை! அதிர்ஷ்டவர்க்க ஏட்டில் உள்ளபடிச் சொல்கிறேன் கேள்" என்றார்.

மாயவர் -

(பாட்டு) "இப்பிறப்பில் தாமரை மைந்தனில்லை
இனி இருபிறப்பில் தாமரையா குழந்தையில்லை
மூன்றாம்நல்லோ மூன்றாம் பிறப்பிலேதான்
மொய்குழலே உனக்குப் பிள்ளையில்லை
நான்காம்நல்லோ நான்காம் பிறப்பிலேதான்
நாயகியே உந்தனுக்கு மைந்தனில்லை
ஐந்துநல்லோ அன்னக்கொடி பிறப்பிலேதான்
அருங்கிளியே உந்தனுக்குக் குழந்தையில்லை
ஆறாம்நல்லோ தாமரை பிறப்பிலேதான்
அரிதியாக[1] உனக்கு மைந்தனில்லை
ஏழாம்நல்லோ தாமரை பிறப்பிலேதான்
குழந்தை இருக்குது இல்லையில்லை"

1. உறுதியாக

Tāmarai: "Husband! Four lakhs for the four corners and one lakh for the center."

Hearing what Tāmarai said Kuṉṉuṭaiyā became angry.

Kuṉṉuṭaiyā: "If we give four lakhs for the four corners and one lakh for the center what will become of our house? The mendicant is not to read the almanac. We do not want children. Tell him to get up and go," he said.

Vishnu began to smile.

Tāmarai: "Husband! What you have earned is still there. Everything has been given (to us) by (Vishnu) as alms. Oh maid! Bring four lakhs of offerings for the four corners and one lakh for the center."

The maid brought all of this and set it down.

Vishnu: "Tāmarai. Split the coconuts, lay them out, and perform a pūjā for Pilliar."

Tāmarai finished the pūjā and offered the camphor flame to Vishnu and to Kuṉṉuṭaiyā. Then Vishnu took up the almanac and looked at it. He took the page concerning luck in his hand (and said):

Vishnu: "Kuṉṉuṭaiyā Kavuṇṭar! Take this gold thread and place it somewhere on the page[1] and we will see." Kuṉṉuṭaiyā took it and inserted it. Then Vishnu said, "Give me the golden thread," and he stored it away. "Tāmarai ! I will read what is on the page concerning luck. Listen."

Song:

In this birth Tāmarai is to have no sons
For another two births Tāmarai is to have no children
In the third birth, on the good third
In the swarm of youthful things there is no child for
you
In the fourth, in the fourth birth
There is no son born to the lady
In the good fifth birth of the fine creeper vine
There is no son born to the lovely parrot
In the good sixth birth for Tāmarai
For you, there is no son to be sure reaped
In the good seventh birth for Tāmarai there is no child,
none (at all).

---

1 Literally "leaf", as the ancient manuscripts used to be written on palmyra leaves.

தாமரை - "சுவாமி! நில்லுங்கள். ஏழாம் பிறப்பில் இருக்குது என்று சொல்லி விட்டு ஏன் இல்லை என்று சொல்கிறீர்கள்?"

மாயவர் - "தாமரை! இருக்குது. ஆனால் அதைப் பெற உன்னால் முடியாது. அதனால்தான் அப்படிச் சொன்னேன்."

தாமரை - "சுவாமி! என்னால் என்ன செய்யமுடியாது? ஏழு தலைக்கட்டுக்குக் குழந்தை இல்லையென்று சொல்கிறீரே! இது நான் செய்த பாவமா அல்லது என் கணவர் செய்த பாபமா? அல்லது எங்கள் முன்னோர்கள் செய்த தீவினையா? சுவாமி! எனக்கு ஏன் குழந்தையில்லை? விவரமாகச் சொல்லுங்கள்."

மாயவர் - "தாமரை! சொல்கிறேன் கேள். உன் மாமனார் கோளத்தாக் கவுண்டர் இந்தப் பொன்னி வளநாட்டை ஆண்டுவரும் ஆயிர மா நிலத்தில் கால் வள்ளக்காடு கரும்புப் பதியம் போட்டிருந்தார். அப்போது சோழதேசத்தில் அரசருடைய காராம்பசுக்கள் அங்குப் பஞ்சம் ஏற்பட்டுத் தீனி இல்லாமல் இங்கு வந்து கரும்புக்காட்டைத் தின்றது. உன் மாமனார் பசு என்று தெரியாமல் வசிகளை நாட்டி ஏழு காராம்பசுவையும் கொன்று விட்டார். ஏழு காராம்பசுவின் உயிரும் தெய்வசபை சென்று ஈசுவரனிடம் முறையிட்டன. ஈசுவரன் கோபம்வநது உன் மாமனாருக்கு மூவேழு இருபத்தியொரு தலைமுறைக்குக் குழந்தையில்லை என்று சாபம் கொடுத்தார். இதை அறிந்த நான் ஈசுவரனிடம் சென்று, "அவர்களுக்கு எப்படியாவது குழந்தைவரம் கொடுங்கள். அந்தக் குழந்தையைத் தெய்வசபை கொண்டுவந்து நான் தெய்வசபையில் இருபத்தியொரு வருஷம் தவமிருக்கச் செய்து பசுக்களின் பாவத்தை நிவர்த்தி செய்கிறேன்" என்று நான் ஈசுவரனிடம் வாதாடினேன். பின்பு ஈசுவரன் மனமிரங்கி உன்நாதனை ஓணாக்கால் மேட்டில் ஒரு கல்லின் அடியில் சிருஷ்டித்து அதை உன் மாமனார் எடுத்துவந்து வளர்த்தினார். அந்த ஏழுபசுக்களின் பாபம்தான் இப்போது வந்து உங்களைச் சூழ்ந்துகொண்டது."

தாமரை - "சுவாமி! அதற்கு இப்போது நான் செய்யவேண்டியது என்ன? சொல்லுங்கள்."

மாயவர் - "தாமரை! உனக்குச் சிலவுசெய்ய சாமர்த்தியம் இருக்கிறதா?"

தாமரை - "சுவாமி! தாங்கள் கொடுத்த பிச்சை ஏழரைக்கோடித் திரவியம் இருக்கும்போது, எனக்கு என்ன பயம்? குழந்தை கிடைத்தால் போதும்."

Tāmarai: "Lord! Stop. You have promised me something in my seventh birth. Why (even in the seventh birth) do you say 'none'?"

Vishnu: "Tāmarai! There is something but you cannot obtain it. That is why I spoke like that."

Tāmarai: "Lord! There is nothing I cannot do.[1] You say there will be no children for seven generations? Is this some fault of mine? Or some fault of my husband's? Or some sin committed by our ancestors? Lord! Tell me clearly why there are no children."

Vishnu: "Tāmarai. I will tell you (what happened). Listen. When your father-in-law Kōḷatta Kavuṇṭar ruled in this Country Where The Kāveri Flows, he grew sugarcane in one quarter of the enormous field. At that time there was a famine in the Chola Country and the King's black cows,[2] finding no food, came here and grazed in that sugarcane field. Your father-in-law, not realizing that they were cows, planted pointed stakes and killed seven of them. The black cows' lives went to the god's counsel-chamber and pleaded their case with Siva. Siva became angry and uttered a curse that your father-in-law was to remain childless for three times seven, that is, twenty-one generations. Learning this, I went to Siva and asked him to grant (them) the boon of a child, somehow. I begged Siva that after I did twenty-one years of penance at the god's counsel-chamber that the sin of that cow-killing would be set right. Then Siva's heart softened and he created your husband, under a stone on lizard stone hill. Your father-in-law took this child and raised it. The sin of the seven cows has now fallen upon you."

Tāmarai: "Lord! Tell me what I must do about this."

Vishnu: "Tāmarai! Do you have the ability to spend some money?"

Tāmarai: "Lord! While we have what you gave us, seven and a half crores of wealth, I have no fears. If a child is obtained that is enough."

---

[1] She is suggesting that he give her some task to test her character. [2] More precisely, cows with black tongues and black nipples.

மாயவர் - "சரி அப்படியா! நீ முதலில் செய்வது என்னவென்றால் காதத்துக்குக்[1] காதம் கிணறு வெட்டவேண்டும். தூரத்துக்குத் தூரம் சுமைதாங்கி[2] போடவேண்டும். அன்னமடம், தண்ணீர்மடம், அமிர்தமடம், வண்டிப்பேட்டை, வைக்கோல் போர் இவையெல்லாம் செய்யவேண்டும். இவை முடிந்தவுடன் வேம்பு, அரசு இரண்டும் பதியம்போட்டு அதற்குத் திருமணம் செய்யவேண்டும். அதன்பின் செல்லாத்தாளுக்கு மைந்தனில்லா தேர்வனத்தேர்[3], பிள்ளையில்லாத்தேர், அக்கினித்தேர், அருந் தேர் ஓட்டிவைக்க வேண்டும். பின்பு ஆயிரம் தாசருக்கு அன்னம் கொடுக்க வேண்டும். அதன்பின் நீ அறுபது அடி சதுரம் கட்டினாயே அதில் ஒரு மண் அகல் விளக்கில் பசுமாட்டின் நெய் ஏழுபடி ஊற்றிப் பெரிய திரி போட்டு, சதுரத்தின்மேல் பொருத்திவைக்க வேண்டும். அந்த ஜோதி தெய்வசபைக்குத் தெரியவேண்டும். இது எல்லாம் செய்து முடிந்தபின் கார்த்திகை பிறந்து மூன்றாம் நாள் திங்கள்கிழமை காசி பொன்னம்பலம் தன்னாசிக் கோம்பைக்கு உன் நாதனையும் கூட்டிக்கொண்டு வந்து சேர்ந்தால் நான் மண்ணுக்கு இரண்டு ஆண், மனையிருக்கப் பெண் ஒன்று வரம் வாங்கித் தர சித்தமாய் இருக்கிறேன். பிடியம்மா தாமரை!

என்று மாயவர் உறுதிவாக்கு கொடுத்தார். பின், "நான் சென்று வருகிறேன்" என்று மாயவர் புறப்பட்டுப் பால்கடல் போய்ச் சேர்ந்தார்.

தாமரை - "நாதா! மாயவர் சொன்னதை ஒன்றும் தவறாமல் செய்யவேண்டும்."

குன்னுடையா - "பெண்ணே! அப்படியே செய்வோம். அடே, பாரிவில்லை சேவகா! சீக்கிரம் தங்க வளநாடு சென்று ஆயிரம் வீட்டுக் கொத்தர்களையும் கூட்டிவா."

சேவகன், "சாமி, நல்லது" என்று புறப்பட்டான்.

(பாட்டு) அப்படியே என்சாமி நல்லதென்று
அன்புடனே என்சாமி வழிநடந்தார்
மேடுகண்டா சேவகர் மெல்லநடை
பள்ளங்கண்டா என்சாமி பருத்தநடை

1. ஏழரை நாழிகை வழி (சுமார் 10மைல்) 2. பிள்ளையில்லாதோரால் நேர்த்திக்கடனாக வழிச்செல்வோர் தலைப்பாரம் ஆற்றுதற்கு உதவியாக உயர்த்திக் கட்டப்பட்ட கற்கட்டு 3. மரத்தாலான தேர் பொம்மை

Vishnu: "All right. So be it! This is what you must do first. For each league[1] you must have a well dug, and at spaced intervals, burden-resting places.[2] You must construct eating shelters, watering places, resting shelters, shelters for oxcarts, and places for keeping cattle straw. Then you must celebrate the marriage of a margosa and a pēpal tree.[3] Then you must build a 'temple car of the sonless', a mighty temple car, a huge[4] car of the childless, a fiery temple car, a rare temple car, for Cellāttā, and draw it (around the temple). Then you are to give food to a thousand devotees on the sixty-foot square that you have built you are to place an earthen lamp filled with seven measures of ghee and containing a big wick and light it. The light from this flame must be visible from the god's counsel chamber. After you have done all this, on a Monday, the third day of the month of Kārttikai[5] you must set off for the place called Taṉṉāci Kōmpai[6] in Benares with your husband. When you get there I promise to give you the boon of two sons for the land and a daughter for the house. Here woman, Tāmarai, is my right hand," said Vishnu and he gave his firm word. "I will come, afterwards," said Vishnu and he left for the milk sea.

Tāmarai: "Husband ! We must do exactly as Vishnu has said."

Kuṉṉuṭaiyā: "Oh woman! We will do it. Oh badge-wearing servant! Go quickly to The Country of Prosperity and bring the stone masons fast."

Servant: "Lord! Good," he said and set off.

Song:

It was said to be good, my Lord
With love, he followed the path, my Lord
Seeing hills the servant climbed them, my Lord
Seeing valleys he crossed them, my Lord

---

[1] One league equals about ten miles. [2] Special stone arches made as an offering by the childless couple for travellers to rest heavy loads on that were carried on the head. [3] A fairly common ritual. [4] A special kind of car constructed by childress devotees. [5] November -- December. [6] The name of a place in Benares, meaning "ascetic's pillar?"

சேவகர் தங்க வளநாடு வந்து கொத்தர்களைக் கூப்பிட்டு, "ஆயிரம் வீட்டுக் கொத்தர்களையும் பொன்னி வளநாட்டு எஜமானர் வரச் சொன்னார்கள்" என்றார். உடனே கொத்தர்கள் புறப்பட்டுப் பொன்னிவளநாடு வந்து எஜமானரையும் தாமரையையும் கண்டு அட்டம் பணிந்தார்கள்.

தாமரை - "அப்பா, கொத்தர்களே! மங்களம் உண்டாகட்டும் காதத்துக்குக் காதம் கிணறு வெட்டவேண்டும். தூரத்துக்குத் தூரம் சுமைதாங்கி போடவேண்டும். அன்னமடம், தண்ணீர் மடம், வண்டிப்பேட்டை இவைகள் எல்லாம் சீக்கிரம் ஒரு மாதத்தில் செய்து முடிக்கவேண்டும்."

கொத்தர் - "சாமி! நல்லதுங்கோ."

தாமரை - "அடி, குப்பி! ஒரு வள்ளம் முத்து அளந்து வெற்றிலை பாக்கு வைத்துக் கொத்தர்களுக்குக் கொடு."

குப்பி, "சரி, நல்லது" என்று அப்படியே கொண்டுவந்து கொடுத்தாள்.

தாமரை - "சரி, கொத்தர்களே! போய் வேலையை ஆரம்பம் செய்யுங்கள்."

கொத்தர்கள், "ஆத்தா, நல்லது" என்று வேலையை ஆரம்பம் செய்தார்கள்.

(பாட்டு) அப்படியே என்சாமி நல்லதென்று
அன்புடனே என்னாத்தாச் செய்யுறாரே
இந்தப் பிரகாரம் நடக்குது அதிகாரம்

கொத்தர்கள் ஒரு வாரத்தில் வேலையை முடித்து அரண்மனை வந்து அரசரைக் கண்டு நமஸ்காரம் செய்தார்கள்.

குன்னுடையா - "அப்பா, கொத்தர்களே! எல்லா வேலையும் முடிந்ததா?"

கொத்தர் - "சாமி! எல்லா வேலையும் முடிந்துவிட்டது."

குன்னுடையா - "அடி, குப்பி! இன்னும் ஒருவள்ள முத்து அளந்து வந்து கொத்தர்களுக்குக் கொடு."

கொத்தர்கள் முத்தை வாங்கிக்கொண்டு, "நாங்கள் போய் வருகிறோம்" என்று விடை பெற்றுத் தங்கவளநாடு சென்றார்கள்.

தாமரை - "நாதா! பிள்ளையார் கோவிலில் அரசு, வேம்புப் பதியம் போட்டுக் கல்யாணம் செய்யவேண்டும்."

குன்னுடையா - "பெண்ணே! அப்படியே செய்."

தாமரை - "அடே, பாரிவில்லை சேவகா! அணியப்பூர் சென்று பிராம்மணர்களைச் சீக்கிரம் கூட்டிவாருங்கள்."

The servant arrived in The Country of Prosperity and called the stone masons, saying, "Oh stone masons of the thousand houses, the Lord of The Country Where The Kāveri Flows has ordered you to come."

The stone masons set out immediately. Arriving in The Country Where The Kāveri Flows and seeing the Lord and Tāmarai they folded their arms.

Tāmarai: "Men, stone masons! Blessings to you. All right, oh stone masons. A well must be dug for each league (of land) and burden-resting places built at measured intervals. Also eating shelters, watering places and ox-cart shelters, all these must be built within a month!"

Stone M.: "Lord. Very good."

Tāmarai: "Oh maid! Measure out a vaḷḷam of pearls and give them to the stone masons along with betel and areca nut."

The maid said, "Good" and brought and presented these things.

Tāmarai: "All right. Stone Masons! Go start the work."

Stone M.: "Lady, good," said the stone masons and they started to work.

Song: It was said to be good, my Lord
They are doing it with love, my God
See the monarch rule thus

The stone masons finished the work in a week, came to the palace, and on seeing the King paid him their respects.

Kuṉṉuṭaiyā: "Men. stone masons! Have you finished all the work?"

Stone M.: "Lord. All the work has been finished."

Kuṉṉuṭaiyā: "Oh maid! Measure out another vaḷḷam of pearls and give it to the stone masons."

The stone masons accepted the pearls and said, "We will go," and taking leave they returned to The Country of Prosperity.

Tāmarai: "Husband! We must plant a margosa tree and a pēpal tree at the Pilliar temple and marry them."

Kuṉṉuṭaiyā: "Oh woman. Do it."

Tāmarai: "Oh, badge-wearing servant! Go to Aṇiyappūr and bring the Brahmans quickly."

சேவகன், "ஆத்தா, நல்லது" என்று அணியப்பூர் சென்று பிராம்மணர்களைக் கூட்டிவந்தான். பிராம்மணர்கள் வந்து அரசரைக் கண்டு நமஸ்காரம் செய்தார்கள்.

தாமரை - "சுவாமி, பிராம்மணர்களே! வேம்பு, அரசுக்குத் திருமணம் செய்யவேண்டும். அதற்கு என்ன சாமான்கள் வேண்டும்?"

ஐயர் - "ஆத்தா, தாமரை! மாங்கல்யம் செய்யவேண்டும். நெய் அரைப்படி, தேங்காய், பழம், வெற்றிலை, பாக்கு, நூல்செண்டு, மஞ்சள் அவ்வளவுதான்."

தாமரை - "அடி, குப்பி! ஐயர் வேண்டுமென்கிற சாமான்களைக் கொண்டுவந்து கொடு."

பிராம்மணர்கள் சாமான்களையெல்லாம் வாங்கிக்கொண்டு எல்லோரும் பிள்ளையார் கோவிலுக்குச் சென்று ஐயர் நல்லநேரம் பார்த்து ஓமம் வளர்த்தி வேம்புக்கும் அரசுக்கும் திருமணம் செய்து வைத்தார்கள். பின்பு பிராம்மணர்கள் விடைபெற்று அணியப்பூர் சென்றார்கள். பின் தாமரை, "நாதா! இனிச் செல்லாத்தாளுக்குத் தேர் ஓட்டிவைக்கவேண்டும். ஆசாரிகளைக் கூட்டிவரச் சொல்லுங்கள்" என்றாள்.

குன்னுடையா - "பெண்ணே! நல்லது. அடே, பாரிவில்லை சேவகா! தங்க வளநாடு சென்று ஆசாரிகளை ஏழுபேரையும் சீக்கிரம் கூட்டிவாருங்கள்!"

சேவகர், "சாமி, நல்லது!" என்று புறப்பட்டார்கள்.

(பாட்டு) பாரிவில்லை என்னாத்தாச் சேவகனும்
வெள்ளிவெடி என்சாமி ஆளுகளும்
பொன்னிவள என்னாத்தா நாடுவிட்டுத்
தங்கவள என்சாமி நாடுவந்தார்

சேவகர் தங்கவளநாடு வந்து ஆசாரிகளைக் கூப்பிட்டு "அப்பா, ஆசாரிகளே! பொன்னி வளநாட்டுப் பெரியவீட்டு ஆத்தா உங்கள் ஏழுவீட்டுக்காரரையும் சீக்கிரம் கூட்டிவரச் சொன்னார்கள்" என்றார்.

ஆசாரி, "இதோ, வருகிறோம்" என்று புறப்பட்டு எல்லோரும் பொன்னி வளநாடு வந்து சேர்ந்தார்கள். ஆசாரிகள் அரசரைக் கண்டு நமஸ்காரம் செய்தார்கள்.

குன்னுடையா - "அப்பா, ஆசாரிகளே! மங்களம் உண்டாகட்டும்! செல்லாத்தாளுக்கு மைந்தன் இல்லாத் தேர்வனத்தேர், பிள்ளை இல்லாத் தேர்ப் பெருந்தேர், அக்கினித்தேர், அருந்தேர், வீசம் குறைய முழுத்தேர் செய்யவேண்டும். நமது வெள்ளாங்குளத்து

Servant: "Lady, good," he said, went to Aṉiyappūr and returned with the Brahmans. The Brahmans arrived and seeing the King they paid their respects.

Tāmarai: "Lords, oh Brahmans! We want to perform the wedding of a margosa tree and a pēpal tree. What things are needed for this?"

Brahman: "Lady, Tāmarai! A wedding necklace must be made, (plus) a half a measure[1] of ghee, coconuts, bananas, betel leaf and areca nuts, a bundle of thread, and turmeric. That is all."

Tāmarai: "Oh, maid! Bring the Brahman the things he needs."

The Brahmans received all these things and they all went to the Pilliar temple. The Brahmans selected an auspicious time, fed a sacred fire, and married the margosa and the pēpal tree. Then the Brahmans took leave and returned to Aṉiyappūr. Then Tāmarai said:

Tāmarai: "Husband! Now we must build and dedicate a temple chariot to Cellāttā. Tell (someone) to go get the artisans."

Kuṉṉuṭaiyā: "Oh woman! Good. Oh badge-wearing servant! Go to The Country of Prosperity and bring the seven artisans quickly."

Servant: "Lord, good!", he said and set off.

Song: The badge-wearing servant, my Lord
Shining like silver, my Lord, such a man
Leaving The Country Where The Kāveri Flows, oh God
He arrived in The Country of Prosperity, my Lord

The servant arrived in The Country of Prosperity and called the artisans. "Men, oh artisans! The lady of the biggest house of The Country Where The Kāveri Flows has ordered me to bring you men of seven houses quickly."

Artisans: "For whatever purpose, we will come," they said and set off.

They all arrived in The Country Where The Kāveri Flows. The artisans saw the King and paid him their respects.

Kuṉṉuṭaiyā: "Men oh artisans. Blessings to you. You must build a temple car of the sonless, a mighty temple car, a huge car of the childless, a fiery temple car, a rare temple car, not a partial

---

[1] A half a paṭi or about one heaped cupful

ஏரியில் வேங்கை மரம் இருக்கிறது. அதை வெட்டி முப்பது நாட்களுக்குள் தேர் வேலையை முடியுங்கள்.”

ஆசாரி - “சாமி, நல்லது!”

குன்னுடையா - “அடி, குப்பி! ஆசாரிகளுக்கு முத்து ஒரு வள்ளம் அளந்து வந்து வெற்றிலை பாக்குடன் வைத்துக் கொடு.”

ஆசாரிகள் முத்தைப் பெற்றுக்கொண்டு வெள்ளாங்குளத்து ஏரிக்குப் புறப்பட்டார்கள். வெள்ளாங்குளத்து ஏரி வந்து வேங்கை மரத்தைப் பார்க்கும் போது மரம் நன்றாகக் காய்ந்திருந்தது. உடனே ரம்பத்தை எடுத்து மரம் அறுக்கும்போது மரத்தின் உச்சியில் பல்லி சகுனம் சொல்லியது. அதைக் கேட்ட ஆசாரிகளில் ஒருவன், “அண்ணா! மரத்தின்மேல் சகுனம் சொல்லுகிறது. செல்லாத்தாளுக்குத் தேர் ஓட்டும்போது ஏதோ விபரீதம் நடக்கும்போல் தெரிகிறது. சரி, அரசர் சொல்லியபிறகு இனித் தட்டுவதற்கு இல்லை” என்று மரத்தை அறுத்துத் தேவையான சாமான்களை அறுத்துப் போட்டுவிட்டு அரண்மனைக்குச் சென்று அரசரைப் பார்த்து, “சாமி! மரங்களை அறுத்துப்போட்டு விட்டோம். வண்டியை ஓட்டிப்போய் மரங்களை எடுத்துவந்து செல்லாத்தாக் கோவிலில் போடச் சொல்லுங்கள். திங்கள்கிழமை நல்ல நாள். வேலையை ஆரம்பித்துவிடலாம்” என்றனர்.

குன்னுடையா - “சரி, நல்லது! ஒரு மாதத்துக்குள் தேர் வேலையை முடித்துவிடுங்கள்.”

ஆசாரிகள், “சாமி, நல்லது. நாங்கள் சென்று வருகிறோம்” என்று விடைபெற்றுத் தங்க வளநாடு சென்றார்கள். பின் குன்னுடையா ராஜர் சேவகரைக் கூப்பிட்டு, “சீக்கிரம் அணியப்பூர் சென்று பெரியவீட்டுக் கவுண்டரிடம் சொல்லி வண்டியை ஓட்டிவந்து மரங்களைச் செல்லாத்தாக் கோவிலில் கொண்டுவந்து போடச்சொல்” என்றார்.

சேவகர் “நல்லது” என்று புறப்பட்டு அணியப்பூர் சென்று, பெரியவீட்டுக் கவுண்டரைப் பார்த்துச் சொல்லி வந்தார்கள். அணியப்பூர் கவுண்டர்கள் உடனே வீட்டுக்கு ஒரு வண்டி ஓட்டிவந்து மரங்களைச் செல்லாத்தாக் கோவிலில் போட்டுவிட்டு வந்து அரசரைக் கண்டு, “சாமி, மரங்களைக் கொண்டுவந்து போட்டுவிட்டோம்” என்றார்கள்.

குன்னுடையா - “கவுண்டர்களே! நல்லது. தேர் வேலை முடிந்ததும் உங்களுக்குச் சொல்லிவிடுகிறேன். எல்லோரும் வந்து சேருங்கள்.”

(but) a complete car for Cellāttā. We have Vēṅkai[1] tree in a Veḷḷāṅkuḷa tank. Cut that and finish the work within thirty days."

Artisans: "Lord, good!"

Kuṉṉuṭaiyā: "Oh maid! Measure out a vaḷḷam of pearls, bring these with betel leaf and areca nut and give them to the artisans."

The artisans accepted the pearls and set off Veḷḷāṅkuḷa tank. When they arrived at Veḷḷāṅkuḷa tank and looked at the Vēṅkai tree they found it well dried. They immediately took their saw and while cutting the tree a lizard on the very top of it chirped an omen. Hearing this one artisan said:

Artisan: "Elder brother! An omen is being spoken from on top of the tree. While the car is being pulled around Cellāttā's temple something adverse will happen, it seems. All right. We will tell the King later. There is nothing to be alarmed about now."

So they cut down the tree, cut off the needed pieces, returned to the palace and saw the King.

Artisans: "Lord. We have cut the tree. Tell someone to take a car and transport the pieces to the Cellāttā temple. On Monday, an auspicious day, we will begin the work."

Kuṉṉuṭaiyā: "O.K., good! Finish the car construction work within a month."

Artisans: "Lord, good. We will go and return," they said, took leave and went to The Country of Prosperity. Then Kuṉṉuṭaiyā called the servants.

Kuṉṉuṭaiyā: "Go quickly to Aṇiyappūr and tell the Kavuṇṭar of the biggest house to bring a car and transport the wood to the Cellāttā temple," he said.

The servant said "Good", set off, arrived in Aṇiyappūr, told the Kavuṇṭar of the biggest house and returned. The Aṇiyappūr Kavuṇṭar immediately brought a car to the house and transported the wood to the Cellāttā temple. Then coming back to the house he saw the King and said, "Lord, I have transported the wood."

Kuṉṉuṭaiyā: "Oh Kavuṇṭars ! Good. When the car construction work is finished I will let you know. You must all come (for the festival)."

---

1 Kino tree - Pterocarpus bilobus

கவுண்டர் - "சாமி, நல்லது. நாங்கள் போய்வருகிறோம்" என்று புறப்பட்டுச் சென்றார்கள்.

பின்பு திங்கள்கிழமையன்று ஆசாரிகள் ஏழுபேரும் வந்து தேர் வேலையை ஆரம்பம் செய்தார்கள்.

(பாட்டு) இந்தப் பிரகாரம் நடக்குதே தேர்வேலை
அப்படியே நல்லதென்று அன்புடனே செய்யுறாரே

இப்படிப் பொன்னி வளநாட்டில் தேர் வேலை நடந்து கொண்டு இருக்கும்போது மாயவர் "நாமும் போகவேண்டும்" என்று கருட வாகனமேறிப் புறப்பட்டார்.

(பாட்டு) பால்கடல் என்சாமி விட்டுமல்லோ
பொன்னிவள என்சாமி நாடுவாறார்
ஆயர் பெருமாளும் அங்கு
அரிராமர் வந்து நின்றார்

மாயவர் வந்து ஈ போல் வடிவெடுத்துத் தேரில் ஒட்டியதும், ஆசாரி ஒருபக்கம் வேலை செய்தால் மாயவர் கிருபையால் அந்திரமாய் ஒருபக்கம் வேலை ஆகியது. அன்று வேலை முடிந்து, ஆசாரி ஊருக்குப் போய் மறுநாள் காலை புறப்பட்டு வரும்போது தங்க வளநாட்டுப் பிள்ளையார் கோவிலில் பங்காளிக் கவுண்டர்கள் உட்கார்ந்திருந்தார்கள். ஆசாரிகளைக் கண்டதும் பங்காளிகள், "அப்பா, ஆசாரிகளே! தினசரி பொன்னி வளநாடு போய்க் கொண்டிருக்கிறீர்களே, என்ன வேலை?" என்று கேட்டார்கள்.

ஆசாரி - "பெரியவீட்டுக் கவுண்டர் குன்னுடையா ராஜர் செல்லாத்தாளுக்குத் தேர் செய்கிறார்கள். அதற்குத்தான் போகிறோம்."

பங்காளி - "ஓகோ! அப்படியா! நல்லது ஆசாரி. நாங்கள் ஒன்று நினைத்திருக்கிறோம். அதன்படி நீர் செய்தால் உங்களுக்குச் சரியான திரவியம் கிடைக்கும்."

ஆசாரி - "என்ன செய்யவேண்டும்."

பங்காளி - "அப்பா, ஆசாரிகளே! தேர் வேலை முடிந்து தேர்வடம் பிடிக்கும் நாள் எங்களுக்குச் சொல்லுங்கள். நாங்கள் வருகிறோம். தேர்வடம் பிடித்துத் தெற்குப் போய் மேற்குத் திரும்பிப் பின் வடக்கு முகமாகத் திரும்புவதற்குள் கிராமத்தில் இருந்து எத்தனை பலிகிடாய்கள், தேங்காய்கள் வந்தாலும் சக்கரத்தில் கொடுத்து முடித்துவிட்டு வடக்கில் திரும்பியவுடன் இருசை[1] பூமியில் ஊன்றித் தேரை நிறுத்திவிடுங்கள். அவர்கள்

1. தேர் அச்சு

Kavuṇṭar: "Lord. Good. I will go and return" he said, set off and arrived (home).

The seven artisans then returned on Monday and began the car construction work.

Song: The car building work proceeds at this time
It is said to be good, they are building it with care

At this time, while the work of car construction proceeded in The Country Where The Kāveri Flows, Vishnu thought, "I must go (see)," and he mounted his Garuda vehicle and set off.

Song: Leaving the milk sea, my Lord
Coming to The Country Where The Kāveri Flows, my Lord
Harirāma came and stood
Vishnu (came) there

Vishnu came and took the disguise of a fly. If the artisans building the car worked on one side Vishnu, in his grace, finished the same on the other side. That day, when the artisans finished work they went home. The next morning when they set out to come back, the clansmen were seated at the Pilliar temple of The Country of Prosperity. Seeing the artisans the clansmen (called):

Clansmen: "Men, oh artisans. You are going back and forth to The Country Where The Kāveri Flows every day. What is the work?"

Artisans: "King Kuṉṉuṭaiyā of the biggest Kavuṇṭar house is constructing a temple car for Cellāttā. We are going for that (work)."

Clansmen: "Oh, ho. Is that so? Good, artisans! We have something in mind. If you do as we plan you will acquire a lot of wealth."

Artisans: "What do you want us to do?"

Clansmen: "Men, oh artisans! Tell us the day the car is finished and is to be pulled (ceremonially). We will come and pull it, and having gone southward and turned westward, but before moving northward, and after all the goats and coconuts are sacrificed under the wheels, you must stop the car with a long pole. If they ask what (has happened) say that Cellāttā appeared in a dream last night and said that the pulling of the car was unsatisfactory (in itself). Say that Cellāttā said

ஏன் என்று கேட்டால், "சாமி! நேற்று இரவு செல்லாத்தாள் என் கனவில் வந்து நீங்கள் தேர் ஓட்டிவைப்பது திருப்தி இல்லை என்றும் உங்கள் இருவர் தலையையும் இரண்டு சக்கரத்தில் கொடுக்கவேண்டுமென்றும் செல்லாத்தா சொல்லி இருக்கிறாள்" என்று சொல்லிவிடுங்கள். இந்தக் காரியத்தை நீங்கள் தவறாமல் செய்தால் ஆயிரமா நிலத்தில் உங்களுக்குப் பாதி, ஏழரைக் கோடித் திரவியத்திலும் உங்களுக்குப் பாதி தருகிறோம்."

ஆசாரி யோசித்து, "சரி! அப்படியே செய்கிறோம். நீங்களும் வந்து சேருங்கள்" என்று புறப்பட்டுச் சென்றார்கள்.

இப்படிச் சரியாக முப்பது நாட்களுக்குள் தேர்வேலை முடிந்துவிட்டது. அன்று ஆசாரிகள் வேலையை முடித்துக்கொண்டு அரண்மனை சென்று அரசரைக் கண்டு "சாமி! தேர் வேலை முடிந்துவிட்டது" என்றார்கள்.

குன்னுடையா - "சரி! வருகிற வெள்ளிக்கிழமை தேர் ஓட்டிவிடலாம். சாமான்கள் என்ன வேண்டும் சொல்லுங்கள்?"

ஆசாரி - "சாமி! சொல்லுகிறோம்,

(பாட்டு)
அவரை நல்லோ சாமி
கலந்தது போல் அங்குக் கலந்தது போல்
ஐநூறு கலம்[1] பச்சரிசி
வேணுமுங்கோ அங்கு வேணுமுங்கோ
துவரை நல்லோ துவரை
கலந்ததுபோல் அங்குக் கலந்ததுபோல்
தொண்ணூறு கலம் பச்சரிசி
வேணுமுங்கோ ராஜா வேணுமுங்கோ
உடைக்குநல்லோ உடைக்கும் சிறுதேங்காய்
ஒன்று லட்சம் வேணுமுங்கோ
அங்கு ராஜாவே
படைக்கும் நல்லோ ராஜா
சிறு தேங்காய் இனிச் சிறுதேங்காய்
பத்து லட்சம் தேங்காய்
வேணுமுங்கோ அங்கே ராஜாவே
நாடம்பழம்[2] ராஜாவே
நானூறு அங்கு நானூறு
வேணுமுங்கோ அங்கு ராஜாவே

---

1. 12 மரக்கால் கொண்ட முகத்தலளவை 2. ஒரு வகை வாழைப்பழம்

the two of them must place their own heads before the wheels (of the car). If you do this unfailingly we will give you half of the thousand shares of land and half of the seven and a half crores of wealth."

Artisans: "O.K. We will do that" (the artisans said, after considering it). "You (be sure to) come too," they said, set off, and arrived.

In this way the car was finished within thirty days. On the day the artisans finished the work they went to the palace. Seeing the King, they said, "Lord. the car construction work is finished."

Kuṉṉuṭaiyā: "All right. We will pull the car next Friday. Tell (me) what things are needed (for this)."

Artisans: "Lord. We will tell (you)."

Artisan's Song: Good country beans, my Lord
To be mixed, to be mixed there
Five hundred bowls[1] of raw (husked) rice
Are needed, are needed there
The tuvarai pulse, good tuvarai
To be mixed, to be mixed there
Ninety bowls of raw (husked) rice
Are needed, King, are needed
To be broked well, little coconuts to be broken
A lakh are needed
There, oh King
To be broken well, oh King
Little coconuts, then little coconuts
Ten lakhs of coconuts
Are needed there, oh King
Country bananas, oh King
Four hundred, four hundred there
Are needed there, oh King

---

1 One Kalam equals approximately 72 litres, so the request is for 36,000 litres.

அரசே! மறுபடி மொந்தம்பழம் முன்னூறு, கிடாய்கள் இரண்டு இவ்வளவு சாமான்களும் வேண்டும்."

குன்னுடையா - "சரி, நல்லது ஆசாரிகளே! வெள்ளிக்கிழமை வெண்கோழி கூவு முன் வந்து, சாமான்களை வாங்கிக்கொண்டு போய்ப் பொங்கல் வைத்து உங்கள் வேலைகளைச் சாயங்காலத்துக்குள் முடித்துவிடுங்கள். நாங்கள் வந்ததும் தேர்வடம் பிடிக்கலாம்."

ஆசாரி, "சாமி! நல்லது. நாங்கள் போய்வருகிறோம்" என்று விடை பெற்றுத் தங்க வளநாடு போய்ச் சேர்ந்தார்கள். ஆசாரிகள் சென்றபின் குன்னுடையா ராஜர் சேவகரைக் கூப்பிட்டு, "அடே, சேவகா! சீக்கிரம் அணியப்பூர், பொனியப்பூர், சிலுக்காம்புலியூர், சின்னப் பொன்னி வளநாடு, தரும வளநாடு, ஆளத்தூர்பட்டணம் ஆயிரம் கிராமக் கவுண்டர்களையும் வீட்டுக்கு ஒரு கிடாய் கொண்டு வெள்ளிக்கிழமை செல்லாத்தாள் கோவிலுக்கு வந்து சேரும்படிச் சொல்லிவிட்டு வாருங்கள்" என்றார்.

சேவகர், "சாமி! அப்படியே, நல்லது" என்று புறப்பட்டார்.

(பாட்டு) பாரிவில்லை என்னாத்தாச் சேவகனும்
வெள்ளிவெடி என்சாமி ஆளுகளும்
ஓட்டம் என்னாத்தாப் பருநடையா
ஒருவிரைவாய் என்சாமி வருகிறாரே

சேவகர் ஆயிரம் கிராமத்துக்குச் சென்று வீட்டுக்கு ஒரு கிடாய் கொண்டு செல்லாத்தாக் கோவில் வந்து சேரும்படிச் சொல்லிவிட்டுப் பொன்னி வளநாடு வந்து சேர்ந்தார்.

(பாட்டு) அப்படியே நல்லதென்று
பொன்னி வளநாட்டில்
அன்புடனே நடக்குதுபார்
நாளொருநாள் பொழுதொரு நாள்
நடக்குதுபார் நல்பருவம்
மாதமூன்று மழைபெயும்
பொன்னி வளநாட்டில்
வருஷமொரு கல்மாரி
தங்கம் விளைஞ்சு
தனிச்சம்பா போலேறும்
மட்டை விளைஞ்சு
மறுசம்பா போலேறும்

குன்னுடையா ராஜரும் தாமரையாக் கவுண்டச்சியும் வெள்ளிக்கிழமை விடிந்து ஐந்து நாழிகைக்கு முன் குப்பியைக் கூப்பிட்டு அரண்மனையை அலங்காரம்

Artisans: "Oh King! And three hundred plump bananas, and two rams. This is the granity of things that are needed."

Kunnuṭaiyā: "O.K., good, oh artisans! On Friday, before the cocks crow come, get the things, prepare the poṅkal[1] and finish your work before dusk. We will come and pull the car."

Artisans: "Lord! Good. We will go," they said, and they took leave and returned to The Country of Prosperity. After the artisans had left Kunnuṭaiyā called a servant.

Kunnuṭaiyā: "Oh servant! Go quickly to Aniyappūr, Poniyappūr, Cilukkāmpuliyūr, Cinnapponnivaḷanāṭu, Tarumavaḷanāṭu and Āḷattūrpaṭṭaṇam and tell the Kavuṇṭars of the thousand revenue units for each household to bring a ram on Friday when coming to the Cellāttā temple."

Servant: "Lord! That is good," he said and set off.

Song:

The badge-wearing servant, my Lord
Shining like silver, my Lord, such a man
See, his big running steps, my Lord
The man is coming with great speed

The servant went to the thousand revenue units, told each household to bring a ram when coming to the Cellāttā temple. (Then) he returned to The Country Where The Kāveri Flows.

Song:

It was said to be good, in The Country Where The
Kāveri Flows
See how things were done with love
Day after day, time followed time
See what happened, what good things
It rained three times a month in The Country Where
The Kāveri Flows
(And) once a year there was a shower of hail stones
The production of gold is increasing, just like tani
sampa[2] paddy (does)
The paddy crops are growing

King Kunnuṭaiyā and Tāmarai Kavuṇṭacci, early on Friday morning, before five A.M., called the maid. They told her to decorate the palace. (Then)

[1] Special ceremonial boiling of rice. [2] A fine type of rice, that grows slowly.

செய்யச் சொல்லிவிட்டு, மாதர்களைக் கூப்பிட்டு முத்துப் பல்லக்கை அலங்காரம் செய்து எடுத்துவரச் சொன்னார்கள். அப்படியே மாதர்கள் பல்லக்கை எடுத்து வந்தார்கள். ராஜனும் தாமரையும் பல்லக்கில் ஏறிக் கோவிலுக்குப் புறப்பட்டார்கள்.

மாதர்கள் பல்லக்கை எடுத்துத் தோளில் வைத்து,

(பாட்டு) ஆலேலே(ா) என்றல்லவோ
அச்சினமே எடுத்துவாறார்
ஏலேலோ என்றல்லவோ
எடுத்துவாறார் பல்லாக்கை
மண்ணைப் பகிர்ந்தவளாம்
மதுக்கரை செல்லாத்தா
எல்லை பகிர்ந்தவளாம்
எது நாடும் தீர்த்தவளாம்
செல்லாத்தாக் கோவிலுக்குச்
சீக்கிரமாய் வந்து நின்றார்

அரியும் சிவனும் பல்லக்கை விட்டு இறங்கிக் காசிக்கரை சென்று நீராடி வந்து அமுது வைத்துச் செல்லாத்தாளுக்கு அருபூஜை, குருபூஜை, ஐம்பத்தி எட்டு லிங்க பூஜையும் சரியாக முடிக்குமுன், ஆயிரங் கிராமத்துக் கவுண்டர்களும் வந்து குன்னுடையாசாமியை நமஸ்காரம் செய்தார்கள். பின் குன்னுடையா ராஜர் செல்லாத்தாளுக்குப் பதினெட்டு அலங்காரமும் செய்து பின் தீபாராதனை செய்து எல்லோருக்கும் தீபாராதனை கொடுத்தார். பின் மேளதாளத்துடன் செல்லாத்தாளின் விக்கிரகத்தைத் தேரில் கொண்டுபோய் வைத்து ஆசாரிகளைக் கூப்பிட்டு, "அப்பா ஆசாரிகளே! உங்கள் பூஜையைச் செய்து முடியுங்கள்" என்றார். ஆசாரிகள் அப்படியே பூஜை செய்து முடிந்தவுடன் குன்னுடையாசாமியும் தாமரையும் தேரை ஏழுதரம் சுற்றிவந்து கும்பிட்டார்கள். பின்பு பிராம்மணர்கள் செல்லாத்தாளுக்குத் தீபாராதனை செய்து எல்லோருக்கும் தீபாராதனை வழங்கப்பட்டது. பிறகு மேளதாளம், பிராம்மணர்கள், ஆசாரி ஒருவர் எல்லோரும் தேரின் மேல் ஏறினார்கள்.

குன்னுடையா - "கவுண்டர்களே! வீட்டுக்கு ஒரு கிடாய் கொண்டு வந்தீர்களா?"

கவுண்டர் - "சாமி! எல்லோரும் கொண்டு வந்திருக்கிறோம்."

எல்லாம் தயார் செய்தபிறகு தங்க வளநாட்டிலிருந்து பதினாறு பேர் பங்காளிகள் கூட்டத்தில் கலந்து கொண்டார்கள். தேர்வடம் பிடிக்கும் நேரம் வந்ததும், குன்னுடையாசாமியும் தாமரைக் கவுண்டச்சியும் வடத்தைத் தொட்டுக் கொடுத்தவுடன் எல்லோரும் சேர்ந்து வடம் பிடித்தார்கள்.

they called the ladies-in-waiting, and asked them to bring out and decorate the pearl palanquin. The ladies-in-waiting did as told, and brought the pearl palanquin. The King and Tāmarai climbed in the palanquin and set off for the temple.

The ladies-in-waiting lifted the palanquin and placed it on their shoulders.

Song:

Singing ālē lō
They are carrying it at this moment
Singing ālē lō
They are carrying the palanquin
She who has divided the earth
The Cellāttā of Matukkarai[1]
She who has defined the borders
of countries
To Cellāttā's temple
They are coming quickly

The golden one and Siva[2] climbed down from the palanquin. They went to the river bank, bathed, and returned. Then they set out food and performed the god's pūjā, the pūjā for the family deity and the fifty-eight lingams pūjā. Before this was done the Kavuṇṭars of the thousand revenue units had arrived and paid their respects to Kuṉṉuṭaiyā. Afterwards King Kuṉṉuṭaiyā made the eighteen types of adornment offerings to Cellāttā, waved a camphor flame and passed it amongst all (who were present). Then, to music, Cellāttā's moveable image was placed in the temple car, and the artisans were called.

Kuṉṉuṭaiyā: "Men, oh artisans! You finish the pūjā."

The artisans finished the pūjā as told. Kuṉṉuṭaiyā and Tāmarai circled the car seven times, with folded hands, paying respects. Then the Brahman waved a camphor flame in front of Cellāttā and passed it amongst everyone present. Then the musicians, the Brahmans and one artisan climbed on the car.

Kuṉṉuṭaiyā: "Oh Kavuṇṭars! Has a ram been brought from each house?"

Kavuṇṭars: "Lord! We have each brought one and are here."

After everyone was ready, sixteen clansmen arrived and joined the crowd. When the time to pull the car came, and after Kuṉṉuṭaiyā and Tāmarai had paid respects to the rope, everyone pulled the cables together.

That fine creeper vine, Tāmarai, the all-knowing goddess (called):

---

1 A place on the banks of the river Kāveri. 2 A way of comparing King Kuṉṉuṭaiyā to Lord Siva, himself.

அன்னக்கொடி தாமரை, அறிவுள்ள தேவி, "அகிலாண்டகோடி பிரம்மாண்ட நாயகா! சங்குசக்கர வைகுந்த வாசகா! தங்களுடைய கிருபையால் செல்லாத்தாளுக்குத் தேர் ஓட்டிவைக்கிறோம். ஒரு சேதமும் இல்லாமல் தேர் நிலை வந்து சேரவேண்டும் காஞ்சிநாதா!" என்று மாயவரை மனதில் நினைத்து தேர்வடம் பிடிக்கப்பட்டது.

(பாட்டு) தேருநல்லோ அசையுதுபார் அங்கு அசையுதுபார்
மாயருட கிருபையாலே அங்குக் கிருபையாலே
ஆயருட கிருபையாலே அங்குக் கிருபையாலே
ஓடுதுபார் செல்லாத்தாத்
தேருமது அங்குத் தேருமது
அடிக்கு ஒரு தேங்காயாம் அங்குத் தேங்காயாம்
முழத்துக்கு ஒரு கிடாயாம் அங்குக் கிடாயாம்
செல்லாத்தாத் தேருமது அங்குத் தேருமது
திரும்பியே வருகுதுபார் அங்கு வருகுதுபார்

இப்படியாகத் தேர் தெற்குமுகமாய்ப் போய் மேற்குமுகமாகத் திரும்பி வடக்குத் திரும்புமுன் ஆயிரக்கணக்கான பலி கிடாய்களும் தேங்காய்களும் ஒன்றுகூட இல்லாமல் முடிந்துவிட்டன. தேர் வடக்குமுகமாகத் திரும்பியதும் ஆசாரிகள் பங்காளிகள் சொன்ன பிரகாரம் பூமியில் இருசை ஊன்றித் தேரை நிறுத்திவிட்டார்கள். குன்னுடையாசாமியும் தாமரையும் ஆயிரம் பாகக் கூந்தலையும் விரித்து விட்டுத் தேருக்குப் பின்னால் கும்பிட்டு வந்தார்கள். தேர் நின்றதைக் கண்டு, "ஆசாரி! ஏன் தேர் நின்றுவிட்டது? தேரை நடத்துங்கள்" என்றதும் அந்தச் சமயம் தேரின் மேலிருந்த ஆசாரி, "ஐயோ" என்று கீழே விழுந்தான்.

குன்னுடையா - "அப்பா, ஆசாரி! ஏன், தவறி விழுந்துவிட்டாயா? பாவம்! எழுந்திரு."

ஆசாரி மேலே எழுந்து, "சாமி! நேற்று இரவு என் கனவில் செல்லாத்தா வந்து, "அப்பா, ஆசாரி! குன்னுடையாக் கவுண்டனும் தாமரையும் தேர் ஓட்டி வைப்பது எனக்குத் திருப்தியில்லை." ஐயோ! ராஜாவே! அந்தக் கொலைகாரி செல்லாத்தாச் சொன்னதை நான் எப்படிச் சொல்வேன்?"

Tāmarai: "Oh Lord of a crore of worlds in the universe. He who holds a conch, and a discus and lives in Vaikunta. With your blessings, we are about to move Cellāttā's car. Without any difficulties, the car must endure (the trip) and return, oh Lord of Kanjeepuram!". She said, this thinking in her heart of Vishnu and taking hold of the car's chain.

Song:
The car is moving, look there how it moves
With Vishnu's blessings, there with his blessings
With the Lord's blessings, there with his blessings
It moves, watch it Cellāttā
The car, the car there
For every foot it moves
A coconut is broken there, a coconut'
For every cubit it moves
A ram is sacrificed, a male ram
Cellāttā's car, the car there
Is turning and is coming, see there, it is turning and coming!

In this way the car moved south and then turned and moved west. Before turning to the north a full thousand ram and a thousand coconuts had been offered in sacrifice. When the car had been turned to the north[1] as the clansmen had said the artisans made the axle stick to the earth and brought it to a halt. Kuṉṉuṭaiyā and Tāmarai, having (overseen) the sacrifice of the thousand ram, were walking behind the car with folded hands. When they saw the car stop they called.

"Oh artisans! Why has the car stopped? Move it (forward)."

At that moment the Artisan who had been riding on the car cried, "Oh my!" and fell off.

Kuṉṉuṭaiyā: "Man, artisan! Why did you slip and fall? Atlast! Get up," he said.

The artisan got up and said,

"Lord! Last night Cellāttā came to me in a dream (and said), 'Man. Artisan! Kuṉṉuṭaiyā Kavuṇṭrar's and Tāmarai's pulling of the car is unsatisfactory.' Oh my! King! That disturbed woman, Cellāttā, how can I repeat what she said?"

---

1 The turning of such a car is a laborious process, and would be done with wedges, by the artisan community. The turning can cause the wheels to sink a bit in soft ground.

குன்னுடையா - "ஆசாரி! பரவாயில்லை. உண்மையைச் சொல்."

ஆசாரி - "சாமி! உங்கள் இருவர் தலையையும் தேரில் கொடுத்தால்தான், தேர் நிலைக்குப் போய்ச் சேரும் என்று சொல்லிவிட்டுப் போனாள்."

தாமரை - "அப்பா, ஆசாரி! செல்லாத்தாள் உன்னிடம் எப்போது வந்து சொன்னாள்?"

ஆசாரி - "ஆத்தா! ராத்திரி பதினைந்து நாழிகைக்கு வந்து சொன்னாள்."

தாமரை - " அடி செல்லாத்தா, கொலைகாரி! தேர் வேலை ஒரு மாதமாக நடந்ததே? "எனக்குத் தேர் நடத்துவது திருப்தியில்லை" என்று என்னிடம் சொல்லியிருந்தால் என்ன? ஆசாரியிடம் போய்ச் சொன்னாயே! சண்டாளி. இந்தச் சதி எத்தனை நாளாக நினைத்திருந்தாய்?

(பாட்டு) மங்கைநல்லோ மங்கை அழுகுறாளே
மலர்க்கிளியா என்னம்மா வாடுறாளே இனி வாடுறாளே
நான் மைந்தன்தேர் ஓட்டவந்து இங்கு ஓட்டவந்து
மன்னவரை மன்னவரை நானிழந்தேன்
பிள்ளைத்தேர் பிள்ளைத்தேர் ஓட்டவந்து
புருஷனை நானிழந்தேன் இங்கு மாயவரே
குழந்தைத்தேர் குழந்தைத்தேர் ஓட்டவந்து
கொற்றவரை மாயவரே நானிழந்தேன்
மாயவா! நான் மைந்தன்தேர் ஓட்டவந்து
சுவாமி மன்னவரை நானிழந்தேன்
குழந்தைத் தேர் ஓட்ட வந்து
கொற்றவரை நானிழந்தேன்

நாதா! வாருங்கள். செல்லாத்தாக் கோவிலுக்குப் போய்வரலாம்" என்று இருவரும் கோவிலுக்கு வந்து தாமரை ஆயிரம் பாகக் கூந்தலை விரித்து விட்டு மாரடித்து,

(பாட்டு) கோவிலிலே செல்லாத்தா இருக்கிறாயோ
அங்கு இருக்கிறாயோ
குடியோடி நாட்டிலே
போயிட்டியோ இனிப் போயிட்டியோ
மாடியிலே செல்லாத்தா
இருக்கிறயோ அம்மா இருக்கிறயோ

Kunnuṭaiyā:	"Artisan! Never mind. Tell the truth."
Artisan:	"Lord! she said,'Only if you place your two heads before the car will it endure (the trip) and return,' and then she left."
Tāmarai:	"Man. Artisan! When did Cellāttā come and speak to you?"
Artisan:	"Lady. Queen. She came and spoke (to me) in the night at twelve o' clock".
Tāmarai:	"Oh you, Cellāttā! You disturbed woman. The work of constructing the car has gone on for one month. Why didn't you tell me (then) that simply pulling the car would be unsatisfactory? Villain! For how many days have you been planning this deceit?"

Song:

The good woman, the woman is crying
The flower parrot, my lady is pining, (she) is pining
I came here to drive the car for obtaining a son, I
came to have it pulled here
I have lost my King, my King
The car for obtaining children, obtaining a baby, I
have come to have it pulled
I have lost my monarch, oh Vishnu[1]

Tāmarai: "Oh Vishnu. I came to have the car of obtaining a son pulled, oh Lord! I have lost my King. I came to have the car for obtaining children pulled. I have lost my King."

"Husband. Come. We will go to Cellāttā's temple and come back," she said and the two of them went to the temple. Tāmarai, with falling tresses, beat her breasts (remembering) the thousand rams that had been sacrificed.

Song:

Oh Cellāttā, in the temple
Are you there, are you there?
Your home in this country
Have you left it, have you left it?
Oh Cellāttā, in the palace
Are you there lady, are you there?

---

[1] She is anticipating the death of her husband here, so sure is she that he will die.

மாடிவிட்டுச் செல்லாத்தாப்
போயிட்டியோ அம்மா போயிட்டியோ

செல்லாத்தா! உனக்குத் தேரோட்டி வைத்ததற்கு என்னைக் கொல்ல வேண்டுமென்று நினைத்தாயா? இந்தச் சதி செய்ய எத்தனை நாள் நினைத்தாய்? சண்டாளி, தங்க வளநாட்டில் ஆயிரம் வீட்டுப் பங்காளிகள் இருக்கிறார்கள். அவர்கள் இனி உனக்குப் பூஜை நடத்துவார்கள். வாங்கிச் சாப்பிடு. நாங்கள் சாவது உனக்குச் சந்தோஷம்" என்று நாதனைக் கூட்டிக்கொண்டு தேருக்கு அருகில் வந்து, "நாதா! நீங்கள் ஒரு சக்கரத்தில் தலைவைத்துப் படுங்கள்" என்றதும் குன்னுடையா ராஜருக்குக் கோபம் வந்து, "அடி, சண்டாளி! நான் குழந்தையும் வேண்டாம், ஒன்றும் வேண்டாம் என்று சொன்னேனே கேட்டாயா? கூடப்போட்ட முண்டே! தாசன் பேச்சைக் கேட்டு ஆயிரம் கிராமத்து ஜனங்களின் முன் என்னைத் தேரில் நசுக்கிக் கொல்லும்படிச் செய்துவிட்டாயே!" என்று சாமி அழுகுறாரே இனிச் சரீரமே வாடுறாரே. குன்னுடையா ராஜமன்னன், கோடையிடி மணிவேந்தன், பொன்மேழிக்காரர், பேசாத்திருமுடியான், வாய்பேசாத் தருமன், மசைசாமி புண்ணியன், "சண்டாளி! செல்லாத்தாளுக்கு நாமே தேர் உண்டுபண்ணி அதே தேரில் தலை கொடுத்து நாம் உயிர்விடும்படி நேர்ந்துவிட்டது" என்று கிழக்குப் புறத்துச் சக்கரத்தில் தலையை வைத்துப் படுத்து, மாயவா! சக்கரம் தலையில் ஏறுமுன் என் உயிர் போகவேண்டும் காஞ்சிநாதா!"என்று சாமி மாயவரைத் தரிசித்துக் கீழே படுத்தவுடன் தாமரையும் மாயவரை நினைத்து மேற்குப்புற சக்கரத்தில் தலையைக் கொடுத்துப் படுத்துக் கொண்டாள்.

இதைப் பால்கடலில் மாயவர் பார்த்துக் கோபம் தாங்கமுடியாமல், "அடடா! சண்டாளன், ஆசாரி பங்காளியின் பேச்சைக் கேட்டுத் தேரை நிறுத்திச் சதி செய்கிறான். நாம் போய்க் காப்பாற்ற வேண்டும்" என்று கருடனை அழைத்து உடனே புறப்பட்டார்.

(பாட்டு) ஆயர் ஆயர் பெருமாளும்
அரிராமர் என்சாமி வருகிறாரே
பொன்னிவள என்னாத்தா நாடுதேடி
மையமாய் என்சாமி பறக்குறாரே
மண்ணைப் பகிர்ந்தவளாம்
மதுக்கரை செல்லாத்தாக் கோவிலுக்கு

Have you left your palace Cellāttā?
Have you gone lady, have you gone?

Tāmarai: "Cellāttā! You are thinking that you want to kill me, I who have had a car made and pulled for you? For how many days have you thought of so deceiving me? Villain! The thousand clansmen of The Country Where The Kāveri Flows are there. From now on they will perform your pūjā. Take it and eat. We (are going) to die. You will be happy," she said, called her husband and took him back near the car (where) they (then) stood together. "Husband. You place your head under a wheel," she said.

King Kuṉṉuṭaiyā became angry.

"Oh Villain! I don't want a child. I don't want anything. I said. Did you hear, murderous widow! Following the advice of a mendicant, you leave me to kill myself under a temple car in front of the people from all of the thousand revenue units," he said and cried and his body wilted.

King Kuṉṉuṭaiyā, as strong as summer thunder, the precious monarch, he who was like a female, he who kept quiet, the virtue one who did not speak, the meritorious man, (then said), "Villain! We built a car for Cellāttā and now it is time to place our heads under it and to give our lives before this very car." He then placed his head under the east wheel, lying down. "Vishnu! You must let my life leave before the wheel goes over my head, oh Lord of Kanjeepuram," he said, lying down and praying to Vishnu.

As soon as he did this Tāmarai thought of Vishnu and put her head under the west wheel and lay down. Vishnu saw this from the milk sea and was overcome with anger. "Oh, the Villain! The artisans, having listened to the words of the clansmen, have stopped the temple car and are engaging in deceit. I must go and look after this," he thought, called his Garuda vehicle and immediately set off.

Song: The shepherd, the shepherd, Perumal
Harirāma, my Lord, is coming
Searching for The Country Where The Kāveri Flows
My lords is flying with it as his target
To the temple of Cellāttā
The one who divided the earth

மாயவர் வந்த வேகம் அண்டசராசரங்களும் நடுங்கி ஆதிசேஷன் தத்தளிக்கத் தெய்வலோகம் நடுங்கியது. மாயவர் வந்து தேர் நிற்கும் இடத்திற்குச் சென்று, ஈ போல் வடிவெடுத்துத் தேரின்மேல் ஒட்டியதும் பூலோகம், தெய்வலோகம் எல்லாம் நடுங்கும்படிச் சத்தத்துடன் ஒரு வேட்டுச் சத்தம் கேட்டது.

(பாட்டு) மாயருட மாயருட கிருபையாலே
அந்திரமாய்த் தேர் மேலே எழும்புதடா
இரண்டு இரண்டு பனையுயரம்
மேலே நல்லோ தேரு பறக்குதடா

தேர் இரண்டு பனையுயரம் மேலே பறந்து வடக்கில் பதினாறு அடி தூரத்தில் குதித்து நின்றது. பிறகு, ஒரு மின்னல் வேகத்தில் பாய்ந்து தேர் நிலை போய்ச் சேர்ந்ததும் பூமியில் தேர் இறங்கியது. தேர் மின்னல் வேகத்தில் போகும்போது பங்காளிக் கவுண்டர் பதினாறு பேரையும் ஆசாரிகள் ஆறு பேரையும் உருவம் தெரியாமல் செய்துவிட்டுப் போய்விட்டது.

இப்படி இருக்கும்போது குன்னுடையாசாமி, "பெண்ணே! தாமரை, ஏன் இன்னும் தேர் தலையை நசுக்கவில்லை?" என்று கண்ணை விழித்துப் பார்க்கும்போது தேரையும் காணவில்லை, ஜனங்களையும் காணவில்லை என்று இருவரும் எழுந்து வரும்போது, பங்காளிகளையும் ஆசாரிகளையும் தேர் நசுக்கிவிட்டுப் போயிருந்தது. "பெண்ணே! பங்காளிகளும் ஆசாரிகளும் நம்மைக் கொல்லச் சதி செய்திருக்கிறார்கள். தேர் அவர்களையே கொன்று விட்டுப் போய்விட்டது" என்று இருவரும் செல்லாத்தாக் கோவில் வந்து பார்க்கும்போது தேர் பூமியில் இறங்கியிருந்தது. சரி என்று இருவரும் மாதர்களைப் பல்லக்கு கொண்டுவரச் சொல்லி ஏறி இருவரும் அரண்மனை போய்ச் சேர்ந்தார்கள்.

தாமரை - "நாதா! பரந்தாமன் சொன்னதில் இன்னும் இரண்டு காரியம் செய்யவேண்டும். முதலில் ஆயிரம் தாசர்களுக்கு அன்னம் கொடுக்கவேண்டும். திங்கள்கிழமையன்று கொடுத்துவிடலாம்."

குன்னுடையா - "சரி, அப்படியே கொடுத்துவிடலாம்."

தாமரை திங்கள்கிழமை வெள்ளி உதித்து வெண்கோழி கூவுமுன் மாதர்களைக் கூப்பிட்டு, "உடனே அரண்மனையை அலங்காரம் செய்து பதினெட்டுக் காய் பதார்த்தங்களுடன் அமுது படையுங்கள்" என்று சொல்லிவிட்டுப் பின்பு "நாதா! தாங்கள் ஸ்ரீரங்கம் சென்று ஆயிரம் தாசர்களைக் கூட்டிவாருங்கள்" என்றாள். குன்னுடையாசாமி, "சரி, பெண்ணே! நான் போய்வருகிறேன்" என்று கொங்காடைக் கம்பளியை எடுத்துத் தோளில் போட்டுக் கொப்பிகட்டிய கவையை எடுத்துக்கொண்டு புறப்பட்டார்.

The movable and immovable things on the earth shuddered, the great subterranean serpent[1] trembled, and the gods shivered. Vishnu arrived and came to the place where the temple car stood. He took the disguise of a fly and poised on top of the car. As he came to rest on the car there was a great explosive noise that shook the earth and the heavens.

Song:

With the help of Vishnu, Vishnu
The car is rising above, on its own
The car flies above
The (height of) two palmyra palms

The car flew higher than two palmyra trees, and then jumped sixteen feet northward and came to a stop. Then, on a reaching its original spot with the speed of lightening, the car landed on the earth. While the car was travelling with lightening speed the sixteen Kavuṇṭar clansmen and the six artisans were smashed to bits.

At this time Kuṉṉuṭaiyā said, "Oh woman, Tāmarai! Why has the car not yet crushed our heads?"

Having spoken, he opened his eyes and looking around saw that the temple car and the people had all disappeared. As the two got up (they saw that) the car had crushed and killed the clansmen and the artisans.

"Oh woman! The clansmen and the artisans used deceit and tried to kill us. (But) the temple car has killed them (instead)," he said. When the two went to the Cellāttā temple to see, they found the temple car sunken in the ground. "O.K." they said, and the two of them asked the ladies-in-waiting to bring the palanquin. They climbed in and returned to the palace.

Tāmarai: "Husband. Two of the things Vishnu said (to do) still remain. First, we must feed a thousand mendicants. We shall do this on Monday."

Kuṉṉuṭaiyā: "O.K. we shall do that."

Tāmarai: On Monday, at dawn and before the cocks crowed, Tāmarai called the ladies-in-waiting and said, "Decorate the palace immediately and prepare eighteen types of vegetables in various sauces. Husband. Go to Srirangam[2] and bring a thousand mendicants back with you."

---

[1] Ātisēshan. [2] Srirangam is the main Vaisnavite temple in the city of Tiruchirapalli.

(பாட்டு) பொன்னிவள நாடுவிட்டு நாடுவிட்டு
வருகிறாரே ராஜதுரை ராஜதுரை
ஓட்டம் பெருநடையா பெருநடையா
ஒருவிரைவாய் வருகிறாரே ராஜதுரை
ஸ்ரீரங்கம் தேடியல்லோ தேடியல்லோ
வருகிறாரே குன்னுடையா ராஜமன்னன்

குன்னுடையா ராஜா் ஸ்ரீரங்கம் வருவதற்குள் மாயவர் ஸ்ரீரங்கத்தில் ஒரு தாசன்கூட இல்லாமல் மறைத்துவிட்டார். குன்னுடையாசாமி வந்து தெற்கு வீதியில் நின்று, "அப்பா, தாசா!" என்று கூப்பிடும்போது மாயவர் வடக்குவீதியிலிருந்து "ஓவ்" என்று கேட்டார். குன்னுடையாசாமி வடக்கு வீதிக்கு வந்து பார்த்து, "அப்பா, தாசா!"என்று கூப்பிட்டார். அப்போது மாயவர் கிழக்கு வீதி சென்று "ஏன்" என்று கேட்டார். குன்னுடையாசாமி கிழக்கு வீதி போய்ப் பார்த்து "அப்பா, தாசா!"என்றார். அப்போது மாயவர் மேற்கு வீதியில் "ஓவ்!"என்று கேட்டார். குன்னுடையாசாமி நால்பக்கமும் சுற்றிப் பார்த்துக் காணாமல் "இது பெரியோர்கள் சொன்ன மொழிபோல் ஸ்ரீரங்கத்தில் சரைத்த[1] மொட்டை ஆயிரம், சரைக்காத மொட்டை ஆயிரம்" என்று குன்னுடையாசாமி, தாசன் ஒருவரையும் காணவில்லையென்று ஊருக்குப் புறப்பட்டார்.

(பாட்டு) பொன்னிவள நாடுதேடி நாடுதேடி
வருகிறாரே குன்னுடையா ராஜதுரை
தாசனைக் காணுமென்று காணுமென்று
வருகிறாரே ராஜதுரை ராஜதுரை

இப்படிக் குன்னுடையாசாமி வரும்போது மாயவர் காட்டில் ஆடுமாடு மேய்க்கும் சிறுவர்களையெல்லாம் கூப்பிட்டு, அவர்கள் எல்லோருக்கும் நாமம் போட்டுச் சங்கு, ஜெயகண்டி கையில் கொடுத்து மாயவர் தன்னாசிபோல் வடிவெடுத்து நெற்றியில் தங்கநாமம் போட்டு வலம்புரிச் சங்கும் கோபாலப் பெட்டியும் கையில் எடுத்து வரை ஓடு[2] கையில் எடுத்து மற்ற தாசர்களையும் கூட்டிக்கொண்டுக் குன்னுடையாசாமி வரும் திசையில் எதிர்நோக்கிச் சென்றார்கள். தாசர்கள் வருவதைக் குன்னுடையாசாமி பார்த்துச் சந்தோஷப் பட்டு, "அடடா! தாசன் ஒருவரும் இல்லையென்று வந்தோம். இப்போது ஆயிரம் தாசர்கள் வருகிறார்கள்" என்று தாசர்களை நோக்கி, "அப்பா, தாசர்களே! எல்லோரும் எங்கிருந்து போகிறீர்கள்?" என்றார்.

---

1. சவரம் செய்த 2. வாய்ப்பகுதி அற்ற மட்பாத்திரம்

Kuṉṉuṭaiyā: "All right, oh woman! I will go and return," he said, and he set out putting his blanket from the Koṅku[1] area on his shoulders and taking his walking stick with a metal tip.

Song:
Leaving The Country Where The Kāveri Flows, leaving it
The gentle King, the gentle King is coming
Running with big steps, with big steps
With great speed, the gentle King is coming
Searching for Srirangam, searching
King Kuṉṉuṭaiyā, the sovereign, is coming

Before King Kuṉṉuṭaiyā reached Srirangam, Vishnu made each and every mendicant in Srirangam disappear. Kuṉṉuṭaiyā arrived and stood in the southern street calling, "Men, mendicants," as he went. He heard Vishnu's answer, "Ōv," coming from the northern street, Kuṉṉuṭaiyā went to the northern street looking and calling, "Men, mendicants!". Then he heard Vishnu answer, "En" from the eastern street. Then Kuṉṉuṭaiyā went to the eastern street looking and calling, "Men, mendicants!" Then he heard Vishnu answer "ōv" from the western street. Kuṉṉuṭaiyā circled all four sides and looked, but there was no one.

It was like the proverb told by the elderly, "In Srirangam there are a thousand shaven heads and a thousand other bald heads that have never been shaven," thought Kuṉṉuṭaiyā. Since there was not a single mendicant to be seen he set off for home.

Song:
Searching for The fertile Country Where The Kāveri Flows, searching
The gentle King Kuṉṉuṭaiyā is coming
Saying, "There are no mendicants to be seen, no mendicants,"
The gentle King, the gentle King, is coming

While Kuṉṉuṭaiyā was on the way, Vishnu called together all the small children who were grazing cows and goats in the fields. He placed a Vaisnavite forehead mark on each of them and gave each a conch and a gong to hold. Vishnu himself (also) took the form of a beggar. On his neck he wore a golden Vaisnavite mark. In one hand he held a right spiralled conch and a box for holy powders, and in the other a beggar's bowl. He brought the other mendicants together and they stood facing Kuṉṉuṭaiyā from the direction he was heading towards. Seeing the beggars approach

---

[1] Koṅku is the name of the region in which this epic is best known.

தாசர் - "சாமி! மேற்கு ஒரு ஊரில் விருந்து போட்டார்கள். அங்குப் போய்விட்டு வருகிறோம். மத்தியான சாப்பாட்டுக்கு ஸ்ரீரங்கம் போகவேண்டும்."

குன்னுடையா - "சரி, நல்லது எங்கள் வீட்டில் மத்தியானம் விருந்து போடுகிறோம். எல்லோரும் வாருங்கள். சாப்பிட்டுவிட்டு அதன்மேல் ஸ்ரீரங்கம் போகலாம்."

தாசர்கள், "சரி, நல்லது சாமி!"என்று புறப்பட்டார்கள். குன்னுடையாசாமி தாசர்களைக் கூட்டிக்கொண்டு பொன்னி வளநாடு வரும்போது தாமரை, "இன்னும் தாசர்களைக் காணவில்லை" என்று எதிர்பார்த்து நின்று கொண்டிருந்தாள். அதுசமயம் குன்னுடையாசாமி தாசர்களைக் கூட்டி வருவதைப் பார்த்து உள்ளே சென்று, "அடி, குப்பி! ஆயிரம் இலை போட்டுப் பரிமாறுங்கள்" என்றாள். இதற்குள் ஆயிரம் தாசர்களும் குன்னுடையா சாமியும் அருகில் வந்து சேர்ந்தாகள்.

தாமரை - "நாதா! ஆயிரம் தாசர்களைக் கூட்டி வந்தீர்களா?"

குன்னுடையா - "ஆம், பெண்ணே! சரியாக ஆயிரம் பேர் கூட்டிவந்தேன்."

இலை போட்டபின் தாசர்களைத் தாமரை எண்ணி விடும்போது தொள்ளாயிரத்துத் தொண்ணூற்று ஒன்பது தாசர்கள்தான் இருந்தார்கள். ஒரு தாசனைக் காணவில்லை.

தாமரை - நாதா! இன்னும் ஒரு தாசனைக் காணவில்லையே?

குன்னுடையா - "பெண்ணே! ஒரு கிழட்டுத் தாசன் வந்தான். அவனைத்தான் காணவில்லை போல் தெரிகிறது. சரி, இப்போது என்ன கெட்டுப்போய்விட்டது? அந்த ஒரு இலையில் நான் இருந்து கொள்கிறேன்."

தாமரை - "நாதா! மாயவர் ஆயிரம் தாசன் வேண்டுமென்று சொன்னார். அதில் ஒன்று குறைந்தாலும் நம் வரத்தில் ஒன்று குறைந்து விடும். நான் போய் இன்னும் ஒரு தாசனைக் கூட்டிவருகிறேன். அதற்குள் யாராவது சாப்பிட்டுவிடப் போகிறார்கள். பார்த்துக் கொள்ளுங்கள்"

என்று சொல்லிவிட்டு ஸ்ரீரங்கம் தேடிப் புறப்பட்டாள்.

(பாட்டு) ஸ்ரீரங்கம் தேடியல்லோ தேடியல்லோ
சீக்கிரமாய் வருகிறாளே தாமரையாள்
மேடுகண்டா மெல்லநடை மெல்லநடை
பள்ளம் கண்டா பருத்தநடை வருகிறாளே

Kuṉṉuṭaiyā became happy, and thought, "Oh men! Mendicants. After being absent for a week, now a thousand beggars are coming." Looking at the beggars he said, "Oh men, mendicants! From where are you all coming?"

Mendicant: "Lord! We were given a feast in a town to the west. We are coming after having been there. We want to be in Srirangam for the noon meal."

Kuṉṉuṭaiyā: "All right. Good! I will feast you in my house at noon. All of you come and eat and after that you can go to Srirangam."

Mendicant: "O.K., good, Lord!" they said and set off.

Kuṉṉuṭaiyā took the mendicants and as they were approaching The Country Where The Kāveri Flows, Tāmarai was standing, waiting, thinking, "Still there are no mendicants in sight!" At that very moment she saw Kuṉṉuṭaiyā bringing the mendicants. She went inside and said, "Female, maid! Lay out a thousand eating leaves, and serve up the food." By this time the thousand mendicants and Kuṉṉuṭaiyā had arrived.

Tāmarai: "Husband! Have you brought a thousand mendicants?"

Kuṉṉuṭaiyā: "Yes, oh woman! I have brought a full thousand."

When the leaves had been laid out and Tāmarai began counting the mendicants there were only nine hundred and ninety-nine. One beggar was missing.

Tāmarai: "Husband! Is there not one more mendicant to be seen?"

Kuṉṉuṭaiyā: "Oh woman! One very old beggar came along. It is he who is missing, it seems, O.K., never mind. I will sit before that extra eating leaf."

Tāmarai: "Husband! Vishnu said that a thousand mendicants were needed. If that number is lessened by one, our boon will be reduced in kind. I will go and get one more mendicant. In the meanwhile you keep track of all who eat and leave," said Tāmarai and she set off looking for Srirangam.

Song:

Searching, searching for Srirangam
She is going quickly, oh Tāmarai
Seeing hills she climbs over them
Seeing valleys she crosses them and goes

தாமரை ஸ்ரீரங்கம் வந்து நால்பக்கமும் பார்த்துத் தாசனைக் காணாமல் மனம் தளர்ந்து திரும்பி ஊருக்குப் புறப்பட்டாள்.

(பாட்டு) ஸ்ரீரங்கம் விட்டல்லவோ விட்டல்லவோ
பொன்னிவள நாடுவாறாள் நாடுவாறாள்
தாசனைக் காணுமென்று பத்தினியாள்
தவித்து நல்லோ வருகிறாளே தாமரையாள்

இப்படித் தாமரை தாசனைக் காணுமென்று தவித்து வரும்போது மாயவர் பாதிவழியில் காசிக்கரை ஓரத்தில் தாசன்போல் வடிவெடுத்து, நெற்றியில் தங்கநாமம் போட்டு வலம்புரிச்சங்கும் கோபாலப் பெட்டியும் தோளில் போட்டு வரை ஓட்டைக் கையில் எடுத்து, தாமரை வரும் திசையில் தாமரைக்குத் தெரியும்படி. "பளீர்" என்ற ஒரு ஜோதியுடன் கீழே விழுந்தார். இதைப் பார்த்த தாமரை, "ஐயோ! என்னவோ ஜோதிபோல் மின்னுகிறது" என்று ஓடிப் பார்க்கும்போது மாயவர் திணறிக்கொண்டு கீழே கிடந்தார். தாமரை மாயவரைப் பார்த்து, "சுவாமி! ஸ்ரீரங்கத்தில் எல்லாத் தாசனையும் காணாமல் செய்துவிட்டு இங்கு வந்து படுத்துக் கொண்டீரா, சாமி?" என்று கீழே உட்கார்ந்து மாயவரைக் கையால் தூக்கினாள்.

மாயவர் - "அம்மா, தாமரை! எல்லா தாசர்களும் வந்துவிட்டார்களா?"

தாமரை - "சுவாமி! தாங்கள்தான் கூட்டிவந்துவிட்டு இங்கு வந்து விட்டீர்கள், சரி, வாருங்கள் போகலாம்"

என்று அரண்மனைக்குக் கூட்டிவந்தாள். பெரியதாசனைக் (மாயவரை) கூட்டிப்போய்க் கிழக்குமுகமாக உட்காரவைத்து இரண்டு இலை போட்டு, பதினெட்டுக் காய்கறிகளும் படைத்துப் பூஜைக்குத் தேவையான தேங்காய், பழம் காணிக்கை எல்லாம் கொண்டுவந்து வைத்தார்கள். பின்பு தாசர்கள் பூஜையை ஆரம்பித்தார்கள். மாயவர் வலம்புரிச்சங்கை எடுத்து ஊதினார். அப்படி ஊதும்போது அந்தச் சத்தத்தில் தெய்வலோகம் "கிடுகிடு" என்று நடுங்கியது.

சங்குச் சத்தம் கேட்டுத் தெய்வசபையில் ஈசுவரன், "ஆகா! நம் மைத்துனர் பூலோகத்தில் தாமரை வீட்டில் மாயர்பூஜை செய்வது சங்குச் சத்தம் என் தலையில் உள்ள கிரீடம்கூட கீழே சாய்கிறது" என்று மற்ற தேவர்களுடன் பேசிக்கொண்டார். மாயவர் சங்குத் தொனியில் தாமரை தவிர மற்ற தாசர்கள், குன்னுடையாசாமி உள்பட ஆயிரம்பேரும் மூர்ச்சையாகக் கீழே சாய்ந்தார்கள். பின் மாயவர் விபூதியை வீசியதும் எல்லோரும் மூர்ச்சை தெளிந்து எழுந்தார்கள்.

Tāmarai arrived in Srirangam and looked on all four sides but no mendicants could be .een. With a heavy heart she turned around and started for home.

Song: Leaving Srirangam, leaving it
She is approaching The Country Where The Kāveri
Flows, approaching
"There are no beggars to be seen," says the chaste
lady
She is returning, pining, (our) Tāmarai

As Tāmarai returned, pining at not having seen a beggar, Vishnu took the disguise of a mendicant and (stood) half way along her route, on the edge of the river (Kāveri).[1] On his neck he wore a golden Vaisnavite emblem, he carried a rightspiralled conch and a box for holy powders on his shoulder and he held a cracked beggar's bowl in his hand. In Tāmarai's direction of travel, where she could see him, he fell down with a flash of light.

Tāmarai: When Tāmarai saw this she cried, "Oh my! What is that flashing like a light?" As she ran to see, (she found) Vishnu lay on the ground choking. Seeing Vishnu Tāmarai cried, "Lord! Having made all the mendicants in Srirangam disappear you have come and lay down here, oh Lord!" and she sat down and lifted Vishnu with her arms.

Vishnu: "Woman, Tāmarai! Have all the mendicants arrived?"

Tāmarai: "Lord. you brought them yourself and then (you) came here. All right. Come. Let's go," she said and she took him to the palace. She took the great mendicant (Vishnu) and seated him facing east, placed two eating leaves (in front of him) and served eighteen kinds of vegetable preparations. She set out the needed coconuts, bananas, and gifts for the pūjā. Then the mendicant began to worship. Vishnu took the right spiralled conch and blew it. As he blew the heavens shook.

Siva heard the sound of the conch in the god's counsel-chamber.

"Oh ho. My brother-in-law is performing a Vishnu pūjā on the earth, in Tāmarai's house. The sound of the conch has even knocked the crown off my head," he said, (as he) spoke with the other gods.

---

1 Referred to by the poet as the "Banks of Benares" which is fitting, given that the Kāveri is often called the Southern Ganges in Tamil folk tradition.

மாயவர் - "தாமரை! மடியில் ஒரு இலையைப் போட்டுக்கொண்டு இங்கே வா."

தாமரை அப்படியே வந்ததும் மாயவர் மூன்று கை சாதம் எடுத்து அவள் மடியில் போட்டார். பின், "தாமரை! இன்னும் இரண்டு தாசனிடம் சாதம் வாங்கிக் கீழே உட்கார்ந்து படப்புக்கு[1] நீர் விளாவிச்[2] சாப்பிடு" என்றார்.

தாமரை - "சுவாமி! அப்படியே, நல்லது. தாங்கள் ஒரு பிடி சாதமாவது என் வீட்டில் சாப்பிடவேண்டும்."

மாயவர் "நல்லது" என்று கொஞ்சம் சாதம் சாப்பிட்டுக் கை கழுவிக்கொண்டு, "தாமரை! நான் சொன்ன காரியம் எல்லாம் செய்துவிட்டாயா?" என்றார்.

தாமரை - "சுவாமி! எல்லாம் செய்துவிட்டேன். இன்னும் ஒன்றுதான் பாக்கியிருக்கிறது. சதுரத்தில் ஜோதி வைக்கவேண்டும், அவ்வளவுதான் சுவாமி!"

மாயவர், "சரி, நல்லது" அதையும் செய்துவிட்டுக் கார்த்திகை பிறந்த மூன்றாம் நாள் காசி பொன்னம்பலம் அரசமரம் வந்து சேருங்கள். நான் போய் வருகிறேன்" என்று புறப்பட்டுப் பால்கடல் சென்றார். மாயவர் போனதும் மற்ற தாசர்களும் சென்றுவிட்டார்கள்.

தாமரை - "அடி, குப்பி! ஒரு பாத்திரத்தில் பசுமாட்டின் நெய் ஏழு படி ஊற்றி, அதற்குப் பெரிய திரி ஒன்று போட்டு, செல்லாத்தாக் கோவிலின் முன் இருக்கும் சதுரத்தின்மேல் கொண்டுபோய் ஜோதி பொருத்தி வைத்து விட்டு வா."

குப்பி உடனே சென்று அப்படியே செய்துவந்தாள்.

(பாட்டு)
இந்தப் பிரகாரம் பொன்னி வளநாட்டில்
நடக்குது அதிகாரம் இனி அதிகாரம்
நாளொருநாள் பொழுதொரு நாள்
நடக்குது பார் நல்பருவம்
மாதமூன்று மழைபெயும் நாட்டிலே
வருஷமொரு கல்மாரி
ஆனை கட்டித் தாம்பாடும் அது
அழகு பொன்னி வளநாடு

1 படையல் 2 நீர் தெளித்து

At the sound of Vishnu's conch all except Tāmarai swooned and fell down. Then Vishnu threw some sacred ash, everyone's dizziness dissipated, and all got up.

Vishnu: "Tāmarai. Put an eating leaf in the apron-like fold of your sari and come here." She did this. (Then) Vishnu took three handfuls of cooked rice and put them in the fold and said, "Tāmarai. Take rice from two more mendicants, then sit down, sprinkle the whole with water and eat."

Tāmarai: "Lord! It is good that way. You (too) must eat a measure of cooked rice in our home."

Vishnu: Vishnu said, "Good," ate a little rice, washed his hands, returned and said, "have you done all the things I told you to?"

Tāmarai: "Lord. It has all been done. Only one thing remains. A lamp must be placed in a square (enclosure). That is all, Lord!"

Vishnu: "O.K., good! Do that and on the third day of the month of Kārttikai,[1] come to the mightly golden ficus religiosa tree in Benares. I will go and return," Vishnu said, and he left for the milk sea. When Vishnu had gone the other mendicants also left.

Tāmarai: "Oh, maid! Put seven paṭi measures of ghee into a pot, place a large wick in it, set the whole on the square platform in front of the Cellāttā temple, and come."

The maid came immediately, did this, and returned.

Song:

At this time in The Country Where The Kāveri Flows
Things were happening, sweet things
Day after day, time followed time
See the good age in progress
It rained three times a month in this land
(And) once a year (there was) a shower of hail stones
Threshing was done by elephants (there)
Oh beautiful Country Where The Kāveri Flows!

---

1 November--December

குன்னுடையா ராஜரும் தாமரையும் காசி பொன்னம்பலம் போகிறார்கள் என்று கிராமத்துக் கவுண்டர்களுக்கும் குடிபடைகளுக்கும் தெரிந்து எல்லோரும் பொன்னி வளநாடு வந்து குன்னுடையா ராஜரையும் தாமரைக் கவுண்டச்சியையும் காணிக்கை வைத்துக் காண்பார் சில கோடி, மாணிக்கம் வைத்து வருந்துவார் சில கோடி.

குன்னுடையா - "கிராமத்துக் கவுண்டர்களே! மற்றும் குடிபடைகளே! நாங்கள் காசி பொன்னம்பலம் போய்வர இருபத்தொன்று வருஷங்கள் ஆகும். நாங்கள் வரும்வரை ஜாக்கிரதையாகப் பார்த்துக் கொள்ளுங்கள்."

"சாமி! அப்படியே, நல்லது. நாங்கள் போய்வருகிறோம்" என்று கவுண்டர்களும் குடிபடைகளும் அவரவர் ஊர்களுக்குச் சென்றார்கள்.

கார்த்திகை பிறந்து மூன்றாம் நாள் திங்கள்கிழமை வெள்ளி உதித்து வெண்கோழி கூவுமுன் தாமரை எழுந்து மாதர்களைக் கூப்பிட்டு அரண்மனையை அலங்காரம் செய்யச் சொல்லிவிட்டுத் தானும் குன்னுடையா ராஜரும் காசிக்கரை சென்று குளித்துவிட்டுச் செல்லாத்தாளுக்கு அமுது வைத்து அருபூஜை, குருபூஜை, ஐம்பத்தி எட்டு லிங்க பூஜையும் சரியாக நடத்தினார்கள்.

தாமரை - "செல்லாத்தா, ஈசுவரி! உன் உதவியால் நான் வரம் வாங்கக் காசி பொன்னம்பலம் போகிறேன். நீ எனக்குத் துணைவந்து வரம் வாங்கித்தர வேண்டும்"

என்று நமஸ்கரித்துப் பின் இருவரும் அரண்மனை வந்து சேர்ந்தார்கள். குன்னுடையாசாமியும் தாமரையும் வரத்துக்குப் போவது நாடுபூராவும் தெரிந்தது. வரத்துக்குப் போகும் செய்திகேட்டு அவர்கள் காராம் பசுக்கள் இரண்டும் வந்து தாமரையைக் கண்டு, "அம்மா! நீ காசிக்கு வரத்துக்குப் போகிறாயாமே?", என்று,

காராம்பசு -

(பாட்டு) "அம்மா உனக்கு வரம் வாங்கையிலே
எனக்கு வரம் வாங்கி வாம்மா

அம்மா! நீ தேடும் மைந்தன் வந்து ஆயிர மா நிலத்தைச் சுற்றிப் பார்க்கும்போது என் வயிற்றில் பிறந்த கன்று விளையாடிக் கொண்டிருந்தால் அதைப் பார்த்து உன் மைந்தர்கள் சந்தோஷமடைவார்கள்."

தாமரை - "சரி, பசுக்களே! அப்படியே (வரம்) வாங்கி வருகிறேன்."

The Kavuṇṭars of the revenue units and the (other) residents came to know that King Kuṉṉuṭaiyā and Tāmarai were going to the great golden Benares. They all came to The Country Where The Kāveri Flows and brought King Kuṉṉuṭaiyā and Tāmarai Kavuṇṭacci several crores of gifts and precious stones.

Kuṉṉuṭaiyā: "Oh Kavuṇṭars of the revenue units, and the other resident: It will be twenty-one years before we return from the grea , golden Benares. Look after everything well until we return."

Kavuṇṭars: "Lord. That is good. We will go," said the Kavuṇṭars and other residents, and they went home.

On Monday, the third day of the month of Kārttikai, before the crowing of the cocks at dawn, Tāmarai called the maids and told them to decorate the palace. Then King Kuṉṉuṭaiyā and Tāmarai went to the banks of the river, bathed, cleaned the temple and performed the god's pūjā, the pūjā for the family deity and the fifty-eight lingam pūjā.

Tāmarai: "Oh Cellāttā, Īswari! With your help I am going to the great, golden Benares to obtain a boon. You must come as a guardian and (help) get the boon for me," She said this and paid her respects. Afterwards the couple returned to the palace.

The whole country had (now) come to know that Kuṉṉuṭaiyā and Tāmarai were going in order to obtain a boon. When they heard the news, Tāmarai's two black cows came, saw her (and said), "Lady. So you are going to Benares to obtain a boon!"

Song: Women, while obtaining a boon for yourself
Obtain a boon for me

Cows: "Lady. When your hoped for son arrives, and when he goes to see the thousand fields, if he sees a calf born of my womb playing, then your son will become happy."

Tāmarai: "Alright, oh cows! I will obtain (that boon for you) and return."

காராம்பசுக்கள் "சரி" என்று சந்தோஷமடைந்து சென்றபின் நீலாக் குதிரைகள் இரண்டும் வந்து தாமரையைக் கண்டு, "அம்மா! காசிக்கு வரம் வாங்கப் போகிறாயாமே?" என்றன.

தாமரை - "ஆமாம். நான் போய் வருகிறேன் நீலாவே!"

நீலாக்குதிரை

(பாட்டு) "அம்மா உனக்கு வரம் வாங்கையிலே
எனக்கு வரம் வாங்கி வாம்மா

அம்மா! நீ தேடும் மைந்தன் வருங்காலத்தில் மலைகளையும் குன்றுகளையும் என் குட்டிகளின்மேல் ஏறி மின்னல்வேகத்தில் தாண்டக்கூடிய நல்ல பராக்கிரமம் உள்ள வரம் எமக்கு வாங்கி வாருங்கள்."

தாமரை - "சரி, நீலாவே! அப்படியே வாங்கி வருகிறேன்."

நீலாக் குதிரைகள், "ஆத்தா, நல்லது" என்று புறப்பட்டுச் சென்றபின் பொன்னி வளநாட்டுக் காராம்பறச்சி குழந்தை இல்லாமல் தாமரை வரத்துக்குப் போகும் செய்தி கேட்டு அரண்மனைக்கு வந்து தாமரையைக் கண்டு, "ஆத்தா! காசி பொன்னம்பலம் போகிறீர்களாம்,

(பாட்டு) உங்கள் வரம் என்தாயே வாங்கையிலே
எனக்கு வரம் வாங்கிவாரும்

அம்மா! எனக்கு மோசமான வரம் வாங்கக் கூடாது. நீங்கள் தேடும் ராஜா வரும் காலத்தில் அவர்களுக்குத் துணையிருக்க மின்னல் வேகத்தில் ஓடக்கூடிய, மேகத்தைப் பிடித்து நிறுத்தக்கூடிய, பதினாறு யானை பலம்கொண்ட மைந்தன் வரம் எனக்கு வாங்கி வரவேண்டும்" என்றாள்.

தாமரை, "சரி, அப்படியே வாங்கி வருகிறேன்" என்றாள். மற்றும் கிராமத்திலிருந்து எத்தனையோ பேர்கள் வந்தார்கள். எல்லோருக்கும் வரம் வாங்கி வருவதாகச் சொல்லிவிட்டு, "அடி, மாதர்களே! இருபத்தி ஒன்று வருடத்திற்கு உங்களுக்குத் தேவையான உணவுப் பொருள்களை எடுத்துக் கொள்ளுங்கள்" என்றாள். மாதர்கள் தேவையான பொருள்களை எடுத்துக் கொண்டபின் தாமரை, "சரி, நாதா! புறப்படுங்கள் போகலாம்" என்று இருவரும் வெளியில் வந்து நாலு வாயிலையும் சாத்திப் பூட்டிவிட்டுப் பிள்ளையார் கோவிலில் வந்து நின்று,

The black cows said "O.K." and became happy.

Horses: After (the cows) had returned the two blue horses came. Seeing Tāmarai they said, "Oh lady. So you are going to Benares to obtain a boon!"

Tāmarai: "Yes, I shall go and return, oh blue ones!"

Song: Women, while obtaining a boon for yourself
Obtain a boon for me

Horses: "Lady. When the time of your hoped for son arrives, let him mount my colt to cross mountains and hills with lightening speed (and) great bravery. Obtain this boon for me."

Tāmarai: "O.K., blue ones! I shall obtain it and come."

Horses: "Lady. Good," they said and set off.

After they had left a black, childless Paṟaiyā woman of The country Where The Kāveri Flows, having heard Tāmarai was going to obtain a boon, came to the palace. Seeing Tāmarai she said, "Lady! So you are going to the great, golden Benares!"

Song: Mother, while obtaining a boon for yourself
Obtain a boon for me

Paṟaiyā: "Lady! You must not obtain an inferior boon for me. When the time of your hoped for king arrives you must obtain for me the boon of a son who will be his assistant. He should be a man with the strength of sixteen elephants who can run with the speed of lightening and who can grab and bring to a halt the clouds."

Tāmarai: "O.K. I will obtain it and come." In addition, numerous others came from the revenue towns. After all were promised something, (she called) "Oh you maids! Secure enough food and other things to last yourselves twenty-one years." Then Tāmarai said, "O.K., husband. Start out. Let's go." The two came outside, closed and locked the four gates, and went and stood at the Pilliar temple where (she called) "Vishnu! The one who rescues people in trouble,

"மாயவனே! ஆபத்பாந்தவா! அனாதரட்சகா! பூபாலகா! பண்டாரிநாதா! நான் தெய்வ சிருஷ்டியில் பிறந்தது உண்மையானால் நாங்கள் காசி பொன்னம்பலம் சென்று வரும்வரை கதண்டுகளும் வண்டுகளும் வந்து அரண்மனையைப் பாதுகாக்க வேண்டும் மாயவா!"என்று மாயவரைத் தோத்திரம் செய்யவும் தெய்வசபையிலிருந்து கதண்டுகளும் வண்டுகளும் பூலோகம் வந்து தாமரையின் அரண்மனையைச் சுற்றிலும் காவல் புரிந்தன.

குன்னுடையா ராஜரும் தாமரையும் பிள்ளையார் கோவில் விட்டுப் புறப்பட்டார்கள்.

(பாட்டு)
வடகசூ நல்லோ வடக்குத் திசை நோக்கி
இனி வருகிறாளே நாதரைக் கூட்டிக்கொண்டு
சங்குவடம் சங்குவடம்
தாண்டியல்லோ அங்குத் தாண்டியல்லோ

இருவரும் சங்குவடம் தாண்டி வடக்கு வரும்போது இவர்கள் காசி பொன்னம்பலம் போகும் செய்தி கேட்டுத் தாமரை முன் வாங்கிவந்து வளர்த்திய பன்றி வழியை மறைத்துக் கருமலைபோல் படுத்திருந்தது.

குன்னுடையா - "பெண்ணே! அதென்ன வழியில் ஏதோ படுத்திருக்கிறது?"

தாமரை - "நாதா! நாம் வளர்த்திய பன்றிதான் வழியை மறித்துப் படுத்திருக்கிறது."

குன்னுடையா - "பெண்ணே! நாம் பன்றியை வளர்த்தக் கூடாது என்று முன்னமேயே சொன்னேன் கேட்டாயா? இபபோது நாம் போகும்போது வழியில் குறுக்காட்டிப் படுத்திருக்கிறது"

என்று குன்னுடையா ராஜர் தாமரையைச் சண்டை பிடிக்கவும் தாமரைக்குக் கோபம் வந்து பன்றியை நோக்கி, "எல்லோரும் அரண்மனையில் வந்து வரம் வாங்கிவரச் சொல்லிக் கேட்டார்கள். நீ வழியை மறித்துப் படுத்திருக்கிறாயா?" என்று வலது காலால் பன்றியை எட்டி உதைக்கும்போது, பன்றி திடீர் என்று எழுந்து நாலு காலையும் பூமியில் கோபத்துடன் தட்டி நின்று, "சண்டாளி, தாமரை! நீ வரம் வாங்கப் போகும் பெருமையில் என்னை வலதுகாலால் எட்டி உதைத்தாயா? சரி. நல்லது. ஆனாலும் அம்மா நீ போயே தவமிருப்பாய், பொன்னரையும் பெற்றெடுப்பாய். பொன்னருக்கு நேர் இளைய சங்கரையும் பெற்றெடுப்பாய். இளைய சங்கருக்கு நேர் இளைய தங்காளையும் பெற்றெடுப்பாய். நான் வீரப்பூர் வேட்டுவன் சீமைக்குப் போய் வீரதங்கா பத்தினியிடம் அடைக்கலமிருந்து அந்த வீரப்பூர் கருகாளி அம்மன் கோவிலில் நான் இருபத்தியொரு வருஷம் தவமிருந்து ஏழு குட்டிகளுக்கு வரம் வாங்கி

the savior of orphans. King of the worlds! The one who rules Paṉṭaripuram.[1] If it is true that I was born of God's creative force, then you must send black beetles and wasps to watch the palace until we return from the great, golden Benares, oh Vishnu!"

While Tāmarai was praising Vishnu, black beetles and wasps came to earth from the god's counsel-chamber and circled Tāmarai's palace, guarding it. King Kuṉṉuṭaiyā and Tāmarai left the Pilliar temple and set out.

Song:
Looking north, looking far to the north
She is going now, taking her husband with her
Caṅkuvaṭam, Caṅkuvaṭam[2]
She is crossing, she is crossing there

The two crossed Caṅkuvaṭam and were headed northward when the pig Tāmarai had previously bought and raised, having heard they were going to the great golden Benares, lay down on the path, blocking it like a huge mountain.

Kuṉṉuṭaiyā: "Oh woman! What's this, something sleeping in the middle of the path?"

Tāmarai: "Husband! It is the very pig we raised which is lying in the path and blocking it."

Kuṉṉuṭaiyā: "Oh woman! Didn't you listen when I told you before that we should never raise a pig? Now it is lying across our path," said King Kuṉṉuṭaiyā, starting to fight with Tāmarai.

Tāmarai: Tāmarai became angry, looked at the pig and said, "Everyone has been to the palace to ask for boons, (but) you lie down and block the path," and she began kicking the pig with her right foot.

The Pig: All of a sudden the pig got up and angrily planted its four feet on the earth. "Villain, Tāmarai! While going to ask for a boon you proudly kick me with your right foot? O.K., good. But, woman! You will go and do penance. You will give birth to Poṉṉar, and right after Poṉṉar you will give birth to Caṅkar. I will go to the Vēṭṭuvaṉ kingdom of Vīrappūr and having taken refuge with the chaste woman Vīrataṅkā I will do penance for twenty-one years at the

---

[1] A place where a woman who was mistreated by her in-laws was rescued by Vishnu. [2] An imaginary place.

ஏழாவது குட்டி இளைய குட்டிக்கு அறுபது அடி உயரம், எழுபது அடி நீளமுள்ள கொம்பனாக நான் வரம் வாங்கிப் பொன்னருக்கு வலதுகொம்பும் சங்கருக்கு இடது கொம்பும் ஏந்துகுடல் இருக்க இடது குடலைச் சரித்து உன் மைந்தர்களைக் கொல்லும்படி வரம் வாங்கி வாறேன்" என்று பன்றி கோபத்துடன் வீரப்பூரை நோக்கி ஓடியது.

பன்றி போனவுடன் தாமரை மனம் தளர்ந்து நிற்கும்போது, இதையெல்லாம் அரண்மனையிலிருந்து பார்த்துக்கொண்டு இருந்த மூளிநாய்[1] ஓடிவந்து,

மூளிநாய் - "ஆத்தா! பன்றி என்னவோ வேகமாகப் போகிறது. தாங்கள் ஏனோ மனம் தளர்ந்து நின்றுகொண்டீர்களே ஏன்?"

தாமரை - "ஆத்தா, மூளி! நாங்கள் போகும் வழியை மறித்துப் படுத்திருந்தது பன்றி. நான் கோபம் வந்து காலால் உதைத்து விட்டேன். பன்றி கோபமடைந்து, "நான் போய்த் தவமிருந்து ஒரு கொம்பனைப் பெற்றுப் பொன்னருக்கு வலது கொம்பும் சங்கருக்கு இடது கொம்பும் ஏந்து குடல் இருக்க, இடது குடலைப் பிடுங்குகிறேன்" என்று கோபத்துடன் போகிறது. இனி நான் போய் வரம் வாங்கிவந்துதான் என்ன பலன் என்று மனம் தளர்ந்து மேலே போகாமல் நின்றுகொண்டேன்."

மூளிநாய் - "ஆத்தா! அதற்காகத் தாங்கள் கவலைப்பட வேண்டாம். நாயை விட்டால் பன்றியைக் கொன்றுவிடுகிறது. என் வயிற்றில் ஒரு சாண்குட்டி பிறக்கும்படி வரம் வாங்கி வாருங்கள். ஆனால் பல்லில் விஷம் நிறைய இருக்கவேண்டும். அப்படி எனக்கு வரம் வாங்கி வாருங்கள். இதற்காக நீங்கள் கவலைப்பட வேண்டாம்."

"சரி, அம்மா மூளி! நாங்கள் போய்வருகிறோம்" என்று தாமரையும் குன்னுடையாசாமியும் புறப்பட்டார்கள்.

(பாட்டு)
அப்படியே நல்லதென்று
இனி அன்புடனே வருகிறாரே
காடான என்சாமி காடுவிட்டுக்
கட்டப்பொள்ளி என்னாத்தாச் சோலைவிட்டு
இருண்டநல்லோ என்சாமி வனந்தனிலே
இனி இருவரும் வருகிறாரே

குன்னுடையா - "அடி, பெண்ணே! எனக்கு,

(பாட்டு)
ஆனை நெரிஞ்சி முள்ளு பெண்ணே
எனக்கு அப்புதே திரேகமெல்லாம்

---
1 இரண்டு காதும் இல்லாத நாய்

Virappūr Karukāḷi temple. (There I will) obtain the boon of seven piglets. The last piglet, the youngest, will be sixty feet high and seventy feet long and will be called Kompaṉ. That will be my boon. Poṉṉar will get the right tusk and Caṅkar the left tusk. With it their guts will be lifted out and your sons killed. That will be my boon."

Having said this the boar turned angrily in the direction of Vīrappūr and ran off.

After the boar had gone, Tāmarai stood there with a discouraged heart. On seeing all this from the palace, the earless dog came running up and said:

Dog: "Lady. The boar left so fast. Why are you standing with a discouraged heart?"

Tāmarai: "Oh earless dog! The pig was sleeping in our path, blocking it. I became angry and kicked it with my foot. The pig then got angry and said that after I had done penance she would bear a great, tusked pig whose right tusk would be for Poṉṉar and its left for Caṅkar. With these their guts would be pulled out, it said, and it ran off angrily. I thought, "What is the point in my going to obtain a boon?" and my heart became discouraged and came to a stop.

Dog: "Lady. You must not grieve about that. If a dog is sent it will kill the pig. Go and obtain a boon for a pup of one span[1] to be born in my stomach. Let its teeth be full of poison. Obtain a boon like that for me. On account of it you will have no need to fear."

Tāmarai: "O.K., earless, female dog! We will go and return," she said and they set off.

Song:
It was said to be good
They are approaching now, with love
Leaving the forest, my Lord
Leaving the Kaṭṭapoḷḷi forest, my God
Through the dark forest, my Lord
The two of them are approaching now

Kuṉṉuṭaiyā: "Oh, you woman of mine!"

Song:
Thorns of a large leafed thistle, oh woman
All are stabbing my body

---

1 E.g., the size of one open hand.

குதிரை நெரிஞ்சி முள்ளு எனக்குக்
கொத்தோடு ஏறுதடி

அடி பெண்ணே, தாமரை! எனக்குக் கண்ணும் தெரியவில்லை. இருண்ட வனத்தில் எப்படி நான் நடந்து வருவது?"

தாமரை - "நாதா! நான் கையைப் பிடித்து மெதுவாய்க் கூட்டிச் செல்கிறேன். பயப்படாமல் வாருங்கள்."

குன்னுடையா -

(பாட்டு) "நடக்க முடியவில்லை நாயகியே என்செய்வேன்
கனங்காலு சில்லிரெண்டும் கட்டுவிட்டுப் போகுதடி
முழங்காலு சில்லிரெண்டும் மூட்டுவிட்டுப் போகுதடி
இருண்ட வனம்தனிலே எப்படி நான்வருவேன்
சாமி அழுகிறாரே சரீரமே வாடுறாரே"

"பெண்ணே! பக்கத்தில் மலைபோல் தெரிகிறதே. அது என்ன?"

தாமரை - "நாதா! அதுதான் இமயகிரி பர்வதம்."

குன்னுடையா - "பெண்ணே! நாம் எப்படி இதைத் தாண்டிச் செல்வது?"

தாமரை, "நாதா! போவதற்கு வழி ஏதாவது இருக்கும்" என்று பக்கத்தில் போய்ப் பார்க்கும்போது மரம், செடி, கொடிகள் ஒன்றும் இல்லாமல் ஒரே சரிவாய் இருந்தது. தாமரை, "நாதா! ஏறிச் செல்ல வழி ஒன்றும் இல்லையே என்ன செய்வது?" என்றாள்.

குன்னுடையா - "சரி, வழி இல்லாவிட்டால் போகிறது. நாம் ஊருக்குப் போகலாம் வா."

தாமரை - "நாதா! வந்துவிட்டு ஊருக்குத் திரும்பிச் செல்லக் கூடாது. நான் உங்களை முதுகில் கட்டி மலையின் மேல் தவழ்ந்து செல்கிறேன்."

என்று நாதனை முதுகின்மேல் கட்டி மலையில் தாவி ஏற ஆரம்பித்தாள்.

(பாட்டு) உள்ளங்கையை உந்தியுந்தி
மேலே நல்லோ பத்தினி ஏறுறாளே
பெருவிரலை மெட்டி மெட்டி
மலையின்மேலே ஏறுறாளே தாமரையாள்

தாமரை கையை ஊன்றி ஊன்றி இரண்டு பனையுயரம் மேலே சென்றாள். இதை மாயவர் உச்சத்தில் நின்று பார்த்துக்கொண்டு, "ஆகா! தாமரை குழந்தை வரத்துக்காகத் தன் நாதனை முதுகின்மேல் கட்டி வருகிறாளே. இவள் சாமர்த்தியத்தைப் பார்ப்போம்" என்று மாய்கையில் தாமரையின் கையைத் தட்டிவிட்டார். தாமரையின் கை நழுவி இருவரும் உருண்டுவந்து பூமியில்

Thorns of a large thistle, (prick) me
(They) rise up to stab one

"Oh you woman, Tāmarai! My eyes do not see. How can I walk these uninhabited wastes?"

Tāmarai: "Husband. I will hold your hand and lead you slowly. Come without fearing."

Kuṉṉuṭaiyā's Song: I cannot walk, my wife, what shall I do?
My ankle is really hurting
My knee-caps are hurting a lot
How shall I cross this dark forest?
The lord is crying. His body is wilting

Kuṉṉuṭaiyā: "Oh woman! There seem to be mountains nearby. What are they?"

Tāmarai: "Husband! That is a view of the Himalayas."

Kuṉṉuṭaiyā: "Oh woman! How shall we get across them?"

Tāmarai: "Husband! There will be some sort of path to follow," she said. As they drew close and looked carefully there were no trees, plants or creepers to be seen, just a barren, sloping mountain. "Husband. There is no path for climbing up. What shall we do?"

Kuṉṉuṭaiyā: "O.K. There is no path. We shall return home. Come!"

Tāmarai: "Husband! Having come (this far) we must not turn back towards home. I will tie you on my back and crawl up the mountain," she said. And she tied her husband on her back and began to crawl upwards.

Song: Stretching out her palms
The chaste lady climbs upward
Extending her thumbs
Tāmarai is climbing to the mountain top

Tāmarai grasped, grasped with her hands, as she climbed the height of two palmyra palms. Vishnu, standing on the summit, saw this.

Vishnu: "Ah ha! In order to obtain the boon of having children, Tāmarai comes, carrying her husband on her back. We shall observe her cleverness," said Vishnu and with his invisible hand he tapped Tāmarai's hands. Tāmarai's hand slipped. Doubling over, the two of them fell to the ground. Tāmarai

விழுந்தார்கள். கீழே விழுந்ததும் தாமரை எழுந்து நாதனை எடுத்து மடியில் வைத்துப் பார்க்கும்போது குன்னுடையாசாமியின் உயிர் போய்விட்டது கண்டு, "அய்யோ, நாதா!

(பாட்டு) நான் மைந்தன் வரம் வாங்கவந்து
இனி வாங்கவந்து
மன்னவரை அரிராமா நானிழந்தேன்
இங்கு நானிழந்தேன்
பிள்ளைவரம் வாங்கவந்து
இனி வாங்கவந்து
புருஷனை மாயவா நானிழந்தேன்
இங்கு நானிழந்தேன்
குழந்தைவரம் வாங்கவந்து
இனி வாங்கவந்து
கொற்றவரை நானிழந்தேன்
இங்கு நானிழந்தேன்

மைந்தன் வரம் வாங்கவந்து காஞ்சிநாதா மன்னவரை நானிழந்தேன் மாயவா! குழந்தைவரம் வாங்கவந்து இங்குக் கொற்றவரை நானிழந்தேன்" என்று கன்னி அழுகிறாள் காந்தேறிச் சோருகிறாள். நாதனைப் பூமியில் மரத்தடியில் படுக்க வைத்து விட்டுக், கொஞ்சம் தண்ணீர் கொண்டுவந்து, "நாதன் வாயில் ஊற்றிப் பார்ப்போம், உயிர் இருந்தாலும் இருக்கும்" என்று, கானகத்தில் தண்ணீரைத் தேடிக்கொண்டுப் புறப்பட்டாள். இதை அறிந்த மாயவர் கானகத்தில் எங்கும் தண்ணீர் இல்லாமல் செய்துவிட்டு ஒரு இடத்தில் தாமரைத் தடாகம் சிருஷ்டித்து எமனை வரவழைத்து எமன் குயிலாகவும் எம்பெருமாள் மயிலாகவும் வடிவெடுத்து மயிலும் குயிலும் வனத்தில் கூவியது.

தாமரை வனமெல்லாம் தண்ணீர் தேடி இல்லாமல் களைத்து வரும்போது மயிலும் குயிலும் கூவும் சத்தம் கேட்டு, "குளிர்ந்த இடத்தில்தான் மயிலும் குயிலும் இருக்குமென்று பெரியோர்கள் சொல்வதுண்டு. அங்குப் போய்ப் பார்ப்போம்" என்று குயில் கூவும் இடத்தில் போய்ப் பார்க்கும்போது தடாகத்தில் தண்ணீர் நிறைய இருந்தது. தாமரை சந்தோஷமடைந்து தடாகத்தில் முதல்படி இறங்கும்போது,

(பாட்டு) ஒருபடி பத்தினி இறங்கும்போது
இரண்டுபடி தண்ணீர் கீழே இறங்குதடா

got up, and began to lift her husband onto her back (again), and then she saw that he was dead.

Tāmarai: "Oh, oh, husband!"

Tāmarai's Song: To obtain the boon of a son
To obtain it now
I have lost my King, oh Harirāmā
I lost (him) here
To obtain the boon of a child
To obtain it now
I have lost my husband, oh Vishnu
I have lost (him) here
To obtain the boon of offspring
To obtain it now
I have lost my monarch
I have lost (him) here

Tāmarai: "I have come to obtain the boon of a son, oh Lord of Kanjeepuram, (but) I have lost my King, Vishnu! I came to obtain the boon of a child (but) I have lost my monarch here," the chaste woman cried, hot with indignation. She lay her husband under a tree. Then she had the idea of bringing water so as to pour a little in her husband's mouth and see if there was any sign of life." (Then) she set off to find water in a forest grove. Vishnu, learning of this, made sure that there was no water in any grove (nearby). (Then) in one place he created a lotus pond and called Yeman[1] to come. Yeman took the disguise of a cuckoo and Vishnu the disguise of a peacock.

Tāmarai, searching for good water and finding none, was returning exhausted when she heard the call of a peacock and a cuckoo. "The peacock and the cuckoo can be found in cool places the elders say. Let's go there and see," she thought. When she went and looked in the place where the cuckoo was singing, there was a pond with lots of water. Tāmarai became happy and climbed down the first step (towards the water).

Song: As the chaste woman climbed down one step
The water receded to the second step

---

1 A messager god who brings death. His name is spelled Yama in Sanskrit.

இரண்டுபடி தாமரை கீழே இறங்கியதும்
நாலுபடி தண்ணீர் கீழே இறங்குதடா
நாலுபடி அன்னக்கொடி இறங்கும்போது
ஆறுபடி தண்ணீர் கீழே இறங்குதடா
ஆறுபடி பத்தினி இறங்கும்போது
எட்டுப்படி தண்ணீர் கீழே இறங்குதடா
எட்டுப்படி தாமரை இறங்கும்போது
பத்துப்படி தண்ணீர் கீழே இறங்குதடா

இப்படியே தாமரை கீழே இறங்கிச் செல்லச் செல்ல தண்ணீரும் கீழே போய் வறட்டுக் குளமாகிவிட்டது. தாமரை, "ஆகா! மாயவனே! நான் என்ன பாவம் செய்தேனோ? தண்ணீர் இல்லாமல் போய்விட்டது" என்று பாறையின் அடியில் சந்தில் தண்ணீர் இருக்குமென்று பாறைச்சந்தில் உள்ள மண்ணைக் கையில் தோண்டி எடுக்கும்போது அங்குத் தண்ணீர் இல்லை. ஒரு தவளைக்காய் இருந்தது. தாமரை தவளைக்காயைக் கண்டதும், "இதையாவது கொண்டுபோய் நசுக்கிப் பிழிந்து நாதன் வாயில் ஊற்றுவோம்" என்று நினைத்துத் தவளைக் காயைக் கையில் பிடிக்கும்போது தவளை, "அய்யோ, தாமரை! என்னைப் பிடிக்கிறாயா?" என்றதும் தாமரை, "நம் பெயரைச் சொல்கிறது" என்று வீசி எறிந்துவிட்டு,

(பாட்டு) ஒருபடி தாமரை ஏறுமுன்னே
இரண்டுபடி தண்ணீர் மேலே ஏறுதடா
இரண்டுபடி அன்னக்கொடி ஏறுமுன்னே
நாலுபடி தண்ணீர் மேலே ஏறுதடா
நாலுபடி பத்தினி ஏறியதும்
ஆறுபடி தண்ணீர் மேலே ஏறுதடா

இப்படியே தாமரை மேலே வர வரத் தண்ணீரும் மேலே வந்துவிட்டது. தாமரை மேலே வந்து மேற்குத் திரும்பிப் பார்க்கும்போது மாயவர் ஒரு மரத்தடியில் பரதேசி போல் வடிவெடுத்து உட்கார்ந்திருந்தார். மாயவரைக் கண்டதும் தாமரை பக்கத்தில் சென்று, "பரந்தாமா! தாங்களா? இவ்வளவு வேலையும் செய்தீர்களா?" என்று அட்டம் பணிந்து ஆளடிமை செய்து, "பரந்தாமா! என் நாதன் மடியவேண்டிய காரணமென்ன? தாங்கள் வந்து என் நாதனை எழுப்பிக் கொடுங்கள்" என்றாள்.

மாயவர் - "தாமரை! உன் நாதன் காலம் முடிவாகி இறந்துவிட்டார். நான் என்ன செய்வது? உன் நாதனுக்கு உயிர் கொடுக்க நான் ஈசுவரனா? என்னால் எதுவும் செய்யமுடியாதம்மா."

As Tāmarai climbed down a second step
The water receded to the fourth step
As the fine creeper vine climbed down to the fourth step
The water receded to the sixth step
As the chaste woman climbed down to the sixth step
The water receded to the eighth step
As Tāmarai climbed down to the eighth step
The water receded to the tenth step

In this way, as Tāmarai climbed down further and further, the water level dropped until finally the pond was empty.

Tāmarai: "Ah ha, Vishnu! What sin have I committed that all the water should disappear?" she thought. At the bottom of the depression, in a hole she thought there would be water, and as she dug for the dregs with her hand there was (again) none. (Instead) there was a frog. Seeing this Tāmarai thought, "Taking this I shall crush and squeeze it into my husband's mouth." As she caught it in her hand (the frog cried),

Frog: "Oh, oh, Tāmarai! Are you catching me?" it said. Tāmarai thought, "Its saying my name!" and she tossed it away and got up.

Song: Before Tāmarai climbed one step
The water rose to the second step
Before Tāmarai climbed the second step
The water rose to the fourth step
As the chaste lady climbed to the fourth step
The water rose to the sixth step

In this way, as Tāmarai came up and up the water (too) came up. When Tāmarai had reached the top, she turned, and while looking to the west, (she saw) Vishnu seated at the foot of a tree in the disguise of a wandering ascetic. Seeing Vishnu Tāmarai approached him and said, "Oh Vishnu. Is it you? Have you done all these things?". She folded her arms and venerated him. "Vishnu! What is the need for my husband to die? You come, get my husband up and return him" she said.

Vishnu: "Tāmarai! Your husband died when his time was finished. What can I do? Am I Siva, that I can give your husband life? For my part, I can do nothing, woman."

தாமரை - "மாயவா! தாங்கள் நினைத்தால் நடக்காதது ஒன்றுமில்லை. உடனே தாங்கள் என் நாதனை எழுப்பித் தர வேண்டும்."

மாயவர் - "தாமரை! சரி. கொஞ்சம் தண்ணீர் எடுத்துக்கொண்டு வா"

என்று இருவரும் குன்னுடையாசாமி படுத்திருக்கும் மரத்தருகில் வந்து நின்று மாயவர் தாமரை கொண்டுவந்த தண்ணீரை வாங்கிக் குன்னுடையாசாமி மேல் தெளித்துப் பொன்பிரம்பை எடுத்து மூன்று தரம் தட்டினார். தட்டியவுடன் குன்னுடையாசாமி தூங்கி எழுந்ததுபோல் எழுந்து உட்கார்ந்து மாயவரை நமஸ்காரம் செய்தார். "குன்னுடையாக் கவுண்டா! மங்களம் உண்டாகட்டும்! சுகமாய் இருக்கிறாயா?" என்றார் மாயவர்.

குன்னுடையா - "சுவாமி! தங்களுடைய கிருபையில் சுகமாயிருக்கிறேன்."

மாயவர் - "சரி, நல்லது! தாமரை, இந்த இமயகிரியைத் தாண்டிவர உங்களால் முடியாது. நான் ஒரு உபாயம் சொல்கிறேன் கேளுங்கள். அதாவது நான் மேலே போய் உங்களை ஈ போல் வடிவாக்கி ஒரு கயிறுபோல் கொடியைக் கீழே விடுகிறேன். இருவரும் அந்தக் கொடியில் ஒட்டிக் கொள்ளுங்கள். நான் மேலே இழுத்து அந்தப் புறம் இறக்கி விட்டுவிடுகிறேன்."

தாமரை - "சுவாமி! நல்லதுங்கோ."

மாயவர் உடனே அவர்கள் இருவரையும் ஈ போல் வடிவாக்கிவிட்டு மலையின்மேல் போய் நின்று கொடியைக் கீழே விட்டார். ஈ போல் இருந்த குன்னுடையாசாமியும் தாமரையும் கொடியில் ஒட்டினார்கள். உடனே மாயவர் மேலே இழுத்து அந்தப் புறம் கீழே விட்டார். கீழே இறங்கியதும் தாமரை, "சுவாமி! தங்களுடைய உதவியால் மலையைத் தாண்டிவிட்டோம். அதோ முன்னால் நிறைய கல் தெரிகிறதே, அது என்ன சுவாமி?" என்றாள்.

மாயவர் - "தாமரை! அதுதான் கல் ஆறு. அடுத்தது முள் ஆறு. அதற்கு அடுத்தது நெய் ஆறு. அதற்கும் அடுத்தது நெருப்பு ஆறு. அந்த நான்கு ஆற்றையும் கடந்து செல்லவேண்டும்."

தாமரை - "சுவாமி! நாலு ஆற்றையும் கடந்து செல்ல எங்களால் முடியாது. தாங்கள்தான் நாலு ஆறுகளையும் கடந்துசெல்ல அருள் புரியவேண்டும்."

மாயவர் - "சரி நல்லது, தாமரை! நான் முன்னால் வழி ஒதுக்கிச் செல்கிறேன். நீங்கள் இருவரும் என் பின்னால் வாருங்கள்."

தாமரை - "சுவாமி! நல்லது."

(பாட்டு) அப்படியே நல்லதென்று இனி நல்லதென்று
அன்புடனே வருகிறாரே இனி வருகிறாரே

Tāmarai: "Vishnu! There is nothing that cannot be done if you desire it. You must get my husband up immediately!"

Vishnu: "Tāmarai! O.K., take some water and come," he said, and the two of them went and stood under the tree where Kuṉṉuṭaiyā lay. Vishnu took the water Tāmarai had brought and sprinkled it on Kuṉṉuṭaiyā, and (then) took a golden wand and tapped him three times. Kuṉṉuṭaiyā got up, as if from a sleep, sat down, and seeing Vishnu, paid his respects. "Kuṉṉuṭaiyā Kavuṇṭar! Blessings to you! Are you all right?"

Kuṉṉuṭaiyā: "Lord! With your blessings, I am fine."

Vishnu: "O.K., good! Tāmarai, you cannot cross the Himalayas of your own accord! I will tell you a trick, listen. That is, I will go up (to heaven) and obtain for you the disguise of a fly. (Then) I will lower a string like rope. You two grasp hold of that rope. I will draw it up and let it down on the other side."

Tāmarai: "Lord! Very good!"

Vishnu immediately obtained for the two the disguise of (two) flies. (Then) he went to the mountain top, stood, and let down a rope. As flies, Kuṉṉuṭaiyā and Tāmarai took hold of the rope. Vishnu immediately pulled it up and let it down on the other side. Getting off, Tāmarai said, "Lord! With your help we have crossed the mountains. (But) there, in front, there seem to be many stones. What is that, Lord?"

Vishnu: "Tāmarai! That is a river of stone. Next is a river of thorns. Next is a river of ghee. Next is a river of fire. All four rivers must be crossed."

Tāmarai: "Lord! I cannot cross these four rivers of my own accord. To cross these four rivers you must exercise your mercy."

Vishnu: "All right. Good, Tāmarai! I will go first and point the way. You two follow behind me."

Tāmarai: "Lord. Good."

Song: Saying it was good, saying it was good now
They are going with love, going now

ஆயருட கிருபையாலே இனிக் கிருபையாலே
வருகிறாரே அரன்பதி தேடியல்லோ

மாயவர் இருவரையும் நாலு ஆற்றையும் தாண்டிக் கூட்டிவந்து, "தாமரை! இனி அடுத்தது நாகவனம். அந்த வனத்தில் ஒரு நாகன் வந்து உங்களை வழியைக் குறுக்காட்டும். அது, "எனக்கு ஒரு வரம் வாங்கிவா" என்று சொல்லும். வாங்கி வருவதாகச் சொல்லிவிட்டு வரடிக்கல்லுக்கு வந்துசேருங்கள்" என்று மாயவர் முன்னால் சென்றுவிட்டார். மாயவர் சென்றபின் இருவரும் நடந்து வரும் போது நாகன், "யாரோ நம் வனத்தில் வருகிறார்கள்" என்று படமெடுத்து,

(பாட்டு) சீறிச்சா என்னாத்தா நாகனது
சிதறியே என்சாமி வருகுது பார்
ஆக்கரித்து[1] என்சாமி பல் கடித்து
ஆங்காரமாய் என்சாமி வருகுது பார்

நாகன் கோபமாக அருகில் வந்து பார்க்கும்போது இருவரும் தெய்வப் பிறவியாக இருப்பதைப் பார்த்து, "அம்மா! நீங்கள் யார்? எந்த நாடு?" என்றான்.

தாமரை - "நாகேந்திரா! நாங்கள் பொன்னி வளநாடு. என் பெயர் தாமரையாக் கவுண்டச்சி. அருகில் நிற்பவர் என் நாதன்."

நாகன் - "ஓகோ! அப்படியா, நல்லது. நீங்கள் வருவீர்கள் என்று மாயவர் என்னிடம் சொன்னார்.

(பாட்டு) அம்மா உனக்கு வரம் வாங்கையிலே
எனக்கு வரம் அன்னக்கொடி வாங்கிவாம்மா!

அம்மா, தாமரை! உனக்கு வரம் வாங்கையிலே எனக்கு ஒரு வரம் வாங்கி வாம்மா. அம்மா, தாமரை! நீ தேடும் மைந்தர்கள் வந்த காலத்தில் என் குழந்தையும் உன் குழந்தைகளுக்கு உதவி செய்யும்."

தாமரை - "நாகேந்திரா! அப்படியே வரம் வாங்கி வருகிறேன்."

நாகன் - "சரி, நல்லது. சுகமாய்ப் போய்வாருங்கள்."

தாமரையும் குன்னுடையாசாமியும் நாகனிடம் விடைபெற்றுப் புறப்பட்டார்கள்.

(பாட்டு) அப்படியே என்னாத்தா நல்லதென்று
இனி அன்புடனே வருகிறாரே
வரடிக் கல்லு தேடியல்லோ
வருகிறார் என்சாமி இருவருமே

1. வெகுண்டு

With the blessings of the Lord, with his blessings now
They are coming, searching for Siva's abode

Vishnu, having brought the two across the four rivers, said, "Tāmarai! Next is the forest of cobras. In that forest a cobra will block your path. It will say 'Bring me a boon.' Having told it you will bring one, come to the stone for barren, childless women." Having said this, Vishnu went on ahead. When Vishnu had left, and the two had begun to walk across the cobra forest, a cobra wondering who was entering his grove, spread open his hood.

Song: The cobra hissed, my Lord
See how it wiggles as it comes, my God
At that moment, my Lord, it showed its teeth
See, my God, how arrogant it is

The cobra became angry, came close and looking (carefully) saw two god-like figures.

Cobra: "Woman! Who are you? What country are you from?"

Tāmarai: "Cobra king! I am from The Country Where The Kāveri Flows and my name is Tāmarai Kavuṇṭacci. The person standing nearby is my husband."

Cobra: "Oh ho! If that is so, good! Vishnu told me that you would come."

Cobra's Song: While obtaining a boon for yourself, woman
Oh fine creeper vine, obtain a boon for me

Cobra: "Woman, Tāmarai. While obtaining a boon for yourself obtain a boon for me. Woman, Tāmarai! When the time of the son you search for arrives my child will be of help to your children."

Tāmarai: "Cobra king! I will obtain such a boon."

Cobra: "O.K., good! Go in good health and return!"

Kuṉṉuṭaiyā and Tāmarai took leave of the cobra and set out.

Song: It was said to be good, my Lord
They are going, now, with love
Searching for the holy stone for barren women
They are going, my Lord, the two of them

இருவரும் வரடிக் கல் வந்து சேரும்போது மாயவர் எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்.

மாயவர் - "தாமரை! சுகமாய் வந்து சேர்ந்தீர்களா?"

தாமரை - "சுவாமி! தங்களுடைய கிருபையால் வந்து சேர்ந்தோம்."

மாயவர் - "சரி, நல்லது! அதோ கங்கை நதி ஓடுகிறது. அதில் போய்க் குளித்துக்கொண்டு வா."

தாமரை உடனே சென்று குளித்துவிட்டு வந்து நின்றாள்.

மாயவர் - "தாமரை! சிவனுடைய படிக்கட்டில் கல்லும் முள்ளும் இருக்குது பார். அதை மண்டியிட்டு வாயில் கவ்வி இந்த வரடிக் கல்லை ஏழுதரம் சுற்றிவா."

தாமரை உடனே மண்டியிட்டுக் கல்லையும் முள்ளையும் வாயில் எடுத்துக் கல்லை ஏழுதரம் சுற்றிவந்து முன்போல் கல்லையும் முள்ளையும் படிக்கட்டில் வைத்துவிட்டு எழுந்து நின்றாள்.

மாயவர் - "தாமரை! தமிழுக்கு இருவர். தவசுக்கு நீ ஒருத்திதான் வரவேண்டும். உன் நாதனை இங்கு வைத்து உயிரைப் பிடித்து ஒரு தங்கச்சிமிழில் அடைத்துச் செல்வோம். இருபத்து ஒன்று வருஷம் முடிந்து போகும்போது உயிரைக் கொடுப்போம்."

தாமரை - "சுவாமி! அப்படியே, நல்லது."

உடனே மாயவர் குன்னுடையாக் கவுண்டனை வரடிக் கல்லின் மேல் உட்காரவைத்து உயிரைப் பிடித்துத் தங்கச் சிமிழில் அடைத்துக்கொண்டு மாயவரும் தாமரையும் புறப்பட்டார்கள்.

(பாட்டு) அப்படியே என்சாமி நல்லதென்று
அன்புடனே என்சாமி வருகிறாரே
மாயவரும் என்சாமி முன் நடக்க
தாமரையும் என்சாமி பின் துடர்ந்தார்
பரந்தாமன் என்சாமி முன் நடக்கோ
பத்தினியும் என்னாத்தாப் பின் துடர்ந்தாள்
தெய்வசபை என்சாமி தேடியல்லோ
தாமரையை என்சாமி கூட்டிவாறார்

As the two of them arrived at the stone for the childless Vishnu was there waiting for them.

Vishnu: "Tāmarai. Have you arrived safely?"

Tāmarai: "Lord! With your blessing, we have arrived."

Vishnu: "O.K. Good! The river Ganges is flowing over there. Go bathe in it and come back."

Tāmarai immediately went, bathed, and returned.

Vishnu: "Tāmarai. See the flight of Siva's steps[1] there with stones and thorns on them? Kneel down, take the stones and thorns in your mouth, circle this place for barren women seven times, and come back." Tāmarai immediately took the stones and thorns in her mouth, circled the place seven times, and replaced the stones and thorns on the steps as before. Then she got up and stood.

Vishnu: "Tāmarai! There are two people closely associated with Tamil[2], but for penance you are the only one![3] We will place your husband here, take his life and put it in a golden box. After twenty-one years, on returning, we will restore him to life."

Tāmarai: "Lord. That is good."

Vishnu immediately sat Kunnuṭaiyā Kavunṭar on top of the stone for the childless, took his life and placed it in a golden box. Then Vishnu and Tāmarai set off.

Song:

It was said to be good, my Lord
They are going with love, my Lord
Vishnu walks ahead, my Lord
Tāmarai follows after, my Lord
The most excellent one walks ahead, my Lord
The chaste lady walks behind, my God
Searching for the god's counsel-chamber, my Lord
He is taking Tāmarai (there), my Lord

---

[1] Steps leading to Siva's abode? [2] Possibly Agastiar (who formulated Tamil grammar) and Murukan (the most ancient of Tamil divinities). [3] The only one as strongly associated with penance as these two are with Tamil.

தெய்வசபைக்குப் பக்கம் வந்து நின்று மாயவர், "தாமரை! தெய்வசபையில் பாபம் செய்த மானிடரை நரகத்தில் போட்டு மிதிப்பார்கள். தர்மம் செய்தவர்களைச் சொர்க்கத்திலும் வைப்பார்கள். கர்மம் செய்தவர்களை நரகத்தில் போட்டு மிதிக்கும்போது அவர்கள் உயிர், "அய்யோ அய்யோ" வென்று அழுகும். ஆகையால் நீ எங்கும் திரும்பிப் பார்க்காமல் என் பின்னால் வரவேண்டும்" என்றார்.

தாமரை, "சுவாமி, நல்லது" என்று மாயவர் முன்னாலும் தாமரை பின்னதாகவும் சிறிது தூரம் சென்றதும் அங்கு ஒரு பெண்ணை நரகத்தில் போட்டு மிதித்துக் கொண்டிருந்தார்கள். அந்தப் பெண்ணின் உயிர், "அய்யோ அய்யோ" என்று சத்தமிட்டதைத் தாமரை திரும்பிப் பார்த்து, "சுவாமி! இந்தப் பெண் என்ன பாவம் செய்தாள்? உயிரை நரகத்தில் போட்டு மிதிக்கிறார்களே ஏன் சுவாமி?" என்றாள்.

மாயவர், "தாமரை! நான் திரும்பிப் பார்க்கக்கூடாது என்று சொல்லியும் நீ கேட்கவில்லையே! அந்தப் பெண் பூலோகத்தில் வண்ணான் கூலி, நாவிதன் கூலி, மருத்துவர் கூலி இவர்களுக்குக் கூலியைக் கொடுக்காயல் அநியாயம் செய்ததால் நரகத்தில் போட்டு மிதிக்கிறார்கள். இனி என்ன சத்தம் கேட்டாலும் திரும்பிப் பார்க்காமல் என் பின்னால் வா" என்று இருவரும் சிறிது தூரம் போகும்போது அங்கு ஒரு பெண்ணை மரத்தில் தலை கீழ் கால் மேலாகக் கட்டித் தூதர்கள் சவுக்கால் அடித்துக் கொண்டிருக்கும்போது அந்தப் பெண் உயிர், "அய்யோ. அய்யோ" என்று சத்தம் போடுவது தாமரை காதில் கேட்டு, "பரந்தாமா! இவள் என்ன பாவம் செய்தாள்? தலைகீழாகக் கட்டி அடிக்கிறார்களே" என்றாள்.

மாயவர் - "தாமரை! அவள் பூலோகத்தில்,

(பாட்டு)

புருஷனைக் கீழே வைத்து அவள்
கட்டிலேறிப் படுத்தவம்மா
கணவரைக் கீழே வைத்து அவள்
கட்டிலேறிப் படுத்தவம்மா!

அதனால்தான் அவளுக்கு இந்தத் தண்டனை கொடுக்கிறார்கள். சரி, இனி எங்கும் திரும்பிப் பார்க்காமல் என் பின்னால் வா."

இருவரும் சிறிது தூரம் சென்றதும் அங்கு ஒரு ஆண் பிள்ளையின் உயிரை நான்குபேர் சேர்ந்து நரகத்தில் போட்டு மிதித்துக்கொண்டு இருந்தார்கள். தாமரை அதைப் பார்த்ததும், "சுவாமி! இந்த ஆண்மகன் என்ன பாவம் செய்தான்?" என்றாள்.

They came close to the god's counsel-chamber and stood. Vishnu said, "Tāmarai! In the god's counsel-chamber those people who have committed sins are put in the hell-pit and trampled on. Those who have been righteous are put in heaven. Those with evil deeds in former births[1] are put in the hell-pit and while being trampled their life (spirit) cries 'Oh my, oh my.' Therefore, without turning around to look anywhere, you must follow after me."[2]

Tāmarai: "Lord. Good," she said and Vishnu walked ahead while she walked behind. After they had gone a short distance there was a woman who was put in the hell-pit and being trampled on. Hearing that woman's life (spirit) cry "Oh my, oh my" Tāmarai turned around to look. "Lord! What sin has this woman committed? Why is she put in the hell-pit and trampled on, Lord?" she said.

Vishnu: "Tāmarai! I told you not to turn around and look but she didn't listen. That woman, (while) on earth, pay the washerman, the barber or the doctor (for their services). By not paying them she caused an injustice and so she has been put in the hell-pit and is being trampled on. From now on, no matter what sounds you hear, follow behind me without looking around," he said, and they went a ways further. There a woman was tied under a tree with her head down and feet up, and was being powerfully beaten. The woman's spirit was emitting the sounds "Oh my, oh my." Tāmarai heard this (and said), "Vishnu! What sin did she commit, to be tied with her head down and feet up and be beaten?"

Vishnu: "Tāmarai! In the world she:"

Song:
Placed the husband on the floor, she did (this)
That woman climbed on the cot and slept
Placed her husband on the floor, she did (this)
That woman climbed on the cot and slept

Vishnu: "That is why she is given this punishment. O.K. Now follow behind me without turning to look anywhere," he said and

---

[1] Literally "Karma," or the sum of "past deeds." [2] In the Mahabharata the eldest of the Paṇḍava brothers, (sometimes called Dharma) is similarly taken to heaven by Krishna (a form of Vishnu) at one point. Krishna tells him not to look at what they pass on the way. But Dharma cannot restrain himself, as he sees his enemies enjoying themselves and his own family suffering in hell. Later Krishna explains the reason for this seeming reversal and tells Dharma that the sight of his relatives suffering so is itself a punishment for him, since Dharma had once told a lie. In our story, Tāmarai similarly "suffers" her glimpses of hell as a part of her penance.

மாயவர் - "தாமரை! இவன் க்ட்டிய மனைவியை விட்டுத் தேவடியாளிடம் குடும்பம் நடத்தினான். அதனால் இவனுக்கு இந்தத் தண்டனை கிடைக்கிறது. சரி! இனி எதையும் பார்க்காமல் என் பின்னால் வா"

என்று மாயவர் முன் நடந்தார்.

(பாட்டு) தெய்வசபை தேடியங்கே இனி
மாயவரும் கூட்டிவாறார்
ஆயரும் முன் நடக்கோ இனி
அருங்கிளியும் பின் துடர்ந்தாள்

இருவரும் காசிப் பொன்னம்பலம் தன்னாசிக் கோம்பை வந்து சேர்ந்தார்கள்.

மாயவர் - "தாமரை! இதுதான் முன் நாளில் அர்ச்சுனன் தவம் செய்த இடம். இங்குதான் நீயும் தவம் செய்யவேண்டும். அதோ பார்! அரசமரப் பொந்தில் காவி வேஷ்டியும் உத்திராட்ச மாலையும் கவச குண்டலமும் பஞ்சாட்சரம், விபூதிப் பெட்டி இவை எல்லாம் இருக்கும். எடுத்து வா."

தாமரை - "சுவாமி! எல்லாம் எடுத்து வந்தேன்."

மாயவர் - "சரி! உன் ஆடைகளை அகற்றிவிட்டுக் காவி வேஷ்டியைக் கட்டிக்கொள்."

தாமரை - "சுவாமி! அப்படியே கட்டிக் கொண்டேன்."

மாயவர் - "சரி! இந்த உத்திராட்ச மாலையைக் கழுத்தில் போட்டுக் கொண்டு, பஞ்சாட்சர விபூதியைத் தேகம் முழுவதும் பூசிக்கொள்."

என்று மாயவர் ஏழு ஊசிகளைப் பாறையில் ஊன்றி ஏழு ஊசிமுனைகளையும் ஒன்றாகச் சேர்த்து, அதன்மேல் ஏழு சயகண்டியை வைத்து, அதன்மேல் ஏழு பாசியை வைத்து, அதன்மேல் ஏழு செப்பூசியை வைத்து, அதன்மேல் ஏழு செவ்வரளிப்பூவை வைத்து, தவசுக் கம்பம் உண்டாக்கி, சரி தாமரை! இந்தத் தவசுநிலையில் ஏறி ஒரு காலை மண்டியிட்டு ஒரு காலைத் தண்டிவாங்கி இரண்டு கண்களையும் மூடி கை இரண்டை ஏந்தி சிவனை நோக்கிக் கடும்தவம் செய்" என்றார்.

தாமரை, "சுவாமி, நல்லது!"என்று தவசுநிலையில் ஏறும்போது தவசுநிலைக் கம்பம் நிலைகொள்ளாமல் ஆடியது.

மாயவர் - "தாமரை! கீழே இறங்கி வா! என்ன குற்றம் செய்தாய்? தவசு நிலை ஆடுகிறது. மறைக்காமல் சொல்."

the two went a ways further. There a man's spirit had been put in the hell-pit and was being
trampled by four people.

Tāmarai, seeing this (cried), "Lord! What sin did this male son commit?"

Vishnu: "Tāmarai! He left his wife and ran a family with some prostitute or other. Therefore he is receiving this punishment. O.K. Now follow behind me without looking anywhere," Vishnu said and led the way.

Song:
Searching there for the god's counsel-chamber
Vishnu brought her with him
The God walked ahead
The lovely parrot followed behind

The two arrived at Taṉṉāci Kōmpai[1] on Siva's dancing ground in Benares.

Vishnu: "Tāmarai! This is the place where Arjunan[2] once did penance. Here is where you must do (your) penance. Look there! In the hollow of that fiscus religiosa tree there is a saffron body cloth, an eloeocarpus bead[3] necklace, a ritual vessel of copper, a coat of mail, and a box of sacred ash. Get all these and come."

Tāmarai: "Lord! I have them all and have returned."

Vishnu: "O.K. Take off your garments and put on the saffron body cloth."

Tāmarai: "Lord! I have put it on."

Vishnu: "O.K. Put the bead necklace around your neck. Rub the sacred ash over your whole body." Having said this Vishnu planted seven needles on a stone with their points together. On this he placed seven victory beads,[4] on these he placed seven glass beads, on these seven red flowers, and on these seven red oleander flowers, to make the pillar or penance. "O.K., Tāmarai. Climb this place of penance, sit with one leg folded and one leg hanging down, close both eyes, extend both arms and meditate on Siva with complete austerity," he said.

Tāmarai: "Lord! Good!" she said, (but) as she climbed the pillar of penance it began to shake.

---

1 A place, maybe for ascetics. 2 Hero of the Mahābhārata, spelled Arjuna in Sanskrit. 3 Prayer beads used by worshippers of Siva. 4 Sacred prayer beads.

தாமரை - "சுவாமி! நான் ஒருநாள் என் அரண்மனையில் படுத்திருந்தேன். அப்போது என் நாதர் எங்கோ சென்றுவிட்டு உள்ளே வந்தார். அப்போது என் கால் பெருவிரலில் அவர் பாதம் பட்டு விட்டது! அதைத் தவிர நான் ஒரு பாவமும் செய்யவில்லை."

மாயவர், "தாமரை! அதுவும் ஒரு பாவம்தான்! நீ மறுபடியும் கங்கைக்குச் சென்று ஏழுதரம் தலைமுழுகி வா!"என்றார். அப்படியே சென்று ஏழுதரம் தலைமுழுகி மாயவரிடம் வந்தாள் தாமரை."சரி! இனித் தவசுநிலையில் நான் சொன்னதுபோல் இருந்துகொள்" என்றார் மாயவர். தாமரை "நல்லது" என்று மேலே ஏறிக் கை இரண்டையும் ஏந்திக் கடுந்தவம் புரிந்தாள். மாயவர் உடனே தாமரையின் உயிரைப் பிடித்துத் தங்கச் சிமிழில் அடைத்துக்கொண்டு தாமரையின் கூந்தலை நான்கு சடையாகப் பின்னி, "இருபத்தியொரு வருஷம் ஆவதற்குள் காற்றும் மழையும் வந்தால் கீழே சாய்ந்துவிடுவாள்" என்று நாலு சடையையும் நாலுமூலைக்கு இழுத்துப் பூமியில் ஒட்டும்படிச் செய்துவிட்டு, "சரி. இனி நாம் செல்வோம். இருபத்தி ஒன்று வருஷம் இப்படியே இருக்கட்டும். முடிந்தபின் வந்து வரம் வாங்கிக் கொடுக்கலாம்" என்று மாயவர் பால்கடல் போய்ச் சேர்ந்தார்.

(பாட்டு) இந்தநல்லோ பிரகாரம் இனிப் பிரகாரம்
நடக்குதுபார் அந்நேரம் இனி அந்நேரம்
நாளொருநாள் பொழுதொருநாள் அங்கு
நடத்துறாளே தாமரை அருந்தவசு
இருபத்தியொரு வருஷம் இனி ஒரு வருஷம்
பெருந்தவம் பத்தினியா செய்யுறாளே
அங்குச் செய்யுறாளே

இருபத்தியொரு வருஷம் சரியாக முடியும்போது மாயவர் பார்த்து, "ஆகா! இனிச் சீக்கிரம் போய்த் தாமரைக்கு வரம் வாங்கிக் கொடுக்கவேண்டும்" என்று, கருட வாகனமேறிக் காசிப் பொன்னம்பலத்தை நோக்கிப் புறப்பட்டார்.

(பாட்டு) அரன்பதி தேடியல்லோ இனி
ஹரிராமர் வருகிறாரே
சிவன்பதி தேடியல்லோ
அங்கு ஸ்ரீராமர் வருகிறாரே
கைலாயம் தேடியல்லோ இனிக்
கண்ணபிரான் வருகிறாரே
தெய்வசபை தேடியல்லோ
வருகிறாரே மாயவரும்

Vishnu: "Tāmarai! Climb down! What sin have you committed? The pillar of penance is shaking. Speak up, without omitting (any details)."

Tāmarai: "Lord! One day I was sleeping in the palace when my husband, having been out somewhere, returned and entered. At that time the big toe of my foot tripped him. Except for that I have not committed any sins."

Vishnu: "Tāmarai! That, (which you described) was a sin. Go again to the Ganges, wash your self seven times, and return," he said. Tāmarai did this, going and washing her self seven times, and then returned to Vishnu. "O.K. Now climb the pillar of penance and stay there," he said. Tāmarai said "Good," climbed up, extended her hands and exercised complete concentration. Vishnu immediately took her life and enclosed it in a golden box. (Then) he braided Tāmarai's hair in four strands. "For twenty-one years endure the winds and rains that beat down upon you." he said. "Let the braids become fixed to the four corners of the ground. O.K. Now, I will tell you. Remain like this for twenty-one years. Afterwards, come and I will give you a boon," Vishnu said and returned to the milk sea.

Song:
At this good time, this sweet time
See the good age in progress, in progress
Day after day, time followed time
Tāmarai did it, a superb penance
For twenty-one years, (twenty) plus one years
The chaste lady performed a great penance
She performed it there

Vishnu saw that twenty-one years of penance had been completed. "Ah ha! Now I must quickly go and obtain a boon for Tāmarai and give it to her," he thought, mounted his Garuda vehicle and set off for the great, golden Benares.

Song:
Looking for the Mighty Fortress
Harirāmā is coming
Searching for the Supreme Siva
Sri Rama is coming there
Searching for Kailāsa now
Lord Krishna is coming
Looking for the god's counsel-chamber
Vishnu is coming

மாயவர் காசிப் பொன்னம்பலம் வந்து தாமரையின் தவசு நிலையையும் உருவத்தையும் பார்க்கும்போது தாமரை காய்ந்து ஒரு விரல் மாதிரி தொங்கினாள். மாயவர் உடலைக் கீழே கொண்டுவந்து பார்க்கும்போது மண்டையில் பெருங்கறையான் அரித்துக்கொண்டு இருந்தது. தாமரையின் நாசியில் தெய்வசபை இந்திராணிக்கிளி[1] கூடு வைத்திருந்தது. கிளியின் குஞ்சுகள் விளையாடிக் கொண்டிருந்தன. மாயவர் அதைப் பிடித்து, "நீ தெய்வசபையில் இருக்கவேண்டாம். பூலோகத்திற்குச் சென்றுவிடு!" என்று வீசிவிட்டார். கிளிகள் இரண்டும் பொன்னி வளநாடு வந்து சேர்ந்தன. கிளிகள், "ஆகா! நாம் இங்கு இருந்தால், பின் காலத்தில் தாமரையின் மைந்தர்கள் வந்து நம்மைப் பிடித்துக் கொடுமைகள் செய்வார்கள்" என்று வீரப்பூர் சென்று வீரதங்கா பத்தினியிடம் அடைக்கலம் புகுந்தன.

வீரதங்கா - "அம்மா, கிளிக் குஞ்சுகளே! நீங்கள் எந்த ஊர்?"

கிளிகள் - "அம்மா! நாங்கள் தெய்வசபைக் கிளிகள்! பொன்னி வளநாட்டுத் தாமரையாக் கவுண்டச்சி இருபத்தொன்று வருஷம் தெய்வசபையில் இருந்தார்கள். அவள் நாசியில் கூடுகட்டி நாங்கள் வாழ்ந்தோம். இருபத்தொன்று வருஷம் முடிந்ததும் மாயவர் வந்து பார்க்கும்போது, நாங்கள் இருந்ததைக் கண்டு எங்களைப் பிடித்துக் கீழே பூலோகத்தில் வீசிவிட்டார். நாங்கள் பொன்னி வளநாட்டில் இருந்தால் பின் காலத்தில் தாமரையின் மைந்தர்கள் வரும் காலத்தில் எங்களுக்கு ஆபத்து வருமென்று தங்களிடம் வந்துவிட்டால் காராளர் இங்கு வரமாட்டார்கள் என்று நினைத்துத் தங்களிடம் வந்தோம்."

வீரதங்கா - "சரி! நல்லது"

என்று நாகமலை, தோகைமலை, நால் பக்கமும் சூழ்ந்தமலை, பத்திப்படர்ந்த மலை, பாரமுள்ள வீரமலை, சுத்திப் படர்ந்த மலை, சுகிர்தமுள்ள[2] வீரமலைக்கு அந்தப் புறம், மதுக்கார வனத்துக்கு இந்தப் புறம் வெள்ளியங்கிரி தடாகம் இருந்தது. கைசோட்டு ஆலமரம், கமுகு[3] பதினாயிரம், விரல்சோட்டு ஆலமரம் விழுது பதினாயிரம், அந்த மரத்தில் மேல்புறம் வாதில் நாட்டுக் கிளிகள் ஆயிரம் கூடுகட்டி வாழ்ந்தன. வீரதங்கா பத்தினி தெய்வக்கிளி இரண்டையும் ஜலமூலை பார்சலில் உள்ள வாதில் விட்டு, "நீங்கள் இருவரும் இங்குப் பயமில்லாமல் இணை பிரியாமல் வாழுங்கள்!" என்று சொல்லி வீரதங்கா பத்தினி, "கிளியை யாராவது பிடித்துவிடுவார்கள்" என்று, அடுத்த வனத்தில் ஐயாயிரம் நாகனைக் காவல் வைத்து அதற்கு அடுத்த வனத்தில் ஐயாயிரம் வேங்கனையும்[4] காவல் வைத்துப் பாதுகாத்து வந்தாள்.

---

1 தெய்வலோகத்துக்கிளி 2. இன்பமான 3. பாக்குமரம் 4. வேங்கைப் புலி

Vishnu arrived in great, golden Benares and as he looked at the figure of Tāmarai on the pillar of penance, she was dried up and hanging like a finger. Vishnu brought the body down and as he looked at it there were huge termites living in her hair. A parrot of the god's counsel-chamber had nested in her nose. Baby parrots were playing (there). Vishnu grabbed them saying "You must not be in the god's counsel-chamber. Go to earth," and he flung them away. The two parrots went to The Country Where The Kāveri Flows.

Parrots: "Ah ha! If we stay here, Tāmarai's sons will later come and catch us and treat us harshly," They said and went to Vīrataṅkā.[1]

Vīrataṅkā: "Women, baby parrots! What town are you from?"

Parrots: "Woman. We are parrots of the god's counsel-chamber. Tāmarai Kavuṇṭacci of The Country Where The Kāveri Flows has performed penance in the god's counsel-chamber for twenty-one years. We were raised in her nose! When the twenty-one years were over Vishnu came to see. He found us there, grabbed us and flung us down to earth. We came to you, thinking that if we stayed in The Country Where The Kāveri Flows that Tāmarai's sons would later mistreat us. (Those) farmers will not come here,[2] we thought, and so we came to you."

Vīrataṅkā: "O.K., good," she said. "On this side of Matukkāra forest, in the area of the hills of Nākamalai, Tōkaimalai, the four-sided Cūḷntamalai, and Pattippaṭarntamalai, in the area of the virtuous Vīramalai, weighty Vīramalai mountain, is the Veḷḷiyaṅkiri tank.[3] There is a huge, spreading ficus religiosa tree with a thousand branches, a spreading ficus religiosa with a thousand aerial roots. On the west side of that tree a thousand country parrots have been raised." The chaste Vīrataṅkā put the two god-like parrots into the hole in the tree and said, "Live here, the two of you, without getting separated." Fearing that someone might catch these parrots, the chaste Vīrataṅkā placed five thousand cobras in the neighboring forest as guards. And in the forest beyond that she placed five thousand tigers as guards, and having taken care of this she returned.

---

1 The younger sister of the Vēṭṭuvās men who will be important in the story at a later point.

2 The Vēṭṭuvas are forest dwellers. 3 These are actual place names. See the accompanying map for the location of the area described.

இங்கு இப்படி இருக்கும்போது தெய்வசபையில் மாயவர் தாமரையின் உடலைக் கங்கை நதிக்கு எடுத்துச்சென்று தண்ணீரில் போட்டு நனைத்து மேலே கொண்டுவந்து உயிரைக் கொடுத்தார். உயிரைக் கொடுத்தவுடன் தாமரை திடீரென்று எழுந்து,

(பாட்டு) "எங்கே ஐயா மைந்தன்" என்று
அன்னக்கொடி ஏந்தினாளே கையிரண்டை

மாயவர் -

(பாட்டு) ஏறுமம்மா தாமரை கம்பத்திலே
இருந்துக்கம்மா பத்தினி கடுந்தவசு

"தாமரை! முன்போல் தவசுநிலையில் ஏறி ஈசுவரனைத் தோத்தரித்துக் கடுந்தவம் செய்! நான் தெய்வசபையில் அக்கினியை வளர்த்தி விடுகிறேன்"

தாமரை கம்பத்தில் ஏறியதும் மாயவர் தெய்வசபையில் அக்கினியை வளர்த்திவிட்டார்.

(பாட்டு) அக்கினி அக்கினிச் செண்டுகளும்
ஈசுவரனை என்சாமி எரிக்குதுபார்

ஈசுவரன், "அடே, தூதர்களே! ஓடிப் பாருங்கள்! சண்டாளன் எவனோ அக்கினியை விட்டு என்னை எரிக்கிறான். அரச மரத்தடியில் யாராவது தவம் செய்கிறார்களா என்று ஓடிப் பாருங்கள்!"என்றதும் தூதர்கள் ஓடிப்போய்ப் பார்க்கும்போது , தாமரை தவம் செய்வதைக் கண்டு ஓடிவந்து ஈசுவரனிடம், "சுவாமி! யாரோ ஒரு பெண்! தவசுநிலைக் கம்பம் நாட்டிக் கடுந்தவம் செய்கிறாள். யார் என்று தெரியவில்லை" என்றார்கள்.

ஈசுவரன்,"அந்தச் சண்டாளியைத் தெய்வசபைக்கு யார் கூட்டிவந்தது? தூதர்களே! அவளைப் போய்க் கீழே இழுத்துப் போட்டுச் சிப்புக் கோடரியால்[1] துண்டுதுண்டாக வெட்டி மூன்று நரகத்தின் கீழ் போட்டு மிதித்துவிட்டு வாருங்கள்" என்றார். தூதர்கள் அப்படியே சென்று தாமரையை வெட்டி நரகத்தில் போட்டு மிதித்துவிட்டு வந்தார்கள். ஈசுவரனுக்கு அக்கினி அடங்கியது.

மாயவர், "ஆகா! தாமரையை வெட்டி நரகத்தில் போட்டு மிதித்து விட்டார்களா?" என்று கவையை எடுத்துக்கொண்டு போய் நரகத்தை விலக்கிவிட்டு மூன்று எலும்புகளைப் பொறுக்கிக்கொண்டு போய்க் கங்கையில் போட்டு நனைத்து மேட்டில் போட்டு உயிரைக் கொடுத்தார். தாமரை திடீரென்று எழுந்து,

1. ஒரு வகைக் கோடரி

At this very time, in the god's counsel-chamber, Vishnu took Tāmarai's body to the bank of the Ganges and moistened it with water. Then he brought it out (of the water) and gave it life. As soon as Tāmarai was given life she quickly got up.

Tāmarai's Song: She said, where is my son, Lord? (And)
The fine creeper vine stretched out (her) two hands

Vishnu's Song: Lady Tāmarai, climb the pillar
Oh chaste lady, do a hard penance!

Vishnu: "Tāmarai! Like before, climb the pillar of penance. Pray to Siva and do a hard penance. I will build a big fire sacrifice in the god's counsel-chamber and return."

Tāmarai climbed the pillar of penance and Vishnu built a sacred fire in the god's counsel chamber.

Song: The fire, the fire splinters
Oh the smell of the sacred fire, the sacred fire
See the (splinters) burn Siva, my Lord![2]

Siva: "Oh goodness, assistants! Run and see! Some villain is burning me as would fire itself. Is someone doing penance at the foot of the ficus religosa tree? Run and see!"

Assistants: The assistants ran and saw that Tāmarai was performing penance. They ran back to Siva and said, "Lord. Some woman has erected a pillar of penance and is completely absorbed in meditation. We don't know who it is."

Siva: "That villain! Who brought her to the god's counsel-chamber? Oh assistants! Pull her down and cut her into pieces with an axe, drop her to the bottom of the three heli-pits, trample on her and come."

The assistants did this. They cut up Tāmarai, placed her in the hell-pit, trampled on her and returned. Siva's rage abated.

Vishnu: "Oh ho. So you cut up Tāmarai, put her in the hell-pit and had her trampled?" (Vishnu) said and he took a forked stick, went to the hell-pit, retrieved three bones, put them in the Ganges to moisten them. Then he placed them on a hillock and gave them life. Tāmarai suddenly got up.

---

1 The heat a hard penance is thought to rise and burn a god refusing to grant a boon.

(பாட்டு) "எங்கேயய்யா மைந்தன்" என்று
ஏந்தினாளே தாமரை கையிரண்டை

மாயவர் - "தாமரை! இரண்டு பிறப்பு ஆகிவிட்டது! இன்னும் ஐந்து பிறப்பு இருக்கிறது."

தாமரை மறுபடியும் தவசுநிலையில் ஏறித் தவம் இருந்தாள். மாயவர் முன்போல் தெய்வசபையில் அக்கினியை வளர்த்திவிட்டார்.

(பாட்டு) அக்கினிச் செண்டுகளும் இனி
எரியுதே ஈசுவரன் திரேகமெல்லாம்

ஈசுவரன், "அடே, தூதர்களே! ஓடி வாருங்கள்! மறுபடியும் எவனோ அக்கினியை விட்டு எரிக்கிறான். ஓடிப் பாருங்கள்" என்றார். தூதர்கள் ஓடிப் பார்க்கும்போது அதே பெண் மறுபடியும் தவம் இருப்பதைப் பார்த்து ஈசுவரனிடம் வந்து, "சுவாமி! அதே பெண் மறுபடியும் தவம் செய்கிறாள்" என்றார்கள். "அடே தூதர்களே! சீக்கிரம் போய் அவளைச் சிப்புக் கோடரியால் வெட்டி, வைக்கோல் போரில் போட்டுத் தீயை வைத்து எரித்துவிடுங்கள்" என்றார். தூதர்கள் சென்று அப்படியே செய்துவந்தார்கள். அப்போது ஈசுவரனுக்கு அக்கினி குறைந்துவிட்டது.

மாயவர் ஓடிப்போய் வைக்கோல் போர் நெருப்பை அணைத்துவிட்டுக் கவையால் விலக்கிப் பார்க்கும்போது மூன்று எலும்புகள் கிடந்தன. அவற்றை எடுத்துக்கொண்டு கங்கைக்குச் சென்று தண்ணீரில் போட்டு நனைத்துப் பொன் பிரம்பால் தட்டி உயிரைக் கொடுத்தார். தாமரை திடீரென்று எழுந்து,

(பாட்டு) "எங்கய்யா மைந்தன்" என்று
ஏந்தினாளே தாமரை கை இரண்டை

மாயவர் - "தாமரை! மூன்று பிறப்பு முடிந்தது! இன்னும் நான்கு பிறப்பு இருக்கிறது."

(பாட்டு) "ஏறும்மா தவசுநிலை இனித் தவசுநிலை
இருந்துக்கம்மா தாமரை பெருங்கொலுவா"

தாமரை மறுபடியும் தவசு நிலையில் ஏறித் தவம் செய்யும்போது மாயவர் மறுபடியும் தெய்வசபையில் அக்கினியை வளர்த்திவிட்டார். தெய்வசபையில் ஈசுவரனை அக்கினி பிடித்து வாட்டியது.

ஈசுவரன் - "அடே, தூதர்களே! ஓடிப் பாருங்கள்! மறுபடியும் யாரோ அக்கினியை வளர்த்திவிட்டார்கள்."

தூதர்கள் போய்ப் பார்க்கும்போது அதே பெண் தவம் செய்தாள். தூதர்கள் ஓடிவந்து ஈசுவரனிடம், "சுவாமி! அதே பெண்தான் தவம் செய்கிறாள்" என்றார்கள். "அடே, தூதர்களே! மறுபடியும் போய் அவளை வெட்டி ஏழு

Tāmarai's Song: "Where is (my) son, oh Lord?" she said (and)
Tāmarai extended her two hands

Vishnu: "Tāmarai! Two rebirths have been completed (now). There are five more to go. Tāmarai! Climb the pillar of penance again and do a hard penance." (And) as before Vishnu lighted a sacred fire.

Song: The sweet scent of the sacred fire (arose)
And Siva became shrivelled by the flames

Siva: "Oh my, assistants! Come quickly! Someone is again building a fire. Run and see," he ordered.

Assistants: The assistants ran to see and saw the same woman performing penance again. They came to Siva and said, "Lord. The same woman is performing penance again."

Siva: "Oh assistants! Go quickly and cut her with an axe, wrap her in a heap of straw, set it aflame and let her burn," he said.

The assistants did this and returned. Siva's fury abated.

Vishnu came running, saw the burning straw and put the fire out. As he poked around with his forked stick he found three bones. Taking these he went to the Ganges, put them in the water, moistened them, touched them with a golden wand, and gave them life. Tāmarai suddenly got up.

Tāmarai's Song: "My Lord, (my) son, (my) son, where is he?" she said
(And) Tāmarai stretched out her two hands

Vishnu: "Tāmarai! Three rebirths have been completed. Four more births remain."

"Climb again the place of penance, the place of penance. Stay there, oh great, royal Tāmarai."

Tāmarai climbed the pillar of penance again and while she did penance Vishnu again built a sacred fire in the god's counsel room. The fire seized Siva, in the god's counsel-chamber and he wilted.

Siva: "Oh my assistants! Run and see. Someone is lighting a fire again." Assistants went and found the same woman doing penance.

Assistants: The assistants ran to Siva (and said), "Lord! The same woman is doing penance."

நரகத்தின் கீழ் போட்டு மிதித்து வாருங்கள்" என்றார் ஈசுவரன். தூதர்கள் சென்று அப்படியே செய்து வந்தார்கள். ஈசுவரனுக்கு அக்கினி அடங்கியது.

மாயவர், "தாமரையை நரகத்தில் போட்டுவிட்டார்கள்" என்று கவையை எடுத்துக்கொண்டு போய் நரகத்தை விலக்கிவிட்டுப் (பார்க்கும்போது) மூன்று எலும்புகள் கிடந்தன. அவற்றை எடுத்துக்கொண்டு போய்க் கங்கையில் போட்டு நனைத்து மேலே போட்டுப் பொன்பிரம்பால் தட்டி உயிரைக் கொடுத்தார். தாமரை திடீரென்று எழுந்து,

(பாட்டு) எங்கய்யா மைந்தனென்று
ஏந்தினாளே பத்தினி கையிரண்டை

மாயவர் -

(பாட்டு) "ஏறுமம்மா தாமரை தவசுநிலை
இருந்துக்கம்மா பத்தினி பெருங்கொலுவா"

"தாமரை! நான்கு பிறப்பாகி விட்டது. மறுபடியும் தவசுநிலையில் ஏறித் தவசு செய்" என்றார். மாயவர் அக்கினியை வளர்த்திவிட்டார்.

அக்கினி தெய்வசபையை வாட்டியது. ஈசுவரன், "அடே, தூதர்களே! ஓடிப் பாருங்கள்! மறுபடியும் எவனோ அக்கினியை விட்டு எரிக்கிறான். எந்தச் சண்டாளனோ தெரியவில்லை" என்றதும் தூதர்கள் ஓடிப் பார்க்கும்போது அதே பெண் தவம் செய்வதைக் கண்டு ஓடிவந்து, "சுவாமி! மறுபடியும் அதே பெண்தான் தவம் செய்கிறாள்" என்றார்கள்.

ஈசுவரன், "ஆகா! இது என்ன ஆச்சரியமாக இருக்கிறது! எந்தச் சண்டாளன் அவளுக்கு உயிரைக் கொடுக்கிறான்? தெரியவில்லையே! திருட்டுப் பயல் கோபாலன் வேலையாக இருக்கும்" என்று, "அடே, தூதர்களே! மறுபடியும் அந்தச் சண்டாளியைத் துண்டுத் துண்டாக வெட்டி, யானையின் வாயில் கொடுத்து விடுங்கள்" என்றதும் தூதர்கள் உடனே சென்று, தாமரையை இழுத்துக் கீழே போட்டுத் துண்டு துண்டாக வெட்டி யானையின் வாயில் கொடுத்தார்கள். இதை மாயவர் பர்ர்த்து, "ஆகா! மோசம் வந்தது. யானை சாப்பிட்டுவிடும்போல் இருக்கிறது" என்று ஒருவருக்கும் தெரியாமல் போய் யானையின் கழுத்தை இறுக்கி விழுங்கமுடியாமல் பிடித்துக்கொண்டார். யானை மாமிசத்தை விழுங்கமுடியாமல் திணறிப் பாதியைக் கீழே கக்கிவிட்டது. பின் தூதர்கள் யானையைப் பிடித்துக்கொண்டு சென்றபின் மாயவர் மூன்று எலும்புகளை எடுத்துக்கொண்டு கங்கைக்குச் சென்று தண்ணீரில் போட்டு நனைத்து மேலே போட்டுப் பொன் பிரம்பால் தட்டி உயிரைக் கொடுத்தார். தாமரை திடீரென்று எழுந்தாள்.

Siva: "Oh assistants! Go again, cut her up, put her under seven hell-pits, trample on her and come."

The assistants did this and returned. Siva's rage abated.

Vishnu: "Tāmarai has been put in a hell-pit," Vishnu thought. (So) he took a forked stick, went and turned the (contents of the) hell-pit and found three bones. He took these to the Ganges, moistened them, took them out, touched them with a golden wand and gave them life. Tāmarai suddenly got up.

Tāmarai's Song: "Oh Lord, my son," she said
(And) the chaste lady stretched out her hands

Song: "Climb the place of penance, lady Tāmarai
Stay there, oh great, royal chaste woman"

Vishnu: "Tāmarai! Four rebirths have been completed. Climb the place of asceticism again and do penance," Vishnu said and he built a sacred fire.

The fire desiccated the god's counsel-chamber.

Siva: Siva cried, "Oh assistants! Run and see. Someone has lighted a fire again. Who this villain is, I don't know."

Assistants: The assistants ran to see and discovered the same woman doing penance. Running back, they said, "Lord. The same woman is performing penance again."

Siva: "Oh ho! This is very surprising. What villain is giving her back her life? Don't I know?" he said. "It is that sneaky fellow, Krishna. It is his work," he thought. "Oh assistants! Cut that woman into pieces again and place them in the mouth of an elephant."

The assistants went immediately, pulled Tāmarai down, cut her into little pieces and put them in the mouth of an elephant.

Vishnu: Seeing this Vishnu said, "Ah ha! Things have gone badly. It seems an elephant is going to eat (the pieces)," he thought, and without anyone knowing about it, he held the elephant's neck so that it could not swallow. The elephant, now being unable to swallow the meat, spat half of it out. After the assistants had taken the elephant away, Vishnu collected three bones, went to the Ganges, put them in the water and moistened them, took them out, tapped them with a golden wand and gave them life. Tāmarai suddenly got up.

(பாட்டு) எங்கய்யா மைந்தனென்று
ஏந்தினாளே பத்தினி கையிரண்டை

மாயவர் - "தாமரை! இன்னும் இரண்டு பிறப்பு இருக்கிறது."

(பாட்டு) "ஏறுமம்மா பத்தினி தவசுநிலை
இருந்துக்கம்மா தாமரை பெருங்கொலுவா"

மறுபடியும் தாமரை தவசுநிலையில் ஏறித் தவம் செய்யும்போது மாயவர் அக்கினியை வளர்த்திவிட்டார். தெய்வசபையில் அக்கினி அனல்கொண்டு வீசியது. ஈசுவரன், "அடே, தூதர்களே! ஓடிப் பாருங்கள்! யாரோ மறுபடியும் அக்கினியை விட்டு எரிக்கிறார்கள்!" என்றதும் தூதர்கள் ஓடிப் பார்க்கும் போது மறுபடியும் அதே பெண் தவம் செய்வதைக் கண்டு ஓடிவந்து, "சுவாமி! அதே பெண்தான் தவம் செய்கிறாள்! ஒருவரையும் காணவில்லை" என்றார்கள்.

ஈசுவரன் - "ஓகோ, அப்படியா! ஓடுங்கள். மறுபடியும் துண்டு துண்டாக வெட்டிக் கீழே போட்டுக் குதிரைகளை விட்டு மிதிக்கவைத்து தண்ணீர்போல் கரைத்துவிடுங்கள்."

தூதர்கள் உடனே சென்று தாமரையை வெட்டிக் கீழே போட்டுக் குதிரையை விட்டு மிதிக்கவைத்து நீர்போல் கரைத்துவிட்டார்கள். இதை மாயவர் பார்த்து ஓடிவந்து தேடிப் பார்க்கும்போது மூன்று எலும்புகள் கிடைத்தன. அவற்றைக் கொண்டு கங்கைக்குச் சென்று தண்ணீரில் போட்டு நனைத்து மேட்டில் போட்டு உயிரைக் கொடுத்தார். தாமரை திடீரென்று எழுந்து,

(பாட்டு) எங்கய்யா மைந்தனென்று
ஏந்தினாளே தாமரை கையிரண்டை

மாயவர் - "தாமன்ர! இன்னும் ஒரு பிறப்புதான் இருக்கிறது."

(பாட்டு) ஏறுமம்மா தவசுநிலை அங்குத் தவசுநிலை
இருந்துக்கம்மா தாமரை பெருந்தவசு

"தாமரை! இன்னும் ஒரு பிறப்புதான் இருக்கிறது. மறுபடியும் ஏறிக் கடுந்தவம் செய்."

மாயவர் அக்கினியை வளர்த்தி விட்டுவிட்டார். அக்கினி சுவாலை அனல் கொண்டு வீசியது.

ஈசுவரன், "தூதர்களே! ஓடிவாருங்கள்!! ஆதிகைலாசத்திற்கு அனர்த்தம்[1] வந்து விட்டதுபோல் இருக்கிறது. என் தேகம் தீ போல் எரிகிறது. திருட்டுப்பயல் என் மைத்துனன் கோபாலன் செய்யும் வேலைதான் இது. அந்தக் காலத்தில் தருமர் தம்பி அர்ச்சுனனைக் கூட்டிவந்து இப்படித்தான் தவம் இருக்கச் செய்து என்னை வாட்டினான். இப்போதும் அந்தச் சண்டாளன்தான் அவளைக்

1. தீங்கு

Tāmarai's Song: "My Lord, (my) son," she said
(And) the chaste lady stretched out her hands

Vishnu: "Tāmarai! There are two births left still!"

Song: "Oh chaste lady, climb the place of penance
Stay there, oh great, royal Tāmarai"

Again Tāmarai climbed the place of asceticism and did penance while Vishnu lit a sacred fire. The flames heated the god's counsel-chamber.

Siva: "Oh assistants! Run and see. Someone has lit a sacred fire again," he said.

Assistants: The assistants ran to see and again saw the samè woman doing penance. Running back, they said, "Lord. The same woman is doing penance. There is no one (else) to be seen."

Siva: "Oh, ho! Is that so! Run and again cut her into pieces, put her on the ground and have horses trample her until (the whole) becomes nothing but water," he said.

The assistants went immediately, cut up Tāmarai, put her on the ground, had horses trample her and left (the whole) as nothing but water.

Vishnu, seeing this, came running, and while searching he found three bones. He took these, went to the Ganges, put them in the water and moistened them. (Then) he took them out, and gave them life. Tāmarai suddenly got up.

Tāmarai's Song: "Where is (my) son, Lord?", she said.
Tāmarai stretched out her hands.

Vishnu: "Tāmarai. There is still one more left."

Vishnu's Song: "Climb the place of penance, lady, climb the
penance place there
Stay there, oh great royal lady, Tāmarai"

Vishnu: "Tāmarai! There is only one rebirth left. Climb again and perform a complete penance," Vishnu said and he lit a sacred fire. The flames of the blaze were very hot.

Siva: "Oh assistants! Run here! It seems that ancient Kailāsa[1] is being destroyed. My body burns like a fire. The sneaky fellow, my brother-in-law, Krishna! This is his work. Once, long ago, he brought Dharma's younger brother Arjunan[2] and had him do penance like this and wilted me (with heat).

---

1 Abode of the gods, especially Siva. 2 Famous hero of the Mahâbhârata.

கூட்டிவந்து இந்த மாதிரி செய்கிறான். அவனைத் தவிர என்னிடம் விளையாட வேறு ஆள் இல்லை! தூதர்களே, மறுபடியும் சென்று அவளைக் கீழே இழுத்துப் போட்டுத் தலையை வெட்டிக்கொண்டு வந்து கைலாயத்தின்முன் கருடக் கம்பத்தில் கட்டிவிடுங்கள்! எவன் வந்து உயிர் கொடுப்பானோ பார்க்கலாம்" என்றார். தூதர்கள் "நல்லது" என்று உடனே சென்று தாமரையின் தலையை வெட்டிக் கொண்டுவந்து கைலாயத்தின்முன் கட்டிவிட்டார்கள்.

மாயவர் இதைப் பார்த்து, "பெரிய மோசம் வந்தது. தலையில்லாமல் எப்படி உயிர் கொடுப்பது?" என்று யோசித்து, "இனி ஈசுவரியிடத்தில்தான் சென்று காரியத்தை முடிக்கவேண்டும்" என்று தாசனைப்போல் வடிவெடுத்து உடல் எல்லாம் சிரங்கும் ரணக் கவுச்சியுமாக[1] வரை ஓடு கையில் எடுத்து ஈசுவரியின் ஆலயத்தின் முன் நின்று, "தாயே! பிச்சை போடுங்கள்" என்றார்.

ஈசுவரி - "அடி, தோழிகளே! கைலாயத்திற்குக்கூட பிச்சைக்காரன் வந்துவிட்டான்! ஏதாவது காணிக்கை கொடுத்து அனுப்புங்கள்."

தோழிகள், "தேவி, நல்லது" என்று காணிக்கை கொண்டுபோய்க் கொடுக்கவும் மாயவர், "பெண்ணே! நீங்கள் கொடுத்தால் நான் வாங்கமாட்டேன்! ஈசுவரியே கொண்டுவந்து கொடுத்தால்தான் வாங்குவேன்!"என்றார். தோழிகள் உடனே ஈசுவரியிடம் சென்று, "தேவி! நாங்கள் கொண்டுபோய்க் கொடுக்க பரதேசி வாங்கமாட்டேன் என்கிறார். தாங்களே கொண்டுவந்து கொடுக்க வேண்டுமாம்!" என்றார்கள்.

பார்வதி "சரி, நல்லது!" என்று காணிக்கையை எடுத்துக்கொண்டு வந்து பிச்சைக்காரனைப் பார்க்கும்போது, "அண்ணா! தாங்களா!!! ஏன் இந்த வேஷத்தில் வந்தீர்கள்? இவ்வளவு நாளாக எங்குப் போயிருந்தீர்கள்? என்னை வந்து பார்க்கவில்லையே அண்ணா!"என்றாள்.

மாயவர் - "பார்வதி! நான் பூலோகத்தில் கொஞ்சநாள் இருந்து மைத்துனரிடம் வந்தேன். நான் வந்ததும் மைத்துனர் என்னை ஓலைப்பூ காட்டுக்குக் காவல் வைத்தார். அங்குச் சிலகாலம் இருந்து தேகமெல்லாம் சிரங்கு உண்டாகிக் கஷ்டப்பட்டுப் பிறகு புறப்பட்டுப் பூலோகம் போனேன். அங்குப் போகும் போது பொன்னி வளநாட்டில் குன்னுடையாக் கவுண்டன் மனைவி தாமரைக்கு நாற்பத்து ஐந்து வருஷமாகக் குழந்தையில்லாமல் மனம் வருந்தி செல்லாத்தாக் கோவிலுக்கு முன் அறுபது அடி சதுரம் கட்டி அதில் ஏறித் தற்கொலை

1. புண்ணிலிருந்து தோன்றும் துர்நாற்றம்

Now that villain is the one to bring her (here) in this same way. There is no other man who plays with me in this way. Oh assistants. Go again and pull her down, cut off her head and bring it and put it on the Garuda[1] pillar that stands in front of Kailāsa. We shall see who comes to give it life," he said.

The assistants said "good" and went immediately, cut off Tāmarai's head, and brought it and set it in front of Kailāsa.

Vishnu: Vishnu, seeing this said, "A terrible thing has happened. How can life be restored without the head?" he said. He thought awhile and decided "Only by going to Parvati can this business be brought to a close."

So he took the disguise of a beggar and stood in front of Siva's dwelling, his body covered with scabs and rotten smells, and holding a beggar's bowl in his hands. "Oh Mother! Give some alms," he cried.

Parvati: "Oh female companions! A beggar has come, even to Kailāsa! Give him some gift or other and send him away."

Ladies-in-waiting: "Goddess, good!" they said and brought some gifts and presented them.

Vishnu: "Oh women! I won't accept what you give. I will accept only what Parvati herself brings and gives me," he said.

The ladies-in-waiting immediately went to Parvati and said, "Goddess! The wandering mendicant refuses to accept what we brought him. You must go and give it to him," they said.

Parvati; O.K., good!" she said, and took the gifts. When she saw the beggar she recognized Vishnu and said, "Elder brother! Is it you? Why have you come in this disguise? Where have you been for so many days? You haven't been to see me (recently), oh elder brother!"

Vishnu: "Parvati. Having spent some days on earth I (once) came to see my brother-in-law. When I arrived he posted me as a guard for a forest of palm flowers. After I was there for awhile my body became scabby and I began to suffer. Then I set off and went to earth. While going there I found Kuṉṉuṭaiyā Kavuṇṭar's wife, Tāmarai. Her heart was saddened after forty-five years with no children. She had

---

1 A special pillar, named after Vishnu's vehicle, the Garuda bird. Such pillars stand in front of many temples.

செய்ய முயன்றாள். அப்போது நான் போய்த் தடுத்து, "ஏம்மா தற்கொலை செய்யத் துணிந்தாய்?" என்று கேட்டதற்குத் தாமரை, "சுவாமி! நாற்பத்து ஐந்து வருஷமாகக் குழந்தை இல்லாமல் என்னை உலகமெல்லாம் வரடி, வரடியென்று பேசுகிறார்கள். அவமானம் பொறுக்கமுடியாமல்தான் இந்த முடிவு செய்தேன்" என்றாள்.

நான் மனமிரங்கி, "அம்மா! சாகவேண்டாம். நான் குழந்தை வரம் வாங்கித்தருகிறேன்" என்று அவளைத் தெய்வசபைக்குக் கூட்டிவந்து அரசமரத்தடியில் தவசுக் கம்பம் நாட்டித் தாமரை இருபத்தியொரு வருஷம் அருந்தவம் செய்தாள். இருபத்தியொரு வருஷம் முடிந்தபின் இன்னும் வரம் கிடைக்கவில்லை. நான், "நம் மைத்துனர்தான் வரம் கொடுத்துவிடுவார்" என்று நினைத்து அவளைக் கூட்டிவந்ததற்கு அவள் ஏழுதரம் செத்துப் பிழைத்துச் செய்யாத கொடுமைகள் ஈசுவரன் அவளைச் செய்து இப்போது தலையை அறுத்துக் கைலாயத்தின் முன் கருடகம்பத்தில் கட்டிவிட்டார். ஆகையால் பார்வதி நீ உன் நாதனிடம் சென்று எப்படியாவது தாமரைக்கு வரம் வாங்கிக் கொடுத்துவிடு."

ஈசுவரி - "அண்ணா! அப்படியே நல்லது!" என்று புறப்பட்டுச் சிவனுடைய ஆலயம் சென்று நாதனை நமஸ்காரம் செய்தாள். பின் "சுவாமி! என் அண்ணன் பரந்தாமன் பூலோகத்திலிருந்து தாமரை என்பவளை, "குழந்தை வரம் வாங்கித் தருகிறேன்" என்று தெய்வசபை கூட்டிவந்து இருபத்து ஒரு வருஷம் தவம் இருக்கச்செய்து பின் ஏழுதரம் செத்துப் பிழைத்ததும் தாங்கள் வரம் கொடுக்காமல் அவளைச் செய்யாத கொடுமைகள் செய்து மறுபடியும் தலையை வெட்டிக் கைலாயத்தின் முன் கட்டி விட்டீர்களே சுவாமி? அந்தப் பெண் தங்கள் சிருஷ்டியில் பிறந்தவள் அல்லவா! நரக ஜன்ட ப் பிறவியாக இருந்தால் கைலாயம் வர முடியுமா? தாங்கள் மனதிரங்கி உடனே அந்தப் பெண்ணுக்கு வரத்தைக் கொடுங்கள் சுவாமி!" என்றதும் ஈசுவரனுக்குக் கோபம் வந்து, "அடி, பார்வதி! என் உடலைப் பார்! உன் உடன்பிறந்தவன் செய்த கொடுமை என்னை அக்கினியை விட்டு எரித்துவிட்டான்! இவ்வளவும் செய்து விட்டு என்மேல் குற்றம் சுமத்துகிறானா உன் உடன்பிறந்தவன்? சரி, பார்வதி! உனக்காக மனம் பொறுத்து வரம் தருகிறேன்! நீ சீக்கிரம் சென்று பரந்தாமனை இங்கு வரச்சொல்" என்றார்.

built a sixty-foot square tower in front of the Cellāttā temple and was trying to climb it and commit suicide. At that moment I went and prevented her. I called out 'Hey, woman. Are you going to commit suicide?' Tāmarai answered, 'Lord. I have been forty-five years without a child. Everywhere in the world people are speaking of me saying "barren woman, barren woman." I cannot bear their judgement and therefore I have decided on this, she said.' I touched her heart saying, 'Woman. (You) must not die. I will obtain a boon (to bear) children and give it to you.' (Then) I brought her to the god's counsel-chamber and erected a pillar of penance at the foot of a ficus religiosa tree. Tāmarai, after completing twenty-one years of penance there has still not obtained a boon. Thinking my brother-in-law would grant her a boon I brought her here, but Siva made her die seven times (instead). He did very cruel things to her. Now he has cut off her head and set it on a Garuda pillar in front of Kailāsa. Therefore, Parvati, you go to your husband and in some way or other, obtain a boon for Tāmarai and give it (to her)," Vishnu said.

Parvati: "Elder brother! That is good," she said and set off. Arriving at Siva's residence she paid her respects to her husband. Then she said, "Lord! My elder brother Vishnu has brought a woman named Tāmarai from earth, to the god's counsel-chamber, and has promised to obtain for her the boon of (bearing) children. After arriving she performed penance for twenty-one years. And afterwards you had her killed seven times. You have been unthinkably cruel and have not granted a boon. Lord, have you again cut off her head and set it up in front of Kailāsa? Wasn't that woman born of your own creative power? If one is born (a mere human) in a city (on earth) would it be possible to come to Kailāsa? Unlock your heart! Give that woman a boon immediately, Lord."

Siva: Siva became angry (and answered), "Hey Parvati! Look at my body. This is your brother's cruelty. He lit a fire and let it burn me. Having done so much, your brother charges me with a fault?"

பார்வதி, "சுவாமி, நல்லது!"என்று மாயவரிடம் சென்று, "அண்ணா! உங்கள் மைத்துனரிடம் எல்லாம் சொல்லிக் கோபத்தைச் சாந்தப்படுத்தி வரம் கொடுக்கும்படிச் செய்துவிட்டேன்! உங்களை வரச் சொல்கிறார். நீங்கள் போய்த் தாமரைக்குத் தேவையான வரத்தை வாங்கிக் கொடுங்கள்" என்று சொன்னதும் மாயவர் ஈசுவரனிடம் சென்று நமஸ்காரம் செய்தார்.

ஈசுவரன் - "மைத்துனரே! மங்களம் உண்டாகட்டும்! பரந்தாமா என் உடலைப் பார்! இந்த மாதிரி அக்கினியை விட்டு எரித்தது மல்லாமல் உன் தங்கையிடம் சென்று என்மேல் குற்றம் சுமத்திவிட்டாயா?"

மாயவர் - "பின் என்ன? தாங்கள் செய்தது மட்டும் நியாயமா? தாமரை தங்களுடைய சிருஷ்டியில் பிறந்தவள்தானே! அவள் குழந்தையில்லை என்று என்னிடம் முறையிட்டாள். அவளை நான் தெய்வசபை கூட்டிவந்து இருபத்தியொரு வருஷம் தவம் இருக்கச்செய்து ஏழுதரம் செத்துப் பிழைத்ததும் தாங்கள் செய்யாத கொடுமைகள் செய்தீர்கள்! அதனால்தான் நான் அக்கினியை விட்டு எரித்தேன்."

ஈசுவரன் - "சரி! அவள் தலையை எடுத்துக்கொண்டு போய் உயிரைக் கொடுத்துக் கூட்டிவா!"

மாயவர் உடனே சென்று தாமரையின் தலையை எடுத்துக்கொண்டு கங்கை சென்று தண்ணீரில் போட்டு எடுத்துப் பொன்பிரம்பால் தட்டி உயிரைக் கொடுத்தார். தாமரை திடீரென்று எழுந்ததும்,

(பாட்டு) எங்கய்யா எங்கய்யா மைந்தன் வரம்
ஏந்தினாளே தாமரை கையிரண்டை

மாயவர், "தாமரை! ஈசுவரனிடம் செல்வோம், நீ வேண்டுமென்கிற வரத்தைப் பெற்றுக்கொள்" என்று தாமரையைத் தெய்வசபைக்குக் கூட்டிச்சென்றார். தெய்வசபை போனதும் தாமரை ஈசுவரனைக் கண்டு,

(பாட்டு) அட்டம் பணியுறாளே அங்கு ஆளடிமை செய்யுறாளே
பாதம் பணியுறாளே பணிவிடைகள் செய்யுறாளே

சுற்றி வலம் வந்து சூரியனைத் தெண்டனிட்டாள். பக்கம் வலம் வந்து பகவானைத் தெண்டனிட்டாள்.

"All right, Parvati! On your account I will let my heart forgive him and I will grant a boon. Go quickly and tell Vishnu to come here."

Parvati: "Lord. Good," she said, and went to Vishnu. "Elder brother! I told your brother-in-law everything, cooled his anger and got him (to agree) to grant a boon. He has asked for you to come. You go, obtain the necessary boon and give it (to her)," she said. Vishnu went to Siva and paid his respects.

Siva: "Oh brother-in-law! Blessings to you. Vishnu! Look at my body. Having let such a strong fire burn did you go to your younger sister and charge me with a fault?"

Vishnu: "So what? Is what you do, alone, just? Wasn't Tāmarai born of your (own) creative power? Saying she had no children, she brought her case to me. I brought her to the god's counsel-chamber, and after she had completed twenty-one years of penance you had her killed seven times. You have been unthinkably cruel. That is why I built such a fire!"

Siva: "O.K. Take her head, restore her life and bring her here."

Vishnu immediately came and took Tāmarai's head, went to the Ganges, put it in water, lifted it out, and tapping it with a golden wand, restored it to life. Tāmarai got up suddenly.

Tāmarai's Song: "Where Lord, where Lord, is the boon of a son?"
(And) Tāmarai extended her two hands

Vishnu: "Tāmarai, come! We will go to Siva. You tell him about the boon you want," he said, and took Tāmarai to the god's counsel-chamber. When they arrived at the counsel-chamber Tāmarai, looking at Siva, (said),

Song: She is paying obeisance there
She is offering her services
She is throwing herself at his feet
She is offering her services
She circled around and knelt in front of the sun
She circle around and knelt before the God

ஈசுவரன் - "அம்மா! சரணமென்ற பேர்களுக்கு மரணம் ஒருநாளுமில்லை! வாழ்வாய் வளர்ந்திருப்பாய் மண்டபத்தில் பெற்றிருப்பாய்! பின்னைப் பதம் பெறுவாய் பெருமாளைப் போல் இருப்பாய்! அம்மா உனக்கு என்ன வரம் வேண்டும்?"

தாமரை - "சுவாமி! எனக்கு மண்ணுக்கு இரண்டு ஆண், மனையிருக்கப் பெண் ஒன்று வரம் வேண்டும். சுவாமி! என் வயிற்றில் பிறக்கும் ஆண் குழந்தைக்குப் பன்னிரண்டு யானை பலம் உள்ளதாக இருக்கவேண்டும்."

ஈசுவரன் - "சரி, நல்லது! அடே, சித்திர புத்திரா! ஏடுகளை எடுத்துவந்து பன்னிரண்டு யானை பலம் யாருக்கு இருக்கிறது என்று பார்!"

சித்திர
புத்திரன் - "சுவாமி நல்லது!"(என்று பூலோக ஏட்டை எடுத்துப் பார்த்து), "சுவாமி! பஞ்ச பாண்டவர் ஐவரில் தர்மருக்கு இளையவர் பீமனுக்குப் பன்னிரண்டு யானை பலம் இருக்கிறது."

ஈசுவரன், "சரி, பீமனையும் அவன் தம்பி அர்ச்சுனனையும் இரண்டு பேர் உயிரையும் கொண்டு வாருங்கள்" என்று இருவர் உயிரையும் தங்கச் சிமிழில் அடைத்துவிட்டு, "தாமரை, இன்னும் என்ன வரம் வேண்டும்?" என்று கேட்டார்.

தாமரை - "சுவாமி! எனக்குப் பிறக்கும் பெண் குழந்தைக்கு மார்பில் அக்கினிச் செண்டு இருக்கவேண்டும்."

ஈசுவரன் - "தாமரை! அக்கினிச் செண்டு எதற்கு?"

தாமரை - "சுவாமி! பூலோகத்தில் நடக்கக்கூடிய எல்லா விஷயமும் என் மகளுக்குத் தெரியவேண்டும்."

ஈசுவரன் - "சரி, நல்லது! சித்திர புத்திரா! தெய்வசபையில் யாரிடம் அக்கினிச் செண்டு இருக்கிறது?"

சித்திர
புத்திரன் - "சுவாமி! தெய்வ கன்னிகள் ஏழுபேரில் இளைய கன்னியிடம் அக்கினிச் செண்டு இருக்கிறது."

ஈசுவரன், "சரி, நல்லது! அவளைக் கூட்டி வாருங்கள்" என்றதும் தூதர்கள் சென்று தெய்வகன்னியைக் கூட்டிவந்தார்கள். இளைய கன்னி ஈசுவரனைக் கண்டு நமஸ்காரம் செய்தாள்.

Siva: "Oh lady! There is no death for those who take refuge in me."

You will live long
You will receive honors in your palace hall
You will go to (Vishnu's) heaven, you will live like
Perumal (himself)

"Lady, Tāmarai! What boon do you want?" asked Siva.

Tāmarai: "Lord. I want a boon of two sons for the land and one daughter for the house. Lord! The sons born of my belly[1] must have the strength of twelve elephants."

Siva: "All right! Oh Cittiraputtirā![2] Get the palm leaves and come. Look and see who has the strength of twelve elephants.

Cittiputtiraṉ: "Lord! Good," he said, got the palm leaves for the earth and began looking. Lord! Of the five Pandava brothers,[3] Dharma's younger brother Bhima has the strength of twelve elephants."

Siva: "O.K. Bring the lives (spirits) of Bhima and of his younger brother Arujunan," he said, and the lives of the two became trapped in a tiny golden box. "Tāmarai what additional boon do you want?"

Tāmarai: "Lord. The daughter born to me must have a ball of fire in her breasts."

Siva: "Tāmarai. What is the ball of fire for?"

Tāmarai: "Lord! All the things that will happen on earth, all circumstances, must be known to my daughter."

Siva: "All right. Good! Cittiraputtirā. Who in the god's counsel-chamber has a ball of fire?"

Cittiputtiraṉ: "Lord! Of the seven maidens, the youngest has a fire ball."

Siva: "All right. Good! Bring her here," he said. The assistants

1 The term "belly" is favored over "womb" in colloquial speech. 2 The account-keeper of human lives. 3 Heroes of the Mahābhārata.

ஈசுவரன், "அம்மா, இளைய கன்னி! நீ தாமரையின் வயிற்றில் பிறந்து கொஞ்சநாள் பூலோகத்தில் இருந்து அதன்பின் தெய்வசபை வரலாம்" என்று தெய்வகன்னியின் உயிரையும் பிடித்து மூன்று உயிர்களையும் தாமரையின் வயிற்றில் சிருஷ்டித்தார். பிறகு, "அடே, சித்திர புத்திரா! இவர்கள் மூன்று பேருக்கும் ஆயுள் நூற்று இருபது போடு!"என்றதும் மாயவர், "மைத்துனரே! ஆயுள் எவ்வளவு போடுகிறீர்?" என்று கேட்டார்.

ஈசுவரன் - "பரந்தாமா! நூற்றி இருபது வருஷம் போடச் சொன்னேன்."

மாயவர் - "மைத்துனரே! அவ்வளவு நாள் அவர்கள் பூலோகத்தில் இருந்தால் பூமாதேவி பொறுக்கமாட்டாள். ஆகையால் அதை அழித்து வயது பதினாறு வாலிபம் தொண்ணூறுக்கு எழுதி விடுங்கள்."

ஈசுவரன் - "சரி, நல்லது! அப்படியே கொடுத்துவிட்டேன். தாமரை! இன்னும் என்ன வரம் வேண்டும்?"

தாமரை - "சுவாமி! என்னிடம் இரண்டு குதிரைகள் இருக்கின்றன. அவற்றின் வயிற்றில் இரண்டு குட்டிகள் பிறக்கவேண்டும். என் மைந்தர்கள் வந்த காலத்தில் அந்தக் குட்டியின்மேல் ஏறிச் சவாரி செய்யும்போது மின்னல் வேகத்தில் போகும்படியாக ரொம்ப பராக்கிரமம் உள்ளதாக இருக்கவேண்டும்."

ஈசுவரன் - "சரி! அப்படியே கொடுத்துள்ளேன். இன்னும் என்ன வரம் வேண்டும்?"

தாமரை - "சுவாமி! என் நாட்டில் ஒரு காராம் பறைச்சி இருக்கிறாள். அவளுக்கு ஒரு ஆண் குழந்தை வரம் வேண்டும். அந்தக் குழந்தைக்குப் பதினாறு யானை பலம் இருக்கவேண்டும்!"

ஈசுவரன் - "அடே, சித்திர புத்திரா! யாரிடத்தில் பதினாறு யானை பலம் இருக்கிறது பார்!"

சித்திர புத்திரன் - "சுவாமி! துரோணாச்சாரியின் மகன் அஸ்வத்தாமனிடம் பதினாறு யானை பலம் இருக்கிறது."

ஈசுவரன் - "சரி, இங்குக் கொண்டுவாருங்கள் அந்த உயிரை!"

தூதர்கள் அப்படியே போய் அஸ்வத்தாமனின் உயிரைக் கொண்டுவந்தார்கள்.

went and brought the virgin goddesses.[1] The youngest, seeing Siva, paid him her respects. "Woman, youngest of the virgins! You are to go to the earth for awhile, to be born from Tāmarai's belly and to spend some time on earth. After that you will return to the god's counsel-chamber," he said and taking her life he creatively placed all three lives inside Tāmarai's belly. Then he called, "Oh Cittiraputtirā! Note down that these three will live a hundred and twenty years."

Vishnu: "Oh brother-in-law! How many years of life did you note down?"

Siva: "Vishnu. I said to write down one hundred and twenty years."

Vishnu: "Oh brother-in-law! The earth goddess will not be able to stand it if they remain on earth so long. Therefore, erase that and note down an age of sixteen, (but) with ninety years of youth."

Siva: "All right. Good. I have given them that. Tāmarai! What additional boon do you want?"

Tāmarai: "Lord! I have two horses. Two colts must be born from their stomachs. During my son's lifetime they must (be able to) mount and ride these colts and to travel with great prowess, at lightening speed."

Siva: "O.K. I have granted it. What additional boon do you want?"

Tāmarai: "Lord! There is a black Paṟaiyā woman in my country. She wants the boon of a male child. That child must have the strength of sixteen elephants."[2]

Siva: 'Hey. Cittiraputtirā! Who has the strength of sixteen elephants? Look (it up)!"

Cittiraputtiraṉ: "Lord! Drōṇāccāri's son Asvattām[3] has the strength of sixteen elephants."

Siva: "O.K. bring it here, that life!" The assistants left and returned with Asvattām's life. "Oh Asvattām! You will go

---

1 These seven goddesses are very important deities in the Koṅku region of Tamilnad. The term "Kaṉṉi" can be applied to any young, unmarried woman and can be translated as either "maiden" or "virgin female." The seven are said to be dancers in the court of Indra, who is King of the gods. The term Kaṉṉi is related to the term Kanya in the north. 2 The bard seems to forget the request made by the cow for offspring which is elsewhere used as a part of this sequence. 3 The son of Drōṇā in the Mahabharata. His name is spelled Asvatthāmā in Sanskrit. He was extremely strong and whenever he defeated someone he took over the strength of his opponent. He was one of the few Pandava enemies who survive the great war.

ஈசுவரன், "அஸ்வத்தாமா! நீ கொஞ்சநாள் பொன்னி வளநாட்டில் காராளனுக்கு முதல் மந்திரியாக இருந்து அதன் பிறகு தெய்வலோகம் வந்து சேர்" என்று அந்த உயிரையும் பிடித்துப் பூலோகத்தில் பறைச்சியின் வயிற்றில் சிருஷ்டித்தார். "தாமரை! இன்னும் என்ன வரம் வேண்டும்?" என்றார்.

தாமரை - "சுவாமி! என் அரண்மனையில் ஒரு மூளிநாய் இருக்கிறது. அதன் வயிற்றில் ஒரு குட்டி பிறக்கவேண்டும்! அந்தக் குட்டிக்குப் பல்லில் விஷம் அதிகமாக இருக்கவேண்டும்! தாய்போல் இரண்டு காதும் இல்லாத மூளியாக இருக்க வேண்டும்! எனக்கு அந்த வரம் அருளவேண்டும் சுவாமி!"

ஈசுவரன் - "சரி, அப்படியே கொடுத்துள்ளேன்! இன்னும் என்ன வரம் வேண்டும்?"

தாமரை - "சுவாமி! இன்னும் என் வீட்டில் தண்ணீர் சாப்பிடக்கூடிய எல்லா உயிர் ஜந்துக்களும் வரடாக இருக்கின்றன. அவற்றிற்கு எல்லாம் குழந்தை வரம் அருளவேண்டும்."

ஈசுவரன் - "சரி! நான் கொஞ்சம் கங்கை தீர்த்தம் தருகிறேன்! யார், யாருக்குக் குழந்தை வேண்டுமோ அவர்களுக்குக் கொஞ்சம் தீர்த்தம் கொடு. உடனே ஜனனம் உண்டாகும்."

தாமரை - "சுவாமி, நல்லது! நான் கோரும் வரம் அவ்வளவுதான்."

ஈசுவரன், "சரி, பரந்தாமா! நீ தினசரி பூலோகம் சென்று யாரோ ஒருவரைக் கூட்டிவந்து என்னை அக்கினியால் எரித்துத் தொந்தரவு செய்கிறாய்! ஆகையால் நீ தாமரையின் குழந்தைகளுக்குப் பதினாறு வயது ஆனவுடன் அவர்கள் உயிரைக் கொண்டுவந்து என்னிடம் சேர்த்துவிட்டு உன் வலம்புரிச் சங்கும் கோபாலப் பெட்டியும் எடுத்துக்கொண்டு போ!" என்று மாயவரின் வலம்புரிச் சங்கையும் கோபாலப் பெட்டியையும் அடமானமாக வைத்துக்

மாயவர் - "சரி, நல்லது மைத்துனா! நாங்கள் போய்வருகிறோம்."

மாயவரும் தாமரையும் ஈசுவரனிடம் விடைபெற்றுப் புறப்பட்டார்கள். இருவரும் வரடிக்கல் வந்து குன்னுடையாசாமியின் உடலைப் பார்க்கும்போது அது வெய்யிலில் காய்ந்து மழையில் நனைந்து கருவாடுபோல் காய்ந்து கிடந்தது. மாயவர் அதை எடுத்துக்கொண்டு போய்க் கங்கையில் போட்டு நனைத்து மேட்டில் போட்டுப் பொன் பிரம்பால் தட்டி உயிரைக் கொடுத்தார். சிறிது நேரத்தில் குன்னுடையாக் கவுண்டர் எழுந்து மாயவரை நமஸ்காரம் செய்தார்.

மாயவர் - "குன்னுடையாக் கவுண்டா! மங்களம் உண்டாகட்டும்!"

to The Country Where The Kāveri Flows for some time and serve as a first minister for the farmers. After that you may return to heaven," he said took that life and creatively placed it in the stomach of the Paṟaiyā woman on earth. "Tāmarai! What additional boon do you want?"

Tāmarai: "Lord! There is an earless dog in my palace. A pup must be born from its stomach. It must have an enormous amount of venom in its teeth. Like its mother, it must have no ears. I want that boon as a blessing, Lord!"

Siva: "O.K. I will give it to you. What additonal boon do you want?"

Tāmarai: "Lord! Still, all those that are capable of drinking water[1] in my home are barren. All these must have the blessed boon of a child, Lord!"

Siva: "O.K. I will give you some sacred Ganges water. Give a little of this sacred water to whoever wants a child. They will immediately give birth."

Tāmarai: "Lord. Good! The boons I most coveted were only those."

Siva: "O.K. Vishnu! You go to earth daily and bring someone or other and burn me, causing trouble. Therefore, until Tāmarai's children reach the age of sixteen and you bring me their lives, pawn here (with me) your right spiralled conch and your sacred box."

So Siva took Vishnu's right-spiralled conch and sacred box to insure his good behaviour.

Vishnu: "O.K., good, brother-in-law! We will go," he said, and Vishnu and Tāmarai took leave of Siva and set off. The two arrived at the stone for childless women, and found Kuṉṉuṭaiyā Kavuṇṭar's body dried by the sun, moistened by the rain and looking like a parched black beetle. Vishnu lifted it, took it, put it in the Ganges and moistened it. (Then) he set it on a hillock, touched it with a golden wand and restored it to life. After a short while Kuṉṉuṭaiyā Kavuṇṭar got up and paid Vishnu his respects.

---

[1] E.g., all the living creatures dependent on the family.

குன்னுடையா - (தாமரையை நோக்கி) "ஏன் பெண்ணே! என்னை இங்கு வைத்துவிட்டு இருபத்தியொரு வருஷம் தவம் செய்து குழந்தை வரம் வாங்க தாசனைக் கூட்டிக்கொண்டு சென்றாயே? குழந்தை எங்கே?"

தாமரை - "நாதா! இருபத்தியொரு வருஷம் தவமிருந்து ஈசுவரன் குழந்தை வரம் தான் கொடுத்தார்! இப்போது குழந்தை கொடுக்க வில்லை."

மாயவர், "சரி, தாமரை! உன் நாதனைக் கூட்டிக்கொண்டு இருவரும் நெருப்பு ஆறு வந்து சேருங்கள். நான் அங்கு இருக்கிறேன்" என்று மாயவர் புறப்பட்டுச் சென்றபின் தாமரை நாதனைக் கூட்டிக்கொண்டு புறப்பட்டாள்.

(பாட்டு) அப்படியே நல்லதென்று நல்லதென்று
அன்புடனே இருவரும் வருகிறாரே
தாமரையும் முன்நடக்க முன்நடக்கோ
சாமியும் பின்துடர்ந்தார் பின்துடர்ந்தார்
பத்தினியும் முன்நடக்க முன்நடக்கோ
பர்த்தாவும் பின்துடர்ந்தார் பின்துடர்ந்தார்

இருவரும் நாகவனம் வரும்போது நாகேந்திரன் கண்டு, "அம்மா, தாமரை! எனக்கு வரம் வாங்கிவந்தாயா?" என்றான்.

தாமரை - "நாகேந்திரா! வாங்கிவந்தேன்! இதோ இந்தத் தீர்த்தத்தைக் கொஞ்சம் வாங்கிச்சாப்பிடு. உடனே கர்ப்பமாகிவிடும்!"

என்று கொஞ்சம் தீர்த்தம் ஊற்றினாள். நாகேந்திரன் வாங்கிச் சாப்பிட்டுச் சந்தோஷமடைந்தாள். இருவரும் நாகனிடம் விடைபெற்றுப் புறப்பட்டு நெருப்பாறு வந்து மாயவரைக் கண்டார்கள்.

மாயவர் - "தாமரை! வந்து சேர்ந்தீர்களா?"

தாமரை - "சுவாமி! வந்து சேர்ந்தோம்."

மாயவர் - "சரி! நான் முன்னால் செல்கிறேன். என் பின்னால் வாருங்கள்"

என்று முன்போல் நான்கு ஆற்றையும் தாண்டி இமயகிரி பர்வதத்தையும் தாண்டிவிட்டு, "தாமரை! இனி உன் நாடு சென்று சுகமாக இருங்கள்! என்னை வேண்டும்போது நினைத்தால் நான் வருகிறேன்" என்று மாயவர் பால்கடல் சென்றார். மாயவர் சென்றதும் குன்னுடையாக் கவுண்டரும் தாமரையும் பொன்னி வளநாட்டை நோக்கிப் புறப்பட்டார்கள்.

Vishnu: "Kuṉṉuṭaiyā Kavuṇṭar! Blessings to you!"

Kuṉṉuṭaiyā: Then Kuṉṉuṭaiyā looked at Tāmarai. "What is this, oh wife?" he asked. "Have you returned after taking this mendicant with you and performing twenty-one years of penance to obtain a child? Where is the child?"

Tāmarai: "Husband! I did penance for twenty-one years and Siva did give me the boon of a child. (But) he has not given (me) a child, yet."

Vishnu: "O.K., Tāmarai! Take your husband and the two of you go to the river of fire. I will be there," he said. After Vishnu had left Tāmarai took her husband and set out.

Song: It was said to be good, said to be good
The two are going with love
Tāmarai walks ahead, walks ahead
The Lord walks behind, walks behind
The chaste lady walks in front, walks in front
The husband follows behind, follows behind

Cobra: As the two crossed the cobra forest the cobra Nākēntiraṉ saw them. "Woman. Tāmarai! Have you obtained a boon for me?"

Tāmarai: "Oh Nākēntiraṉ! Having obtained it, I have come. Here, take a little of this sacred water and drink it. You will become pregnant immediately," she said and she poured out a little sacred water. Nākēntiran took it and drank it, and became happy. (Then) the two took leave of the cobra and set out. They reached the river of fire and saw Vishnu.

Vishnu: "Tāmarai! You have arrived?"

Tāmarai: "Lord. I have arrived."

Vishnu: "All right. I will go ahead. Come behind me," he said. First they crossed the four rivers and then the expanse of the Himalayas. "Tāmarai. Now go to your country and stay well! If you think of me when you need me I will come." Vishnu said this and he left for the milk sea. After Vishnu left Kuṉṉuṭaiyā Kavuṇṭar and Tāmarai turned towards The Country Where The Kāveri Flows and set out.

(பாட்டு) அப்படியே நல்லதென்று நல்லதென்று
அன்புடனே வழிநடந்தார் இருவருமே
பத்தினியும் முன்நடக்க முன்நடக்கோ
பர்த்தாவும் பின்துடர்ந்தார் பின்துடர்ந்தார்
பொன்னிவள நாடுதேடி நாடுதேடி
வருகிறாரே தாமரையும் சாமியுந்தான்

உச்சி உருவம் மத்தியான நேரம் பொன்னி வளநாடு பிள்ளையார் கோவில் வந்து சேர்ந்தார்கள். குன்னுடையாசாமியும் தாமரையும் வரம் வாங்கிவந்த செய்தி சிறிது நேரத்தில் ஊரெங்கும் பரவியது. சிறிது நேரத்தில் பிள்ளையார் கோவிலில் அளவில்லாத கூட்டம் கூடியது. எல்லோரும் குன்னுடையா சாமியையும் தாமரையையும் நமஸ்காரம் செய்தார்கள்.

குன்னுடையாசாமி, "எல்லோருக்கும் மங்களம் உண்டாகட்டும்!"என்றார். பிறகு குழந்தையில்லா ஜனங்களும் அரண்மனையில் உள்ள உயிர்ப்பிராணிகள் அனைத்தும் வந்து, "ஆத்தா, எங்களுக்கு வரம் வாங்கிவந்தீர்களா சுவாமி?" என்று கேட்டனர்.

தாமரை - "உங்கள் எல்லோருக்கும் வரம் வாங்கி வந்திருக்கிறேன்! இதோ இந்தத் தீர்த்தத்தில் எல்லோரும் கொஞ்சம் வாங்கிச் சாப்பிடுங்கள்!"

என்றதும் எல்லோரும் தீர்த்தம் வாங்கிச் சாப்பிட்டுவிட்டுச் சந்தோஷமாகச் சென்றார்கள். பிறகு தாமரை தெய்வசபையை நினைத்து அரண்மனைக்குக் காவல் இருக்கும் கதண்டுகளையும் வண்டுகளையும் அனுப்பிவிட்டு, மாதர்களைக் கூப்பிட்டு "உடனே அரண்மனையைச் சுத்தம் செய்து அலங்காரம் செய்யுங்கள்" என்றாள்.

மாதர்கள், "சரி, நல்லது!" என்று அரண்மனையைச் சிறிது நேரத்தில் அலங்காரம் செய்தார்கள். பின் தாமரையிடம் சென்று, "ஆத்தா! அரண்மனையைச் சுத்தம் செய்து அலங்காரம் செய்துவிட்டோம்" என்றார்கள். தாமரை, "சரி, நல்லது!"என்று நாதனையும் கூட்டிக்கொண்டு அரண்மனைக்கு வந்து சந்தோஷமாக இருந்தார்கள்.

(பாட்டு) செங்கோலு பொன்னையா அதிகாரம்
இனி அதிகாரம்
செலுத்திப் பட்டமும் நாட்டிலே ஆளுகிறார்
அங்கு ஆளுகிறார்
தங்கவிரல் அதிகாரம் இனி அதிகாரம்
தனிச்சுப் பட்டம் நாட்டிலே ஆளுகிறார்
அங்கு ஆளுகிறார்

Song: It was said to be good, said to be good
The two of them walked the route with love
The chaste lady walked ahead, walked ahead
The husband followed behind, followed behind
Searching for The Country Where The Kāveri Flows, searching for it
Tāmarai is approaching, with the Lord

When the sun was at its zenith, at midday, they arrived at the Pilliar temple in The Country Where The Kāveri Flows. In a short while the news that Kuṉṉuṭaiyā and Tāmarai had obtained a boon and returned spread throughout the town. After a time an enormous crowd gathered at the Pilliar temple. Everyone paid Kuṉṉuṭaiyā and Tāmarai their respects.

Kuṉṉuṭaiyā: "Blessings to all of you!" he said. Then those people who were childless and all the living creatures of the palace came to Tāmarai. "Lady! Have you obtained a boon for us?" they asked.

Tāmarai: "I have come having obtained a boon for all of you! Here, all of you take a little of this sacred water and drink it," she said and everyone took a little sacred water, drank it, and became happy. Then Tāmarai, thinking of the god's counsel-chamber, sent away the black beetles and wasps which had guarded the palace. Then, calling the ladies-in-waiting she said, "Clean the palace immediately and decorate it."

Ladies: "O.K. Good!", they said and in a short while they had decorated it. Then they came to Tāmarai. "Lady. We have cleaned the palace," and the two of them were happy.

Song: Poṉṉayyā ruled with justice, sweet rule
He ruled the country authoritatively, he ruled there
He ruled with a golden signet ring on his finger, sweet rule
He ruled the country alone, he ruled there

காலம் நல்லோ பொன்னையா
பனி பெயும் அங்குப் பனி பெயும்
கடுகுசம்பா நாட்டிலே
நெல் விளையும் அங்கு நெல் விளையும்
மூடுநல்லோ பனிப்பெயும் அங்குப்பனி பெயும்
மிளகு சம்பா நாட்டிலே
நெல் விளையும் அங்கு நெல் விளையும்

மாதம் மூன்று மழைபெயும் நாட்டிலே வருஷமொரு கல்மாரி, கட்டுக்கலம் காணும் கருதுளிர்க்க நெல்காணும். குன்னுடையாசாமி தினந்தோறும் தவறாமல் செல்லாத்தாளுக்கு மூன்றுகால பூஜையும் சரியாக நடத்திவந்தார். இப்போது தாமரைக்குக் கர்ப்பமாகிச் சரியாக ஏழு மாதம் ஆகியது.

பொன்னி வளநாட்டில் இப்படி நடந்துவருங்காலத்தில் தங்க வளநாட்டில் ஆயிரம் வீட்டுப் பங்காளிக் கவுண்டர்களும் பிள்ளையார் கோவிலில் கூடினார்கள். கூட்டத்தில் ஒருவர், "ஏனுங்க, அண்ணா! பொன்னி வளநாட்டில் தாமரைக்கு இப்போது ஏழுமாதம் கர்ப்பமாம்! ஆகையால் நாம் மருத்துவக்காரிக் குப்பி அக்காளைக் கூப்பிட்டு ஒரு தந்திரம் செய்யவேண்டும்" என்று ஒருவர் சென்று குப்பியைக் கூட்டிவந்தார்.

பங்காளி - "குப்பி அக்கா! பொன்னி வளநாட்டில், பெரியவீட்டுக்காரி தாமரை ஏழு மாதம் கர்ப்பமாய் இருக்கிறாளாம். இன்னும் மூன்று மாதம் சென்றால் உன்னை வந்து கூட்டிப் போவார்கள். நீ போய் அவளுக்கு ஆண்குழந்தை பிறந்தால் அறுத்துப் பெருக்கான் வங்கில்[1] திணித்து விடு! பெண்குழந்தை பிறந்தால் சங்கு உரைத்து பால் வார்த்து "தங்கா" என்று பெயர் வைத்துவிடு! அப்படி நீ செய்தால் அவர்களை நாடுவிட்டு நாடு சீமை விட்டுச் சீமை துரத்திவிட்டு ஏழரைக்கோடித் திரவியத்தில் உனக்குப் பாதி தருகிறோம்!".

இவ்வாறு சதிப்பங்காளிகள் சொல்லவும் மருத்துவக்காரக் குப்பி, "சரி!"என்று ஒப்புக்கொண்டாள் பேராசைக்காரி. மருத்துவக்காரியின் பேராசைக் குணம் போல் அவள் தேகம் பதினெட்டுக் கூன் கொண்டதாக இருந்தது.

மாயவர் பால்கடலிலிருந்து பங்காளிகள் கூடிப் பேசியதைப் பார்த்து, "நாம் கொடுத்த வரத்தில் குறைவந்து நேர்ந்துவிடும். தந்த வரத்தில் தவக்குறை நேர்ந்துவிடும்" என்று, "நாம் போய்க் கவனிக்க வேண்டும்" என்று உடனே கருட வாகனமேறிப் புறப்பட்டார்.

---

1. பெருச்சாளி வளை

Poṉṉayyā's good age
It misted there. Dew fell.
Kaṭuku sampa paddy flourished, paddy flourished there
The mist covered it well, it covered the land there
Miḷaku sampa paddy flourished, paddy flourished there
It rained three times a month in that land
There was a shower of hail stones (there) once a year
See the surplus paddy sprout on the threshing floor

Kuṉṉuṭaiyā unfailingly performed a pūjā for Cellāttā three times a day. Now Tāmarai was pregnant and was in the seventh month. While this was the situation in The Country Where The Kāveri Flows, in The Country of Prosperity the thousand clansmen gathered at (their) Pilliar temple. One man in the crowd said, "Oh, my elder brothers! Tāmarai, of The Country Where The Kāveri Flows, is now seven months pregnant.

Therefore, at the time (of birth) we must call our midwife, Kuppi, and arrange a trick." (Then) one man left, got Kuppi and brought her (there).

Clansmen: "Kuppi, elder sister! Tāmarai, the wife in the big house of The Country Where The Kāveri Flows is seven months pregnant. In three more months they will come to you and take you (to the palace). You go, and if a male child is born to her, cut it up and stuff the pieces in a bandycoot hole. If a female child is born in a conch, give it milk and name it Taṅkā.[1] If you do this, driving them from their country, from their kingdom, we will divide the seven and a half crores of wealth equally with you," said the clansmen.

Midwife: The midwife Kuppi said, "O.K." and the greedy one made the agreement. Just like her greedy character, this midwife's body was misshapen by eighteen bends.[1]

Vishnu, seeing the group of clansmen talking, from (his vantage point on) the milk sea, thought "The boon I have given is about to be marred. The boon I gave is going to be affected by a faulty penance. I must go and take care of it," and he immediately mounted his Garuda vehicle and set off.

---

1 Taṅkā means "golden one."

(பாட்டு) பால்கடல் என்னாத்தா விட்டுமல்லோ
பொன்னிவள என்சாமி நாடுவாறார்
மண்போட்டு என்னாத்தாப் பொன்விளையும்
மகுட பொன்னி என்சாமி நாடுவாறார்
மண்ணைநல்லோ மண்ணைப் பகிர்ந்தவளாம்
மதுக்கரை செல்லாத்தாக் கோவிலுக்கு

மாயவர் செல்லாத்தாக் கோவிலுக்கு வந்ததும் செல்லாத்தா மாயவரைக் கண்டதும் நமஸ்காரம் செய்தாள்.

மாயவர் - "செல்லாத்தா! மங்களம் உண்டாகட்டும்" என்று ஆசனத்தில் அமர்ந்தார்.

செல்லாத்தா - "அண்ணா! ஏது காரியமாக என்னைத் தேடி வந்தீர்கள்?"

மாயவர் - "செல்லாத்தா! உன்னால் ஒரு காரியம் ஆகவேண்டும். அதற்குத்தான் உன்னிடம் வந்தேன்."

செல்லாத்தா - "அண்ணா! என்னால் என்ன காரியம் ஆகவேண்டும்? சொல்லுங்கள்."

மாயவர் - "அம்மணி தாமரையை நான் தெய்வசபை கூட்டிச்சென்று மண்ணுக்கு இரண்டு ஆண், மனையிருக்கப் பெண் ஒன்று வரம் வாங்கிவந்தது உனக்குத் தெரியுமல்லவா?"

செல்லாத்தா - "ஆம், தெரியும்!"

மாயவர் - "இப்போது தாமரை ஏழுமாத கர்ப்பமாக இருக்கிறாள். இன்று தங்க வளநாட்டுப் பங்காளிகள் மருத்துவக் குப்பியிடம், "தாமரைக்கு ஆண் குழந்தை பிறந்தால் அறுத்துப் பெருக்கான் வங்கில் திணித்துவிடவும் பெண்குழந்தை பிறந்தால் சங்கு உரைத்துப் பால் வார்த்துத் தங்கா என்று பெயர் வை" என்று சொல்லிக் கொடுத்திருக்கிறார்கள். அவளும் ஒப்புக் கொண்டாள். ஆகையால் இந்த மூன்று மாதத்திற்குள் அரண்மனைக்கும் உன் ஆலயத்திற்கும் ஒரு சுரங்கவழி பண்ணி வை! குழந்தை ஜனனமாகும் நாள் நான் இங்கு வருகிறேன்! நான் வந்தவுடன் நீ சுரங்க வாயிலில் வந்து இரு! நான் கூப்பிடும்போது அரண்மனையின் உள்ளே வா! அதன்மேல் செய்யவேண்டியதை அப்புறம் சொல்கிறேன். இதுதான் நீ செய்யவேண்டியது."

செல்லாத்தா - "சுவாமி, நல்லது!"

Song: Leaving the milk sea, my Lord, leaving there
Coming to The Fertile Country Where The Kāveri
Flows, oh God
Where gold springs from the earth, my Lord
To the land renounced for its wealth, oh God
To the one who divides the earth, the good earth
To the Cellāttā temple of Matukkarai

As soon as Vishnu arrived at the Cellāttā temple, Cellāttā saw him and paid her respects.

Vishnu: "Oh, Cellāttā! Blessings to you," he said and sat down on the alter.

Cellāttā: "Elder brother! What brings you looking for me?"

Vishnu: "Cellāttā! I want you to do something. That is why I have come to you."

Cellāttā: "Elder brother! What do you want of me? Speak up."

Vishnu: "I took lady Tāmarai to the god's counsel-chamber and obtained for her the boon of two sons for the land and one daughter for the house. You know this, don't you?"

Cellāttā: "Yes. I know."

Vishnu: "Tāmarai is now in her seventh month. However, the clansmen of The Country of Prosperity have made an agreement with the midwife Kuppi that if a male child is born to Tāmarai she will cut it up and stuff it in a bandycoot hole. If a female child is born she will in a conch, pour milk in a conch and give it the name Taṅkā. Therefore, in the next three months (you must) build an underground passage between the palace and your residence. I will come here on the day the child is born. As soon as I arrive you (should) go to the mouth of the passage and wait. When I call, (you are to) come inside the palace. What you must do after that I will tell you at that time. This is what I want you to do."

Cellāttā: "Lord. Good!"

---

1 Meaning that she was a hunch back. There is a possible parallel here with Kūṉi (Mantharā in Sanskrit), a hunchbacked female figure in the Ramayana. Kūṉi was the nurse cum slave who advised Dasaratha's wife Kaikeyī to arrange for Rama's banishment to the forest. This was so that Kaikeyī's own son, Bharata, could take the throne.

மாயவர், "செல்லாத்தா! நான் போய்வருகிறேன்" என்று விடைபெற்றுப் பால்கடல் சென்றார்.

(பாட்டு) நாளொரு நாள் பொழுதொரு நாள்
இனி நடக்குதுபார் நல்பருவம்
ஆனைகட்டித் தாம்பாடும் அது
அழகு பொன்னி வளநாடு
மூன்று நல்ல மாதமங்கே இனிச்
சரியாக முடிந்தது பார் .

தாமரைக்குக் கர்ப்பம் பத்து மாதம் சரியாக முடிந்து ஜனனகாலம் நெருங்கியது. வயிற்றுவலி ஏற்பட்டது.

தாமரை - "அடி, மாதர்களே! எனக்கு,

(பாட்டு) வயிறு நல்லோ வலிக்குதடி
எனக்கு வல்லுயிரு போகுதடி
குடலை நல்லோ பிரட்டுதடி
என் உயிரு நல்லோ போகுதடி

அடி மாதர்களே! சீக்கிரம் என் நாதரைக் கூட்டிவாருங்கள்!"

மாதர்கள், "ஆத்தா, நல்லது!"என்று குன்னுடையா ராஜரிடம் சென்று, "சாமி! ஆத்தாளுக்கு வயிற்று வலி உண்டாகிவிட்டது! தங்களைக் கூட்டி வரச் சொன்னார்கள்" என்றார்கள்.

உடனே குன்னுடையா ராஜர் எழுந்து தாமரையிடம் ஓடிவந்து, "பெண்ணே, ஏன் அழுகிறாய்?" என்றார்.

தாமரை - "நாதா! எனக்கு வயிறு வலிக்கிறது. தாங்கள் சீக்கிரம் தங்க வளநாடு சென்று மருத்துவக்காரக் குப்பியைக் கூட்டி வாருங்கள்!"

என்றதும் ராஜர் உடனே புறப்பட்டார்.

(பாட்டு) பொன்னிவள என்னாத்தா நாடுவிட்டுத்
தங்கவள என்சாமி நாடுவாறார்
மேடுகண்டா என்னாத்தா மெல்லநடை
பள்ளங் கண்டால் என்சாமி பருத்தநடை
வேகாத என்சாமி வெய்யலிலே
வெந்தெறிஞ்ச என்சாமி கானலிலே

உச்சி உருவம் மத்தியான நேரம் குன்னுடையா ராஜர் தங்க வளநாடு போகும்போது பிள்ளையார் கோவிலில் பங்காளிக் கவுண்டர்கள் கூடியிருந்தார்கள். குன்னுடையாக் கவுண்டர் பிள்ளையார் கோவில் அருகில்

Vishnu: "Cellāttā! I will go," he said, took leave, and set out for the milk sea.

Song: Day after day, time followed time
See the good age in progress
Threshing was done by elephants (there)
Oh lovely Country Where The Kāveri Flows
Three months passed there
See, they have passed

Tāmarai had completed her tenth month of pregnancy,[1] the time of birth neared, and the labour pains began.

Tāmarai: "Hey, Ladies-in-waiting!

Tāmarai's Song: "Hey, ladies-in-waiting!
My stomach has some pains
They are getting stronger
My intestines are causing me nausea
It seems my life is leaving me
Hey ladies. Bring my husband here quickly."

Ladies: "Lady, good!", they said and went to King Kuṉṉuṭaiyā. "Lord. The lady's stomach pains have started. She has asked us to bring you," they said.

Kuṉṉuṭaiyā got up immediately and ran to where Tāmarai was. "Oh woman, why do you cry?"

Tāmarai: "Husband. My stomach is hurting. Go quickly to The Country of Prosperity and bring the midwife Kuppi herē," she said. The King set out immediately.

Song: Leaving The Country Where The Kāveri Flows, oh Lord
Going to The Country of Prosperity, my God
Seeing hills and climbing them, oh Lord
Seeing valleys and crossing them, my God
In the burning sun, oh Lord
Ignoring the intense heat, my God

When then sun was at its zenith, at midday, while King Kuṉṉuṭaiyā was on his way to The Country of Prosperity, the Kavuṇṭar clansmen were meeting at the Pilliar temple. As Kuṉṉuṭaiyā Kavuṇṭar neared the Pilliar

---

[1] In Tamil, months are numbered from their start rather than with their completion, so that a pregnancy is said to last ten months rather than nine, as in English.

வந்ததும் பங்காளிகள், “அண்ணா! வாருங்கள், உட்காருங்கள். நங்கைக்கு உடம்பு சௌக்கியமாக இருக்கிறதா?” என்றார்கள்.

குன்னுடையா - “பெரியவீட்டு அப்பா! இப்போது உடம்பு சவுகரியம் இல்லாமல்தான் குப்பி அக்காளைக் கூட்டிப்போக வந்தேன்.”

பெரிய
பங்காளி - “நீங்கள் இந்நேரத்தில் இவ்வளவு அவசரமாக வர நாங்களும் அப்படித்தான் நினைத்தோம்! சரி, நீங்கள் இங்கு இருங்கள். நான் போய்க் கூட்டிவருகிறேன்”

என்று பெரியவீட்டுக் கவுண்டர் மகன் பழனிசாமி மருத்துவக்காரக் குப்பியைப் போய்க் கூட்டிவந்தார். குப்பி வந்ததும் குன்னுடையாசாமியைப் பார்த்து, “பெரியவீட்டுத் தம்பி! தாமரை நல்லா இருக்கிறாளா?” என்றாள்.

குன்னுடையா - “அக்கா! தாமரைக்கு உடல் சவுகரியம் இல்லை. சீக்கிரம் தங்களைக் கூட்டிவரச் சொன்னாள். சீக்கிரம் புறப்படுங்கள்.”

குப்பி, “சரி, நல்லது தம்பி! வருகிறேன்!”என்று புறப்படும்போது பங்காளிக் கவுண்டர்கள், “அக்கா! நாங்கள் சொன்னது ஞாபகம் இருக்கிறதா? தாமரையை நன்றாகக் கவனித்துக் குழந்தை பிறக்கும்வரை ஜாக்கிரதையாகக் கவனிக்க வேண்டும்!”என்று கண்ணைச் சிமிட்டிக்கொண்டே சொன்னார்கள்.

குப்பி - “தம்பிமார்களே! அதற்குள் மறந்தா விடுவேன்! நினைத்துக் கொண்டுதான் இருக்கிறேன்.”

பங்காளி - “சரி, நல்லது! போய் வாருங்கள்.”

குன்னுடையா ராஜர் குப்பியைக் கூட்டிக்கொண்டு புறப்பட்டார்.

(பாட்டு) குப்பியை என்சாமி கூட்டிக்கொண்டு
வருகிறார் என்சாமி ராஜதுரை
தங்கவள என்சாமி நாடுவிட்டுப்
பொன்னிவள என்சாமி நாடுவாறார்

குப்பியைக் கூட்டிக்கொண்டு பொன்னி வளநாடு அரண்மனை வரும்போது தாமரை கஷ்டம் பொறுக்கமுடியாமல் அழுது கொண்டிருந்தாள். குப்பி அரண்மனைக்கு வந்ததும் மாயவர் பார்த்து உடனே கருட வாகனமேறிப் புறப்பட்டார்.

(பாட்டு) பால்கடல் என்சாமி விட்டுமல்லோ
பொன்னிவள என்சாமி நாடுவாறார்
ஆயர்நல்லோ ஆயர் பெருமாளும்
அரிராமர் என்சாமி வாறாரே

temple, the clansmen called, "Elder brother! Come. Sit down. Is your body tired?"

Kunnuṭaiyā: "Man of the big house! Of course my body is tired. I have come to fetch elder sister Kuppi.

Big Clansman: "Seeing you come at this time of day, and in such a hurry, we thought as much. O.K. You stay here. I will go and get her," he said, and the son of the Kavuṇṭar of the big house, Paḻaṉicāmi, went and brought the midwife Kuppi.

Midwife: When Kuppi arrived and saw Kuṉṉuṭaiyā she asked, "Younger brother of the big house, is Tāmarai all right?"

Kuṉṉuṭaiyā: "Elder sister! She is not all right. She told me to fetch you quickly. Let's get going."

Midwife: "O.K. Good. I am coming, younger brother!" she said.

Clansman: As they set out Paḻaṉicāmi Kavuṇṭar called. "Elder sister! Do you remember what we told you? Look after Tāmarai well! You must look after her with great care until the child is born," he said and he winked his eyes as he spoke.

Midwife: "Younger brothers. I shall not forget. I am thinking about it constantly."

Clansmen: "O.K., good. Go and return."

King Kuṉṉuṭaiyā set out, taking Kuppi with him.

Song: Bringing Kuppi with him, my Lord
The gentle King is coming, my Lord
Leaving The Country of Prosperity, my Lord
Approaching The Country Where The Kāveri Flows, my Lord

Tāmarai, not being able to bear the pain, was crying. (Kuṉṉuṭaiyā) brought Kuppi and approached the palace, in The Country Where The Kāveri Flows. Vishnu, seeing Kuppi arrive at the palace immediately mounted his Garuda vehicle and set off.

Song: Leaving the milk sea, my Lord
Coming to The Country Where The Kāveri Flows, my God
The good Lord, great Perumal
Harirāma is coming, my Lord

மாயவர் பொன்னி வளநாடு வந்து செல்லாத்தாக் கோவிலுக்குச் சென்றார். செல்லாத்தா மாயவரைக் கண்டதும் நமஸ்காரம் செய்தாள்.

மாயவர் - "செல்லாத்தா! மங்களம் உண்டாகட்டும்! சரி, உடனே அரண்மனை சுரங்கப் பாதையில் வந்து ஜாக்கிரதையாக இரு! நான் கூப்பிட்டதும் உள்ளே வந்து, நான் குழந்தைகளை வெளிப்படுத்துகிறேன். எடுத்து வந்துவிடு.!"

செல்லாத்தா - "அண்ணா, நல்லது!"

மாயவர், "சரி, நான் முன்னால் செல்கிறேன்" என்று புறப்பட்டு அரண்மனைக்குச் சென்று தாமரை இருக்கும் அறையில் ஈ போல் வடிவெடுத்து விட்டத்தில் ஒட்டிக்கொண்டார். அந்தச் சமயம் குப்பி வீட்டுக்குள் வந்து, "அடி, மாதர்களே! ஒரு கயிறு கொண்டுவாருங்கள்" என்றதும் மாதர்கள் சென்று கயிறு கொண்டுவந்தார்கள். குப்பி கயிற்றை வாங்கிக்கொண்டு எல்லோரையும் வெளியில் அனுப்பிவிட்டாள். பின்பு கதவைத் தாளிட்டுவிட்டுக் கயிற்றை ஒரு விட்டத்தில் கைக்கு எட்டும்படிக் கட்டித் தொங்கவிட்டாள். பின், "தாமரை! மண்டியிட்டு உட்கார்ந்து இந்தக் கயிற்றைப் பிடித்துக்கொள்" என்றாள். தாமரை மண்டியிட்டுக் கயிற்றைப் பிடித்து உட்கார்ந்தபின் குப்பி ஒரு துணியை எடுத்துத் தாமரையின் கண்ணைக் கட்டிவிட்டாள்.

தாமரை - "அத்தை! கண்ணை எதற்குக் கட்டுகிறீர்கள்?"

குப்பி - "தாமரை! இது உனக்கு முதல் பிரசவம். குழந்தை பிறக்கும்போது பயம் ஏற்படும். பயப்பட வேண்டாம்"

என்று பக்கத்து அறைக்குள் சென்று ஒரு கத்தியை எடுத்துக் கல்லில் தீட்டி மெருகேற்றிக் கொண்டிருந்தாள்.

அப்போது மாயவர் சமயம் பார்த்துத் தாமரையின் வலதுபுறம் வயிற்றின் அல்லையைக்[1] கிழித்துவிட்டார். அப்போது,

(பாட்டு) எட்டியே என்சாமி தாண்டுறாரே
மாயருட என்சாமி கிருபையாலே

தாமரையின் அல்லையைக் கிழித்துவிட்டதும் உள்ளே இருந்து பொறுமை பொறுத்த பொன்னம்பல சாமி எட்டிக் குதித்துக் கத்தியைக் கையில் பிடித்துத் தெற்குமுகமாக நின்றார். பின்பு மாயவர் தாமரையின் இடதுபுற அல்லையைக் கிழித்துவிட்டதும்,

1. வயிற்றின் பக்கவாட்டுப் பகுதி

Vishnu arrived in The Country Where The Kāveri Flows and came to the Cellāttā temple. Cellāttā, seeing Vishnu, paid him her respects.

Vishnu: "Cellāttā! Blessings to you. O.K. Come immediately to the tunnel beneath the palace and wait there, prepared. When I call, come in, and take away the children (which) I will bring out."

Cellāttā: "Elder brother, good!"

Vishnu: "O.K. I will go first," Vishnu said and set out. Arriving at the palace he took the disguise of a fly and alighted in the room where Tāmarai was. Kuppi arrived at the house at the same time.

Kuppi: "Hey, ladies-in-waiting! Bring a rope," she said.[1] The ladies went and brought a rope. Kuppi took the rope and sent everyone out (of the room). Then she bolted the door. Then she tied one end of the rope to the rafters and let it hang. Then (she said), "Tāmarai! Squat down and hold on to this rope."

After Tāmarai had squatted down and taken hold of the rope Kuppi took a cloth and tied it over Tāmarai's eyes.

Tāmarai: "Oh father's sister![2] Why have you covered my eyes?"

Kuppi: "Tāmarai! This is your first birth. You must not become frightened as the child is born," she said, and she went to the next room, got a knife, and sharpened it carefully on a stone.

Vishnu, seeing his chance, cut open The right side of Tāmarai's belly. At that moment:

Song: Stepping out suddenly, my Lord
By the grace of Vishnu, my Lord

Leaving the cut in the right side of the belly, the agreeable, patient Poṉṉampala jumped out, and holding a knife in his hand he stood facing south. Then Vishnu cut open The left side of Tāmarai's belly and:

---

1 Woman in the Koṅku region traditionally gave birth while squatting and tugging on a rope tied to a rafter. 2 Note that Kuṉṉuṭaiyā used the term "elder sister" for this woman, (p. 144) but his wife uses the term "father's sister" for her. This is significant as it indicates that the wife here does not assimilate to her husband's kin terminology. She continues to use "cross" rather than "parallel" terms for her husband's lineal kinsmen after her marriage. This is a common non-Brahman custom.

(பாட்டு) தாண்டியே என்சாமி குதிக்கிறாரே
சமர்த்துள்ள என்சாமி சங்கருதான்

பன்னிரண்டு யானை பலமுடைய இளைய சங்கர் எட்டுக் கட்டுப்போட்ட எம்தர்மர் வேலாயுதம் கையில் பிடித்துத் தெற்குமுகமாக நின்று பார்க்கும்போது மருத்துவக்காரக் குப்பி வடக்குமுகமாக உட்கார்ந்து கத்தி தீட்டிக் கொண்டிருப்பதைச் சங்கர் பார்த்து, "இவள் யார் கத்தி தீட்டிக் கொண்டிருக்கிறாள்?" என்று ஓடிப்போய்க் காலால் எட்டி உதைத்தவுடன் குப்பி குடல் கலங்கி சுவரின் ஓரத்தில் போய் விழுந்தாள். சங்கர் உதைத்த உதையில் குப்பியின் உடம்பில் இருந்த பதினெட்டுக் கூனும் நிமிர்ந்துவிட்டது.

மாயவர், "செல்லாத்தா! ஓடிவா!! இரண்டு குழந்தைகளையும் எடுத்துச் சென்று ஒருவருக்கும் தெரியாமல் ஐந்து வருஷம் வளர்க்கவேண்டும்" என்றார். செல்லாத்தா, "அண்ணா, நல்லது!" என்று குழந்தைகள் இரண்டையும் எடுத்துக்கொண்டு சுரங்கவழியாக ஆலயத்திற்குச் சென்றாள்.

பிறகு சிறிது நேரம் இருந்து தாமரைக்குப் பெண் குழந்தை பிறந்தது. குப்பி தாமரையின் கண்ணை அவிழ்த்துவிட்டாள்.

குப்பி - "தாமரை! நீ இருபத்தியொரு வருஷம் தவமிருந்து குழந்தைவரம் வாங்கி வந்தது வீணாகிவிட்டது. கொஞ்ச நேரத்திற்கு முன் உன் வயிற்றிலிருந்து இரண்டு பிசாசு அல்லையைக் கிழித்துக் கொண்டு ஓடிவிட்டது! இப்போது பெண் குழந்தை பிறந்திருக்கிறது."

தாமரை - "ஆகா, மாயவனே! நான் ·வரம் வாங்கி வந்தது வீணாகி விட்டதா?"

(பாட்டு) "படைத்தநல்லோ படைத்த பிரம்மாவே
அங்குப் பிரம்மாவே
பாழான தெய்வமே அங்குத் தெய்வமே
எழுதும் நல்லோ எழுதும் கர்த்தாவே
அங்குக் கர்த்தாவே
நான் இந்தவிதிக்கு ஆளானேன்
அங்கு ஆளானேன்
ஆலிலைமேல் ஆலிலைமேல்
பள்ளிகொள்ளும் அங்குப் பள்ளிகொள்ளும்
அரிராமா அரிராமா
என்ன செய்வேன் இனி ஏது செய்வேன்"

Song: Jumping forth, my Lord
The strong Cankar, my Lord

With the strength of twelve elephants the younger one, Cankar, looked around and holding Yeman's[1] righteous spear in his hand, he stood facing south.

As this was happening, Cankar saw the midwife Kuppi seated facing north, sharpening a knife. "Who is that who is there sharpening a knife?", Cankar thought and he ran and kicked her. Kuppi's intestines became deranged and she fell against a wall. Cankar kicked and kicked (again). The twelve bends in Kuppi's body all became straightened.

Vishnu: "Cellāttā! Run here! Take the two children with you, and without anyone knowing about it, you must raise them for five years."

Cellāttā: "Oh brother, good," she said and took the two children through the underground tunnel to her home.

A short while later a female child was born to Tāmarai. Kuppi unbound Tāmarai's eyes.

Kuppi: "Tāmarai! You did twenty-one years of penance, (and) the child boon you obtained has been wasted. A little while ago two evil spirits emerged from your belly. They tore up the umbilical cord and ran away. Now a female child has been born."

Tāmarai: "Ah ha, Vishnu! Was the boon I obtained unproductive?"

Song:
The creator Brahma, the creator there
The corrupted God, there, the God
The one who writes one's destiny there
The one who writes
I have been subjected to this fate, there, I have been
(subjected to this)
The one who sleeps there, the one who sleeps there
On the ficus religiosa leaf, on the ficus religiosa leaf
Harirāmā, Harirāmā, what shall I do? What shall I do
now?

---

3 Yeman is the god of death, spelled Yama in Sanskrit.

"பரந்தாமா! தாங்கள் கூட இருந்தும் எனக்கு இந்த வரம் வாங்கிக் கொடுத்தீர்களா?"

என்று மங்கை அழுகிறாள். மலர்க் கிளியாள் வாடுகிறாள். தாமரை அழுகிற சத்தம் குன்னுடையாசாமி காதில் கேட்டு ஓடிவந்து, "குப்பி அக்கா! ஏன் தாமரை அழுகிறாள். இன்னும் குழந்தை பிறக்கவில்லையா?" என்றார்.

குப்பி - "தம்பி! நீங்கள் இருபத்தியொரு வருஷம் தவம் செய்து ஈசுவரன் தாமரையின் வயிற்றில் இரண்டு பிசாசைப் பிடித்து அடைத்துவிட்டார்! அது கொஞ்ச நேரத்திற்குமுன் வயிற்றைக் கிழித்துக்கொண்டு ஓடிவிட்டது! இப்போது பெண்குழந்தை பிறந்திருக்கிறது."

குன்னுடையா - "பெண்ணே! தாமரை! அழவேண்டாம். நாம் கொடுத்து வைத்தது அவ்வளவுதான். குப்பி அக்கா பிசாசு வயிற்றிலிருந்து போனதாகச் சொல்கிறாள். நீ பார்த்தாயா?"

தாமரை - "நாதா! என் கண்ணைத் துணியால் கட்டிவிட்டார்கள்! அதனால் எனக்கு ஒன்றும் தெரியவில்லை."

குன்னுடையா - "சரி! அது போனால் போகிறது. அழுகவேண்டாம். பெண் குழந்தை இருக்கிறது. இதை நாம் வளர்த்திக் கல்யாணம் செய்து நம் நாட்டில் வைத்துக்கொள்ளலாம்."

தாமரை - "சரி, நாதா! நல்லது."

(பாட்டு) அப்படியே நல்லதென்று
அன்புடனே நடக்குது பார்

குன்னுடையா - "பெண்ணே, தாமரை! வெள்ளிக்கிழமை நல்லநாள் இருக்கிறது. புண்ணியார்ச்சனை செய்துவிடலாமா?"

தாமரை - "சுவாமி, நல்லது! அப்படியே செய்துவிடலாம்."

குன்னுடையா - "அடே, பாரிவில்லை சேவகா! அணியப்பூர் சென்று பிராம்மணர்களைப் பதினைந்தாம் நாள் வெள்ளிக்கிழமை புண்ணியார்ச்சனை என்று வரச்சொல்லி வா."

சேவகர்கள், "சரி, நல்லது" என்று புறப்பட்டார்கள்.

(பாட்டு) பாரிவில்லை சேவகனும் சேவகனும்
வெள்ளிவெடி ஆளுகளும் இனி ஆளுகளும்
ஓட்டம் பெருநடையா பெருநடையா
ஒருவிரைவாய் வருகிறாரே சேவகரும்

சேவகர் அணியப்பூர் வந்து பிராம்மணர் வீட்டுக்குப்போய், "சாமி, பொன்னி வளநாட்டில் பெரிய வீட்டுக் கவுண்டர் வீட்டில் வெள்ளிக்கிழமை வீடு

Tāmarai: "Vishnu! You were with me. Did you obtain such a boon to give to me?" she said. "The good woman is crying, the flower parrot is pining."

Kunnuṭaiyā heard the sound of Tāmarai's crying and came running.

Kunnuṭaiyā : Kuppi, elder sister! Why is Tāmarai crying? Has the child been born yet?"

Kuppi: "Younger brother! You performed penance for twenty-one years. Siva shut two evil spirits up in Tāmarai's belly. A little while ago these tore open her stomach and ran off. Now a female child has been born."

Kunnuṭaiyā: "Oh woman! Tāmarai! Don't cry. This is what has been allocated to us by elder sister Kuppi! You said two evil spirits escaped from the belly. Did you see them?"

Tāmarai: "Husband. She tied a cloth over my eyes! Therefore I did not see a thing."

Kunnuṭaiyā: "O.K. Never mind that. Don't cry. There is a female child. We will raise her and marry her and establish her in our country."

Tāmarai: "All right, husband! Good!"

Song: It was said to be good
See how things happened with love

Kunnuṭaiyā: "Oh woman, Tāmarai! Friday is an auspicious day. Shall we perform a Punniyārccanai ceremony?"[1]

Tāmarai: "Lord, good! We shall do it."

Kunnuṭaiyā: "Hey, lightfooted servant! Go to Aṇiyappūr and tell the Brahmans to come and perform a pūjā on the 15th, a Friday."

Servant: "Lord! Good," he said and set off.

Song: The light-footed servant, a servant
Shining like silver, shining
Running with big steps, big steps
A servant is coming at great speed

The servant arrived in Aṇiyappūr, and going to the house of a Brahman, he called, "Lord! In the home of the Kavuṇṭar of the big house of The

---

1 "Punniyārccanai," a ritual purification. The rite is usually performed at the naming ceremony of a new-born child, as well as on other important occasions.

புண்ணியார்ச்சனை செய்கிறார்கள்! உங்களை வெள்ளிக்கிழமை வரச் சொன்னார்கள்!"என்றனர்.

பிராம்மணர் - "சரி, அப்படியே வருகிறோம்!"

சேவகர், "சரி, நல்லது சாமி! போய் வருகிறோம்" என்று புறப்பட்டார்கள்.

(பாட்டு) அணியப்பூர் விட்டுமல்லோ விட்டுமல்லோ
பொன்னி வளநாடு வாறார் நாடு வாறார்
ஆளைக்கண்டா அன்னநடை அன்னநடை
ஆள்மறைந்தால் குதிரைவேகம் வருகிறாரே

பதினைந்தாம் நாள் வெள்ளிக்கிழமை விடி ஐந்து நாழிகைக்கு மாதர்கள் எழுந்து, அரண்மனையை அலங்காரம் செய்து கோமையம்[1] தெளித்தார்கள். இந்திரன் தேவி இறையவன் போய் மறைந்து சந்திரன்தேவி சூரியன் கிளம்புமுன், குன்னுடையாசாமி காசிக்கரைக்குச் சென்று குளித்துவிட்டு, செல்லாத்தாளுக்கு அமுது வைத்து அருபூஜை, குருபூஜை, ஐம்பத்தி எட்டு லிங்கம் பூஜையும் சரியாக முடித்துவிட்டு வீட்டுக்கு வந்தார். இதற்குள் பிராம்மணர்களும் வந்து சேர்ந்தார்கள். குன்னுடையாசாமியும் தாமரையும் பிராம்மணரை நமஸ்காரம் செய்தார்கள்.

பிராம்மணர் - "தாமரை! குழந்தை சுகமாக இருக்கிறதா?"

தாமரை - "சுவாமி! சுகமாக இருக்கிறது."

பிராம்மணர் - "சரி, புண்ணியார்ச்சனையை ஆரம்பிக்கலாமா?"

தாமரை - "சுவாமி! நடத்தலாம். அடி, குப்பி! ஐயர் வேண்டுமென்கிற சாமான்களை வாங்கிக் கொடு."

பிராம்மணர்கள் தேவையான சாமான்களை வாங்கி வீட்டுக்கு மாவிலை கட்டி வேதம் ஓதி புண்ணியார்ச்சனை சரியாக நடந்தது. பின்பு பிராம்மணர்களுக்கு வஸ்திரம், காணிக்கை கொடுத்து அனுப்பிவைத்தார்கள்.

(பாட்டு) மாதமூன்று மழைபெயும் அங்கு மழை பெயும்
வருஷமொரு கல்மாரி அங்குக் கல்மாரி
ஆனைகட்டித் தூர்விளையும் அங்குத் தூர்விளையும்
அழகுபொன்னி வளநாடு அங்கு வளநாடு

இந்தப் பிரகாரம் பொன்னி வளநாட்டில் நடக்குது அதிகாரம்.

தாமரை - "நாதா! மருத்துவக்கார அத்தைக்குச் சேலை எடுத்துக் கொடுத்து, ஊருக்கு அனுப்பிவிடலாம்."

1. கோமியம், பசுமூத்திரம்

Country Where The Kāveri Flows a puṉṉiyārccaṉai ceremony will be performed on Friday. They have said you are to come on Friday."

Brahman: "O.K. We shall come then!"

Servant: "All right, good, Lord! I will leave," he said and set off.

Song:

Leaving Aṇiyappūr, leaving it
He is coming to The Country Where The Kāveri Flows, coming
When seen, the man walks like a swan, like a swan
When not seen, he approaches with the speed of a horse

Early on the fifteenth, a Friday, at five o'clock in the morning, the ladies-in-waiting got up, decorated the palace, and sprinkled some drops of diluted cowdung around.[1] Before the moon set in search of Indra and before the sun rose in search of the moon, Kuṉṉuṭaiyā went to the Benares river bank to bathe. Then, calling Cellāttā, he finished the god's pūjā, pūja for the family deity, the fifty-eight lingams pūjā and returned home. Before this the Brahmans had arrived. The Brahmans paid Kuṉṉuṭaiyā and Tāmarai their respects.

Brahmans: "Tāmarai. Is the child in good health?"

Tāmarai: "Lord. It is fine."

Brahmans: "O.K. Shall we begin the Puṉṉiyārccaṉai ceremony?"

Tāmarai: "Lord. Begin it. Oh Kuppi. Give the Brahmans the materials they need."

The Brahmans took the necessary materials, tied strings of mango leaves to the house, recited sacred chants and performed a puṉṉiyārccaṉai ceremony. Then the Brahmans were given cloths and other gifts and sent off.

Song:

It rained three times a month, it rained there
Once a year there was a shower of hail stones
The threshing was done with elephants
Oh beautiful Country Where The Kāveri Flows, oh fertile land, there
So the monarch ruled thus
In The Country Where The Kāveri Flows

Tāmarai: "Husband! Give a sari to father's sister, the midwife, and send her home."

---

1 Done to purify the house.

குன்னுடையாசாமி, "பெண்ணே! அப்படியே அனுப்பிவிடலாம்" என்று குப்பியைக் கூப்பிட்டு ஒரு சேலை எடுத்துவரச்சொல்லி ஒரு தட்டத்தில் வெற்றிலை, பாக்கு வைத்துப் பணம் இருபது ரூபாய் வைத்துக் கொடுத்தார்கள். மருத்துவக்காரக் குப்பி அதைப் பெற்றுக்கொண்டு குன்னுடையாசாமியிடமும் தாமரையிடமும் விடைபெற்றுக்கொண்டு ஊருக்குப் புறப்பட்டாள்.

(பாட்டு) பொன்னிவள என்னாத்தா நாடுவிட்டுத்
தங்கவள என்சாமி நாடு வாறாள்
மேடுகண்டா குப்பியக்கா மெல்லநடை
பள்ளங்கண்டா பருத்தநடை வருகிறாளே

உச்சி உருவம் மத்தியான நேரம் குப்பி தங்க வளநாடு வரும்போது பங்காளிகள் பிள்ளையார் கோவிலில் உட்கார்ந்திருந்தார்கள். அதில் ஒருவர், "ஏனுங்க, அண்ணா! வடக்கிலிருந்து யாரோ வருகிறார்கள்போல் தெரிகிறது" என்றார். மற்றவர், "நம்ம குப்பி அக்காள்தான் வருவாள்போல் இருக்கிறது. ஆனால் குப்பிக்குப் பதினெட்டுக் கூன் இருக்குமே? இப்போது நன்றாக நிமிர்ந்து வருகிறாளே!" என்று எல்லோரும் மறுபடியும் ஒரு திட்டம் வகுத்தார்கள். அதற்குள் குப்பி அருகில் வந்தாள்.

பங்காளி - "அடடா! குப்பி அக்காள் வந்தாச்சு! அக்கா! ஒரு கூன் கூட இல்லையே! எப்படி நிமிர்ந்தது?"

மற்றும் ஒருவர் - "அக்கா! எல்லா காரியமும் சுகமாக முடிந்ததா? நாங்கள் சொன்ன விஷயமெல்லாம் சரியாகச் செய்தீர்களா?"

குப்பி - "அப்பா! நீங்கள் சொன்னதுபோல் ஆண்குழந்தை இரண்டு பிறந்தது! அதை அறுத்துப் பெருக்கான் வங்கில் திணித்து விட்டேன். மூன்றாவதாகப் பெண் குழந்தை பிறந்தது! அதற்கு, "தங்காள்" என்று பெயர் வைக்கச் சொல்லிவிட்டு வந்தேன்."

பங்காளி - "அடி, சண்டாளி! நாங்கள் உன் குணத்தைப் பார்க்கலாமென்று விளையாட்டுக்காகச் சொன்னதற்கு இரண்டு குழந்தையையும் அறுத்துப், பெருக்கான் வங்கில் திணித்து விட்டாயே? கொலைகாரி!"

குப்பி - "அப்பா! நீங்கள்தானே அந்தமாதிரி செய்யச் சொன்னீர்கள்? இப்போது இப்படிப் பேசுகிறீர்கள்!"

பங்காளி - "அடி, கொலைகாரி! குழந்தைய்ய அறுத்துப் போட்டதும் அல்லாமல் நாங்கள்தான் சொன்னோம் என்று சொல்கிறாயா? அந்தக் கொடுவாளை எடுங்கள்! இவளை ஒரே வெட்டாக வெட்டி எறியலாம்"

Kuṉṉuṭaiyā: "Oh woman! I shall send her off," he said and he called a servant telling her to bring a sari and put it on a plate with betel leaf, areca nut and twenty rupees, and he gave this to her. The midwife Kuppi accepted these, took her leave of Kuṉṉuṭaiyā and Tāmarai, and set off towards home.

Song: Leaving The Country Where The Kāveri Flows, my
Lord
She is approaching The Country of Prosperity
Seeing hills, Kuppi, the elder sister, climbed them
Seeing valleys, she crossed them and came

When the sun was at its height, at midday, as Kuppi was returning to The Country of Prosperity, the clansmen were seated at the Pilliar temple.

Clansmen: One of them (said), "My elder brothers! It seems as if someone is approaching from the north."

Another Clansman: "It is our own elder sister, Kuppi, who is coming, it seems. But didn't Kuppi have eighteen bends (on her body)? Now she approaches well straightened!" he said. They all chalked out plan, and just as this was done she neared.

Clansmen: "Oh hey! Elder sister Kuppi has come. Elder sister hasn't a single bend. How did she get straightened?"

Another Clansman: "Elder sister! Was all the work accomplished? Did you carry out all of our instructions?"

Kuppi: "Men. Just as you said, two male children were born! I cut them up and stuffed them in a bandycoot's hole. Third, a female child was born. I named it Taṅkāḷ, and have come back."

Clansmen: "Hey, the villain! We told you in jest, to teach you (about) your own character, and you have (actually) cut up the two children and stuffed them in a bandycoot hole? Oh twisted woman!"

Kuppi: "Men. You yourselves told me to do it. Now you talk like this!"

Clansmen: "Hey, twisted one! You say we told you to cut up the children. Get that bush knife! We shall finish her with one blow," said the clansmen. Hearing what the clansmen said, Kuppi became frightened.

என்று சதிகாரப் பங்காளிகள் சொன்னதைக் கண்ட குப்பி பயந்து, "அப்பா, தம்பிமார்களே! என்னை நீங்கள் வெட்டவும் வேண்டாம். நீங்கள் கொடுப்பதாகச் சொன்ன திரவியமும் வேண்டாம். என்னை உயிருடன் விட்டால் போதும். நான் போய்விடுகிறேன்" என்றாள்.

பங்காளி, "சரி, ஓடிப் போய்விடு! எங்கள் முன் நிற்க வேண்டாம்!" என்று சொன்னதும் மருத்துவக்காரக் குப்பி வேகமாய் வீடு போய்ச் சேர்ந்தாள். தங்க வளநாட்டில் இப்படி நடக்கும் போது பொன்னி வளநாட்டில்,

(பாட்டு) செங்கோலு பொன்னையா அதிகாரம் இனி அதிகாரம்
அங்குச் செலுத்திப் பட்டம் நாட்டிலே ஆளுகிறார்
அங்கு ஆளுகிறார்
தங்கவிரல் பொன்னையா அதிகாரம் இனி அதிகாரம்
தனிச்சுப் பட்டம் நாட்டிலே ஆளுகிறார்
இனி ஆளுகிறார்
காலம் பனி பெயும் பொன்னி வளநாட்டில்
கடுகுசம்பா நெல் விளையும்
மூடுபனி பெயும்
மிளகுசம்பா நெல் விளையும்

தாமரை - "நாதா! இன்று வெள்ளிக்கிழமை! குழந்தையைப் பிள்ளையார் கோவிலுக்கு எடுத்துச் சென்று அப்படியே செல்லாத்தாக் கோவிலுக்கும் போய்த் தரிசனம் செய்து வரலாம்."

குன்னுடையா - "சரி, பெண்ணே! அப்படியே போய் வருவோம்."

இருவரும் குளித்துவிட்டுக் குழந்தையை எடுத்துக்கொண்டு பிள்ளையார் கோவில் சென்று பிள்ளையாரை நமஸ்கரித்துவிட்டு, செல்லாத்தாக் கோவிலுக்குச் சென்று ஆத்தாளுக்கு அமுது வைத்துப் பூஜை நடத்தினார்கள். பின்பு குழந்தையைச் செல்லாத்தா பாதத்தில் வைத்து நமஸ்காரம் செய்தார்கள். பின்பு குழந்தையை எடுத்துக்கொண்டு புறப்படும்போது,

தாமரை - "நாதா! நாம் இப்படியே ஆயிர மா நிலத்திற்குச் சென்று காராம்பசுவின் கன்றுகளைப் பார்த்துவிட்டுப் போகலாம்."

குன்னுடையா - "சரி, பெண்ணே!"

இருவரும் ஆயிர மா நிலம் சென்றார்கள். அங்குப் போய்ப் பார்க்கும்போது காராம் பசுக்களின் இரண்டு காளைக்கன்றும் விளையாடிக் கொண்டிருந்தன.

தாமரை - "நாதா! நான் வாங்கிவந்த வரம்தான் வீணாகிவிட்டது. காராம்பசுவுக்கு வாங்கிவந்த வரம் சரியாக இருக்கிறது! சரி, நாதா! வாருங்கள். வண்டூராங்குளம் சென்று நீலாவையும் அதன் குட்டிகளையும் பார்த்துச் செல்வோம்."

Kuppi: "Men, younger brothers. You need not cut me up. You needn't give me what you said you would before. If you let me live it is enough. I shall go," she said.

Clansmen: "O.K. Run off! You must not stand before us," they said. The midwife Kuppi speedily went home.

As this was happening in The Country of Prosperity, in The Country Where The Kāveri Flows,

Song: Poṉṉayyā[1] ruled with justice, sweet rule
He ruled the country with authority, he ruled there
He ruled with a golden signet ring on his finger, sweet rule
He ruled the country alone, he ruled there

It rained regularly in The Country Where The Kāveri Flows and the kaṭuku sampa paddy flourished. Mist covered the land and the milaku sampa paddy flourished.

Tāmarai: "Husband," (Tāmarai) said "It's Friday. Let us take the child to the Pilliar temple. From there we can go to Cellāttā's temple, introduce her (to the goddess) and return."

Kuṉṉuṭaiyā: "O.K., oh woman! We shall go and return," he said.

The two of them bathed, took the child, went to the Pilliar temple, paid Pilliar their respects, went to Cellāttā's temple, called her and performed a pūjā. Then they placed the child at Cellāttā's feet and paid their respects. Then, as they took the child and started to leave, (Tāmarai said):

Tāmarai: "Husband. Let us visit the enormous field and see the black cows and the calves on the way."

Kuṉṉuṭaiyā: "All right, oh woman!" he said and the two of them visited the enormous field. As they went they saw two calves of the black cows frolicking (there).

Tāmarai: "Husband! The boon I got for myself was unproductive. (Yet) the boon I got for the black cows has turned out very well. O.K., husband! Let's go and see the colts of the blue (horse), at Vaṇṭūrāṅkuḷam.

---

1 Another name for the elder brother, Poṉṉar. The bard uses this song long before the child is actually old enough to rule a Kingdom.

இருவரும் புறப்பட்டு வண்டுராங்குளம் சென்றார்கள். அங்குப் போய் நீலாவின் இரண்டு குட்டிகளையும் பார்க்கும்போது மின்னல் ஒளிபோல் வேகமாக ஓடி விளையாடிக் கொண்டிருந்தன. அதைப் பார்த்த தாமரை, "நாதா! நான் வாங்கிவந்த வரம் வீணாகிவிட்டது. இவைகளுக்கு வாங்கிவந்த வரம் எல்லாம் நன்றாக இருக்கிறது" என்றாள்.

தாமரை - "நாதா!

(பாட்டு) நான் அதுக்குநல்லோ அதுக்கும்
குறைகள் செய்தேன் இனிக் குறைகள் செய்தேன்
அத்தனை தீமை செய்தேன் அங்குத் தீமை செய்தேன்
மங்கை நல்லோ மங்கை அழுகிறாளே
அங்கு அழுகிறாளே
மலர்க்கிளியா மலர்க்கிளியா வாடுகிறாள் அங்கு வாடுகிறாள்"

குன்னுடையா - "பெண்ணே! நம்மளுக்கு ஆண்குழந்தை இல்லாவிட்டால் போகிறது. குதிரை, பசு இவைகளுக்கு ஆண் குழந்தைகள் பிறந்திருக்கிறதே. அதுவே நம்மளுக்குச் சந்தோஷம்! சரி, வா! காராம்பறச்சி குழந்தையையும் போய்ப் பார்த்துவிட்டுப் போகலாம்."

இருவரும் புறப்பட்டுப் பறத்தெருவுக்குச் சென்றார்கள். அங்குச் சென்று காராம் பறச்சியைக் குழந்தையை எடுத்துவரும்படிக் கூப்பிட்டார்கள். பறச்சி உடனே குழந்தையை எடுத்துவந்தாள். தாமரை குழந்தையைப் பார்த்துவிட்டு, "நாதா! நாம் பறச்சிக்கு வாங்கிவந்த வரம் வீண்போகவில்லை. குழந்தை நல்ல பலசாலியாக இருக்கும்போல் தெரிகிறது! இவன் பெரியவன் ஆனவுடன் நம் அரண்மனைக்குக் காவல்காரனாக வைத்துவிடலாம்" என்று இருவரும் பேசிக்கொண்டு அரண்மனைக்குச் சென்றார்கள். சாப்பிட்டுத் தாம்பூலம் போட்டு அமர்ந்தார்கள்.

குன்னுடையா - "பெண்ணே, தாமரை! குழந்தைக்குத் திருவினித்தூரி செய்ய வேண்டுமல்லவா?"

தாமரை - "ஆம், நாதா! ஆசாரிகளைக் கூட்டிவரச்சொல்ல வேண்டும்."

குன்னுடையா - "சரி, நல்லது! அடே, பாரிவில்லை சேவகா! சீக்கிரம் தங்க வளநாடு சென்று ஆசாரிகளைக் கூட்டிக்கொண்டு வாருங்கள்."

சேவகர்கள், "சுவாமி, நல்லது!"என்று தங்க வளநாடு புறப்பட்டார்கள்.

(பாட்டு) பொன்னிவள நாடுவிட்டு நாடு விட்டுத்
தங்கவள நாடுவாறார் நாடு வாறார்
ஆளைக்கண்டா அன்னநடை அன்ன நடை
ஆள் மறைந்தால் குதிரைவேகம் வருகிறாரே

The two of them set out and arrived at Vaṇṭūrāṅkuḷam. There, they saw the two colts of the blue (horses), frolicking, and running like flashes of lightening. Seeing this Tāmarai (said), "Husband! The boon I obtained for myself was unproductive (yet) the boon I obtained for them has turned out very well."

Tāmarai's *Song*: "Husband!

For that to happen, for that to happen
How many sins I committed, how many sins there
For all that to happen I (must have) made many
mistakes there, many mistakes
The good woman, the good woman is crying, is crying
there
The flower parrot, the flower parrot is pining, is pining
there

Kuṉṉuṭaiyā: "Oh woman. Let us be without a male child. We can be happy with the birth of male offspring to the horses and cows! O.K., come! Let's go and see the son of the black Paṟaiyā woman on our way."

Saying this the two set off and arrived at the Paṟaiyā's street. Once there they called the Paṟaiyā woman, telling her to bring her son. The Paṟaiyā woman immediately picked up the child. Seeing the child Tāmarai (said), "Husband. The boon I obtained for this Paṟaiyā woman was not unproductive. The child seems to be very strong. As soon as he becomes a man we shall make him the palace guard," she said. The two of them, talking, returned to the palace. They ate, chewed betel and areca nut, and rested.

Kuṉṉuṭaiyā: "Oh woman, Tāmarai. We must make the child a hanging cradle, mustn't we?"

Tāmarai: "Yes, husband! We must call the artisans."

Kuṉṉuṭaiyā: "O.K., good! Hey, light-footed servant! Go quickly to The Country of Prosperity, get the artisans and bring them here."

Servant: "Lord. Good!", said the servant and set off for The Country of Prosperity.

Song: Leaving The Country Where The Kāveri Flows,
leaving it
Going to The Country of Prosperity, going there
When seen the man walks like a swan, like a swan
When unseen, he travels with the speed of a horse

சேவகர்கள் தங்க வளநாடு வந்து ஆசாரிகளைக் கூப்பிட்டு, "அப்பா, ஆசாரிகளே! பொன்னி வளநாட்டுக் குன்னுடையா ராஜர் உங்களைக் கூட்டிவரச் சொன்னார்கள்" என்றார்கள். ஆசாரி, "இதோ, வருகிறோம்" என்று புறப்பட்டுப் பொன்னி வளநாடு வந்து குன்னுடையா ராஜரைக் கண்டு, நமஸ்காரம் செய்தார்கள்.

குன்னுடையா - "அப்பா, ஆசாரிகளே! மங்களம் உண்டாகட்டும்! ஆசாரி, குழந்தைக்கு ஒரு திருவினித்தூரி செய்யவேண்டும். அதற்குத் தான் கூட்டிவரச் சொன்னேன்."

ஆசாரி - "சாமி, நல்லது!"

குன்னுடையா - "அடி, குப்பி! இங்கு வா. ஒரு வள்ளம் முத்து அளந்துவந்து ஆசாரியிடம் கொடு."

குப்பி உடனே ஓடிவந்து முத்து ஒரு வள்ளம் கொண்டுவந்து ஆசாரியிடம் கொடுத்தாள். ஆசாரி முத்துக்களை வாங்கிக்கொண்டு போய்ப் பட்டறை வைத்து வேலையை ஆரம்பித்தார்கள்.

(பாட்டு) அங்கம் உருகுதடா உருகுதடா
ஆசாரி பட்டறையில் பட்டறையில்
தங்கம் உருகுதடா உருகுதடா
தட்டானுட பட்டறையில் பட்டறையில்

ஆசாரிகள் தங்கத்தை உருக்கிக் குத்துக்காலும் பதுமைகளும் செய்து திருவினித்தூரி செய்து முடித்தார்கள். பிறகு அரசரைக் கண்டு, "சாமி! திருவினித்தூரி செய்துவிட்டோம்" என்றார்கள்.

குன்னுடையா - "சரி, நல்லது! ரேணிப் பட்டகசாலையில் மேலே விட்டத்தில் சங்கிலி போட்டு மாட்டிவிடுங்கள்."

உடனே ஆசாரிகள் அப்படியே செய்து முடித்தார்கள்.

குன்னுடையா - "அடி, குப்பி! ஒரு வள்ளம் முத்து அளந்துவந்து ஆசாரிகளுக்குக் கொடு."

ஆசாரிகள் முத்தை வாங்கிக்கொண்டு குன்னுடையா ராஜரிடம் விடைபெற்றுத் தங்க வளநாடு போய்ச் சேர்ந்தார்கள். ஆசாரிகள் சென்றபின் தாமரை குழந்தையை எடுத்துத் தூரியில் வைத்துத் திருவினித்தூரியை ஆட்டி விட்டாள்.

Servant: The servant arrived in The Country of prosperity and called the artisans. "Men. Oh artisans! King Kuṉṉuṭaiyā of The Country Where The Kāveri Flows has ordered me to fetch you," he said.

Artisans: "What ever it is, we are coming," they said and set off. Arriving in The Country Where The Kāveri Flows they found King Kuṉṉuṭaiyā. The artisans paid him their respects.

Kuṉṉuṭaiyā: "Men. Oh artisans! Blessing to you! Artisans. You must make a hanging cradle for the child. This is the reason you were sent for."

Artisans: "Lord. Good!"

Kuṉṉuṭaiyā: "Hey, servant! Come here. Measure out a vaḷḷam of pearls, come and give them to the Artisans."

The servant came running, immediately. She brought a vaḷḷam of pearls and gave them to the artisans.

The artisans accepted the pearls, went and set up a workshop and began to work.

Song: Softening the body (of metal), melting it
In the artisan's workshop, in the workshop
Softening the gold, melting it
In the blacksmith's workshop, in the workshop

The artisans softened the gold, beat it, formed it and finished the making of a hanging cradle. Then, seeing the King, they said, "Lord. We have made the hanging cradle."

Kuṉṉuṭaiyā: "O.K. Good. Hang it from a chain, on a cross beam in the earthen courtyard."

The artisans immediately did this.

Kuṉṉuṭaiyā: "Hey, servant! Measure out a vaḷḷam of pearls and give them to the artisans."

The artisans accepted the pearls, took leave of King Kuṉṉuṭaiyā and returned to The Country of Prosperity.

After the artisans had left, Tāmarai took the child, put it in the cradle and began to swing it.

(பாட்டு) ஆடுது அண்ணலூஞ்சல் பத்தினிக்கு
அசைந்துவரும் பெண்பதுமை பார்வதிக்கு
ஓடுது வெள்ளிரதம் பத்தினிக்கு
ஓவைந்துவரும் பெண்பதுமை பார்வதிக்குச்
சித்திரங்கள் பேசுதுபார் பத்தினிக்குச்
சிரிக்குதுபார் பெண்பதுமை பார்வதிக்கு
அண்ணலூஞ்சல் தொட்டிலிலே பத்தினியா
அயர்ந்து நித்திரை செய்யுறாளே பார்வதியா

இந்தப் பிரகாரம் பொன்னி வளநாட்டில் நடந்துவரும் காலத்தில் தங்க வளநாட்டில் பங்காளிக் கவுண்டர்கள் எல்லோரும் பிள்ளையார் கோவிலில் கூடினார்கள்.

பெரியவீட்டுக் கவுண்டர் - "அப்பா! ஆயிரம் வீட்டுக்காரரும் வந்துவிட்டீர்களா?"

மற்றவர்கள் - "பெரியவீட்டு அண்ணா! எல்லோரும் வந்துவிட்டோம்."

பெரியவீட்டுக் கவுண்டர் - "சரி, நல்லது! பொன்னி வளநாட்டில் குன்னுடையாக் கவுண்டரும் தாமரையும் தெய்வசபை சென்று இருபத்தியொரு வருஷம் தவமிருந்து குழந்தைவரம் வாங்கி வந்தார்கள். இப்பொழுது பெண்குழந்தை பிறந்திருக்கிறது. ஆண் குழந்தையைக் குப்பி அக்காளிடம் சொல்லிச் சதிசெய்து கொன்றுவிட்டோம்! இனி அந்தப் பெண் குழந்தை பெரிதானவுடன் கல்யாணம் செய்து மருமகனைக் கூட்டிவந்து ஊரில் வைத்துத் திரவியம், பூமிகள் எல்லாம் மருமகனுக்குச் சேர்ந்துவிடும்! நாம் ஆயிரம் வீட்டுப் பங்காளிகள் இருந்து கொண்டு மாமன் மைத்துனருக்கு நாட்டை விடுவதா?"

"ஆகையால் நாம் இப்போதே பொன்னி வளநாடு சென்று பூமியைப் பிடுங்கிக்கொண்டு அவர்களை நாடுவிட்டு நாடு, தேசம்விட்டுத் தேசம் துரத்திவிட்டு வந்துவிடுவோம்."

இப்படி எல்லோரும் முடிவு செய்து பொன்னிவளநாட்டை நோக்கிப் புறப்பட்டார்கள்.

(பாட்டு) தங்கவள என்னாத்தா நாடுவிட்டுப்
பொன்னிவள என்சாமி நாடுவாறார்
ஆளைக்கண்டால் என்னாத்தா அன்னநடை
ஆள்மறைந்தால் என்சாமி குதிரைவேகம்

எல்லோரும் பொன்னி வளநாடு வந்து பிள்ளையார் கோவிலில்

Song: The swing of the chaste girl is rocking
It moves for the girl who is shaped like a sculpture (of a goddess)
The silver chariot is swaying for the chaste girl
It moves rhythmically for the girl who is shaped like a sculpture (of a goddess)
The swing is talking to the chaste girl
See how she smiles, the girl who is shaped like a sculpture (of a goddess)
Oh chaste girl in a fine swing
Parvati is sleeping deeply.

While these things happened in The Country Where The Kāveri Flows, in The Country of Prosperity the Kavuṇṭar clansmen had all gathered at the Pilliar temple.

Big K.: "Men. Have the heads of the thousand households arrived?"

Others: "Oh elder brother of the big house! We are all here."

Big K: "O.K. Good! Kuṉṉuṭaiyā Kavuṇṭar and Tāmarai, of The Country Where The Kāveri Flows, went to the god's counsel-chamber and did penance for twenty-one years. They obtained the boon of bearing children and returned. Now a female child has been born. Elder sister Kuppi deceitfully murdered the male children, as she was told. Now, as soon as that female child grows up she will be married, the son-in-law will be brought and established there, and all the land and the wealth will be passed to him. We existing clansmen, the thousand of us, will we let the country pass (into the hands of) an in-law?"

"Therefore, we must go to The Country Where The Kāveri Flows now and seize the land, driving them off it and out of the country," he said.

They all came to an agreement and turning towards The Country Where The Kāveri Flows, they set off.

பெரிய
கவுண்டர் - "அப்பா! எல்லோரும் அரண்மனைக்குப் போகவேண்டாம். பதினைந்து பேர் போங்கள்! போய்க் குன்னுடையாக் கவுண்டனை அதிகமாக அடிக்காதீர்கள். தாமரையை நன்றாக உதைத்து இருவரையும் வெளியே முடுக்கிவிடுங்கள்."

"சரி, நல்லது" என்று பதினைந்துபேர் புறப்பட்டார்கள். பங்காளிகள் அரண்மனைக்குப் போகும்போது தாமரை குழந்தையைத் தூரியில் வைத்து ஆட்டிவிட்டுக் கொண்டிருந்தாள். பங்காளிகள் அருகில் சென்றதும்,

(பாட்டு) எட்டிமயிர் பிடித்தான் சண்டாளன்
அவன் இட்டானே நாலடி கன்னத்திலே
பிடரிமயிர் பிடித்தான் பங்காளி
போட்டானே நாலடி தாமரையை
அடிபொறுக்க மாட்டாமல் பத்தினியா
ஆளுயரம் குதித்தாளே தாமரையா

பங்காளி - "சண்டாளி! சதிகாரி! எங்கே உன் புருஷன்?"

தாமரை - "அய்யோ, சாமி! என்னை அடித்தாலும் பொறுத்துக் கொள்வேன். என் நாதனை ஒன்றும் செய்யாதீர்கள். என்ன நீங்கள் சொன்னாலும் செய்கிறோம்."

பங்காளி, "சரி! சீக்கிரம் உன் புருஷனையும் கூட்டிக்கொண்டு தேசம்விட்டுத் தேசம், நாடுவிட்டு நாடு ஓடிவிடுங்கள்! இங்கு இருந்தால் உங்கள் இருவரையும் கொன்றுவிடுவோம்" என்றார்கள். அப்போது குன்னுடையாசாமியும் அங்கு வந்தார். பங்காளிகள் இருவரையும் பிடித்து இழுத்துக்கொண்டு பிள்ளையார் கோவிலில் கொண்டு வந்தார்கள்.

அங்கு இருந்த மற்ற பங்காளிகளும் தாமரையைக் கண்டதும், "சண்டாளி! உன் புருஷனைக் கூட்டிக்கொண்டு உடனே ஓடிவிடுங்கள்" என்றார்கள்.

தாமரை, "சாமி! இப்போதே ஓடிவிடுகிறோம்! எங்களை ஒன்றும் செய்யவேண்டாம்" என்று நாதனை நோக்கி, "இந்தக் குழந்தையைப் பிடியுங்க்ள்" என்று கொடுத்துவிட்டு அரண்மனை அருகில் போய் நின்று மாயவரை நினைத்து,

Song:

Leaving The country of Prosperity, my Lord
Approaching The Country Where The Kāveri Flows, my Lord
When seen, the men walk like swans, like swans, my God
When unseen, they move with the speed of horses, my Lord

They all arrived in The Country Where The Kāveri Flows and sat down at the Pilliar temple (there).

Big K.: "Men. We must not all go to the palace. Let fifteen men go. Having gone, don't beat Kunnuṭaiyā Kavunṭar excessively. Kick Tāmarai well. Then leave both of them outside."

Others: "O.K. Good," they said, and fifteen men set out. As the clansmen set off for the palace Tāmarai had put the child in the cradle and was swinging it. As the clansmen came near,

Song:

He grabbed her by the hair, the villain
He struck her across her cheek four times
He seized the hair at the nape of her neck, the clansmen
He struck Tāmarai four times
The chaste lady couldn't bear the blows (and)
Tāmarai jumped the height of a man

Clansmen: "Villain! Liar! Where is your husband?"

Tāmarai: "Oh,oh, Lord! If you beat me I will bear it. Don't do anything to my husband. We will do whatever you say."

Clansmen: "O.K. Bring your husband quickly. Run, leave the country, leave the land! If you stay here we will kill you both." At that moment Kunnuṭaiyā appeared. The clansmen seized him and dragged him to the Pilliar temple.

Others: There the rest of the clansmen, seeing Tāmarai, said, "Villain! Take your husband and run away."

Tāmarai: "Lord! We will run away right now. Don't do anything to us," she said and looking at her husband (added), "Hold the child." Then she gave it to him and going near the palace she stood and thought of Vishnu.

"பாலமலை ஜோசியா! பரமகுரு தன்னாசி!
ஏழை பரதேசி! எம்பெருமாள் மாயவனே!

ஆயிரம் பங்காளிகளும் எங்களை அடித்து நாட்டைவிட்டு முடுக்குகிறார்கள்! நாங்கள் சென்றபின் எங்கள் திரவியங்களை எல்லாம் எடுத்துக்கொண்டு, அரண்மனையையும் இடித்து விடுவார்கள். நாங்கள் நாட்டைவிட்டுப்போய் ஒரு காலத்தில் தப்பிப் பிழைத்து வந்தால் நாங்கள் இருக்க அரண்மனை வேண்டும்! ஆகையால் தாங்கள் அரண்மனையைப் பாதுகாக்க வேண்டும் காஞ்சிநாதா!"

என்று தாமரை மாயவரை வேண்டும்போது மாயவர் அதைக்கேட்டு உடனே கதண்டுகளையும் வண்டுகளையும் அனுப்பி அரண்மனைக்குக் காவல் இருக்கச் செய்தார். தாமரை திரும்பவும் பிள்ளையார் கோவில் வந்து நாதனிடம் குழந்தையை வாங்கிக்கொண்டு இருவரும் புறப்பட்டார்கள்.

குன்னுடையா - "பெண்ணே, தாமரை! நம் காலம் முடிந்துபோகும் வரை நம் நாட்டில் இருந்தாலும் கிராமத்துக் கவுண்டர்களாவது நம்மை எடுத்து அடக்கம் செய்வார்கள்! அதற்குமில்லாமல் இந்தக் கதி நேர்ந்துவிட்டது.

(பாட்டு) அதுக்கும் குறைகள் செய்தோம் பெண்ணே
குறைகள் செய்தோம்
அத்தனைக்கும் தீமை செய்தோம்
நாம் தீமை செய்தோம்
எழுதும் நல்லோ எழுதும் கர்த்தாவே
அங்குக் கர்த்தாவே
நாங்கள் இந்த விதிக்கு ஆளானோம்
இங்கு ஆளானோம்"

தாமரை, "நாதா! வரும் வினை வந்தால் வழியிலும் தங்காது என்று தாங்கள்தான் அடிக்கடிச் சொல்வீர்கள்! அதற்கு நாம் என்ன செய்வது? சரி, வாருங்கள்! செல்லாத்தாக் கோவில் போய்விட்டுப் போவோம்" என்று இருவரும் செல்லாத்தாக் கோவிலுக்குச் சென்று தாமரை கணவரிடம் குழந்தையைக் கொடுத்துவிட்டு மாராப்புச் சேலையை விகிந்து கட்டி ஆயிரம்பாகக் கூந்தலை அவிழ்த்துவிட்டுச் செல்லாத்தாளை நோக்கிப் பாடினாள்.

(பாட்டு) "நீ கோவிலிலே செல்லாத்தா இருக்கிறயா
அம்மா இருக்கிறயா
குடியோடிச் செல்லாத்தாப் போயிட்டியோ

Seer of Bāla mountain, supreme penitant!
Poor pilgrim, my perumal, my Vishnu
The thousand clansmen have beaten us and are sending us out of the country
After we leave they will take all our wealth away
They will knock down the palace
When we have left the country
If we escape, manage for awhile, and return
We must have our palace
Therefore, you must protect the palace, oh Lord of Kanjeepuram!

As Tāmarai prayed to Vishnu, Vishnu heard and immediately sent beetles and wasps to guard the palace.

Tāmarai turned around, went back to the Pilliar temple, took the child from her husband, and the two of them set out.

Kuṉṉuṭaiyā: "Oh woman! Tāmarai! When our life is over, if we are in our country, at least the Kavuṇṭars of the revenue villages will take us and bury us.[1] But on the contrary, this has befallen us!"

Kuṉṉuṭaiya's Song:
We made a mistake in that
Woman, we made a mistake
How many sins we have committed
We have sinned
It was written, written by God
It was written there
We have come to this state
We have come to this

Tāmarai: "Husband! Let what comes come, we cannot stop in mid-route, is what you always say! What can we do about it? O.K. Come. We shall go to Cellāttā's temple."

The two arrived at the Cellāttā temple. Tāmarai handed the child to her husband, tightened her sari around her breasts, let out her hair, and turned to Cellāttā.

Tāmarai's Song: "Cellāttā, are you in the temple, woman are you?
Have you left your residence, villain, have you left?
Cellāttā, are you in the palace, woman are you?

---

1 Burial, instead of cremation, is a common practice in the area where this epic is told, especially among the poor.

சண்டாளி போயிட்டியோ
மாடியிலே செல்லாத்தா இருக்கிறயா
அம்மா இருக்கிறயா
மாடிவிட்டுச் சண்டாளி போயிட்டியோ
செல்லாத்தாப் போயிட்டியோ
நிலமாரு பத்தினி குதிமாரு
நின்றுமே அன்னக்கொடி அடிக்குறாளே
மாடி சுத்திப் பத்தினி மாரடித்தாள்
அன்னக்கொடி நல்ல விளர்மாது
கோட்டை சுத்தித் தாமரை மாரடித்தாள்
கொம்பனையா பத்தினி விளர்மாது"

தாமரை - "செல்லாத்தா! நான் தெய்வசபை சென்று இருபத்தியொரு வருஷம் தவமிருந்து வரம் வாங்கிவந்து ஆண்குழந்தை இல்லாமல் பெண் குழந்தை பிறந்தது! இன்று பங்காளிகள் வந்து எங்கள் திரவியம், பூமி இவைகளையெல்லாம் அபகரித்துக்கொண்டு எங்களை அடித்து நாட்டைவிட்டுத் துரத்துகிறார்கள். நாங்கள் எங்கு போய்ப் பிழைப்போம்? செல்லாத்தா! நாங்கள் இவ்வளவு காலமாக உனக்கு அடிமை செய்தும் பலனில்லாமல் போய்விட்டது. நாங்கள் எங்கோ போகிறோம். இனிமேல் பங்காளிகள் உனக்குப் பூஜை செய்வார்கள். நல்லா சாப்பிட்டுக்கொண்டு சுகமாக இரு!"

என்று தாமரை குழந்தையை எடுத்துக்கொண்டு இருவரும் புறப்பட்டு அணியப்பூர் சென்று பிள்ளையார் கோவிலில் குன்னுடையாசாமியை உட்காரவைத்துக் குழந்தையைக் கொடுத்துவிட்டு. "நான் போய்ப் பால் வாங்கிக் கொண்டு வருகிறேன்!"என்று தெருவில் போய் நின்று,

(பாட்டு) "அண்டைவீட்டுப் பெண்டுகளா
பால் இருந்தால் ஊத்துங்கம்மா
பாலன்பசி ஆறுதற்குப்
பாலிருந்தால் ஊத்துங்கம்மா
நாடிழந்து நகர் இழந்து
நான் ஆண்ட மனையிழந்து
பாவியாக வந்திட்டேனே
பால் இருந்தால் ஊத்துங்கம்மா
பாலன்பசி ஆறுதற்குப்
பாலிருந்தால் ஊத்துங்கம்மா
பொன் இழந்து புகழ் இழந்து அம்மா

Have you left the palace, villain, Cellāttā, have you left?"

Song: Moving around, changing place, the chaste woman
The fine creeper vine, is beating
Striking her breasts, the chaste woman circles the shrine
The fine creeper vine, the fair-complexioned woman
Tāmarai circles the temple beating her breasts
That chaste, fair-complexioned woman, slender as a branch

Tāmarai: "Cellāttā. I went to the god's counsel-chamber, did penance for twenty-one years, obtained a boon, returned and gave birth to a daughter but not to sons. Now the clansmen have come, fraudulently, seized all our wealth and our land, beaten us and sent us out of the country. Oh Cellāttā, where can we go to live? For how long we have worshipped you. Yet we have lost our power. Where shall we go? From now on the clansmen will perform pūjā for you. Eat well and be contented!" Tāmarai said, taking the child. The two set off and reached Aṉiyappūr. Tāmarai had Kuṉṉuṭaiyā sit down at the Pilliar temple and handed him the child. "I shall go and get some milk and come," she said, and she went and stood in the street.

Tāmarai's Song: Oh women of the house nearby
If there is milk, (please) pour out some
A babe cries of hunger, if there is milk, pour some out, oh woman
From the capital of this country
I have come, suffering
If there is milk, (please) pour out some, oh woman
A babe cries of hunger, if there is milk, pour some out, oh woman
There was gold, there was praise, oh woman
I was a lady with land, there was land, (that) I have left
What can I do for such great suffering?
If there is milk, (please) pour some out, oh woman

பூமிபதி நானிழந்து மண் இழந்து வந்திட்டேன்
மாபாவி என்னசெய்வேன்
பாலிருந்தால் ஊத்துங்கம்மா
பாலன் பசி ஆறுதற்குப்
பால் இருந்தால் ஊத்துங்கம்மா"

தாமரை தெருவில் நின்று சத்தம் போடுவது கேட்டு அந்த வீட்டுப் பெண் வெளியில் வந்து தாமரையைக் கண்டு, "பால் இங்கு இல்லை" என்று சொல்லித் தாட்டிவிட்டாள்[1].

தாமரை - "ஆகா! மண்பிடித்துப்போட்ட மாயவனே! அவ்வளவு திரவியம் இருந்தும் எல்லாம் பங்காளி பிடுங்கிக்கொண்டான்! இப்போது குழந்தைக்குப் பால் வாங்கக்கூடக் காசில்லாமல் போய்விட்டது. நம் கதி இப்படி ஆகிவிட்டதே! மாயவனே!"

என்று பெரியவீட்டுக் கவுண்டர் வீட்டுமுன்னே போய்நின்று,

(பாட்டு) பால் இருந்தால் ஊத்துங்கம்மா
பாலன்பசி ஆறுதற்குப் பாலிருந்தால் ஊத்துங்கம்மா
கையில் ஒரு காசுமில்லை கடன்கொடுப்பார் யாருமில்லை
பாவியாக வந்திட்டேனே பாலிருந்தால் ஊத்துங்கம்மா
பாலன் பசி ஆறுதற்குத் தாயே பாலிருந்தால் ஊத்துங்கம்மா

பெரியவீட்டு
கவுண்டர் - "பெண்ணே! யாரோ வெளியில் பால் கேட்கிறது. யார் என்று போய்ப் பார்."

பெரியவீட்டுக் கவுண்டர் மனைவி வெளியில் வந்து பார்த்துவிட்டுக் கவுண்டரிடம் சென்று, "நாதா! யாரோ பெரிய குடும்பத்தைச் சேர்ந்தவள் போல் தெரிகிறது! யார் என்று தெரியவில்லை. தாங்கள் வந்து பாருங்கள்" என்றதும் கவுண்டர் வெளியில் வந்து பார்க்கும்போது தாமரை என்பதைக் கண்டு, "ஆத்தா! உங்களுக்கு என்ன கஷ்டம் வந்தது? ஏன் இந்தக் கோலத்தில் இருக்கிறீர்கள்?" என்றார்.

---

1. துரத்திவிட்டாள்

A babe cries of hunger, if there s milk pour some out,
oh woman

Tāmarai stood in the street making noise. The woman of the house came out and seeing Tāmarai said, "There is no milk here." and sent her away.

Tāmarai: "Ah ho! Oh Vishnu, creator of this world! In spite of all the wealth we had, the clansmen have taken everything away. I don't even have cash to buy milk for the child now! My condition has come to this? Oh Vishnu!," She said and went and stood in front of the big house of the Kavuṇṭars.

Tāmarai's Song: If there is milk, (please) pour some out, woman
A babe is crying of hunger, if there is milk pour out
some, woman
I have not a single coin in hand, there is no one to
give me a loan
I have come, suffering
If there is milk, (please) pour some out, woman
A babe is crying of hunger
Oh mother, if you have milk, pour out some, woman.

Big K.: "Woman. Someone outside is asking for milk. Go and see who it is."

The wife of the Kavuṇṭar of the big house went outside to see and returned. "Husband. She looks like someone from an important family. I don't know who she is. You come and see!", she said. The Kavuṇṭar came out and saw that it was Tāmarai.

தாமரை - "கவுண்டரே! இன்று தங்க வளநாட்டுப் பங்காளிகள் ஆயிரம்பேரும் வந்து எங்களை அடித்துத் திரவியங்களையும் அபகரித்துக்கொண்டு, "நாட்டில் இருக்கக் கூடாது!" என்று துரத்திவிட்டார்கள். நாங்கள் அவ்வளவையும் இழந்துவிட்டு இங்கு வந்து குழந்தைக்குப் பால் வாங்கிக் கொடுத்து வீரப்பூர் போகலாமென்று வந்தோம்."

பெரியவீட்டுக்
கவுண்டர் - "ஆத்தா! இப்போது எஜமான் எங்கு இருக்கிறார்?"

தாமரை, "கவுண்டரே! பிள்ளையார் கோவிலில் குழந்தையை வைத்துக்கொண்டு இருக்கிறார்" என்றதும் பெரிய கவுண்டர் மற்ற ஊர் கவுண்டர் எல்லோரையும் கூப்பிட்டுத் தகவல் சொல்லிவிட்டார். எல்லோரும் பிள்ளையார் கோவிலுக்குச் சென்று குன்னுடையாக் கவுண்டரைக் காணிக்கை வைத்துக் காண்பார் சிலகோடி, மாணிக்கம்வைத்து வருந்துவார் சிலகோடி.

கவுண்டர்கள் - "அய்யோ, எஜமானரே! உங்களுக்கு இந்தக் கதி நேர்ந்து விட்டதா? தாங்கள் எங்கும் போகவேண்டாம். இங்கு எங்களிடமே இருந்துகொள்ளுங்கள்."

குன்னுடையா - "அப்பா, கவுண்டர்களே! நீங்கள் இப்படிச் சொல்வது எனக்கு ரொம்ப சந்தோஷம்! ஆனால் நாங்கள் இங்கு இருந்தால் பங்காளிகள் பகை உங்களுக்கும் ஏற்படும். ஆகையால் நாங்கள் வீரப்பூர் சென்றுவிடுகிறோம். எங்களைக் கொண்டுபோய் வீரப்பூரில் விட்டுவிடுங்கள். இந்த உதவி நீங்கள் செய்தால் போதும்."

கவுண்டர்கள், "சரி, தங்கள் இஷ்டம்!"என்று குன்னுடையாக் கவுண்டரையும் தாமரையையும் கூட்டிக்கொண்டு வீரப்பூரை நோக்கிப் புறப்பட்டார்கள்.

(பாட்டு)
அணியப்பூர் என்னாத்தா விட்டுமல்லோ
வீரப்பூர் என் சாமி தேடிவாறார்
நாகமலை என்னாத்தாத் தோகைமலை
நால்பக்கம் என்சாமி சூழ்ந்தமலை
சுத்திச் சுத்திப் படர்ந்தமலை
சூர்தமுள்ள என் சாமி வீரமலை
வீரப்பூர் என்னாத்தாத் தேடியல்லோ
கூட்டிவாரார் கவுண்டர்கள் இருவரையும்

எல்லோரும் வீரப்பூர் வந்து சேர்ந்தார்கள். பின்பு கவுண்டர்கள் குன்னுடையாக் கவுண்டரிடமும் தாமரையிடமும் விடைபெற்று அணியப்பூர் போய்ச் சேர்ந்தார்கள். கவுண்டர்கள் எல்லாம் சென்றபின் தாமரையும்

Big K.: "Lady. What hardship has befallen you? Why have you come in .this fashion?"

Tāmarai: "Oh Kavuṇṭar! Today a thousand clansmen from The Country of Prosperity came, beat us, deceitfully took away our wealth, told us not to remain in the country, and sent us off. With that we have come here. After getting milk and giving it (to the child) we plan to go to Vīrappūr."

Big K.: "Lady! Where is the great ruler now?"

Tāmarai: "Oh Kavuṇṭar! I have left the child with him at the Pilliar temple."

Hearing this the big Kavuṇṭar called all the other Kavuṇṭars of the town and told them the news. All of them came to the Pilliar temple and gave Kuṉṉuṭaiyā Kavuṇṭar several crores of gifts, plus several crores of jewels.

Kavuṇṭars: "Oh my, great ruler! Your condition has come to this? You must not go elsewhere. Stay here with us!"

Kuṉṉuṭaiyā: "Men. Oh Kavuṇṭars! It makes me happy to hear you speak like this. But, if we stay here the clansmen will start opposing you. Therefore we shall go to Vīrappūr. Take us as far as Vīrappūr. If you give us this help it will be enough."

Kavuṇṭars: "All right. As you wish," they said and they took Kuṉṉuṭaiyā Kavuṇṭar and Tāmarai, turned towards Vīrappūr, and set out.

Song:

Leaving Aṇiyappūr, my Lord
Searching for Vīrappūr, they are going, my God
The Nākamalai mountains, the Tōkaimalai mountains,
    my Lord
The mountain that is hollowed out on four sides, my
    God
(The place) where there are mountains all around
Vīramalai, the spiral-like mountain, my God
Searching for Vīramalai mountain my Lord
The Kavuṇṭars are taking the two of them (there)

They all came as far as Vīrappūr. Then the Kavuṇṭars took leave of Kuṉṉuṭaiyā Kavuṇṭar and Tāmarai and returned to Aṇiyappūr. After they

குன்னுடையாக் கவுண்டரும் குழந்தையை வைத்துப் பிள்ளையார் கோவிலில் உட்கார்ந்திருக்கும்போது வீரப்பூரின் ஆதிக்கம் வேட்டுவர் கைவசம் இருந்தது. வேட்டுவர்தான் அரசர். அரசரின் தங்கை வீரதங்கா பத்தினியின் மாதர்கள் இருவரும் தண்ணீருக்குக் குடம் எடுத்துக்கொண்டு வந்தார்கள்.

(பாட்டு) தண்ணீர்க் குடம் எடுத்துப் பத்தினியா
தண்ணிக்கு வந்தார்கள் மாதர்களும்
அன்ன நடை நடந்தாள் மாதர்களும்
அலங்கார கைவீச்சாம் மாதர்களும்

மாதர்கள் இருவரும் பிள்ளையார் கோவில் அருகில் வரும்போது குன்னுடையாசாமியும் தாமரையும் குழந்தையை வைத்து உட்கார்ந்திருப்பதைப் பார்த்து., "யாரோ தெரியவில்லை" என்று அருகில் வந்து குழந்தையைப் பார்க்கும்போது குழந்தையின் முகம் சூரியனைப்போல் அழகுடன் விளங்கியது கண்டு மாதர்களில் ஒருத்தி மற்றவளை நோக்கி, "அக்கா! இந்தக் குழந்தையைப் பார்த்தாயா? என்ன அழகு! என்ன வடிவமாக இருக்கிறது!"என்று தாமரையை நோக்கி, "அம்மா! நீங்கள் எந்த ஊர், எந்த நாடு?" என்றாள்.

தாமரை - "அம்மணி! நாங்கள் பொன்னி வளநாடு."

மாதர் - "அம்மா! பொன்னி வளநாட்டிலிருந்து என்ன வேலையாக இங்கு வந்தீர்கள்?"

தாமரை - "அம்மணி! எங்கள் நாட்டில் மழையில்லாமல் பூமியெல்லாம் காய்ந்து உணவுப் பஞ்சம் ஏற்பட்டுவிட்டது. இங்குக் கூத்தநெல்[1] குத்துகிறார்கள் என்று சொன்னார்கள். கொஞ்ச நாள் இங்கு இருந்து நெல் குத்திக் காலம் கழிக்கலாமென்று வந்தோம்."

"சரி, நல்லது!" என்று மாதர்கள் தண்ணீரை எடுத்துக்கொண்டு அரண்மனைக்குச் சென்று தங்கள் அரசியாகிய வீரதங்கா பத்தினியிடம் சென்று, "அம்மணி! பொன்னி வளநாட்டிலிருந்து புருஷன் மனைவி இரண்டுபேர் ஒரு பெண் குழந்தையை வைத்துப் பிள்ளையார் கோவிலில் உட்கார்ந்திருக்கிறார்கள். நாங்கள் தண்ணீர் கொண்டு வரலாமென்று அங்குப் போனோம், பார்த்தோம்! அந்தக் குழந்தை சூரியனைப்போல் நல்ல அழகுடன் இருக்கிறது." என்றார்கள்.

வீரதங்கா - "சரி, நல்லது! அவர்கள் இருவரையும் போய் நம்மிடம் கூட்டி வாருங்கள்!"

மாதர்கள் சென்று தாமரையிடம், "அம்மா! எங்கள் அரசி கூட்டி வரச் சொன்னார்கள். வாருங்கள்!"என்றார்கள்.

---

1 குத்துநெல்

left Tāmarai, Kuṉṉuṭaiyā Kavuṉṭar set the child down and sat at the Pilliar temple. In Vīrappūr lived a great many Vēṭṭuvas. The King himself was a Vēṭṭuva. The King's younger sister was the chaste, unmarried Vīrataṅkā.

Two ladies-in-waiting approached carrying water vessels.

Song: The chaste ladies have taken the water vessels
The ladies-in-waiting have come to fetch water
They walk like swans, the ladies-in-waiting
They swing their arms beautifully, the ladies-in-waiting

As the two maids approached the Pilliar temple they saw Tāmarai and Kuṉṉuṭaiyā who had set the child down and were sitting (there). Not knowing who they were, they came closer. As they looked at the child's face it shined with as much beauty as the sun itself. Seeing this, one maid looked at the other and said:

Lady-in-waiting: "Elder sister. Have you seen this child? What beauty and what composure!" (Then) she looked at Tāmarai. "Woman! What town are you from? What country are you from?"

Tāmarai: "Oh girl. We are from The Country Where The Kāveri Flows."

Lady-in-waiting: "Woman. Coming from The Country Where The Kāveri Flows, what work has brought you here?"

Tāmarai: "Girl. In our country there is no rain, the land has dried out and a famine has started. People said that paddy was being husked here. We came thinking we would husk paddy for awhile and let time pass."

Lady-in-waiting: "All right, good," the maids said and they lifted their water and went to the palace. Going to their princess, the chaste Vīrataṅkā, they said, "Oh princess, a man and wife from The Country Where The Kāveri Flows have come and are sitting at the Pilliar temple with their baby daughter. Thinking we would fetch some water we went there and saw them. The child is very beautiful, like the sun itself."

Vīrataṅkā: "All right, good. Go and bring the two of them to me," she said.

The maids set out, and going to Tāmarai they said, "Woman! Our princess

உடனே குன்னுடையாசாமியும் தாமரையும் குழந்தையை எடுத்துக்கொண்டு மாதர்களுடன் அரண்மனைக்குச் சென்றார்கள். வீரதங்கா பத்தினி குழந்தையைக் கண்டதும் வாரி எடுத்து, "ஆகா! இந்தக் குழந்தையை இவ்வளவு அழகுடன் ஆண்டவன் படைத்திருக்கிறாரே!" என்று மனதில் நினைத்துக் கொண்டு தாமரையை நோக்கி, "அம்மா! தாங்கள் எந்த நாடு?" என்றாள்.

தாமரை - "அம்மணி! நாங்கள் பொன்னி வளநாடு."

வீரதங்கா - "அம்மா! உங்கள் குலம் என்ன?"

தாமரை - "அம்மணி! நாங்கள் கவுண்டர்கள்."

வீரதங்கா - "சரி, நல்லது! உங்களுக்கு இங்கு ஏதாவது உறவினர் இருக்கிறார்களா?"

தாமரை - "அம்மணி! எங்களுக்கு இங்கு உறவினர்கள் யாரும் இல்லை. எங்கள் நாட்டில் மழையில்லாமல் பூமி வறண்டு உணவுப் பஞ்சம் ஏற்பட்டுப் பிழைக்க முடியவில்லை. ஆகையால் இங்குக் கூத்தநெல் குத்துகிறார்கள் என்று கேள்விப்பட்டு நாங்களும் இங்குக் கொஞ்சநாள் இருந்து காலங்கழித்துப் போகலாமென்று வந்தோம்."

வீரதங்கா - "சரி, நல்லது! அடி மாதர்களே! சீக்கிரம் அண்ணர் அரண்மனைக்குச் சென்று அண்ணரிடம் விருந்தாளிகள் வந்திருப்பதாகச் சொல்லிவிட்டு மாதர்களிடம் சொல்லிச் சமையல் செய்யச் சொல்லிவிட்டுக் குழந்தைக்குக் கொஞ்சம் பால் கொண்டுவா!"

மாதர்கள், "சரி, நல்லது!"என்று வேட்டுவ அரசர் அரண்மனைக்குச் சென்று மாதர்களிடம் சமையல் செய்யச் சொல்லிவிட்டு அரசரிடம் சென்றார்கள். மாதர்கள் அரசரைக் கண்டு, "அரசே! பொன்னி வளநாட்டிலிருந்து புருஷன் மனைவி இரண்டுபேர் குழந்தை ஒன்று எடுத்து வந்திருக்கிறார்கள். பத்தினி தங்களிடம் சொல்லிவிட்டு வரச்சொன்னார்கள்" என்று சொல்லிவிட்டு மாதர்கள் வீரதங்காளின் அரண்மனைக்கு வந்து சேர்ந்தார்கள்.

(அரசர் அரண்மனையில்)

சிறிது நேரம் சென்றதும் அரசர் மாதர்களைக் கூப்பிட்டு, "சமையல் ஆகிவிட்டதா?" என்று கேட்டார்.

மாதர் - "அரசே! ஆகிவிட்டது."

அரசர் - "சரி, நல்லது! சீக்கிரம் சென்று விருந்தாளிகளைக் கூட்டிக் கொண்டு வாருங்கள்."

has said to fetch you. Come."

Kuṉṉuṭaiyā and Tāmarai immediately picked up the child and went with the maids to the palace. As soon as the chaste Vīrataṅkā saw the child she began to admire it.

Vīrataṅkā: "Elder sister! God has made this child so beautiful," she thought in her heart. Looking at Tāmarai, (she asked), "Woman! What country are you from?"

Tāmarai: "Oh girl! We are from The Country Where The Kāveri Flows."

Vīrataṅkā: "Woman. What is your caste?"

Tāmarai: "Girl. We are Kavuṇṭars."

Vīrataṅkā: "All right. Good. Do you have any relatives here?"

Tāmarai: "Girl. We do not have a single relative here. In our country there is no rain. The land has dried, a famine has started and one cannot live (there). Therefore, hearing that paddy was being husked here, we decided to come and stay here awhile until times change and we can return," she said.

Vīrataṅkā: "All right, woman. Good! Oh maid servants! Go quickly to my elder brother's palace and tell him that guests have arrived. Tell the maids to start cooking and bring the child some milk!"

Maids: "All right, good!" they said and went to the palace of the Vēṭṭuva . They told the maids to start the cooking and went to the King. Seeing the King they said, "Oh King! A man and a wife have come from The Country Where The Kāveri Flows, bringing one child with them. The chaste princess told us to come and tell you," the maids said and returned to Vīrataṅkā's palace.

(The King was in the palace).

King: After a while the King called the maids and asked, "Is the meal ready?"

Maids: "Oh King! It is ready."

King: "O.K., good. Go quickly and fetch the guests," he said.

மாதர்கள் உடனே சென்று குன்னுடையாசாமியையும் தாமரையையும் கண்டு, "அரசர் சாப்பிடக் கூட்டிவரச் சொன்னார்கள்" என்று சொல்லிவிட்டு அரண்மனைக்குச் சென்றார்கள். மாதர்கள் சென்றபின்,

தாமரை - "நாதா! வேட்டுவர் வீட்டில் நாம் சாப்பிடலாமா?" என்றாள்.

குன்னுடையா - "பெண்ணே! வேட்டுவர் வீட்டில் நாம் சாப்பிடக்கூடாது!"

தாமரை, "நாதா! இப்போது என்ன செய்வது? சாப்பிடாவிட்டால் அவர்களுக்குக் கோபம் ஏற்படும். ஆகையால் நாம் போய், சாப்பிட்டு விட்டோம் என்று சொல்லிவிடலாம் வாருங்கள் போகலாம்" என்று புறப்பட்டு அரசர் அரண்மனைக்குச் சென்றார்கள். சென்றதும் அரசர் குழந்தையை வாங்கிச் சிறிது நேரம் மடியில் வைத்திருந்த பிறகு தாமரையை நோக்கி "நீங்கள் போய்ச் சாப்பிடுங்கள்" என்றார்.

குன்னுடையா - "அரசே! நாங்கள் இப்போதுதான் கட்டிச்சாதம் சாப்பிட்டோம். பசியில்லை. ஆகையால் நாங்கள் படுப்பதற்குக் கொஞ்சம் இடம் கொடுத்தால் போதும்."

வேடுவ அரசர் - "கவுண்டரே! எங்கள் வீட்டில் சாப்பிடக்கூடாது என்று நினைத்து இப்படிச் சொல்கிறீர்கள்."

குன்னுடையா - "அரசே! தாங்கள் அப்படி நினைக்கவேண்டாம்! எங்களுக்குப் பசி இல்லை அவ்வளவுதான்."

வேடுவ அரசர் - "சரி! படுப்பதற்கு அரண்மனையில் இடமில்லை! அடே, சேவகா! இவர்களை நமது குதிரைக் கொட்டாரத்தில் கொண்டு போய் விட்டுவாருங்கள்."

சேவகர், "சரி சாமி! நல்லது" என்று இருவரையும் கூட்டிக்கொண்டு போய்க் குதிரை கொட்டாரத்தில் விட்டு வந்தார். தாமரை அந்த இடத்தை நன்றாகச் சுத்தம் செய்து இருவரும் குழந்தையைப் படுக்கவைத்துப் படுத்துக் கொண்டார்கள். குன்னுடையாசாமி, தூங்கமுடியாமல் கஷ்டப்பட்டு, "பெண்ணே, நமக்கு இந்தக் கதி வந்துவிட்டதே!" என்று பாடினார்.

(பாட்டு)

"நான் பஞ்சணை மெத்தையிலே அங்கு மெத்தையிலே
படுக்கநல்லோ பெண்ணே
அழுந்துதென்பேன் நான் அழுந்துதென்பேன்
குங்கும மெத்தையிலே பெண்ணே நாம்
கூடிநல்லோ கூடி இருந்தோமம்மா
அங்கு இருந்தோமம்மா"

தாமரை - "நாதா! துயரப்படாதீர்கள். எந்தக் காலத்தில் எதை அனுபவிக்க வேண்டுமோ அனுபவித்துத்தான் ஆகவேண்டும்."

The maids went immediately, and seeing Kuṉṉuṭaiyā and Tāmarai they said, "The King has said to fetch you for the meal," and they returned to the palace. After the maids had left (Tāmarai said):

Tāmarai: "Husband! Can we eat in the house of a Vēṭṭuva?"

Kuṉṉuṭaiyā: "Oh woman! we must not eat in the home of a Vēṭṭuva!"

Tāmarai: "Husband! What shall we do now? If we refuse to eat they will be angry. Therefore, let us go, say that we have eaten and return. Let's go," she said and they set out.

They arrived at the King's palace. (When) they arrived the King took the child on his lap for a while. Then looking at Tāmarai, he said, "Go and eat."

Kuṉṉuṭaiyā: "Oh King! We have just now eaten some cold rice (That we brought). We are not hungry. Therefore, if you give us a little place to sleep it will be enough!"

King: "Oh Kavuṇṭar! You speak like this, thinking that you must not eat in our house."

Kuṉṉuṭaiyā: "Oh King! You must not think that. We are not hungry. That is all."

King: "All right. Set out! There is no room in the palace. Oh servant. Take these two to the horse stable and return," he said.

Servant: "Lord. Good!" he said, took the two to the horse stable and returned. Tāmarai cleaned the place well and the two set the child down, and (they) themselves lay down (too). Kuṉṉuṭaiyā, suffering and not able to sleep said, "Oh woman. We have fallen into such a state!"

Kuṉṉuṭaiyā's Song:

On a cotton mattress
On a mattress there
On the bed, on the good bed
I used to say that it sings, oh woman
Oh the red bed
We used to be together
Be together, there, oh woman

Tāmarai: "Husband! Don't be sad. We must experience any hardships that time brings. We must experience them."

அன்று இரவு கழிந்து வெள்ளி உதிக்குமுன் வெண்கோழி கூவுமுன் அந்த ஊர் ஜனங்கள் எல்லோரும் எழுந்து செட்டியார் வீட்டுக்குக் கூத்தநெல் குத்த தெருவில் பேசிக்கொண்டு சென்றார்கள். அந்தச் சத்தம் கேட்டுத் தாமரை, "நாதா! ஜனங்கள் கூத்தநெல் குத்தப் போகிறார்கள்! குழந்தையைப் பார்த்துக் கொள்ளுங்கள். நானும் போய் நெல்குத்திவிட்டு வருகிறேன்" என்று தாமரை சொன்னதும்,

குன்னுடையா - "பெண்ணே! இதுவரை நீ உலக்கையைக் கையில்கூட பிடித்திருக்கமாட்டாய். ஆகையால் நீ போய் எப்படி நெல்குத்த முடியும்?"

தாமரை - "நாதா! எப்படியோ செய்துதானே ஆகவேண்டும். நாம் காலந்தாட்ட வேண்டுமல்லவா?"

குன்னுடையா - "சரி! உன் இஷ்டம். போய் வா."

தாமரை புறப்பட்டுச் செட்டியார் வீடு போய்ப் பார்க்கும்போது ஆயிரக்கணக்கான பெண்கள் நெல் குத்திக் கொண்டிருந்தார்கள். அங்கு ஒரு மூட்டை நெல் இரண்டு பெண்கள் சேர்ந்து குத்தினால் ஆள் ஒன்றுக்கு அரிசிக்குருணை இரண்டு படியும் எட்டு அணா[1]வும் கொடுப்பார்கள். நெல் சொந்தக்காரச் செட்டியார் தாமரை வந்து நிற்பதைப் பார்த்துக் கேட்டார்.

செட்டியர் - "அம்மா! நீங்கள் யார்? எந்த ஊர்?"

தாமரை - "செட்டியாரே! நான் பொன்னி வளநாடு."

செட்டியார் - "அம்மா! என்னிடம் யாது காரியமாக வந்தீர்கள்?"

தாமரை - "செட்டியாரே! எங்கள் நாட்டில் மழையில்லாமல் உணவுக் கஷ்டம் ஏற்பட்டு அதனால் இங்கு வந்து கொஞ்சநாள் நெல் குத்திப் பிழைக்கலாமென்று வந்தோம்! என் கணவர் அங்கு ஒரு பக்கம் இருக்கிறார். எனக்கும் நெல் கொடுங்கள் குத்துகிறேன்."

செட்டியார், "அம்மா! நீங்கள் இந்த வயதில் ஒருமூட்டை நெல்குத்த முடியுமா?" என்று சொல்விட்டு மற்றப் பெண்களை நோக்கி, "இந்த அம்மாளுடன் சேர்ந்து நெல் குத்துகிறீர்களா?" என்று கேட்டார்.

மற்றப் பெண்கள், "செட்டியாரே! நாங்கள் குத்த மாட்டோம்! அந்த அம்மாள் ஒரு நாள் பூராவும் குத்தினால் நாலு வள்ளம்கூட குத்த முடியாது. ஆகையால் நாங்கள் குத்தமாட்டோம்!" என்று எல்லோரும் ஒரே முடிவாகச் சொல்லி விட்டார்கள். பின்பு செட்டியார் தாமரையை நோக்கி, "அம்மா! உங்களுடன் சேர்ந்து ஒருவரும் நெல்குத்தமாட்டேன் என்று சொல்கிறார்கள் என்ன செய்வது?" என்றார்.

---

1. ஐம்பது காசு

Evening came, and before dawn, before the cocks crowed, all of the people of the town arose and came, onto the streets, chatting (on their way) to husk paddy at the house of the merchant.[1] Hearing the noise Tāmarai said, “Husband! The people are going to husk rice. Watch the child. I shall go, husk rice, and return.”

Kuṉṉṭaiyā: “Oh woman! Up to now you have never even held a pestle in your hands. Therefore, can you (really) go and husk paddy?”

Tāmarai: “Husband! In some way or other it must be done. We must maintain ourselves, mustn't we?”

Kuṉṉuṭaiyā: “O.K. As you wish, go and come back,” he said.

Tāmarai set off and when she arrived at the merchant's house she found a thousand women husking paddy. Two women worked on each mūṭṭai[2] of paddy. When it was husked each woman would receive two paṭi of rice, plus eight annas (in cash).[3] The owner of the paddy, seeing Tāmarai standing there, came over.

Merchant: “Woman. Who are you? what town are you from?”

Tāmarai: “Oh merchant! I am from The Country Where The Kāveri Flows.”

Merchant: “Woman. Why have you come to me?”

Tāmarai: “Oh merchant. In my country there is no rain and food is difficult (to obtain). Therefore, thinking we would maintain ourselves husking rice, we came here. My husband is over there somewhere. Give me some paddy and I will husk it.”

Merchant: “Woman! Can you husk a mūṭṭai of paddy from this field?” he asked. Turning to the other women he said, “Will you agree to let this woman join in the husking?”

Women: “Oh merchant! We will not husk (with her). If that woman pounds all day she will not be able to husk even four vaḷḷam,” they said, all agreeing. Then the merchant looked at Tāmarai and said,

Merchant: “Woman, they say that no one of them will husk rice with you. What can be done?”

---

[1] Ceṭṭiyār, a caste name. [2] One mūṭṭai equals slightly less than two bushels. [3] One paṭi equals about two and a half cups. Eight annas equals one half rupee.

தாமரை, "செட்டியாரே! ஒருவரும் என்னுடன் சேரவேண்டாம். எனக்குத் தனியாக ஒரு மூட்டை நெல் கொடுங்கள்! ஒரு உலக்கையும் கொடுங்கள்!" என்றதும் செட்டியார் ஒரு ஆளைக் கூப்பிட்டு, "இந்த அம்மாளுக்கு ஒரு மூட்டை நெல் கொடுத்துவிடு" என்றார். உடனே ஒரு மூட்டை நெல் கொண்டுவந்து தாமரையின் முன் போட்டார்கள்.

தாமரை சீலையை விகிந்து கட்டி வடக்குமுகமாக நின்று தெய்வசபையை நினைத்து, "பரந்தாமா! பூபாலகா! பண்டரிபதி நாதா! நான் உலக்கையைக் கையில் எடுத்து இரண்டுமுறை குத்தியதும் நெல் உமி வேறு, அரிசி வேறாகப் போகவேண்டும் காஞ்சிநாதா!" என்று குத்தும்போது பாடினாள்.

(பாட்டு) "அகலிகை சாபம் தீர்த்த அந்த
அரிராமா கார்க்கணுமே
தென்னிலங்கை ராவணனை அங்குச்
சென்னி முடிபத்தும் கொய்தாய்
அரக்கர்களை வேரறுத்த இனி
அரிராமா வாருமய்யா"

இப்படித் தாமரை மாயவரை நினைத்துப் பாடி நெல்லைக் குத்தும்போது அரிசி வேறு, உமி வேறாக விழுந்துவிட்டது. செட்டியார் இதையெல்லாம் பார்த்துக் கொண்டிருந்து ஆச்சரியப்பட்டு, "காளியம்மா! நாச்சக்கா! செல்லக்கா! அந்த அம்மாளுடன் சேர்ந்து ஒருவரும் நெல் குத்தமாட்டேமென்று சொன்னீர்களே? இப்போது பாருங்கள் அரை நாழிகை நேரத்தில் உமி வேறு, அரிசி வேறாக விழுந்துவிட்டது" என்றார்.

செட்டியார் இப்படிச் சொன்னதும் அங்கிருந்த ஜனங்கள் எல்லோரும் ஆச்சரியப்பட்டார்கள். செட்டியார் உடனே கணக்குப் பிள்ளையைக் கூப்பிட்டுத் தாமரைக்கு அரிசியும் பணமும் கொடுக்கச் சொன்னார். கணக்குப்பிள்ளை இரண்டு படி அரிசிக்குருணையும் எட்டு அணாவும் கொடுத்தார். தாமரை அதை வாங்கிக்கொண்டு இருப்பிடம் வந்துசேர்ந்தாள்.

தாமரை - "நாதா! நான் போனபிறகு குழந்தை அழுததா?"

குன்னுடையா - "பெண்ணே! குழந்தை அழவில்லை. நீ இவ்வளவு சீக்கிரம் வந்துவிட்டாயே, நெல் குத்தவில்லையா?"

தாமரை - "நாதா! நெல் குத்திவிட்டுதான் அரிசிக் குருணை இரண்டு படி, எட்டு அணா வாங்கிவந்தேன்."

Tāmarai: "Oh merchant! No one need join with me. Give me one mūṭṭai of paddy, alone, and give me one pestle," she said.

Merchant: The merchant called an assistant and said, "Give this woman a mūṭṭai of paddy." He immediately brought a mūṭṭai of rice and set it in front of Tāmarai.

Tāmarai tied her sari tightly and stood facing north. Thinking of the god's counsel-chamber (she prayed). "Oh Vishnu! Ruler of the earth! Lord of Paṇṭaripuram! As I lift the pestle in my hand and move it twice, let the paddy chaff and the rice grain separate, oh Lord of Kanjeepuram," she said as she husked.

Song:

Save me, Harirāmā
You who removed the curse of Akalikai
You who severed the ten crowned heads of Ravana of
Southern Sri Lanka, there
You who uprooted the giants, Harirāmā, come Lord!
Now!

As Tāmarai prayed to Vishnu and husked paddy the chaff and the grain separated. The merchant, having seen this happen and marveling, said:

Merchant: "Oh Kāḷi! Elder sister Nācci! Elder sister Cella! You said you would not join with that woman to husk rice. Look now! In half a second's time the chaff and grain have been separated," he said.

As the merchant said this, all the people there looked and marveled. The merchant immediately called the accountant and told him to give Tāmarai rice and money. The accountant gave her two paṭi of rice and eight annas cash. Tāmarai accepted these and returned to the stable.

Tāmarai: "Husband! Did the child cry after I left?"

Kuṉṉuṭaiyā: "Oh woman! The child did not cry. You have returned so quickly! Didn't you husk any paddy?"

Tāmarai: "Husband! I husked the rice. I have brought two paṭi of rice and eight annas."

குன்னுடையாசாமி, "அப்படியானால் ஒருமூட்டை நெல் குத்தினாயா? எங்கே உன் கையைப் பார்க்கலாம்!" என்று தாமரையின் கையைப் பார்க்கும் போது கை சிவந்து கொப்பளம் ஏற்பட்டிருந்தது. அதைப் பார்த்த குன்னுடையாசாமி மனம் வேதனைப்பட்டு, "பெண்ணே! உன்னை நெல்குத்திப் பிழைக்கும்படி இந்தக் கதிக்கு ஆளாக்கிவிட்டான் பிரம்மதேவன்!"என்று அழுதார்.

தாமரை - "நாதா! நடப்பதெல்லாம் நடந்துதான் ஆகவேண்டும். வேதனைப்பட்டு என்ன செய்வது? அழாதீர்கள்."

(பாட்டு)
மாதமூன்று மழை பெயும்
வீரப்பூரில் வருஷமொரு கல்மாரி
அப்படியே நல்லதென்று
அங்கு நல்லதென்று
அன்புடனே நடக்குது பார்
இனி நடக்குது பார்
ஐந்து நல்லோ வருஷமாக
வீரப்பூரில் காலம் கழிக்குறாரே

குன்னுடையாசாமியும் தாமரையும் வீரப்பூர் வந்து சரியாக ஐந்து வருஷம் முடிந்தது. இவர்கள் வீரப்பூர் வந்ததிலிருந்து மாதம் மூன்று மழை, வருஷமொரு கல்மாரி பெய்து வீரப்பூர் செல்வாக்காக இருந்தது. இங்கு இப்படி இருக்கும்போது பொன்னி வளநாட்டில் செல்லாத்தா எடுத்துப்போன ஆண் குழந்தை இரண்டுக்கும் சரியாக ஐந்து வருஷம் முடிந்தது. செல்லாத்தா குழந்தை இரண்டையும் திருவினித்தூரியில் வைத்துப் பாடினாள்.

(பாட்டு)
ராரி ராரி ராராரோ
என் கண்ணே நீ ராரி ராரி ராராரோ
நீங்கள் வரத்தால் பிறந்தவர்கள்
என் சாமி நீ வர்ணமுள்ள காராளா
நீங்கள் தவத்தால் பிறந்தவர்கள்
சாமி நீ தாட்டியமுள்ள[1] காராளா
தாமரையாள் பெற்றெடுத்தோ
சாமி நீ தாட்டியரே நித்திரைபோ
குன்னுடையான் பெற்றெடுத்தோ
சாமி நீ குஞ்சரமே நித்திரைபோ
நீ பங்காளியைச் சங்கரிக்கோ
என்சாமி நீ பழிகாரா வந்தீரோ
நீ கொம்பனைச் சங்கரிக்கோ

1. சாமர்த்தியம்

Kuṉṉuṭaiyā: "If it is so, did you husk a whole mūṭṭai of paddy? Where (are your hands). Let me see them!" he said. Looking at Tāmarai's hands (he saw) the redness and the blisters. Seeing this Kuṉṉuṭaiyā's heart became sad. "Oh woman! we have fallen into such a state that you are husking paddy! Oh Lord Brahman," he cried.

Tāmarai: "Husband! What will happen, will happen. Don't be sad. What can be done. Don't cry."

Song:

It rained three times a month
In Vīrappūr there was a shower of hail stones once a
    year
It was said to be good, to be good there
See how things happened with love, happened with
    sweet love
Five good years Vīrappūr
So time passed in Vīrappūr

Five years had passed since Kuṉṉuṭaiyā and Tāmarai came to Vīrappūr. Since their arrival it rained three times a month and there was a shower of hail stones once a year. Vīrappūr prospered. At this time, in The Country Where The Kāveri Flows the two male children which Cellāttā had taken now reached five years of age. Cellāttā put the two of them on a swing.

Song:

Rāri, rāri, rārārō
You are my eyes,[1] rāri, rāri, rārārō
You were born on account of a boon
You are dark-complexioned farmers, my lords
You were born as a result of penance
You are courageous farmers, Lords
Tāmarai gave birth to you
You are lords, courageous ones, sleep
Kuṉṉuṭaiyā gave birth to you
You are Lords, elephant-like ones, sleep
You will destroy the clansmen
You, me Lords, you have come for revenge
You will destroy Kompaṉ[2]
Go to sleep, my Lord, you who have come to murder

---

1 As precious as my eyes. 2 The wild boar who appears later in the story.

சாமி நீ கொலைகாரா நித்திரைபோ
நீ பன்றியைக் குத்தியல்லோ
சாமிநீ பங்கேழு போடுவீரோ
நீ கொம்பனைக் குத்தியல்லோ
என்சாமி நீ கூறேழு[1] போடுவீரோ

செல்லாத்தா இப்படிப் பாட்டுச்சொல்லித் தூரியை ஆட்டும்போது பன்னிரண்டு யானை பலமுள்ள சங்கர் திருவினித்தூரியிலிருந்து குதித்து, "அம்மா! அம்மா!! ஏன் இந்தவிதம் பாட்டுச் சொல்லித் தாலாட்டுகிறாய்? எங்களுடைய தாய் எங்கே? தாமரையா பெற்றெடுத்த தாட்டியனே நித்திரைபோ, குன்னுடையான் பெற்றெடுத்த குஞ்சரமே நித்திரைபோ" என்று பாட்டுச் சொல்லித் தாலாட்டினாயே? என் தாய் தந்தை எங்கே? எங்களுடைய நாடு எது? எங்கள் ஊர் எது? நீ வளர்த்த வேண்டிய காரணமென்ன? சீக்கிரம் சொல்" என்றான்.

செல்லாத்தா - "அப்பா, கண்மணிகளே! நான்தான் உங்களுடைய தாய்! என்னுடைய குழந்தைகள்தான் நீங்கள்"

சங்கர் - "அம்மா! நீங்கள் சொல்வது பொய். இப்போது என் தாய் தந்தை இருக்கும் இடத்தைச் சொல்கிறாயா? இல்லை உன்னைக் கத்தியி(னா)ல் வெட்டுவதா?" என்று கோபம் வந்து கத்தியை எடுத்தார்.

இதைக் கண்ட செல்லாத்தா, "இனி நாம் உண்மையைச் சொல்லாவிட்டால் நம்பளைக் கொன்றுவிடுவான்" என்று நினைத்து, "அப்பா, குழந்தைகளே! உன் தாய் பெயர் தாமரையாக் கவுண்டச்சி. தகப்பன் பெயர் குன்னுடையாக் கவுண்டர். இருவரும் இந்தப் பொன்னி வளநாட்டை ஆண்டுவந்தார்கள். இப்படியிருக்கும்போது அவர்களுக்குக் குழந்தை இல்லாமல் உன் தாய் காசி பொன்னம்பலம் சென்று, இருபத்து ஒன்று வருடம் தவமிருந்து ஈசுவரனிடம் மண்ணுக்கு இரண்டு ஆணும் மனையிருக்கப் பெண் ஒருத்தியும் வரம் வாங்கி வந்தாள். பிறகு நீங்கள் பிறக்கும் சமயம் தங்க வளநாட்டுப் பங்காளிகள் மருத்துவக்காரக் குப்பியிடம் தாமரைக்கு ஆண்குழந்தை பிறந்தால் அறுத்துப் பெருக்கான் வங்கில் திணித்து விடும்படியும் பெண்குழந்தை பிறந்தால் சங்குரைத்துப் பால் வார்த்துத் தங்கா என்று பெயர் வைக்கும்படிச் சொல்லியதை மாயவர் பார்த்து உங்களைக் குப்பியிடமிருந்து காப்பாற்றி என்னிடம் கொடுத்து ஐந்து வருஷம் வளர்க்கச் சொன்னார். பிறகு உன் தாய்க்குப் பெண் குழந்தை பிறந்தது. குழந்தை பிறந்து மூன்று மாதத்தில் உன் தாய், தகப்பனுக்கு ஆண் குழந்தை இல்லையென்று நினைத்து நாடுவிட்டு நாடு, சீமை விட்டுச் சீமை முடுக்கிவிட்டார்கள். அவர்கள் போய் ஐந்து

1. ஏழு பங்கு

You will spear the boar, my Lord
You will divide it into seven pieces
You will spear Kompaṉ
You will divide him into seven pieces

As Cellāttā sang like this and rocked the swing, Caṅkar, who had the strength of twelve elephants, jumped off. "Mother! Mother! Why do you sing such a song while rocking the swing? Where is our mother?"

Cellāttā: "Tāmarai gave birth to you, courageous ones, sleep
Kuṉṉuṭaiyā gave birth to you, elephant-like ones, sleep."

Caṅka: "You sing like this and rock the swing? Where are my mother and father? What is (the name of) our country? What is (the name of) our town? What is the reason that you had to raise us? Speak out quickly!"

Cellāttā: "Men. Oh apples of my eye! I am your mother! You are my children!"

Caṅka: "Mother! You are lying. Tell (us) where our mother and father are now. If not, shall I cut you up with my knife?" he said becoming angry and raising (his) knife.

Cellāttā: Seeing this Cellāttā thought, "If I don't tell the truth now he will kill me." (So she said), "Men, children! Your mother's name is Tāmarai Kavuṇṭacci. Your father's name is Kuṉṉuṭaiyā Kavuṇṭar. The two of them were ruling The Country Where The Kāveri Flows. During this time they had no children, so your mother went to a place of penance in Benares[1] and did penance for twenty-one years. She obtained from Siva, as a boon, two sons for the land and one daughter for the house. Then later, at the time of your birth, the clansmen of The Country of Prosperity told the midwife that if a male child was born, to cut it up and stuff it in a bandycoot's hole, but if a female child was born, to feed it milk in a conch and name it Taṅkā. Vishnu, seeing this, ripped you out (of the womb), looked after you, gave you to me and told me to raise you for five years. Afterwards a female child was born to your mother. Three months after this child was born your mother and father, thinking that they had no male offspring, left the land and left the

[1] Kāci Poṉṉampalam.

வருஷமாகிறது. எங்குப் போனார்கள் என்று தெரியவில்லை. இப்போது உங்களுக்கும் சரியாக ஐந்து வருஷம் முடிந்தது" என்றாள்.

சங்கர் - "அம்மா! பங்காளிகள் இன்னும் உயிருடன் இருக்கிறார்களா?"

செல்லாத்தா - "சாமி! ஆயிரம் வீட்டுப் பங்காளிகள் இருக்கிறார்கள்."

சங்கர் - "சரி, நல்லது! அவர்களை நான் பின்னால் பார்த்துக் கொள்கிறேன். இப்போது எங்களை என் தாய் தந்தையிடம் கொண்டுபோய்ச் சேர்த்துவிடு தாயே!"

செல்லாத்தா நல்லது என்று குழந்தைகளை எடுத்துக்கொண்டு புறப்பட்டாள்.

(பாட்டு) மண்ணைப் பகிர்ந்தவளாம் மதுக்கரை செல்லாத்தா
எல்லை பகிர்ந்தவளாம் எதுநாடு தீர்த்தவளாம்
சாமியை என்னாத்தாத் தோளில் வைத்துச்
செல்லாத்தா என்சாமி வழி நடந்தாள்
குழந்தையைச் செல்லாத்தாத் தோளில் வைத்து
ஈசுவரி என்சாமி வழி நடந்தாள்
அணியப்பூர் என்னாத்தாத் தேடியல்லோ
வருகிறாள் என்சாமி செல்லாத்தா

செல்லாத்தா அணியப்பூர் வந்து பிள்ளையார் கோவிலுக்குப் போய்க் குழந்தைகளை வைத்து உட்கார்ந்தாள். செல்லாத்தா வந்திருப்பதை ஊர்க் கவுண்டர்கள் தெரிந்து எல்லோரும் பிள்ளையார் கோவிலுக்கு வந்து செல்லாத்தாளைக் கண்டு நமஸ்காரம் செய்தார்கள். அருகில் இருக்கும் குழந்தைகளைக் கண்டு, "ஆத்தா, இந்தக் குழந்தைகள் யாருங்கோ?" என்று கேட்டார்கள்.

செல்லாத்தா - "அப்பா, கவுண்டர்களே! இந்தக் குழந்தைகள் குன்னுடையாக் கவுண்டரின் மக்கள்! இனிமேல் இவர்கள்தான் உங்கள் அரசர்!"

கவுண்டர் - "ஆத்தா! குன்னடையா ராஜருக்கு ஆண் குழந்தை இல்லையென்று சொன்னார்களே? இவர்கள் எப்படி வந்தார்கள்?"

செல்லாத்தா - "அப்பா, கவுண்டர்களே! பங்காளிகள் சதி செய்து இந்தக் குழந்தைகளைக் கொல்ல நினைத்தார்கள். மாயவர் வந்து குழந்தைகளைக் காப்பாற்றி என்னிடம் கொடுத்து ஐந்து வருஷம் யாருக்கும் தெரியாதபடி வளர்க்கச் சொன்னார். இப்போது ஐந்து வருஷம் சரியாக முடிந்து இனி இவர்களைத் தாயுடன் சேர்த்துவிட வேண்டும். ஆகையால் குன்னுடையாக் கவுண்டரும் தாமரையும் எங்குப் போனார்கள் என்று உங்களுக்குத் தெரியுமா கவுண்டர்களே?"

country. It has been five years since they left. I don't know where they went. You are now five years old."

Cańka: "Mother! Are the clansmen still alive?"

Cellāttā: "Lord. There are a thousand clansmen families."

Cańka : "All right. Good. Later, if I see them I shall kill them. Now, take us and leave us with our mother and father."

Cellāttā said "Good" and she picked up the children and set off.

Song:
Matukkarai Cellāttā, who divides the earth
And defines the boundaries of countries
Placing the children on her shoulders, my Lord
Cellāttā walked a long the path, oh God
Cellāttā carried the children on her shoulders, my Lord
As Īspari,[1] and walked along the path, oh God
Searching for Aṇiyappūr, my Lord
Cellāttā is approaching, oh God

Cellāttā arrived in Aṇiyappūr, went to the Pilliar temple, put the children down and sat (there). Learning that Cellāttā had come, all the Kavuṇṭars of the town came to the Pilliar temple and paid their respects. Seeing the children near by (they asked), "Lady! whose children are these?"

Cellāttā: "Men. Oh Kavuṇṭars! These children are the sons of Kuṉṉuṭaiyā Kavuṇṭar. From, now on they shall be your kings."

Kavuṇṭars: "Lady! But King Kuṉṉuṭaiyā said he had no male children. How did these appear?'

Cellāttā: "Men. Kavuṇṭars! The clansmen were treacherous and thought they had killed these children. Vishnu came, looked after the children, and told me to raise them without anyone knowing of it, for five years. Now the five years are up. Now they must be given to their mother. Therefore, do you know where Kuṉṉuṭaiyā Kavuṇṭar and Tāmarai have gone, oh Kavuṇṭars?"

---

1 Īspari or, more correctly, Īsvari, is Siva's wife. Cellāttā is thought to be one aspect or form of this great goddess.

கவுண்டர் - "ஆத்தா! பங்காளிகள் நாட்டைவிட்டுப் போகச் சொன்னதும் இங்கு வந்து வீரப்பூரில் கொண்டுபோய் விடும்படிச் சொன்னார்கள். நாங்கள் கொண்டுபோய் விட்டு வந்தோம். இப்போது ஐந்து வருஷம் ஆகிறது. எங்கு இருக்கிறார்கள் என்று தெரியாது."

செல்லாத்தா - "சரி, நல்லது! கவுண்டர்களே நான் போய் வீரப்பூரில் பார்த்து வருகிறேன்."

என்று குழந்தைகளை எடுத்துக்கொண்டு புறப்பட்டாள்.

(பாட்டு)
பொன்னிவள என்னாத்தா நாடுவிட்டு
வீரப்பூர் என்னாத்தாத் தேடி வாறாள்
நாகமலை என்னாத்தாத் தோகமலை
நாலெட்டம்[1] என்னாத்தாச் சூழ்ந்தமலை
வீரப்பூர் என்னாத்தாத் தேடியல்லோ
வருகிறாள் என்சாமி செல்லாத்தா

செல்லாத்தா வீரப்பூர் வந்து பிள்ளையார் கோவிலில் உட்கார்ந்து, "அப்பா, குழந்தைகளே! நான் போய் உங்கள் தாய், தந்தையைத் தேடிப் பார்த்து வருகிறேன். அதுவரை நீங்கள் இருவரும் இந்த இடத்தைவிட்டு எங்கும் போகக்கூடாது" என்று ஏழுகோடு கிழித்து, "இதைத் தாண்டி வரக்கூடாது" என்று சொல்லிக் குழந்தைகளை விட்டுவிட்டுப் புறப்பட்டாள். செல்லாத்தா ஊருக்குள் சென்று ஒரு தெருவில் நின்று பாடினாள்.

(பாட்டு)
"அண்டைவீட்டுப் பெண்டுகளா
என் அக்கா வரக் காணீர்களோ
ஐந்து வருஷமாச்சு
அருங்கிளியாள் இங்கு வந்து
அண்டைவீட்டுப் பெண்டுகளா
என் அக்கா வரக் காணீர்களோ"

செல்லாத்தாத் தெருவில் நின்று இப்படிக் கேட்கும்போது அந்தத் தெருப்பெண்கள், "அம்மா! நாங்கள் யாரும் பார்க்கவில்லை. அடுத்த தெருவில் போய்க் கேளுங்கள்" என்றார்கள்.

செல்லாத்தா அதைவிட்டு அடுத்த தெருவில் போய் நின்று பாடினாள்.

(பாட்டு)
"அண்டைவீட்டுப் பெண்டுகளா
என் அக்காவரக் காணீரோ
ஆளினைக் கூட்டிக்கொண்டு
குழந்தை ஒன்றை எடுத்துக்கொண்டு

1. நான்கு பக்கம்

Kavuṇṭar: "Lady! The clansmen told them to leave the country. They came here and asked us to take them to Vīrappūr and leave them there. We took them (there) and returned. Five years have passed since that. We don't know where they are now."

Cellāttā: "All right. Good, oh Kavuṇṭars! I shall go to Vīrappūr, look, and return,"she said, and lifting the children, she set out.

Song:

Leaving The Country Where The Kāveri Flows
Searching for Vīrappūr, my Lord
The Nākamalai mountains and the Tōkamalai mountains, my Lord
The mountain that is hollowed out on four sides, my Lord
Searching for Vīrappūr, my Lord
Cellāttā is coming, my Lord

Cellāttā arrived in Vīrappūr and sat down at the Pilliar temple.

Cellāttā: "Dear children! I shall go and look for your mother and father and return. Until then you two must not leave this spot to go anywhere," she said. (Then) she drew seven lines and said,"You must not cross these, nor follow." (Then) she left the children and set out. Cellāttā arrived at the town and stood in one of the streets.

Song:

Oh woman of the house nearby
My elder sister, did you see her come?
Five years have passed
(Since) the lovely parrot came here
Oh woman of the house nearby
My elder sister, did you see her come?

As Cellāttā stood in the street, asking, the women of the street answered, "Woman. None of us have seen her. Go ask in that street."

Cellāttā went from that house to the next street and stood.

Song:

Oh woman of the house nearby
My elder sister, did you see her come?
Bringing a man (with her)

அண்டைவீட்டுப் பெண்டுகளா
என் அக்கா வரக் காணீர்களோ"

இதைக்கேட்டு அடுத்த தெருப் பெண்கள், "அம்மா! ஐந்து வருஷத்திற்குமுன், இரண்டுபேர் குழந்தை ஒன்றை எடுத்துக்கொண்டு வந்தார்கள். வயது அறுபது இருக்கும். அவர்களா நீங்கள் கேட்பது?" என்றார்கள்.

செல்லாத்தா - "ஆமாம், அம்மா! அவர்கள்தான். எங்கு இருக்கிறார்கள் சொல்லுங்கள்."

பெண்கள், "சரி, வாருங்கள் காட்டுகிறோம்!" என்று செல்லாத்தாளைக் கூட்டிப்போய்த் தாமரை இருக்கும் குதிரைக் கொட்டாரத்தைக் காட்டி, "இங்குதான் இருக்கிறார்கள்" என்று சொல்லிவிட்டுக் கூட்டிவந்த பெண்கள் சென்றுவிட்டார்கள்.

செல்லாத்தாக் குதிரைக் கொட்டாரத்தின் அருகில் செல்லும்போது சூரியன் கிழக்கில் இருந்ததால் செல்லாத்தாளின் நிழல் வாயிற்படியில் தெரிந்ததை உள்ளே இருந்த குன்னுடையாசாமி கண்டு தாமரையை நோக்கி, "பெண்ணே! நாம் இந்த வீட்டுக்கு வந்ததிலிருந்து இங்கு ஒருவரும் வரவில்லை. யாரோ கீழ்ப்புறம் நிற்கிறார்கள். நிழல் தெரிகிறது. வெளியில் போய்ப் பார்!" என்றதும் தாமரை வெளியில் வந்து பார்க்கும்போது செல்லாத்தா நிற்பதைக் கண்டு, "நாதா! நம்ம கூடப்போட்டச் செல்லாத்தா வந்திருக்கிறாள்! பங்காளிகள் நம்மளை அடித்து நாட்டைவிட்டுத் துரத்தும்போது நான்போய் மாரடித்து அழுதேன். அப்போது கண் திறந்து கூடப் பார்க்கவில்லை. இப்போது நாம் உயிருடன் இருக்கிறோமா அல்லது இறந்துவிட்டோமா என்று பார்க்க வந்திருக்கிறாள் சதிகாரி!" என்றாள்.

குன்னுடையாசாமி, "பெண்ணே! செல்லாத்தாளை எதற்கு சண்டை பிடிக்கிறாய்? நாம் செய்த வினைக்கு அவள் என்ன செய்வாள்?" என்று வெளியில் வந்து செல்லாத்தாளை நமஸ்காரம் செய்தார். பிறகு "செல்லாத்தா! உன் நாட்டையும் உன்னுடைய ஆயிர மா நிலத்தையும் என் அரண்மனை, திரவியங்கள் எல்லாவற்றையும் பங்காளிகள் பிடுங்கிக்கொண்டு எங்களை அடித்து நாடுவிட்டு நாடு முடுக்கிவிட்டார்கள் சண்டாளிகள்!" என்று அழுதார்.

செல்லாத்தா - "அப்பா, குன்னுடையாக் கவுண்டா! நீ அழவேண்டாம். அனுபவிக்க வேண்டியதை அனுபவித்துத்தான் ஆகவேண்டும். சரி, மாயவர் சொன்னபடி உங்கள் குழந்தைகளை ஐந்து வருஷமாக யானைப்பால், புலிப்பால் ஊட்டி வளர்த்தேன். இனி உங்கள் குழந்தைகளை வந்து ஒப்புக் கொள்ளுங்கள்."

குன்னுடையா - "ஆத்தா! எங்களுக்கு ஒரு குழந்தைதான். அது எங்களுடன் இருக்கிறது. வேறு குழந்தை எப்படி இருக்கமுடியும்?"

Oh woman of the house nearby
My elder sister, did you see her come?

Hearing this the women of that street said, "Woman! Five years ago two people came carrying one child. They were about sixty years old. Are you asking about them?"

Cellāttā: "Yes, Woman! (I am asking) about them. Tell (me) where they are."

Woman: "All right. Come! We will show you," they said. Taking Cellāttā they showed her Tāmarai's place in the horse stable. "Here is where they are," they said, showed her, and returned.

As Cellāttā approached the horse stable, her shadow appeared at the door as if the sun were in the east at dawn. Kuṉṉuṭaiyā saw it from inside, and addressing Tāmarai, he said,

Kuṉṉuṭaiyā: "Oh woman! No one has visited us since we came to this house. Who is this standing to the east? I see a shadow. Go out and see."

Tāmarai came out, and as she looked she saw Cellāttā standing (there).

Tāmarai: "Oh husband, Cellāttā has come to meet us! When the clansmen sent us far away, out of the country I went, beat my breasts and cried. At that time she closed her eyes and would not meet us. Now she has come to see if we are still alive, or if we have died. The villain!"

Kuṉṉuṭaiyā: "Oh woman! Why do you start an argument with Cellāttā? What can she do about our misdeeds?" he said and came out and paid Cellāttā his respects. Then he cried, "Cellāttā! The clansmen have taken your land, your thousand fields, our palace, and our wealth! They beat us and banished us from the country. The villains!"

Cellāttā: "Man. Kuṉṉuṭaiyā Kavuṇṭar! Don't cry. If it is destined that you have to pay for it, then you have to pay. O.K. As Vishnu ordered, I raised your children for five years on elephant's milk and tiger's milk. Now your children have come. Receive them!"

Kuṉṉuṭaiyā: "Lady! we have only one child, and it is with us. How can any other children exist?"

செல்லாத்தா - "குன்னுடையாக் கவுண்டா! உன் மனைவி கர்ப்பமாக இருக்கும் காலத்தில் தங்க வளநாட்டுப் பங்காளிகள் சதி நினைத்து மருத்துவக்காரிக் குப்பியைக் கூப்பிட்டுத் தாமரைக்கு ஆண் குழந்தை பிறந்தால் அறுத்துப் பெருக்கான் வங்கில் திணித்து விடும்படியும் பெண்குழந்தை பிறந்தால் சங்கு உரைத்துப் பால் வார்த்துத் "தங்கா" என்று பெயர் வைக்கச் சொன்னார்கள். அப்படி அவள் செய்தால் நாட்டில் பாதி, திரவியத்தில் பாதி கொடுப்பதாகச் சொன்னார்கள். சதிகாரக் குப்பியும் சரியென்று ஒப்புக்கொண்டாள். இதை மாயவர் கண்டு என்னிடம் வந்து இந்த விவரத்தைச் சொல்லி, "இன்னும் மூன்று மாதத்துக்குள் அரண்மனைக்கும் உன் ஆலயத்திற்கும் சுரங்கப்பாதை தயார் செய்து வை. ஜனனநாள் வந்ததும் நான் வருகிறேன். நீ சுரங்க வாயிலில் வந்து இரு. நான் குழந்தை பிறந்ததும் எடுத்துக் கொடுக்கிறேன். நீ கொண்டுபோய் ஒருவருக்கும் தெரியாமல் ஐந்து வருஷம் வளர்த்து" என்று சொல்லிவிட்டு அன்று சென்றுவிட்டு உன் மனைவிக்கு ஜனன நாள் அன்று மாயவர் வந்து சேர்ந்தார். நீ தங்க வளநாடு சென்று மருத்துவக்காரக் குப்பியைக் கூட்டிவந்தாய். அவள் வந்ததும் சதி செய்ய சந்தர்ப்பம் வேண்டுமென்று நினைத்து வீட்டுக்குள் மாதர்கள் யாரும் இருக்கக் கூடாது என்று கதவைச் சாத்திக்கொண்டு தாமரையின் கண்ணையும் கட்டிவிட்டாள். பிறகு குப்பி சமையலறைக்குள் சென்று கத்தி தீட்டிக் கொண்டிருந்தாள். மாயவர் சமயம் பார்த்துத் தாமரையின் அல்லை இரண்டையும் கீறிவிட்டார். குழந்தை இரண்டும் வெளிப்பட்டதும் நான் எடுத்துக்கொண்டு வந்து விட்டேன். மற்ற விஷயங்களை மாயவரைக் கேட்டுக் கொள்ளுங்கள். இப்போது குழந்தைகளை வந்து ஒப்புக் கொள்ளுங்கள். குழந்தைகள் பிள்ளையார் கோவிலில் இருக்கின்றனர்."

குன்னுடையாசாமி, "சரி, பெண்ணே! போய்ப் பார்க்கலாம்" என்று இருவரும் செல்லாத்தாளுடன் புறப்பட்டுப் பிள்ளையார் கோவில் வந்து குழந்தைகளைப் பார்க்கும்போது குழந்தைகள் சூரியனைப்போல் அழகுடன் விளங்கினர். இதைப் பார்த்துத் தாமரை, "நாதா! எனக்குச் சந்தேகமாக இருக்கிறது. மாயவரை அழைத்துக் கேட்டால் தெரியும்" என்று வடக்கு முகமாக நின்று, "மண்பிடித்துப் போட்ட மாயவனே! உடனே நீங்கள் இங்கு வந்துசேர வேண்டும்" என்று தாமரை நினைக்கும்போது மாயவர் பார்த்து உடனே கருட வாகனமேறி வீரப்பூரை நோக்கிப் புறப்பட்டார்.

Cellāttā: "Kuṉṉuṭaiyā Kavuṇṭar! when your wife was pregnant the clansmen of The Country Where The Kāveri Flows decided to deceive you. They called the midwife Kuppi and said, if a male child is born, cut it up and stuff it in a bandycoot hole. If a female child is born, feed it milk in a conch and name it Taṅkā. They told her they would give her half the land and half the wealth if she did this. The deceitful Kuppi said "Yes" and agreed to this. Vishnu saw this and came to me. Telling me this news he told me, 'prepare a tunnel connecting your residence and the palace, within three months. (He said) I will come on the day of the labour. You come to the mouth of the tunnel and wait. I will take the child as it is born and hand it to you. You take it and, unknown to anyone, raise it for five years.' Vishnu came there on the day of your wife's labour. You went to The Country of Prosperity and brought the midwife Kuppi. When she came she thought of preparing the way for her deceit. (So) she ordered that none of the maids of the house be present. Kuppi shut the door, and covered Tāmarai's eyes. Then she went into the kitchen and began sharpening a knife. Vishnu, seeing his chance, cut Tāmarai open on two sides of her stomach, and brought out the two children. He took them and handed them to me. Ask Vishnu about the rest. Now the children have come. Receive them. The children are at the Pilliar temple," Cellāttā said.

Kuṉṉuṭaiyā: "O.K., Oh woman! We shall go and see," he said and two set off with Cellāttā. When they arrived at the Pilliar temple and saw the children they seemed to shine with the beauty of the sun itself.

Tāmarai: Seeing this Tāmarai said, "Husband! I am in doubt. I shall call Vishnu and ask him. (Then we) shall know." She stood facing north (and called):

"Vishnu, creator of the world! You must come here immediately," she said, and while she thought of Vishnu, he saw (her). He immediately mounted his Garuda vehicle, turned towards Vīrappūr and set out.

(பாட்டு) கருடன் மேலே என்சாமி சீனிவைத்து
வீரப்பூர் என்சாமி தேடிவாறார்
பூலோகம் என்னாத்தாத் தேடியல்லோ
பரந்தாமன் என்சாமி பறக்குறாரே

மாயவர் வீரப்பூர் வந்து பிள்ளையார் கோவிலில் அமர்ந்தார். குன்னுடையாசாமியும் தாமரையும் மாயவரை நமஸ்காரம் செய்தார்கள்.

மாயவர் - "சரணமென்ற பேர்களுக்கு மரணமொரு நாளுமில்லை! தாமரை என்னை எதற்கு வரவழைத்தாய்?"

தாமரை - "சுவாமி! செல்லாத்தா இந்தக் குழந்தைகள் இரண்டும் என்னுடையது என்கிறாள். எனக்குச் சந்தேகமாக இருக்கிறது சுவாமி!"

மாயவர் - "அப்படியா? சரி, நீ போய்க் கிணற்றில் குளித்துவிட்டு வா."

தாமரை உடனே சென்று குளித்துவிட்டு வந்தாள்.

மாயவர் - "தாமரை! உன் குழந்தை என்பதை உனக்கு எப்படி நிரூபிக்கவேண்டும்?"

தாமரை - "சுவாமி! இந்தக் கூட்டத்தின் முன்னிலையில் என் மார் சுரந்து பால் குழந்தைகளின் வாயில் போய் விழவேண்டும்."

மாயவர் - "சரி, அப்படியே செய்கிறேன்"

என்று விபூதியை வீசி ஏழு திரை உண்டுபண்ணி ஏழு திரைக்கு அப்பால் தாமரையை நிறுத்தி மாயவர் மறுபடியும் விபூதியை வீசும்போது தாமரையின் மார்பு சுரந்து பால் குழந்தைகளின் வாயில் போய்த் தானே விழுந்தது. இதைப் பார்த்து அங்குக் கூடியிருந்த ஜனங்கள் எல்லோரும் ஆசீர்வாதம் செய்தார்கள். தாமரை ஓடிவந்து குழந்தைகளை வாரி எடுத்து மணிமுகத்தை முத்தமிட்டாள். கூட்டி எடுத்துக் கொள்ளை முத்தம் தந்தாள்.

மாயவர், "தாமரை! இனி நீங்கள் குழந்தைகளை எடுத்துக்கொண்டு பொன்னி வளநாடு போங்கள். மூன்று மாதம் கழித்து நான் வந்து குழந்தைகளுக்குப் பெயர் சூட்டலாம்" என்று சொல்லிவிட்டுப் புறப்பட்டுப் பால்கடல் சென்றார்.

தாமரை, "நாதா! புறப்படுங்கள் போகலாம்" என்று இருவரும் குழந்தைகளை எடுத்துக்கொண்டு புறப்பட்டார்கள்.

(பாட்டு) வீரப்பூர் விட்டுமல்லோ விட்டுமல்லோ
பொன்னிவள நாடுவாறார் நாடு வாறார்
குழந்தைகளைத் தோளில் வைத்துத் தோளில் வைத்து
வருகிறார்கள் இருவருமே இருவருமே

Song: He saddled the Garuda, Oh Lord
Searching for Vīrappūr, oh Lord, he comes
Searching for the earth, my God
Vishnu is flying, oh Lord

Vishnu arrived in Vīrappūr and dismounted at the Pilliar temple. Kunnuṭaiyā and Tāmarai paid Vishnu their respects.

Vishnu: "There is no death for those people who take refuge in me. Tāmarai! What have you called me here for?"

Tāmarai: "Lord! Cellāttā says these two children are mine. I am in doubt, Lord!"

Vishnu: "All right. So that is it? You go to the well, bathe and return."

Tāmarai immediately went to the well, bathed and came back.

"Tāmarai! How do you want me to prove to you that these are your children?"

Tāmarai: Lord! In front of this crowd milk must spring from my breast and fall into the children's mouths."

Vishnu: "All right! I shall arrange that," he said, and he threw some sacred ash, and created seven (cloth) curtains. Tāmarai stood beyond them. Then Vishnu threw some more sacred ash, and milk sprang from Tāmarai's breasts and fell, by itself, into the children's mouths. Seeing this, all the people in the crowd there gave (them) their blessings. Tāmarai came running, swept up the children, and kissed their precious faces. Picking them up together she kissed them abundantly.

Vishnu: "Tāmarai! You take the children now and go to The Country Where The Kāveri Flows. I will come after three months and name the children," Vishnu said, and he returned to the milk sea.

Tāmarai: "Husband! Get started, Let's go," she said and the two of them picked up the children and set off.

Song: Leaving Vīrappūr, leaving it
Approaching The Country Where The Kāveri Flows,
approaching
Putting the children on their shoulders, on their
shoulders

நாகமலை தோகமலை தோகமலை
நாலுப் பக்கம் சூழ்ந்தமலை சூழ்ந்தமலை

பொன்னி வளநாடு வந்து செல்லாத்தாக் கோவிலுக்குப் போய் ஆத்தாளை நமஸ்காரம் செய்து பிறகு பிள்ளையார் கோவிலில் போய் நின்று, தாமரை தெய்வசபையை நினைத்து அரண்மனை காவலை விட்டுக் கதண்டுகளையும், வண்டுகளையும் தெய்வசபைக்கு அனுப்பிவிட்டுச் சேவகர்களையும் மாதர்களையும் கூப்பிட்டு அரண்மனையைச் சீக்கிரம் சுத்தம் செய்யும்படிச் சொன்னார்கள். மாதர்கள் உடனே சென்று அரண்மனையைச் சுத்தம் செய்தார்கள். குன்னுடையாசாமியும் தாமரையும் பிள்ளையாரை நமஸ்காரம் செய்துவிட்டுக் குழந்தைகளுடன் அரண்மனைக்குச் சென்றார்கள். அரண்மனைக்குப் போனதும் பொன்னரும் சங்கரும் (குழந்தைகள்) இரண்டு பேரும் அரண்மனையைச் சுற்றிப் பார்த்துக்கொண்டு வந்தார்கள். பிறகு சமையல் செய்து எல்லோரும் சாப்பிட்டார்கள். சாப்பிட்டுச் சிறிது நேரமிருந்து தாமரையிடம் குழந்தைகள், "அம்மா! எங்களுக்கு ஏறிச் சவாரி செய்ய ஏதாவது வாகனங்கள் இருக்கிறதா?" என்று கேட்டனர்.

தாமரை - "கண்மணிகளே! நம் ஆயிர மா நிலத்தில் காராம்பசுக்கள் கன்றுகள் போட்டு விளையாடிக் கொண்டிருக்கின்றன. வண்டுராங்குளத்தில் குதிரை நீலா, குட்டி போட்டுக் குட்டிகள் தாயுடன் விளையாடிக் கொண்டிருக்கின்றன."

குழந்தைகள் - "சரி, நல்லது! எங்களுக்குத் துணைக்குச் சேவகன் இருக்கிறானா?"

தாமரை, "அப்பா, உங்களுக்குத் தனியாக ஒரு சேவகன் இருக்கிறான். காராம் பறைச்சி பெற்ற சாம்புகன்" என்றதும், குழந்தைகளிருவரில் சின்னவரானவர், "அண்ணா! வாருங்கள். நாம் சாம்புகனைக் கூட்டிச்சென்று காராம்பசுவையும் நீலாவையும் பார்த்து வருவோம்" என்று இருவரும் வீதியில் வந்து நின்று, "அடே, சாம்புகா!" என்று கூப்பிட்டார்கள். இதைக் கேட்ட சாம்புகன் ஓடிவந்து அரசர்களைக் கண்டு,

(பாட்டு) அட்டம் பணியுறானே ராஜருக்கு
ஆளடிமை செய்யுறானே
பாதம் பணியுறானே மன்னருக்குப்
பணிவிடைகள் செய்யுறானே

They are going, the two of them, the two of them
Nākamalai mountain, Tōkamalai mountain, Tōkamalai mountain
The mountain hollowed on four sides, hollowed on four sides

They arrived in The Country Where The Kāveri Flows, went to the Cellāttā temple and paid respects to the goddess. Then (they went) to the Pilliar temple (where they) stood. Tāmarai thought of the god's counsel-chamber. She released the palace guardians, and sent the beetles and wasps back (to heaven). She called the maids and the servants and told them to clean the palace immediately.

The maids came immediately and cleaned the palace. Kuṉṉuṭaiyā and Tāmarai paid their respects to Pilliar, and went to the palace with the children. When they arrived at the palace Poṉṉar and Caṅkar (the children) both circled around it, looking. Then food was cooked and everyone ate.

A little while after eating:

Children: "Mother! Are there any (animals) vehicles around (here) for riding?"

Tāmarai: "Oh apples of my eye! In the enormous field there the calves of some black cows are playing. At Vaṉṭūrāṅkuḷam there are the colts of the horse, Nīlā[1] who play with their mother."

Children: "O.K., Good! Is there a servant to look after us?'

Tāmarai: "Children there is a servant who is for you alone. He is Cāmpukaṉ, (son of) the black Paṟaiyā woman."

Children: Hearing this the younger of the two children spoke. "Elder brother! Come. We will go with Cāmpukaṉ, look at the black cows and blue horses, and then return," he said and the two went out on the street. "Hey, Cāmpukaṉ," they called. Hearing this, Cāmpukaṉ came running. Seeing the kings:

Song: He prostrated before the princes
He, himself, supplicated
He worshipped their feet
He rendered his services.

---

1 The term Nīlā, technically means, blue, but here it is used as a proper name referring to the horse's very dark color, close to black.

குழந்தைகள் - “அடே, சாம்புகா! வா. நாம் மூன்றுபேரும் சென்று காராம் பசுவையும் நீலாவையும் பார்த்துவிட்டு வருவோம்.”

சாம்புகன், “சாமி, நல்லது! அப்படியே செய்வோம்” என்று புறப்பட்டு ஆயிர மா நிலத்தில் போய்ப் பார்க்கும்போது காராம் பசுவின் கன்றுகள் விளையாடிக் கொண்டிருந்தன. அதைக்கண்டு மூன்றுபேரும் சந்தோஷமடைந்து அதை விட்டு வண்டுராங்குளத்துக்குச் சென்று நீலாக்குட்டியைப் பார்த்தார்கள். இவர்களைப் பார்க்கும்போது நீலாக்குட்டி, “யாரோ நம்மளைப் பிடிக்க வருகிறார்கள்” என்று பயந்து ஓட்டம் பிடித்தது. “அடே, சாம்புகா! நம்மளைக் கண்டு நீலா ஓடுகிறது. எங்கு சென்றாலும் விடாமல் பிடித்துப் பழக்கவேண்டும்” என்று மூன்றுபேரும் நீலாவின் பின்னால் ஓட்டம் பிடித்தார்கள்.

(பாட்டு) மையமாய் என்சாமி பறக்குறாரே
மதுக்கார என்சாமி வனந்தாண்டிப்
போகுதே என்சாமி நீலாவும்
நீலாவுட என்னாத்தாப் பின்னாலே
வேகமாய் மூன்றுபேரும் பறக்குறாரே
நாகமலை என்னாத்தாத் தோகமலை
நாலெட்டம் என்சாமி சூழ்ந்த மலை
பத்தி என்சாமி படர்ந்த மலை
பாரமுள்ள என்னாத்தா வீரமலை

குதிரை கைக்கு எட்டாமல் வேகமாக வீரமலையின் நடுமலையில் போகும் போது சாம்புகனுக்குக் கோபம் வந்து எட்டிக் குதித்து நீலா இரண்டையும் பிடரிமயிரைப் பிடித்து நடுமலையில் அப்படியே நிறுத்திவிட்டான். அதற்குள் குழந்தைகள் இருவரும் வந்து சேர்ந்தார்கள்.

குழந்தை - “அடே, சாம்புகா! குதிரைமேல் ஏறிச் சவாரி செய்யவேண்டும். கடுவாளம் வேண்டுமே என்ன செய்வது?”

சாம்புகன் - “சாமி! நீலாவைப் பிடித்திருங்கள். வருகிறேன்”

என்று கானகத்துக்குள் சென்று பெரிய நாகப்பாம்பு இரண்டைப் பிடித்து அதன் தோலை உரித்துக்கொண்டு, விரியன் பாம்பு இரண்டு பிடித்து அதன் தோலையும் உரித்துக்கொண்டு வந்து குதிரைக்குக் கடுவாளம் போட்டான்.

(பாட்டு) நாகன் கடுவாளம் அங்கு
நல்லபாம்பு அங்குபடி
விரியன் கடுவாளமாம் அங்கு
வில்லரனை[1] அங்குபடி

1. பாம்பு

Children: "Hey Cāmpukaṉ! Come. We three shall go, look at the black cows and blue horses, and return."

Cāmpukaṉ: "All right. Good. We shall go," he said and set out.

When they arrived at the enormous field they saw the calves of the black cows playing. Seeing this all three of them became happy.

Leaving that place they went to Vaṇṭūrāṅkuḷam and saw the colts of the horse Nīlā. As they watched one colt said, "Someone has come to catch us!" and becoming frightened they began to run.

Children: "Hey, Cāmpukaṉ! Seeing us, the horses are running. Wherever they go we must catch them without fail and train tnem." Saying this the three of them began to run after the colts.

Song:
They fly right across the sky, my Lord
Having crossed the forest of Matukkara, my Lord
The horses vanish, my Lord
With the horses, behind them, my God
Three persons fly at great speed
The Nākamalai mountains, Tōkamalai mountains, my God
The mountain hollowed on four sides, my Lord
Mountains spread in a row
The renowned Vīramalai mountains, my God

When the horses kept out of their reach and headed fast for the central mountain of the Vīramalai range, Cāmpukaṉ became angry. He jumped forward and seized the manes of the two (Horses) and stopped them right there in the middle of the mountains. As he did this the children arrived to join him.

Child: "Hey, Cāmpukaṉ! I want to get on the horse and ride. For that I need a bridle. What can I do?"

Cāmpukaṉ: "Lord! Hold the horses. I will return," said Cāmpukaṉ, and he went into the jungle, seized two large cobras, and skinned them. (Then) he caught two vipers, skinned them, returned, and put bridles and stirrups on the horses.

Song:
The cobra is the bridle there
The cobra is the stirrup
The viper is the bridle
The snake is the stirrup

சாம்புகன் - "சாமி! நீங்கள் இருவரும் கப்பல்சீனிமட்டம்[1] பஞ்சகல்யாணி நீலாவின்மேல் ஏறி அரண்மனைக்குச் செல்லுங்கள். நான் உங்கள் பின்னால் வந்து சேருகிறேன்"

என்றதும் குழந்தைகள் இருவரும் நீலாவில் ஏறிப் புறப்பட்டார்கள்.

(பாட்டு) வலது காலை என் சாமி மெட்டியதும்
வைகுந்தம் நீலா பாயுது பார்
இடது காலை என் சாமி மெட்டியதும்
எமலோகம் குதிரை பறக்குது பார்
பொன்னி வள நாடு என் சாமி தேடி
மையமா மேகம் பறக்குது பார்
மண்போட்டு என் சாமி பொன் விளையும்
மகுட பொன்னி என் சாமி வள நாடு

நீலா வரும் வேகம் பொன்னி வளநாடு கிடுகிடுவென்று நடுங்கியது. தாமரை பூமி அதிர்கின்றது என்று அரண்மனையை விட்டு வெளியில் வந்து பார்க்கும்போது குழந்தைகள் இருவரும் நீலாவில் வரும் வேகத்தைப் பார்த்து,

தாமரை - "ஆகா! மாயவரே! நான் வாங்கி வந்த வரம் சரியான வரம்" என்று சந்தோஷமடைந்தாள். இதற்குள் நீலா அருகில் வந்து நின்றதும் குழந்தைகள் இருவரும் நீலாவை விட்டு இறங்குவதற்குள் சாம்புகனும் அருகில் வந்து விட்டான்.

குழந்தை - "அடே, சாம்புகா! நீலாவைப் பிடித்து லாயத்தில் கட்டிவிடு" என்று அரண்மனைக்குள் சென்று சாப்பிட்டுச் சந்தோஷம் அடைந்தார்கள்.

(பாட்டு) செங்கோலு அதிகாரம் இனி அதிகாரம்
செலுத்திப்பட்டம் நாட்டிலே
ஆளுகிறார் அங்கு ஆளுகிறார்
தங்க விரல் பொன்னையா
அதிகாரம் இனி அதிகாரம்
தனிச்சுப்பட்டம் நாட்டிலே
ஆளுகிறார் அங்கு ஆளுகிறார்

அன்னக்கொடி தாமரை, அறிவுள்ள தேவி, "மாயவர் சொன்னபடி மூன்று மாதம் ஆகிவிட்டது. மாயவரை வரவழைக்க வேண்டும்" என்று மாயவரை நினைக்கும்போது மாயவர் உடனே புறப்பட்டுப் பொன்னி வளநாடு வந்து அரண்மனையில் அமர்ந்தார். எல்லோரும் மாயவரை நமஸ்காரம் செய்தார்கள்.

---

1. குதிரைச் சேணம்

Cāmpukaṉ: "Lords! Climb in the shiplike saddles of the fire-colored horse and the blue horse and return to the palace. I shall come after you," he said. The two children mounted the horses and set off.

Song:
Spurring with the right foot
The horse gallops as if he will reach (Vishnu's) heaven
Spurring with the left foot
See the horse gallop as if he will reach the world of Yeman
Searching for The Country Where The Kāveri Flows, my Lord
Making this its destination, see it fly like a cloud
(In) the renowned Country Where The Kāveri Flows, my Lord

The Country Where The Kāveri Flows shook from the speed of the approaching horses. Tāmarai, feeling the earth rock, came out of the palace and as she looked she saw the speed of the children approaching on horseback.

Tāmarai: "Ah ha, Vishnu! The boon I obtained is working well," (she thought), and she became happy. By this point the horses were close by. They stood and before they could dismount and leave the horses Cāmpukaṉ arrived.

Child: "Hey, Cāmpukaṉ! Take the horses and tie them in the stables,"they said. (Then) they went into the palace, ate, and were happy.

Song:
He ruled with justice, sweet rule
He ruled the country with authority. He ruled there
Poṉṉayyā with the golden signet ring on his finger
These times, sweet times
He ruled the country alone. He ruled there

Tāmarai, the fine creeper vine, the all knowing goddess thought, "Three months have passed, as Vishnu (has) said. (Now) I must call him here." When she thought of Vishnu he immediately set off, came to The Country Where The Kāveri Flows, and dismounted at the palace. Everyone paid Vishnu their respects.

மாயவர் - "எல்லோருக்கும் மங்களம் உண்டாகட்டும்! தாமரை என்னை ஏது காரியமாக அழைத்தாய்?"

தாமரை - "பரந்தாமா! தாங்கள் மூன்று மாதங்கள் ஆனதும் குழந்தைகளுக்குப் பெயர் சூட்டலாம் என்றீர்கள். ஆகையால் தாங்கள் நல்ல நாள் பார்த்துக் குழந்தைகளுக்குப் பெயர் சூட்டுங்கள்."

மாயவர் - "சரி, வெள்ளிக்கிழமை நல்ல நாள் இருக்கிறது. அதனால் ஆயிரம் கிராமத்துக்கு அழைப்பு விட்டு வெள்ளிக்கிழமை நான் வருவதற்குள் எல்லோரும் செல்லாத்தாக் கோவிலுக்குப் போய் எல்லாக் காரியமும் முடித்து வையுங்கள். நான் வந்ததும் பெயர் சூட்டலாம்" என்று சொல்லிவிட்டு மாயவர் புறப்பட்டுப் பால்கடல் சென்றார். மாயவர் சென்றதும் குன்னுடையா ராஜர் சாம்புகனைக் கூப்பிட்டு, "சாம்புகா! ஆயிரம் கிராமத்துக்கும் சென்று வெள்ளிக்கிழமை செல்லாத்தாக் கோவிலில் குழந்தைகளுக்குப் பெயர் சூட்டுகிறார்கள் என்று சொல்லி விட்டு வீடு தவறாமல் செல்லாத்தாளுக்குப் பால் கொண்டு வரும்படிச் சொல்லிவிட்டு வா!"

சாம்புகன் - "சாமி, நல்லது!"என்று வீட்டுக்குச்சென்று 24 முழ வேஷ்டியை எடுத்து உருமாலையாகக்[1] கட்டி மூன்று கட்டுப் பிடித்த தடியைக் கையில் எடுத்துத் தோளில் வைத்துப் புறப்பட்டான். கைத்தடி சாமானியமானதல்ல. ஒரு பனைமரத்தை வெட்டிப் பனையின் இரண்டு நுனிகளையும் நறுக்கிவிட்டு மூன்று இரும்புக் கட்டுப் போட்டது. சாம்புகன் பொன்னி வளநாட்டை விட்டு அணியப்பூரை நோக்கிப் புறப்பட்டான்.

(பாட்டு) ஓட்டம் என் சாமி பெரு நடையா
ஒரு விரைவாய்ச் சாம்புகன் வாறானே
எட்டியே என் சாமி தாண்டுறானே
எட்டணப்பு[2] என் சாமி காத வழி

சாம்புகன் அணியப்பூர் வந்து வீதியில் போகும்போது ஊர்ஜனங்கள் எல்லோரும், "இவன் இவ்வளவு பெரிய ஆளாக இருக்கிறானே!"என்று பயந்து நடுங்கினார்கள். சாம்புகன் நடுவீதியில் நின்று, "சாமி! நான் பொன்னி வளநாட்டு அரசருடைய முதல்மந்திரி. என்னைக் கண்டு யாரும் பயப்பட வேண்டாம். என் பெயர் சாம்புகன்" என்றான்.

ஊர் ஜனங்கள் -"சாம்புகா! என்ன சமாசாரம்?"

---

1. தலைப்பாகை 2. சுமார் கால் ஏக்கர் அளவுடைய நிலம்

Vishnu: "Blessings to everyone! Tāmarai! What have you called me for?"

Tāmarai: "Vishnu. You said that after three months you would give names to the children. Therefore, find an auspicious day and name them".

Vishnu: "O.K. Friday is an auspicious day. Therefore, invite the thousand revenue villages. I shall come on Friday. Before I get here have everyone gather at Cellāttā's temple. When all the ceremonies are finished I will come and pronounce the names," Vishnu said, and he left for the milk sea. When Vishnu had left King Kuṉṉuṭaiya called, "Cāmpukaṉ! Go to the thousand revenue villages and announce that on Friday we shall name the children at the Cellāttā temple.[1] Say that each house, without fail, must bring some milk for Cellāttā."

Cāmpukaṉ: "Lord. Good!" he said. (Then) he took a men's lower cloth measuring twenty-four muḻams[2] and wrapped it (on himself) in the prescribed way. He took his walking stick, with three knots on it, put it on his shoulder and set out. His was no (ordinary) hand-staff. It was made of two felled palmyra palm trees that had their tips cut off and had been bound together with three strips of iron. Cāmpukaṉ left The Country Where The Kāveri Flows and set off in the direction of Aṉiyappūr.

Song:

With big running steps, my Lord
Cāmpukaṉ is coming with great speed
Traversing quickly
The boorish one travels a league

Cāmpukaṉ arrived in Aṉiyappūr and as he went down a street the people of the town saw him and thought, "What a huge man!" They were all afraid and began to shake. Cāmpukaṉ stood in the middle of the street and said, "Lord, I am the First Minister of the king of The Country Where The Kāveri Flows. Seeing me, no one should be afraid. My name is Cāmpukaṉ."

People: "Cāmpukaṉ! What is the news?"

---

1 The naming ceremony is traditionally performed at the family's clan temple. 2 This is about 12 yards, much longer than the average male cloth.

சாம்புகன் - "சாமி, நாளை வெள்ளிக்கிழமை செல்லாத்தாக் கோவிலில் அரசருடைய குழந்தைகளுக்குப் பெயர் சூட்டுகிறார்கள். ஆகையால் வெள்ளிக்கிழமை எல்லோரும் செல்லாத்தாக் கோவிலுக்குப் பால் கொண்டு வந்து சேருங்கள்" என்று சொல்லிவிட்டு மறுபடியும் எல்லாக் கிராமங்களுக்கும் போய்ச் சொல்லிவிட்டு மணிமண்டப வாசலில் நின்று, "சாமி! ஆயிரம் கிராமத்துக்கும் வெள்ளிக்கிழமை காலையில் வந்து சேரும்படிச் சொல்லிவிட்டு வந்தேன்" என்றான்.

குன்னுடையா - "சரி, நல்லது!"

வெள்ளிக்கிழமை விடிகாலை ஐந்து மணிக்குத் தாமரை எழுந்து மாதர்களைக் கூப்பிட்டு அரண்மனையைச் சுத்தம் செய்யச் சொல்லி வேண்டிய சாமான்களுடன் குன்னுடையாசாமியும் தாமரையும் பல்லக்கில் ஏறிப் புறப்பட்டார்கள்.

(பாட்டு) ஆலேலோ என்றல்லவோ
அச்சினமே எடுத்து வாறார்
ஏலேலோ என்றல்லவோ
எடுத்து வாறார் பல்லக்கை

செல்லாத்தாக் கோவிலில் வந்து பல்லக்கை விட்டு இறங்கி எல்லோரும் காசிக்கரை சென்று நீராடி வருவதற்குள் ஆயிரம் கிராமத்துக் கவுண்டர்களும் வந்து சேர்ந்தார்கள். பிறகு குன்னுடையாக் கவுண்டர் செல்லாத்தாளுக்கு அமுது வைத்துவிட்டுப் பால்விட்டு அபிஷேகம் செய்து அரு பூஜை, குரு பூஜை, ஐம்பத்தெட்டு லிங்க பூஜையும் செய்து சரியாக முடித்தார். அப்போது மாயவரும் வந்து சேர்ந்தார். செல்லாத்தாளும் மற்றும் அங்கு இருந்தவர்கள் எல்லாரும் மாயவரை நமஸ்காரம் செய்தார்கள்.

மாயவர் - "எல்லோருக்கும் மங்களம் உண்டாகட்டும்!" என்று சொல்லி விட்டு அமர்ந்து. "செல்லாத்தா! கிழக்கு முகமாக உட்கார். தாமரை! முதல் குழந்தையை எடுத்துச் செல்லாத்தாளிடம் கொடு!" என்று சொன்னார்.

மாயவர் - "செல்லாத்தா!

(பாட்டு) பொன் உரைத்துப் பொன் உரைத்துப் பால் வார்த்துப்
பொன்னர் என்று செல்லாத்தா பேரு வையும்"

செல்லாத்தா - "அண்ணா! அப்படியே வைத்து விட்டேன்."

மாயவர் - "சரி, இரண்டாவது குழந்தையை வாங்கி மடியில் வைத்துக் கொள்."

Cāmpukaṉ: "Lord. Tomorrow, Friday, the king will name his children at the Cellāttā temple. Therefore, on Friday, all of you are to come and bring milk for Cellāttā," he said. Again he went to all the revenue villages, made the announcement and returned to The Country Where The Kāveri Flows. He stood in the doorway of the jewelled hall and said, "Lord! I told the thousand revenue villages to come on Friday morning, and have returned (here)."

Kuṉṉuṭaiyā: "O.K. Good."

On Friday, at five A.M., Tāmarai got up, called the maids and told them to clean the palace. She (also) ordered the palanquin brought. Kuṉṉuṭaiyā, Tāmarai and the children got into the palanquin took the necessary things with them, and set off.

Song:

Singing thus, thus
They come bringing the offerings
Singing thus, thus
Bringing these, they come in the palanquin

When they reached the Cellāttā temple they got down from the palanquin, and they all went to the river bank to bathe. Before they returned the Kavuṇṭars of the thousand revenue villages arrived and gathered (there). The King Kuṉṉuṭaia called Cāmpukaṉ, performed the ceremonial offering with milk, and completed the god's pūjā the pūjā for the family deity and the fifty-eight lingam pūjā. At this point Vishnu arrived. Cāmpukaṉ and all the people in the crowd paid Vishnu their respects.

Vishnu: "Blessings to all!" he said and sat down. "Cellāttā, sit down facing the east. Tāmarai, take the first child and hand it to Cellāttā."

Cellāttā received the child, held it on her lap, and said to Vishnu:

Cellāttā: "Elder brother! What shall we name this child?"

Vishnu: "Cellāttā!"

Song: Covered in gold, covered in gold, infused with milk, Cellāttā, call him Poṉṉar.[1].

Cellāttā: "Elder brother. I have given him (that name)."

Vishnu: "O.K. Take the second child and hold it in your lap."

---

1 The golden one.

(பாட்டு) சங்குரைத்துப் பால் வார்த்துச்
சங்கர் என்று ஈசுவரி பேரு வையும்

செல்லாத்தா - "அண்ணா! அப்படியே வைத்து விட்டேன்."

மாயவர் - "சரி, மூன்றாவது குழந்தையை வாங்கி மடியில் வைத்துக் கொள்."

(பாட்டு) சங்குரைத்துப் பால் வார்த்துத்
தங்காள் என்று செல்லாத்தாப் பேரு வையும்

செல்லாத்தா - "அண்ணா! அப்படியே வைத்துவிட்டேன்."

மாயவர் - "சரி, நல்லது!"

குழந்தைகளுக்குப் பெயர் வைத்து முடிந்ததும் எல்லோருக்கும் பிரசாதம் வழங்கினார்கள். கிராமத்துக் கவுண்டர்கள் எல்லோரும் மாயவரிடமும் செல்லாத்தாளிடமும் குன்னுடையா ராஜரிடமும் விடை பெற்றுக்கொண்டு ஊருக்குச் சென்றார்கள். பிறகு தாமரையிடம்,

மாயவர் - "குழந்தைகளை எடுத்துக்கொண்டு அரண்மனைக்குச் சென்று நன்றாக வளர்த்து" என்று எல்லோரிடமும் விடை பெற்று பால்கடல் சென்றார்.

குன்னுடையா ராஜரும் தாமரையும் குழந்தைகளை எடுத்துக்கொண்டு அரண்மனைக்குச் சென்றார்கள். சிலகாலத்தில் குழந்தைகள் வயது வந்தவுடன் குன்னுடையா ராஜர் நாட்டின் பொறுப்பைக் குழந்தைகளிடம் ஒப்படைத்தார்.

(இனிப் பொன்னர் என்பவரைப் பெரியண்ணசாமி என்றும் சங்கர் என்பவரைச் சின்னண்ணசாமி என்றும் அழைப்போம்.)

பெரியண்ணசாமியும் சின்னண்ணசாமியும் நாட்டை ஆண்டு வந்தார்கள்.

Song: Covered by a conch, infused with milk
Īsvari, call him Caṅkar[1]

Cellāttā: "Elder brother! I have given him (that name)."

Vishnu: "O.K. Take the third, the female child, and hold her in your lap."

Song: Covered by a conch, infused with milk
Cellāttā, call her Taṅkā![2]

Cellāttā: "Elder brother! I have given her (that name)."

Vishnu: "O.K. Good."

After the naming of the children was finished everyone received some of the blessed food.[3] The Kavuṇṭars of the revenue villages took leave of Vishnu, Cellāttā, and King Kuṉṉuṭaiyā and returned home.

Vishnu: Then Vishnu said to Tāmarai "Take the children, go to the palace, and raise them well," and he took leave of everyone and returned to the milk sea. King Kuṉṉuṭaiyā and Tāmarai took the children, and went to the palace. After some time, as soon as the children had come of age, King Kuṉṉuṭaiyā gave over the responsibility for the country to his sons.

(From now on Poṉṉar will be called Periyaṇṇacāmi[4] and Caṅkar will be called Ciṉṉaṇṇacāmi).[5]

Periyaṇṇacāmi and Ciṉṉaṇṇacāmi began ruling the land.

---

1 The conch--like one. 2 The one made of gold, or the younger sister.3 Piracātam, or food left over from the ceremonial offerings. 4 Big elder brother. 5 Little elder brother.

Plate 1




K. Rāmacāmi Nāvitar of Erucaṇampāḷaiyam (the bard who told this story)

Plate 2



The bard, K. Rāmacāmi, with his assistant, Paraṇicāmi, seated together as thev would be in performance.

Plate 3



The twin heroes and their sister (far left) seeking audience with the goddess Cellāttā (under the umbrella). The three figures closest to the goddess are Chola, Cēra, and Pandya kings, also seeking audience with her. On the far right is Villiputtur (author of the Tamil *Mahābhārata)* and in front a small image of the god Vinayakar. The scene forms a ritual parallel to the devotional poems that begin this epic account. (From a frieze over the Cellāttā temple doorway, Māyanūr).




Kuṉṉuṭaiya grazing the cows of the king of Vaḷavanti.

Plate 5



The father (Kuṉṉuṭaiyā) of the epic's twin heroes, riding in a palanquin. (From a sculpture in a small local temple.)


Plate 6



The two heroic brothers, elder (right) and younger (left), with their beloved sister between them. (From a painting on a local temple wall.)



Tāmarai becomes angered at the female boar that stubbornly blocks the path her husband and she are travelling along and she gives it a good kick. (Sketch by Vellakovil M. Krishnamurthi)



Tāmarai performing hard penance on the pillar of Penance.



Tamarai receives an audience from Siva and Pārvati, marking the successful conclusion of her penance. (Sketch by Kangayam S. Visvanathan.)



Tāmarai, united at last with her three children.

Plates 11.



The two heroic brothers, as fashioned into small clay icons and worshipped in a local temple (elder, right and younger, left), and as depicted on their way to battle in a temple mural (same two positions).



Our Publications

1. **The Eight Anthologies : A Study in Early Tamil Literature**
   Dr. John Ralston Marr, 1985, pp. xvi + 556 Paper back Rs.100/- US $ 25 Deluxe Rs.150/- US $ 35.
2. **Ānanda Tāṇḍava of Siva - Sadanṟttamūrti**
   Dr. Kamil V. Zvelebil, 1985, pp. vii + 86, Rs.30/- US $ 10.
3. **Literary Conventions in Akam Poetry**
   Dr. Kamil V. Zvelebil, 1986, pp. vii + 118, Rs.45/- US $ 12.
4. **The Wandering Voice : Three Ballads from Palm - leaf Manuscripts**
   1987, pp. civ + 214 Paper back Rs. 80/- US $ 20 Deluxe Rs.120/- US $ 32.
5. **The Art of Drumming (Mattaḷaviyal)**
   1988, pp. lxvi + 220 Paper back Rs.90/- US $ 20 Deluxe Rs.140 - US $ 30.
6. **The Dateless Muse : The Story of Veṅkalarājaṉ**
   1988, pp. liii + 230 Paper back Rs.80/- US $ 20 Deluxe Rs. 120/- US $ 30.
7. **Buddhism in Tamilnadu : A New Perspective**
   Dr. Shu Hikosaka, 1989, pp. xii + 260 Rs.150/- US $ 30.
8. **The Unsung Melodies : The Story of Palavēcam Cērvaikkāraṉ**
   1989,pp. lxviii. 150 Deluxe Rs.100/- US $ 25 Paper back Rs.75/- US $ 18.
9. Encyclopaedia of Tamil Literature (In English) Volume I
   1990, pp. xii + 696, Price Rs. 339/- US $ 45.
10. **A Descriptive Catalogue of Palm-leaf Manuscripts in Tamil**
    General Editors : Dr. Shu Hikosaka, Dr. G. John Samuel, Volume, I Part I, 1990, pp. xxxvi + 447 Rs. 177.50 US $ 25.
11. **The Tunes of Divinity**
    1990, pp. lix + 306 + 70, Price Rs. 250/- US $ 60.
12. **A Descriptive Catalogue of Palm-leaf Manuscripts in Tamil**
    General Editors: Dr. Shu Hikosaka, Dr. G. John Samuel, 1990, Vol.I Part II, Rs. 177.50, pp.556, US $ 25.
13. **The Story of My Life: An Autobiography of Dr.U.V.Swaminatha Iyer**
    English Translation: Kamil V. Zvelebil, 1990, pp.xii + 274, Rs. 120 - US $ 30.
14. **A Descriptive Catalogue of Palm-leaf Manuscripts in Tamil** Vol.II, Part I.
    General Editors: Dr.Shu Hikosaka, Dr. G. John Samuel, 1991, pp.viii + 594, Rs. 225 - US $ 30.
15. **Tamil Traditions on Subrahmanya- Murugan**
    Kamil V. Zvelebil, 1991, pp. viii + 142, Rs.85/-, US $ 15.
16. **Encyclopaedia of the Folk Culture of Karnataka**
    General Editors: Dr. Shu Hikosaka, Dr. G.John Samuel, Editor: Dr.A. Krishnamurthi, Vol. I, 1991, pp. viii + 650 Rs. 400/- US $ 45.
17. **A Descriptive Catalogue of Palm-leaf Manuscripts in Tamil**
    General Editors : Dr. Shu Hikosaka, Dr. G. John Samuel, Vol. II, Part II, 1992.
18. Buddhist Themes in Modern Indian Literature (Seminar papers)
    General Editors : Dr. Shu Hikosaka, Dr. G. John Samuel
    Editor : Dr. J. Parthasarathy, 1992, pp. xxiv + 309, Rs.250 US $ 60.
19. The Divine Pilgrimage : Perumāḷ Cāmi Katai
    (A Folk ballad from palm-leaf Manuscripts). 1992, pp. vii + 343 Rs. 200 US $ 40
20. Encyclopaedia of Tamil Literature Vol. II (In print)